

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்

25வது ஆண்டு நினைவாக

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்

25ஆவது ஆண்டு நினைவாக

Title	:	**Communist Karthigesan**
Published by	:	**Janaki Balakrishnan** *15 Deerford Road,* *Willondale,* *Ontario M2J 3H9* *Canada* *e-mail: janaki@netcom.ca*
©	:	**Janaki Balakrishnan**
First Edition	:	**November, 2002.**
Price in Sri Lanka	:	**Rs. 450.00**
Price in Canada	:	**Can.$ 20.00**
Cover design	:	**Raveendran Janathan**
Printed by	:	**Unie Arts (Pvt) Ltd.,** *48 B, Bloemendhal Road,* *Colombo 13* *Tel. : 330195 / 478133* *E-mail : unieart@slt.net.lk*
ISBN	:	**955-98020-0-3**



உள்ளடக்கம்

பதிப்புரை

அனைவரையும் காத்தவனே

அமரர் கார்த்தி ஒரு ஸ்தாபனம் - க. சிவராமலிங்கம் 1

எங்கள் தோழன் கார்த்தி - நீர்வை பொன்னையன் 2

Communist Karthigesan - Our Respected Guru
- V. Sivasubramaniam 14

கார்த்திகேசன் ஓர் கர்மஞானி - எஸ். ஜி. கணேசவேல் 19

எம் மத்தியில் எம்.கார்த்திகேசன் - எம். குமாரசாமி 20

An Unforgettable Personality - V. Mahadevan 27

கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் -
எமது மதிப்புக்குரிய குரு - வி. சிவசுப்பிரமணியம் 30

யாழ்ப்பாண முஸ்லீம்களின் அன்புக்குரியவர் அமரர் கார்த்திகேசன்
- எம். ஏ. சி. இக்பால் 35

கல்வி - வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்
- எம். கார்த்திகேசன் 37

சோஷலிச சமுதாயத்தில் கல்வி - எம்.கார்த்திகேசன்- 41

Education: The Chettiar Does Matter - M. Karthigesan 45

கல்வி: செட்டியாரும் ஒரு பொருட்டாவார் - மு.கார்த்திகேசன் 47

இயக்கத்தோடு இணைந்த கவிஞன் - மு.கார்த்திகேசன் 50

அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த மார்க்ஸியவாதி - என்.கே.ரகுநாதன் 52

கார்த்தியின் கீர்த்திக்கு வழிவகுத்த வாலாம்பிகை
- வீ.சின்னத்தம்பி 58

Karthigesan, my Guru - C.S.Arunachalam 60

My Remembrances of a Gentleman - P.Ramanathan 64

Spin in Sport .....and Sport in Spin - M.Karthigesan 66

விளையாட்டிற் சுழற்சியும்..., சுழலும் விளையாட்டும்
- மு. கார்த்திகேசன் 68

Karthigesan - A Dedicated Communist - I. R. Ariaratnam 70

தன்னையே அர்ப்பணித்தார் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்
- ஐ. ஆர். அரியரட்ணம் 73

My Maha Achcharya Mr. M.Karthigesan(Karthar)
- Ganeshan Sayuchchiyadevan 76

A man of wit and humour - S.Markandan 77

விவேகமும் நகைச்சுவையும் நிறைந்த மனிதர் - எஸ். மார்க்கண்டன் 79

மீண்டும் வாராயோ வையகத்தே - நவநிதி செல்லத்துரை 81

எம். கார்த்திகேசன் மாஸ்டரும் நாமும் - கலாநிதி வி. அம்பலவாணர் 82

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் - அ.மரியதாஸன் 84

மகிழ்ச்சிகரமான கற்பித்தலில் நிபுணன் - அ.சிறிக்குமரன். 90

மக்கள் தோழர் காத்தி - வ. சின்னத்தம்பி 92

கார்த்திகேசன் என் ஆசான் ஆனார் - மு. தியாகராசா 97

இலக்கியத்திற் துலங்கும் இன்பக் கார்த்திகேசன்
- பொன். தெய்வேந்திரன் 101

நான் கண்ட கார்த்திகேசன் அதிபர் - சபா. நாராயணன் 103

குறிகள் கோலங்கள் அற்ற ஆனால் குறிக்கோள் உள்ள அதிபர்
- சி. சபாநாதன் 104

என் வாழ்வின் வழிகாட்டி - இ. கிருஷ்ணதுரை 105

இவர் என் அதிபர் - அப்புத்துரை சிவகாந்தா 107

நெஞ்சினில் அழியா இடத்தைப் பெற்றவர் - கே. அருமைநாயகம் 109

கண்மூடி நிற்கின்றேன் - தமிழ்ச்செல்வன் மாசிலாமணி 112

கார்த்திகேசன் என்றொரு மானிடன் - ஈழத்துச் சிவானந்தன் 113

மு. கா. ஒரு பல்கலைக்கழகம் - காவலூர் எஸ். ஜெகநாதன் 116

திரு.மு(ரு)கா. எங்கே மறைந்தாயோ? 118

பொதுவுடமைவாதி ஒருவர் - கலாநிதி. க.சொக்கலிங்கம் 119

Mr.Karthigesan- Gentleman par Excellence - S. Navarajah 122

Reminicense of my Teacher, M. Karthigesan
- Dr. T. Vicknarasah 124

Student Leader – Karthigesan - L. Ariyawansa 127

தியாகச் சுடர் - மு.கார்த்திகேசன் 130

மாணவர் தலைவர் - கார்த்திகேசன் - எல். ஆரியவன்ச 134

Homage to Comrade Karthigesan - O. A. Ramiah 137

தோழர் கார்த்திகேசனுக்கு மரியாதை - ஓ. ஏ. ராமையா 140

அமரர் மு. கார்த்திகேசன் - வண்ணை. கலாஜோதி இளைஞர்
ஒன்றியமும் மக்களும் கண்ணீர் மல்க வரைந்த இரங்கலுரை 143

Reminiscence of Late M. Karthigesan S. S. Kumar 144

கம்யூனிஸ இயக்கத்தில் கார்த்திகேசனின் அழிக்க முடியாத
பங்களிப்பு - கனடா வாழ். கம்யூனிஸ்ட் அபிமானிகள் 146

ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்ச்சிக்காக உழைத்த உத்தமர்
- கி. மகான் 155

அன்பான அங்கிள் பற்றி..... - சுசீலா ஜோன் 156

எங்கள் ஐயா - அவர் ஒரு வரலாறு - சுமதி குகதாசன் 157

Who Blew First, the Horse or the Veterinarian?
- M. Sivasithambaresan 164

கார்த்திகேசனும் செல்லத்துரையும் - க. கனகராசா 168

கார்த்தி எனும் ஒளிவிளக்கு - தணிகையன் 170

அமரர் மு. கார்த்திகேசன் - ந. சிவகடாட்சம் 171

தமிழ் மக்கள் வாழ்வில் தோழர் கார்த்திகேசனின் பங்களிப்பு
- சண்முகம் சுப்பிரமணியம் 172

தேசிய ஒடுக்கு முறைக்கும் பிரிவினைக்கும்
எதிராக தமிழ் மக்களே ஐக்கியப்படுவீர் 183

தோழர் மு. கார்த்திகேசன் ஏழை, எளிய மக்களின் நண்பர்
- வி. ரட்டாய் 186

எங்கள் தோட்டத்து மல்லிகை - யோ. சே. நரேன் 189
Comrade (Mr) Karthigesan, As I knew him
- V. N. Somasundaram 194
காத்தார் என் டைரெக்டர் - சுந்தரம் டிவகலாலா 196
கொள்கைக்கு முதலிடம் கொடுத்த அமரர்
திரு.கார்த்திகேசன் மாஸ்டர் - க. சிவகுருநாதபிள்ளை 205
மு. கார்த்திகேசன் - சில நினைவுகள் - இ. முருகையன் 207
An Epic and an Era - T.Srinivasan 211
காலத்தால் அழியாத எம். கார்த்திகேயன்
- கே. ஆர். திருத்தவராஜா 223
காலத்தால் அழியாத தோழர் கார்த்திகேசனின் அரசியல் நினைவுகள்
- சி. கா. செந்திவேல் 224
Karthigesan – A Dedicated Comrade - S.D. Bandaranaike 234
His Life is His Message - S. Selvapaskaran 237
மென்மை உள்ளம் படைத்த புரட்சிவாதி
- ஐ.ஆர்.அரியரத்தினம் 241
கர்மவீரர் காத்தி - நினைவுகள் சில - கே. கணேஷ் 243
மு.கா என்னும் மாமனிதன்! - ஷெல்லிதாசன் 248
மக்கள் சேவையே கடவுள் சேவையென வாழ்ந்து காட்டியவர்
- க. வாமதேவன் 249
கார்த்திகேசன் ஒரு உயர்ந்த மனிதன் - E. K. சதாசிவம் 251
கார்த்திகேசன் ஓர் அறிவாளி - தி. மாணிக்கவாசகம் 254
Flame of Freedom - M. Karthigesan 255
மனித குல மாணிக்கம் - வீ. சிவானந்தன் 256
எம். கார்த்திகேசன் - குகன் 257
கார்த்திகேசன் மறைவின் கால் நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு
- நிஸாம் 259
Cherished Memory of "Karthi" - P. Balasubramaniam 261

தியாக தீபம் 269

தோழர் கார்த்திகேசன் சாகவில்லையே.....
- வ. சுப்பிரமணியம் 270

மாமனிதர் திரு. மு. கார்த்திகேசன் - க. அ. சின்னத்தம்பி 271

Karthi, peep for a while - K.Sachithananthan 276

காத்தி சற்றே எட்டிப் பாருங்கள் - கே. சச்சிதானந்தன் 277

அமரர் எம். கார்த்திகேசன் அவர்கள் - வ. வள்ளுவன் 278

வாழ்ந்துகாட்டிய காத்தார்! - வி. ரி. இளங்கோவன் 281

Karthigesan Master – a legendary Communist and philanthropist - T Ganeshwaran 282

மேலாண்ட செம்மல் - மூலபாரதி 286

பொறுமையின் இமயம், கார்த்திகேசன் - R. M. வேகாவனம் 287

தோழர் கார்த்திகேசன் பற்றிய நினைவலைகள் - மு. சின்னையன் 290

சில வேளைகளில் சில தீரர்களை வெளி உலகம் அறிவதில்லை
- டொமினிக் ஜீவா 292

எம். கே.- M. K. - அ. நமசிவாயம்பிள்ளை 294

பெருந்தகை உயர்திரு மு. கார்த்திகேசன் அவர்களின்
வெள்ளி விழா கவிதாஞ்சலி - 'கவிமணி" இராசையா ஸ்ரீதரன் 296

அரசியல் நகைச்சுவைகள் சில:
பலரும் கேட்டு சுவைத்தவையும் சமர்ப்பித்தவையும் 299

கொள்கைப்பற்றாளன் - சி. சபாநாதன் 303

யாழ். இந்துக் கல்லூரியின் ஒளிவிளக்கு அமரர்
மு.கார்த்திகேசன் அதிபர் - டாக்டர் குமாரசாமி நந்தகுமார் 304

Messages 306

M. Karthigesan - T. Sri Visakarajah 309

குறிப்புகள் சில 311

Mr. M.Karthigesan - N. Sabaratnam 314

மு. கார்த்திகேசன் - ந.சபாரட்ணம் 316

Mr. M.Karthigesan - S. Sivapathasundaram 318
மு.கார்த்திகேசன் - S. சிவபாதசுந்தரம் 319
புதிய தலைமுறையின் சிறந்த ஆதர்ஷ புருஷர் - எஸ். சிவதாசன் 320
The Karthigasan I knew ..... - E.P.B.Ediriweera 323
A Silent Leader - K. Sachithananthan 326
அமைதியானதொரு தலைவர் - கே. சச்சிதானந்தன் 328
உயர்ந்த மனிதன் - க. க. அருமைநாயகம் 330
கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ஒரு நினைவுக் குறிப்பு - ஸ்ரீபதி 331
வடபுலத்துக்கு பொதுவுடமை கருத்துக்களை முதன் முதல் எடுத்துச்சென்ற
கார்த்திகேசன் - வெகுஜனன் 339
M. K. யின் சில நகைச்சுவைத் துணுக்குகள் 342
ஆசிரியர் கார்த்திகேசன் - க. அருணாசலம் 344
எந்தன் வாழ்வின் கருத்தியல் வெளிச்சமாய்.....
- கலாநிதி ந. சண்முகலிங்கன் 347
He Moulded Men - S.Pathmanathan 348
திரு. மு. கார்த்திகேசன் - அதிபர், கோப்பாய். கிறிஸ்தவ கல்லூரி
- திருமதி. தவபுத்திரி செ. ஜேசுதாசன் 351
ஈழத்து மார்க்ஸ், லெனின், மாசேதுங் தோழர் கார்த்திகேசன் மாஸ்டர்
- மருதூர்க்கனி 353
ஒரு ஆசான் ஒரு தோழர் - பேராசிரியர் ந. சண்முகரத்தினம் 360
காத்தாரின் பணியும் கேத்திர கணிதமும் 364
மக்கள் நேசன் - பாரதிநேசன் 366
எங்கள் ஐயா - ராணி சின்னத்தம்பி 379
வாழ்க்கையை சிந்தனையால் வென்ற விந்தையான தந்தை
- ஜானகி பாலக்கிருஷ்ணன் 382
கார்த்திகேசனின் பாடசாலைப் பகிடிகள்
ருசிக்கச் சில 401
A tribute to a scholar and a noble man - Jothie Karthigesan 405

பதிப்புரை

இவ்வுலகில் தமது சிந்தனை, தமது நம்பிக்கை, தமது நிரூபணங்கள் மிகவும் சரியானவைதான் எனத் திடமாகக் கூறி ஒரு சிலரே வாழ்ந்திருக்கிறார்கள். அது அரசியலாகட்டும், விஞ்ஞானமாகட்டும், சமூக நோக்காகட்டும், ஏன் சமயமாகட்டும். இந்த ஒரு சிலர் தவறானவர்கள் எனக் கூறவும், அவர்களை எதிர்க்கவும் எப்பொழுதுமே பலர் இருந்திருக்கிறார்கள். இவர்களைவிட சமூகத்தில் பெருந்திரளான மக்களில் பெரும்பாலோர் மேற்கூறப்பட்ட மிகவும் சரியானவர்களைப் புரிந்து கொள்ளும் பக்குவம் அடையாததாலும், 'ஊரோடு ஒத்து வாழ்' எனும் கூற்றை ஏற்று வாழ்ந்தால் அதிகம் சிக்கலின்றி வாழலாம் என்ற குறுகிய நோக்கோடு வாழ்ந்ததாலும், ஏன் சில சந்தர்ப்பங்களில் பயத்தினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிந்தனைகளையும், நம்பிக்கைகளையும், நிரூபணங்களையும் புறக்கணித்து எண்ணிக்கையில் அதிகமான பலருடன் சேர்ந்து கொண்டதுமல்லாமல், இந்த அருமை பெருமையான ஒரு சிலரை எதிர்த்தும் வாழ்ந்திருக்கிறார்கள். இவர்களினிடையே 'யார் குத்தியாவது அரிசியாகி, எம் கைக்கு வந்தால் சரி' என்று மிகவும் சுயநலமாகவே வாழப்பழகிக் கொண்டவர்களும், 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என எதிலுமே அக்கறை கொள்ளாமலும் ஒட்டுதல் இல்லாமலும் வாழ்பவர்களும் இருந்திருக்கிறார்கள்.

தமது சிந்தனையும், நம்பிக்கையும், நிரூபணங்களும் தம் சொந்த நலனுக்கல்லாது இவ்வுலகிற்கோ அல்லது பெரும்பான்மை மக்களிற்கோ பயன்படுமென உறுதியான நம்பிக்கை கொண்ட இந்தச் சிலர், பல எதிர்ப்புகளைச் சந்தித்த போதும் அவற்றிற்கு அஞ்சாது தமது கொள்கையிலிருந்து வழுவாது, தாம் கொண்ட இலட்சியத்திலிருந்து விலகாது தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார்கள். இவ்வுலகிலின்றும் அச்சிலர் மறைந்த பின், இவர்களைத்தான் 'தீர்க்கதரிசிகள்' என்று அப்பெரும்பான்மை மக்கள் ஏற்றிப் போற்றி புகழ்ந்தும் துதித்தும் வந்திருக்கிறார்கள் வருகிறார்கள்.

ஏற்றிப் போற்றிப் புகழ்ந்து துதிக்கப்படாவிட்டாலும், அவரும் அதை விரும்பியிருக்க மாட்டார் என்ற பட்சத்தில், இந்த ஒரு சிலரில் கார்த்திகேசனும் உள்ளடங்குவார் என்பது வெளிப்படையானதும், அதை மற்றவரும் ஏற்றுக்கொள்வர் என்பதும் உண்மையே! குறிப்பாக ஏறத்தாழக் கால் நூற்றாண்டு காலப்போராட்டத்தில் இத்தனை இழப்பிற்கும் அழிவிற்கும் பின், இன்றைய ஈழம்வாழ் தமிழரின் அரசியல் நிலைமையையும், அதையிட்டு எதிர்கொள்ள நோக்கும் தீர்வு முயற்சியையும் பார்க்கும்போது, கார்த்திகேசனும், திடமான நம்பிக்கை கொண்டு அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் மிகச் சரியான தீர்வை இற்றைக்கு அரை நூற்றாண்டிற்கு முன்பாகவே ஈழத்தமிழர் முன் வைத்ததை அறிந்தவர்கள் அந்த உண்மையைப் புரிந்திருப்பர்.

மேடையிலே கூறியதை. வாழ்ந்து காட்டியவர்கள் இருவர், அவர்களில் ஒருவர் 'காந்தி', மற்றவர் 'காத்தி'என்பது ஒரு கூற்று. 'காத்தி' என்று பலராலும் வாஞ்சையுடன் அழைக்கப்பட்ட காலஞ்சென்ற 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' அவர்களை நன்கு அறிந்தவர்கள் இக்கூற்றினை ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டார்கள்.

தோழர் மு.கார்த்திகேசன் மார்க்ஸிச-லெனினிஸ தத்துவத்தை நன்கே கற்று, அதன்வழி தன்னைச் சார்ந்த மக்களுக்கொரு விமோசனப் பாதையைக் கட்டியெழுப்ப அல்லும்பகலும் அயராது உழைத்தவர். மார்க்ஸிச-லெனினிஸ தத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தலைவர் மாஓசேதுங் கோட்பாடுகளே மக்கள் விமோசனத்திற்கு அறுதியானது என இறுதிவரை திடமான நம்பிக்கையுடன் வாழ்ந்தவர். தலைவர் மாஓசேதுங் மரணமாகி சரியாக ஒரு வருடம் ஒரு நாள் கடந்து தனது உயிரிழந்தார். மாஓசேதுங் எவ்வாறு உலகின் அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடினாரோ, அதே போல, தோழர் மு.கார்த்திகேசனும் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட்டாக மக்களிடையே இன, மத பேதத்தையும், சாதிப்பாகுபாட்டையும், பொருளாதார வேறுபாட்டையும் முறியடிக்கப் போராடி தனது வாழ்வை அர்ப்பணித்தவர்.

தோழர் மு.கார்த்திகேசன் ஒரு புத்திஜீவி மட்டுமல்லாது, ஒரு வம்சாவழிக்கு முன்னதாகவே அவர்களுக்காக சிந்தித்து செயற்படும் ஆற்றல் படைத்த ஓர் தீர்க்கதரிசி. பொதுவுடமைவாதிக்கு இலக்கணம், ஏன் குறியீடே கார்த்திகேசன்தான் என்று கூறுமளவிற்கு பொதுவுடமைத் தத்துவமென்பது பலரும் பயப்படுவது போல் தாம் வைத்திருக்கும் பொருள், சுகபோகங்களைப் பகிர்ந்து கொள்வதல்ல, தாம் பெற்ற அறிவாற்றல், சிந்தனையாற்றல், செயலாற்றல் அனைத்தையும் பயன்படுத்தியும் பகிர்ந்து கொண்டும் ஓர் பொருள்வளத்துடன் கூடிய அறிவுபூர்வமான சிந்தனைச் செறிவுள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே என்பதை நன்கு அறிந்தவர். அதனால்தான் போலும் ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்து, அதன் வாயிலாக தனது நெறிப்படுத்தல் மூலம் நல்லதொரு சமத்துவமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப ஆர்வம் கொண்டு செயற்பட்டார். இம்மலரில் பதிப்பாகியிருக்கும் அத்தனை கட்டுரைகளுமே அதற்குச் சான்றாகும்.

'மக்கள் நேசன் கார்த்திகேசன்' எனக் கருதப்பட்ட தோழர் மு.கார்த்திகேசன் நேசம், பாசம் இரண்டையும் அனைத்து மக்கள் மேலும் காட்டி வாழ்ந்தவர். அவரை வழிகாட்டியெனக் கூறிவிட முடியாது. ஏனெனில் முற்றுமுழுதாக அவர்வழி தொடர்வது என்பது எவருக்குமே இன்றுவரை சாத்தியமாகவுமில்லை, இனிமேலும் சாத்தியமாகும் என நம்புவதும் மிகக் கடினமான விடயமே. பலர் எண்ணங்களில் குடிகொண்டு, நெஞ்சங்களில் நிறைந்தவராயினும், மற்றவர் வாழ்வில் சூரியன் அஸ்தமனமானபோது, வானத்து நட்சத்திரமாக ஒளிகொடுத்தும், மற்றவர் வாழ்க்கையின் நடுக்கடலில் தத்தளித்த போது கலங்கரை விளக்கமாக வழிநடாத்தியும், தனது தன்மையிலே மற்றவர்க்கு எட்டாத உயரத்தைப் பிடித்தவர்.

இத்துணை உன்னத மனிதரை நினைவுகூரும் இம்மலர் வெளியீட்டிலே எவ்வகையிலேனும் பங்கேற்க வாய்ப்புப் பெற்றவர்கள், அவர் பெற்ற பிள்ளைகளாயினும் சரி, அனைவரும் பாக்கியசாலிகளே.

தோழர் மு.கார்த்திகேசன் ஒவ்வோர் காலகட்டத்திலும் அவருடன் தொடர்பு கொண்டு இணைந்து வாழ்ந்த அல்லது செயற்பட்ட வேறுபட்ட பலரின் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டு அவையாவும் ஒருவகையில் தோழர் மு.கார்த்திகேசன் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதால், மீண்டும் மீண்டும் ஒரே விடயத்தை எழுதுவதைத் தவிர்ப்பதற்காகவும், எமது வாசகர்கள் அவற்றை ஒருங்கிணைத்து வாழ்க்கை வரலாற்றை கிரகித்துக் கொள்வார்கள் என்பதாலும் வாழ்க்கை வரலாறு என்று தனியே ஒரு கட்டுரை தர வேண்டிய அவசியமேற்படவில்லை.

அவரவர் எழுத்து நடையிலேயே இருக்க வேண்டியும், எழுத்தாளரது ஈடுபாடும், வெளிப்பாடும் அவரவர் விரும்பியவாறு பிரதிபலிக்க வேண்டியும், கட்டுரைகள் யாவும், ஒருசில மிகஅவசியமான திருத்தங்களுடனும், மாற்றங்களுடனும் இடம் பெற்றுள்ளன. கார்த்திகேசனின் இலட்சிய வாழ்வும், அரும்பெரும் சேவையும் எவ்வாறு மக்கள் நெஞ்சினில் அவரை குடிகொள்ள வைத்தனவோ, அதேபோன்று நகைச்சுவையும் அவரது வாழ்வில் முக்கிய இடம் வகித்தது. அவரது நகைச்சுவைகளும் அநேகமான கட்டுரைகளினிடையேயும், தனித்தனியாகவும் முடிந்தவரையில் இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

அத்துடன் தோழர் மு.கார்த்திகேசனின் தேர்ச்சி பெற்ற எழுத்தாற்றல், பேச்சாற்றல் என்பன குறிப்பிடத்தக்கவையும், பலரும் படிக்கவும் கேட்கவும் விரும்புபவையுமாகும். ஆகவே கைவசமிருந்த தோழர் மு.கார்த்திகேசனின் ஒரு சில ஆக்கங்களும் படைப்புகளும் இந் நினைவுமலரில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் 25வது ஆண்டு நினைவுமலர் பதிப்பிற்பான முயற்சியை ஆரம்பித்த வேளையில், அமரர் மு.கார்த்திகேசன் உயிர்வாழ்ந்த காலத்திலேயே 1976ம் ஆண்டில், இவ்வாறான மலரொன்றைப் பிரசுரிக்க திரு.மு.தியாகராஜா, (முன்னாள் பதில் அதிபர், யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) சேகரித்து வைத்த கட்டுரைகள் இம்முயற்சிக்கு தற்போது மிகவும் உதவியாக இருந்தன. அமரர் கார்த்திகேசன் மறைவின் போது பத்திரிகைகளில் பிரசுரமான பல செய்திகளையும், கட்டுரைகளையும், அத்தோடு அமரர் தானே சேகரித்து வைத்திருந்த பல நூல்களையும், விவரங்களையும், ஏன் புகைப்படங்களையுமே இக்காலகட்டத்தில் மீளப்பெற முடியாமல், பெரும்பான்மையானவை மனவருத்தத்துடன் தவிர்க்கப்பட்டே இம்மலர் பிரசுரமாகும் இவ்வேளையில், திரு.மு.தியாகராஜா அவர்களின் 26 வருடங்களின் முன்பான சேகரிப்பும், அதை இக்காலம்வரை பேணிப்பாதுகாத்ததும் மகத்தான சாதனையே! மலர்க்குழுவின் சார்பாக அவரது சேவையை மெச்சிப்

பாராட்டுவதுடன், மனமுவந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அம்மலர் வெளியீட்டு முயற்சியில் எண்ணற்றவர்கள் பலவிதத்திலும் மலர்க்குழுவிற்கு கைகொடுத்து உதவியுள்ளனர். அனைவர்க்கும் மலர்க்குழு சார்பாக மிகப்பணிவான மனமுவந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழர் மு.கார்த்திகேசன் தனது வாழ்நாளிலேயே ஒரு சமத்துவ சமுதாயத்தை காணவிரும்பி தனக்கென சுகபோகங்களை அனுபவிக்காது, புகழைத் தானே விரும்பித் தேடாது, தனது அறிவு, செல்வம் அனைத்தையும் தன்னோடு இணைந்த சமூகத்திற்கே அர்ப்பணித்தவர். ஒரு சமத்துவ சமுதாயத்தை நிர்மாணிக்க சிறந்த கல்வி அத்தியாவசியமானது என்பதையும், அதை எவ்வாறெல்லாம் அச்சமுதாயத்திற்கு அளிக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் தானே முன்வந்து அவரது எல்லையிலா அறிவினைப் பயன்படுத்தி அளித்திருக்கிறார்.

ஆகவே இந்த நினைவுமலரை தோழர் மு.கார்த்திகேசன் மிகவும் விரும்பியிருக்கக் கூடிய கல்விக்காக அர்ப்பணித்து, இந் நினைவுமலரின் பிரதியொன்றைப் பெறுவதற்கான அன்பளிப்பை தோழர் மு.கார்த்திகேசன் கற்றுத்தந்தும், அதிபராக சேவையுமாற்றிய மூன்று கல்வி நிலையங்களான யாழ். இந்துக்கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, அத்துடன் அவர் தனது ஆரம்ப கல்வியைப் பெற்ற வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தா வித்தியாலயம் ஆகியவற்றில் ஒன்றிற்கு, மலரின் பிரதியைப் பெறுபவர் தெரிவின்படி அனுப்பிவைக்க மலர்க்குழு தீர்மானித்துள்ளது.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் எம்நெஞ்சில் நிறைந்து என்றும் வாழ்வார்!

மலர்க்குழு சார்பாக
ஜானகி பாலக்கிருஷ்ணன

* * *

அனைவரையும் காத்தவனே!

மனிதன் முத்தையா

பாமரர் மேல் உன் அன்பினைச் சொரிந்தாய்
படித்தவர்க்கெல்லாம் அறிவினைப் பகிர்ந்தாய்
மாணவர் தமக்கு வழிகாட்டி அகமகிழ்ந்தாய்
மாமகனே காத்தி ஏழை பங்காளா!

தூயவனே! உன் துடிப்பான தத்துவத்தை
வேடிக்கையாகப் பேசிப் புரிய வைத்தாய்
ஞாலமெங்கும் செம்பதாகை - பரப்பிச்
சிறகடிக்கச் சிந்தை கொண்டு நின்றாய்

காத்தார், காத்தார் என்றே மக்கள் உமக்கு
காத்திரமாய் ஈந்தனரே அப் பெயரை
அனைவரையும் காத்தவனே - காத்தி காத்தி
உனையன்றி யாரவர்க்குப் பொருந்தும் இப்பேர்?

• மனிதன் முத்தையா,
சங்கானை வாசியாவார்.
Man முத்தையா என அனைவராலும் அழைக்கப்படுபவர்.

அமரர் கார்த்தி ஒரு ஸ்தாபனம்

க. சிவராமலிங்கம்

பொது உடமைத் தத்துவம் தோல்வி கண்டு விட்டது என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். தத்துவம் என்றும் தோல்வி காண்பதில்லை. தத்துவம் எல்லோருக்கும் புரிவதும் இல்லை. புரியாதவர்கள்தான் தோல்வி கண்டவர்கள். பொதுஉடமைத் தத்துவத்தின் தந்தை கார்ல் மார்க்ஸ். இவரின் பின் இத்தத்துவத்தை விளங்கிக்கொண்டவர்களும் நடை முறைப்படுத்தியவர்களும் மிகச் சிலரே. இவ்வொரு சிலரில் ஒருவர் அமரர் மு.கார்த்திகேசன். தத்துவத்தின் 'சாரத்தை' கேட்போர் சிந்தையில் நிலை நிறுத்த வல்லவராகவும் வாழ்ந்தவர்.

தத்துவத்தை ஒரு உளப் பயிற்சிக்கு (Mental Exercise) உரியதாகக் கொள்ளாது வாழ்ந்து காட்டிய உன்னத மனிதர் அமரர் மு.கார்த்திகேசன். ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் உறுதுணையாகவும், நசுக்கப்பட்டவர்களின் நலன் காக்கவும் தீரனாக வாழ்ந்தவர். கொள்கையை ஏற்க மறுத்தவர்களும் எதிரிகளும் கூட 'காத்தி' ஒரு கனவான் - Gentleman - என்று நெஞ்சிலிருந்து பேசி அன்பு பாராட்டி நட்புக்கொள்ள அவாவும் பெரியோன் இவர். மாற்றுக்கருத்துடையோர் இடத்தும் அன்பாலும் பண்பாலும் முதலிடம் பெற்றவர் அமரர் மு.கா.

ஆங்கிலமும், செந்தமிழும் இவர் எழுத்தால் பேச்சால் பெருமை பெற்றன. தமிழில் கவிதை புனையும் ஆற்றலும் இவர்பால் தானே வந்து சேர்ந்தது. வாக்காலும் மனத்தாலும் எதிரியைக் கூடச் சீண்டத் தெரியாத இவர் பெருமையை 'சாமான்யர்கள்' எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? இச்சமுதாயப் பலவீனத்தால், 'காத்தி' சாதிக்கக் கூடியவைகூட எமக்குச் சாத்தியமாகவில்லை.

எம்மவரிடையே காணப்படும் நேரிய சிந்தனை வறுமைக்குக் காரணம், 'காத்தி' போன்ற உன்னத மனிதர்களை நாம் இனங்காணத் தவறியமையே என்பது மறுக்க முடியாத உண்மை. இவர் நினைவு என்றும் பசுமையானது.
'காத்தி' ஒரு தனிமனிதனல்ல. ஒரு சமுதாய ஸ்தாபனம்.

க. சிவராமலிங்கம்,
முன்னாள் பதில் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி

எங்கள் தோழன் கார்த்தி

நீர்வை பொன்னையன்

'மனிதனது மதிக்க முடியாத இனிய உடமைகளில் சிறந்தது அவனது வாழ்வாகும். அவன் ஒரு தடவைதான் வாழமுடியும். காலமெல்லாம் குறிக்கோளில்லாமல் பாழாக்கிவிட்டேனென்ற வருத்தம் வதைப்பதற்கு இடம் கொடுக்காத வகையில் அவன் சீராக வாழவேண்டும். அற்பனாக வாழ்ந்து இழிவு தேடினேன் என்ற அவமானம் உள்ளத்தை எரிப்பதற்கு இடமில்லாத வகையில் அவன் நேராக வாழவேண்டும். உலகத்தின் தலைசிறந்த லட்சியத்துக்காக, மனிதகுலத்தின் விடுதலைப் போராட்டம் என்ற பொன்னான மார்க்கத்துக்காக என் வாழ்வு முழுவதையும் சக்தி அனைத்தையும் அர்ப்பணித்தேன் என்று இறக்கும் பொழுது கூறும் உரிமைபெறும் வகையில் அவன் வாழவேண்டும். திடீர் நோயோ, சோக விபத்தோ வாழ்வுக்கு வெடிவைக்கக் கூடுமாதலால், மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு வினாடியையும் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்'

நிக்கொலாய் ஒஸ்றோவஸ்க்கிய் என்ற சோவியத் எழுத்தாளன் 'வீரம் விளைந்தது' என்ற தன் நவீனத்தில் மேற்கண்டவாறு கூறியுள்ளான்.

எங்கள் தோழன் கார்த்திகேசன் அவர்களும் தன் வாழ்வு முழுவதையும் தனது இறுதி மூச்சுவரை மனித குலத்தின் விடுதலைக்கான போராட்டம் என்ற பொன்னான லட்சியத்துக்காக அர்ப்பணித்துள்ளார். தோழர் கார்த்தி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவர். அது மாத்திரமல்ல அவர் இலங்கையின் வடபுலத்தில் இடதுசாரி இயக்கத்தைப் பரப்பிய முன்னோடிகளில் முதன்மையானவர். அவர் ஓர் ஆழமான கல்விச் சிந்தனையாளர். தலைசிறந்த ஆசிரியன், அர்ப்பணிப்புள்ள சமூகத்தொண்டன், மனித நேயப்பண்பாளர், எளிமையான தூய வாழ்வைக் கடைப்பிடித்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் ஓர் உன்னத மார்க்ஸிசவாதி. அற்புதமான கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளன்.

மலேசியாவில் பிறந்து வளர்ந்து கல்விகற்று உயர்கல்வியை மேற் கொள்வதற்காக இலங்கை வந்தார் மு.கார்த்திகேசன். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் அவர் மாணவனாக இருந்த காலத்திலேயே தான் விரும்பி ஏற்றுக்கொண்ட இலட்சியப் பயணமான மார்க்ஸிசப் பாதையில் காலடியெடுத்து வைத்தார். அன்று ஆரம்பித்த அவரது மகத்தான நீண்ட பயணத்தில் எண்ணற்ற இன்னல்களும் இடையூறுகளும் நேரிட்ட போதிலும், அவர் உறுதி தளராது, பரித்தியாக உணர்வுடனும், உளத்தூய்மையுடனும் விடாப்பிடியாகச் செயலாற்றி முன்னேறிச் சென்றுள்ளார்.

கொழும்பிலமைந்திருந்த இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில், ஏகாதிபத்திய - பாசிஸ, எதிர்ப்பு மாணவர் அமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயல்பட்டவர்களின் முன்னணியில் நின்றார் கார்த்திகேசன். அந்த மாணவர் அமைப்பின் குரலான 'மாணவர் செய்தி' (Student News) என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்து அதன் ஆசிரியராகவும் பணியாற்றினார். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆங்கிலம், கணிதம் முதலிய பாடங்களைக் கற்றார். ஆங்கிலத்தில் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறிய கார்த்திகேசன் அன்று இலங்கை அரசாங்க நிர்வாக சேவையில் சேர்ந்திருந்தாரானால் அவர் தனக்கு ஒரு வளமான சொகுசு வாழ்க்கையை இலகுவில் அமைத்திருக்க முடியும். பதிலாக மக்களுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற லட்சிய வேட்கையுடன் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபக முன்னோடிகளில் ஒரு முக்கிய உறுப்பினராகத் தோழர் கார்த்திகேசன் தமது கட்சி வேலையை ஆரம்பித்தார். அவர் கட்சியின் முழுநேர ஊழியராக இணைந்து விசுவாசத்துடன் சேவை யாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக முழுநேர ஊழியர்களான தோழர்கள் ஆரியவன்ச குணசேகர, ஐசோதிஸ், ஹரி அபேகுணவர்த்தன, பி.கந்தையா, கே.இராமநாதன், பிரேம்லால் குமாரசிறி, என்.சண்முகதாசன், ஏச்.ஜி.எஸ்.ரத்னவீர, மு.கார்த்திகேசன், அ.வைத்திலிங்கம், பீற்றர் கெனமன் ஆகியோர் தோழர் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹா தலைமையை ஏற்று இயங்கினர். இக்காலகட்டத்தில் சேவையாற்றிய கம்யூனிஸ்ட் கட்சி முழுநேர ஊழியர்கள் அனைவரும் லட்சிய வேட்கையுடன் பரித்தியாக உணர்வுடன் பொரளை கொட்டா றோட் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் 'கம்யூன்' வாழ்க்கையை மேற்கொண்டனர். இத்தோழர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குக்கிடைத்த சொற்ப ஊதியத்தைப் பொதுமையாக ஒன்று சேர்த்து தங்கள் கம்யூன் வாழ்க்கையை மேற்கொண்டனர். இது ஒரு லட்சிய 'கம்யூன்' வாழ்க்கை முறையாகும். தோழர் கார்த்திகேசன் கொழும்பிலிருந்த காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில வார ஏடான 'போவர்ட்' (Forward) பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கார்த்தியை

இலங்கையின் வடபுலத்தில் கட்சியை ஸ்தாபிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு பணித்தது. அவர் முழுமனதுடன் கட்சியை யாழ் பிரதேசத்தில் ஸ்தாபிப்பதற்குச் சென்றார்.

யாழ். மண்ணில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை ஸ்தாபித்து மார்க்ஸிச கொள்கையைப் பரப்பியவர்களில் தோழர் கார்த்திகேசன் முதன்மையானவர். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றிய தோழர் கார்த்தி, தமது குடும்ப வாழ்க்கையை மேற்கொள்வதில் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுக்க நேரிட்டது. இதன்காரணமாக அவர் யாழ் இந்துக்கல்லூரியில் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். யாழ் சமூகத்தின் மிகக் கொடுமையான பழைமைவாத, வைதீக இந்துக்கள் செறிந்து வாழ்கின்ற வண்ணார்பண்ணையில் யாழ் இந்துக் கல்லூரி அமைந்திருந்தது. இப்படிப்பட்ட ஒரு சமூகப் பின்னணியைக் கொண்ட கல்லூரியில் ஒரு மார்க்ஸிசவாதி சேவையாற்றுவது ஒரு பெரும் சவாலாக இருந்தது. தோழர் கார்த்தி மன உறுதியுடன் இந்தச் சவாலை ஏற்றுப் பணியாற்ற முன் வந்தார். அவர் இக்கல்லூரியில் தமது அந்தரங்கசுத்தியான சேவையினால் நற்பிரஜைகளாக பெரும் எண்ணிக்கையினரை உருவாக்கியுள்ளதுடன், பெரும் தொகையான முற்போக்குச் சிந்தனை கொண்டவர்களையும் உருவாக்கினார். இக்கால கட்டத்தில் தமது அர்ப்பணிப்பான சேவை மூலம் தோழர் கார்த்தி மாணவர் சமூகத்தின் அமோக ஆதரவைப் பெற்றார். அவரைச் சுற்றி ஒரு பெரும் முற்போக்கு மாணவர் படையணி உருவாகியது. அது மாத்திரமல்ல தமது புனிதமான ஆசிரியத் தொண்டின் மூலமும், பரித்தியாக உணர்வுடைய சமூகத் தொண்டின் மூலமும் தோழர் கார்த்திகேசனின் மார்க்ஸிசக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத யாழ் சமூக பழைமைவாத வைதீக இந்துக்களின் கணிசமான தொகையினரது மதிப்பையும், ஆதரவையும் அவரால் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் காரணத்தாலேதான் அவர் அன்றைய காலகட்டத்தில் யாழ் மாநகரசபைத் தேர்தலில், மிகவும் பணபலம் வாய்ந்த அப்பிரதேசவாசியான ஒரு பெரும்புள்ளியைத் தோற்கடித்து மாநகரசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, யாழ் மாநகரசபை மக்கள் அனைவருக்கும் சேவை செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது.

கல்வி ஒரு தேசத்தின் வளத்திற்கும் மேம்பாட்டுக்கும் அத்தியா-வசியமானது. ஆனால் அத்தேசத்திலுள்ள சகல தரப்பினருக்கும் கிடைக்கக் கூடியதாக அக்கல்விமுறை அமைந்திருக்க வேண்டும். முதலாளித்துவ நாடுகளிலுள்ள கல்விமுறை, அந்நாடுகளிலுள்ள சமூகத்தின் ஒரு சிறுபிரிவினருக்கு மட்டும்தான், அதாவது சுரண்டும் வர்க்கத்தைச் சார்ந்த பிள்ளைகளுக்கு மாத்திரம்தான் கல்வி கிடைக்கக்கூடிய வகையில் அமைந்து உள்ளது. அது மாத்திரமல்ல இந்த

நாடுகளிலுள்ள கல்விக்கும் நாட்டின் பொருளாதார உற்பத்திக்கும் எதுவித தொடர்புமற்ற கல்விமுறை அமைந்துள்ளது. இக்கல்விமுறை அகற்றப்பட்டு, சமூகத்தின் சகலருக்கும் கல்வி கிடைக்கக் கூடியதாகவும், நாட்டின் உற்பத்தித் துறைக்கும் நெருங்கிய தொடர்புள்ள சோஷலிசக் கல்விமுறை அமைந்திருக்க வேண்டும் என்ற கல்விச் சிந்தனையை உடையவரக இருந்தார் தோழர் கார்த்தி. இதற்காகத்தான் அவர் தமது வாழ்நாளில் போராடினார்.

ஆசிரியரும், டாக்டரும் தான் ஒரு சமூகத்தின் இருவிழிகள். ஒரு சமூகத்தை ஆரோக்கியமுள்ளதாக உருவாக்குவதற்கு ஆசிரியரும் டாக்டரும் தியாக உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று தோழர் கார்த்தி அடிக்கடி வலியுறுத்தி வந்துள்ளார். ஒரு சமூகத்தை விழிப்படையச் செய்து அதை மேம்படுத்துவதற்கு ஆசிரியனுடைய பங்கு அத்தியாவசியம். அன்று யாழ் சமூகத்தின் விழிப்புக்கும் மேம்பாட்டுக்குமாக பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகள் பலர் இருந்துள்ளனர். இவர்களில் பலர் சுதந்திரம், ஜனநாயகம், மனிதநேயம், சமத்துவம் பற்றிய சிந்தனைகளை வலியுறுத்தி யாழ் மண்ணில் விதைத்துப் பரப்புவதில் முழுமூச்சாக ஈடுபட்டனர். இவர்களில், ஸ்கந்தவரோதயா கல்லூரி அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம், கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஹன்டி பேரின்பநாயகம், பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் சிவபாதசுந்தரம், யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியர்களான அ.வைத்திலிங்கம், மு.கார்த்திகேசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் மார்க்ஸிசவாதிகளாகவும் இடதுசாரிகளாகவும் இருந்தனர். இவ்வாசிரியப் பெரும்தகைகள் தமது அர்ப்பணிப்பான சேவை மூலம் யாழ் சமூகத்தின் பெருமதிப்பைப் பெற்றதுடன் இவர்கள் உத்தம ஆசிரியர்களுக்கான உதாரண புருஷர்களாகத் திகழ்கின்றனர்.

தோழர் கார்த்திகேசன் வடபுலத்திற்குச் சென்றபொழுது, யாழ் சமூகத்தின் எந்தப் பகுதி மக்களுக்கு, அதாவது சமூகத்தின் எந்த மட்டத்திலுள்ள மக்களுக்கு தமது சேவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது என்பதைச் சரியாக இனம் கண்டு, அப்பகுதி மக்களிடையே அவர் தமது அரசியல் வேலையை ஆரம்பித்தார். யாழ் சமூகத்தில் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்டு, சுரண்டிச் சூறையாடப்பட்டுக் கொண்டிருந்த சமூகத்தினர், நிலமற்ற விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் மத்தியில் தமது அரசியல் வேலையை தோழர் கார்த்தி ஆரம்பித்தார். அவர் தம்மைப் போல அன்று இதயசுத்தியுடன் சேவையாற்ற முன்வந்த தோழர்கள் அ.வைத்திலிங்கம், ஐ.ஆர்.அரியரத்தினம், எம்.சி.சுப்பிரமணியம், இராமசாமி ஐயர், வி.ஏ.கந்தசாமி, டாக்டர் சீனிவாசகம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், எஸ்.மகாலிங்கம், கே.ஜனகா ஆகியோருடன் இணைந்து வேலை செய்தார். இவர்களுடன் தோழர்கள் சுபைர் இளங்கீரன், கே.டானியல், டொமினிக் ஜீவா, அரசடி இராசையா, எஸ். பொன்னுத்துரை ஆகியோரும் நானும் பின் இணைந்து கொண்டோம்.

யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி நிறுவனமயமாக்கப்படுவதற்கு முன்னர் யாழ் ஆஸ்பத்திரிக்குப் பின்னாலுள்ள விக்ரோரியா றோட்டி-லமைந்திருந்த, தோழர் கார்த்தியினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட அவருடைய வீட்டில்தான் கட்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அநேகமாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அல்லது கூட்டங்கள் நடாத்தப்படும். 1947ம் ஆண்டின் பிற்பகுதியில் ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் நடந்த அரசியல் வகுப்பில் நான் பங்குபற்றினேன். அந்த வகுப்பை எடுத்தவர்தான் தோழர் கார்த்திகேசன் என்பதை வகுப்பு முடிந்த பின்னர் அறிந்தேன். 'மனித சமுதாய வளர்ச்சியின் வரலாற்றை' மிக இலகுவான முறையில் தெளிவாக எடுத்துக் கூறினார் தோழர் கார்த்திகேசன். விடயம் மிகவும் கடினமானதாக இருந்தாலும் அதை மிகவும் எளிமையாகவும் நாம் புரிந்துகொள்ளக்கூடிய வகையிலும் சுவாரசியமான முறையிலும் எடுத்துக் கூறினார் தோழர் கார்த்தி. கொழும்பிலிருந்து கட்சித் தலைவர்கள் வருகின்ற பொழுதெல்லாம் கார்த்தியின் வீட்டிலேதான் தங்குவார்கள்.

பின்னர் கட்சிக் காரியாலயம் வின்சர் படமாளிகைச் சந்திக்கு சமீபமாக உள்ள ஸ்ரான்லி வீதியிலமைந்த மஸ்கன் கட்டிடத்திற்குப் பக்கத்திலுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் மேல்மாடியில் இயங்கியது. இதன் பின்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள 'கனகபவனம்' மேல்மாடியில் இயங்கியது. கட்சி 1963ல் பிளவுபட்ட பின்னர் ஸ்ரான்லி வீதியிலுள்ள 'மொம்ஸாக் பில்டிங்' என்று அழைக்கப்பட்ட கட்டிடத்தின் மேல் மாடியில் கட்சி அலுவலகம் இயங்கியது. இதன் பின்னர் யாழ் வீதியிலமைந்த ஒரு வீட்டிலும், பின்னர் ஆஸ்பத்திரிச் சந்திக்கு அருகாமையிலமைந்த இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனத்திற்கு முன்னாலிருந்த கட்டிடத்திலும், இதையடுத்து ஸ்ரான்லி வீதி பெற்றோலியக் கூட்டுத் தாபனத்துக்கு முன்னாலிருந்த யாழ் புத்தகநிலையக் கட்டிடத்திலும் கட்சி அலுவலகம் இயங்கியது. கட்சிக் காரியாலயம் வாடகைக் கட்டிடங்களில் இயங்கியதைப் போல தோழர் கார்த்திகேசனின் குடும்பமும் விக்ரோரியா றோட், கலட்டி அம்மன் கோவிலடி, நார்ச்சிமார் கோவிலடி, சிவப்பிரகாசம் வீதி, மறுபடி கலட்டிப் பிள்ளையார் கோவிலடி, நார்ச்சிமார் கோவில் முன்னமைந்த இராமநாதன் வீதி ஆகிய வண்ணார்பண்ணையில் அமைந்த வாடகை வீடுகளில்தான் வாழ்ந்து வந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து அதைக் கட்டி எழுப்பும் வேலையில் முழுமூச்சுடன் ஈடுபட்ட தோழர் கார்த்தி, அதேவேளை தான் ஒரு கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்து முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். அவர் விசால உள்ளம் படைத்தவராக இருந்ததுடன், வற்றாத அன்புள்ளம் கொண்டவர். நேர்மையான தூய எளிமையான வாழ்வைக் கடைப்பிடித்தவர். கட்சியினதும், கட்சி உறுப்பினர்களதும் நலனைத் தனது சொந்த நலனாகக் கருதி செயலாற்றியவர். தான் வரித்துக்கொண்ட தத்துவத்தையும் தமது வாழ்வையும் இணைத்து செயற்பட்டவர். அவர் சரியான கோட்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்து வந்ததுடன், தவறான கருத்துக்களுக்கும்

செயல்பாடுகளுக்கும் எதிராக உறுதியாக விடாப்பிடியாகப் போராடியவர். கட்சிக்குள் காலத்துக்காலம் தலை தூக்கிய அதிதீவிர இடதுசாரிப் போக்கிற்கும், வலதுசாரிச் சந்தர்ப்பவாதப் போக்கிற்கும் எதிராக தத்துவார்த்த ரீதியாக உறுதியாகவும் விடாப்பிடியாகவும் போராடிக் கட்சியைச் சரியான வழியில் செல்ல நெறிப்படுத்தியவர் தோழர் கார்த்தி. காலத்துக்குக் காலம் சில சந்தர்ப்பவாதிகள் கட்சியில் பிளவை ஏற்படுத்தியபொழுது, தோழர் கார்த்தி நிதானமாகவும் உறுதியாகவும் நின்று தத்துவார்த்தரீதியில் போராடி கட்சியை நெறிப்படுத்தினார். கட்சி உறுப்பினர்களையும் கட்சி ஊழியர்களையும் தட்டிக்கொடுத்து வளர்த்தெடுப்பதில் கரிசனையுடன் செயற்பட்டார்.

ஆரம்பத்திலிருந்து இறுதிவரை தூய்மையான எளிமையான ஒரு கம்யூனிஸ்ட்டிற்குரிய சீரிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தவர் தோழர் கார்த்தி. இந்தியாவின் பிரதமராக இருந்த லட்சிய புருஷர் லால்பகதூர் சாஸ்திரி அவர்கள் வாழ்ந்த காலத்திலும் அவர் இறந்த பின்னரும் அவரது குடும்பம் வறுமை நிலையிலேயே இருந்தது. சாஸ்திரிக்கு எதுவித வங்கிக் கணக்கோ பெரும் சொத்தோ இருந்ததில்லை. தமிழ் நாட்டின் கர்மவீரர் காமராஜர் மறைந்தபின் அவரது தாயார் வாடகை வீட்டிலேதான் வாழ்ந்தார். மேற்கு வங்க முன்னாள் முதல்வர் தோழர் ஜோதி பாசு தேசிய உடையில் எளிமையான வாழ்க்கையை நடத்தினார். அவர் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் எவருமின்றி சுயாதீனமாக வாழ்ந்தவர். கேரளாவின் முதல்வராக இருந்த தோழர் நம்பூதிரிபாட் தமது இறுதிக்காலத்தில் தாம் எழுதிய நூல்கள் மூலம் கிடைத்த றோயல்ரி (உரிமைக்கட்டணம்) மூலம்தான் தாம் வசித்த வீட்டு வாடகைப் பணத்தைக் கட்டிவந்தார். வியட்நாம் மக்களின் மகத்தான தலைவர் ஹோசிமின் அவர்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பொழுது, அந்த வைபவத்திற்குச் செல்வதற்கு உடுப்பு இல்லாமல் தனது சகாவின் உடுப்பை இரவலாக வாங்கி உடுத்துச் சென்றார். அவர் இறக்கும் வரை மூன்றே மூன்று உடைகளை மாத்திரமே தனக்குச் சொந்தமாக வைத்திருந்தார். அவருக்கு எதுவித சொத்தோ செல்வமோ என்றுமிருந்ததில்லை. அவரது வற்றாத செல்வம் வியட்நாமிய மக்கள்தான். இவ்வாறான லட்சிய புருஷர்களைப் போல தோழர் கார்த்தியும் தூய்மையான வாழ்வைக் கடைப்பிடித்தவர். அவர் எதுவித சொத்தையும் சேகரித்தவருமல்ல, வைத்திருந்தவருமல்ல. வறுமையிற் செம்மை கண்டவர். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்றவர் தோழர் கார்த்தியின் மனைவி. இருபதாம் நூற்றாண்டின் தத்துவ மேதை கார்ல் மார்க்ஸ் அவர்களது சாதனைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாக இருந்தவர் அவரது மனைவி ஜென்னி. மகத்தான தலைவர் லெனின் அவர்களது புரட்சி நடவடிக்கைகளுக்கும் வெற்றிக்கும் உறுதுணையாகவும் பக்க பலமாகவும் இருந்தவர் அவரது வாழ்க்கைத் துணைவி குரூப்ஸ்கயா. அதேபோல தோழர் கார்த்தியின் உன்னத வாழ்விற்கு உறுதுணையாகவும் பங்காளியாகவும் இறுதிவரை இருந்தவர் அவரது வாழ்க்கைத் துணைவியார் வாலாம்பிகை என்பது யாவரும் அறிந்த உண்மை.

தனது சொந்த நலனிலும் பார்க்க, தன் குடும்ப நலனிலும் பார்க்க கம்யூனிஸ்ட் கட்சியின் நலனே பெரிதெனக் கொண்டு அதற்காக இரவும் பகலும் இடையறாது உழைத்தவர் தோழர் கார்த்தி. கட்சியை வடபுலத்தில் ஸ்தாபித்தவர்களில் முதன்மையானவர். அதைக் கட்டி வளர்ப்பதிலும் தோழர் கார்த்தி முனைப்பாகச் செயல்பட்டார். கட்சிக் கிளைகளை யாழ் நகரத்தின் பலபகுதிகளில் குறிப்பாக, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் ஸ்தாபித்தார். அத்துடன் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கட்சிக் கிளைகளை நிறுவுவதில் முனைந்து அதில் குறிப்பிடத்தக்கதான வெற்றியையும் நிலை நாட்டினார். யாழ் நகரின் கொட்டடி, ஆரிய குளத்தடி, வண்ணார்பண்ணை, பலாலி வீதி, அரியாலை, குருநகர், முஸ்லிம் வட்டாரம், நல்லூர் போன்ற இடங்களிலும் குடாநாட்டின் முக்கிய இடங்களான காங்கேசன்துறை, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி, கரவெட்டி, மட்டுவில், சங்கானை, சுன்னாகம், கோப்பாய் போன்ற இடங்களிலும் கட்சிக் கிளைகளை அமைப்பதில் கரிசனையுடன் முயற்சித்து இம் முயற்சியில் கம்யூனிஸ்ட் கட்சி பெருமைப்படக்கூடியதான அளவில் வெற்றிகாண வழிவகை செய்தார். இப்பிரதேசங்களில் தோழர் கார்த்தியின் உதவியுடன் கிரமமாக குறிப்பிட்ட கால கட்டத்திற்கு அரசியல் வகுப்புக்கள் நடத்தப்பட்டன. இப்பகுதிகளில் கட்சிப் பத்திரிகைகளும் கிரமமாக குறிப்பிட்ட காலத்திற்கு விற்பனையாகின. இப்பிரதேசங்களிலுள்ள கட்சி உறுப்பினர்களை அரசியற் தத்துவார்த்த ரீதியில் வளர்த்தெடுப்பதில் கார்த்தி அக்கறையுடன் செயற்பட்டார். கட்சி உறுப்பினர்களுடன் இதயபூர்வமாக தோழமையுடன் பழகியதன் மூலம் அவர்களது பேரன்பையும் பெரு மதிப்பையும் தோழர் கார்த்தி பெற்றார். கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அனைவரும் ''எங்கள் தோழர் கார்த்தி" என்று உரிமையுடனும் வாஞ்சையுடனும் அழைத்து வந்துள்ளனர்.

கட்சிப் பணிகளை உறுப்பினர்கள் செய்யும் பொழுது கட்சியின் தலைவர்களான தோழர்கள் கார்த்தி, எம்.சி.சுப்ரமணியம், இராமசாமி ஐயர் ஆகியோர் இணைந்து உற்சாகத்துடன் வேலை செய்வார்கள். கட்சிக்கு நிதி சேகரிப்பதிலும் கட்சிப் பத்திரிகையை யாழ் பஸ் நிலையத்திலும் கடைத் தெருவிலும் விற்பதிலும் கட்சி உறுப்பினர்களாகிய எம்முடன் இம் மூவரும் சேர்ந்து இயங்குவார்கள். கட்சிப் பிரசாரக் கூட்டங்களையும் மேதினக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்வதிலும் ஏனைய தயாரிப்பு வேலைகளிலும் இம் மும்மூர்த்திகள் ஊக்கத்துடன் எம்முடன் செயற்படுவர். இக்கூட்டங்களுக்கான போஸ்டர்களை ஒட்டுவதிலிருந்து கூட்டத்துக்கான மேடைகளை அமைப்பது வரை இவர்கள் எம்முடன் சேர்ந்து வேலை செய்வார்கள். அதுமாத்திரமல்ல கூட்டம் முடியும்வரை இவர்கள் எம்முடன் நின்று மேடை கழற்றி அகற்றப்படும்வரையும் எம்முடன் சேர்ந்து உழைப்பார்கள். கட்சியின் கூட்டச் சுவரொட்டிகளை (போஸ்டர்கள்) இரவு வேளைகளில் நாங்கள் ஒட்டும்பொழுது பொலிசாரின் கெடுபிடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். இதைச்

சமாளிப்பதற்கு இம்மூவரும் இரவு முழுவதும் யாழ்நகர வீதிகளில் எம்முடன் அலைந்து திரிவார்கள். முக்கிய இடங்களில் சுவரொட்டிகளை பொலிசாரோ, கட்சி விரோதிகளோ கிழித்து நாசமாக்காமலிருக்கும் வகையில் உயரமான இடங்களில் ஒட்ட வேண்டியநிலை ஏற்படும். ''தோழர்! என்னுடைய தோளில் ஏறிநின்று போஸ்டரை உயரத்தில் ஒட்டும்" என்று வாட்டசாட்டமான உடல்வாகைக் கொண்ட தோழர் இராமசாமி ஐயர் கட்டளையிடுவார். யாழ் சுண்டிக்குளி பிரதான வீதியிலமைந்துள்ள 'கொன்வென்ட்' சுவர் 'கம்யூனிஸ்ட் கட்சியின் டயறி" என்று அழைக்கப்பட்டது. 1953ம் ஆண்டின் ஹர்த்தால் காலத்திலிருந்து 70ம் ஆண்டு வரையான காலப்பகுதிவரை முதலாளித்துவ யூ.என்.பி. எதிர்ப்பு சுலோகங்கள் சிவப்பு மையினால் பெரிய எழுத்துக்களில் தொடர்ச்சியாக எழுதப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும்.

யாழ் வின்சர் தியேட்டருக்கண்மையில் கட்சி அலுவலகம் இயங்கிய காலகட்டத்தில், கட்சிக் கூட்டங்கள் முடிந்த பின்னர் அல்லது கட்சிப் பத்திரிகை விற்பனைக்குப் பின்னர் தேனீர் குடிப்பதற்கு நாங்கள் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலமைந்துள்ள சிங்ககிரி பேக்கரிக்கு அருகாமையிலுள்ள ஒரு சிங்களவரின் கடைக்கு செல்வது வழக்கம். ஏன் இந்தக் குறிப்பிட்ட கடைக்கு மாத்திரம் நாங்கள் தேனீர் குடிக்க வருகின்றோம் என்று நான் ஒருநாள் தோழர் கார்த்தியைக் கேட்டேன். ''பிளேயின் ரீ, பொடி நடை, பீக்கொக் சிகறட், இவைதான் கம்யூனிஸ்டுகளாகிய எங்களுக்கு இங்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன" என்று கார்த்தி நகைச்சவையுடன் கூறியதுடன் இவற்றை நகரிலுள்ள ஏனைய தமிழ்த் தேனீர்க் கடைகள் எங்களுக்கு தரமாட்டார்கள். இந்த ஒரே ஒரு சிங்களக் கடையில்தான் எங்கள் அனைவருக்கும் தேனீர் கிடைக்கும் என்று அர்த்தபுஷ்டியுடன் கூறினார். இத்தருணத்தில்தான் சாதி ஒடுக்குமுறையின் தார்ப்பரியத்தை என்னால் உணர்ந்துகொள்ள முடிந்தது. சாதி ஒடுக்குமுறைக்கெதிராக தோழர் கார்த்தியின் வழிகாட்டுதலுடன் போராடிவந்த கம்யூனிஸ்ட் கட்சியை அன்றைய தமிழ் மேட்டுக்குடியினர் 'நளக்கட்சி' என்று திமிர்த்தனத்துடன் கூறினர். கம்யூனிஸ்ட் கட்சியினதும் தோழர் கார்த்திகேசனதும் வழிகாட்டு தலுடன் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆகிய ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டு, சாதி ஒடுக்கு முறையைத் தகர்ப்பதற்காக சாத்வீகமான முறையிலும், ஆயுதம் தாங்கிய முறையிலும் பல போராட்டங்கள் யாழ் மண்ணில் நடத்தப்பட்டு குறிப்பிடத்தக்க வெற்றிச் சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியெழுப்புவதில் தோழர் கார்த்திகேசன் கரிசனை காட்டியதோடல்லாமல், கட்சியின் வெகுஜன அமைப்புக்களான தொழிற்சங்கம், விவசாயிகள் சங்கம், வாலிப சங்கம், சீன, சோவியத், வியட்நாமிய நட்புறவுச் சங்கங்கள், ஆசிரிய சங்கம் போன்றவற்றையும் கட்டி எழுப்புவதில் ஆர்வத்துடன் செயற்பட்டார். அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் நான் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் (C.T.U.F) வடபிராந்திய

பிரதிநிதியாக செயற்பட்ட காலகட்டத்தில் தோழர்கள் கார்த்திகேசனும், வீ.ஏ.கந்தசாமியும் எனக்கு வழிகாட்டிகளாகவும் போராட்டத் தோழர்களாகவும் செயற்பட்டார்கள். இலங்கைப் போக்குவரத்துச்சபை (C.T.B) தொழிற் சங்கம், காங்கேசன் சீமெந்துத்தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், பரந்தன் இராசாயன தொழிற்சாலையின் தொழிலாளர் சங்கம், பீடித் தொழிலாளர் சங்கம், வல்லை நெசவாலை தொழிலாளர் சங்கம், ஆனையிறவு உப்பள தொழிலாளர் சங்கம், ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம், மில்க்வைற் சோப் தொழிலாளர் சங்கம், யாழ்நகர சாய்ப்புச் சிப்பந்திகள் சங்கம், வடபிரதேச சினிமா படமாளிகைத் தொழிலாளர் சங்கம் ஆகியவை இலங்கைத் தொழிற் சங்கசம்மேளனத்துடன் இணைந்திருந்தன. வட பிரதேசத்தில் இத் தொழிற் சங்கங்களை ஸ்தாபிப்பதிலும் வலுப்படுத்துவதிலும் நாம் பல நெருக்கடிகளுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருந்தது. இந்த இக்கட்டான வேளைகளில் தோழர் கார்த்தி எமக்கு அர்த்தபுஷ்டியான ஆலோசனைகளையும் வழிகாட்டுதலையும் நல்கி பெரும் உறுதுணையாகச் செயற்பட்டார். இத் தொழிற்துறைகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களது உரிமைகளையும் கோரிக்கைகளையும் வென்றெடுப்பதற்கு நாம் மிகக் கடினமான நீண்டகாலப் போராட்டங்களை நடாத்தவேண்டியிருந்தது. இந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்கான போராட்டகால கட்டங்களின் போது இத்துறைகளைச் சார்ந்த நிர்வாகத்தினரதும், பொலிஸ் தரப்பினரதும் அச்சுறுத்தல்களுக்கும் அடக்குமுறைக்கும் தொழிலாளர்கள் முகம்கொடுக்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலைகளில் தோழர் கார்த்திகேசன் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் நெறிப்படுத்தல்களையும் வழங்கி இப்போராட்டங்கள் வெற்றியீட்டுவதற்கு பெரும்பங்காற்றியுள்ளார். இதன் விளைவாக இத்தொழிற்சங்கங்களின் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் கம்யூனிஸ்ட் கட்சியின் மேதின ஊர்வலங்களிலும் கட்சியின் பல போராட்டங்களிலும் உணர்வுபூர்வமாகப் பங்குபற்றி வெற்றிவாகை சூட பங்களிப்புச் செய்துள்ளார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் துணை ஸ்தாபனமான வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தை ஸ்தாபித்ததில் தோழர் கார்த்தி முன்னணியில் நின்று செயலாற்றினார். இவ்வாலிபர் சங்கம் வடபிரதேசத்தில் கட்சியின் செயற்பாடுகளுக்கும், தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திற்கும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கும் உறுதுணையாக நின்று பெரும்பங்காற்றியுள்ளது. இவ்வாலிப சங்கத்தின் கிளைகள் யாழ் நகரின் பல பகுதிகளில் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த கொட்டடி, நாவாந்துறை, யாழ் பலாலி வீதி, கொழும்புத்துறை, அரியாலை, ஆரியகுளம், முஸ்லிம் வட்டாரம், வண்ணார்பண்ணை ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. அதேவேளை யாழ் நகரத்திற்கு வெளியே நெல்லியடி, பருத்தித்துறை, கரவெட்டி, உடுப்பிட்டி, துன்னாலை, காங்கேசன்துறை, கலட்டி, தெல்லிப்பளை, சுன்னாகம், இணுவில், சங்கானை, சுழிபுரம், மட்டுவில், கொடிகாமம், அச்சுவேலி, ஆவரங்கால் ஆகிய

இடங்களில் வாலிப சங்கக் கிளைகள் நிறுவப்பட்டன. இக்கிளைகளில் கட்சியின் அரசியல் வகுப்புக்கள் அதாவது மார்க்ஸிசம் - லெனினிஸசம் - மாஓசேதுங் சிந்தனை பற்றிய அரசியல் வகுப்புக்களும், அரசியல் முகாம்களும் நடத்தப்பட்டன. இதன் விளைவாக இவ்வாலிபர் சங்க கிளைகளின் உறுப்பினர்கள், கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய சகல வெகுஜனப் போராட்டங்களிலும் உணர்வுபூர்வமாகக் கலந்து உரம்பெற்றனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வாலிபர் சங்கத்தின் வடபிரதேச மகாநாடுகளையும் அரசியல் முகாம்களையும் நடத்துவதற்கு உருப்படியான ஆலோசனைகளையும் திட்டங்களையும் வகுப்பதற்கு தோழர் கார்த்தி அளப்பரிய பங்கினை வழங்கியுள்ளார். இன்றும் இப்பிரதேசங்களிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் தோழர் கார்த்தியை மறக்காமல் தமக்கு இன்னல்கள் நேரிடும் வேளைகளில் நினைவுகூருகின்றனர். வடபிரதேச கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்திற்கு நானும் தோழர் கே.ஏ.சுப்பிரமணியமும் தலைமை தாங்கி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் பல போராட்டங்களையும் நடத்தியுள்ளோம்.

வடபிரதேசத்தில் குறிப்பாக அறுபது எழுபதுகளில் வன்னிப் பிரதேசத்தில் முல்லைத் தீவு, கிளிநொச்சி, மல்லாவி, வவுனிக்குளம், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் விவசாய சங்கங்களை அமைத்து, அப்பகுதிகளிலுள்ள விவசாயிகளின் உரிமைகளுக்காக பலபோராட்டங்களை நடத்தி பல வெற்றிகளை ஈட்டியுள்ளோம். இப்பிரதேசங்களிலுள்ள உயர் பதவி வகிக்கின்ற விவசாய நீர்ப்பாசன உயர் அரசாங்க அதிகாரிகளதும் பெருநில உடமையாளர்களதும் அதிகாரத்திமிருக்கும் பாரபட்சங்களுக்கும் எதிராகப் போராடி வெற்றி பெற்றுள்ளோம். இப்போராட்டங்களில் தோழர் வீ. ஏ.- கந்தசாமி தனது தீவிர போராட்ட உணர்வால், தமது வாதத்திறமையை நன்கு பயன்படுத்தி விவசாயிகளின் உரிமைகளை வென்றெடுக்க என்னுடன் இணைந்து பெரும் பங்காற்றியுள்ளார்.

எமது நாட்டில் இனவாத அடிப்படையில் ஆசிரிய சமூகத்தைப் பிளவு படுத்தி சிங்கள, தமிழ் பகுதிகளில் சிங்கள ஆசிரியர் சங்கங்களையும், தமிழ் ஆசிரியர் சங்கத்தையும் நிறுவி செயல்பட்டு வந்துள்ளனர். இந்த இனவாத அணுகுமுறைக்கு மாற்றீடாக 'ஜாதிக்க குரு சங்கமய' (தேசிய ஆசிரியர் சங்கம்) என்ற முற்போக்கு சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு செயலாற்றி வருகின்றது. இதன் கிளையை வடபிரதேசத்தில் நிறுவி ஆசிரிய சமூகத்தை ஒன்றிணைக்கும் நோக்குடன் தோழர் கார்த்தி செயல்பட்டு வந்துள்ளார்.

தோழர் கார்த்தியுடன் அ.வைத்திலிங்கம், ஐ.ஆர்.அரியரத்தினம், எம்.பி. செல்வரத்தினம், அ.சிவலிங்கம், எம்.குமாரசாமி, எஸ்.பி.நடராஜா ஆகியோர் இணைந்து இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத்தை ஸ்திரப்படுத்துவதற்கு தீவிரமாக உழைத்தனர்.

இந்த நாட்டில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகளை முறியடித்து ஒழித்துக் கட்ட வேண்டும் என்றால் முற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அதாவது இடதுசாரிகள் ஐக்கியப்பட வேண்டும் என்ற கோட்பாட்டை முன்வைத்துத் தோழர் கார்த்தி போராடி வந்தள்ளார். பெருமுதலாளித்துவக் கட்சியான யூ.என்.பியை முறியடித்து ஒழித்துக் கட்டவேண்டும் என்றால் சகல முற்போக்குச் சக்திகளும் அதாவது இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகளும் ஏனைய சிறிய இடதுசாரிக் கட்சிகளும் தேர்தல் காலங்களில் மட்டுமல்லாமல், நிரந்தரமாக ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட்டு செயலாற்ற வேண்டுமென்று தோழர் கார்த்தி வலியுறுத்தி வந்துள்ளார். அதேவேளை இந்த ஐக்கியம், இடதுசாரிக் கட்சிகளின் தலைமை மட்டங்களில் மாத்திரமல்லாமல், அடிமட்ட உறுப்பினர்கள் மத்தியிலிருந்தே கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று கார்த்தி வலியுறுத்தி வந்தது மாத்திரமல்லாமல் அதற்காகப் போராடி வந்துள்ளார். அதாவது இலங்கையில் ஒரு இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணியின் மூலம்தான் முதலாளித்துவ யூ.என்.பி. தலைமையிலான பிற்போக்குச் சக்திகளை முறியடித்து ஒரு முற்போக்கான அரசை நிறுவமுடியும் என்று கூறிவந்துள்ளதுடன் இதற்காக அந்தரங்க சுத்தியுடனும் போராடி வந்துள்ளார் தோழர் கார்த்தி.

கம்யூனிஸ்ட்டுகள் வரட்டுச் சித்தாந்தவாதிகள், அவர்கள் கலாரசனை-யற்றவர்கள், அவர்கள் மத்தியில் சிறந்த எழுத்தாளர்களோ, கலைஞர்களோ இல்லை என்ற கருத்தை மக்கள் மத்தியில் பரப்புவதில் பிற்போக்கு முதலாளித்துவ சக்திகள் ஈடுபட்டு வந்துள்ளன. இது ஒரு தவறான பொய்ப்பிரசாரமாகும். பிற்போக்குச் சக்திகளின் இப் பொய்ப்பிரசாரத்தைத் தகர்க்கும் வகையில், அறுபதாம் எழுபதாம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் அணியைச் சார்ந்த முற்போக்கு எழுத்தாளர்களும் கலைஞர்களும் ஸ்தாபன ரீதியாக ஒன்றுதிரண்டு, கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் வெகுஜன அமைப்புகளும் நடத்திய வெகுஜனப் போராட்டங்களில் உணர்வுபூர்வமாகப் பங்குகொண்டு அந்த மக்களின் போராட்ட அனுபவங்களை கலைத்துவத்துடன் மறுபிரசவிப்புக்குள்ளாக்கி தரமான சிருஷ்டிகளைப் படைத்துள்ளார்கள். இதுதான் மக்கள் இலக்கியம் அல்லது முற்போக்கு இலக்கியம் என்று கூறப்படுகின்றது. இதற்குப் பின்னணியில் நின்று செயற்பட்டவர்களுள் தோழர் கார்த்தி முதன்மையானவர். இந்த எழுத்தாளர்களுக்கு வழிகாட்டி வளர்த்தெடுத்தவர் கார்த்தி. அவரே ஒரு சிறந்த மார்க்சிஸ இலக்கிய விமர்சகராகவும் ஆங்கில கவிதைகள் புனைபவராகவும் இருந்துள்ளார். வடபிரதேசத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகவிருந்த சிறந்த மக்கள் இலக்கியப் படைப்பாளிகளான தோழர்களான கே.டானியல், டொமினிக் ஜீவா, எஸ்.பொன்னுத்துரை, என்.கே.ரகுநாதன், கவிஞர் பசுபதி, இளங்கீரன், எஸ்.அகஸ்தியர் ஆகியோருடன் நானும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பிரதான உறுப்பினர்களாகச் செயல்பட்டோம். நாம் அறுபது எழுபதுகளில் வடபிரதேசத்தில நடந்த தீண்டாமை



தேர்தல் கூட்டத்தில் திரு.வைத்திலிங்கத்துடன்
தோழர் மு. கார்த்திகேசன்

ஒழிப்புப் போராட்டத்திலும், தொழிலாளர்களது போராட்டங்களிலும் நேரடியாகப் பங்குபற்றியதுடன் இந்தப் போராட்ட உணர்வின் உந்துதலினால் தரமான மக்கள் இலக்கிய சிருஷ்டிகளைப் படைத்தோம். இந்த எழுத்தாளர்களை சித்தாந்த ரீதியில் நெறிப்படுத்தி, தரமான முற்போக்கு இலக்கியப் படைப்புகளை உருவாக்குவதற்கு வழிவகுத்தவர் தோழர் கார்த்தி.

'தோழர் பெத்யூன் அவர்களின் உணர்வு, தம்மைப் பற்றிய சிந்தனை ஒன்றுமின்றி பிறருக்கான அவருடைய பூரண தியாகம், தமது வேலையில் அவர் கொண்டிருந்த எல்லையற்ற பொறுப்புணர்ச்சியிலும் தோழர்கள் மீதும், மக்கள் மீதும் அவர் வைத்திருந்த எல்லையற்ற இதய-ஆர்வத்திலும் காணப்பட்டது. ஒவ்வொரு கம்யூனிஸ்டும் அவரிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அவருடைய எள்ளத்தனையும் சுயநலமற்ற உணர்வை நாம் எல்லோரும் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். இந்த உணர்வைக் கொண்டு ஒவ்வொருவரும் மக்களுக்கு மிகப் பயனுள்ளவராக வாழ முடியும். ஒருவருடைய திறமை பெரிதாக அல்லது சிறிதாக இருக்கலாம். ஆனால் இந்த உணர்வு அவருக்கு இருந்தால், அவர் உன்னத சிந்தையும் தூய்மையும் உடையவராக, ஆத்மீக பலமுடையவராக, கொச்சை நப்பாசைகளைக் கடந்த ஒரு மனிதனாக மக்களுக்குப் பயனுள்ள ஒரு மனிதனாக இருப்பார்'

'தோழர் பெத்யூனின் நினைவுக்காக' என்ற ஒரு கட்டுரையில், மகத்தான தலைவர் மாஓ சேதுங் அவர்கள் கனடிய டாக்டர் நோர்மன் பெத்யூனின் மக்களுக்கான அர்ப்பணிப்புப் பற்றி மேற்கண்டவாறு கூறியுள்ளார். அதேபோல, எங்கள் தோழன் கார்த்தியும் மக்களுக்கும் கட்சிக்கும் சேவை செய்வதில் தம்மை உணர்வுபூர்வமாக அர்ப்பணித்தவர். ஆகவே அவரது எண்ணத்தையும் சுயநலமற்ற உணர்வையும் நாமெல்லோரும் தோழர் கார்த்தியிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.

நீர்வை பொன்னையன்,
நீண்டகால கட்சித் தோழரும், தொழிற்சங்கவாதியும்,
முற்போக்கு எழுத்தாளரும் ஆவார்.

* * *

Communist Karthigesan - Our Respected Guru

V. Sivasubramaniam

Murugupillai Karthigesan, popularly known as communist Karthigesan, was a one time favourite student of Prof. E.F.C.Luddowyke of the then University College, was earmarked by his father to enter the prestigious Ceylon Civil Service, but fate had it otherwise, and the beneficiaries were the generations of students who passed through the portals of Jaffna Hindu.

His twenty five years of continuous service at Hindu had its enormous influence and impact on almost all the students who are spread out far and wide in the nooks and corners of the globe carrying his liberal traditions in their everyday life. For the alumni of Jaffna Hindu it has almost become a KARTHIGESAN MASTER CULT. It is very appropriate, and a fitting tribute to our respected GURU, to bring out a worthy souvenir on the occasion of the 25th anniversary of his passing away.

It was the first day of the school year in January 1946 – the day Karthigesan entered the portals of Jaffna Hindu –a lean, brisk young man walked into our Grade 8C class and introduced himself as our maths teacher. We were fortunate that we had educational giants like N.Sabaratnam for English, Pandit K.Sellathurai for History and Civics, K.S.Subramaniam for Tamil and C.M.Culasingam for Science. From that time, and for nearly three decades, Karthigesan offered his best to the College, and I was at the receiving end of all of that, first as a student and later as a colleague. If I am able to pen a few lines on Karthigesan, the credit should be his.

Karthigesan's appointment to Jaffna Hindu was an enigma to the then Jaffna society as he was the first communist (a full time party worker since his university days) to be appointed to the leading Hindu school, privately assisted and managed by the JHC Board of Management. The Board had, among others, Sir Waitilingam Duraisamy, the first Speaker of the then State Council as its President, T.Muttuswamipillai, the Crown Advocate as its Manager, the ever genial Proctor A.Arulambalam as its Secretary and the ever benevolent R.Sivagurunathar, a one time Chairman of the Jaffna UDC, as its member. The Board stuck to Hindu traditions in running the schools.

Jaffna Hindu was fortunate to have had A.Cumaraswamy at the helm. He was fully drenched in the liberal traditions of Harold Laski, and he guided the destinies of Jaffna Hindu from 1933 to 1952 until his demise. He revolutionised the school system and laid the foundations for the later glories of Jaffna Hindu. He had a visionary zeal and a flair for selecting the best of teachers. Karthigesan was one of his selections, and he was unmindful of the fact that he was a communist. History proved him right and Karthigesan never allowed his philosophy contradict the school tradition. Credit should also be given to the Board of Management who always endorsed Principal Cumaraswamy's liberal moves that helped to build the institution.

Following Karthigesan's appointment Principal Cumaraswmy appointed a fine band of young teachers, who had diverse political beliefs, and who held contradictory views and opinions. Following this period, the staff of Jaffna Hindu was a fine blend of conservatives, traditionalists and revolutionaries, and on the educational side each member of the staff could stand his own forte. Such diversity raised the stature of the institution. In that scenario, Karthigesan stood head and shoulders above, all with his ready wits and quips, patience and tolerance and a high sense of humour. After school hours, and till late in the evenings, our staff room was a hive of activity. With an air of liberalism and friendliness, serious discussions on topics varying from education to religion, politics to personalities, pervaded the whole

atmosphere. At these chit-chats, Karthigesan was always at his best, but yet very courteous. He was a gentleman par-excellence in every sense of the word, and the younger members of the staff emulated him well. There lay the greatness of an ideal teacher. Mutual respect for contradictory views, and opposing personalities were lessons we all learnt from Karthigesan.

Another area where Karthigesan excelled was in the game of scrabble. Scrabble was a novelty at that time and almost all the teachers were passionate about the game. After school hours, we played scrabble till late into the night and Karthigesan was a "maestro" in that game. The game provided us with an opportunity to study and understand each other. Karthigesan, much more than a dictionary, had the final say on any doubtful words, and everybody accepted him without any hum. But when Karthigesan himself had any doubt about a word or an unacceptable word he would remain silent so as not to hurt the feelings of others, demonstrating his greatness as a true gentleman.

There was hardly any curricular or extra-curricular activity in school, where Karthigesan's impact was not felt. His help was sought for HSC or GCE(A/L) Union and Hostel Union dinners, and other literary union activities. especially to prepare the after dinner speeches that were filled with humour, pun and satires reflecting the political climate of the times. Preparing the dinner menu card punning on the guests was also his forte.

The highlight of Karthigesan's contribution was when the JHC Teachers Guild prepared a memorandum to the Wilmot Perera Commission on National Education in 1960 of which our respected Principal and Teachers Trade unionist Handy Perinbanayagam was a member. I was fortunate in being the Secretary of the JHC Teachers Guild and it could be proudly mentioned that our memorandum was practical and down to earth with revolutionary changes in the educational system. Banner headlines appeared in the national dailies in all three

languages (English, Tamil and Sinhalese) proclaiming our recommendations as fitting contribution for a diversified national system of education and hailing that the proposals were far in advance of the times. The country should be thankful to people of the calibre of Karthigesan. Karthigesan's choice of powerful words and convincing phrases not only shaped the memorandum on National Education, but almost all the proposals that were accepted and later implemented by the National Education Council.

Karthigesan was in charge of editing our magazine, Young Hindu. I personally feel very much obliged to him, because I learnt from him, all the nuances of editing a journal. Later, when I was given charge of the magazine, I always fell back on him for his guidance and direction. The entire credit for the freelancing I do now goes to Karthigesan who imbibed us with the niceties of editing, proof reading and compiling.

There are far too many anecdotes about him but space does not permit me to pen them here. However, I would like to mention here the one that interested me the most. Karthigesan was a fine cricketer, and he captained our staff team. He was also a good commentator. When he did his Post Graduate Diploma in Education in Colombo he was posted to Royal College for his teaching practice. Students at Royal held a low esteem for the education and sports in the north. When Karthigesan went to class on the first day, with his ready wit and high sense of humour, he introduced himself as someone coming from a school in Jaffna where, in one match, the captain scored a double century . He neither mentioned the name of the school, nor of the captain. That statement did the trick for the rest of his stay at Royal where he was held in high esteem and respect.

People stand on platforms and talk a lot on liberty and equality, but Karthigesan was one rare soul who practiced equality in the school, home and in all his public service. His high sense of tolerance and progressiveness matched well with the spirit of liberalism that prevailed at Jaffna Hindu and that –which permeated deep into the hearts and minds of all

the students who passed through this hallowed institution. Many thanks to the openness and liberalism cultivated by no less a person than Principal A. Cumaraswamy.

Karthigesan had a successful stint in Municipal politics representing the conservative Vannarponnai in the Jaffna Municipality. He was unique in being the one and only from Jaffna Hindu to be elected as an M.M.C (Member of the Municipal Council). His ambition to enter Parliament did not materialize. However, Jaffna Hindu should be proud to have had two of her alumni to be elected to the Parliament. First, Karthigesan's mentor P. Kandiah, the first communist M.P from the north, to represent Point Pedro in Parliament, and later his student and ardent disciple K.Navaratnam , a Jaffna Hindu College employee, to represent Jaffna.

As a teacher, Karthigesan, gave us a sense of purpose and direction, and his high principles in life's a beacon of light for all of us to follow. It gives all of us great pride and joy to reminisce on his valuable contributions during the quarter of a century he was at Jaffna Hindu. He was a true friend of the poor and the downtrodden and he always had great pleasure in championing lost causes. His sincerity of purpose was never doubted even by those who differed from him. He lived a simple and unstentatious life, and he was always willing to help anyone who sought his help. My association with him as a colleague for 18 long years has enriched me a lot.

September 10th, 2002, marks the 25th anniversary of Karthigesan's demise. Therefore, this is a happy and rare occasion to review, reflect and remember his valuable services for the future generations to appreciate and emulate. The organisers of this anniversary should be congratulated and helped for this kind gesture and the entire alumni of Jaffna Hindu will feel happy and proud of this venture. We wish Karthigesan's Silver Jubilee well.

V. Sivasupramaniam,
Old boy and former Teacher of Jaffna Hindu College and Retired Principal, Alaveddy Arunodaya College.



யாழ் – இந்துக்கல்லூரி மாணவ தலைவர்களுடன்
அதிபர் என். சபாரட்ணமும் மு. கார்த்திகேசனும்

கார்த்திகேசன் ஓர் கர்மஞானி

எஸ். ஜி. கணேசவேல்

யார்யாரை யோவெல்லாம்
ஏன்எதற்க் கென்றில்லாமல்
பாராட்டி வாழ்த்துகிற
பண்பாடு மலிந்துவிட்ட
இந்நாளில் .....
எந்தப் பயன்களையும்
எதிர்பார்த்து வாழாமல்
தன்னை உருக்கியோர்
தத்துவத்தின் மாதிரியாய்
திரிகரண சுத்தியுடன்
செங்கொடியின் கனவுகளை
மரணம்வரை காத்திருந்த
காத்தாரை எண்ணுகிறேன்!

பெற்றஉயர் கல்விக்கு
பெருமிடங்கள் தேடாமல்
அற்றார் துயர்துடைக்கும்
அணிகண்ட மாமனிதன்

தன்வீடு தன்குடும்பம்
தன்சனங்கள் தாம்என்னும்
எண்ணங்கள் அற்றவராய்
எளியாரை நேசித்தார்!
அரசியலை... பொதுவாழ்வை
ஆதாயம் தருகின்ற
தொழிலாகக் கொள்ளாமல்
தொண்டெனவே யாசித்தார்!

பேச்சாற்றல் உள்ளவரைப்
பேனாப் பிடித்தவரைப் வீச்சாற்றல்
மிக்கவராய் விளங்க
உருவாக்குவதில்
கல்லூரி வளாகங்கள்
கடந்து வகுப்பறைக்கு
அப்பாலும் ஒளிமிகுந்த
ஆசானாய் அவர் திகழ்ந்தார்!

''கார்த்திகேசன் நல்லவர்தான்
கட்சி கூடா தென''
ஏத்துவார் மொழிகேட்டு
எடுபட்டுப் போகாமல்
''நல்ல மனிசனென்றும்
நல்லிடத்தில் தான் இருப்பான்''
என்றவர் உரைக்கும்பதில்
இன்றைக்கும் கனக்கிறது!

எங்கள் காத்தியை
எண்ணி நயப்பதற்கு
இன்னும் எத்தனையோ
இருக்கிறது! முடிவாக...

பொதுஉடைமைச் சித்தாந்தம்
போய்முடிந்த கனவென்று
குதிகுதிப்பார் குதிக்கட்டும்
கோளமயம் போய்ஒழிய
மீண்டும்ஓர் யுகப்புரட்சி
வெடிக்கின்றநாள் மலரும்,
அந்நாளில் .....
கார்த்திகேசன் போன்று
கர்ம ஞானிகளின்
யாத்திரை பொய்க்காத
மாண்புணரும் மானிடமே!

எஸ்.ஜி.கணேசவேல்,
முன்னாள் கிராம சேவகர். யாழ். ஓட்டுமடம்.

எம் மத்தியில் ~ எம். கார்த்திகேசன்

எம். குமாரசாமி

யாழ் குடாநாட்டின் அரசியல், கல்வி, கலை கலாசாரத்துறைகளில் 1944ம் ஆண்டுதொடக்கம் 1977ம் ஆண்டுவரை தனக்கென ஓர் முத்திரையைப் பதித்தவரும், இத்துறைகளின் முன்னேற்றங்களில் மிகவும் ஈடுபாடுகொண்டு, அவற்றை முன்னெடுத்துச் சென்ற அறிஞர்களில், காலஞ்சென்ற மு.கார்த்திகேசன் ஒரு தனியிடத்தைப் பெற்றவராவர். அவர் இறந்து இவ்வருடம் செப்டெம்பர் மாதத்துடன் 25 ஆண்டுகள் கழிகின்றன. அவர் அரசியலுக்காக கம்யூனிஸ்ட் கட்சியையும், கல்விக்காக ஆசிரியத் தொழிலையும், கலை கலாசாரத்திற்காக அவர் வாழ்ந்த வண்ணார்பண்ணைப் பகுதியிலுள்ள சமூக நிறுவனங்களின் ஈடுபாட்டையும், மாநகரசபை வரியிறுப்போர் சங்க உறுப்புரிமைக்காக யாழ் மாநகரசபை அங்கத்துவப் பதவியையும் பயன்படுத்தினார். சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் இவர் தனது முழுக்கவனத்தைக் காலநேரம் பாராது சாதி சமயம் பாராது, பிரதிபலன் நோக்காது செலுத்தியமைக்கான ஒரேயொரு காரணமென்னவெனில் அவர் ஒப்பற்ற உன்னதமான சமூகப் பங்காளனாகச் சமூகத்தை நேசித்த தலைசிறந்த வழிகாட்டி. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை யாழ் மாவட்டத்தில் ஸ்தாபித்து, அதன் சித்தாந்தத்தை அன்றைய காலகட்டத்தில் அங்கு வேரூன்ற வழிவகுத்த சிறந்த போதனாசிரியர். இவர் இலங்கைக் கம்யூனிஸ்டுகளின் பரம்பரையில் முதற் பரம்பரையைச் சேர்ந்தவராவர்.

இலங்கை வருகை:

கார்த்திகேசனின் கம்யூனிஸ்ட் வாழ்க்கை நெறி, அவர் அன்றைய மலாயாவிலிருந்து இலங்கைப் பல்கலைக்கழக் கல்லூரியில் மேற்கல்வி பெறுவதற்காக அவரது தகப்பனால் அனுப்பப்பட்ட காலந்தொட்டே ஆரம்பமானது. மலாயாவில் லண்டன் மெட்ரிகுலேசன் படிப்பை முடித்துக் கொண்டு, கொழும்பு வந்து கல்விகற்ற காலத்தில் பல்கலைக்கழகக் கல்லூரி விடுதியில் தங்கியிருந்தார் இவர் கலைப்பிரிவிலே கல்வி பயின்றபோது சமகாலத் தோழர்களான, என்.சண்முகதாசன், எல்.ஆரியவன்சா, எஸ். கே.கந்தையா, ஏ.சிவலிங்கம் போன்றோரும் அங்கே கல்விகற்று வந்தனர். இக்காலகட்டத்திலே ஏ. வைத்திலிங்கம்



பல்கலைக்கழக கல்லூரி மாணவனாக இலங்கையில்
இருந்தபோது கார்த்திகேசனும் அவரது
பாதுகாவலர் திரு. செல்லையாவும்

அவர்கள் மேற்படிப்புக்காக லண்டன் சென்றிருந்தார். மேற்குறிப்பிட்டவர்களில் என்.சண்முகதாசன், எல்.ஆரியவன்சா ஆகியோர் கார்த்திகேசனின் வகுப்பிலிருந்த சகபாடிகளாவர். இடதுசாரிப் போக்குடைய இத்தகைய மாணவர்மேல், முன்னாள் வவுனியாப் பாராளுமன்ற உறுப்பினரும், கணிதப் பேராசிரியருமான காலஞ்சென்ற சி.சுந்தரலிங்கம் அவர்களின் கடைக்கண் பார்வையும் விழுந்திருந்தது. இவர்களில் இன்று வாழ்பவர் முன்னாள் உலக ஆசிரிய சங்க சம்மேளனத்தின் தலைவரும், இன்றைய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி யின் அரசியற்குழு உறுப்பினருமான, எல்.ஆரியவன்ச அவர்களேயாகும். அக்காலகட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியின் மேற்பார்வையாளராக சுந்தரலிங்கம் அவர்கள் விளங்கினார்.

பிறநாட்டுச் சூழ்நிலை:

இக்காலகட்டத்திலே சோவியத் ரஷ்யாவிலேற்பட்ட அக்டோபர் புரட்சியின் தாக்கமும், மேற்கு நாடுகளிலேற்பட்ட விடுதலைப் போராட்டங்களும், ஸ்பானியக் குடியரசின் உதயமும், உலகளாவிய ரீதியில் மாணவர் மத்தியில் அரசியல் உணர்வைக் கூர்மைப்படுத்தின. பீற்றர் கெனமன் அவர்களும் வைத்திலிங்கம் அவர்களும் 1936 - 1939 காலப்பகுதியில் நடைபெற்ற ஸ்பானிய யுத்தத்தில், ஸ்பானியக் குடியரசுக்கு உதவுவதற்காக ஐக்கிய ராஜ்யத்திலிருந்து கொண்டே சர்வதேசத் தொண்டர் சபையில் சேர்ந்து பணியாற்றி வந்தனர். இந்நேரத்தில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் என். சண்முகதாசன் தலைமையில் மாணவர் கவுன்சில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு சோவியத் ரஷ்யாவிற்கு ஆதரவு தெரிவிக்கப் பட்டிருந்தது. எல்.ஆரியவன்ச அவர்களே அந்தக் கவுன்சிலின் செயலாளராகக் கடமையாற்றினார். கார்த்திகேசன் அவர்கள், கவுன்சிலின் பிரசார நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, அரசியற் செய்திகள் கட்டுரைகளைத் தாங்கி வந்த 'மாணவர் செய்தி - Students News' என்ற ஆங்கில சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பமும் முழுநேர ஊழியமும்:

இந்தப் பின்னணியில், இளம் சோவியத் யூனியனுக்கு ஏகாதிபத்திய வாதிகளின் அச்சுறுத்தலேற்பட, உலகெங்குமுள்ள புரட்சிகரச் சிந்தனையுடையோர் சோவியத் யூனியனுக்கு ஆதரவாக இயக்கங்களை ஆரம்பித்தனர். இலங்கையிலும் 'சோவியத் நண்பர்கள்' என்ற அமைப்பு உருவாகியது. இந்த அமைப்பின் முக்கிய பங்குதாரராக காத்திகேசன் இருந்தார். பின்னர் இந்த ஸ்தாபனம் பீற்றர் கெனமன், அ.வைத்திலிங்கம் ஆகியோரின் வருகையுடன் 1940ம் ஆண்டளவில் ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியாகப் பரிணமித்தது. 1943ல் ஐக்கிய சோஷலிசக் கட்சி கலைக்கப்பட்டு, டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பீட்டர் கெனமன், என்.சண்முகதாசன், எல்.ஆரியவன்ச போன்றோருடன் கார்த்திகேசனும் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார். கட்சியின் பொதுச்செயலாளராகப் பீற்றர் கெனமனே பணியாற்றினார். கட்சியின் அடிப்படைச் சித்தாந்தம் மார்க்ஸிசம் - லெனினிஸமாகவேயிருந்தது. கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்காக 1945களில் கட்சி முழுநேர ஊழியர்களை நியமித்தது. பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பல பல்கலைக்கழக மாணவர்கள் கட்சியின் வளர்ச்சியிலும்

தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள். டாக்டர் விக்கிரமசிங்காவைத் தவிரப் பலமுக்கிய உறுப்பினர்கள் இந்தத் துறைகளில் முன்னின்று உழைத்தனர். கார்த்திகேசனை அவரது தந்தை இலங்கைக்கு அனுப்பி இங்குள்ள சி.சி.எஸ் (C.C.S - சிலோன் சிவில் சேர்விஸ்) அரச சேவையில் சேர்க்க விரும்பினார். ஆனால் கார்த்திகேசன், சி.சி.பி (C.C.P - சிலோன் கம்யூனிஸ்ட் கட்சி) யில் சேர்ந்து கொண்டது தகப்பனாருக்குத் திருப்தியளிக்கவில்லையென அவர் அறிந்திருந்தும், இலங்கைத் தொழிலாள வர்க்கத்திற்கும், அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்கும் பணியாற்ற வேண்டுமென்ற பேரார்வமும், அர்ப்பணிப்பும் அவரை ஓர் முழுநேர ஊழியராக மாற்றியது.

பீட்டர் கெனமன் ஏரிக்கரைப் (Lake House) பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலை செய்து, அப்பதவியைத் துறந்த பின்னரே கட்சியின் பொதுச்செயலாளராகச் செயற்பட்டார். சண்முகதாசன் சி.சி.எஸ் அரசபதவியை ஒதுக்கிவிட்டு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முழுநேர ஊழியரானார். வைத்திலிங்கம் அவர்கள் அரச பதவிகளுக்கு தேடிச் செல்லாது தோட்டத் தொழிலாளர் மத்தியில் வேலை செய்வதற்காக மலைநாடு சென்றார். கார்த்திகேசன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு கெனமனோடு சேர்ந்து 'போர்வேட் - Forward' பத்திரிகையை அச்சடித்துப் பிரசுரித்து, விநியோகித்து விற்பனை செய்து வந்தார். கட்சிக் காரியாலயத்திலேயே வசித்தும் வந்தார். பெரிய அரச பதவிகள் தேடிவந்தும் அவற்றைத் தட்டிக்கழித்தார். கட்சிக்கு நிதி கிடைக்கும்போது முழுநேர ஊழியர்கட்கு சிறிதளவு நிதியுதவி கிடைக்கும். நிதி இல்லாதபோது முழுநேர ஊழியர்கள் அனைவரும் கஷ்டப்பட்டே கட்சி வேலைகளிலும், தொழிற்சங்க வேலைகளிலும் ஈடுபட்டு வந்தனர்.

கட்சி வேலையும், கல்விச் சேவையும்:

கம்யூனிஸ்ட் கட்சி அதன் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் பொருட்டு கார்த்திகேசனை யாழ்ப்பாணம் செல்லுமாறும் அங்கு ஓர் தொழிலை மேற்கொள்ளுவதுடன், கட்சிப் பணிகளை மேற்கொள்ளுமாறும் பணித்தது. இதற்கமைய கார்த்திகேசன் யாழ்ப்பாணம் வந்து, நகரின் விக்டோரியா றோட்டில், வாடகை வீடொன்றில் வசிக்க ஆரமபித்தார். அவர் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். காலக்கிரமத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பகால உறுப்பினர்களாக ஆர்.ஆர்.பூபாலசிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், ஏ.அற்புதரட்ணம், அ.சரவணமுத்து, ராமசாமி ஐயர் ஆகியோரிருந்தனர். செயலாளராக கார்த்திகேசன் செயற்பாட்டார் இவர்கள் மூலமாகவே கட்சி யாழ்மாவட்டத்தில் அறிமுகமானது. கார்த்திகேசன் யாழ் இந்துக்கல்லூரியில் காலடி எடுத்துவைத்த நாளிலிருந்தே கம்யூனிஸ்ட் இயக்கமும் யாழ் மாவட்டத்தில் வேரூன்றியதென்றால் மிகையாகாது. கல்லூரியில் சிறந்த கணித, ஆங்கில ஆசிரியராகவும், கல்லூரிக்கு வெளியே ஓர் சமூக சேவையாளனாகவும், ஓர் அரசியற் போதனாசிரியராகவும், பார்வைக்கு எளிமையானவராகவும் விளங்கினார்.

கட்சியின் வேண்டுகோளின்படி யாழ்ப்பாணத்தொகுதிக்கு 1956இலும், நல்லூர் தொகுதியில் 1960இலும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டார். வாக்குரிமையற்ற மாணவர்களே இவரின் கூட்டத்தில் ஏராளமாகக் கூடி நின்றனர். அறிவு செறிந்த அரசியல் தத்துவத்துடன் கூடிய, ஹாஸ்யம் நிறைந்த இவரின் பேச்சுக்களைக் கேட்கவே மாணவர்களும், வாலிபர்களும் இவரைச் சூழ்ந்து நின்றனர். யாழ்ப்பாணம் வந்த நாளிலிருந்தே துவிச்சக்கர வண்டியையே தனது நடமாட்டத்திற்குப் பாவித்ததனால் மக்களால் இவரை இலகுவில் அன்புடன் அணுகமுடிந்தது.

யாழ் இந்துக்கல்லூரியில் 1946 இலிருந்து 1971 மே மாதம் வரை சேவை செய்தார். இதில் 1971 ஜனவரி தொடக்கம் அவ்வாண்டு மே மாதம் வரை அதிபராகக் கடமையாற்றினார். குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் சங்கக் கூட்டங்களுக்கு இவரைப் பேச்சாளராக அழைத்தனர். மாணவர் மன்றங்களில் விசேஷ சொற்பொழிவுகளுக்காக இவர் அழைக்கப்பட்டார். பிரபல்யமான பாடசாலைகளிலிருந்து வைபவங்களுக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டு உரைவழங்க வேண்டப்பட்டார். இது தொடர்பாகக் கல்லூரி மாணவர்கள் இவரைத்தேடி வருவது சர்வசாதாரண நிகழ்வாகும்.

யாழ் இந்துக்கல்லூரியில் இவர் கடமையாற்றிய காலமே இவரின் பொற்காலம் எனலாம். சிறந்த அறிஞர்களை உருவாக்கிய பெருமை இவரைச் சாரும். யாழ் பல்கலைக்கழக வளாகம் ஆரம்பித்தபோது தலைவராகவும், பின்னர் பல்கலைக்கழகம் பல மாடிக்கட்டிடமாகப் பரிணமித்தபோது அதன் உபவேந்தராகவும் விளங்கிய பேராசிரியர் கைலாசபதியும், தற்போதைய உபவேந்தராக விளங்கும் பொன். பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் இவரின் மாணவர்களேயாகும்.

1947ல் இலவசக்கல்வி அறிமுகப்பட்ட காலம் தொட்டு 1976 யூன் 25ந் திகதிவரை அதாவது கார்த்திகேசன் இளைப்பாறும் வரை அவர் கல்விக்காக ஆற்றிய பங்கு அபரிதமானது. வண்ணார்பண்ணையில் வாழ்ந்தபோது அவரின் வீடு காலையிலும், மாலையிலும் மாணவர்களின் வருகையால் நிறைந்திருக்கும். இவ்வாறு அவர் வீடு சென்றவர்களிற் பலர் பின்னர் கட்சி உறுப்பினர்களாகவும், அனுதாபிகளாகவும் மட்டுமன்றி, காத்தி அபிமானிகளாகவும் மாறியுள்ளனர்.

1960களில் இயங்கிய வில்மட் பெரேரா தலைமையிலான தேசிய கல்வி ஆணைக்குழுவுக்கு யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் குழு மகஜர் ஒன்று சமர்ப்பித்தது. அந்த மகஜரின் உள்ளடக்கமும் பின்னர் அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த மகஜருக்கு எழுத்து வடிவம் கொடுத்தவர் கம்யூனிஸ்ட் கார்த்திகேசனேயாகும்.

யாழ்குடாநாட்டிலும், நாட்டின் ஏனைய பாகங்களிலும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பது இலவசக் கல்வி நடைமுறைப்பட்டதையடுத்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய கோரிக்கையாகவிருந்தது. 1974ல் யாழ் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்டதும், அதன் தலைவராக தனது மாணவன்

கைலாசபதி பொறுப்பேற்றது பற்றியும் அடிக்கடி பிரஸ்தாபித்துச் சந்தோஷப்படுவது கார்த்திகேசனின் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியிலுள்ள ஈடுபாட்டை எடுத்தியம்பியது. மேலும் யாழ் பல்கலைக்கழக விஸ்தரிப்பு இயக்கத்தின் உபதலைவராக விளங்கி, யாழ் பல்கலைக்கழக வளாகம் பல்கலைக்கழகமாக மாறவும், அது பரிபூரணமான சகல பீடங்களையும் உள்ளடக்கவேண்டுமென குடாநாடுமுழுவதும் மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வந்தார். இக்காலகட்டத்திலே அவர் இலங்கை தேசிய ஆசிரியர் சங்கத்தின் (ஸ்ரீலங்கா ஜாதிக்க குரு சங்கம்) உபதலைவராகவும் செயற்பட்டார்.

1960 தொடக்கம் 1971 வரையிலான காலத்தில் ஆசிரியர் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தார். இதற்காக ஆசிரியர் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியை பயன்படுத்தி 1960ல் இலங்கை அரசாங்கம் நாடடிலுள்ள பாடசாலைகளை அரசாங்க மயப்படுத்த உதவினார். 1968ல் யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றான சென்ற் ஜோன்ஸ் கல்லூரியிலிருந்து, ஆசிரிய உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததிற்காக ஆர். பானுதேவனும் வேறு சில ஆசிரியர்களும் வேலை நீக்கம் செய்யப்பட்ட போது, ஆசிரிய தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளிலும் முன்னின்று உழைத்தார். மீண்டும் பானுதேவனுக்கு மேல் நீதிமன்றம் பாடசாலையில் வேலை வழங்குமாறு 1976ல் உத்தரவு பிறப்பிக்கும்வரை தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டிக்கும், பானுதேவனுக்கும் உறுதுணையாகவிருந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதின் பிரகாரம், ஆசிரியர் தத்தமது அரசியல் உரிமைகளை இழந்தனர். கார்த்திகேசனுக்கு 'M' என்ற ஆங்கில எழுத்திலும் 'K' என்ற எழுத்திலும் அலாதி விருப்பம். தனது கட்சிப்பெயரை K.Maniccavasagar என மாற்றிக் கொண்டதுடன் எனக்கும் K.Muththusamy என்ற பெயரைச் சூட்டினார். 1963 தொடக்கம் 1965 வரை கார்த்திகேசன் அரசியல் வகுப்புகளை நடத்துவதில் மிகவும் அக்கறை காட்டி வடக்கிலுள்ள எண்ணற்ற கிராமங்களுக்குச் சென்றார். இவருக்கு உதவியாக க.ஜனகா பணியில் இறங்கினார். இலங்கை வாலிபர் சங்கச் சம்மேளனத்தின் யாழ் மகாநாட்டின் போதும், அதனைத் தொடர்ந்து 1964, 1965களிலும் கூடுதலான உறுப்பினர்கள் கட்சியில் சேர்ந்தனர். கணிசமான உறுப்பினர்கள் வடமராட்சிப் பகுதியிலிருந்து வந்தனர். 1965ல் வடமராட்சி நெல்லண்டையில் கவிஞர் பசுபதி அரங்கில் நடைபெற்ற மார்க்ஸிச கல்விப் பட்டறையில் முக்கிய மார்க்ஸிச கல்விப்போதானாசிரியராக விளங்கிப் பல முன்னணித் தோழர்களை கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு ஈர்த்தவர் அவரே.

கார்த்திகேசன் அவர்கள் யாழ் இந்துக்கல்லூரியில் உதவி ஆசிரியராக இருந்த காலத்தோடு 1971 ஜனவரி மாதம் அதிபராக நியமிக்கப்பட்டு மே மாதம் வரை அங்கு கடமையாற்றிய பின்பு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் அதிக நாள் கடமை புரியவில்லை. எவ்வாறிருப்பினும் யாழ் இந்துக்கல்லூரியிலும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் அதிபராகச் சேவை புரிந்த காலத்தே அங்குள்ள ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் அன்பிற்கும் மரியாதைக்கும் கட்டுண்டிருந்தார். 1972 ஜனவரி தொடக்கம் 1976 யூன் 25 வரை அவரது (பிறந்த நாள் யூன் 25) பண்டைத்தரிப்பு இந்துக் கல்லூரியிலே

அதிபராகச் சேவை செய்த காலத்தே வட்டுக்கோட்டைப் பகுதியிலே பொதுமக்களின் அன்புக்குப் பாத்திரமானார். அப்பிரதேசத்திலேயே நடைபெற்ற சமூகப் பெருவிழாக்களில் பேச்சாளராகப் பங்கு பற்றியதோடல்லாமல், சமூக சேவையாளராகவும் மிளிர்ந்தார். கட்சி நடவடிக்கைகளும் இக்காலகட்டத்தில் மந்த நிலையிலேயே இருந்தன. கார்த்திகேசனின் சேவையை மக்கள் தொடர்ந்தும் பெறுவதற்காகவே அவர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலிருந்து இளைப்பாறியபோது அவருக்கு பாடசாலை ஆசிரியர்கள் ஓர் தட்டச்சு இயந்திரத்தையும், துவிசக்கரவண்டியையும் அன்பளிப்புச் செய்ததுடன், கண்ணீர் மல்கிய பிரியாவிடையையும் வழங்கினார்.

கட்சியின் வளர்ச்சியும் பின்னடைவும்:

1947 இலிருந்து 1963 வரை, யாழ் குடாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சி பல்வேறு அரசியல் தொழிற்சங்க, சமூக முன்னேற்ற நடவடிக்கைகளின் மூலம் பலம் வாய்ந்த முதன்மையான இடதுசாரிக் கட்சியாக முன்னணிக்கு வந்தது. 1953 ஆகஸ்டில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஹர்த்தால் இடதுசாரிகளின் சக்தியையும், பலத்தையும் நாட்டில் துல்லியமாகப் பிரகடனப்படுத்தியது. இந்த ஹர்த்தாலின் பிரதிபலிப்பு 1956ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின் மூலம் வெளிக்காட்டியது. காலஞ்சென்ற பொன்னம்பலம் கந்தையா அவர்கள் 1956ல் பருத்தித்துறைத் தொகுதிக்கு கட்சி சார்பில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காலத்திலிருந்து பல்வேறு மட்டங்களில் கட்சியின் செயற்பாடுகளில் கார்த்திகேசன், வைத்திலிங்கம், பொன் கந்தையா, எம்.சி. சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சீனிவாசகம், இராமசாமி ஐயர், சுபைர் இளங்கீரன் போன்றோர் ஈடுபட்டு வந்தனர். கட்சியின் தலைமையில், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் அகில இலங்கை விவசாயிகள் சங்க சம்மேளனம், இலங்கை வாலிபர் சங்க சம்மேளனம், அகில இலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகாசபை, பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் வெகுவீச்சுடன் இயங்கிவந்தன. இவற்றின் பின்னணியில் அச்சாணியாக விளங்கியவர் காத்திகேசனேயாவார்.

1960களில் இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு), கம்யூனிஸ்ட் கட்சி (பீக்கிங் சார்பு) என இரண்டாகப் பிரிந்தது. பின்னர் காலத்திற்குக் காலம், கருத்து வேறுபாடுகள் தோன்ற கட்சியின் பல முன்னோடி உறுப்பினர்கள், கார்த்திகேசன் உட்பட, வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து சென்றனர். இந்நிகழ்வு கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு ஒரு பெரும்தாக்கமும் நஷ்டமுமாகும். இவற்றினால் கார்த்திகேசன் மிகவும் மனமுடைந்தேயிருந்தார். எவ்வாறிருப்பினும் அவர் இறக்கும் வரை பல்வேறு கட்டங்களில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக இருந்தோருடன் தொடர்புகளை வைத்திருந்ததோடு அவர்களின் சுகதுக்கங்களில் கலந்துகொள்வதை பழக்கமும் வழக்கமுமாக கொண்டிருந்தார். இவர்களில் அவருக்குப் பின்னர் காலஞ்சென்ற வீ.ஏ.கந்தசாமி, டாக்டர் சு.வே.சீனிவாசகம். கே.டானியல் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். வீ.ஏ.கந்தசாமி அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலெல்லாம், அவர் மீது அன்பு காட்டி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்று பணிவிடை செய்வார். இவ்விருவருடன் நானும் கூடிச் செல்வது வழக்கம்.

கார்த்திகேசனும் நானும்:

1952ல் நான் யாழ். மத்திய கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் மெல்லிய, சுதேச உடையுடன் சால்வை அணிந்த ஒருவர் எமது பௌதீக ஆய்வுகூடத்தில் முற்போக்கு எண்ணங்கொண்ட ஏ.ஈ.தம்பர் ஆசிரியருடனும், கம்யூனிஸ்ட் அபிமானியான எஸ்.மகாலிங்கத்துடனும் அதிக நேரமிருந்து பேசிக்கொண்டிருந்தபோது, வகுப்பில் அமைதி குறைந்து சத்தமேற்பட்டது. பின்பு, அந்த மனிதர் சென்று விட்டார். தம்பர் எம்மைச் சிறிது கடிந்துவிட்டு ஆங்கிலத்தில் ''உங்களுக்கு அவரைத் தெரியுமா? அவர்தான் கார்த்திகேசன்" என்று கூறினார். அன்றுதான் நான் அவரை முதல் முறையாகப் பார்த்தது. அந்த வகுப்பில் அவரது சகோதரி செல்வி முருகபிள்ளையும் படித்தது எனது ஞாபகம். பின்னர் அதே ஆண்டு ஆகஸ்ட் ஹர்த்தால் வெற்றிக் கூட்டத்தில் கார்த்திகேசனின் பேச்சுக்கு கைதட்டினேன். பின்பு ஒருமுறை நல்லூர்க் கோவிலுக்கு அண்மையிலமைந்திருந்த இராமசாமி ஐயரின் புத்தகசாலையில் 'மக்கள் கொரியாவுக்கு ஜே' என்றொரு புத்தகத்தை நான் வாங்கியபோது, என்னுடன் பேசினார். சில நிமிட நேரம் கதைத்துவிட்டு நான் கல்லூரி விடுதிக்குச் சென்றுவிட்டேன். அந்தக் காலத்தே மத்திய கல்லூரி விடுதிச்சாலை மாணவர்களாகிய நாம் ஓர் வேலைநிறுத்தம் மேற்கொண்டோம். நாம் நடாத்திய வேலைநிறுத்தக் கூட்டத்தில் கார்த்திகேசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அன்று அவருடன் பேசும் வாய்ப்புக் கிட்டியது. பின்னர் 1956களில் பொன். கந்தையா அவர்களின் தேர்தல் பிரசாரத்திற்காக நெல்லியடிக்கு அடிக்கடி வருவார். அப்போதும் அவருடன் பழகும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டு நண்பர்களாகவும், தோழர்களாகவும் பரிணமித்துவிட்டோம். 1956க்குப் பின் காலம் சென்ற கரவைக் கந்தசாமியும் நானுமாக ஆரம்பித்த வடமராட்சி கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கத்திற்கு அடிக்கடி வருகை தந்து அரசியல் வகுப்புகளை நடாத்தி எண்ணற்ற வாலிபர்களை கம்யூனிஸ்ட் வாலிபர்களாக மாற்றி வெற்றி கண்டார். இவ்வாறு அவர் மீது எனக்கு ஏற்பட்ட பாசமும், நேசமும், தோழமையும் கலந்த நட்பு அவர் இறக்கும் வரை தொடர்ந்திருந்தது.

வருடத்தின் யூன் 25ம் திகதி எனக்கும் கார்த்திகேசனுக்கும் ஓர் சிறந்த நாள். மகிழ்ச்சியான நாள். அதுதான் அவரின் பிறந்த நாள். என் மகன் மகிந்தனின் பிறந்த நாளும் கூட. நான் நல்லூரில் வசித்த நாட்களில் மகனின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வருகை தந்து, தனது பிறந்த நாளையும் கொண்டாடி மகிழ்ந்து தனது நகைச்சுவை ததும்பும் பேச்சினால் அங்கு வந்த அனைவரையும், எனது குடும்பத்தினரையும் மகிழ்ச்சியில் குதூகலிக்க வைத்துச் செல்வார். இந்தப் பசுமையான நினைவுகள் என் மனதைவிட்டு என்றும் அகலாதவை.

கார்த்திகேசன் மறைந்து 25 ஆண்டுகள் கழிந்திருக்கும் இவ்வேளையில் மார்க்ஸிசவாதிகளான எமக்கு அவரது வாழ்க்கை ஓர் முன்னோடி உதாரணமாகும். மார்க்ஸிச தத்துவம் என்றும் அழியாதது. மனித குலமிருக்கும் வரை நிலைத்திருக்கும். கார்த்திகேசன் மார்க்ஸிசத்திற்கு அளித்த பங்கு என்றும் இலங்கையிலுள்ள தற்போதைய வருங்காலத்தைய மார்க்சிஸ்டுகளால் நினைவுகூரப்படும்.

காத்தி நாமம் நிலைக்கட்டும்.

எம். குமாரசாமி,
நீண்டகால கட்சித் தோழரும்,
இளைப்பாறிய பாடசாலை ஆசிரியருமாவார்.

An Unforgettable Personality

V. Mahadevan

Although 25 years have lapsed since the demise of Mr.M.Karthigesan his memories will linger in the minds of those who had been his pupils, his colleagues on the staff of schools his friends and others who had sought his advice and help from time to time.

During the period of the second World War (1939-1945) I had been student at Jaffna Hindu College from 1940-1946 in Form 1(Grade 6) to the H.S.C (Higher School Certificate)and the University entrance class.

Late Karthigesan, B.A., English Hons. London, joined the staff of JHC during 1946 and continued to serve there until he was transferred to another school after 25 years of dedicated service as a teacher and a brief spell of service as Acting Principal.

He came to Jaffna Hindu College after serving as Editor of "Forward", the journal of Communist Party of Ceylon, while serving as member of the political bureau of Ceylon Communist Party.

He had been a brilliant teacher of English, but unfortunately I didn't get the chance of being his student in any of his classes at JHC. But I had the chance of listening to him at some meetings of school students' societies. He was

also helpful in getting some well known persons to address those meetings. He was a well informed person and was a regular reader of both local and foreign journals apart from books.

He was a gentleman to the core. He had been helping every body who sought his advices and help from inside schools and out side school including past pupils, teachers, journalists, politicians and university students. Most of these persons met him both during school hours and after school hours or at his residence. I think he had more visitors during the period he served as an elected member of the Jaffna Municipal Council for the Vannarpannai ward. I used to wonder how he managed to find the time to meet their demands and requests.

In mid 1953 when Karthigesan had to go on study leave to do his post graduate Diploma in Education, I was asked by the then acting principal late V.M. Aasaipillai to take over from him the task of compiling and editing the " Kumaraswamy Number" of the Young Hindu, the students annual journal, to be published in memory of the late A.Kumaraswamy, a famous Principal who died suddenly in 1952.

This was not a very easy task as I had to go about meeting some of the late Principal's contemporaries to collect the necessary details, articles etc. After this task was completed I was asked to continue with the task of compiling and editing "The Young Hindu". I continued this task until the edition and publication of "75 th anniversary number of Jaffne Hindu College" in 1965. During this period from 1953 to 1965 ,the late Karthigesan was of immense help in going through and receiving the contribution written in English although some had to be done in a hurry at short notice, to catch the press, and some had to be re–written by the students concerned. There were one or two other teachers who helped me in this task to reduce the burden on Karthigesan.

In the teaching of "CURRENT AFFAIRS" and general knowledge to the H.S.C and G.C.E [A/L) students, he was of immense help in giving the teachers concerned, including myself, the necessary guidance and advice to benefit both the teachers and pupils. In the setting of examination papers on this subject at school level, he was of great help in setting questions in certain schools and in the revision of questions set by teachers for all sections.

During the 1960's when we, some teachers of G.C.E A/L classes, had to attend in service classes held at the University of Ceylon, Peredeniya, in one of the general tests which all participants attended, a senior lecturer stated that in the case of schools in Jaffna, the late Karthigesan was the best person to give the necessary guidance to teachers doing English and English Literature in the A/L classes - fitting assessment to a devoted teacher.

As he was always in contact with some of his friends in Colombo, he was the most reliable person to give us details of likely changes and trends in Colombo with respect to changes in politics, government and other fields.

Hadn't late Karthigesan in politics, he would have shone as a brilliant academician in a leading educational institution or a university in Sri Lanka.

• **V. Mahadevan**
B. A Dip in Ed, SLEAS,
Retired Principal and Student JHC 1940-1945,
Teacher JHC 1953-1972

* * *

கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் ~ எமது மதிப்புக்குரிய குரு

வி. சிவசுப்பிரமணியம்
(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

முருகப்பிள்ளை கார்த்திகேசன் - கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்று பிரபலமானவர் - ஒரு காலத்தில் பல்கலைக்கழகக் கல்லூரியின் பேராசிரியர் ஈ.எவ்.சி.லுடொவைக்கின் விருப்பத்துக்குரிய மாணவராயும், செல்வாக்கு மிகுந்த இலங்கை சிவில் சேவையில் சேர்த்துக் கொள்வதற்காகத் தந்தையால் அனுப்பி வைக்கப்பட்டவருமாவார். ஆனால் விதி வேறொன்றாகி, அவரது கல்வியின் பலனைப் பெற்றவர்கள் யாழ் இந்துவிற் கல்வி கற்று வெளியேறிய பலதலைமுறையான மாணவர்களாவர். இந்துக்கல்லூரியில் அவராற்றிய தொடர்ச்சியான இருபத்தைந்தாண்டுகள் சேவை உலகம் முழுவதும் பரந்துபட்டு மூலை முடுக்கெங்கும் வாழும் கிட்டத்தட்ட எல்லா மாணவரதும் அன்றாட வாழ்க்கையில் அவரது தாராள மனப்பான்மையையும், பாரம்பரியத்தையும் எடுத்துச் செல்லக்கூடிய பிரமாண்டமான செல்வாக்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. யாழ் இந்துக்கல்லூரியைப் பொறுத்த வரை அச்சேவை 'கார்த்திகேசன் மாஸ்டர் நெறி' என்ற ஒன்றை உருவாக்கியது. எமது மதிப்புக்குரிய குரு மறைந்த 25ம் ஆண்டை நினைவுகூர சிறந்த நினைவு மலரொன்றை வெளியிடுவது அவருக்களிக்கும் மிகப் பொருத்தமானதும் வேண்டத்தக்கதுமான மரியாதையாகும்.

அது 1946ம் ஆண்டு ஜனவரி மாதம் பாடசாலையின முதல் நாளாகும் - கார்த்திகேசன் யாழ் இந்துவுக்குள் அடியெடுத்துவைத்த நன்னாளாகும். அன்று மெலிந்த உயிர்த்துடிப்பான இளைஞரொருவர் எமது 8ம் வகுப்பு "C" பிரிவினுள் நுழைந்து, தன்னை எமது கணித ஆசிரியர் என அறிமுகம் செய்து கொண்டார். நாம் அதிஷ்டசாலிகள். எமக்கு ஏற்கெனவே ஆங்கிலத்துக்கு என்.சபாரட்ணமும், வரலாற்றுக்கும் குடியியலுக்கும் பண்டிதர் கே.எஸ்.செல்லத்துரையும், தமிழுக்கு கே.எஸ்.சுப்பிரமணியமும், விஞ்ஞானத்துக்கு சீ.எம்.குலசிங்கமும் எனக் கல்விப் புலிகள் இருந்தார்கள். அந்த நாள் முதல் கிட்டத்தட்ட முப்பத்தாண்டு காலமாக - முதலில் மாணவனாகவும் பின்னர் சக ஆசிரியராகவும் நான் கார்த்திகேசனில்

இருந்த நல்லனவற்றையெல்லாம் பெற்றுக் கொள்பவனாயிருந்தேன். தற்போது கார்த்திகேசனைப் பற்றி நான் இச்சில வரிகளை எழுதக்கூடிய தாயிருப்பதுக்குரிய பெருமையும் அவரையே சாரும்.

கார்த்திகேசனின் நியமனம், யாழ் இந்துக்கல்லூரி முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்பட்ட ஒரு தலைசிறந்த தனியார் பாடசாலைக்கு முதன் முதலாக ஒரு கம்யூனிஸ்ட் (பல்கலைக்கழக நாளிலிருந்து ஒரு முழுநேர கட்சி ஊழியனாக இருக்கும் ஒருவர்) நியமிக்கப்படுவது என்ற முறையில், அன்றைய யாழ்ப்பாணச் சமூகத்துக்கு வயிற்றுக் கலக்கத்தை கொடுத்தது. இந்தச் சபையில் ஏனையோருடன் அன்றைய ஸ்ரேற் கவுன்சிலின் முதலாவது சபாநாயகரான சேர்.வைத்திலிங்கம் துரைசாமி அதன் தலைவராகவும், முடிக்குரிய சட்டத்தரணி ரீ.முத்துசுவாமிப்பிள்ளை அதன் மனேஜராகவும், எப்போதும் கெட்டிக்காரப் புறோக்கராய் விளங்கிய ஏ.அருளம்பலம் அதன் செயலாளராகவும், ஒருகாலத்தில் நகர அபிவிருத்திக் கவுன்சில் தலைவராக இருந்த எப்போதும் பிறர் நலன்பேணுவராயிருந்த ஆர்.சிவகுருநாதர் மெம்பராகவும் இருந்தனர். அவர்கள் பாடசாலைகளை நடாத்துவதில் இந்துப்பாரம்பரியத்தில் ஊன்றி நின்றனர்.

1933ம் ஆண்டு தொடக்கம் 1952ம் ஆண்டில் இறக்கும்வரை ஹரல்ட் லஸ்கியின் தாராளவாதத்தில் ஊறித்திழைத்த ஏ.குமாராசாமி யாழ் இந்துவைக் கொண்டு நடத்துவதில் முன்னுக்கு நின்றது யாழ் இந்துவின் அதிஷ்டமாயிற்று. புரட்சிகரமானதாக்கி யாழ் இந்துவின் பின்நாளைய புகழுக்கு ஸ்திரமான அத்திவாரமிட்டார். தூர நோக்கமும், சிறந்த ஆசிரியரைத் தெரிவு செய்யும் திறமையும் உடையவராயிருந்த அவர், தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவரான கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் என்பது பற்றி அலட்டிக் கொள்ளாததால் கார்த்திகேசனின் தெரிவு நிச்சயமானது. அவர் சரியென வரலாறு நிரூபித்தது. கார்த்திகேசனும் பாடசாலைப் பாரம்பரியத்துடன் தனது தத்துவம் முரண்பட என்றும் அனுமதித்ததில்லை. நிறுவனத்தைக் கட்டியமைக்க அதிபர் குமாரசாமி எடுத்த தாராள நடவடிக்கை அனைத்தையும் ஏற்றுக் கொண்ட முகாமைத்துவ அவைக்கே இப்பெருமை போய்ச் சேரவேண்டும்.

கார்த்திகேசனின் நியமனத்தின் பின்னர் அதிபர் குமாரசாமி பல்வேறு வித்தியாசமான முரண்பட்ட அரசியற் பின்னணிகளையும், கருத்துக்களையும் கொண்ட இளம் ஆசிரியர் குழாமொன்றை நியமித்தார். ஒரு காலகட்டத்தில் யாழ் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் அணி பழைமைவாதிகள், பாரம்பரிய வாதிகள், புரட்சிவாதிகள் எனப் பலரும் இணைந்த சிறந்த ஒன்றாக விளங்கியது. அப்படியிருப்பினும் ஆசிரியர் ஒவ்வொருவரும் கல்விசார் நிலையில் ஒவ்வொரு தூணாக விளங்கினர். இது நிலையத்தின் தோற்றத்தை எழுப்பியது. இதில் கார்த்திகேசன் தனது சமயோசித புத்தியாலும் வாக்குச் சாதுரியத்தாலும் பொறுமை, சகிப்புத்தன்மை என்பவற்றாலும், சிறந்த நகைச்சுவை உணர்வாலும் எல்லோருக்கும் ஒரு படி மேலே நின்றார். பாடசாலை நேரம் முடிந்த பின்னர் மாலையில் வெகுநேரம் வரை எமது ஆசிரியர் அறை (Staff Room) கல்வி முதல் சமயம்

ஈறாக பல்வேறு விடயங்களையும் நட்புடன் ஆனால் காரசாரமாக வாதிக்கும் ஒரு இடமாக இருந்தது. அங்கு தாராளவாதச் சுதந்திரக் காற்று முழு இடத்தையும் ஆக்கிரமித்து சம்பாஷணைகளில் கார்த்திகேசனே முதலிடம் வகித்தார். ஆனால் அவர் யாரையும் பற்றி அநியாயமாக எதையும் கூறமாட்டார். அவர் ஒரு 'ஜென்ரில்மன்' என்று கூறினால் அது மிகப் பொருத்தமான வார்த்தையே. அவருக்கு வயதில் குறைந்தவராயிருந்த ஆசிரியர்கள் அவரைப் பெரிதும் மதித்தனர். இங்கேதான் ஒரு இலட்சிய ஆசிரியரின் மகத்துவமே புலனாகிறது. கருத்துகளையும் மாறுபட்ட ஆட்சிகளையும் பரஸ்பரம் மதிப்பதை நாம் கார்த்திகேசனிடமிருந்துதான் கற்றுக் கொண்டோம்.

கார்த்திகேசன் சிறந்து விளங்கிய இன்னொரு துறை 'ஸ்கிரபிள்' விளையாட்டு ஆகும். அது அப்பொழுது ஒரு புதுமையாக இருந்தது. கிட்டத்தட்ட ஆசிரியர் அனைவரும் அந்த விளையாட்டிற் பித்துப் பிடித்திருந்தனர். பாடசாலை முடிந்ததும் அதை விளையாடுவோம். கார்த்திகேசன் அந்த விளையாட்டிற் கைதேர்ந்தவராய் விளங்கினார். அந்த விளையாட்டு எமக்கு ஒருவரையொருவர் அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. சந்தேகம் ஏற்படுமிடத்து அகராதிக்கும் மேலால் கார்த்திகேசன் சொல்வதை எவரும் ஒரு முணுமுணுப்புமின்றி ஏற்றுக் கொண்டனர். ஆனால் அதேநேரம் ஏதாவது ஒரு சந்தேகத்திற் கிடமானதாகவோ இருந்தால், கார்த்திகேசன் மற்றவர் மனதைப் புண்படுத்தக் கூடாதென்பதற்காகப் பேசாமல் இருந்து விடுவார். இங்கேயும் ஒரு 'ஜென்ரில்மன்' னின் பெருந்தன்மை பொதிந்து கிடக்கும்.

கார்த்திகேசனின் செல்வாக்கு உணரப்படாமல் பாடசாலையில் எந்தவொரு கல்வி நடவடிக்கையோ, கல்விக்கும் அப்பாலான நடவடிக்கையோ இருந்ததில்லையென்றே கூறலாம். A/L யூனியன், ஹொஸ்டல் யூனியன் இரவுவிருந்துகள், இலக்கிய யூனியன் நடவடிக்கைகள் என்பவற்றைப் பொறுத்தவரை அன்றைய அரசியல் நிலைமையைக் குறித்து சிலேடையும், கிண்டலும் உடைய சொற்பொழிவுகளைத் தயாரிக்க என்றுமே அவர் உதவி நாடப்படும். விருந்தினர்கள் பெயர்களைச் சிலேடையாகக் கொண்டு உணவுப் பட்டியல் தயாரிப்பது அவருக்கேயுரியதொரு கலையாகும்.

1960ம் ஆண்டு தேசிய கல்வி குறித்து வில்மட் பெரேரா கமிஷனுக்கு, யாழ் இந்துக்கல்லூரி 'கில்ட் தரு' ஆசிரியர் சபை மகஜர் தயாரித்ததில் கார்த்திகேசன் வழங்கிய பங்களிப்பு ஏனைய அனைத்திலும் அதிஉயர்ந்ததாயிருந்தது. அக்கமிஷனில் எமது மதிப்புக்குரிய அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கவாதி ஹண்டி பேரின்பநாயகமும் அங்கத்தவராயிருந்தார். அவ்வேளை நான் யாழ் இந்துக்கல்லூரியின் ஆசிரியர் சங்கச் செயலாளராயிருக்கும் அதிர்ஷ்டம் பெற்றிருந்தேன். கல்வி அமைப்பில் புரட்சிகர மாற்றங்களை கொண்டதாயமைந்த எமது மகஜர்தான் நடைமுறைக்கேற்றதாக இருந்தது எனப் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

எமது சிபார்சுகள் பல்லியல்புபட்ட தேசிய கல்விமுறைக்குப் பொருத்தமான பங்களிப்பை வழங்குகின்றன எனப் பிரகடனம் செய்தும், எமது பிரேரணைகள் காலத்திற்கு மிகவும் முன்னேறியனவாய் அமைந்துள்ளன எனப் பாராட்டியும், அன்றைய மும்மொழித் (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) தேசிய பத்திரிகை களிலும் தலைப்புகள் வெளிவந்தன. அதை எழுத விஷயத்துடன் பொருத்தமான வார்த்தைகளையும், சொற்தொடர்களையும் எடுத்துத் தந்தவர் கார்த்திகேசன்தான். கார்த்திகேசன் போன்ற புத்திக்கூர்மை உடையோருக்கு நாடு நன்றி செலுத்தவேண்டும். கிட்டத்தட்ட அனைத்துப் பிரேரணைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பின்னர் அவை தேசியக் கல்விக் கமிஷனால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

எமது சஞ்சிகையான 'இளம் இந்து'வின் வெளியீட்டுக்குக் கார்த்திகேசன் பொறுப்பாயிருந்தார். ஒரு சஞ்சிகையை வெளியிடுவதிலுள்ள சகல நுணுக்கங்களையும் கற்றுக் கொண்டதில் நான் தனிப்பட்ட முறையில அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைச் சஞ்சிகைக்குப் பொறுப்பாக நியமித்தபோது நான் எப்போதும் வழிகாட்டலுக்கும் உதவிக்கும் அவரையே சார்ந்திருந்தேன். நான் ஏற்ற தொழிலுக்குரிய பெருமை அனைத்தும் கார்த்திகேசனையே சாரும். திருத்துதல், சரிபார்த்தல், தொகுத்தல் போன்றவற்றிலுள்ள நுட்பங்களை அவர்தான் எமக்குக் கற்றுத் தந்தார்.

அவரைப்பற்றிய கதைகள் பல. அவற்றையெல்லாம் எழுத இடம் போதாது. சுவாராசியமான ஒன்றை மட்டும் தருகிறேன். கார்த்திகேசன் ஒரு சிறந்த கிரிக்கட் ஆட்டக்காரன். அவர் எமது ஆசிரியர் அணிக்குத் தலைமை தாங்கினார். அவர் ஒரு சிறந்த விளையாட்டு விபர அறிவிப்பாளருமாவார். அவர் தனது கல்விப் பட்டப் படிப்பைக் கொழும்பில் மேற்கொண்ட போது அவர் றோயல் கல்லூரியில் படிப்பித்தற் செயல்முறைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தார். றோயல் கல்லூரி மாணவர்கள் வடக்கின் படிப்பு, விளையாட்டு என்பனவற்றைத் தரம் குறைத்துப் பார்த்தனர். முதலாம் நாள் வகுப்பிற்குள் சென்றபோது கார்த்திகேசன் தான் கிரிக்கெட் விளையாட்டில் அணித்தலைவன். இருநூறு (2 Century) ஓட்டங்கள் அடித்த யாழ்ப்பாணப் பாடசாலை ஒன்றிலிருந்து வருவதாய் தனக்கேயுரிய சமயோசித புத்தியுடனும் சிறந்த நகைச்சுவையுணர்வுடனும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். அவர் பாடசாலையின் பெயரையோ, அணித்தலைவனின் பெயரையோ கூறவில்லை. அன்று கூறியது, அவர் அந்தப் பாடசாலையில் இருந்த காலம் முழுவதும், அப்பாடசாலையில் உயர் கௌரவத்துடனும் மதிப்புடனும் அவரைக் கவனிக்கப்பட வைத்தது.

பலர் சுதந்திரம், சமத்துவம் என்பனபற்றி மேடைகளில் அதிகம் பேசுவார்கள். ஆனால் கார்த்திகேசன்தான் பாடசாலையிலும், வீட்டிலும், மேலும் அவர் கொண்டிருந்த பொதுச்சேவை அனைத்திலும் சமத்துவத்தைக் கடைப்பிடித்த ஒரேயொரு அரிய ஆத்மா எனலாம். அவர் கொண்டிருந்த முற்போக்கான நோக்கங்களும், சகிப்புத்தன்மையும் யாழ் இந்துவில் விரவியிருந்த தாராளவாத உணர்வுடன் இந்த நிறுவனத்திற் படித்து வெளியேறிய மாணவர் இதயங்கள்

மனங்கள் அனைத்திலும் ஆழப் பதிந்திருந்த அதிபர் ஏ.குமாரசாமியால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒளிவு மறைவின்மை, தாரளவாதம் என்பனவற்றுடன் மெத்தப் பொருந்தியது.

கார்த்திகேசன் யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் பழைமைவாத வண்ணார்பண்ணையைப் பிரதிநிதித்துவம் செய்து மாநகர அரசியலிலும் வெற்றிபெற்றார். அவர் யாழ் இந்துக்கல்லூரியிலிருந்து மாநகரசபை உறுப்பினரான ஒரேயொரு நபர் என்ற முறையிலும் தனித்துவமானவரானார். பாராளுமன்றத்திற்குள் நுழைய வேண்டுமென்ற அவரது அவா கைகூடவில்லை. ஆனாலும் யாழ் இந்துக்கல்லூரி தனது புத்திரர் இருவர் பாராளுமன்றம் சென்றதையொட்டிப் பெருமையடைய வேண்டும். ஒருவர் வடக்கிலிருந்து பருத்தித்துறையைப் பிரதிநிதித்துவம் செய்து பாராளுமன்றம் சென்ற முதலாவது கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா. இவர் கார்த்திகேசனின் சமகாலத்தவர். மற்றையவர் கார்த்திகேசனின் மாணவரும் அவரது கொள்கைப் பற்றாளனுமான மு. நவரட்ணம் - யாழ் இந்து ஊழியர்.

கார்த்திகேசன் ஒரு ஆசிரியர் என்ற முறையில் வாழ்க்கைக்கு நோக்கம், வழிகாட்டல் என்பன பற்றிய உணர்வைத் தந்தவர். அவரது உயரிய வாழ்க்கைக் கோட்பாடுகள் நாம் பின்பற்றக் கூடிய கலங்கரை விளக்கமாக எமக்கமைந்தது. அவர் யாழ் இந்துவில் இருந்த கால் நூற்றாண்டு காலத்தில் அவரளித்த மதிப்பிற்குரிய பங்களிப்புகளை திரும்பிப் பார்க்கும்போது அவை எம்அனைவருக்கும் மிகப் பெருமையையும் பேரானந்தத்தையும் தருகின்றன.

அவர் ஏழைகளினதும், நசுக்கப்பட்டவர்களினதும் உண்மைப் பங்காளன். அவர்கள் இழந்த உரிமைகளைப் பெற்றெடுக்கப் போராடுவதில் எப்போதும் இன்பம் கண்டார். அவரது நேர்மையில் அவரது எதிரிகூடச் சந்தேகம் கொண்டதில்லை. அவர் எளிமையாக எப்போதும் தன்னை நாடி வருவோருக்கு உதவி செய்யும் விருப்புடைய ஆடம்பரமற்ற வாழ்வு வாழ்ந்தார். 18 ஆண்டுகளான நீண்டகாலம் நான் அவருடன் கொண்டிருந்த தொடர்பு எனக்கு வாழ்க்கையில் பலவழியில் செழிப்பூட்டியது.

2002ம் ஆண்டு செப்டெம்பர் 10ந்திகதி அவர் மறைந்த 25ம் ஆண்டு நினைவாகும். இந்த நினைவுமலர் வெளியீட்டினை ஒழுங்கு செய்பவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அதையிட்டு யாழ் இந்து மாணவர் அனைவரும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைய வேண்டும். கார்த்திகேசன் நினைவு வெள்ளிவிழா நலமே அமைய வாழ்த்துக்கள்.

• V.சிவசுப்பிரமணியம்,

யாழ் இந்துக்கல்லூரியின் பழையமாணவரும் முன்னாள் ஆசிரியரும் ஆவார். தற்போது Seychelles எனும் தீவில் வசித்து வருகிறார்.

யாழ்ப்பாண முஸ்லீம்களின் அன்புக்குரியவர் அமரர் கார்த்திகேசன்

எம். ஏ. சி. இக்பால்

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்று யாழ்ப்பாண மக்களால் அன்று அன்பாக அழைக்கப்பட்ட அமரர் மு.கார்த்திகேசன் ஒரு சிறந்த ஆங்கில ஆசிரியராகவும், சமூக சேவையாளராகவும், சுவாரசியமான ஹாசிய பேச்சாளராகவும், சிறந்த அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார் என்பது சகலரும் அறிந்ததே. அன்னார் காலமாகி பல வருடங்கள் கடந்துவிட்டாலும் அவருடன் சேர்ந்து வாழ்ந்தவர்கள், சேர்ந்து செயற்பட்டவர்கள், நெருங்கிப் பழகியவர்கள், அவரிடம் கல்வி கற்றவர்கள் பலர் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சகலரும் ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது அமரர் கார்த்திகேசனுடனான தமது தொடர்புகளை நினைவுபடுத்தி தமக்கிடையில் பேசி அகமகிழ்ந்து அன்னாரைப் புகழ்ந்து அவரது நினைவுடன் பிரிந்து செல்வது வழக்கமான ஒருவிடயமாகும்.

அவருடைய பணிகளில் மிகவும் சிறந்தபணியாக அன்று அமைந்தது அவரது அரசியல் பணி என்றால் அது மிகையாகாது. யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை அறிமுகப்படுத்தியவர்களில் மிக முக்கியமானவர் அமரர் காத்திகேசன் அவர்கள். பிரபுத்துவ கலை கலாசார ஆதிக்கத்திற்குப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் மார்க்ஸிச - லெனினிச கொள்கையை பரப்புவதில் பல கொடுர கஷ்டங்களை எதிர்கொண்ட கார்த்திகேசன் அவர்கள், அதனை அவரது தோழர்களான காலம் சென்ற வைத்திலிங்கம் மாஸ்டர், அரியரட்ணம் மாஸ்டர், M.C. சுப்பிரமணியம், கே. டானியல், சுபைர் இளங்கீரன் போன்றவர்களின் உதவியுடன் துணிவுடன் எதிர்கொண்டு மார்க்ஸிஸ லெனினிஸ கொள்கையை பரப்புவதில் முன்னின்று உழைத்தார். அதன் மூலம் யாழ்ப்பாண மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்ற கார்த்திகேசன் அவர்கள் 1955ம் ஆண்டு இடம் பெற்ற யாழ். மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு மாநகரசபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். சாதி, மத பேதங்களுக்கு எதிராக செயல்பட்ட கார்த்திகேசன் அவர்கள் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் மத்தியிலும், முஸ்லீம் மக்கள் மத்தியிலும் பெரும் ஆதரவைப் பெற்றிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசும் மக்கள், காலத்தால் அழியாத சரித்திர முக்கியத்துவமான ஞாபக முத்திரையொன்றை பதித்துள்ளார்கள். அ.்.தாவது யாழ்ப்பாணத்தில் மிகச் சிறுபான்மையாக வாழ்ந்த முஸ்லீம்கள் மத்தியிலிருந்து 1955ம் ஆண்டு யாழ். மாநகரசபைக்குத் தெரிவாகிய சட்டத்தரணியான காலம் சென்ற மர்ஹூம் எம்.எம்.சுல்தான் அவர்களை யாழ். மாநகரசபையின் மேயராக (முதல்வர்) யாழ். மக்கள் தெரிவு செய்ததேயாகும். இ.்.து தமிழ் மக்களின் உயர்ந்த பண்பினை என்றும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த சரித்திர முக்கியத்துவமான விடயத்தை உருவாக்கியவர்களில் அமரர் மு.கார்த்திகேசன் மாஸ்டர் மிகவும் முக்கியமானவர். அவரும் 1955ம் ஆண்டு யாழ். மாநகரசபையின் உறுப்பினராகிய போது கொட்டடி தெய்வேந்திரம் என்ற யாழ். மாநகரசபை உறுப்பினருடன் இணைந்து மர்ஹூம் எம். எம். சுல்தான் அவர்களை மேயராக்கி அகமகிழ்ந்த மாமனிதன்.

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ம் திகதி யாழ். முஸ்லீம்களையும், இதரபகுதி முஸ்லீம்களையும் யாழ். மாவட்டத்தை விட்டு அவர்களின் சகல உடமைகளையும் பறித்துக்கொண்டு வெளியேற்றிய நிகழ்ச்சி இடம் பெற்ற போதும், தமிழ் மக்கள் மேல் யாழ். முஸ்லீம்களுக்கு எந்தவித வெறுப்புணர்வும் ஏற்படாது தடுத்துவிட்டவற்றில் மிக முக்கியமான விடயம் மர்ஹூம் எம்.எம்.சுல்தான் அவர்களை முதல்வராக்கியது என்றால் மிகையாகாது.

மாஸ்டர் அவர்களின் இச்செயற்பாட்டினால் யாழ்ப்பாண முஸ்லீம்கள் மத்தியில் கார்த்திகேசன் அவர்களின் செல்வாக்கு மேலும் அதிகரித்தது. பல முஸ்லீம் இளைஞர்கள் மாஸ்டரின் வீட்டுக்குச் சென்று ஆங்கிலத்துடன் மார்க்ஸிசக் கல்வியையும் கற்று வந்தார்கள். இதன் காரணமாக யாழ். முஸ்லீம்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு அதிகரித்தது. ஒரு கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையும், ஒரு வாலிபசங்க கிளையும் அங்கு உருவாக்கப்பட்டது. பெருந்தொகையான வாலிபர்கள் இக்கிளைகளில் இணைந்தார்கள். இச்சம்பவங்களின் பின்பு 1956ல் இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் யாழ்ப்பாணத் தொகுதிக்குப் போட்டியிட்ட மு.கார்த்திகேசன் மாஸ்டர் அவர்கள் யாழ். முஸ்லீம்களின் மிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கு அவர் செய்த சேவைகளை மனதில் நிறுத்தி யாழ். முஸ்லீம்கள் அவருக்கு தமது வாக்குகளை அளித்து தமது நன்றியை தெரிவித்துக் கொண்டார்கள். அமரர் மு.கார்த்திகேசன் அதுபற்றி அடிக்கடி கூறி பெருமைப்பட்டுக் கொள்வார். இவ்வாறு யாழ்ப்பாண முஸ்லீம்களுக்கும் கார்த்திகேசன் மாஸ்டருக்கும் இடையில் இருந்த உறவு அவரது மரணத்தின் பின்பும் நிலைத்திருந்தது. இன்றும் யாழ்ப்பாண முஸ்லீம்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக வாழ்ந்தாலும் அமரர் மு.கார்த்திகேசன் மாஸ்டர் அவர்களுடனான தொடர்புகளை தினமும் நினைத்து அகமகிழ்ந்து வருகின்றோம்.

• எம். ஏ. சி. இக்பால்,
தலைவர்.
வடக்கு முஸ்லீம்களின் நலன்புரிச் சங்கம்.



மேயர் சுல்தான், திரு. நடராஜா உட்பட தெரிவு
செய்யப்பட்ட மாநகரசபை அங்கத்தவர்களுடன்
திரு. மு. கார்த்திகேசன்

கல்வி – வர்க்க சமுதாயத்தில் அதன் அடிப்படையும் நோக்கமும்

எம்.கார்த்திகேசன், B. A.

['களனி' முதலாவது இதழில் இக்கட்டுரை முதலாவது பகுதியாக பிரசுரமாகியது. அடுத்த இதழில் இரண்டாவது பகுதி பிரசுரிக்கப்பட்டது. அவ்விரண்டு பகுதிகளும் இங்கே பிரசுரமாகியுள்ளன]

சரி பிழைகளைச் சொல்வதற்கு தமக்கு அதிகாரம் உண்டு என ஒவ்வொருவரும் கருதுகின்ற விடயம் கல்வியாகும். அது சட்டமாக இருந்தாலென்ன, மருத்துவமாக இருந்தாலென்ன, பொறியியலாக இருந்தாலென்ன அல்லது கலையாக இருந்தாலென்ன அங்கு ஒரு கருத்தை வெளியிடுவதற்கு ஒரே விதமான உற்சாகமும் உறுதியும் இருப்பதில்லை. அவைகள் நிபுணர்களால் மட்டும் கருத்துகள் சொல்லப்படும் தலைப்புகளாக கருதப்படுகின்றன. ஆனால் கல்வித்துறையைப் பொறுத்தவரை எவராயினும் தமது கருத்தை வெளியிடக்கூடிய ஒரு துறையாகக் கருதப்படுகின்றது.

இது ஏனெனில் கல்வி சிறு பிள்ளைகளுடன் சம்பந்தப்படுவதாலும் அத்துடன், எந்த வயது வந்தவனும் சிறு பிள்ளைகளுக்கு எது நல்லது என்பதைச் சொல்வதற்கு ஏற்ற முதிர்ச்சி உள்ளவன்தான் என்று கருதுவதாலுமாக இருக்கலாம். இன்று கல்வி சர்வ வியாபகமானதாகக் கருதப்படுகிறது என்ற உண்மையும் சிலவேளைகளில் வேறு காரணமாகவும் இருக்கலாம். ஆகவே கல்வி சம்பந்தமாகச் சரி பிழைகளைக் கூறுவதற்கு எவராயினும் போதியளவு கற்றுள்ளார்கள்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், கருதப்படுவதைப்போன்று கல்வி சர்வ வியாபகமானதா? இல்லையா? என்பதே. கூடுதலாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கல்வி சர்வவியாபகமானதாக மட்டுமல்ல, கட்டாயமானதாகவும் கருதப்படுகின்றது. பரந்த அளவிற்கும் ஒரு உயர்ந்த மட்டத்திற்கும் கல்வியை வலியுறுத்தக்கூடிய நாடு என்று கருதப்படும் இலங்கையை எடுத்துக்கொண்டால்,

இந்த நாட்டின் எல்லாப் பிள்ளைகளுமே பாடசாலைக்குப் போகிறார்களா? இல்லை. அவர்கள் அப்படி செய்திருந்தாலும் கூட அவர்கள் எல்லோருமே சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட கல்வியின் அடிப்படை, ஆகக் குறைந்த மட்டத்தைப் பூர்த்தி செய்கிறார்களா? இல்லை.

இன்று இந்த இருபதாம் நூற்றாண்டில் சர்வ வியாபகமான, கட்டாயமான கல்வித்திட்டத்தின் கீழ் இதுதான் நிலையென்றால் கடந்த காலத்தின் நிலையென்ன? அன்று நிலமை மிகவும் மோசமானதாக, ஜனத்தொகையில் மிகச் சிறுபான்மையினரின் வரம்புக்குள் மட்டுந்தான் கல்வி இருந்தது. பாடசாலைக்கு அனுப்புவதற்கு வசதி படைத்த பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு, அல்லது சமுதாயத்தில் தமது வேலைகளைச் செய்வதற்காகப் படிப்பிக்கப்பட வேண்டிய சமூகத்தின் பிரிவுகளைச் சேர்ந்த சாதியினருக்கு, அல்லது பாரம்பரியமாகக் கற்றுத் தந்தவர்களின் பிள்ளைகளுக்கு மட்டுந்தான் கல்வியிருந்தது.

ஆகவே வர்க்கங்கள் அல்லது சாதிகள் என்ற சமூகப்பிரிவினைகள் தான் கல்வி யாருக்கு? என்பதை நிர்ணயித்தன. அன்று கல்வி கற்க வசதி படைத்தவர்கள் முக்கியமாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பில் அது நிலப்பிரபுக்களுக்காக இருந்தது. முதலாளித்துவ சமூக அமைப்பில் நிலப்பிரபுக்களை ஆதரவாகக் கொண்ட முதலாளிகளுக்காக இருந்தது. இதுதான் மேற்கத்திய நாடுகளின் உண்மையான நிலைமை. ஆனால் கிழக்கில் சமுதாயத் தரங்கள் ஒரு வித்தியாசமான நிலையிலிருந்தது. யப்பானிலும், சீனாவிலும் ஒரு தளர்ந்த பாரம்பரிய அடிப்படையில் கல்வி சமூகத்தின் ஒரு பிரிவுக்குள் கட்டுப் படுத்தப்பட்டது. அதே வேளையில் இந்தியாவில் பிறப்பால் நிர்ணயிக்கப் படுகின்ற இறுக்கமான சாதி அமைப்பில் சமூகத்தில் அவரவர்களின் கடமைகளுக்கேற்ப கல்வி நிர்ணயிக்கப்பட்டது.

இந்த அடிப்படையில் படிப்பு வாசனையற்ற, கல்வியே கற்காத அல்லது மிகச் சிறிதளவு படித்திருக்கக்கூடியதான பரந்த வெகுஜனங்களிடமிருந்து தங்களைப் பிரித்துக் கொண்ட, அவர்களிலும் பார்க்கத் தாம் மேலானவர்கள் என்று கருதுகின்ற ஒரு படித்த பிரமுகர்கள் கூட்டம் இயற்கையாகவே தோன்றியது. உதாரணத்திற்கு பிரித்தானியாவில் பொதுப் பாடசாலைகள் என்று கூறப்படுகின்ற ஆனால் உண்மையில் தனியார் பாடசாலைகளான எற்றன், ஹரோ போன்றவைகள் ஆளும் வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும், வசதி படைத்த வர்க்கங்களின் பிள்ளைகளுக்கும் மட்டுந்தான் கல்வியளிக்கின்றன. இவர்களில் சிலர் கல்வியின் உயர்ந்த மட்டத்தை அடைவதற்காக ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் ஆகிய சர்வ கலாசாலைகளுக்குச் சென்றனர். இந்தியாவில் வரம்புக்குட்பட்ட குருகுல அமைப்பில் படித்த பிரமுகர்கள் பிராமணர்களாவர். அதேவேளையில் சீனாவில் ''மண்ட ரீன்ஸ்'' எனப்படுபவர்கள் படித்த பிரமுகர்களாக விளங்கினர்.

இன்று விவேகமான வாழ்வுக்கு ஒவ்வொருவருக்கும் கல்வி இவ்வளவு முக்கியமானதாகக் கருதப்படும் அதே வேளையில், கடந்த காலத்தில் இந்த வகையில் ஏன் கட்டுப்படுத்தப்பட்டது? மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாத வெறும் ஒரு ஆடம்பரப் பொருளாக, ஒரு பெருமை தரும் அணிகலனாக இது கருதப்பட்டதா?

இல்லை, இது அதிகாரத்தின் ஒரு கருவி - அரசியல், பொருளாதார, இராணுவ, சமூக அதிகாரத்தின் கருவி. உலகரீதியான வாக்குரிமை, உலகரீதியான கல்வி, ஜனநாயகம், மக்களின் மக்களால் மக்களுக்காக நடத்தப்படுகின்ற அரசாங்கம் என்று சொல்லப்படுபவைகள் இருந்த போதும் கூட, இன்றும் இன்னமும் அது அதிகார வர்க்கத்தின் ஒரு கருவியாகும்.

இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கீழ் நிலையில் வைத்திருப்பதற்கு ஆளும் வர்க்கத்தால் பாவிக்கப்பட்ட, பாவிக்கப்படுகின்ற ஒரு கருவியாகும். உழைக்கும் வெகுஜனங்களை அடக்கிச் சுரண்டப் படுவதற்கான சட்டங்களை இயற்றியவர்களும், பொது விவகாரங்களை விவாதித்தவர்களும், சபைகளில் கூடியவர்களும் இந்தப் படித்தவர்களே. இந்தப் படித்தவர்கள் தான் ஆளுநர்கள் என்ற தோரணையில் சட்டத்தை அமுல்படுத்தியவர்கள். சுரண்டப்படுபவர்களால் சுரண்டல் அமைப்பு முறைக்கு எதிராக எங்காவது பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்ட போதெல்லாம், தெய்வ உதவி கோரப்பட்டது. கடவுளுடன் கூட யார் தொடர்பு கொள்ளக்கூடியவர்களாயிருந்தார்கள்? படிப்பு வாசனையற்றவர்களோ, அடிமைகளோ, விவசாயிகளோ, அல்லது அரைகுறைப் படிப்பாளிகளோ அல்ல. வேதங்களை ஓதக்கூடிய, அதன் புனிதமான பொருளைக் கூறக்கூடிய, மந்திரங்களைச் சொல்லக்கூடிய படித்தவர்கள் மட்டுமே கடவுளுடன் தொடர்பு கொண்டார்கள். அது மட்டுமல்ல. தேவைப்பட்டால் பிசாசுகளையும் கூப்பிடக் கூடிவர்களாகவும் இருந்தனர்.

''ஸ்கூல்'' என்ற வார்த்தையின் மூலத்திலிருந்தே வர்க்க அதிகாரத்தின் கருவியாகக் கல்வி இருந்து வந்துள்ளது என்பது காட்டப்படுகின்றது. ஓய்வு என்று பொருள்படுகின்ற ''ஸ்கொலா'' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து இந்த வார்த்தை தோன்றியது. ஓய்வு நேரத்தைக் கொண்டிருக்கக்கூடிய உயர் வர்க்கத்தட்டைச் சேர்ந்த பிள்ளைகளுக்கே கல்வி இருந்துள்ளது என்பது வெளிப்படையான முடிவாகும். தனது வேலைகள் சகலவற்றையும் ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை அல்லது வர்க்கங்களைக் கொண்டு செய்வித்த, செய்வதற்கு தனக்கென ஒரு வேலையுமே இல்லாத சொத்துடைமை வர்க்கத்தை தவிர வேறு யாருக்கு ஓய்வு நேரம் இருந்தது? சொத்துடமை வர்க்கந்தான் ஆளும் வர்க்கமாக இருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆகவே கல்வி மிகச் சமீப காலம் வரைக்கும் ஆளும் வர்க்கத்திற்கே உரியது.

அடுத்த கேள்வி என்னவெனில், கல்வியின் நோக்கம் என்ன? என்பதாகும். அது ஆளும் வர்க்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதுடன், ஆளும் வர்க்கத்தால் மற்றைய வர்க்கங்களுக்கும் கொடுக்கப்பட்டாலும், வர்க்க ஆதிக்கம் உள்ள சமூகத்தின் அமைப்பு, கொள்கைகள், தத்துவம், ஆகியவற்றை ஆளும் வர்க்கத்தின் பிள்ளைகளுக்குப் போதிப்பதே அதன் நோக்கமாகும். ஒரு சமூகம் எந்தளவுக்கு வேலை செய்தது, ஆளும் வர்க்கத்தின் நலனுக்காக எப்படி ஒரு சமூகம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும் அவர்களுக்குப் போதிக்கப்பட்டது. மற்ற வர்க்கங்களைச் சேர்ந்த பிள்ளைகளைப் பொறுத்தவரை சர்வ வியாபகமான கல்வியின் நவீன நடைமுறையின் கீழ் வர்க்க சமூகத்தின் பண்புகளோடு அதனுடைய கூறப்படுகின்ற விடுதலை, சமத்துவம், தோழமை, ஜனநாயகம், உலகநீதி ஆகியவற்றையும் போதித்து வர்க்க ஆதிக்க சமூக அமைப்பை ஏற்றுக்கொள்ளவும், பாதுகாக்கவும் போதிக்கப்படுகின்றது.

ஆகவே வர்க்க சமுதாயத்தில் அடங்கி, ஒடுங்கி சுரண்டப்படுகின்ற மக்கள், வெகு ஜனங்கள் கல்வியின் உண்மையான வர்க்க அடிப்படையை அறிந்து கொள்வது அவசியம். இதன் மூலம் தான் மக்களின் சகல பகுதியினருக்கும் கல்வி வசதியை விஸ்தரிப்பது வர்க்க அடக்கு முறையிலிருந்து அவர்களை விடுவிக்கும் என்ற சிந்தனை வழிநடத்தப் படாமலிருக்க முடியும்.

இன்றைய கல்வியும் வர்க்க ஆட்சி தொடர்ந்திருப்பதை சகித்துக் கொள்ளும்படி அவர்களை ஏமாற்றுகிறது.

* * *

சோஷலிச சமுதாயத்தில் கல்வி

எம். கார்த்திகேசன், B. A.

வர்க்க சமுதாயத்தில் கல்வியின் அடிப்படையும், நோக்கமும் என்பதைப் பற்றி ஆராய்ந்ததின் பின்னால் 'களனி'யின் இந்த இதழில் சோஷலிச சமுதாயத்தில் கல்வியின் நிலைமையும் பாத்திரமும் என்ன? என்பதைப் பற்றி ஆராய்தல் நன்று.

ஆனால் ஒரு தெளிவான கருத்தைப் பெறுவதற்காக முதலில் சோஷலிசம் என்றால் என்ன? என்பதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இலங்கையில், சோஷலிசம் என்றால் உண்மையில் என்ன என்பது பற்றி அதிகமான குழப்பங்கள் நிலவுகின்ற காரணத்தால் இது அவசியமாகும். உற்பத்திக் கருவிகளின் மீதான அரசின் கட்டுப்பாடோ அல்லது உற்பத்திக்கருவிகளை அரசுடமையாக்குவதோ கூட சோஷலிசமாகாது. அரசு யாருடையது? என்பதே கேள்வியாகும். அரசு முதலாளித்துவ வர்க்கத்தினுடையதாக இருந்தால், அது முதலாளித்துவ சமுதாயமாகும். அரசு தொழிலாளி வர்க்கத் தினுடையதாக இருந்தால் மட்டுமே சமுதாயம் சோஷலிச சமுதாயமாக இருக்க முடியும்.

இவ்விரண்டு நிலைகளிலும் கல்வி சமுதாயத்தின் வர்க்க குணாம்சத்தில் இருந்து தனித்துவமுடையதாக இருக்காது, இருக்கவும் முடியாது. முதலாளித்துவத்தின் கீழ், முதலாளி வர்க்கத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் சாதனமாக கல்வி செயல்படுகிறது. சோஷலிசத்தின் கீழ், ஆளும் வர்க்கமாகிய தொழிலாளிவர்க்கத்தின் நலன்களுக்காக கல்வி சேவை புரிகிறது.

இந்நிலையில் சோஷலிசத்தின் எதிரியாகிய முதலாளி, அதாவது தன்னை ஜனநாயகவாதி என்று கூப்பிட விரும்புகின்ற இம் முதலாளித்துவவாதி, "அப்படியானால் பிறகு என்ன வித்தியாசம்? இவ் இருவிதமான கல்வி அமைப்பிலும் பாகுபாடு உண்டல்லவா? சோஷலிசக் கல்விக்காக வக்காலத்து வாங்கப்படுகின்ற மேன்மை எங்குள்ளது?" என்று கேட்கலாம். இதற்கான பதில் மிகவும் இலகுவானது. இது என்னிக்கையிலேயே காட்டப்படக் கூடியது. முதலாளித்துவக் கல்வி, சனத்

தொகையில் 10 வீதத்தின் நலன்களுக்காக மட்டும் சேவை செய்யும். அதே வேளையில், சோஷலிசக் கல்வி, சனத்தொகையின் 90 வீதத்தினரின் நலன்களுக்காகச் சேவை செய்கின்றது.

தொகையில் மாத்திரமன்றி தரத்திலும் சோஷலிசக் கல்வி உயர்ந்தது. பத்து வீதத்தினரின் ஆட்சி ஜனநாயகமற்றது. அடக்கு முறையானது. யுத்தங்கள் நிறைந்தது. அழிவானதும் கூட. அதே வேளையில் தொண்ணூறு வீதத்தினரின் ஆட்சி ஜனநாயகமானது. கொடுமை களிலிருந்து விடுவிப்பது. சமாதானம் நிறைந்தது. சிருஷ்டிகரமானது. சுருக்கமாகச் சொல்வதானால் இந்த இருவகைக் கல்விக்குமிடையிலான தர வித்தியாசம் குருவிச்சைக்கும் மாமரத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைப் போன்றது. இந்த வித்தியாசம் - இன்னும் சரியாகச் சொல்வதானால்- இந்த முரண்பாடு ஒவ்வொரு விஷயத்திலும் காணப்படக் கூடியதாக இருக்கின்றது.

முதலாளித்துவத்தின் கீழ் அநேகமாகத் தனியார், பொதுப் பாடசாலைகள் என இரட்டையமைப்பைக் கொண்ட பாடசாலைகள் உண்டு. தனியார் பாடசாலைகள் நல்ல வசதிகளைக் கொண்டிருப்ப தோடு பணக்காரரான ஆளும் வர்க்கத்தினரின் பிள்ளைகளுக்கு மட்டுமே உரியதாயிருக்கின்றன. பொதுப்பாடசாலைகள் கட்டிடங்கள், ஆசிரியர்கள், உபகரணங்கள், கல்வி வசதிகள் என்பவற்றைப் பொறுத்த வரையில் தனியார் பாடசாலைகளை விடத் தாழ்ந்த நிலையிலிருப்பதால் அதிகப்படியான பிள்ளைகள் இந்தத் தாழ்வான கல்வியோடு திருப்தியடைய வேண்டியிருக்கிறது. ஏழைக்கும் பணக்காரனுக்கு மிடையிலான இந்த இடைவெளி- ஆளப்படும் வர்க்கத்துக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் இடையிலான இந்த இடைவெளி- சோஷலிசத்தின் கீழ் நீக்கப்பட்டுவிடும். தனியார் பாடசாலைகள் இல்லாமல் செய்யப்படுவதோடு சகல பாடசாலைகளையும் அரசு கையேற்று நிர்வகிக்கிறது. புதிய பாடசாலைகளையும் அரசுதான் கட்டுகிறது.

மத ஸ்தாபனங்கள் பாடசாலைகளை உடமையாகக் கொண்டிருப்ப தாலும், நடாத்துவதாலும் மதத்தின் அடிப்படையிலான பாரபட்சத்திற்கு இது இன்னுமொரு மூல காரணமாகின்றது. சோஷலிசத்தின் கீழ், பாடசாலைகள் அரசுடைமையாக்கப்படுகின்ற காரணத்தால் இத்தகைய பாரபட்சங்களும் நீக்கப்படுகின்றது. அது மட்டுமல்ல மத சம்பந்தமான விவகாரங்களுக்கு அங்கு எந்தவிதமான இடமும் அளிக்கப்படுவதில்லை. இவைகள் பாடசாலைகளிலிருந்து நீக்கப்பட்டு, அவற்றிற்குத் தகுந்த இடங்களாகிய வீடோ, தேவாலயமோ, கோவிலோ அல்லது மசூதியோ எதுவானாலும் அவற்றின் எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதற்குப் பதிலாகச் சகல மாணவர்களுக்கும் சமுதாய வளர்ச்சி பற்றிய விஞ்ஞானம் போதிக்கப்படுகின்றது.

அத்துடன் தற்போதைய வர்க்க சமுதாயம் ஆண் அதிகாரம் செலுத்தும் சமுதாயம் ஆகும். எனவே கல்வியிலும் ஆண்-பெண் என்ற வேறுபாடுகள் காட்டப்படுவதோடு, பெண்பாலார்க்கு எதிரான பாரபட்சமான போக்குகளும் நிலவுகின்றன. சோஷலிசத்தின் கீழ், கூட்டுக் கல்வியமைப்பு முறை இருபாலார்க்கும் இடையிலான பாரபட்சத்திற்கு முடிவு கட்டுவதோடு கல்வியின் சகல மட்டங்களிலும் இருபாலார்க்கும் சம சந்தர்ப்பம் அளிக்கிறது.

வர்க்க சமுதாயத்தின் இன்னுமொரு அம்சம் தேசிய சிறுபான்மை இனங்களின் மீது அடக்குமுறையை மேற்கொள்கின்ற இன, மொழி, தேசிய பாரபட்சங்களாகும். சோஷலிசத்தின் கீழ் இத்தகைய பாரபட்சம் ஒழித்துக் கட்டப்படுவது மாத்திரமன்றி, அரசு கல்வி வசதி படைத்த சமூகத்தின் அல்லது இனத்தின் முன்னேறிய பிரதேசத்தின் மட்டத்தை பின் தங்கிய பிரதேசங்கள் எட்டிப் பிடிப்பதற்காக அவற்றின் கல்வியின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதில் விசேஷ கவனமும் செலுத்துகிறது.

இப்படியாக சோஷலிசம் ஒரு சர்வ வியாபகமான ஒருமுகப்படுத்தப்பட்ட, விஞ்ஞான பூர்வமான அமைப்பைக் கொண்ட கல்வியை இன, மொழி, சாதி, தேசிய அல்லது ஆண் - பெண் பாகுபாடு என்ற எவ்வித பேதமுமின்றி சகலருக்கும் சமசந்தர்ப்பங்களுடன் வழங்குகிறது.

கல்வி இளைஞர்களுக்கு மட்டுமேதான் என்ற எல்லை வரம்புகளுக்குள் உட்படுத்தப்படுவதில்லை. வயது முதிர்ந்தவர்களுக்குக் கூட கல்வி வசதி தரப்படுகின்றது. ஏனெனில் முதலாளித்துவத்தின் இன்னுமொரு சாபக்கேடான எழுத்தறிவின்மையை ஒழித்துக் கட்டுவதை தனது கடமைகளுள் ஒன்றாக சோஷலிச அரசு கையேற்கிறது.

மேற்கூறப்பட்ட மாற்றங்கள் ஆழமானவையென்றாலும், இவை மட்டும் கல்வியிலே புரட்சியை உண்டு பண்ணமாட்டா. அடிப்படையானது என்ன வெனில் கல்விக்கும் உழைப்புக்கும் இடையிலான தொடர்பேயாகும். புராதன சமுதாயத்தில் ஆதிகாலக் கம்யூனிஸ காலகட்டத்தில் வர்க்கங்கள் இருக்கவில்லை. வாழ்வதற்காக சகலரும் உழைக்க வேண்டியிருந்தது. உழைப்பது வாழ்வின் நியதியாக இருந்தது. அத்துடன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதன் மூலமோ அல்லது புத்தகங்களைப் படிப்பதன் மூலமோ வேலை செய்யப் பழகிக் கொள்ளவில்லை. வேலை செய்வதின் ஊடாகவே வேலை செய்யப் பழகினார்கள். இப்படிக் கல்வி உழைப்புடன் இணைக்கப்பட்டிருந்தது. கல்விக்கும் உழைப்புக்கும் இடையிலான இந்த இணைப்பு சமுதாயத்தில் வர்க்கங்கள் தோன்றிய போது உடைந்தது.

ஆகவே சோஷலிசத்தின் கீழ் - வர்க்கங்களற்ற சமுதாயத்தையுடைய, விஞ்ஞான பூர்வமான கம்யூனிஸத்திற்கு வழி சமைக்கும் சோஷலிசத்தின் கீழ் - கல்வி திரும்பவும் உழைப்புடன் இணைக்கப்படுகிறது. உழைப்பு கல்வியின் ஒரு முக்கியமான, அத்தியாவசியமான பகுதியாக வருகிறது. மாணவர்கள் தொழிற்சாலைகளிலும், வயல் வெளிகளிலும் வேலை செய்கிறார்கள். இது மட்டுமின்றி அவர்கள் உழைப்பில் ஈடுபடும்போது உழைப்பைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தையும் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் உழைப்பில் ஈடுபடுவதையிட்டுப் பெருமையடைகிறார்கள். இங்ஙனம் கல்வி உழைப்புடன் இணைக்கப்படுகிறது. புத்தி ஜீவிகளும் தம்மை உழைக்கும் மக்களுடன் இணைத்துக் கொள்கிறார்கள்.

எனவே முதலாளித்துவத்தின் கல்வி, வர்க்க வித்தியாசங்களையும், வர்க்க அடக்குமுறையையும் நிலைநிறுத்துவதற்காக உதவும் அதேவேளையில், சோஷலிசத்தின் கீழ் கல்வி, முதலாளித்துவ சித்தாந்தங் களின் அடிச்சுவடுகளை நீக்குவதற்காகவும் இறுதியாக வர்க்க பேதமற்ற சமுதாயத்தை நிறுவுவதற்காகவும் தனது பங்கைச் செலுத்துகிறது.

அமரர் மு.கார்த்திகேசனின் கல்வியின் முக்கியத்துவம் பற்றிய இக் கட்டுரைகள் 'களனி' ஐப்பசி-மார்கழி,1973 இதழிலும், தை-மாசி, 1974 இதழிலும் இடம் பெற்றன.

* * *

Education: The Chettiar Does Matter

M. Karthigesan

At a time when Sir Ponnambalam Ramanathan's dream of a University for Jaffna promises at long last to become reality and a minor 'battle of the sites' has developed between his twin creations, Parameshwara College and Ramanathan College. It is interesting to recall what he had to say about a sister institution, the Jaffna Hindu College. In the course of his Prize Day address in 1930 he said " I am sure that Hindu College will last for a long time, 600 years – why not 1000 years..."

A tall claim perhaps, tall even for formal education when the country that first gave the world the printing press and the examination system has itself begun to question the value and validity of institutionalized education. The claim seem even taller in the purely physical sense when old buildings, cherished in memory, are crumbling before the advance of streamlined architecture and storeyed construction.

How then did Sir Ponnambalam persuade himself to make this prediction? The provocation, or rather inspiration, was the sight of the massive pillars of the main hall at Jaffna Hindu which reminded him of those in Trirumalnayake's palace at Madurai in South India.

The question that follows naturally is who planned this hall and had it built? The answer, in the words once again of Sir Ponnambalam, is "the late Pasupathy Chettiar, one of the chief founders of this great institution."

Nevertheless, to those who think of education in terms purely of pedagogic principles or pre-eminent Principals, Pasubathy Chettiar may not figure as large as Nevins Selvadurai or A.Cumaraswamy with their academic degrees and administrative acumen. Their plea the conventional one, is that bricks and mortar alone do not make a school. Of course, they don't. But then, those who quote Jesus Christ on man's not living by bread alone, make the big mistake of taking the bread for granted, even of ignoring it. Bread does matter; and the finding of it, even when man is on the moon, is still a problem on earth.

So in education,bricks and mortar do matter though the mind decked in cap (mortar board) and gown does tend to dominate the scene. And so in the history of modern education in Jaffna as of national education in the entire country, Pasupathy Chettiar (1856-1906) does matter, specially when today, with the rush for education, the building at Jaffna Hindu as at many other schools are threatening to burst at the seams.

If the name Pasupathy invokes 'paasam' (affection), who then, it may be asked, inspired him to all this effort for education and enlightenment? It was none other than Arumuga Navalar, the northern counterpart– if not predecessor – of Anagarika Darmapala who so effectively fought the foreign attempt to mesmerize our minds and enslave our souls.

And the irony of it is that while Arumuga Navalar had his basic education at the Jaffna Central College, a school run by Christian missionaries his nephew Pasupathy Chettiar had his at the Chundikuli Seminary, the present St.John's College. Pasupathy Chettiar is pillar. That this pillar doesn't appear as massive as the ones he himself created is no fault of his. It is Lanka's that isn't as large as India or China.

M.Karthigesan wrote this article when he was the Acting Principal of Jaffna Hindu College, appreciating the contributions made by former prominent members of our society towards education.

கல்வி :
செட்டியாரும் ஒரு பொருட்டாவார்

மு. கார்த்திகேசன்

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

சேர். பொன்னம்பலம் இராமநாதன் யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக் கழகம் உருவாக வேண்டுமெனக் கண்ட கனவு நீண்டகாலத்தின் பின் ஒருவாறு நனவாகுகின்றது. அதற்கான இட அமைவு குறித்து அவரது இரட்டை நிறுவனங்களான பரமேஸ்வராக் கல்லூரிக்கும், இராமநாதன் கல்லூரிக்கும் இடையில் மோதல் ஒன்று சின்னதாய் ஏற்பட்டுள்ளதுமான இந்த நேரத்தில், அவர் ஒரு சகோதார நிறுவனமான யாழ். இந்துக்கல்லூரி பற்றிக் கூறியதை நினைவுகூருவது சுவாரசியமான தாகும். 1930ம் ஆண்டு பரிசளிப்புத் தின உரையில் அவர் கூறியதாவது: ''இந்துக்கல்லூரி மிக நெடுங்காலம் நீடித்து நிற்கும், ஒரு 600 வருடங்கள் - ஏன் 1000 வருடங்கள் வரை கூட...''

இது ஓர் உயர்ந்த பிரகடனம். உலகுக்கு அச்சு யந்திரத்தையும், பரீட்சை முறைகளையும் முதன் முதலிற் கொடுத்த நாடே நிறுவனப் படுத்தப்பட்ட கல்வியின் மதிப்பையும் பெறுமானத்தையும் பற்றி வினா எழுப்ப முனையும் நேரத்தில், இது முறைசார்ந்த கல்வியைப் பற்றிய உயர்ந்த பிரகடனமாகும். இந்தப் பிரகடனம் பௌதிக ரீதியில் மட்டும் பார்த்தாற்கூட மேலும் உயர்ந்ததாகும். காரணம், நினைவிற்போற்றி வளர்த்த பழைய கட்டிடங்கள் எல்லாம் உடைந்து நொருங்க, நேர் கோட்டிலமைந்த தொடர்மாடிக் கட்டிடங்கள் எழுந்து நிற்கின்றன.

சேர். பொன்னம்பலம் அந்த நேரத்தில் எப்படி இப்படியொரு தூரதிருஷ்டியைப் பெற்றார். தென் இந்தியாவில் மதுரையிலுள்ள திருமலை நாயக்கன் அரண்மனையின் தூண்களை நினைவூட்டுவனவாய் நின்ற யாழ். இந்துவின் பிரதான மண்டபத்தின் பெருந்தூண்கள் அவரை இப்படிக் கூற உந்துதல் கொடுத்திருக்க வேண்டும் அல்லது தூண்டியிருக்கவேண்டும்.

இயற்கையாகவே அடுத்துவரும் கேள்வி, 'இந்த மண்டபத்தைத் திட்டமிட்டுக் கட்டுவித்தவர் யார்?' என்பதாகும். அதற்குப் பதில் மீண்டும் சேர். பொன்னம்பலத்தின் வார்த்தைகளில் ''இந்த மாபெரும் நிறுவனத்தின் பிரதான நிறுவுனர்களுள் ஒருவரான அமரர் பசுபதிச் செட்டியாராவார்."

இருப்பினும், வெறுமனே ஆசிரிய ரீதியாகக் பாடவிதானக் கோட்பாடுகளின் அடிப்படையிற் சிந்திப்பவர்களுக்கு அல்லது சிறப்பு வாய்ந்த அதிபர்களின் அடிப்படையில் கல்வியைப் பார்ப்பவர்களுக்குப் பசுபதிச் செட்டியார் கல்விப் பட்டங்களையும், நிர்வாகத் திறமையையும் கொண்ட நெவின்ஸ் செல்லதுரையை அல்லது ஏ.குமாரசாமியைப் போன்ற பெரிய பிரமுகராகத் தோற்றாமல் இருக்கலாம். அவர்களுடைய வாதம் வழமையானது போல, கட்டிடங்கள் மட்டும் பாடசாலைகள் ஆகா என்பதாகலாம். மெத்தச் சரி, அது உண்மைதான். ஆனால் ''மனிதன் பாணால் (உணவால்) மட்டும் உயிர் வாழவில்லை" என யேசு கிறிஸ்து சொன்னதைத் திரும்பக் கூறுபவர்கள், பாண் (உணவு) அனைவருக்கும் இருப்பதாகக் எண்ணிக் கொள்ளும் அல்லது அதனை அலட்சியம் செய்யும் பெரும் பிழையை விடுகிறார்கள். பாண் ஒரு பொருட்டாய் அமைகிறது. அதுவும் அதைக் கண்டு பிடிப்பது. மனிதன் விண்வெளியில் நிற்கும் இந்நேரத்திலும் பாண் பூமியில் இன்னும் ஒரு பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

ஆகவே கல்வியைப் பொறுத்தும், பட்டத் தொப்பிகளுக்கும் (Mortar Board) அங்கிகளுக்கும் மதிப்பளிக்கப்பட்டு, பட்டம் பதவியுடையோரே வலம் வரும் இந்நேரத்திலும், செங்கற்களும் சாந்தும் (Bricks and Mortar) ஆனாலான கட்டிடங்கள் ஒரு பொருட்டாகவே அமைகின்றன. இவ்வாறு யாழ்ப்பாணத்தின் நவீன கல்வி வரலாற்றிற் போலவே முழு நாட்டினதும் தேசிய கல்வியிலும் எம் பசுபதிச் செட்டியார் (1859 -1906) ஒரு பொருட்டாகவே அமைகிறார். குறிப்பாக இன்று, கல்வியைப் பெற நெருக்கியடிப்பதால், ஏனைய பல பாடசாலைகளைப் போலவே யாழ் இந்துவின் கட்டிடங்களும் இடநெருக்கடியாற் பிரிந்துவிடும் போல் இருக்கும் இந்நாளில்.

பசுபதி என்ற பெயர் 'பாசம்' என்பதை உள்ளடக்குமாயின், யார் அவரை கல்விக்கும் அறிவூட்டலுக்குமான இம்முயற்சிகளையெல்லாம் எடுக்கத் தூண்டியவர் என்ற கேள்வி கேட்கப்படலாம். அவர் வேறு யாருமல்ல, எமது மனங்களைத் தம் வயப்படுத்தவும் எமது ஆத்மாக்களை அடிமை கொள்ளவும் முயன்ற அந்நிய நாட்டவரை மிகப் பயனுடைய முறையில் எதிர்த்த அநகாரிக்க தர்மபாலவின் சமகாலத்தவராக (முற்பட்ட காலத்தவராக இல்லாவிடின்) வடபகுதியில் வாழ்ந்த ஆறுமுக நாவலரேயாவார்.

இதில் அதிசய ஒற்றுமை என்னவெனில் ஆறுமுகநாவலர் தனது அடிப்படைக் கல்வியைக் கிறிஸ்தவ மிஷனரிமார் நடாத்திய யாழ். மத்திய கல்லூரியிற் பெற்ற சமயம், அவரது மருமகனாகிய பசுபதிச் செட்டியார் இப்பொழுது சென்ற் ஜோன்ஸ் கல்லூரியாக விளங்கும், அப்போதைய சுண்டிக்குளி செமினறியில் தனது கல்வியைப் பெற்றார்.

பசுபதிச் செட்டியார் ஒரு தூண் ஆவார். ஆனால் இந்தத் தூண் அவர்தானே உருவாக்கிய தூண்கள் போல் அத்தனை பெரியதல்ல. அது அவரது தவறல்ல. இது இலங்கையுடைய தூண். அது இந்தியாவையோ சீனாவையோ போல் அத்தனை பெரியதல்ல.

மு.கார்த்திகேசன், யாழ். இந்துக்கல்லூரியின் பதில் அதிபராக கடமையாற்றிய போது எமது சமூகத்தின் முன்னாள் பிரமுகர்கள் யாழ்ப்பாணத்தில் கல்வியின் மேம்பாட்டிற்காக அளித்தவற்றை தக்கமுறையில் பாராட்டி வரைந்திருக்கிறார்.

* * *

இயக்கத்தோடு இணைந்த கவிஞன்

மு. கார்த்திகேசன்

சமூகத்திற்குப் பயன்பட்ட இன்னோர் பசுபதி பற்றி.....

கொடூரமான புற்று நோய் யாழ்ப்பாணத்திலுள்ள கம்யூனிஸ்ட்டுகளின் அணியை இருமுறை ஊடுருவிச் சென்றுள்ளது. முதன் முறை அது இராமசாமி ஐயரின் உயிரை அவரது 45ம் வயதில் கவர்ந்து சென்றது. இப்பொழுது அவரிலும் இளமையான பசுபதியை அவரது 40ம் வயதில் பறித்துச் சென்றுள்ளது.

சமூக ரீதியில் பிளவுபட்டதும் பொருளாதார முறையில் தேக்க முடையதுமான இந்து சமுதாயத்தின் இரண்டு துருவங்களினின்றும் அவர்கள் ஒரே நோக்கங்கொண்டு மாற்றத்தை விரும்பும் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஈடுபடுவதற்கு நெருங்கி வந்து சேர்ந்தனர்.

தம் வாழ்நாளில் இறுதிநாள் வரை யாழ்ப்பாணத்தையும் இலங்கையையும் சாதி பேதமற்றதாகவும் முன்னேற்றமுடையதாகவும் உருவாக்கப் போராடினர். வர்க்க பேதமற்ற சமுதாயத்தாலும் கம்யூனிச அமைப்பாலுமன்றி இதனைச் செயற்படுத்த இயலாதென அவர்கள் உணர்ந்தனர்.

அவர்கள் ஆசிரியர்களாகவும் நம் நாட்டிற்குச் சிறப்பாகக் கடமையாற்றினர். இராமசாமி ஐயர் சிறந்த கணித ஆசிரியராவர். பசுபதியும் அவரையொத்த திறமையுடைய மொழி ஆசிரியராவர். எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமெனச் சொல்வார்களன்றோ! அதற்கேற்ப சமூகத்தின் இரு கண்களுக்கும் கூர்மையளித்தனர். அதுமட்டுமல்ல, அவற்றிற்கு நோக்கமும் இலட்சியமும் காட்டினர். அதனால்தான் அவர்கள் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் சேர்ந்து தம் உடல் பொருள் ஆவியில் பெரும் பங்கினை அதன் வளர்ச்சிக்கு அர்ப்பணித்தனர். அவரது கருத்துக்களையும் எண்ணங்களையும் வெளிப்படுத்தும் பொருட்டு பசுபதி பல்வேறு மேடைகளுக்கு அழைக்கப்பட்டார். அவர் பொதுவுடமை வாதியாகவும் சமுதாய சீர்திருத்தவாதியாகவும் இலக்கிய விமர்சகராகவும் பலமுறை சொற்பொழிவாற்றினார். அவர் பொருத்தமாகவும் பொறுப்புடனும் பேசினார். ஆனால், அவர் ஒரு பேச்சாளராக நினைவு கூரப்படமாட்டார். ஜனத்திரள் மத்தியில் நாவன்மையைக் காட்டியவரல்லர் பசுபதி. தனது கற்பனையினால் உந்தப்பட்டு பேனா வரிசையைக் காட்டியவரே அவர்.

கவர்ச்சியற்ற 'யாழ்ப்பாணக் கவிராயர்' என்ற புனைபெயரில் மறைந்திருந்து கவிதை மூலம் தன் உள்ளுணர்வையும் ஆழ்ந்த கருத்துக்களையும் வெளியிட்டார் பசுபதி.

ஒருமைப்பாடற்ற யாழ்ப்பாணச் சமுதாயத்திற்கு எதிராக பொது விவகாரங்களில் ஈடுபட்டு தன் கண்டனத்தைத் தெரிவிக்க முற்பட்ட அவருக்கு கவிதை கருவியாக அமைந்தது இயல்பே.

சமூகத்தின் தேவைகளை எடுத்தியம்ப முதன்முதல் எழுந்தது கவிதையே. இருள் சூழ்ந்த பண்டைக் காலத்தில் மனிதன் இயற்கைக்கு எதிராக தனித்து வாழ இயலாதவனாகவும் கூட்டு முயற்சியே அவன் வாழ்விற்கு இன்றியமையாததாகவும் இருந்தபோது, மொழி அச்சமூகத்தை கவிதை மூலமாகவே தொழில் புரியச் செய்தது. எழுத்தையோ நூலையோ அறியாத அக்காலத்தில் கவிதையே தன் ஒழுங்கான தன்மையினாலும் ஓசையினாலும் மனிதனது மனதையும் கற்பனையையும் அருட்டி மனித சமூகத்தை இயற்கைக்கு எதிராகப் போராடத் தூண்டியது.

உழைப்பின் மூலம் ஏற்பட்ட ஒற்றுமையினாலேயே கவிதை தோன்றியது. ஆனால், இன்றோ சமுதாயத்திற்கும் கவிதைக்குமோ, அன்றி உழைப்பிற்கும் கவிதைக்குமோ யாதொரு தொடர்புமின்றி இரண்டும் இரு வேறுபட்ட நிலையில் உள்ளனவாகக் கருதப்படுகின்றன. இப்பொழுது அது தனியொருவரின் தனிப்பட்ட கற்பனையினால் உருவாக்கப்படுவதாகவே கருதப்படுகிறது. எல்லாக் காலங்களிலும் எல்லா மொழிகளிலும் கவிதை எழுதப்பட்டுள்ளது. எந்தக் காலத்திலும் சமூகத்திலிருந்து அப்பாற்பட்ட உயர்நிலையிலில்லாமல், தம் கரங்களினால் படைக்கும் ஆற்றல் வாய்ந்த கூட்டு முயற்சியுடைய மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் முறையில் எழுதப்பட்ட கவிதையே உயர்ந்ததாகவும் மறத்தற்கரியதாகவும் கொள்ளப்படுகிறது. மக்கள் வாழ்விற்கு உழைப்பே நியதி. எனவே, எக்காலத்திலும் எந்நாட்டிலும் உழைப்பாளர்களே காட்சிக்கெளிய பல்லாயிரக்கணக்கான கரங்களையுடைய இவ்வுலக பிரம்மாக்களாவர்.

பாட்டாளி மக்களின் பரந்த பலம் வாய்ந்த சர்வதேச இயக்கத்தில் ஈடுபட்டு பல சேவைகள் புரிந்தார் பசுபதி. அவர் இதய பூர்வமாக இவ் இயக்கத்தில் ஈடுபட்டார். அவரது இதயத்தினின்றும் தோற்றமெடுத்த கவிதைகளே அவ்வியக்கத்திற்குக் காணிக்கையாயின!

அவரது கவிதைகள் கருத்தற்றவையாகவோ, அன்றி கேளிக்கைக் குரியவையாகவோ அமையவில்லை. அவை கருத்தும் குறிக்கோளும் உடையவையாக விளங்கின. விளங்குகின்றன. வேறு வகையாகக் கூறினால் அவரது ஏட்டிலே எடையுண்டு. எழுத்திலே ஆணியுண்டு. அவரது கவிதைகள் ஏழை மக்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்குமே எழுதப்பட்டவை. புத்துலகினைப் படைப்பதற்கு ஊக்கமளிக்கவே எழுதப்பட்டவை.

முற்போக்குக் கவிஞன் பசுபதியின் இழப்பின் போது மு.கார்த்திகேசன் 5.9.1965 அன்று எழுதியது. இக்கட்டுரை கவிஞன் பசுபதியின் நினைவு தினத்தையொட்டி 'தினக்குரல்' பத்திரிகையில் அண்மையில் மறுபிரசுரிப்பு ஆகியது.

அர்ப்பணிப்புடன் பணிபுரிந்த மார்க்ஸியவாதி

என். கே. ரகுநாதன்

யாழ் மண்ணில் மார்க்ஸியக் கருத்துக்கள் வேரூன்றத் தொடங்காத காலம். ஈ.வே.ரா.பெரியார், அண்ணாத்துரை ஆகியோரின் பகுத்தறிவு - நாஸ்திகக் கொள்கைகள் பெருமளவு பரவியிருந்தன. தமிழகத்திலிருந்து வெளிவந்த குடியரசு, திராவிட நாடு போன்ற பத்திரிகைகளும் அவ்வியக்கத்தின் இலக்கிய வெளியீடுகளும் இவற்றுக்கு அடிகோலின. தமிழகத்திலிருந்து இலங்கை வந்த சோ.இராமசாமி என்ற ஓர் இளைஞர், யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் தமிழ்ப் பண்ணை என்ற பெயரில் ஒரு புத்தக நிலையத்தை ஆரம்பித்து மேற்குறிப்பிட்ட இயக்கப் பத்திரிகைகள் புத்தகங்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். சமூக மாற்றத்தில் ஆர்வம் கொண்ட யாழ் இளைஞர்கள் சிலர் தமது வாசிப்பு வேட்கையினால் இக்கொள்கையில் மூழ்கித் திளைத்தனர்.

அந்நாட்களில், வீரகேசரிப் பத்திரிகையின் யாழ் நிருபராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த நா.செல்லத்துரை என்பவர், இக்கொள்கையை முன்னெடுத்துச் செல்வதில் மிகுந்த அக்கறை செலுத்தினார். அதன் காரணமாக இந்த இளைஞர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி, இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்க முற்பட்டார். அந்த ஆரம்பக் கூட்டத்தைத் தொடங்குவதற்கு பட்டினத்தில் வசதியான ஓர் இடம் தேவைப்பட்டது.

அப்போது, மிகவும் கஷ்டமான பின்னணியில் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டதாரியான ஓர் இளம் ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். திருமணமாகிவிட்டது. யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்குப் பின்பக்கமுள்ள விக்டோரியா வீதியில் வசதியாக அமைந்தவொரு வீட்டில் அவர் குடியிருந்தார். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கம்யூனிஸக் கொள்கையிலும் இறுக்கமான பற்றுக்கொண்டு, சமூக முன்னேற்ற நடவடிக்கைகளிலும் பங்குபற்றிக் கொண்டிருந்தார். குறிப்பாக இளைஞர்களின்

முன்னேற்றச் செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டு உழைத்தார். அவர்தான் தோழர் மு.கார்த்திகேசன். செல்லத்துரை அவருடைய இல்லத்திலேயே இலங்கை தி.மு.க. அங்குரார்ப்பணக் கூட்டத்தை நடத்துவதற்கு ஒழுங்கு செய்தார். இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. செல்லத்துரை செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். கழகத்தில் இளைஞர்களான டொமினிக் ஜீவா, டானியல், கவிஞர் பசுபதி ஆகியோரும் நானும் இணைந்து பணியாற்றினோம்.

இரண்டொரு வருடங்கள்தான் தி.மு.க.வின் பெயர் அடிபட்டது. வட இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி வேரூன்றி சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதும் தி.மு.க. இருந்த இடம் தெரியாமலே மறைந்துவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி என்றால் தொழிற்சங்கப் போராட்டம், முதலாளி வர்க்கத்துக்கெதிரான நடவடிக்கைகள் மற்றும் பயங்கரவாத நிகழ்வுகள் என்றுதான் ஆரம்ப காலத்தில் சாதாரண மக்களிடம் எண்ணங்கள் பரவியிருந்தன. இதன் காரணமாக, கம்யூனிஸ்ட் எனப்படுபவன் மிறாய்ப் பானவனாகவும், கடும் போக்குடையவனாகவும், விரோதச் செயல்களில் ஈடுபடுபவனாகவும் இருப்பான் என்பது பொதுவான கணிப்பீடு. உண்மையில் மக்களைச் சுரண்டி வாழ்பவர்களே இத்தகைய கருத்துக்களைப் பரப்பியவர்களாவர்.

இந்த அடிப்படையில் தோழர் கார்த்திகேசனை அணுகுபவர்கள் பெரும் ஆச்சரியத்துக்குள்ளாவர். காரணம், கார்த்திகேசன் மிகவும் சாதுவான போக்குடையவர். மற்றவர்களின் பிரச்சினைகளை அணுகுவதில் நிதானப் போக்குடையவர். எந்நேரமும் சிரித்த முகம். நண்பர்களாயிருந்தாலென்ன, உதவிகோரிவரும் புதியவர்களாயிருந்தா லென்ன அவர்களை உபசரிப்பதில் அவரும் அவருடன் இணைந்து துணைவியாரும் பெரும் கரிசனை காட்டுவார்கள். அப்படியான ஒரு குடும்பத்தை மிக அரிதாகவே காணமுடியும்.

யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் தாண்டவமாடிய சாதிக்கொடுமை காரணமாக, வடபுலத்தின் பல பகுதிகளிலும் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் துளிர்த்தெழுந்த இளைஞர்கள் ஒன்றுகூடி, இதற்கு ஒரு விடிவு காண்பதற்காக ஓர் அமைப்பினை உருவாக்கினர். இந்த இளைஞர்கள் எம்.சி.சுப்பிரமணியம், எஸ்.ஆர்.ஜேக்கப் காந்தி, யோவேல் போல், ஜி.நல்லையா என்ற வரிசையில் அமைந்தனர். அமைப்பு பட்டினத்தில் அமைந்திருக்க வேண்டுமென்ற நோக்கத்தாலும் முதன்மை இளைஞர் எம்.சி. சுப்பிரமணியம் பட்டினத்தில் வாழ்ந்தமையாலும் யாழ்ப்பாணம் ஆரியகுளப் பகுதியில் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை நிறுவித் தொழிற்பட்டனர்.

மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பும் முக்கிய இடம் பெற்ற ஒரு கொள்கைப் பிரகடனமாகும். இதனால் மேற்குறிப்பிட்ட இளைஞர்கள் காந்தியின் வழியில் தமது பிரசாரத்தை மேற்கொண்டனர்.

உதாரணமாக, எஸ்.ஆர்.ஜேக்கப் என்ற இளைஞர், தன் பெயருடன் காந்தியின் பெயரையும் இணைத்து ஜேக்கப் காந்தி என்று பெயர் சூட்டிக்கொண்டார். அதேவேளை மகாத்மாவின் சத்தியாக்கிரக வழிக்கு எதிராக, சுபாஸ் சந்திரபோஸ் என்ற மாவீரர், தீவிரவாதப் போக்கில் படை நடத்தினார். சாதியடக்கு முறைக்கு எதிராக தீவிரப்போக்கு தவிர்க்க முடியாது என்பதை உணர்ந்தோ என்னவோ, சந்திரபோஸுக்குத் தலைவணங்கி எம்.சி.சுப்பிரமணியம் தனக்குப் பிறந்த முதல் மகனுக்கு சுபாஸ் சந்திரபோஸ் என்று பெயர் சூட்டி மனநிறைவடைந்தார். இந்நிகழ்வுகள சாதியடக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த மேற்கூறப்பட்ட இளைஞர்களின் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக அமைநதன.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் என்ற அமைப்பின் செயற்பாடுகளும், விரிவாக்கமும் எதிர்பார்த்த குறிக்கோளை அமைவதற்குரிய பலனைத் தரவில்லை. வதிரி, பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி போன்ற பல இடங்களில் மேற்படி சங்கத்தின் விளைவாக வெவ்வேறு பெயர்களில் பல சங்கங்கள் அமைக்கப்பெற்று இயங்கி வந்தாலும் அவை, ஓர் ஊர்ச்சங்கம், அல்லது வாசிகசாலை என்ற அளவிலேயே இயங்கிவந்தன. இதன் காரணமாக மிகவும் பரந்த மட்டத்திலும் ஒன்றிணைந்த செயற்பாட்டளவிலும் ஒரு இயக்கத்தை அமைக்க வேண்டிய நிலைப்பாடு ஏற்பட்டது. மேலே குறிப்பிட்ட எம்.சி.சுப்பிரமணியம், ஜேக்கப் காந்தி, யோவேல் போல், ஜி.நல்லையா போன்ற முன்னணி இளைஞர்களுடன் புதிய தலைமுறை இளைஞர்களும் சேர்நது 'அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை' என்ற விரிவான இயக்கத்தை ஆரம்பித்தனர். எம்.சி.சுப்பரமணியம் தலைவராகப் பொறுப்பேற்றார். புத்திளைஞர்களான கே.வி.செல்வரத்தினம், கவிஞர் பசுபதி இருவரும் இணைச் செயலாளர்களாகப் பணியாற்றினர்.

எவ்வளவோ சிறப்புக்களைப் பெற்றிருந்தபோதும், தமிழனிடம் நிலை கொண்டிருந்த சாதிவெறி மிகவும் இழிவானது என்பது உலகறிந்த விடயம். இந்த இழிதகமையின் விளைவாக வில்லூன்றி மயானத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட கொலைச் சம்பவமொன்று நடைபெற்றது. ஒரு பிரேதத்தைச் சுட்டெரிக்கச் சென்றவர்கள் மீது, சாதி வெறியர்கள் சுட்டதனால், முதலி சின்னத்தம்பி என்ற ஓர் இளம் குடும்பஸ்தர் பலியானார். உயிர் பிரிந்தபின் அந்த உடலைச் சுட்டெரிப்பதற்கே சுடுகாட்டில் இடம் தராத மேலான நாகரிகம்தான் தமிழனின் நாகரிகம்.

சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கம் செயற்பட்ட காலத்தில், அதாவது 1945ம் ஆண்டில்தான் இந்தக் கொடூரச் சம்பவம் நிகழ்ந்தது. இதனால் எழுச்சியுற்ற சிறுபான்மைத் தமிழர் மகாசபையைச் சேர்ந்த தலைவர்களும், இளைஞர்களும் தமது விடுதலைப் போராட்டப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

அந்தக் காலத்தில்தான், கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக்கிளை ஆரம்பிக்கப்பட்ட வேளையில், பல்கலைக்கழகத்திலிருந்து திரும்பிய தோழர் கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் இயக்கப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தி.மு.கழகம் தொடங்கப்பட்டு, அது இயங்கமுடியாமல் நின்று போகவே, இளைஞர்கள் அனைவரும் காத்தியின் வழிகாட்டலில் இயங்கத்தொடங்கினர்.

வில்லூன்றிப் படுகொலையினால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தன் பணிகளை மேலும் விரிவுபடுத்தி செயற்படத் தொடங்கியது. முதலில் மகாத்மா காந்தியின் சாத்வீக வழிகளிலும், பின் சுபாஸ் சந்திபோஸின் தீவிரவாதப் போக்கிலும் நம்பிக்கை கொண்டு இயங்கிய எம்.சி.சுப்பிரமணியத்துக்கு அப்பாதைகள் பயன்படாத காரணத்தால் தோழர் கார்த்திகேசனின் வழிகாட்டலில் முன்னேற்றத்தைக் கண்டார். கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, சிறுபான்மைத் தமிழர்களின் விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். சிறுபான்மைத் தமிழர் மகாசபையே கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் உபஸ்தாபனமாக இயங்கத் தொடங்கியது. இதன் காரணமாக, புரட்சியை ஏற்றுக்கொள்ளாத மிதவாதிகளான ஜேக்கப் காந்தி, யோவேல் போல், ஜி.நல்லையா, கே.வி.செல்வரத்தினம் போன்றோர் மகாசபையிலிருந்து விலகிச் சென்றனர். எம்.சி. தலைவராகவும், பசுபதி செயலாளராகவும் மற்றும் துடிப்பான இளைஞர்கள் பங்காளிகளாகவும் இணைந்து மகாசபைப் பணிகளை முன்னெடுத்துச் சென்றனர். தோழர் கார்த்திகேசன்தான் இதற்கு மூலகாரணமாக இருந்து செயற்பட்டார்.

சுடுகாட்டுப் பிரச்சினைதான் முதலில் தோன்றியது. சாதி வெறியர்களான பிற்போக்குவாதிகள்தான் இதற்கு வழிகோலினர். அதனைத் தொடர்ந்து பல போராட்டங்கள் வெடித்தன.

ஆலயப் பிரவேசம்
தேனீர் கடைப்பிரவேசம்
பாடசாலை அனுமதி
அத்துடன் சுடுகாட்டுப் பிரவேசம்

என்று வடமாநிலத்தின் பல பிரதேசங்களிலும் போராட்டங்கள் நடைபெற்றன.

நல்லூர் கந்தசாமி கோயில், பன்றித்தலைச்சி அம்மன் கோயில், இறுதியாக மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் என்று மேலும் பல கோயில்களில் அகிம்சைப் போராட்டம் நடத்தி அவ்வாலயங்களை சகல மக்களும் வணங்குவதற்காக திறந்துவைத்தார்கள்.

ஒரு தாழ்த்தப்பட்டவன் தேனீர்க் கடைக்கு வெளியே நின்றுதான், அதுவும் கறள் பேணியில் தேனீர் குடிப்பது நடைமுறையாக இருந்தது. மகாசபைப் போராட்டத்தினால் சகல கடைகளிலும் உள்ளே சென்று இருக்கைகளில் அமர்ந்து உணவு உண்ணவும், தேநீர் அருந்தவும் வழி பிறந்தது.

பெரிய பாடசாலைகளில் சிறுபான்மைத் தமிழர்களின் பிள்ளைகள் படிக்க முடியாது. ஊரிலுள்ள சிறிய பாடசாலைகளில் ஐந்தாம் வகுப்புவரைதான் படிப்பு. மகாசபையின் செயற்பாடுகளால், தற்போது எல்லாப் பாடசாலைகளிலும் எல்லாப் பிள்ளைகளும் படிக்கலாம்.

முதலி சின்னத்தம்பி சுட்டுக்கொலை செய்யப்பட்ட வில்லூன்றிச் சுடலைச் சம்பவத்தின் பின், அந்தக் கொடுமையை எதிர்த்துப் போராடி மூன்று ஆண்டுகளின் பின்பு, அச்சுடலையில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிணங்களும் எரிக்கப்படத் தொடங்கின. இப்போது, எந்தச் சுடலையிலும் யாரும் தமது பிணங்களை எரிக்கலாம். புதைக்கலாம்.

எம். சி. சுப்பிரமணியம் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவராக மட்டும் இருந்து பணியாற்றியிருந்தால் இத்தனை சமூக மாற்றங்களும் ஏற்பட்டிருக்குமா? என்பது கேள்விக்குரிய விடயம். அவர் ஒரு கம்யூனிஸ்டாக இருந்தமையால்தான் கொடிய சாதி வெறிபிடித்த யாழ் மண்ணில் இத்தனை சாதனைகளையும் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது.

கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுகள் தீர்மானங்களோடு மட்டும் நின்றவரல்லர். எந்தப் போராட்டங்கள் நடந்தாலும் அந்தப் போராட்டத் தோழர்களுக்கு உற்ற வழிகாட்டியாகச் செயற்பட்டு, களத்திலுமிறங்கிப் போராடியவராவர்.

கம்யூனிஸ சித்தாந்தம் என்றால், தொழிலாளர் விவசாயிகளின் உரிமைப்போராட்டம், முதலாளி வர்க்கத்துக்கெதிரான நடவடிக்கைகள் என்று பொதுவான ஒரு கண்ணோட்டம் உண்டு. மார்க்ஸும், வர்க்க பேதமற்ற, ஏற்றத்தாழ்வற்ற ஒரு உலகைப் படைக்கவே தனது சித்தாந்தத்தை உருவாக்கினார். அந்த வழியில் ஒரு சமத்துவ உலகுக்கு எதிரான கருத்துக்கள், கொள்கைகள், செயற்பாடுகள் இருக்கும் ஒரு தேசத்தில் அல்லது நாட்டில் நிலவும் ஏற்றத் தாழ்வுக்கெதிராகச் செயற்பட்டு சமாதான சகவாழ்வை உண்டாக்குவதே முக்கியமாகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னெடுப்பில், பஸ் தொழிலாளர் போராட்டம், சுருட்டுத் தொழிலாளர் போராட்டம், மட்பாண்டத் தொழிலாளர் போராட்டம், சீமெந்துத் தொழிலாளர் போராட்டம் எனப் பல போராட்டங்கள் வெடித்து, வெற்றிகளையும் ஈட்டித் தந்துள்ளன. அதேவேளை இந்த மண்ணில் தீண்டாமை எனும் கொடிய நோய் வேரூன்றியிருந்தமை காரணமாக, அந்தத் தீண்டாமைக்கெதிரான போராட்டங்களையே கம்யூனிஸ்ட் கட்சி முன்னின்று நடத்தி, பெரும் வெற்றிகளையும் சாதித்துள்ளனது. இந்தவகையில், யாழ்ப்பாணக் கம்யூனிஸ்ட் கட்சியின் பங்களிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது.

யாழ்ப்பாணத்தில் நிறுவனரீதியாக கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப் படுவதற்கு முன் தோழர் காத்தி அவ்வியக்கத்தை தனியாக இருந்து வளர்த்தெடுத்தார் என்று முன்பு கூறப்பட்டுள்ளது. நிறுவனமாகக் கட்சி ஆரம்பித்தபின் புத்திஜீவிகளும் சாதாரண மக்களுமாகப் பல தலைவர்கள் இப்பணியில் ஈடுபட்டுழைத்தனர். அ.வைத்திலிங்கம், பொன். கந்தையா, அ.ராமசாமி ஐயர், ஐ.ஆர்.அரியரத்தினம், டாக்டர் சீனிவாசகம் ஆர்.ஆர்.பூபாலசிங்கம், டொமினிக் ஜீவா, டானியல், வி.ஏ.கந்தசாமி என்று பலரைக் குறிப்பிடலாம். கட்சித் தோழர்களாக இருந்தாலென்ன சிலருக்கு சில குடும்பச் சுமைகள், பொருளாதார நெருக்கடிகள் இருக்குமாயின் அவர்களின் செயற்பாடுகளில் சில பின்னடைவுகள் தோன்றக்கூடும். ஆனால் கார்த்திகேசன், தன் இறுதிக் காலம்வரை தூய்மையான அர்ப்பணிப்போடு தன்னைக் கட்சிப்பணிகளில் ஈடுபடுத்தி வாழ்ந்த புனிதர் ஆவார்.

அவர் நாமம், மார்க்ஸியவாதிகளிடையில் மட்டுமல்ல, சாதாரண மனிதரிடையிலும் என்றும் வாழும்!

என். கே. ரகுநாதன்,
நீண்டகாலக் கட்சித் தோழரும்,
தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமுக்கியஸ்தருமாவர்.

குறளும் கறளும்

யாழ்ப்பாணத்தில் தேநீர்க்கடைப் பிரவேசம் நடைபெற்ற நாட்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென உணவகங்களில் பழைய கறள் பேணிகளில் தேநீர் வழங்கினார்கள் இதை

''குறள் படித்த தமிழனுக்கு
கறள் படிந்த பேணியா?" என எதுகை மோனையுடன் குத்தலாகச் சொன்னார் கார்த்திகேசன்.

கார்த்தியின் கீர்த்திக்கு வழிவகுத்த வாலாம்பிகை

வீ. சின்னத்தம்பி

திருமதி வாலாம்பிகை, கார்த்திகேசன் என்ற கம்யூனிஸ்ட்டைக் கைபிடித்த காலம்முதல் ஒரு பூரண கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்த உத்தமப் பெண்மணி ஆவார். கார்த்திகேசனின் வாழ்க்கையும் வாலாம்பிகை கார்த்திகேசனின் வாழ்க்கையும் ஒன்றுதான். அவற்றைத் தனித்தனியே பிரித்துப் பார்க்க முடியாது.

கம்யூனிஸ்ட் என்ற முறையில் கார்த்திகேசன் ஒரு பூரணமானதோர் வாழ்க்கை வாழ உதவியவர் திருமதி வாலாம்பிகை ஆவார். கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு சில தேர்தல் கூட்டங்களில் உரையாற்றியது தவிர, அவரது சகல ஈடுபாடும் ஒத்துழைப்பும் பெருமளவில் எப்போதும் பின்னணியில் இருந்ததேயல்லாது, அவர் நேரடியாக அரசியல் வேலைகளில் ஈடுபட வில்லை. ஆனால் அவருடைய குடும்ப வாழ்வின் ஒவ்வொரு கணமும் அரசியல் மூச்சுப்பட்டதாகவே அமைந்தது.

40-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கார்த்திகேசனின் துணைவியாகியது முதல் அக்காலக் கம்யூனிஸ்ட்டுக்கள் அனுபவித்த அத்தனை இடர்களையும் அவரும் அனுபவித்தார். இறக்கும்போதும் சொந்த வீடற்றவராகவும், நகைநட்டு அற்றவராகவுமே அவர் இருந்தார்.

35 ஆண்டுகளாக அவர் வீட்டுப் பாரத்தைப் பொறுப்பேற்று நடாத்தினார். கிடைத்த வருமானத்தைக் கொண்டு அவர் குடும்ப நிர்வாகத்தைத் திறம்படச் செய்தார். ஓய்வு ஒழிச்சல் இல்லாது வந்து கொண்டிருந்த விருந்தினர்களை உபசரித்தல், பிள்ளைகளை வளர்த்து கல்வி அளித்தல், நிதி நிலைமைக்கு ஏற்ப பொருள்களை வாங்கிக் குடும்பத்தை நடாத்துதல், இடையிடையே எதிர்பாராமல் வரும் அரசியல் விருந்தினர்களுக்கு சில சந்தர்ப்பங்களில் தங்கவும்



கார்த்திகேசன் அவரது
“Poor - rose” உடன்

இடவசதி செய்து கொடுத்து உபசரித்தல் ஆகிய அனைத்தையும் அவரே கவனித்தார். கார்த்திகேசனின் குடும்ப வாழ்க்கையின் சிறப்பு அனைத்தும் திருமதி வாலாம்பிகைக்கே உரியதாகும்.

திருமதி வாலாம்பிகை இன, மத, சாதி பேதங்களைப் பாராட்டாத ஒரு பெண்மணி ஆவார். இன்னும் கூறுவதென்றால், ஏழைகள், தொழிலாளர்கள், அயலவர் ஆகியோர் மேல் அவர் அபரிதமான அன்பும், கருணையும் காட்டினார். அவர்களுடைய குழந்தைகளையும் அன்புடன் கவனித்தார். சகலவிதமான தொழில்பார்த்த வண்ணார்பண்ணை அயலவர்கள் அனைவரும் ''மாஸ்டரின் மனைவி''யென அழைத்து அவர்மேல் மிகுந்த அன்பு பாராட்டுமளவிற்கு அயலவர்கள் மனதில் இடம்பிடித்தவர்.

தனது இறுக்கமான பொருளாதார நிலையிலும் கஷ்டப்பட்ட உறவினரின் பிள்ளைகள் பலரைத் தம்முடன் வைத்து வளர்த்துக் கல்வியூட்டியதுடன், பல ஏழைப்பிள்ளைகளுக்கு கல்விக்காகப் பணஉதவியும் புரிந்தார். நோயுற்ற இறுதிக் காலத்தில் கூட அவர்களுடைய 1943-ம், 44-ம் ஆண்டுகளின் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க்கையை நினைவூட்டிய போதெல்லாம் அவருடைய கண்களில் பிரகாசமான ஒளி வீசியதை அவதானிக்க முடிந்தது.

கார்த்திகேசன் மாஸ்டரைப் போலவே நகைச்சுவையாகப் பேசும் திறமை படைத்தவர் திருமதி வாலாம்பிகை. போலிகளைக் கண்டுணரும் திறமையும் திருமதி வாலாம்பிகையிடம் அமைந்திருந்தது. இருப்பினும் கட்டுப்பாடு கருதி தனது கருத்துக்களைக் கட்டுப்படுத்திக் கொண்ட பெண்மணி ஆவார்.

* *கம்யூனிஸ இயக்க வளர்ச்சியில் தமிழ்ப்பெண்கள் எனும் கட்டுரைத் தொகுப்பில் வெளிவந்த ஒரு பகுதி. காலஞ் சென்ற வீ.சின்னத்தம்பி என்பவரால் முதன் முதலில் அகில உலகப் பெண்கள் தினத்தையொட்டி கட்டுரையொன்று வரையப்பட்டு, தினக்குரல் பத்திரிகையில் வெளியானதின் ஒரு பகுதியேயாகும். மு. கார்த்திகேசனின் மகளும் காலஞ் சென்ற வீ.சின்னத்தம்பியின் மனைவியுமான ராணி சின்னத்தம்பியின் இணக்கத்துடன் சில விபரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.*

* * *

Karthigesan, My Guru

C. S. Arunachalam

I consider it a privilege to have been asked to contribute to the memoir to be published in memory of one of my Gurus, late M Karthigesan, a renowned teacher of the English Language and a sincere friend of the common man. To understand Karthigesan one must go back to his times when caste system and class supremacy was hurting the common man and hindering his progress in Sri Lanka especially among the Tamil community. His father wanted him to join the Civil Service after graduation, and sent him money from Malaysia to apply for the Civil Service Examination, but Karthigesan was not attracted to the Civil Service, so he spent the money on party work, as he once told me.

A few referred to him as Communist Karthigesan since there was also Vidvan Karthigesan, a great scholar in Tamil Language, who was teaching at Jaffna Hindu College during his period. They were the teachers who produced scholars like Kailasapathy, Thananyarajasingam and Selvanayagam, to mention a few, who became Lecturers and Professors of the University in Sri Lanka. It is very sad that these people who could have written volumes about Karthigesan were snatched away from our midst early in their lives.

Mr. Karthigesan was, for a long time, the Secretary of the Jaffna branch of the Communist Party in Sri Lanka. Mr. A Vaithilingam, one of the Tripos (brother of Mr. Saravanamuthu,

Science teacher and Mr. Arunachalam), also a teacher of Jaffna Hindu College, was the President. Mr Karthigesan was a sincere gentleman and steadfastly adhered and committed to his principles. He believed in the Communist System of Government and admired Stalin. One must judge him by his time. He could not tolerate the corruption in public life and dreamed of a society where all could have economic freedom. He contested the 10th ward of the Jaffna Municipality and won the seat only on the third time. He told me that he lost his deposit at the first election, which was paid by pawning his wife's "Thali Koddi". Those were times when some people voted for ten rupees and a bottle of arrack. Karthigesan never pursuaded that approach to get votes, rather stuck to his principles.

He led a simple life and moved with the common man. He felt their suffering and was convinced that the political and social system should be changed. He entered politics not because he wanted to be a politician but to change the prevailing system that was oppressive. He worked very hard with people like Peter Kenumen, Secretary of the Communist Party of Sri Lanka, Dr S. A Wickramasinghe, the President of the Communist Party, and Watson Fernando, UC Member of Moratuwa. All three addressed the election meetings held in support of Mr Karthigesan. This is the respect he had in the party hierarchy.

For some time he was the Honorary Editor of the "Forward", an organ of the Communist Party. He used to travel to Colombo by night mail train on Friday and return by night mail train on Sunday from Colombo, and thus for some time he spent every week end in Colombo to edit the paper. Economist Pon Kandiah, who became a member of the Parliament to represent Point Pedro, was another great friend of Karthigesan who worked with him to build the Communist Party in Sri Lanka. Both these men, like a few others, believed that communal politics would ruin the Tamil People. Mention must be made of Mr. V Ponnambalam and M. C. Subramaniam.

Karthigesan was a very good debater and an orator. Once he debated with a leading advocate of the Supreme Court of Sri Lanka and a Member of Parliament. Teachers who witnessed the debate applauded that debate as one where Mr Karthigesan was at his best. Significance lies in that the advocate who debated was a great English Scholar and a great orator of that time. Mr Karthigesan helped many teachers and others, who appeared for London Degree Examinations, with their English Language as a subject.

Many who did not like Communism and Communists, loved Mr Karthigesan and respected him as a gentleman in every sense. When he was elected to the 10th ward at the Municipal Election, as Senior Prefect of Jaffna Hindu College, I requested permission from the Principal Mr Asaipillai to have a meeting to honour Karthigesan. He gave his blessings but wanted me to also get permission from late Muthusami, retired Crown Proctor and President of the Hindu Board. It was with great trepidation that I went to his house, but to my surprise, I found that Muthusami welcomed the idea and granted us, the students of Jaffna Hindu College, permission to have the meeting to honour Mr Karthigesan. He was taken in procession around the 10th ward before the meeting commenced. He was garlanded by many household. The college also granted permission to Karthigesan to address the student assembly at the prayer hall, on the day Stalin, the Supreme Soviet Leader , passed away. That was the respect he earned over the years. That was the best speech I had ever heard in my life.

Inspite of all his political activities he had never neglected his duty as a teacher at Jaffna Hindu college. He was the house master of Selvathurai House and had never failed to come to the grounds to assist and encourage the students. He was a walking encyclopedia and a dictionary. So profound was his knowledge that teachers used to clarify their doubts on words and phrases. During that time there was no

one to excel him in current affairs. He used to be well informed and one could check the latest cricket score from him. Varied was his interest.

Mr. Karthigesan was a man who sacrified his income, his time and energy, and believed that the society should be changed for the good of the man. His wife was a soft spoken and kind lady, who had to undergo a lot of hardship to bring up the children, but she was a great support for him. Indeed she was an embodiment of a true wife. Once he said that the piece of land he would like to own is the 6 feet by 4 feet plot of land at Kombaiyan Manal (Cemetery in Jaffna Town) where his son was buried. Such was his grief when he lost his son, Jeevananthan.

His greatest achievement was that he produced many students who also believed that society must be fair by all men and women irrespective of caste and creed. I am privileged to have been one of his students at Jaffna Hindu College.

• **C. S. Arunachalam** *BA LLB,*
Attorney at Law,
Consultant Parliamentary Counsel,
Commonwealth of Dominica.
He was a student, who lived in the neighbourhood.

* * *

My Remembrances of a Gentleman

P. Ramanathan

My initial contact with Mr. M. Karthigesan was in the year 1946 when I re-enrolled myself with Jaffna Hindu College, my Alma Mater, where I had had my entire education earlier. I had "exiled" myself for a one year stint at Kokuvil Hindu College primarily to study Latin, which was dropped from the Jaffna Hindu curriculum for lack of tutors. It was by chance that I was assigned to the Senior Form of which Mr. M.Karthigesan was Class Master. He had joined JHC when I was on "exile" so I did not know much about him. I was, however, glad to fall under the care of someone whose reputation as an excellent English language tutor preceeded him. Jaffna Hindu had a number of good English teachers, who were known for their mastery of English but Mr. Karthigesan's reputation of being one of the few Tamils who had obtained an English Honours degree from the University of London impressed me. Clad in western attire and armed with the inevitable "toppee", his slim figure - was a familiar sight in the College portals. His Students found it hard to associate his soft spoken ways with his political thinking. One of his finer qualities was that he never made any attempt to either indoctrinate or discuss socialist politics with his students. Unfortunately I did not spend much time in the Senior form as I had to move on. However during the short time I was in his class I found that he was able to stimulate interest in the study of English and English Literature – which stood in good stead during my professional career in later life.

Be that as it may, my association with Communist Karthi, as he was affectionately known to his colleagues even though as students we dared not call him thus, did not end there. In



பல்கலைக்கழக கல்லூரியின்
கிரிக்கட் அணியில் மு. கார்த்திகேசன்

1947 I made entry into the College Cricket XI and it is on the playing fields of Jaffna Hindu that I came to really know him. The informal atmosphere of the playing field made it easier for me to communicate. Very often he used to be on the field to coach us and help us practice. As opening bat for the team I was fond of playing fast bowling but had a weakness for slow bowling. Communist Karthi was, in his time, a fine spin bowler and devoted much of his time sending down slow ones to get me play them confidently. It was Communist Karthi who taught me how to recognize "in swingers" and "out swingers" from the arm action of fast bowlers.

Everyone knew that Communist Karthi was a card-carrying founder member of the Ceylon Communist Party but few knew that he was also the first Editor of the party newspaper "Forward". He was the silent voice of the party and not the slogan-shouting fiery orator that his party colleagues were well known for".

His active participation in the local political arena was well known even though, I had left school by that time. When he first contested the Vannarponnai Ward in the Jaffna Municipal elections, he was unsuccessful and I remember his bitter disappointment. His subsequent successes will however confirm the faith he had in himself and his political beliefs – honest and sincere.

Years later in 1960s, when I was in the Foreign Service of the Government of Ceylon, we came to know that Mr. Karthigesan was on a brief visit to Moscow as a guest of the Soviet Government. When I invited him to have dinner with us he readily agreed. As his former student, my wife and I were privileged he found time to be with us. It was a long time since my days at Jaffna Hindu and we reminisced of old times back home with nostalgia. That was the last time I saw him. Age had taken a heavy toll on his health but I could still recollect his once familiar voice speaking impeccable English in the classroom, in the political arena or at home.

• **P. Ramanathan,**
Student JHC 1938 – 1949, who lives in Toronto, Ontario, Canada

Spin in Sport .....and Sport in Spin

M. Karthigesan

This article presents the pun of M. Karthigesan to spin the sports and world politics. M.K. was also a sportsman and at times a commentator.

Commenting in the Ceylon Daily News on the recent world table tennis championship, Stanley Joseph, a Sri Lanka player who took part in the Afro – Asian tournament held in Peking, said of Hsi En-ting, the present world champion, that he uses as many as eleven kinds of spin on the ball, the puny ping – pong ball.

The earth, not so spherical , is a much larger ball. For that reason, it is not so amenable to spin. Hitherto, it had reacted only to two kinds of spin –physically, from west to east, with Japan as the land of the rising sun and politically from east to west, with the UN headquarters in New York as the modern hub of world politics.

The westward political direction prevailed for centuries with other capitals – Vienna, Paris, Geneva and London– hosting international conferences and deciding the destiny of the world. This direction was reinforced by the positions taken by certain V.V.I.P's. Till the outbreak of world War II ,

the President of the U.S.A never moved out of his country, and leaders from other countries had to move west ward to meet him. Also, till recently His Holiness the pope never stirred out of the Vatican, and people in the East had to travel westward to Rome to obtain his blessings.

Of late, however, both the pope and the President of the U.S.A. have been moving about in the world quite a lot, the former even coming down to our airport at Katunayake and the latter to places not so far from Vietnam.

But there is one leader who for more than a decade has not moved about, who seems to have decided to stay put. That is China's Chairman, Mao Tse – tung.

Consequently, for some time now, personalities and Presidents. Politicians and Prime Ministers –Nixon , Tanaka, Haile Selassie, Mrs. Bandaranaike and many others–have had to move to Peking to meet him.

That is indeed a new a direction, the eastward direction, in world politics. Surprising–but not so surprising when one notes that all these leaders are only going back to the country that, with the mariner's compass, gave the world its first awakening to the sense of international direction.

Where, one might ask, was this change of political direction – no longer westward but eastward – first manifested. On a field of battle? No. At an international conference? No. Where then? On a mere table at one end of which stood an American and at the other, a Chinese.

And were they armed? Yes, they were.... fully armed...with ping pong racquets..and on the ball there was spin, the other way spin.

M.Karthigesan wrote for the Tennis Souvenir issued by the Jaffna United Club to commemorate the third test between Sri Lanka and the People's Republic of China.

விளையாட்டிற் சுழற்சியும்..., சுழலும் விளையாட்டும்

மு. கார்த்திகேசன்

தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்ட இக்கட்டுரையில் மு.கா.வின் சொல்வீச்சிலே விளையாட்டும், உலக அரசியலும் சுழல்கின்றன. மு.கா. ஒரு விளையாட்டுத்துறை வீரனும், விளையாட்டு விமர்சகரும் கூட.

பீக்கிங்கில் நடைபெற்ற ஆபிரிக்க-ஆசிய மேசைப் பந்தாட்டத்திற் பங்குபற்றிய இலங்கை விளையாட்டு வீரரான ஸ்ரான்லி ஜோசெப் சமீபத்தில் உலக மேசைப் பந்தாட்ட வெற்றிக் கிண்ணப் போட்டி பற்றி எழுதியபோது உலக மேசைப் பந்தாட்டச் சம்பியனான ஷி என்-திங் (Hsi En-ting) இந்தச் சின்னஞ்சிறு பிங்-பொங் பந்தில் பதினொரு விதமான சுழற்சிகளை ஏற்படுத்துகிறார் என்று குறிப்பிட்டிருந்தார்.

பூமி, சரியான உருண்டை அல்லாத போதும் அது ஒரு மாபெரும் பந்து போலாகும். ஆகவே அது சுழல்வதென்பது கடினமானதொரு விடயமாகும். ஆனாலும் அது இரண்டு விதமான சுழற்சிக்கு மட்டுமே ஈடுகொடுத்துள்ளது. பௌதிக ரீதியில், ஐப்பானை சூரியனுதிக்கும் நாடாகக் கொண்டு மேற்குக் கிழக்காகவும், அரசியல் ரீதியில், நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமைப் பீடத்தை உலக அரசியலின் நவீன அச்சாணியாகக் கொண்டு கிழக்கு மேற்காகவும் சுழன்றது.

மேற்கு நோக்கிய அரசியற் போக்கு பல நூற்றாண்டுகளாக நிலவியது. இதில் வியன்னா, பாரிஸ், ஜெனிவா, லண்டன் போன்ற இதர தலைநகர்கள் சர்வதேசிய மாநாடுகளை நடாத்தி உலகின் தலைவிதியை நிர்ணயிப்பதாக இருந்தன. இந்தப் போக்கு இரண்டாம் உலக யுத்தம் வெடிக்கும்வரை ஒரு சில மிகமிக முக்கியமான பிரதிநிதிகள் பங்கேற்பதால் மேன்மேலும் உரமடைவதாய் இருந்தது. அமெரிக்க ஜனாதிபதி தனது நாட்டை விட்டு ஒருபோதும் அசையாதிருக்க, இதர நாடுகளின் தலைவர்கள் மேற்கு நோக்கி அவரைச் சென்று காண்பதாய்

இருந்தது. அத்துடன் சமீப காலம் வரை மேன்மை தங்கிய புனித போப்பாண்டவர் வத்திகானிலிருந்து அசையவே யில்லை. அவரது அருளாசியைப் பெற கிழக்கிலிருந்த மக்கள் மேற்கு நோக்கி ரோம் நகருக்குப் பயணிக்க வேண்டியிருந்தது.

ஆனால் இன்றோ, போப்பாண்டவர், அமெரிக்க ஜனாதிபதி இருவருமே மிக அதிகமாக உலகைச் சுற்றி வருகின்றனர். போப்பாண்டவர் கட்டுநாயக்காவுக்கே வருமளவுக்கும், அமெரிக்க ஜனாதிபதி வியட்நாம் வரையுமாவது போகுமளவுக்கும் அண்மைக் கடந்தகாலம் அமைந்திருந்தது

ஆனால் ஒரேயொரு தலைவர் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக அசையவே இல்லை. அவர் அசையாமலே இருக்க முடிவு செய்துவிட்டார் போலும். அவர்தான் சீனத்தலைவர் மா சே-துங்.

இதனால் கடந்த சிறிது காலமாகப் பிரமுகர்களும் ஜனாதிபதிகளும் அரசியல்வாதிகளும் பிரதமர்களும் - நிக்ஸன், தனகா, ஹெய்லிசெலாசி, திருமதி பண்டாரநாயக்கா போன்று இன்னும் பலர் - மாசேதுங்கைச் சந்திக்கப் பீக்கிங் செல்ல வேண்டியிருந்தது.

இது உண்மையிலேயே உலக அரசியலில் ஒரு புதிய போக்கு, ஒரு கிழக்குப் போக்கு. இது ஆச்சரியமானதுதான், ஆனால் உற்று நோக்கின் இது அதிகம் ஆச்சரியத்துக்குரியதல்ல. காரணம், இந்தத் தலைவர் களெல்லாம் ஒரு காலத்தில் மாலுமி திசையறிகருவி மூலம் உலகுக்கே சர்வதேசிய திசைபற்றிய அறிவை ஏற்படுத்திய ஒரு நாட்டுக்கே திரும்பச் செல்கிறார்கள்.

ஒருவர் கேட்கலாம், இந்த அரசியற் திசை மாற்றம், அதாவது இனிமேலும் மேற்கு நோக்கியதாயிராது, கிழக்க நோக்கியதாய் இருப்பது எங்கே தொடங்கியதென்று. ஒரு போர்க்களத்திலா? இல்லை. ஒரு சர்வதேச மாநாட்டிலா? இல்லை. அப்படியானால் எங்கே? ஒரு அமெரிக்க மகன் ஒரு புறமும், ஒரு சீன மகன் மறுபுறமும் நிற்கும் ஒரு வெறும் மேசையிலேயே இது தொடங்கியது.

அவர்கள் ஆயுதந் தரித்திருந்தனரா? ஆம், முற்றுமுழுதாக ஆயுதபாணி களாக... பிங்-பொங் பந்தாட்ட மட்டைகளால்.... அவர்கள் முன்பொரு புறமாய்ச் சுழன்று இப்போது மறுபுறமாய்ச் சுழலும் ஒரு பந்தின் மேலே நிற்கிறார்கள்.

★

இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியை நினைவுகூருமுகமாக யாழ்ப்பாண ஜக்கிய கழகத்தால் வெளியிடப்பட்ட டெனிஸ் நினைவு மலரிலிருந்து.

Karthigesan - A Dedicated Communist

I. R. Ariaratnam

M. Karthigesan was a pioneering leader of the Sri Lanka Communist Party, whose untimely death twenty-five years ago left a gap in the lives of many of his intimate friends who still mourn his death.

Karthigesan's parents lived in Malaysia. They were of Jaffna Tamil origin and went there to earn a living. Karthigeasan had his School education in that country and came to Ceylon, as it was known then for higher education in the University of those days. He lived in the University hostel along with his life long friends, some of whom worked together with Karthigesan to form, a few years later the Ceylon Communist Party.

The Years that Karthigesan spent at the University were striving times. The World war gripped the entire world. The Soviet Union was putting up a great fight almost single handedly against Hitler when people living in colonial countries regarded him as the arch enemy of the Asian and colonial people. There was therefore a great deal of sympathy for the U.S.S.R. amongst the progressive youth in the country.

There was moreover the fight for independence of India. The non-violent struggle waged by Ghandhi and the Indian National Congress.

These events dominated the mind of young Karthigesan and he soon got together a Union of Students of the University, who propagated pro Indian and pro Soviet Union views, much to the dislike of the University authorities. Among those who joined Karthigesan in the agitation were the late N.Sanmugathasan, S.K.Kandiah, Harry Abeyagunawardene (later General Secretary of the Communist Party) and Esmond Wickramasinghe. Abeyagunawardene and Wickramasinghe later left the organization for greener pastures. This University group published an English weekly, called 'Student News'. This was edited by Karthigesan and was very popular among the Colombo intellectuals at that time. But when Karthigesan and others left the University there was no one to publish it thereafter.

Soon after he left the University, he joined the Communist Party as a full time cadre and worked in that capacity for several years. His main function was to edit the party weekly journal, 'Forward'. He worked very hard in those days. He was the main contributor to the paper and one of the men who laid the types and printed it. He was one of the men who sold the paper in street corners.

He was a selfless and tireless worker for the party, a very good example to others who followed him. Marriage at this time ended his work in Colombo - for it was not possible to look after a family with full time wages of the Party. Then he had to leave Colombo and go to his Native Jaffna.

In Jaffna, he was lucky to get a job at Jaffna Hindu College. The most prestigious Hindu institution in Jaffna. Since he was an Honours Graduate in English, the College was too glad to have him.

Little was heard about the Communist Party at that time until Karthigesan's arrival at Jaffna Hindu College. He soon began to be called Communist Karthy, both by his admirers as

well as those who did not like the Communist Party. The School was at that time an ideal place to propagate new and progressive ideas and Karthigesan never let his opportunity to go. Groups of students were often seen in his house. They came in groups both in mornings and in the Evenings. Most of them came to get help in their studies. But, he dealt with them in such a friendly and paternal way that in due course many of them became his supporters and supporters of the Party. This loyalty was so strong that soon Karthigesan became a popular figure in Jaffna politics. He was elected as a member of the Jaffna Municipal Council although his native place was Vaddukoddai and not Jaffna Town.

The take-over of private schools in the early sixties crippled Karthigesan's political activities. He could not take part in politics openly and so he was once interdicted from his teaching job and then got reinstated. He still worked for the party from behind the scene. I haven't had opportunities to hear of his political activities thereafter. Since others aimed on the position as Principal of Jaffna Hindu College, using the political intrigues, he was transferred, after almost 25 years of teaching and a brief , but popular career as the Principal at Jaffna Hindu College, to another school in Kopay.

He continued to be the father figure in the communist movement until his death. Karthi may be dead - but the ideas he stood for do not die - and the man himself his steadfastness in the face of adversities - his unselfish dedication for the courses he stood for will never be forgotten.

I. R. Ariaratnam, Former Jaffna District Secretary of Communist Party of Sri Lanka and a Comrade once worked hand in hand with Karthi.

* * *

தன்னையே அர்ப்பணித்தார் கம்யூனிஸ்ட் ~ கார்த்திகேசன்

ஐ. ஆர். அரியரட்ணம்

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

மு. கார்த்திகேசன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு முன்னோடித் தலைவராவார். இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் அவர் தன் காலத்துக்கு முன்னதாக மறைந்தமை அவரது மறைவை நினைத்து இன்றும் துயருறும் அவரது நெருங்கிய நண்பர் பலரின் வாழ்வில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. கார்த்திகேசனின் பெற்றோர் மலேஷியாவில் வாழ்ந்தனர். அவர்கள் இலங்கைத் தமிழர். ஜீவனோபாயம் தேடி மலேஷியா சென்றனர். கார்த்திகேசன் தன் பள்ளிப் படிப்பை அங்கே மேற்கொண்டார். பின்னர் அந்நாட்களில் இலங்கை உயர் கல்விக்குப் பெயர்பெற்றதாயிருந்ததால் இலங்கை வந்தார். வந்த அவர் தனது ஆயுட்கால நண்பர்களுடன் பல்கலைக் கழக விடுதியிற் தங்கிப் படித்தார். இந் நண்பர்களுட் சிலர் சில ஆண்டுகளின் பின்னர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க அவருடன் சேர்ந்துழைத்தனர்.

கார்த்திகேசன் பல்கலைக் கழகத்திற் செலவிட்ட நாட்கள் பெரும் போராட்ட காலமாகும். உலக மகா யுத்தம் முழு உலகையும் ஆட்டிப் படைத்த காலமாகும். சோவியத் யூனியன் கிட்டத்தட்டத் தனித்து நின்று ஹிட்லருக்கு எதிராகப் பெரும்போர் நடத்தியது. காலனித்துவ நாட்டு மக்கள் ஹிட்லரை ஆசிய மக்களினதும் காலனித்துவ மக்களினதும் பரம வைரியாகக் கருதினர்.

ஆகவே இலங்கையிலிருந்த முற்போக்கு இளைஞர் மத்தியில் சோவியத் யூனியனைப் பொறுத்துப் பெரும் அனுதாபம் இருந்தது. இதைவிட, இந்தியாவில் வேறு சுதந்திரப் போர் நடைபெற்றது. இந்தச் சாத்வீகப் போராட்டம் காந்தியாலும் இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியாலும் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வுகள் இளம் கார்த்திகேசனின் மனதை ஆக்கிரமித்துக் கொண்டன. அவர் உடனே பல்கலைக்கழக மாணவர் சங்கம் ஒன்றைக் கூட்டினார். அது இந்திய சார்புக் கருத்துக்களையும் சோவியத் யூனியன் சார்புக் கருத்துக்களையும் பிரச்சாரம் செய்தது. இது பல்கலைக்கழக அதிகார பீடத்தின் அதிருப்தியைச் சம்பாதித்தது. இந்தக் போராட்டங்களில் கார்த்திகேசனுடன் சேர்ந்துகொண்டவர்கள் அமரர் என்.சண்முகதாஸன், எஸ்.கே.கந்தையா, ஹரி அபேயகுணவர்த்தனா (அவர் பின்னர் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளராயிருந்தார்), எஸ்மன்ட் விக்கிரமசிங்க ஆகியோராவர். அபேய குணவர்த்தனாவும், விக்கிரம சிங்காவும் பின்னர் நல்வாய்ப்புகளைத் தேடி கட்சியை விட்டுச் சென்றனர்.

இந்தப் பல்கலைக்கழகக் குழு 'மாணவர் செய்தி' என்ற ஆங்கில வாராந்தரப் பத்திரிகை ஒன்றை வெளியிட்டது. இதன் ஆசிரியராய்க் கார்த்திகேசன் இருந்தார். இந்தப் பத்திரிகை அந்நாட்களிற் கொழும்புவாழ் புத்திஜீவிகளிடையே பெரும் செல்வாக்குடையதாய் இருந்தது. ஆனால் கார்த்திகேசனும் ஏனையோரும் பல்கலைக்கழகத்தைவிட்டுச் சென்றதும் அதைத் தொடர்ந்து வெளியிடயாரும் இருக்கவில்லை.

பல்கலைக்கழகத்தை விட்டுச் சென்றவுடனே அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகச் சேர்ந்து சில ஆண்டுகள் வேலைசெய்தார். கட்சியின் வாராந்தரப் பத்திரிகை 'போர்வேட்' இன் ஆசிரியராக இருந்ததே அவரது பிரதான கடமையாகும். அந்நாட்களில் அவர் மிகக் கடுமையாக வேலைசெய்தார். அவரே பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதிற் பிரதானமானவராகவும் அவற்றைத் தட்டச்சிட்டு அச்சேற்றுபவராகவும் இருந்தார். வீதி மூலைகளில் நின்று பத்திரிகைகள் விற்பதிலும் ஒருவராக இருந்தார்.

அவர் கட்சிக்காகத் தன்னலமற்றும், களைப்புப் பாராமலும் வேலைசெய்தார். தன்னைப் பின்பற்றியவர்களுக்கு மிக நல்லதோர் உதாரணமாய் விளங்கினார். இக்காலத்தில் அவரது திருமணம் அவரது கொழும்பு வேலையை முடிவுக்குக் கொண்டுவந்தது. - காரணம் கட்சியின் முழுநேர வேலை ஊதியத்தைக்கொண்டு ஒரு குடும்பத்தைச் சமாளிப்பது சாத்தியமானதாயிருக்கவில்லை. அவர் கொழும்பை விட்டுத் தன்னிடமான யாழ்ப்பாணம் செல்ல வேண்டி ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அவருக்கு யாழ்ப்பாணத்தின் மிகச் செல்வாக்குடைய நிறுவனமான யாழ் இந்துக் கல்லூரியில் வேலை பெறும் அதிர்ஷ்டம் கிடைத்தது. அவர் ஆங்கிலச் சிறப்புப் பட்டதாரியாக இருந்ததால் கல்லூரி அவரை மிக மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டது.

கார்த்திகேசன் யாழ் இந்துக்கல்லூரிக்குச் செல்லுமுன் கம்யூனிஸ்ட் கட்சி பற்றி யாழ்ப்பாணத்தில் அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. அவர் அங்கு சென்றதும் அவரது அனுதாபிகளாலும், கம்யூனிஸ்ட் கட்சியை வெறுப்பவர்களாலும் கூட 'கம்யூனிஸ்ட் கார்த்தி' என அவர் அழைக்கப்பட்டார். அந்நேரத்தில் பாடசாலை புதிய, முற்போக்குக் கருத்துக்களைப் பரப்ப ஏற்ற இடமாக அமைந்தது. கார்த்திகேசனும் கிடைத்த வாய்ப்பைத் தப்பவிடவில்லை. அவர் வீட்டில் மாணவர் குழாமை அடிக்கடி காணக்கூடியதாயிருந்தது.



கார்த்தியின் கீர்த்திக்கு வழிவகுத்த
வாழ்க்கைத்துணை வாலாம்பிகையுடன்

மாணவர்கள் காலையும் மாலையும் அவர் வீட்டுக்குக் குழுக்கள் குழுக்களாய் வந்து சென்றனர். அவர்களுட் பலர் தம் படிப்பு சம்பந்தமான உதவி நாடி வந்தனர். ஆனால் அவர் அவர்களை நட்புறவுடனும் ஒரு தந்தைக்குரிய வகையிலும் அணுகியதால் அவர்கள் பலர் காலகதியில் அவரது ஆதரவாளர்களாகவும், கட்சி ஆதரவாளர்களாகவும் மாறினர். இந்த விசுவாசம் அவ்வளவு வலுவுடையதாய் இருந்ததால் கார்த்திகேசன் வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் ஓர் அரசியற் பிரமுகரானார். அவரது பிறப்பிடம் வட்டுக்கோட்டையேயன்றி, யாழ்ப்பாண பட்டினமல்ல. இருப்பினும் அவர் யாழ் மாநகர சபை அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அறுபதாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தனியார் பாடசாலைகள் அரசாங்க மயமாக்கப்பட்டமை கார்த்திகேசனின் அரசியல் நடவடிக்கைகளை முடக்கியது. அவரால் பகிரங்கமாக அரசியலில் ஈடுபட முடியவில்லை. இதனால் ஒரு முறை அவர் ஆசிரியத் தொழிலிலிருந்து இடை நிறுத்தப்பட்டு மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்டார். அப்படியிருந்தும் அவர் ஒளிவுமறைவாகக் கட்சிக்கு வேலைசெய்தார். அதன் பின்னான அவரது அரசியல் நடவடிக்கைகள் பற்றி அறிய எனக்கு வாய்ப்பிருக்கவில்லை. யாழ் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவிக்குப் பிறர் அரசியற் சூழ்ச்சிகள் மூலம் கண்வைத்ததால், அவர் தனது கிட்டத்தட்ட 25 ஆண்டுகால ஆசிரியத் தொழிலுக்கும், குறுகிய கால ஆனால் பிரபலமான அதிபர் பதவிக்கும் பின்னர் கோப்பாயிலுள்ள இன்னொரு பாடசாலைக்கு மாற்றப்பட்டார்.

அவர் தனது மறைவுவரை கம்யூனிஸ்ட் இயக்கத்திற் பிதாபோல் இருந்தார். காத்தி இறந்துவிடலாம். ஆனால் அவர் எந்தக் கருத்துகளுக்காக நின்றாரோ அவை சாகா. அத்துணை நெருக்கடிகள் மத்தியில் நின்று பிடித்த அந்த மனிதனும், அவரின் திடமும் சாகா. தான் நின்ற கொள்கைகளுக்கான அவரது தன்னலமற்ற அர்ப்பணிப்பு என்றுமே மறந்துவிடப்படமாட்டாது.

ஐ. ஆர். அரியரட்னம்.,
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின்
முன்னாள் யாழ். மாவட்டச் செயலாளர்.

கந்தன் எத்தனை கந்தனடி

அறுபதாம் ஆண்டுகளின் பிற்பாதியில் ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்றது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பிரவேசம் தான் மிகவும் பிந்தியதாக இருந்தது. இதற்கு மாஸ்டர் தந்த விளக்கம்:

சன்னிதிக் கந்தன் ஏழைகளின் கந்தன்: அன்னதானக் கந்தன். ஆகவே பிரவேசம் முன்னதாக நடந்தது.

நல்லூர்க் கந்தன் நகரக் கந்தன்: பணக்காரக் கந்தன்: முதலாளித்துவக் கந்தன்: அவனுக்குப் பணம்தான் முக்கியம். ஆகவே மாவிட்டபுரத்திலும் முன்னதாக பிரவேசம் நடந்தது.

மாவிட்டபுரத்துக் கந்தன் நிலபுலமுள்ளவர்களின் கந்தன். அதனாற்தான் அத்தனை தடங்கல்.

My Maha Achcharya
Mr. M. Karthigesan(Karthar)

Ganeshan Sayuchchiyadevan

Among the most wonderful teachers we had at the JHC, we were blessed with a few incredible superstars - who dominated many aspects of the school life. In addition to Teaching Mr.Karthigesan was a master in school Administration, coaching sports, guidance counselling, articulate and powerful public speaking in school events and group motivation. He was an excellent teacher in mathematics and English. Never dogmatic, he encouraged us to think freely.

He is well known for his jokes, which he used to lighten up the stress created by the highly competitive academic environment and to attract the attention of those not so interested in attending class. His interpretation of Siva Nadanam and satiric views on politics were legendary. He was pleasant, easily approachable, always surrounded by groups of students in out of school and extremely friendly but firm.

Personally, he was my close friend, mentor and the best teacher ever. Like the many thousands of his students, I was inspired, taught, guided and supported in becoming a better human being. He thoroughly enjoyed teaching and is one of the very few people I know who valued service above self .We loved and admired him. He is immortalised in our memories and dreams and the history of JHC.

• *Ganeshan Sayuchchiyadevan FRCS Eng, FRCSC, Ophthalmic Surgeon, Sudbury ,ON, Canada*

A man of wit and humour

S. Markandan

It is a laudable venture to have a publication of late M. Karthigesan's memories as one of the very few who struck to principles till the last. As I am just given two days to prepare this I will straight away get on to the subject else I can write volumes about this loving personality.

As a Principal / Teacher at Jaffna Hindu College, if the whole class giggles one could be sure that it was late M. Karthigesan taking English. Though an ardent communist, he spoke not one word about it in the class or in the school as a whole.

He had the rare distinction of being elected to the coveted post as the President of the Student Council of the University College in the year 1941.

During the mid sixties when then Inspector General of Police Mr. Stanley Senanayake was at Subhas Guest House to attend the preliminary security measures on the eve of the visit of late Prime Minister Hon. Srimavo Bandaranayake, late M. Karthigesan blissfully unaware of his presence went to the same guest house on some other errand.

Surprisingly enough M. Karthigesan found someone tapping at his shoulder asking, "Hello Karthi, what are you doing here?". When M. K turned around he found no less a person than his own time colleague in the University College Stanley. They were supposed to have pleasantries and a small friendly chat.

During the height of the J.V.P. insurgency in the year 1971 though M. Karthigesan did not have any ties with the J.V.P., he was summoned to the police station by an S.P. who was in Jaffna to specially investigate into it.

'Karthar' quickly responded and was ushered into the room where the S.P. was. 'Karthar' looked at him and remarked, "It is long since I saw you in the running track". This was due to the fact that this S.P. too was a contemporary of Karthar at the University College and an Ace sprinter. His remark meant that, "you are now running after me".

S. P. lost no time in recognizing Karthi and his genuineness and they both recalled the days at the University College.

During the year 1967 Colombo combined schools came to Jaffna and played a cricket match against Jaffna combined schools at the police grounds. In this match the Anandian Sunil Wettimuny scored a smashing century.

Karthar one of the spectators remarked "எல்லா முனியையும் யாழ்ப்பாணத்திற் கோவிலில் அடக்கிப் போட்டாங்கள், இந்த சுனில் வெத்தி முனியை அடக்க முடியவில்லை".

The year 1965 when U.N.P. formed a coalition with the then Federal Party of Tamils, late M. Thiruchelvam was appointed Minister of Local Government. Karthar's remark was, அவங்களோடை சேர்ந்தாங்கள், கடைசியாகக் கிடைத்தது லோக்கல் கவன்மென்ற் மந்திரி பதவிதான்" and repeated 'local' meaning inferior according to Jaffna colloquial Tamil.

On Fridays during the first period after lunch some students used to doze off and Karthar would remark, "எட்டுக்(8) கறியும் சோறும் பாயாசமும், அதுதான் (டே)சமியாக் குணம்". சேமியா was an ingredient used for பாயாசம் to add to its flavour.

• **S. Markandan,**
Post Master Cl. 1 in Jaffna

விவேகமும் நகைச்சுவையும் நிறைந்த மனிதர்

எஸ். மார்க்கண்டன்

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

அமரர் மு. கார்த்திகேசன் நினைவாக ஒரு மலர் வெளியிடுவது பாராட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும். காரணம் அவர் இறக்கும் வரை தம் கொள்கை கோட்பாடுகளில் ஊன்றி நின்ற வெகு சிலரில் ஒருவராவார்.

எனக்கு அதிக அவகாசம் கொடுக்கப்படாததால் நான் நேரடியாகவே விடயத்துக்கு வருகிறேன் அல்லது நான் இந்த அன்பானவர் குறித்து எவ்வளவோ எழுதி குவித்து விடுவேன்.

யாழ். இந்துக்கல்லூரியில் ஒரு வகுப்பு முழுவதுமே குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் சத்தம் கேட்கிறதென்றால் அது அக்கல்லூரியின் ஆசிரியரும் அதிபருமாக இருந்த அமரர் மு.கார்த்திகேசன் ஆங்கில வகுப்பெடுத்துக் கொண்டிருக்கிறார் என யாரும் சொல்லி விடுவர். அவர் முதலில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சார்புடைய உறுதி வாய்ந்த கம்யூனிஸ்டாக இருந்தபோதும் அவர் என்றுமே அது பற்றி வகுப்பிலோ பாடசாலையிலோ ஒரு வார்த்தை கூடப் பேசியிருக்கமாட்டார்.

1941இல் அந்தக் காலப் பல்கலைக் கல்லூரியின் மாணவரவையின் (University College) தலைவராகத் தெரியப்படும் அரிய வாய்ப்பைப் பெற்றார். அறுபதாம் ஆண்டுகளின் நடுவில் அந்தக் காலப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகக் கடமையாற்றிய திரு. ஸ்ரான்லி சேனநாயக்கா அக்காலப் பிரதமரான அமரர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்காவின் யாழ் விஜயத்தின் முன்னேற்பாடாகப் பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்ள சுபாஸ் விருந்தினர் விடுதியிற் தங்கியிருந்தார். அச்சமயம் இதுபற்றி எதுவும் அறியாத அமரர்.

மு.கா. தனிப்பட்ட அலுவல் காரணமாக அந்த விடுதிக்குச் சென்றிருந்தார். திடீரென யாரோ முதுகிற் தட்டி ''ஹலோ காத்தி! நீங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்?" எனக்கேட்டதும் திரும்பிய மு. கா. அது பல்கலைக்கல்லூரியிற் தன்னுடன் படித்த ஸ்ரான்லி எனக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனார். அவர்கள் இருவரும் மகிழ்வுடனும் நட்புடனும் சிறிது நேரம் உரையாடிக் கொண்டனர்.

1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சி உச்சத்தில் இருந்தபோது ஜே.வி.பியுடன் எதுவித தொடர்பும் அற்ற மு.கா. கிளர்ச்சி சம்பந்தமான விசேட புலனாய்வுக்கென யாழ்ப்பாணம் வந்திருந்த எஸ்.பி.யால் விசாரணைக்கென அழைக்கப்பட்டார். 'காத்தார்' விசாரணைக்குப் பின்னிற்கவில்லை. உடனடியாகச் சென்றார். அவர் எஸ்.பி. இருந்த அறைக்குள் அழைத்துச் செல்லப்பட்டார். எஸ்.பி.யைக் கண்ட காத்தார், ''நான் ஓட்டப் பாதையில் உங்களைக் கண்டு கன காலமாகிவிட்டது" என்றார். இந்த எஸ்.பி.யும் காத்தாருடன் படித்தவர் தான். அவர் அப்போது பெரிய ஓட்டக்காரர் ஆக இருந்தார். அவர் கூறியதன் உட்பொருள் என்னவென்றால், ''நீங்கள் இப்ப எனக்குப் பின்னால் ஓடுகிறீர்கள்" என்பதுதான். உடனடியாகக் காத்தாரையும் அவரது நேர்மையையும் அறிந்திருந்த எஸ்.பி.யும் காத்தாருடன் தமது பல்கலைக்கல்லூரி நாட்கள் பற்றிப் பேசிக்கொண்டார்.

1967 இல் கொழும்புப் பாடசாலைக் கூட்டுக்குழு யாழ்ப்பாணப் பாடசாலைக் கூட்டுக்குழுவுடன் கிரிக்கெட் விளையாட யாழ்ப்பாணம் வந்தது. பழைய பொலிஸ் மைதானத்தில் முனியப்பர் கோவிலடியில் போட்டி நடைபெற்றது. ஆனந்தாக் கல்லூரி மாணவன் சுனில் வெத்தி முனி சதம்வரை (Century) அடித்துத் தள்ளினார். விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த 'காத்தார்' எல்லா முனியையும் யாழ்ப்பாணத்தில் கோவில் கட்டி அடக்கிப்போட்டாங்கள். இந்தச் சுனில் வெத்தி முனியை அடக்க முடியவில்லையே என்றார்.

1965இல் யு.என்.பி அப்போதைய சமஷ்டிக் கட்சியுடன் கூட்டரசாங்க மொன்றை அமைத்த போது திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதற்குக் காத்தார் அவங்களோடை சேர்ந்தாங்கள். கடைசியாகக் கிடைத்தது 'Local' கவன்மென்ற் மந்திரி பதவிதான் என்று யாழ்ப்பாணத் தமிழில் லோக்கல் என்றால் குறைந்தது என்ற அர்த்தத்தில் கூறினார்.

வெள்ளிக்கிழமைகளில் மதியத்திற்குப் பின்னரான முதலாம் பாடத்தின் போது மாணவர்கள் சிலர் நித்திரை தூங்குவார்கள். அதற்குக் காத்தார் ''சோறும் கறியும் பாயாசமும், அது தான் சேமியாக் குணம்" என்பார். சேமியா என்பது பாயசத்துக்கு ருசிக்காகப் போடப்படும் பொருள்.

எஸ். மார்க்கண்டன்,
பிரதம தபால் அதிபர், தபாற்கந்தோர், யாழப்பாணம்

மீண்டும் வாராயோ வையகத்தே

நவநிதி செல்லத்துரை

மண்ணில் செய்யும் சேவைதனை
கண்டு கொண்டு உம்மை
விண்ணில் தேவர் விரும்பி அழைத்து
ஆண்டுகள் இருபத்தைந்து ஓடினாலும்
மண்ணுலகில் உள்ளவரை நீங்கிடுமோ உம்பிரிவு
அண்ணா என்று வாய்குளிர நாமழைத்திட
மீண்டும் வாராயோ வையகத்தே!

மண்ணில் நீரிருந்து குதூகலிக்க வைத்த காலத்தை
எண்ணும் போது இதயமே அழுகின்றது
எண்ணரிய சேவை செய்த சேவையாளனே
கண்ணைச் செவியைக் கருத்தைக் கவர்ந்து
எண்ணரிய போதனைகள் ஈவதற்கு
மீண்டும் வாராயோ வையகத்தே!

புகழொடு தோன்றி புகழொடு வாழ்ந்து
புகழொடு மறைந்த புகழாளன்
கனிமொழியே உம் வாய்மொழியாய்
இனிய நெஞ்சமே உம் அன்பு இதயமாய்
ஆயிரம் உறவுகள் நல்வாழ்வு வாழ
மீண்டும் வாராயோ வையகத்தே!

அறிவைத் தருவதில் ஜீவஜோதியாய்
பசி தீர்ப்பதில் அமுத சுரபியாய்
தாகம் தீர்ப்பதில் ஜீவநதியாய்
தேவரை ஒத்த தயை காட்டும் அன்பனாய்
இம்மையிலும் மறுமையிலும்
எவ்வுயிர் நோக்கினும்
பாரினிலே உந்தனுக்கு
நிகருண்டோ எனக்கேட்டால்
யாரொருவர் மறுத்திடுவார்
திண்ணமற யான் புகழ
வார்த்தைகள் இல்லை யீங்கு
மீண்டும் வாராயோ வையகத்தே!

நவநிதி செல்லத்துரை,
வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவரும்,
கார்த்திகேசனின் பலவயதிற்கு இளமையான ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்

எம். கார்த்திகேசன் மாஸ்டரும் நாமும்

கலாநிதி வி. அம்பலவாணர்

எனது பள்ளி வாழ்க்கை முடிந்து 48 வருடங்கள் உருண்டோடிவிட்டன. அந்த நாட்களில் எத்தனை பள்ளித் தோழர்கள், எத்தனை மாஸ்டர்கள். எல்லாம் காலத்தோடு மறைந்துகொண்டு வருகின்றன. என்னுடன் பல வருடங்கள் ஒன்றாகப் படித்த மாணவர்கள் ஒருசிலரை அண்மையில் சந்திக்க நேர்ந்தது. அவர்களுக்கு நான் யார் எனத் தெரிந்துவிட்டது. ஆனால் எனக்கோ நினைவில் இல்லை. இப்படி எத்தனை தர்மசங்கடமான சந்தர்ப்பங்கள்!

ஆனால் எம்முடைய ஆசிரியர்கள் சிலரை நாம் என்றும் மறக்க முடியாது. அவர்களுள் ஒருவர்தான் எம்.கார்த்திகேசன் மாஸ்டர். ஆங்கில எழுத்தான 'ஆ' தமிழில் எழுதும்போது 'எம்' என்று வருகிறது. ஆம்! கார்த்திகேசன் மாஸ்டர் அன்றல்ல, என்றும் எம்முடையவர்தான். மிகவும் எளிமையான தோற்றம். எப்பொழுதும் ஒரு புன்சிரிப்பு. எப்போதுமே சைக்கிளில் வருகை. தேவைக்கதிகமான கதை இல்லை. இவை எல்லாம் அவரை நினைவு கூருவதற்கு எமக்கு உதவுவகையாகும்.

அந்த நாட்களில் தமிழ் கற்பித்த வித்துவான் கார்த்திகேசுவிடம் நான் இரண்டொரு வருடம் படித்தேன். ஆனால் எம் கார்த்திகேசனிடம் இரண்டோ மூன்று வகுப்புகள்தான். இந்த இரண்டு மூன்று வகுப்புகளும் இன்றும் என்னுடைய மனதில் பசுமையாக நினைவிலுள்ளது. அவர் ஒரு அரசியல்வாதி. ஆனால் வகுப்பில் அரசியல் பேசவில்லை. எமக்கு அவர் கற்பித்த முறை அப்போது எல்லோருக்கும் சில சங்கடங்களைக் கொடுத்தன. ஏனென்றால் அவர் ஒன்றன் பின் ஒன்றாகக் கேள்விக்கணைகளை எம்மீது ஏவினார். ஒரு பதில் சொன்னதும் மற்றொரு கேள்வி, அதற்குப் பின் இன்னுமொன்று. அப்பப்பா எவ்வளவு திணறடிப்பார். பின்பு ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்போதுதான் எனக்கு அவர் எம்முடைய சிந்தனையைக் கிளறி எமது மனதில் பாடங்களில் உள்ள நுணுக்கங்களை எல்லாம் நன்றாகப் பதியவைத்தது விளங்கியது.

அவர் யாழ்ப்பாணம் மாநகரசபைத் தேர்தலில் எமது வட்டாரத்தில் ஒரு வேட்பாளராக இரண்டு மூன்று முறை எம்முன் வந்தார். நானோ சிறு பிள்ளை. ஆனால் எம் கார்த்திகேசன் வெற்றிபெற வேண்டும் என்று ஏனைய நண்பர்கள்போல எனக்கும் மிகவும் விருப்பம். வீட்டிலே அதிகமாக எல்லோரும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மாறு. ஏனென்று சிலரைக் கேட்கும் சந்தர்ப்பம் வந்தது. 'கம்யூனிஸ்ட் கட்சியினர் கோவில்களை இடித்து விடுவார்கள்" என்ற பதில் அடிக்கடி வந்தது. எம்முடைய கார்த்திகேசனோ மிகவும் மெல்லிய தோற்றமுடையவர். இவர் எப்படி எந்தக் கோவிலை உடைப்பார் என்று எனக்கு ஒன்றும் புரிவதில்லை. எனது தாயாருடன் மட்டும் துணிந்து இக்கேள்வியைக் கேட்டுவிட்டு, எம் கார்த்திகேசனுக்குத் தான் வாக்களிக்கவேண்டும் என்று அடம் பிடிப்பேன்.

என்னுடைய மாமனாரான திரு.அ.வைத்திலிங்கம் அவர்களும் அதே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை விளங்கிக்கொள்ள எனக்குச் சிலகாலம் பிடித்தது. அப்பொழுதுதான் கோவில் இடிப்பதற்கு எமது குடும்பத்திலேயே ஒருவர் இருக்கிறார் என்று தெரியவந்தது! மாமனாரைச் சந்திப்பதற்குப் பல தோழர்கள் வருவதுண்டு. ஆனால் ஒருவரும் கோவில் இடிக்கும் கதை பேசுவதில்லை. எம் கார்த்திகேசன் மாஸ்டரும் வருவார். அதிகம் பேசமாட்டார். அதுபற்றி மாமனாரைக் கேட்டேன். ''காத்தி சிறந்த அறிவாளி. எனவே வார்த்தைகளை அளந்தே பேசுவார்" என்று சிரித்துக்கொண்டு பதில் சொன்னார்.

கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவு ஏற்பட்டபின் கார்த்திகேசன் மாஸ்டரும், எனது மாமனாரும் இருவேறு பிரிவைச் சேர்ந்தனர். ஆனால் அவர்கள் ஒருவர் மீதொருவர் பரஸ்பரம் மதிப்பு வைத்திருந்தனர். கார்த்திகேசன் மாஸ்டரை எப்பொழுது சந்தித்தாலும் எனது மாமனாரைப்பற்றி விசாரிப்பார்.

இச்சிறு கருத்துச் சிதறல்களை எழுதுவதற்கு எனக்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்த எம் கார்த்திகேசனின் குடும்பத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள். யாழ்ப்பாணம் இந்துவின் மைந்தர்கள் என்றும் நினைவில் வைத்திருக்கும் பெரியார்களில் எம் கார்த்திகேசன் அவர்கள் முக்கிய இடத்திலுள்ளார்கள். அவருக்கு இந்தச் சிலசொற்களை எனது சமர்ப்பணமாக முன்வைப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாநிதி வி. அம்பலவாணர்,
தலைவர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், கொழும்பு.

* * *

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்

அ. மரியதாஸன்

தோழர் கார்த்திகேசனை தமிழ்ச்சமூகம் மறந்து விடாமலும், மறைத்து விடாமலும் இந்த 21ம் நூற்றாண்டில் பாதுகாத்து நினைவு கூருவது என்பது மிகவும் கஷ்டமான காரியங்களில் ஒன்று. தேசிய அரங்கிலும் சர்வதேச நிலைப்பாட்டிலும் சோஷலிச சிந்தனைகளில் ஏற்பட்டுள்ள தற்கால பின்னடைவுகளின் மூலம் ஏற்பட்ட ஒருமுனைவாதத்தினாலும், தாயகத்தின் பேரால் ஏற்பட்டுள்ள அதிதீவிர வெறித்தனத்தினாலும், வர்க்கப்போராட்டத்தின் சர்வதேசிய ஐக்கியம் மழுங்கடிக்கப்பட்ட நிலையில் தோழர் கார்த்திகேசனின் கடந்தகால வர்க்கப்போராட்டத்தின் செயற்பாடுகளையும், யாழ் சமூக அமைப்பில் பின்தள்ளப்பட்டுகிடந்த ஒருபகுதி மக்களுக்கு மனவலிமை ஊட்டி தங்களது உரிமைகளுக்காக தாமே போராட ஊக்குவித்த அந்த கைங்கரியத்தையும் மீளாய்வு செய்து நினைவுகூர வைத்த அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும், அவரது உற்ற நண்பர்களுக்கும், முற்போக்கு சிந்தனை கொண்ட தோழர்களுக்கும், தமிழ் மக்கள்பால் நல்லெண்ணம் கொண்டவர்களுக்கும் இந்த நன்றிக்கடன் சென்றடையவேண்டும்.

இன்றைய ''தமிழ்த் தேசியம்" விற்பனைச் சரக்காக சந்தைக்கு விடப்பட்டுள்ளது. இந்தப் பண்டமாற்று வியாபாரத்தில் ஒரு சாராருக்கு அது பணம் திரட்டும் பொருளாகவும், மற்றுமொரு சாராருக்கு தமிழ் தேர்தல் அடையாளச் சின்னமாகவும், வேறொரு கூட்டத்தினருக்கு தமிழ் பொன்னாடை போர்த்திக் கொள்ளவும், தங்களது கௌரவ அந்தஸ்தை பாதுகாத்துக் கொள்ளவும் இப்போது பெரும் உதவி செய்து வருகிறது.

20ம் நூற்றாண்டில் 70 ஆண்டுகளுக்கு முன் இலங்கைச் சரித்திரத்தில் அரசியல் விழிப்புணர்வு முளைவிட்ட காலந்தொட்டு ஈழ மண்ணில் 'சுதந்திரம்' மனித உரிமைகளில் ஒன்று என்றும், நமது பண்டைய இலக்கியம் தொட்டு நமது அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்ட காலம்வரை கல்விச் செல்வம்

சகலமக்களுக்கும் பிறப்புரிமை என்கிற அடிப்படை உரிமை அங்கீகரிக்கப்பட்ட காலத்திலும் கூட இவைகள் ஒரு சாராருக்கு மறுக்கப்பட வேண்டும் என்கிற சிந்தனையும் யாழ் மண்ணில் வேரூன்றத் தொடங்கிவிட்டது.

தமிழ் மக்கள் ''தமிழ் தேசியம்" என்கிற உருவம் பெறுவதற்கு முன் ஆங்கிலேயர்களிடம் அரசியல் சட்டத்திருத்தம் மாத்திரம் கோரிக்கையாக வைத்து சிங்களவர்களுக்காகவும், தமிழர்களுக்காகவும் பெட்டிசன்களை சமர்ப்பித்து போராடிய மாபெரும் தலைவர்களாக விளங்கிய சேர். பொன்னம்பலம் இராமநாதன் போன்ற புகழ்பூத்த தலைவர்கள் கூட, பதினெட்டு வயதை அடைந்த சகலருக்கும் வாக்குரிமை என்கிற மனித உரிமைக் கோட்பாட்டை மறுத்ததோடு, அது தாழ்ந்த சாதியினருக்கு வாக்குரிமைப் பலத்தை அதிகரித்து தங்களது சாதித்திமிரை அடக்கிவிடுவதோடு, தங்களுக்கு தெய்வசாபல்யமாகக் கிடைத்த கல்வி அமைப்புகளிலும் நுழைந்து தம்மை மடக்கி விடுவார்கள் என்கிற பயம் அவர்களை ஆட்டிப் படைத்தது.

வடக்கில் கல்வி அமைப்புக்கள் மிஷனரிகளின் ஆக்கிரமிப்புக்குள் சென்றடைந்த சமயம், சைவநெறியாளர்களுக்கு ஆன்மீகம் உச்சந்தலையில் ஏறியிருந்த போதும், சாதித்திமிர் ஆன்மீகத்தையும் மிஞ்சி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கல்விச்செல்வம் சென்றடையாமலிருக்க தடை முயற்சிகளை மேற்கொள்ள வைத்தன.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மிஷனரிகள் மதம் மாற்றத்தை முன்வைத்து, ''துன்பப்படுபவர்களே! என்னிடம் வாருங்கள்" என்று பைபிளை நீட்டி, தங்கள் கல்வி நிலையங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சைவம் அடைத்த கதவுகளை கிறிஸ்தவம் திறந்துவிட்ட சமயம், பாதிரிகளுக்கு பயமுறுத்தல்களும், நிர்ப்பந்தங்களும், அடிதடிகளோடு கல்விச்சாலைகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

மூன்று ஐரோப்பிய வல்லரசுகளின் ஆக்கிரமிப்புக்குள் சிக்கிக் கிடந்த வடகிழக்கு மக்கள் அவர்களின் கலாச்சார திணிப்புகளையும் உள்வாங்கிக் கொண்ட ஒரு மேட்டுக் குடி வர்க்கத்தின் இறுக்கமான பிடிக்குள் அடங்கிக்கிடந்தனர். அவ் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், ஆங்கிலேயர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு மேட்டுக்குடி வர்க்கத்தின் கையில் அன்றைய அரசியல், பொருளாதார, ஆன்மீக, கலாச்சாரம் போன்றவைகள் சிக்கிக்கொண்டதுடன், பெரும் புகழும் பிரசித்தமும் பெற்ற சட்டவல்லுனர்கள், விதானை, முதலியார், உடையார்கள், வர்த்தகர்கள், இன்ஜீனியர்கள் போன்ற பெரும் பொருளாதார சக்தி வாய்ந்த ஒரு பிரிவினர் சமூகத்தின் நிர்ணய சக்தியை தமது கையடக்கத்திற்குள் வைத்திருந்தனர் என்பதை நினைவில் கொள்ளல் வேண்டும்.

இந்தச் சமூகப் பின்னணியை நம்முன் நிறுத்தி, சுதந்திரம் கிடைக்கப் பெறுவதற்கு முன் இலங்கை சர்வகலாசாலையின் கல்வித்தகமை என்கிற புத்திஜீவிகளின் மூலதனத்தை மாத்திரம் வைத்துக்கொண்ட தோழர் கார்த்திகேசன், தான் கற்றுக் கொண்ட அரசியல் தத்துவக் கோட்பாட்டை யாழ் மண்ணில் நடை முறைப்படுத்த முயற்சிக்கும் பொழுது அது எத்தகைய விளைவை அவருக்கு ஏற்படுத்தியிருக்கும் என்பதை நம்மால் ஊகித்துக் கொள்ள முடியும்.

யாழ் மாணவர் வாலிப காங்கிரஸ் தடம்பதித்த காந்திய வழிப்போராட்டம் இராமசாமி ஐயர் என்கிற ஒரு தனிநபர், அதுவும் பிராமணர் கம்யூனிஸ சோஷலிச முற்போக்கு இலக்கியங்களை பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் விற்பனை செய்து சொற்ப வாசகர்களை திரட்டி வைத்திருந்தமையும், இலங்கை கம்யூனிஸ்ட கட்சியின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரும் பிரசித்திபெற்ற ஆசிரியர் சமூகத்தில் தனது செல்வாக்கை நிலை நிறுத்தி வைத்துக் கொண்டிருந்த உயர் குலத்தைச் சேர்ந்த தோழர் வைத்திலிங்கத்தின் செல்வாக்கும் இளம் கார்த்திகேசனுக்கு பெரும் மனத்துணிவை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

தோழர் கார்த்திகேசன் சர்வகலாசாலை கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறிய காலகட்டத்தில், தலைநகர் கொழும்பில் வர்க்கரீதியாக தொழிற்சங்க அமைப்பில் திரண்டிருந்த தொழிலாளர்கள் மத்தியதரவர்க்க அரச ஊழியர்கள் தங்களது சங்க அமைப்புகளின் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்பை அடிப்படையாக வைத்து, தொழிற்சங்க உரிமைகளுக்கும் சம்பள உயர்வுகளுக்குமாக இடதுசாரி இயக்கங்களுடன் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து பெரும் கோஷங்கள் எழுப்பி போராட்டங்களை தலைநகரில் நடாத்தி வந்தனர்.

தோழர் கார்த்திகேசன் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்துடன் (CTUF) தொடர்பு கொண்டு தோழர்கள் எம்.ஜி.மெண்டிஸ், பீட்டர் கெனமன், கே.ராமநாதன் (தேசாபிமானி ஆசிரியர்), பிக்கு சரணங்கரா போன்றவர் களுடன் இணைந்து தொழிற்சங்க வேலைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறை வேலைத்திட்டங்களிலும் பெரும் பங்காற்றினார்.

இக்கால கட்டத்தில் சர்வகலாசாலையில் ஆங்கிலம் பயின்ற சில மத்தியதரவர்க்க மாணவர் கூட்டமொன்று சர்வகாலசாலை பேராசிரியரான டொறிக்ஸ்ஸாவிடம் ட்ரொஸ்கிய தத்துவப் பயிற்சி பெற்று கார்ல் மார்க்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கையை கையில் சுருட்டி வைத்துக்கொண்டு சிவப்புச் சட்டை அணிந்து கம்யூனிஸ்ட் கட்சி கூட்டங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் நடைபெற்ற தொழிற்சங்கக் கூட்டங்களிலும் நுழைந்து சோவியத் எதிர்ப்பு, ஸ்டாலின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு சீர்குலைவு வேலைகளைச் செய்தனர்.

இவர்களின் இந்த சீர்குலைவு நடவடிக்கைகளை எதிர்த்து நடந்த பிரச்சார கூட்டங்களிலும் ட்ரொஸ்கிய சிந்தனைக்கு எதிராக நடந்த தத்துவார்த்தப் பிரச்சார விவாதக் கூட்டங்களிலும் தன்னை முழுக்க ஈடுபடுத்திக் கொண்ட தோழர் கார்த்திகேசன் ஒரு சரியான மார்க்ஸிச-லெனினிஸ வாதியாக புடம்போட்டுத் தன்னை வளர்த்துக் கொண்டார்.

1946-47ல் அரச எழுதுவினைஞர் சங்கம், துறைமுக போர்ட் கமிஷின் சங்கம், மற்றும் தொழிற்சங்கங்கள் நடத்திய மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, தொழிற்சங்க உரிமை, பென்சன் உரிமைகளுக்காக நடத்திய போராட்டம் ஆகியவை பெரும் தோல்வியில் முடிந்து பின்னடைவை ஏற்படுத்தியது. இதனால் அரச ஊழியர் சங்கத்தை முன் வழிநடத்திச் சென்ற முக்கிய தொழிற்சங்கவாதிகளான டி.பி. இலங்கரத்தின, வைகுந்தவாசன் போன்றவர்களும், துறைமுகப் பிரிவில் பல முன்னணித் தோழர்களும் அரசியல் பழிவாங்கலுக்குள்ளாகி வேலை இழந்தனர். தொழிற்சங்கங்கள் பலவீன நிலைக்குத்தள்ளப்பட்டன.

அரச எழுதுவினைஞர் தமது சங்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டவேளையில், தோழர் கார்த்திகேசனும் அவர்களோடு இணைந்து சங்கத்தை வளர்த்தெடுக்க பெரும் முயற்சியில் ஈடுபட்டு, பெருமளவில் நிதி சேகரித்து கொழும்பு மத்தியில் மருதானை எல்பின்ஸ்டன் தியேட்டர் அருகில் ஒரு இடத்தை வாடகைக்கு அமர்த்தி அச்சுக்கந்தோர் ஒன்று நிறுவப்பட்டது. அதில் எழுதுவினைஞர் சங்கச் சார்பாக ஆங்கில வார இதழொன்று வெளியிடப்பட்டது. அதன் ஆசிரியர் குழுவில் முக்கிய பங்கு வகித்து கட்டுரை எழுதியும், பிரசுரித்தும், அதை விநியோகம் செய்வதிலும் தோழர் காத்தி ஏனைய ஊழியர்களுடன் சமபங்காற்றி தனது கடமையை ஒரு கட்டுப்பாட்டுடன் சரிவரச் செய்ததுடன், அவரது நேர்மையான ஒத்துழைப்பின் பிரதிபலனாக அதிகப்படியான அங்கத்தவர்களை கம்யூனிஸ்ட் கட்சிக்கு வென்றெடுக்க உதவினார்.

கம்யூனிஸ்ட் கட்சி பீட்டர் கெனமனை மத்திய கொழும்பில் பாராளுமன்றப் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தபின், அவரை ஆசிரியராகக் கொண்டு நடத்திய போர்வார்ட் (Forward) பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் தோழர் காத்தி கெனமனுக்கு பெருமளவில் துணையாக நின்று உதவியதோடு, 1952ல் பீட்டர் கெனமன் மீண்டும் வெற்றி பெற்று, அதோடு மறுமணமும் செய்து அவர் மனைவியான மோர்ட் கெனமன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்வரை கெனமனுக்குப் பெருந்துணையாக செயல்பட்டார்.

1917ல் நடந்தேறிய சோவியத் புரட்சியின் மாபெரும் வெற்றியும் அதன் சாதனையும் இரண்டாம் உலகப்போரில் ஹிட்லரின் பாஸிசம் உலகை பயமுறுத்திய வேளையில் ஹிட்லரின் நாஸிசத்தை ஜேர்மன் மண்ணிலேயே குழி தோண்டிப்

புதைத்த சோசலிஸ மக்களின் வெற்றியை ஆதர்சமாகக் கொண்டு சர்வதேச விடுதலை இயக்கங்கள், சுதந்திரம், இன எழுச்சிக்கான போராட்டங்கள் ஆகியவற்றில் மார்க்ஸிய தத்துவம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆனாலும் கூட யாழ் சமூக அமைப்பின் அடித்தள கட்டமைப்பில் துருப்பிடித்துப் போயிருந்த சாதித்திமிரின் இறுக்கத்தில் எள்ளளவேனும் தளர்வு ஏற்படவில்லை. ''தமிழ் தேசியம்''ஆரம்பித்த ஐம்பதுக்கு ஐம்பதிலும், பாகப்பிரிவினையிலும் கூட சாதித்திமிரால் ஓரங்கட்டப்பட்ட மக்களை தனது ஓர் அங்கமாக அவர்களை ஏற்றுக் கொள்ள மறுத்தே வந்துள்ளது.

தென்னிலங்கையில் தொழிலாளி வர்க்கம் தன்னை வர்க்கரீதியில் வளர்த்துக் கொண்ட அளவில், யாழ் மக்கள் மத்தியில் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களை வர்க்க ஸ்தாபனங்களுக்குள் வளர்த்தெடுத்துக் கொள்ளமுடியவில்லை. அதற்குக் காரணம் அதன் அடித்தளம் பொருளாதார சாதிய அமைப்புக்குள் சீர்குலைந்து போயிருந்தது. அதைவிட நிலமானிய அமைப்புகளும், அதனை தாங்கி நின்ற கலாச்சார அம்சங்களும், அதன் மிச்ச சொச்சங்களும், அதற்குத் துணை போன ஆன்மீக வைதிகமும் ஒடுக்கப்பட்ட மக்களின் வர்க்கக் கூட்டலை சிதறடித்து வந்ததுமேயாகும்.

அன்றைய கால கட்டத்தில் ஆங்கிலம் கற்றோர் சமூகத் திருத்தம் பேசினர். அக்கல்வி தமது வாழ்க்கைத் தேவைக்கும், சமூக அந்தஸ்த்திற்கும் பெரும் பயனளித்து தம்மை மேம்படுத்திக் கொள்ள நன்றாகவே உதவியது. தோழர் கார்த்திகேசன் நினைத்திருந்தால் உடல் நோகாத இந்த ஒற்றைவழிப்பாதையை தேர்ந்தெடுத்து தன்குடும்ப வாழ்வை மேம்படுத்தி இருக்க முடியும்.

ஆங்கிலேயர்களின் டை, கோட்டு சூட்டு நாகரீகமும், றோமன் சட்ட நுணுக்க வல்லமையும், கறுப்புக் கோட்டு கம்பீரமும் கொண்ட மேட்டுக் குடியினரின் வெள்ளாள சாதித்திமிருக்கு மத்தியில், யாழ்ப்பாணத்தவருக்கே சொந்தமான சாதாரண ஏழைமக்களின் தேசிய அடையாளமாக புகுத்தப்பட்ட வேட்டி தோழர் கார்த்திகேசனின் இடுப்பைச் சுற்றியும், ஒட்டிப் பிடிக்காத தொள தொளத்த ஆவாரம் அவரது ஒல்லியான உடம்பிலும், வாயிலே சுருட்டும் அன்றைய ஆசிரியருக்கான அங்க இலட்சணமாக இருக்கும்.

தோழர் கார்த்திகேசனுக்கு மொழியையும், தேசியத்தையும் விற்பனை பொருளாக்கி பண்டமாற்றுப் பாகப்பிரிவினையில் தன்னை இணைத்துக் கொள்ளும் சகல சமூக அந்தஸ்தும் இருந்தும், அக்கொச்சை அரசியலை நிராகரித்தார்.

தோழர் கார்த்திகேசன் தமிழ் சமுதாயத்தில் சாதியின் பெயரால் ஒதுக்கப்பட்ட மக்களின்பால் இரக்கமுள்ள அனுதாபப்பார்வையுடன் அவர்களுடன் இணைந்து சமூக சீர்திருத்தம் வேண்டி நின்றவர் அல்லர். கலங்கிய நீரில் தூண்டில் போட நினைக்கும் சந்தர்ப்பவாத மார்க்ஸிச-லெனினிசவாதியுமல்லர். மாஓவின் சிந்தனையில் மறைந்து நின்று கொண்டு இனவாதத்திற்குத் துணை போனவருமல்லர்.

தொழிற்சங்கவாதத்தை சித்தாந்தப் போராட்டத்துடன் தமிழ் தேசியத்தில் சாதியின் பெயரால் ஒதுக்கப்பட்ட மக்களை வர்க்க உணர்வுடன் ஒன்றுதிரட்டி ஒரு புரட்சிகர சமூக பரிணாமத்தின் மூலம் ஐக்கிய இலங்கையில் சகல இனமக்களின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்த ஒரு புரட்சிகர மார்க்ஸிச-லெனினிஸவாதியாவர்.

இன்றைய பலம் வாய்ந்த கொடூர அரக்கத்தன்மையுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையின் (உலகமயமாக்கலின்) நிர்ப்பந்தத்தில் கார்த்திகேசனின் பெயர் சற்று மறைக்கப்படலாம். ஆனால் விரைவில் உலகின் பலபாகங்களிலும் வீறுகொண்டெழும் சமூகப் புரட்சியின் எழுச்சியில் தோழர் காத்தியின் பங்களிப்பை பருத்தித்துறையிலிருந்து தெவுந்தரை முனை வரை தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் அனைவரும் அவரை நினைவு கூருவர்.

அ. மரியதாஸன்,
நீண்டகால கட்சித் தோழர் (கொழும்பு)

* * *

மகிழ்ச்சிகரமான கற்பித்தலில் நிபுணன்

அ. சிறிக்குமரன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கற்பித்தற் பணியிலும், நிர்வாகப் பணியிலும் காலஞ்சென்ற திரு.மு.கார்த்திகேசனின் காலம் பொற்காலம். அவரிடம் கல்வி பயின்ற மாணவ பரம்பரை பாக்கியவான்கள். மாணவர்-களைப் புரிந்து அவர்களுக்கு பொருத்தமான வகையில் ஆங்கிலம், தூயகணிதம், உயர்கணிதம், பிரயோககணிதம் போன்றவற்றைக் கற்பித்தமை அவருடைய நிபுணத்துவத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

1959 ஆம் வருடம் Prep S.S.C. வகுப்பு தவணைப் பரீட்சை தூயகணித வினாத்தாளில் 105 புள்ளிகளுக்கு வினாத்தாள் கொடுக்கப்பட்டிருந்தன. ஒரு சில மாணவர்கள் முழுவதும் சரியாக விடையளித்தனர். அவர்களுக்கு தேர்ச்சி அறிக்கையில் 105.·.100 புள்ளிகள் இடப்பட்டு அதிபரின் ஒப்பத்துடன் அவரது வகுப்பு அறிக்கைகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் திறமைகளை இவ்வாறு எப்போதும் நன்கு பாராட்டியவர்.

''அன்பு" என்றால் என்ன என்பதை மறைந்த திரு.மு.கார்த்திகேசனிடம் யான் கண்டேன். கல்லூரி மாணவர்கள் எல்லோர் மீதும் அன்பு கொண்டவர். பாடவிடயம் என்றாலும் சரி; தனிப்பட்ட பிரச்சினை என்றாலும் சரி; எங்கும் எப்போதும் அணுகிக் கொள்ள முடிந்தது. அறிவுக்கடலாக விளங்கியதால் மிக எளிமையாக பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டார்.

அறிவின் ஆற்றலை, ஆழத்தை அவரிடம் காணமுடிந்தது. எவருடைய மனமும் நோகாதவாறு அவர் விடையளிப்பார். கோபப்பட்டது அருமை. சோபம் கொண்டால் அவர் சூரன்.

''பகிடிமன்னன்" க.பொ.த (உ.·.த) வகுப்பு 1964 ஆம் ஆண்டு ஆங்கில பாடம் எங்களுக்கு எடுக்க வந்தார். ''Sunday Observer " பத்திரிகை வாசிக்கச் சொன்னார். கேட்டார் ஏன் ''Observer" என வந்தது என்று? தெரியாது என்று

கூறினோம். ''பார்! முதற் பக்கத்தில் பெண்ணின் படம் பெரிதாக உள்ளது. ''Observe her" என்பது தான் ''Observer" என திரிந்தது" என்றார். எல்லோரும் சிரித்தனர். மகிழ்ந்தனர்.

''கமக்கட்" எப்படி வந்தது? அடுத்த வினா ''Come and cut"என ஆங்கிலேயர் கூறியது மாறி ''கமக்கட்" என வந்தது என்றார்.

திரு. மு. கார்த்திகேசன் அவர்களைப் பற்றி நிறையக் கூறலாம். ஆனால் பொருத்தமாகாது. எல்லோராலும் செல்லமாக ''காத்தார்" என அழைக்கப் பட்ட அமரர் திரு. மு. கார்த்திகேசன் ஏழைகளின் தொண்டன். பல தடைவைகள் தேர்தலில் நின்றவர். கம்யூனிஸ்ட் கட்சிக் கொள்கைகளிலிருந்து வழுவாதவர். ''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்". பாட்டாளிகளின் தோழன்.

நள்ளிரவு கடந்தும் வாசிக்கும் பழக்கம் அவருக்கு இருந்தது. நிறைய வாசித்து, அவற்றை நன்கு கிரகிக்கும் தன்மை அவரிடம் காணப்பட்டது.

''Scrabble" விளையாட்டில் வல்லவர். Chambers/Oxford Dictionaries அருகே இருக்கும். அமரர் P. S. குமாரசுவாமி, A. S. கனகரட்ணம், S.கணேசரட்ணம் போன்றவர்களுடன் திரு. மு. கார்த்திகேசன் சேர்ந்து நான்கு பேருமாக சுற்றிவர இருந்து விளையாடுவர். ஏனையோர் அருகே எழுந்து நின்று பார்வையிடுவர். சொற்போர், கருத்துப்போர் ஆகியவையும் இடையிடையே நடைபெறும். யாழ் இந்து ஆசிரிய அறை கலக்கமடையும். அதுமட்டுமல்ல சிறந்த துடுப்பாட்ட இரசிகரும் கூட. இங்கிலாந்து அணி M.C.C அணி வீரர் திறமைகளைப் பற்றி அடிக்கடி கூறுவார்.

அன்பிற்கினிய மறைந்த அதிபர் மு. கார்த்திகேசன் என் நெஞ்சில் நிறைந்த ஆசிரியர். அவரிடம் கல்வி கற்ற நாட்கள் இனியவை.

அவரின் ஆங்கிலப்போதனையின் சில துளிகள் என்னிடம் சொட்டியுள்ளன.

''சொட்டு மருந்து, ஆனால் அவை வாழ் நாள் ஒளடதம்"

அ. சிறிக்குமரன்,
அதிபர், யாழ் இந்துக்கல்லூரி.

* * *

மக்கள் தோழர் காத்தி

வ. சின்னத்தம்பி

''உயிர் கொடுப்பான் தோழன்'' என்பது பொன்மொழி. தோழமை உணர்வின் அதி உயர்ந்த பண்பு. தியாக வாழ்வின் மிக உயர்ந்த செயல் வடிவம். தன்னலமற்ற வாழ்வின் உயர்ந்த பண்பு. சுயநலத்தை துடைத்து தூக்கி வீசிவிட்டு அடக்கி ஒடுக்கப்படும் மக்களுக்காக, அவர்களின் விடிவுக்காக, விடுதலைக்காகப் போராடும் போது, போராட்ட வாழ்க்கை வாழும்போது மக்களின் தோழனாகின்றான். மக்களை நேசித்து மக்களுக்காக வாழுகின்றான். அவர்களின் நலன்களுக்காக தன்னுயிரைத் தியாகம் செய்யவும் தயங்கான். இது கொம்யூனிஸ உணர்வு. தனக்கென வாழா பிறர்க்காக வாழும் செயற்பாடு கொண்ட உணர்வு. இந்த உணர்வு கொண்ட இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சியின் சிறந்த தோழர் காத்தி. யாழ் மக்களால் மிகவும் மதிக்கப்பட்டவர். மக்கள் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட அதியுயர் பட்டம் ''கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன்''. அதனால் அவர் மக்கள் தோழனாக மக்கள் மத்தியில் உயர்ந்து நிற்கிறார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தொன்பதில் (மாதம், திகதி ஞாபகமில்லை) கரவெட்டி கிழக்கில் ஒரு கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு தோழர் கார்த்திகேசன் மாஸ்ரரும் வருகிறார் என அறிவிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டதன் மூலம் தோழர் காத்தியை முதன் முதலாக சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தோழர் காத்தியின் ஆசீர்வாதத்துடன் அவர் பற்றிநின்ற இலட்சியப் பாதையில் முழுமையாக இணைந்து செயலாற்ற முடிந்தது. அன்று தொடங்கிய அவருடனான தோழமை உறவும், இலட்சியச் செயற்பாடும் அவரின் இறுதிக்காலம்வரை தொடர்ந்தது. திரிபுவாதம், சீர்திருத்தவாதம், ''தத்துவம் ஒன்று நடைமுறை வேறு'' என்ற செயற்பாடு என்பன ஒன்றுமே தோழர் காத்தியையும் எம்மையும் பிரிக்க முடியாமற் போனது. ஏனெனில் தோழர் காத்தி இவற்றிற்கெல்லாம் எதிரான உறுதியான போராளி.

கம்யூனிஸ்டுக்கள் தோழர்களாக, முன்பின் அறிமுகமில்லாமல் ஐக்கிய மானவர்கள். அவர்கள் தேசத்தின் விடிவுக்காக மக்களின் நல்வாழ்வுக்காக சுரண்டலற்ற வர்க்க பேதமற்ற பொதுஉடமை சமூக அமைப்பை உருவாக்க ஒன்றிணைந்தவர்கள். நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், குடியேற்றவாதம், நவகுடியேற்றவாதம், ஏகாபத்தியம் என்பனவற்றிற்கெதிரான போராளிகள். ஒடுக்கப்படும், சுரண்டப்படும், நசுக்கப்படும் மக்களின் உரிமைகளை பெறுவதற்காக ஒன்றிணைந்த தோழர்கள். தோழர் காத்தி இவர்களில் ஒருவர். கம்யூனிஸ்டுக்களின் இலட்சியத்தைப் பெற்றெடுப்பதற்காக இலங்கையில் குறிப்பாக வடமாநிலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்.

தோழர் காத்தி மார்க்ஸிச - லெனினிஸ - மாஓசேதுங் சிந்தனையை வழிகாட்டும் தத்துவமாக ஏற்றுக் கொண்டவர். அவர் இந்தத் தத்துவத்தை உறுதியாக இறுதிவரையும் பற்றிநின்று செயற்பட்டவர். திரிபுவாதத்திற்கு எதிரான உறுதியான போராட்டம் நடாத்தியவர். யாழ். பிரதேசத்தில் திரிபுவாத நச்சுக்களைப் பரப்பாமல் தடுக்கத் தோழர்களுடன் முன்நின்று உழைத்தவர். சோவியத் யூனியனின் ஆட்சியதிகாரத்தை குருசோவ் கைப்பற்றியபின் கம்யூனிஸ்ட் இயக்கத்தை திரிபுவாத மார்க்கத்தில் நெறிப்படுத்தி முதலாளித்துவ மீட்சிக்கான பாதையில் வழிநடாத்த முனைந்தான். தோழர் மாவோ தலைமையிலான சீனக் கம்யூனிஸ்ட் கட்சி இதனை எதிர்த்துப் போராடியது. குருசோவ் முதலாளித்துவ மீட்சிக்கான 'சமாதானமும் சகவாழ்வும்' எனும் ''ஐயா'' மார்க்கத்தை மேற்கொள்ள, அதனை எதிர்த்து சீன கம்யூனிஸ்ட் கட்சி புரட்சிகர பாட்டாளிவர்க்கப் பாதையில் கம்யூனிஸ்ட் இயக்கங்களை அணிதிரட்டியது. இந்த சித்தாந்தப் போராட்டம் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கங்கள் அனைத்தையும் பாதித்தது. பிளவுபடுத்தியது. இல்லை; கம்யூனிஸ்ட் இயக்கத்திற்குள் ஊடுருவிய பாட்டாளி வர்க்கத்தின் எதிரிகளை, கூட இருந்து குழி வெட்டுபவர்களை இனங்காட்டியது. இந்தப் போராட்டம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியையும் பாதித்தது. யாழ். பிரதேசத்திலும் எதிரொலித்தது.

கட்சியின் மேல்மட்டத்தில் இருந்த ஒரு சிலர் புரட்சிகர மார்க்ஸிச, லெனினிஸ மார்க்கத்துக்கு எதிரான திரிபுவாத பாதையை தேர்ந்தெடுத்து தமது வர்க்க நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். யாழ். பிரதேச கட்சி திரிபுவாத சகதிக்குள் சிக்காமலும், சீர்குலைந்து போகாமலும் தடுப்பதற்கான செயற்பாடுகளில் தோழர் காத்தி, தோழர் வி.ஏ.கந்தசாமி ஆகியோர் முன்னின்று வழிநடாத்திச் சென்றனர். இவர்களுடன் சேர்ந்து கட்சியின் அடிமட்டத் தோழர்கள் மிகப் பெரும்பான்மையினர் புரட்சிகர மார்க்கத்தை முன்னெடுத்து செல்வதில் வெற்றி கண்டனர். கட்சியின் எல்லா மட்டங்களிலும் சித்தாந்த அறிவை வளர்க்க தோழர் காத்தி தமது பங்கை அர்ப்பணிப்புடன் செய்தார். இதனால் கட்சியில் எல்லா மட்டங்களிலும் தத்துவார்த்த அறிவும் அரசியல் அறிவு வளர்ச்சியும் மேலோங்கியது. தத்துவத்தை நடைமுறையுடன் இணைத்துச் செயற்படும் தன்மையும் தோழர்களிடையே மேலோங்கிக் காணப்பட்டது. யாழ்ப்பாணத்தில் புரட்சிகரக் கட்சியின் வளர்ச்சி மேலோங்கியது.

குருசோவ் திரிபுவாதம் தோன்றிய ஆரம்ப கட்டத்தில் அடிமட்டத் தோழர்களில் பெரும்பாலானோர் தத்துவ அரசியல் அறிவின் சூனிய நிலையிலேயே இருந்தனர். சித்தாந்த முரண்பாடு கட்சிக்குள் ஏற்பட்டதும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். தோழமை உணர்வோடு ஒன்றுபட்டவர்கள் எதிரிகளாகி விடுவோம் என்ற பயம். திரிபுவாதப் பாதையை தேர்ந்து எடுத்தவர்கள் ஆள்பிடிக்கும் வேலையில் ஈடுபட்டார்கள். அவர்கள் ஆள்பிடிப்பதற்கு பயன்படுத்தியது தோழர் ஸ்ராலினுக்கு எதிரான பிரசாரம். அத்துடன் புரட்சி மார்க்கத்திற்கு எதிராகவும், பாராளுமன்ற பாதை மூலம் சோஷலிசத்தைப் பெறலாம் என்ற மாயையுமாகும். இதில் முதன்மையானது தோழர் ஸ்ராலின் எதிர்ப்புப் பிரசாரம்.

ஆள்பிடிக்கும் வேலையில் ஈடுபட்டவர்களில் முதன்மையானவரும் யாழ். பிரதேசத்தின் பிரசாரப் பீரங்கியுமான தோழர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. அவரால் தோழர் ஸ்ராலின் அவதூறு பிரசாரம் செய்யப்பட்டது. அதற்கு முன்பு அவரால் போற்றப்பட்டவர் தோழர் ஸ்ராலின். ஏகாதிபத்திய, பிற்போக்குவாதிகள் விமர்சிப்பது போல், இவராலும் தோழர் ஸ்ராலின் விமர்சிக்கப்பட்டார். விமர்சனத்தை ஏற்றுக்கொள்ள முடியாததால் ''முன்பு இக்குறைகள் உங்களுக்குத் தெரியவில்லையா?" என்று கேட்டபொழுது அவர் ஆத்திரப்பட்டார். ''நீங்கள் அதிகம் படித்துவிட்டீர்கள்" என்றார். ''நீங்கள் படிக்கவில்லை, நாங்கள் படிக்கத் தொடங்கிவிட்டோம்" எனக்கூறி தோழர் காத்தியை சந்திக்கச் சென்றேன். வண்ணார்பண்ணையில் அவர் இருந்த வாடகை வீட்டில் சந்தித்தேன். நடந்த துக்ககரமான சம்பவத்தை கூறியபோது அவரின் முகம் சோர்வடைந்தது. மனம் கவலையடைந்தது. சிறிதுநேர மௌனத்தின் பின் அவர் சொன்னார் ''தோழர்களைப் பிளவு படுத்தும் வேலையைச் செய்வதற்காகவோ, தோழர்கள் மத்தியில் பகைமையை ஏற்படுத்துவதற்காகவோ, கட்சியை சீர்குலைப்பதற்காகவோ நான் கட்சியில் சேரவில்லை. அதை ஒருபொழுதும் என்னால் செய்யவும் முடியாது. சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பது உங்கள் கடமை. அது உங்கள் உரிமையும் கூட. உங்கள் சொந்தக் கருத்துப்படி நடவுங்கள்". அதன் மூலம் கட்சியையும் தோழர்களையும் மதிக்கும் தோழர் காத்தியின் உயர்ந்த உன்னத பண்பு வெளிப்பட்டது. அவர் தோழர் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் மதிக்கப்பட்டதன் இரகசியம் புலப்பட்டது.

தோழர்களின் வியர்வையாலும், இரத்தத்தாலும், உழைப்பாலும் கட்டி எழுப்பப்பட்டு வளர்க்கப்பட்ட புரட்சிகரக் கட்சி திரிபுவாதத்தால் சீர்குலைந்து போவதையோ அதைச் சீர்குலைப்பவர்களையோ அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கட்சியை உறுதியான புரட்சிகரக் கட்சியாக புனரமைக்கும் வழிகாட்டியாகவும் தொண்டனாகவும் ஆசிரியராகவும் செயற்பட்டார்.

கட்சியை திரிபுவாத மார்க்கத்தில் இருந்து மீட்டெடுத்த பின்னர், தேசியரீதியாகவும், பிரதேசரீதியாகவும், சர்வதேசரீதியாகவும் மக்களுக் கெதிரான பிரச்சனைகளின் அடிப்படையில் போராட்டங்களை நடாத்தி மக்களை அணிதிரட்டி

கட்சியைக் கட்டி எழுப்பும் மார்க்கத்தை மேற்கொண்டது புரட்சித் தலைமை. இதன் அடிப்படையில் யாழ் பிரதேசத்தில் தமிழர் மத்தியில் உழுத்துப்போய் இருந்த தீண்டாமைக்கும் சாதி யமைப்புக்கும் எதிராகப் போராட கட்சியின் வழிகாட்டிலின் கீழ் ''சாதி அமைப்புத் தகரட்டும். சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோஷத்தை தாரக மந்திரமாகக் கொண்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் உருவாக்கப் பட்டது. இதில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல தமிழ் மக்கள் மத்தியில் இருந்த முற்போக்கு எண்ணங்கொண்டவர்களும் இணைந்து செயற்பட்டனர். இதுவரை திறக்கப்படாத தேனீர் கடை, ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சங்கானைத் தேனீர் கடைப்பிரவேசப் போராட்டம் சாதிவெறியர்களின் மூர்க்கத்தனமான எதிர்ப்பைப் பெற்றது. தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் தமிழ் தலைவர்கள் எனத் தம்பட்டம் அடித்தவர்களுக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியது. தமிழர்கள் தங்களுக்குள் ஒரு பகுதியினருக்கு அடிப்படை மனித உரிமைகளை வழங்காது அவர்களை அடக்கி ஒடுக்குவது வெளிச்சத்துக்கு வந்தது. அந்தப் போராட்டத்தில் சங்கானை குமரேசு வீரத் தியாகியானார். சாதிவெறியர் தேனீர் கேட்டவர்களுக்குத் தோட்டா கொடுத்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். போராட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்கிய தமிழ் தலைமை தட்டுத்தடுமாறியது. சாதியொடுக்கு முறைக்கெதிரான போராட்டத்தை திசைதிருப்ப பாராளுமன்றத்தில் தானைத் தளபதி திரு. அமிர்தலிங்கம் ''சங்கானையில் வியட்நாம் போர் நடக்கிறது" என அரசுக்கு முறையிட்டார். இதன் மூலம் அரச ஆயுத இயந்திரத்தைக் கொண்டு அடக்கியொடுக்க முனைந்தார். புரட்சிகர சித்தாந்தத்தால் ஆயுத பாணியாக்கப்பட்ட சுயநலமற்ற மக்கள் போராட்டத்தால் மக்கள் வெற்றி பெற்றார்கள்.

அடுத்து மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டம் நடந்தது. ''மாவிட்டபுர ஆலயத்துள் மனிதரை விடமாட்டோம்" என வன்னி 'அடங்காத்தமிழன்' சி. சுந்தரலிங்கம் தலைமையில் சாதிவெறியர் கூட்டம் கச்சை கட்டி நின்றது. பின்னால் தமிழ் தலைவர்களின் மறைமுகமான ஆதரவும், அரச பொலிஸ் இயந்திரமும் போராட்டத்தை எதிர்த்த பெரிய மனிதர்களுக்கு பக்கபலமாக இருந்தது. வெகுஜன இயக்கத் தலைவர் எஸ்.ரி.என்.நாகரட்ணம் தலைமையில் விடாப்பிடியான போராட்டம், மக்கள் போராட்டம் நடந்தது. மக்கள் போராட்டத்தினால் சாதி வெறிக்கும்பல் பின்வாங்கியது. மக்கள் வெற்றி பெற்றனர். இந்தப் போராட்டங்களில் தோழர் காத்தி மக்களுடன் ஐக்கியமாகி உந்து சக்தியாக இருந்தார். தோழர் காத்தி, கட்சியில் இணைந்த ஆரம்ப காலத்தில் இருந்தே ஒடுக்கப்பட்ட மக்கள் நடாத்திய அடிப்படை மனித உரிமைக்கான போராட்டங்களை ஆதரித்தவர். ஐக்கியமானவர். இதனால் பஞ்சமரில் உள்ள ஒரு சாதிக்குடும்பத்தின் பட்டத்தை சாதிவெறியர்கள் காத்தியுடன் இணைத்து அழைத்தனர். அவர் சாதி வெறியர்களின் சிம்ம சொப்பனமாக விளங்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழராக மிளிர்ந்தார்.

தீண்டாமைக்கெதிரான போராட்டத்தோடு ஓய்ந்து விடாமல் தேசிய ஒடுக்கு முறைக்கெதிரானதும், பேரினவாதத்திற்கும் பிரிவினைக்கும் எதிரான வெகுஜன இயக்கப் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற வெகுஜன இயக்கம் உருவாக்கப்பட்டது. அதன் அமைப்பு வேலைகளிலும் கிளைகள் அமைப்பு வேலைகளிலும் தோழர் காத்தி விரைந்து செயற்பட்டார். அவர் செயற்பாடு நிறைவேறுமுன் இயற்கை அவரை எம்மிடமிருந்து பிரித்துவிட்டது. தோழர் காத்தி தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதற்கான நிலைப்பாடு உடையவர். தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் அவர்களின் உரிமைப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டு பிரதேச சுயாட்சியை ஏற்றுக்கொண்ட கம்யூனிஸ்ட்டாகக் கட்சியில் செயற்பட்டவர்.

தோழர் காத்தி ஒரு புத்திஜீவி. ஊசலாட்டமற்ற புத்திஜீவி. பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட மார்க்ஸிச, லெனினிஸ போராளி. வர்க்கப் போராட்டத்தின் மூலமே தேசத்தின் பிரச்சினைகளும், தேசிய இனங்களின் பிரச்சினைகளும் நிரந்தரமாகத் தீர்க்கப்பட முடியும் என உறுதியாக நம்பி செயற்பட்டவர். சோஷலிசம், கம்யூனிஸம் அவரின் இலட்சியம். தோழர் காத்தியை நூல் வடிவில் காண்பதுடன், அவர் இலட்சியங்களை வென்றெடுப்பதற்கான வேலைகளை செய்வதன் மூலம் வரலாற்றில் தோழர் காத்தியை வாழவைக்க வேண்டும். சொல் அல்ல செயல் வேண்டும். இதுதான் அவரின் நடைமுறை.

தோழர் காத்தியின் சித்திரத்தை தீட்டுவது மிகச் சிரமம். மீனின் அழகு தோற்றத்துக்கு அவற்றின் செதில்கள் ஒரு பகுதியாக அமைவது போல், அவரின் வார்த்தைகள், செயற்பாடுகள், அவரின் புறத்தோற்றத்தின் ஒரு பகுதியாக அமைந்திருந்தன. எதையும் எளிமையாகவும் நகைச்சுவை-யோடும் நேரடியாகவும் சொல்வது அவரின் பிரதான அம்சம். அவருடைய சாதனைகள் பற்றிய ஒளிவட்டம் எதுவும் பிரகாசிக்கவில்லை. உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அறிஞனிடம் காணப்பட்ட பராக்கிரமம் அவரிடம் காணப்பட்டது. இந்த பராக்கிரமத்தை மக்கள் அறிவர்.

உலக சமுதாயத்தில் நீதியை நிலைநாட்ட முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் சகல சுகபோகங்களையும் துறந்து, கர்வங் கொள்ளாது, தியாக வாழ்க்கையை வாழ்வதுதான் புரட்சிகர புத்திஜீவியின் பராக்கிரமம். இந்தப் பராக்கிரமம் தோழர் காத்தியிடமும் காணப்பட்டது. இதனால் மக்கள் தோழனாகினார்.

வ. சின்னத்தம்பி
நீண்டகால கட்சித் தோழரும்,
ஓய்வு பெற்ற ஆசிரியரும் ஆவார்.

கார்த்திகேசன் என் ஆசான் ஆனார்

மு. தியாகராசா

அமரர் மு.கார்த்திகேசன் நினைவுமலர் (25ஆவது ஆண்டு) என்ற தலைப்பில் பத்திரிகையில் ஒரு விளம்பரம் பார்த்ததும், 25.04.1976 ல் வீரகேசரியில் என்னால் விளம்பரப்படுத்திய இதையொத்த விளம்பரம் என் மனக்கண்ணில் ஓடவே, நான் எனது கறையான்கள் மலிந்த நாற்சார் வீட்டிலுள்ள சகல பெட்டிகளையும் ஒரு வாரமாகத் துழாவினேன். ஷெல் அடி, குண்டுவீச்சு, பதற்றம், சிறு சிறு இடப்பெயர்வு, 1995ன் பாரிய இடப்பெயர்வு, இத்தனைக்கும் மத்தியிலும் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தேடவே, நம்பிக்கை வீண்போகாமல் அது என் கைக்கெட்டியது. அதனுள் அவர் கைப்பட எழுதிய 3 கடிதங்கள், அவரைப்பற்றி அவரிடம் படித்தவர்கள், அவரை அறிந்தவர்கள், பழகியவர்கள், அவருடன் படிப்பித்தவர்கள் எனப் பல்வேறு ரகத்தினரது ஆக்கங்கள் சேதமுறாமல் இருந்தன. என் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. மனம் இருந்தும் பணம் இல்லாமல் என்னால் வெளியிடவியலாததை, 26 ஆண்டுகளின் பின்னர் வெளியிடக்கூடிய ஒருவரிடம் ஒப்படைக்க எண்ணி, மூலகங்களை வைத்துக்கொண்டு போட்டோ பிரதிகள் எடுத்து அவற்றை அவரின் மகள் திருமதி. ராணி சின்னத்தம்பியிடம் ஒப்படைத்து உரிய இடத்தில் சேர்ப்பித்துதவுமாறு கேட்டுக் கொண்டேன். அவற்றையெல்லாம் எனக்கெழுதி அனுப்பியவர்கள் அங்குதான் இருக்கின்றார்களோ! எங்கெங்கெல்லாம் இடம்பெயர்ந்தார்களோ! அன்றி இறந்துதான் போனார்களோ! நானறியேன். இருப்பினும் அவர்களின் எண்ணக்கரு நூல் உருப்பெறுவது எனக்குப் பேருவகை தருகிறது. திரு.மு(ரு)கா 10.09.1977ல் மறைந்தவர். ஆனால் நான் ஏன் இப்பணியை அவர் இறப்பதற்கு 15 மாதங்கள் முன்னரே செய்ய எண்ணினேன் என்பது எனக்கு நினைவில்லை. எது எப்படி இருந்தும் மனம் போல் அமைவதை நினைக்கையில் மெய்சிலிர்க்கிறது.

அவர் எனது அதிபர் இல்லை ஆசான்

1972ல் இடமாற்றக் கடிதத்துடன் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரிக்குள் நுழைந்து அதிபரின் அறைவாயிலில் நின்று ''Good Morning Sir" என்றேன். அவரும் பதிலுக்கு''Good Morning" என்று கூறிவிட்டு ''வாருங்கோ", என

வாயால் கூறியபடியே தனது மேசையின் எதிர்ப்புறக் கதிரையை நோக்கி தனது கையை (உள்ளங்கை மேலே நோக்கியபடியே) நீட்டி, ''இருங்கோ" என்றார். எனக்கு இருக்க பயம். நின்ற நிலையில் கடிதத்தைக் காட்டினேன். மீண்டும் இருக்கும்படி வற்புறுத்தவே இருந்தேன். சொற்ப நேரம் என்னிடம் பேசிவிட்டு கையொப்பக் கொப்பியைக் காட்டி ஒப்பமிடுமாறு கூறினார். ''Staff Room இல் இரும். நேரசூசி தந்ததும் வகுப்பிற்குச் செல்லலாம்" ன்றார். இதுவே எனது முதல் சந்திப்பு.

உயிரின் மேல் பரிவு

முன்பு மாலைப்பாடசாலை நடைபெற்ற காலம். மதிய உணவு இடைவேளை ஒரு மணித்தியாலம். அது எனக்கு மட்டுமன்றி எமது கல்லூரி ஆசிரியர்கள் அனைவர்க்கும் ஒரு பொற்காலம். ஆசிரியர் தங்குமறையில் நாம் வயிற்றுப்பசியை மட்டும் தீர்க்கவில்லை. சகலரும் அறிவுப்பசியையும் தீர்த்துக் கொண்டோம். அதிபர் எம்மருகில் இருந்து சாப்பிட்டுக் கொண்டே உலகை வலம் வந்து பல்வேறு விஷயதானங்களை சிரித்தபடியே பகிடியும் விட்டு விட்டு எம்முடன் பேசினார் என்பதை விட, எமக்கு பலநூல்களை பல மணிநேரம் படித்துப் பெற வேண்டியவற்றையெல்லாம் சிறிது நேரத்தில் கற்றுத்தந்தார் என்பதே பொருத்தம். வீட்டிற்குச் சென்று சாப்பிட்டு வர நேரம் இருந்தும், நாம் காலையிலேயே சாப்பாட்டை கட்டிச் சென்று அவரிடம் பற்பல கற்றோம். பண்பை வளர்த்தோம்; அறியாமையை அகற்றினோம்; மனித நேயம் மிக்கவர் எவ்வாறு வாழவேண்டும் என்பதை நேரில் கண்டோம். ஒரு நாள் அவர் மதிய உணவிற்கு Staff Room வரவில்லை. நாமோ சாப்பிட்டு முடித்துவிட்டோம். அவரைக் காணாதது பெரிய கவலை. அதிபர் அறையில் அவர் நிற்பதைக் கண்டு, ''Sir! ஏன் சாப்பிட வரவில்லை?" எனக் கேட்டேன். ''பிள்ளைகள் இப்பதானே சிரமதானம் முடித்தவர்கள். அவர்கள் வீடு போய்ச் சாப்பிட நேரம் செல்லும். அதுவரை நிற்கின்றேன்" என்றார். நான் ஏங்கி விறைத்து விட்டேன். இது எனக்குத் தோன்றவில்லை.

''Sir! தெரிந்திருந்தால் நானும் காத்திருந்திருப்பேன்", என்றேன். ''பரவாயில்லை இனிமேல் அப்படிச் செய்யலாம் தானே?", என்றார் பொக்குவாய் சிரிப்புடன். உயிர்மேல் உள்ள உள்ளார்ந்த அன்பை அன்று உணர்ந்தேன். என்னுள்ளே அது காந்தமென ஊடுருவியது.

எளிமையான அதிபர்

ஒரு ஆசிரியர் தனது சுயவிருப்பின் பேரில் ஆசிரியர்கட்கான பாராட்டு, பிரியாவிடை போன்ற நிகழ்ச்சிகளை சக ஆசிரியர்களிடம் நிதி பெற்றுச் செய்து வந்தார். அச் செயலை விரும்பாத நான் ஒரு அமைப்பை உருவாக்கி 'ஆசிரிய நலன்புரிக் கழகம்' எனச் செயல்பட எண்ணினேன். அதிபரின் அபிப்பிராயம் கேட்டேன்.



நெருங்கிய குடும்ப உறவினர் ஒருவரின்
திருமண வைபவத்தின் போது

மிகுந்த சந்தோஷத்துடன் என்னை ஊக்குவித்தார். அது சகஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்புடன் ஆரம்பமானது. 1973ல் முதலாவது கூட்டம். அமைப்பாளன் என்பதால் என்னையே தலைமை தாங்கும்படி அதிபர் கூறினார். நான், ''நீங்களும் அருகில் வந்து இருங்கள்'' என்றேன். ''இக்கழகத்தில் நானும் ஒரு சாதாரண உறுப்பினன். எனக்கு அங்கே வேலையில்லை, நீங்கள் தான் நடாத்த வேண்டும்'', என்றார் அதிபர் அறையில் இருந்தபடியே. நான் முன் மேசையில் இருந்து ஆரம்ப உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கையில் அந்த உயர்ந்த மனிதன் வந்து சகல ஆசிரியர்கட்கும் பின்னால் அமர்ந்தார். அதிகார ஆதிக்கம் செலுத்த விரும்பாத பெருந்தகை, பண்பான, அன்பான அவர் அதிபர்கட்கு வழிகாட்டி.

நகைச்சுவை வதை

''முதல் போட்ட பனங்கொட்டை கீழே, பிறகு போட்ட பனங்கொட்டை மேலே'' பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் தேசிய சேமிப்பு வங்கி பாடசாலைக் கிளை திறப்பு விழாவில் 1974ல் செப்பியது. இவரது மாணவரும், 1983ம் ஆண்டு கலவரத்தில் இராணுவத்தால் வீடு நுழைந்து சுட்டுக் கொல்லப்பட்டவருமான தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தரான கலாபரமேஸ்வரனிற்கு விளங்கவில்லை. ''இலங்கையின் ஏனைய பாடசாலைகளில் இக்கிளைகள் பலகாலமாய் இயங்கி வருகின்றன. நாமே யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில் இவ்வங்கிகள் இயங்கவில்லை என்பதை நிதியமைச்சாரன Dr. N. M.பெரேராவிற்குச் சுட்டிக்காட்டினோம். அதற்கமையவே இக்கிளைகள் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுகின்றன. ஆனால் எங்கள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் கிளையை இறுதியாகத்தான் திறக்கிறீர்கள்'', என விளக்கினார். வங்கியாளாரால் மௌனம் சாதிக்க முடிந்ததேயன்றி வேறு எதுவும் பேச இயலவில்லை.

பனங்காட்டான்

''கறுவாக்காட்டாங்களின்ரை தலைமையிலை தமிழர்கட்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இந்தப் பனங்காட்டான்ரை தலைமையிலை ஏதாவது கிடைக்குமோ என்று பார்ப்போம்'', என கொழும்பு 7ல் வசித்துக் கொண்டு எமக்குத் தலைமை தாங்கிய G. G. பொன்னம்பலம், S. J. V செல்வநாயகம் போன்றவர்கள் மறைந்த பின்னர், பண்ணாகக் கிராமத்தில் பிறந்து, மூளாய் கிராமத்தில் எம்முடன் வசித்து வந்த அமிர்தலிங்கத்தையே ''பனங்காட்டான்'' என்று குறிப்பிட்டு, முன்னையவர்களை விட பின்னையவரில் கொஞ்ச நம்பிக்கைத் தொனிபடவே அவ்விதம் கூறினார் போல எனக்குப்பட்டது.

இணைக்கப்பாடுடையவர்

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் அருகிலுள்ள ஐயனார் ஆலயத்தில் வருடம் ஒரு பூசை செய்வது வழமை. தர்ப்பை போடுவதும், காளாஞ்சி வாங்குவதும் யார்? என எம் ஆசிரியர் மத்தியில் விசனம். அதிபரைக் கேட்கப் பயம். அசல்

கம்யூனிஸ்ட் உடன்படுவாரா? என்பதே எமது சந்தேகம். தயங்கியவாறு அவரிடம் சென்று ''நீங்கள் தலையிருக்க, நாம் எப்படி முன்னிற்பது. ளுசை, நீங்கள் தான் செய்யவேண்டும்", என்றேன். முகத்தில் ஒரு சிறிய மாற்றம், சற்று அமைதி பின்னர், ''சரி" என்றார். எனக்குப் பெரிய புளுகம். எந்த நேரமும் எதையாவது கதைக்கும் அதிபர், பூசை முடியும் வரை பேசாமடந்தையாக நின்று, சகல கருமங்களையும் வேட்டியுடனும், வெறும் மேலுடனும் நிறைவேற்றினார். நெற்றியில் குறியுடனும், கழுத்தில் மாலையுடனும் ஆலயத்தில் பல்வேறு சமாச்சாரங்கள் பேசும் பக்தர்களுடன் அவரை நான் ஒப்பிட்டுப் பார்த்தேன். அமைதியாக இருந்த ''காத்தார்" எதைச் சிந்தித்தாரோ நானறியேன். ஆனால் அவர் எதுவும் பேசாதிருந்தது, எம்மால் எவராலும் செய்யவியலாத செயல் என்பது மட்டும் உண்மை.

Road Master

அவரது ஓய்வுப் பிரியாவிடையின் போது ''இந்த School Master I Road Master ஆக்குகிறீர்கள்", எனறு கூறினார். ஆசிரியர் கழகத்தால் அவருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட துவிச்சக்கர வண்டியின் Model "Road Master". அவர் தான் இனி பாடசாலையில் மாஸடர் வேலை செய்யவியலாது, ஆனால் றோட்டிலே மாஸ்டர் வேலையை முழுமையாகச் செய்யலாம் என்று பொருள்படவே பகர்ந்தார்.

நான் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினருமல்ல, கம்யூனிஸ சித்தாந்தங்களைக் கற்றவனுமல்ல. காத்தாரின் வாழ்க்கை நெறியை முழுமையான விசுவாசத்துடன் பின்பற்ற முயலுகிறேன். அவர் ஒரு ''அவதார ஆத்மா".

மு. தியாகராசா,
ஓய்வு பெற்ற (காபந்து) அதிபர்,
யாழ்பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி.

இவர் கார்த்திகேசனைப் பற்றி ஓர் மலர் பிரசுரம் செய்ய வேண்டுமென, கார்த்திகேசன் அவர்கள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபராக இருந்தும் தனது ஆசிரியர் சேவை வாழ்வில் இருந்தும் இறுதியாக ஓய்வு பெற்ற வேளையில், பத்திரிகையில் விளம்பரம் செய்து தானும் எழுதி, வேறு பலராலும் எழுதப்பட்ட கட்டுரைகள் பலவற்றை சேகரித்தும், பிரசுரிக்க வசதியேற்படாததால், 1976ம் ஆண்டிலிருந்து கடந்த 26 ஆண்டுகளுக்கு மேல் அவற்றைப் பொக்கிஷமாகப் பாதுகாத்து வந்தார். தான் எழுதிய இக்கட்டுரையையும், ஏனைய கட்டுரைகளையும் தானே முன்வந்து கையளித்து இந்நினைவு மலரைச் சிறப்புறச் செய்தார். இம் மலர்க்குழுவின் நன்றிகள் பல அவருக்கு உரித்தாகட்டும்.

* * *

இலக்கியத்திற் துலங்கும் இன்பக் கார்த்திகேசன்

பொன். தெய்வேந்திரன்

1969ம் ஆண்டில் ஒரு நாள் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிச் சினிமா மண்டபம் ஆசிரியப் பயிற்சி மாணவர்களாலும் விரிவுரையாளர்களாலும் நிரம்பி வழிந்தது. யுனெஸ்கோ (UNESCO) சங்கச் சார்பில் திரு கார்த்திகேசன் 'இலக்கிய உலகில் மனிதர்கள் - Men in the Literature World' என்னும் பொருள் பற்றிப் பேச ஏற்பாடாகியிருந்தது. குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு ஒல்லியான நெடிந்துயர்ந்த மனிதர் கடைசிப் புகையையும் உறிஞ்சிச் சுருட்டை வெளியே வீசிவிட்டு மண்டபத்துக்குள் நுழைந்தார். ஆசிரிய மாணவர்களின் குறும்பைக் கேட்கவா வேண்டும்! கொல்லென்று சிரித்தார்கள். ஏன் சிரித்தார்கள் என்பது அவர்களுக்கே வெளிச்சம். தலைவர் அறிமுகம் முடிந்ததும் திரு.கார்த்திகேசன் பேச எழுந்தார். இடுப்பில் ஒரு கை, மற்றக்கை அபிநயங்களைப் பிடித்தது. ஷேக்ஸ்பியர் முதற் கொண்டு மில்டன், செல்லி ஆகியோரையும் இடையிடையே இழுத்து அபரிதமாகப் பேசிக் கொண்டிருந்தார். ஆங்கில மொழி மடைதிறந்த வெள்ளம் போல் பாய்ந்து கொண்டிருந்தது. சபையில் ஊசி விழுந்தால் கேட்குமளவு நிசப்தம். திரு. கார்த்திகேசனின் குரலைத் தவிர எங்கும் ஒரே நிசப்தம். ஒன்றரை மணி நேரம் ஒரு தடையுமின்றி ஆற்றொழுக்குப்போல் பேசிக் கொண்டேயிருந்தார். பேச்சு முடிந்ததும் சபையில் மூச்சேயில்லை. ''இலக்கியம் தெரியாத மனிதர் மனிதரே அல்ல!" என முடித்துவிட்டார். தலைவர் முடிவுரை நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டம் முடிந்தும் ஆசிரிய மாணவர்கள் அவரை விட்டபாடில்லை. அவர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்தும், அவரைத் திக்குமுக்காடச் செய்துவிடுவார்களோ என எண்ணினேன். அவரது இயல்பான துணைவன் திருவாளர் சுருட்டு இருக்கையில் அவருக்குக் களைப்பு ஏது. கழுத்து நரம்புகள் வெளியே தெரிய புகையை உறிஞ்சி உறிஞ்சி பல மேற்கோள்களை எடுத்து வாரி இறைத்துக் கொண்டேயிருந்தார். ஆசிரியர்கள் மகிழ்ந்தனர், வாழ்த்தினர், அதன் பின்பு அவரும் விடை பெற்றுப் போய் விட்டார்.

கடந்த மாதம் ஆசிரிய மாணவர்களை மேற்பார்வை செய்வதற்காக இந்துக் கல்லூரிக்குச் சென்றேன். சரியாக ஏழு ஆண்டுகளின் பின்னர் அவரோடு அளவளாவும் பாக்கியம் கிடைத்தது. என்னைத் தெரியுமா எனக்கேட்டுச் சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்தினேன். நானே அன்று அவரைப் பலாலிக்குப் பேச அழைத்திருந்தேன். அதனால் இப்படிக் கேட்டதும் இருக்கையை விட்டு எழுந்து கைதந்து, ''உங்களை வாழ்நாளிலே மறக்கமுடியுமா?" என்றார். கண்களில் அதே ஒளி; அதாவது இலக்கிய ஒளி; அதே சரளமான ஆங்கில மொழி. பொக்குவாயென்றாலும் பக்குமாகச் சொற்கள் வெளிவந்தன. இப்படியும் ஒரு மனிதரா! என வியந்தேன். கடந்த 50 வருடங்களில் உருவத்திலிருந்தும், பருவத்தின் செயலிலிருந்தும் மாற்றம் பெறாத ஒரே மனிதர் திரு. கார்த்திகேசன். கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்றால் சுலபமாய் எவரும் தெரிந்து கொள்கிறார்கள். ஆனால் நான் அவருக்கு 'இலக்கிய கார்த்திகேசன்' அல்லது 'ஆங்கிலக் கார்த்திகேசன்' என்று பெயர் சூட்டினாலும் அது மிகையாகாது. அரசியலில் பெரிதும் ஈடுபட்ட திரு.கார்த்திகேசன், ஆங்கில மொழியிலும் பெரிதும் பாண்டித்தியம் பெற்றிருந்ததில் வியப்பொன்றுமில்லை. ஆனால் இலக்கியப் பித்தர்கள் தங்கள் சங்கங்களில் அவரை இழுத்துக் கொள்ளாததே பெரும்வியப்பு. ஈழத்திற்குக் கார்த்திகேசன் ஒரு 'ஜெகற்சிற்பியன்'. இன்று போல் என்றும் அவரது பணி தொடரட்டும்! மொழி வளரட்டும்! அவரது சமூக சேவை எங்களுக்கு என்றும் தேவை. ஆதலால் அவர் குடும்ப நலனுடன் பல்லாண்டு வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

பொன். தெய்வேந்திரன்,
விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கழகம், வசாவிளான்.
1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

* * *

நான் கண்ட கார்த்திகேசன் அதிபர்

சபா. நாராயணன்

நேர் கொண்ட பார்வையும் - நிமிர்ந்த நன்னடையும்
அஞ்சா நெஞ்சமும் - அறிவின் கூர்மையும் - எளியநடையும்
மேம்பாடான பண்பாடும் - அரசியல் ஞானமும்
சமதர்ம போக்கும் - சிரித்த முகபாவமும் - அமைதியான
ஆழமான கருத்துரைச் சொற்போர்ச் சிறப்பும்
என்னை இவர்பால் கவர்ந்த காந்தசக்திகளாகும்.

1971ம் ஆண்டு தொடக்கம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபராக ஐந்து ஆண்டு காலம் கடமைபுரிந்து இன்று ஓய்வு எடுத்துக் கொள்ளும் இவர் எமது பாடசாலையின் கட்டட வளர்ச்சிக்காகவும், மாணவர்களின் கல்வி கலாச்சார மேம்பாட்டிற்காகவும், ஆசிரிய மாணவ ஒற்றுமைக்காகவும், ஓய்வின்றி செயல்பட்டு, இப்பிரதேச மக்களினதும் பெற்றோரினதும் - மாணவரினதும் நல்லெண்ணத்தில் குடிகொண்டுள்ளமையை நான் நோக்கும் போது இவர் சேவை இன்னமும் சமுதாயத்திற்கு தேவை என்பதை உணர்கிறேன.

திரு.மு.கார்த்திகேசன் அவர்கள் ஆசிரிய உலகில் இருந்து ஓய்வு பெற்றாலும் பொதுப்பணித்துறை - அரசியல்துறை ஆகியவற்றில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டேயிருப்பார். அவர் 1946ம் ஆண்டு ஆசிரியராக பதவி- யேற்று தொடர்ந்து 30 ஆண்டுகள் கல்விப்பணியாற்றியதோடு மட்டுமல்லாது, அரசியலிலும் ஈடுபாடு கொண்டு சமூக சேவை செய்து வந்தமையும் இவரின் விடாமுயற்சியை எடுத்துக்காட்டுகிறது. ஒரு பொதுவுடமைவாதியாகிய திரு. கார்த்திகேசன் என்றும் ஏழைகளின் தோழனாக இருந்தமையினால் தனது சொந்த முன்னேற்றங்களைத் தவறவிட்ட காலகட்டங்களும் உண்டு.

மேலும் இவர் சேவை நாட்டுக்கும், நாட்டுமக்களினதும், கிராமிய ஏழைகளினதும், தமிழ்பேசும் இனத்தினதும், உயர்வுக்காகவும், பொருளாதார வளத்திற்காகவும் நின்று நிலைக்கட்டும்

''நட்பின் பால் உய்ப்பது அறிவு''

சபா. நாராயணன், *பத்திரிகைச் செய்தியாளர் ஆவார்.*
1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

குறிகள் கோலங்கள் அற்ற ஆனால் குறிக்கோள் உள்ள அதிபர்

சி. சபாநாதன்

''கார்த்திகேசன் மாஸ்டர் கம்யூனிஸ்ட்''. ஆம்! இதுவே அவருடைய விளம்பரக்காரணி. கம்யூனிஸ்ட் என்றால் கடவுள் இல்லை என்பார்களே! அப்படியானால் இவர் ஆசிரியராக எப்படி அமையமுடியும்? ஒரு இந்துமதக் கல்லூரியில் எப்படி அதிபராய், ஆசிரியராய் இருந்து சமூக நன்மதிப்பைப் பெறமுடியும்? என நான் எண்ணினேன். ஆனால் அண்மைக் காலங்களில் அவருடன் நெருங்கிப்பழக வேண்டிய சந்தர்ப்பங்கள் பஸ்வண்டி, பொது வைபவங்கள் ஆகியவற்றில் கிடைத்தன. எங்கள் ஊரில் நடந்த அரசியல் கருத்தரங்கொன்றில் அவர் கொள்கைக்கு மாறான சில கேள்விகளைக் கேட்டேன். புன்முறுவலோடு - சாந்தமாக - ஆதாரபூர்வமான - அறிவியல் விளக்கத்தோடு விடைபகர்ந்தார். தற்பெருமையற்ற, கோலங்கள், குறிகளற்ற, ஆனால் ''சேவை'' என்ற குறிக்கோளுள்ள நல்ல மனிதர். சேவையாளனுக்கு ஓய்வு ஏது? ஆம் சமூகத்திற்கு அவர் ஆற்ற வேண்டிய பணிகள் ஏராளம் காத்திருக்கின்றன. அவற்றைத் திறம்பட ஆற்ற

நோயற்ற உடல்
தளராத மனம்
வற்றாத தனம்

என்பன கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்க அவர்! வளர்க அவர் பணி!

• சி. சபாநாதன் (நித்தி),
உறுப்பினர் வட்டுக்கோட்டை, இந்து வாலிபர் சங்கம்.
1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

என் வாழ்வின் வழிகாட்டி

இ. கிருஷ்ணதுரை

1950ம் ஆண்டு என நினைக்கின்றேன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 7ம் வகுப்பு மாணவனாக நான் இருந்த காலத்தில் திரு.கார்த்திகேசன் அவர்கள் வகுப்பு ஆசிரியராக இருந்தார். அதே வகுப்பில் யாழ் மேயராக இருந்த துரைராசா அவர்களின் மகன் ஸ்கந்தகுமாரும் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது மாநகரசபைத் தேர்தல் நடந்த நேரம். திரு. கார்த்திகேசன் அவர்களும் துரைராசா அவர்களும் ஒரேவட்டாரத்தில் தேர்தலில் போட்டி போட்டுக் கொண்டிருந்தனர். இச்சமயத்தில் திரு.கார்த்திகேசன் அவர்கள் தன்னுடன் போட்டி போடுபவர் மகனாக இருந்தும் பேதம் காட்டாது ஸ்கந்தகுமாரையே வகுப்பில் மொனிட்டராக நியமித்ததுடன் ஆசிரியருக்கு மாறான தேர்தல் துண்டுப்பிரசுரங்களை வகுப்பில் சகமாணவருக்கும் விநியோகித்த நேரத்திலும் அதையும் பொருட்படுத்தாது சகமாணவர்களைப்போல் அவனையும் நேசித்தது அவரது ஆசிரியசேவைக்கு மிகவும் எடுத்துகாட்டு. அதுமட்டுமல்ல தேர்தலில் தோல்வியடைந்த போது கூட முன்பிருந்த நிலையிலிருந்து ஆசிரியர் சிறிதும் மாறவில்லை. கல்லூரி வேறு, தேர்தல் வேறு என்பதையும், எதை எதை எந்த இடத்தில் எப்படி எப்படி செய்யவேண்டுமோ அதை அதை அந்த அந்த இடத்தில் அப்படி அப்படி செய்ய வேண்டும் என்பதையும் போதித்த ஆசிரியர் கார்த்திகேசனை என்வாழ்வின் வழிகாட்டிகளில் ஒருவராக என்றும் கருதுகின்றேன்.

அவரது சேவைக்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டு. ஆண்டுப் பரீட்சை முடிந்து நான் சில பாடங்களில் பெயில் ஆகிவிட்டேன். வீட்டில் தந்தையார் அடித்து விடுவார் என்ற ஒரேபயம். வகுப்பு முழுவதும் ஒரே அழுகையாக இருந்தேன். எப்படியாவது புள்ளியைக்கூட்டிப் போடும்படி ஆசிரியரிடம் மன்றாடினேன். அவர், ''ஆசிரியர் அடிப்பதை விட உன் தந்தை கூட அடித்து விடுவாரா? புள்ளியைக் கூட்டமுடியாது, அது நேர்மைக்குப் புறம்பானது", என்று மறுத்தார். நான் வீடு செல்ல மறுத்தேன். முடிவில் தனது சைக்கிளிலே என்னை

ஏற்றிக் கொண்டு எனது தந்தையாரின் முன்னிலையில் கொண்டு போய்விட்டு இவன் மிகவும் நல்ல மாணவன் நன்றாகப் படிப்பான். சிலபாடங்கள் பெயில். கூடிய கவனமெடுத்தால் திறமையாக வரலாம் எனப்புத்தி சொல்லி அடிக்க வேண்டாம் எனவும் கூறிச் சென்றார். அவர் அன்று செய்ததையும் சொன்னதையும் நான் மனதில் கொண்டு எதிர்காலத்தில் சந்தர்ப்பங்களை நழுவ விடவில்லை. பிறகு அப்பாடசாலையில் திறமையுள்ளவனாகினேன். என்வாழ்வில் இப்படியொரு ஆசிரியர் ஒருமாணவனுக்காக தனது சிரமத்தையும் பாராது சேவை புரிந்திருப்பார் என்பதை ஒருபோதுமே கேள்விப்பட்டதில்லை.

நல்ல ஒரு ஆசிரியர்; நேர்மையானவர்; நீண்டநாள் தொண்டு செய்து சேவையில் இருந்து விலகுபவர்; இனியும் பொதுச்சேவையில் நீண்ட நாள் ஈடுபட ஆண்டவன் அருள் புரிவான் எனத்திடமாக நம்புகின்றேன்.

எத்தனையோ மாணவர்களில் நானும் ஒருவன் என்னை அவர் மறந்திருக்கலாம். நான் அவரை என்றும் மறவேன்.

இ.கிருஷ்ணதுரை,

பண்ணாகம். தெற்கு, சுழிபுரம்.

1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

* * *

இவர் என் அதிபர்

அப்புத்துரை சிவகாந்தா

''தோன்றிற் புகழொடு தோன்றுக அ.·தில்லார்
தோன்றலிற் தோன்றாமை நன்று''

எனும் குறளுக்கு இலக்கணமாக இருப்பவரே ஜனநாயகவாதியும், கம்யூனிஸவாதியும், யாழ். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் இளைப்பாறிய அதிபருமாகிய திரு.மு.கார்த்திகேசன் அவர்கள் ஆவர். அவரின் மாணவனும் அவரின் கொள்கைகளைப் பின்பற்றும் ஜனநாயகவாதியும் ஆகிய நான், மேற்படி பாடசாலையில் பழைய மாணவன் ஆவேன். ஆகையால் அவரது கொள்கைகள் பற்றியும், அவரைப் பற்றியும் கூறிக்கொள்வதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

''எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோருக்குப்
பொய்யா விளக்கே விளக்கு''

என்ற குறள் எனது அதிபருக்கே பொருந்தும். இவர் கல்லூரியில் அதிபராக இருந்தபோது கல்லூரிக்காவும், மாணவர்களுக்காகவும் செய்த சேவைகளும் தியாகங்களும் அளப்பரியன. இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் குறிக்கோளாகக் கொண்டு கல்லூரியைச் செவ்வனே நடாத்தி வந்தார். இவர் நேரத்தைப் பொன்னாக மதிப்பவர். மாணவர்களோ அன்றி ஆசிரியர்களோ தவறு செய்தால் அன்பினாற் கண்டிக்கத் தவறவே மாட்டார். அத்தோடு மன்னிக்கத் தெரிந்த இவரின் உள்ளம் மாணிக்கக் கோவில் என்பதை மறைக்காமல் சொல்லலாம்.

பாடசாலையைப் பொறுத்த வரையில் இவர் மாணவர்களுக்கு பாடசாலை என்பது கல்வி கற்கும் ஆலயம் என்பதை அடிக்கடி நினைவுபடுத்துவார். அதேபோல அவரும் மிக்க கடமை உணர்ச்சியோடு நடந்தார். எதிலும் அமைதி, ஒழுங்கு, அழகு இருக்கவேண்டும் என்பதே இவரது சிறந்த புத்திமதியாகும். இவர் அதிபராக இருக்கும் காலத்தில் குதூகலம் இருந்ததே தவிர குழப்பம் இருக்கவில்லை. இதனால் அவ்வூர் மக்கள் அவரை ஒரு தெய்வமாகக் கருதினார்.

இவர் எந்தவொரு மாணவனையும் தன் சொந்த மகனைப் போல் நினைக்கும் சோஷலிச உள்ளம் படைத்தவர். மாணவர் ஆசிரியர் மத்தியில் ஐக்கியத்தை உருவாக்கிக் கல்வி என்னும் சிலையைக் கட்டியெழுப்ப அரும்பாடுபட்டார். அத்தோடு நின்றுவிடாமல் விளையாட்டுத் துறையிலும் நாடகத்துறையிலும் மாணவர்களை ஊக்குவித்து கல்லூரியின் பெயரை வலிமையாக்கிக் கொண்டார். பகிடிகள் இயற்றுவதில் இவரைப் போல் கைதேர்ந்தவரை நான் இதுவரை கண்டதே இல்லை. சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் பகிடிகள் தரமானதாக இயற்றுவார். அவரிடம் நான் கணித பாடம் படித்தேன். கணக்குப் படிப்பிக்கும் பொழுது பல நகைச்சுவைகளை எடுத்தியம்பி மாணவர்களை ஊக்குவிப்பார். இவர் ஒரு கம்யூனிஸவாதியாக இருந்ததனால் அரசியலைப்பற்றியும், அரசியல்வாதிகளைப்பற்றியும் ஏராளமான நகைச்சுவைகளைச் சொல்வார். அவரின் உடையும், நிமிர்ந்த நடையும் அவரின் சோஷலிசக் கொள்கைக்கு எடுத்துக் காட்டாக விளங்கு கிறது. இவர் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளிலும் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கினார்.

மாணவர்கள் கெட்ட பழக்கங்கள் பழகாதபடி பல அறிவுரைகளைச் சொல்வதோடு, விசேட நாட்களில் எங்களிற் குறிப்பிட்ட சிலரைப் பணம் கொடுத்தே சினிமாவுக்கு அனுப்பிய அந்த அதிபரைப்போல இன்னொரு அதிபரை என் வாழ்நாளில் காண்பேன் என்பதே சந்தேகம். அவர் சுருட்டுப் புகைப்பதில் தனி இன்பம் காண்பவர். அவரின் முகத்தில் கோபமோ சினமோ தோன்றியதை நான் கண்டதே இல்லை. மெலிந்த உடற்கட்டும், நெடிதுயர்ந்த தோற்றமும் கொண்ட இவர் நிமிர்ந்து நடக்கும் போது பாரதி கூறிய தமிழன் போலவே காட்சியளித்தார்.

ஆடம்பரத்தை, அந்தஸ்த்தை, புகழை விரும்பாத ஜனநாயகவாதியாகிய திரு.மு.கார்த்திகேசன் அவர்கள் பதவியிலிருந்து இளப்பாறிய போதிலும், நிலைத்து நின்று சேவை புரிய வேண்டும் என்பதே எனது ஆவல். திரு.மு.கார்த்திகேசன் அவர்களுக்கு காலம் நிலைத்து நிற்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

அப்புத்துரை சிவகாந்தா,

அன்பு மாணவனும், நுவரெலியா வாசியுமாவார்.

1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

* * *

நெஞ்சினில் அழியா இடத்தைப் பெற்றவர்

கே. அருமைநாயகம்

எம்மை வளர்த்து ஆளாக்கிய தாய், தந்தையாரையும் அறிவை வளர்த்து நாலுபேர் மத்தியில் நிற்கக் கூடிய நிலையை வகுத்துத் தந்த குருவையும் என்றைக்கும் மறக்க முடியாது. இந்நிலையிலே எம் நெஞ்சங்களில் என்றென்றும் அழியா இடத்தைப் பிடித்துக் கொண்டவர் ஒருவர் உண்டு. அவர் கார்த்திகேசனாகும். யாழ் இந்துக் கல்லூரியில் நாலுவருடங்களுக்கு மேல் காத்திகேசனிடம் கல்வி கற்றவன் என்ற பெருமையில் இச்சிறு கட்டுரையை எழுதுகிறேன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்று கூறுவதுபோல் ''யாமறிந்த ஆசிரியரில் காத்தார் போல் இனியவர் எங்கும் காணோம்'' எனலாம். கடவுள் இல்லை என்ற தத்துவத்தைக் கொண்டவராக இருந்ததாலும் அவர் முதல் எழுத்துக்களே அவரை எமக்கெல்லாம் கடவுளாக்குகிறது. மு. கார்த்திகேசன் (மு.கா)-குற்றுக்குப்பதில் ''ரு'' இருப்பின் ''முருகா'' தானே! இதனால் தான் என்னவோ முருகனை வென்ற தெய்வ சக்தி இல்லை என்பது போல மு.கா.வை ஈடுசெய்ய எவருமில்லை. அவர் தானே 'முருகா - முருகபிள்ளை கார்த்திகேசன்' என நகைச்சுவையாகக் கூறுவார்.

சில பதவிகளால் சிலர் வளர்ச்சியடைகிறார்கள். அதேபோல் சிலபதவி களும் சிலரால் பெருமையடைந்ததையும் நாம் நாளாந்தம் காணக்கூடியதாக உள்ளது. இந்த நோக்கிலே ஆசிரியத் தொழிலின் மகத்துவத்துக்கும் - மாணாக்கரின் வளர்ச்சிக்கும் - கல்லூரியின் உயர்ச்சிக்கும் - தமிழனின் எழுச்சிக்கும் தன்னையே அர்ப்பணித்த ஓர் உத்தமர் உண்டு என்றால் அவர் கார்த்திகேசனேயாவார். ஆசிரிய சேவை புனிதமானது. வருங்காலச் சந்ததிக்கு வளமான வழியை வகுத்துக் கொடுக்கும், வர்ணிக்க முடியாத சேவை. அறிவுக் கடலைக் கடந்து கரைசேர்வதற்கு ஒரு படகைப் போன்றது ஆசிரியத்தொழில். இதில் படகோட்டி போன்றவன்தான்

ஆசிரியன். இதற்கொப்ப எம் மாஸ்டர் (கார்த்திகேசன்) ஒரு சிறந்த ''படகோட்டி" மட்டுமல்ல, பல படகோட்டிகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமும் போன்றவர் என்றாலும் சாலப் பொருந்தும்.

டிப்ளோமா பட்டம் பெற்ற அவர் பெரும்பான்மையான வகுப்புக்களுக்கு ஆங்கிலம் கற்பித்து வந்தார். ஆங்கில வகுப்புகளிலும் மற்றும் சாதாரணமாக எல்லா வகுப்புக்களிலும் அவர் பாவிக்கும் சொற்கள் 'ஆ-ஹா- கோ ஒன்' (ah-ha-go on) என்பதாகும். கார்த்திகேசனிடம் கற்ற சகலரும் இது கேட்டுப் பழகியிருப்பார்கள். ''இங்கிலிஸ் வித் ஏ சிமைல்" போன்ற புத்தகங்கள் வருமுன் அப்பதத்திற்கேற்ப கற்பித்துக் காட்டியவர் கார்த்திகேசன். ஆங்கிலத்தை வித் எ ஸ்மைலுடன் கற்பித்தவர்.

பாட நேரங்களில் ஹாஸ்யமாகவும், வசீகரமாகவும் கடமையைக் கவனிப்பார். அவரின் ஹாஸ்யங்களைக் கூறுவதாயின் இப்பேனாவாலே எழுதி மாளாது. இருந்தாலும் ஒன்றிரண்டைக் கூறவே விரும்புகிறேன்.

அன்று 1965 ஜனவரி மாதம் விஞ்ஞானம் தாய்மொழியில் கற்பிப்பது என்ற பொருள் பற்றி பெற்றோர் ஆசிரியர் சங்கம் கூட்டப்பட்டு ஆலோசிக்கப்பட்டது. முன்னைய வருடங்களில் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது. மறுநாள் கார்த்திகேசன் எம்வகுப்புக்கு வந்தார். ''சார் நேற்றைய கூட்டத்தில் நீங்கள் என்ன பேசினீர்கள்?" என்று மாணவர் கேட்டனர். உடனே அவர் தனது சாதாரண புன்சிரிப்புடன், ''முன்பெல்லாம் -The diameter inside the circle- என்று ஆங்கிலத்தில் படிப்பித்தோம். ஆனால் இன்று -இந்த வட்டத்தினுள் விட்டம்- இக்கூட்டம் கூட்டப்பட்டது போல என்று தமிழ்ச் சொற்களில் படிப்பிக்கப் போகிறோம்" என்று பேசியதாகக் கூறிமுடித்தார். அப்படி அவர் கூறிய விடை சிலரைச் சிந்திக்கவைத்தது. சிலரை உடனே சிரிக்கவும் வைத்தது.

''ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்" என்பது முது மொழி. இது காத்தார் ஹாஸ்யப்படி ''ஈயத் தோட்டைத் தீயார் கொள்ளார்" என்று மருவியது. பாடசாலையில் பரீட்சை நடைபெற்றுக் கொள்ளும் வேளைகளில் கொப்பி பண்ண முற்படும் மாணாக்கருக்குக் காத்தார் கூறும் வசனம் ஆங்கிலமும் தமிழும் கலந்து ''டோன்ற் (B) பிக்கம் வாக்கார்ஸ் - Dont Become Walkers" என்பதாகும்.

யாழ் இந்துக்கல்லூரியில் செல்லத்துரை இல்ல ஆசிரியராகக் கடமை ஆற்றினார். அன்று 1964ம் ஆண்டு யூலை மாதம் இல்லக்கூட்டம் கூட்டப்பட்டது. அதில் இல்லநிர்வாகிகள் தெரியப்பட்டுக் கடைசியில் இல்ல ஆசிரியரான காத்தார்

பேசும் பொழுது ''நாம் எல்லோரும் இல்லத்தின் முன்னணிக்காகப் பாடுபட்டு எமது இல்லத்தை முதலிடம் பெற வைத்து எமது செங்கொடியைப் பறக்கவிடுவோம்" என்று அதையும் கூட ஹாஸ்யமாகக் கூறியமை என்றும் மறக்கமுடியாது. செல்லத்துரை இல்லத்தின் நிறம் சிவப்பாகும்.

தினமும் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டியிலேயே வருவார். வரும்வழியில் யாராவது ''சேர்" என்றால் போதும், உடனே பிரெக் அடித்து நின்று, மறித்தவர் பிரச்சினை என்ன என்பதை அறிந்து, அதற்குரிய அறிவுரைகளைக் கூறியே வருவார். சாதி, சமயம், ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடில்லாது எல்லோரையும் ஒன்றாக மதித்தமையால் எல்லோராலும் போற்றப்பட்டார்.

இவ்வாறாக மாணாக்கரின் மாட்சிமைக்கும், ஆசிரியரின் அரும் பாட்டுக்கும், கல்லூரியின் வளர்ச்சிக்கும், சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கும் பலகாலமாகப் பாடுபட்ட ஒரு பண்பாளர். இன்று அரச கல்விச்சேவையிலிருந்து ஓய்வு பெறுவது எமக்கு மட்டுமல்லாது, கல்விப் பகுதிக்கே பெரும் இழப்பு என்று கூறிக்கொள்வதோடு தொடர்ந்தும் கார்த்திகேசன் சேவை மாணவ சமுதாயத்துக்குத் தேவை என்று வேண்டுகிறேன்.

கே. அருமைநாயகம்,
Bank of Ceylon, Hatton.

1976ம் ஆண்டளவில் எழுத்துப்பட்ட இக்கட்டுரை, மு.தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

* * *

கண்மூடி நிற்கின்றேன்

தமிழ்ச்செல்வன் மாசிலாமணி

கண்ணாலே உன்னையான் கண்ட தில்லை
காதாலே கேட்டதற்கோர் அளவே யில்லை
பாட்டாகப் பாடிடவோ புலமை யில்லை
உம்மாலே உருவான உள்ள மெல்லாம்
உமைபற்றி ஓயாது உயர்த்திப் பேச
என்னுள்ளே ஏற்பட்ட மதிப்பி னாலே
எழுந்திட்டேன் இன்தமிழில் கவிதை பாட,

ஆங்காங்கே பணியாற்றும் அறிவு சான்ற
ஆசிரிய தெய்வங்களின் ஆர்வம் கண்டேன்
''பாங்காக பணியாற்றும் உமக்கு இந்த
பயிற்சியினைத் தந்தவர் யார்?" சொல்லும் என்றேன்
கள்ளமில்லா எம் தலைவன் கார்த்தி கேசன்
கல்வியிலும் கலைகளிலும் மேதை யென்று
அன்புமனப் பெருக்காலே ஐயா உன்னை
அப்படியே உயர்த்துகின்றார்; அசந்தே விட்டேன.

நற்கல்வி கற்பிக்க நல்ல திட்டம்
நயமாக அதைக்கூறும் சொல்லின் ஓட்டம்
இரவெல்லாம் உருவாகும் கருத்துக் கூட்டம்
இனிமையுடன் எடுத்தியம்பும் உனது நாட்டம்
மற்றவர்கள் வாழ்வதிலே இன்பம் கண்ட
மாண்புமிகு அதிபரவர் பெருமை கேட்டேன்
கற்றவரை கனவினிலே காண்பதற்கே
கண்மூடி நிற்கின்றேன்; காண்பேன் நித்தம்!

தமிழ்ச்செல்வன் மாசிலாமணி,
பண்டாரவளையில் ஆசிரியராகக் கடமையாற்றியவரும்,
முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்டவருமாவார்.
1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கவிதை,
மு.தியாகராசா அவர்களின்
26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

கார்த்திகேசன் என்றொரு மானிடன்

ஈழத்துச் சிவானந்தன்

தேம்ஸ் நகரத்து வீதியிலே சோக்கிரட்டீஸ் உலாவித்திரிகிறான். புத்துலகு படைக்க வேண்டிப் புதுயுக புருஷர்களுக்குப் புரட்சிப் போதனைகள் செய்கின்றான். பழைமையின் அழிவையும் புதுமையின் தோற்றத்தையும் அவாவி நிற்கும் அவனுடைய ஆத்மாவேசம் பொங்கிப்புரள்கிறது. கூட்டத்தினருக்கு சமூக மறுமலர்ச்சிப் போராட்டத்திற்குரிய உந்துதலைக் கொடுக்கிறது. முன்பில்லாத ஒரு மின்சக்தி தங்கள் உடலெங்கும் பரவுவதை உணர்ந்த கூட்டத்தினர் சோக்கிரட்டிஸை வாழ்த்திப் புகழ் மொழிகளால் போற்றுகிறார்கள்.

சோக்கிரட்டீஸ் அவற்றினை ஏற்று அமைதி கொண்டானில்லை. மாறாகப் ''பாராட்டுக்களுக்காக இந்த சோக்கிரட்டீஸ் பாடுபடவில்லை. அவற்றினைக்கண்டு இவன் திருப்தியடையப் போவதுமில்லை. இவனுக்கு வேண்டியது மனிதகுலத்தின் அறிவுபூர்வமான மறுமலர்ச்சி வாழ்க்கைதான். புகழ்மொழிகளால் இவனை மயக்கவோ திருப்திப்படுத்தவோ முடியாது. இவன் சமூகவாழ்வில் பூரண மாற்றத்தினை வேண்டிநிற்கும் ஒரு சமூக ஊழியன்" என்று முடிக்கிறான்.

''சக்கை..! இவனல்லவா ஞானி! இவனல்லவா புரட்சியாளன்!" என்று கைதட்டி ஆரவாரிக்கிறார் திரு.மு.கார்த்திகேசன். அமைதியாகப் பார்த்துக் இருந்தவர்கள் கார்த்திகேசனின் உணர்ச்சி வெளிப்பாட்டினைக் கண்டு தாமும் அவருடன் கலந்து கரகோஷம் செய்கிறார்கள்.

ஆம்! யாழ் இந்துக்கல்லூரி திறந்தவெளியரங்கிலே இற்றைக்கு பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு நான் நடித்த சோக்கிரட்டீஸ் நாடகத்தினைக் கண்டு களிபேருவகை கொண்டு என் வளர்ச்சிக்கான வாழ்த்துதலை வழங்கியவர் கார்த்திகேசன். அன்றிருந்தே என்னைக்கண்டால் ''சோக்கிரட்டீஸ்" என்று அழைத்து மகிழ்பவர். என்னை மட்டுமா? இல்லை. அவரிடம் படித்த மாணவர்கள் அத்தனை பேருடனும் - அவருடன் இணைந்த அத்தனை இளைஞர்களுடனும் அவர் இதயம் கலந்து பழகுபவர். வகுப்பறையில் பாடநூல் பகுதிகளோடு தொடர்புடைய சோஷலிச சித்தாந்தங்களுக்கு இலகுவான விளக்கம் அளித்து கார்ல் மார்க்ஸ், லெனின், ஏங்கல்ஸ் ஆகியோரை இளைஞர் உலகுக்கு அறிமுகப்படுத்தி

பன்முகப்பட்ட பார்வையையும், சிந்தனை விரிவையும், வீச்சையும் உண்டாக்கிவிட்டதில் கார்த்திகேசனுக்குப் பெரும்பங்குண்டு. சோஷலிசம் என்கின்ற சொல்லை நம்மில் சிலர் உச்சரித்துப் பார்ப்பதற்கு முன்பே அதனுடைய பொருளாழத்தை கருத்துச் செறிந்த விளக்கங்களோடு விஞ்ஞானரீதியில் பலருக்குப் புரிய வைத்த பெருஞ்சிறப்புக்கும் இவர் உரியவர். இவரிடம் பொதுவுடமைத் தத்துவங்களை கேட்டு விளங்கிக் கொண்டு மேடைகளுக்கும், மேல்நாடு களுக்கும், ஏன்? பாராளுமன்றக் கதிரைகளுக்கும் போனவர்கள் பலர்.

இளைஞர்கள் சமுதாய வாழக்கையை நன்றாகப் புரிந்து கொண்டு பட்டினி, வறுமை, வேலையில்லாத திண்டாட்டம், சுரண்டல் முதலிய கொடுமை களின்றும், தீயசக்திகளிலிருந்தும் மனிதகுலத்தை மீட்டுப் போதமளித்து சரியான பாதைக்கு திசை திருப்பிக் காப்பாற்றும், சோஷலிச சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதில் திரு.மு.கா. அன்று தொடங்கி இன்றுவரை கருத்துச் செலுத்தி வருகின்றார். ஓடும் ரெயிலிலும், கூடும் இடங்களிலும், பொது மேடைகளிலும், சிறு குழுக்கள் மத்தியிலும் களைப்பற்று உற்சாகத்துடனும், வாலிப விறைப்புடனும் நடைமுறைகளையும், சித்தாந்தங்களையும் இலகுவாகவும் இடையிடையே பகிடி கலந்தும் தெளிவாக்குவதில் மு.கா. உன்னத இடத்தை வகிப்பார்.

ஒரு நேர்மையான கம்யூனிஸ்ட்டுடன் படிப்பதும் கதைப்பதும், விவாதிப்பதும், ஏன்? மூர்க்கமாகச் சீறிச் சினந்து சண்டை பிடிப்பதும் பயனுள்ள சிந்தனைக்கும், விழிப்புக்கும் உதவி செய்யக் கூடியவை. இத்தகைய அனுபவங்களை மு.கா.வுடன் தொடர்வு கொள்பவர்கள் பெற்று மகிழ்வது குறிப்பிடத்தக்கது. கார்த்திகேசன் என்றொரு மானிடனின் கம்யூனிஸ்ட் போக்குகள் அந்தக்காலத்தில் என் பிஞ்சு நெஞ்சில் படிந்திருந்ததினாலே தான் தென்னிந்தியாவில் கே.பாலதண்டாயுதம், ப.மாணிக்கம், தா.பாண்டியன், மே.து.ராசுகுமார், நா.வானமாமலை, ஆ.சிவசுப்பிரமணியம் ஆகியோரோடு இலகுவில் ஐக்கியமாகி முற்போக்கான சிந்தனைகளை என்னுள் வளர்க்க முடிந்தது. மெய்ஞான முடிவுகளின் வழிவந்த சித்தாந்தங்களையும் ஆன்மீகத் தேடல்களையும் பின்பற்றும் யான் சிவபெருமானையே ஒரு நேர்மையான கம்யூனிஸ்டாக நினைத்துப் பார்ப்பதற்கு மு.கா. போன்ற பொதுவுடமை வாதிகள் வழிகாட்டினார்கள் என்று கூறமுடியும். புரட்சிகரமான சித்தாந்தங்களும், தத்துவங்களும் உள்ளதை உள்ளபடியே சொல்லி விளக்கங்கள் செய்வதில் திருப்தி கொள்ளாமல், உள்ளதை மக்களின் நன்மைக்காக மாற்றியமைத்துக்காட்டி சீரான வாழ்வு அமைக்க உதவ வேண்டுமென்பதில் அவருக்குப் பெருவிருப்பமுண்டு.

பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதில் எவ்வித கூச்சமும் இல்லாமல் நெஞ்சினில்பட்டதை அது தனக்கு என்ன தீங்கினை விளைத்தாலும் பொருட்படுத்தாது வெளிக்காட்டி ஒரு சமுதாய வீரனாகவும் கௌரவங்களைக் கடந்த ஒரு சமூக விஞ்ஞானியாகவும் பீடு நடைபோடுபவர் திரு.மு.கா. அவர்கள்.

''மனித குலத்திற்கு உண்மையானவனாக நடப்பது, மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறுவது, கசப்பான உண்மையானாலும் அதனை தைரியமாகக் கூறுவது, மனிதர்களின் மனதிலே எதிர்காலத்தைப் பற்றிய

நம்பிக்கையைப் பலப்படுத்துவது - அதைக்கட்டுவதிலே அவர்களுக்குள்ள சக்தியைப் பலப்படுத்துவது, உலக அமைதிக்காகப் போராடுவது, எங்கெல்லாம் தன் குரல் ஒலிக்குமோ அங்கெல்லாம் சமாதான வீரர்களை ஆதரிப்பது, முன்னேற்றத்திற்கான உண்மையான நேர்மையான முயற்சியில் மக்களை ஒன்று திரட்டுவது இதுதான் ஒரு புத்தி ஜீவியின் கடமையாகும்" என்றான் உலகப் புகழடைந்த நாவலாசிரியன் மிகையீல் ஷொலகோவ். அவனுடைய இலக்கணங்களுக்குப் பொருத்தமான இலக்கியமாக வாழ்ந்துகாட்டுபவர் கார்த்திகேசன்.

அரசியலையும் பொதுவாழ்க்கையும் இன்று பதவிதேடும், பொருள்தேடும் துறைகளாக மாற்றிக் கொண்டிருக்கும் ஒரு சிலரின் மத்தியில் கார்த்திகேசன் என்ற மனிதன் மானிட ஜென்மத்தின் உயர்ச்சிக்காக தன்னையே உருக்கும் ஒரு தர்மவானாகத் திகழ்கிறார்.

புரட்சிகரமான சமுதாயக் கண்ணோட்டம் கொண்ட கார்த்திகேசன், ஒவ்வொரு இனங்களுக்கிடையே வளர்ந்து வரலாற்றுச் சிறப்புக் கொண்ட ஆன்மீக கலாச்சார ஆக்கங்கள் சிதைக்கப்படாமல், ஊக்குவிக்கப்பட்டு தொடரான வளர்ச்சிக்கு வழிகோல வாய்ப்பளிக்கவேண்டும் என்னும் கருத்துடையவர்.

பல ஆண்டுகட்கு முன்னால் காலஞ்சென்ற யாழ்நகர மேயர் ச.துரைராஜாவுடன் யாழ் இந்துக்கல்லூரி வட்டாரத்தில் மாநகரசபை தேர்தலில் திரு.கார்த்திகேசன் போட்டியிட்டபோது நானும் எனது நண்பர்களும் கொடிபிடித்துக் கோஷமிட்டு வாக்குச் சேகரித்திருக்கிறோம். அந்த நேரத்தில் சில இளவட்டங்களின் அநாகரிகமான துடுக்குச் செயல்களைக் கண்டித்து தமிழினத்தின் கலாச்சாரப்பண்பை நினைவூட்டி அந்தத் தமிழ்ச்செல்வங்களைக் கார்த்திகேசன் வழிநடத்தியமை பசுமையான நினைவுகளாய் நிற்கின்றது.

கம்யூனிஸ்ட் என்றால் அக்கிரமப் போர் விரும்பி; சமாதானப் பகைவன்; இரத்தவெறியன்; கொலையாளி; ஆர்ப்பாட்டங்களில் ஆனந்தமடைபவன் என்றெல்லாம் ஒருகாலத்தில் பொதுமக்களிடத்திலிருந்த தப்பான எண்ணங்களை போக்கடித்தவர்களில் மு.கா. முதன்மையான இடத்தைப் பிடித்துக் கொண்டவர்.

கம்யூனிஸ்ட் என்பவன் அநியாயங்களை எதிர்ப்பவன்; அறியாமையைப் போக்குபவன்; நியாயங்களுக்காகப் போராடுபவன்; பொது மக்களின் பூரண இன்பத்துக்கும் சுதந்திரத்திற்குமாக உழைப்பவன் என்று தெளியவைத்தவர் அவர். அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றுபவர்கள் அவருடைய குணநலன்களையும் புரிந்து கொண்டு வாழ்வில் பேரும் புகழும் பெறவேண்டும்.

ஈழத்துச் சிவானந்தன்,

முன்னாள் யாழ் இந்துக்கல்லூரி மாணவனும்,
ஆசிரியருமாவார். தற்போது கனடாவில் வாழ்பவர்,
ஈழத்துப் புலவர் சிவானந்தன் என்றழைக்கப்படுபவரும், பத்திரிகையாளரும்,
திரு.க.சிவராமலிங்கம் என்பவரின் சகோதரருமாவார்.
1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை,
மு. தியாகராசா அவர்களின் சேகரிப்புகளில் ஒன்றாகும்.

மு. கா. ஒரு பல்கலைக்கழகம்

காவலூர் எஸ். ஜெகநாதன்

''திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன்" என்பது என் நெஞ்சில் நினைவில் வரும் போதெல்லாம், அதனை இந்நாள் நடைமுறைக்கேற்ப மாற்றி,

''அன்று திரைகடலோடித் திரவியம் தேடிய தமிழன்,
இன்று திரைகடலோடித் திரளிமீன் தேடுகிறான்"

என்று கூறப்பட்டதும், கூடவே அதைக்கூறிய ஆசிரியர் கார்த்திகேசனின் உருவமும் மனக்கண்ணில் நிழலாடும். நகைச்சுவையான வாசகம்தான், எனினும் அதை உற்று நோக்கும் போது அதன் பொருள் எத்துணை ஆழமானது என்பதும் புலப்படும். அகன்ற நெற்றி, வழித்து வாரிய தலைமயிர்கள், பொக்கையான வாயில் எந்நேரமும் நடனமிடும் நளினமான புன்னகை, உடலோடு ஒட்டாது தொங்கிக் கொண்டிருக்கும் லோங்ஸ், அதை இழுத்து விட்டுக் கொண்டு நிமிர்ந்து நடந்து வரும் தோற்றம். அவரைத் தூரத்தில் கண்டதுமே ''காத்தார் வாறார்டா" என்ற குரல்கள் கிளம்பும். அதைத் தொடர்ந்து வகுப்பு முழுவதுமே மகிழ்ச்சிக்கடலில் ஆழ்ந்துவிடும். இத்தனைக்கும் அவர் எங்களுக்கு நடத்தியபாடம் ஆங்கிலம். ஆங்கிலப் பாடத்துக்கு ஆசிரியர் வரும்போது மாணவர்கள் மகிழ்ச்சி அடைவது இந்நாளில் ஆச்சரியமானதொன்றல்லவா?

இயல்பாகவே அவரிடம் அமைந்துவிட்ட நகைச்சுவை உணர்வு, மாணவர்களிடம் கூட நட்புரிமையுடன் பழகும் சுபாவம், அன்பினால் அனைவரையும் அடக்கியாளும் ஆற்றல் அனைத்தும் காத்தார் வகுப்பு முடிந்துபோகும் போது அனைவருமே ஏன்தான் வகுப்பு முடிந்ததோ என்று கவலைப்பட வைக்கும். கார்த்திகேசன் என்பதைவிட 'காத்தார்' என்ற பெயரே மாணவர் மத்தியில் மிகவும் பரிச்சயமானதாக இருந்தது.

ஆசிரியர் கார்த்திகேசன் அதிபராகிய பின்னும் பழைய 'காத்தாரா'கவே பழகினார். ஒருவகை அசாதாரணமான மிடுக்கு, வேண்டுமென்றே வரவழைக்கப்பட்ட கோபம், கையிலே பிரம்பு, நிலத்திலே கால்படாத அளவுக்கு



பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் அதிபர்
கார்த்திகேசனின்பிரியாவிடை வைபவத்தின் போது

நடப்பான ஒரு நடை இவையெல்லாம்தான் அதிபர் பதவியின் இலட்சணங்கள் என்று அறிமுகமான எங்களுக்கு, கார்த்திகேசன் அவர்கள் அத்தகைய தன்மைகளுக்கு முரண்பட்ட அதிபராக இருந்த காலம், நாமெல்லாம் நினைத்து நினைத்து நெஞ்சம் இனிக்கும் காலமாகும். அதிபருடைய அறையிலேயே போய் இருந்து பலவிடயங்களைப் பற்றியும் மனதில் பதியவைத்துக் கொண்டு, எந்த இடத்தில் கண்டாலும் தங்கி நின்று ஒரு கதை கதைத்து விட்டுப் போகின்ற அதிபர் நான் அறிந்த வகையில் அவர் ஒருவர்தான் என்று நினைக்கிறேன்.

பாடசாலையின் ஆசிரியராகவும், அதிபராகவும் மட்டுமன்றி அவரை ஒரு தரமான அரசியல் அறிஞராகவும் பல சந்தர்ப்பங்களில் உணர முடிந்தது. அப்போது எனக்கு அரசியல் அரிச்சுவடியே தெரியாத நேரம். ஒருதடவை அதிபருடன் கதைத்துக் கொண்டிருந்த போது ''பீக்கிங் கம்யூனிஸ்ட்டுக்கும் மாஸ்கோ கம்யூனிஸ்ட்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டபோது கையை அடிப்பதுபோல் ஓங்கிக்காட்டி ''பீக்கிங்" என்றுவிட்டு, மறுகணமே கையைஅணைப்பதுபோல் பாவம் காட்டி ''மொஸ்கோ" என்றார். அதன் அர்த்தம் அடக்குமுறைக்கெதிரான ஆயுதப் போராட்டத்தால் வென்றெடுத்த கலாச்சாரப் புரட்சியைத் தழுவியது பீங்கிங்கை தலைநகராகக் கொண்ட சீனா என்பதும், ''சமாதான சக வாழ்வு" எனும் போர்வையில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை தழுவியது மொஸ்கோவைத் தலைநகராகக் கொண்ட சோவியத் ருஷ்யா என்பதுமாகும். அரிசிப்பிரச்சனையை வைத்து அரசியல்வாதிகள் லாபம் தேடியவேளை ''இது அரசியல் இல்லையடா தம்பி 'அரிசி'யல்" என்று கேலியாக, ஆனால் கோபத்துடன் ஒரு தடவை அவர் கூறியது இன்றும் நினைவில் நிற்கிறது.

தன்பெயரை பிரபலப்படுத்திக் கொள்ளாது பல சமூக சேவைகளை அவர் முன்னின்று நடத்தியுள்ளார். ஆசிரியராக, அதிபராக, அரசியல் வாதியாக, சமூகசேவையாளராக அவர் ஈடுபட்ட எந்தத்துறையிலும் மற்றவர்கள் பின்பற்றக் கூடிய வழிகாட்டியாகவே திகழ்ந்தார். அவருடைய பாதையை அடியொற்றி தன்னல மறுப்புடன் பொதுவாழ்வில் ஈடுபடவிரும்பும் இளைஞர்கள் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் நிறைய உண்டு. ஆம் அவர் ஒரு பல்கலைக்கழகம் என்பதில் சந்தேகமேயில்லை. ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்று தன்னை முழுதாக பொதுப்பணியில் ஈடுபடுத்தியுள்ள அவரது பணி சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

காவலூர் எஸ் ஜெகநாதன்,

1976ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இக்கட்டுரை, மு. தியாகராசா அவர்களின் 26 வருடங்களுக்கு முன்பான சேகரிப்புகளில் ஒன்றாகும்.

திரு. மு(ரு)கா.
எங்கே மறைந்தாயோ?

ஆன்று அமைந்து அடங்கிய சான்றோன்;
அரும் பெரும் குரவன், தரிசனவேதி;
தயாநிதி, ஒழுக்க வரம்பு;
சமன் செய்து சீர்தூக்கும் கோல்;
சைவ நீதியின்படி வாழ்ந்த சமயி;
கொள்கைக் குன்று;
பொருளாறு பாயும் புதுமைப் பேச்சோன்;
ஈர நெஞ்சோன்; வீரமுரசம்.

இவர்தான் எங்கள் மறைந்த அதிபர் திரு.மு.கார்த்திகேசன்-எங்கள் ஆசான். எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

எங்கள் பாடசாலைக்கு 1972 தைத்திங்கள் அதிபராய் வந்தாய் ஐயா. வந்ததும் குணக்குன்றாய் நின்றாய். கொள்கை விளக்கம் தினமும் தந்தாய்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே முதன் முதல் எமது பாடசாலைக்குச் சேமிப்பு வங்கி - இரு புதிய கட்டிடங்கள் - சைவ வளர்ச்சிக் கழகம் - விவசாய வளர்ச்சிக் கழகம் - H.N.C.E. வகுப்பு இன்னும் எத்தனையோ அமைத்துத் தந்தாய்.

எங்கள் தருமமே! நீதியே! சிரிக்கச் சிரிக்கக் கதை சொல்லிச் சிந்திக்க வைத்தாய் தீந்தமிழே! நீ செய்த சேவைகள் எல்லைக்கடங்கா!

எம்மதமும் சம்மதம் என்ற தத்துவஞானியே! தருக்க ஞானமேதையே! உன் ஆங்கிலத்தில்தான் எவ்வளவு ஆழம்! எவ்வளவு வேகம்!!

உன்மறைவு தாங்கமுடியாததையா! எமது சமூகத்திற்கு, சமயத்திற்கு, மொழிக்கு, நாட்டுக்கு, பொதுவுடமைக் கொள்கைக்கு தாங்க முடியாத பேரிழப்பு ஐயா!!

உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

திரு.மு.கார்த்திகேசன் *செப்டம்பர் 10, 1977 மறைந்த போது அவர் பிரிவால் துயருற்ற பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பிரசுரித்தது. இப்பிரசுரமும் மு.தியாகராசா அவர்களின் 26 வருட சேகரிப்புகளில் ஒன்றாகும்.*

பொதுவுடமைவாதி ஒருவர்

கலாநிதி. க. சொக்கலிங்கம்

ஒருவர் என்ற சொல் ஓர் ஆளையும் குறிக்கும், ஒப்பிட முடியாத சிறப்புப் பொருந்தியவரையும் குறிக்கும். அமரர் மு.கார்த்திகேசனைப் 'பொதுவுடைமைவாதி ஒருவர்' என்று குறிப்பிடுகையில் இரண்டாவது பொருளே இவ்விடத்தில் கொள்ளப்படுகின்றது.

ஆம்! இலங்கையில் வாழ்ந்து மறைந்த பொதுவுடமைவாதிகளுள்ளே அமரர் கார்த்திகேசன் (ஒப்பில்லாத) ஒருவர்தாம். உண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.

சொல் ஒன்று, செயல் ஒன்று என வாழாத உன்னதமான இலட்சியவாதியாகத் தம்மை இனங்காட்டி தமது சுவடுகளை இம்மண்ணில் பதித்துவிட்டு அவர் மறைந்துபோனார்.

எல்லாரும் எல்லாம் பெற்று, எல்லாரும் இன்புற்று ஒத்தவராய் சமதகுதியுடையோராய் வாழ வேண்டும் என்று அவர் கனவு காணவில்லை. அதைவிடுத்து தமது வாழ்வையே சமத்துவ சன்மார்க்க வழியில் (சன்மார்க்கம் என்பது ஆன்மீகக்கருத்தைத் தரவில்லை என்பதை அழுத்திக் கூறவிரும்புகின்றேன்) நடத்திச் சென்ற மாபெரும் மனிதர் அவர்.

தமது கொள்கைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நெகிழ்த்தாமலே, அக்கொள்கைகளுக்கு முரண்பட்ட சூழ்நிலையில் இணைந்து ஒத்திசைந்து வாழ்ந்த சிறப்பும் அவருக்கே உரித்தானது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே மூத்த முதிர்ந்த ஆசிரியராய்த் தமது பணியினைத் திறம்பட நடாத்திவந்த அமரர் மு.கார்த்திகேசனுடன் சுமார் பத்தாண்டுகள் சக ஆசிரியராய்ப் பணிபுரியும் பேறு எனக்கும் கிடைத்தமை பற்றி மகிழ்ச்சியோடு அதை நினைவுகூருகின்றேன்.

தமது கொள்கையைத் தளர்த்தாமலே, அதேசமயம் மிகச் சமான்யனான எனக்கு அவர் முன்வந்து செய்திட்ட உதவியை என்னால் என்றுமே மறத்தல் இயலாது.

1969ம் ஆண்டு யாழ். இந்துக்கல்லூரி இந்து மாணவர் மன்றம், மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா நினைவாக ஒரு மலரினை வெளியிட்டது. அம்மலருக்கு நான் பொறுப்பாசிரியனாய் இருந்தேன்.

மகாத்மா காந்தி 1927ம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகைபுரிந்த வேளையில், யாழ். இந்துக்கல்லூரிக்கும் விஜயம் செய்தார். அந்த விஜயத்தின் போது அவர் ஆற்றிய உரையினையும் மலரில் வெளியிடுவது பொருத்தம் என்று உணர்ந்து அந்த உரைக்கு (ஆங்கிலத்தில் இருந்த உரைக்கு) ஓர் அறிமுகம் - ஆங்கிலத்தில் - எழுதித்தரும்படி கார்த்திகேசன் அவர்களை வேண்டினேன். எனது வேண்டுகோளைச் செவிமடுத்த அவர் சிறிது புன்னகை புரிந்தார். உமக்கு எனது கொள்கை தெரியும். மகாத்மா காந்தியின் கொள்கையில் எனக்கு உடன்பாடில்லை. இதுவும் உமக்குத் தெரியும். ஆனால் நீர் கேட்கிறீர். எனது சகஆசிரியர், என் அன்பிற்கு உரியவர் என்பதால் உமது வேண்டுகோளை ஏற்று எழுதித்தருகிறேன் என்று தமக்கேயுரிய பாணியில் அறிமுகத்தினை அழகாக எழுதித் தந்தார்.

''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
நாகரீகம் வேண்டு பவர்''

என்ற பொய்யாமொழி அவ்வேளையில் எனக்கு நினைவில் வந்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. கார்த்திகேசன் 'நனிநாகிகர்' என்பதற்கும் ஐயமே இல்லை.

கார்த்திகேசன் அவர்களோடு உரையாடுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தரும் ஒன்று என்பதை அவரோடு பழகிய அனைவரும் அறிவர். 'Wit' எனப்படும் சொற்சாதுரியம் அவருக்குக் கைவந்த கலை. ஆங்கிலத்தில் தேர்ந்த அவர், அதே லாவகத்தோடு தமிழிலும் தமது சொற்சாதுரியத்தைக் கையாள்வது கண்டு நான் பெரிதும் வியப்புற்ற சந்தர்ப்பங்கள் மிகப் பல. ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களின் முன்பு 'வீரகேசரி' வார இதழிலே ''விட்டார் ஐயா விற்(wit) ஒன்று'' என்ற தலைப்பில் நான் எழுதிய கட்டுரைத்தொடர் ஒன்றில் அமரர் அவர்களின் சொற்சாதுரியத்திற்கும் இரண்டொரு உதாரணங்களை எடுத்துக்காட்டியிருந்தேன். இவ்விடத்தில் ஓர் உதாரணம் மட்டும் அவரின் சொற்சாதுரியத்திற்கு எடுத்துக்காட்டாய் அளிப்பது பொருத்தமாகும்.

'செக்குவார' என்ற போராளியின் பெயரைத் தாங்கி இலங்கையிலே குழப்பங்கள், புரட்சிகள் நடைபெற்ற காலகட்டத்தில் இலங்கை முழுவதுமே செயலிழந்து விறைத்துப் போயிருந்தது. அக்காலப் பிரிவில் கார்த்திகேசன் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகப் பணிபுரிந்தார்.

அக்காலகட்டத்தில் எங்கள் (ஆசிரியர்களின்) சம்பளத்தினை வேம்படி மகளிர் கல்லூரியிலே (பாதுகாப்புக்கருதி) காசோலையாக வழங்க ஏற்பாடாகி இருந்தது.

மேசை ஒன்றின் அருகில் அதிபர் (கார்த்திகேசன்), சம்பளப்பத்திரத்தில் கையெழுத்துப் பெறும் ஆசிரியர், காசோலை வழங்கும் ஆசிரியர் என்று மூவர் அமர்ந்திருக்க நாங்கள் வரிசையாகச் சென்று காசோலையைப் பெற்றோம். அவ்வேளையில் கார்த்திகேசன் வழக்கமான தமது சொற்சாதுரியத்தை வெளிப்படுத்தியவகை இது. அவர் சொன்னது ஒரு வார்த்தை மட்டுமே அது 'செக்குவாரா' என்பதாகும். அச்சொல்லிலே அவ்வேளையில்,

1. செக்குவாரா -
   அந்நேரத்தில் அனைவரும் அறிந்த இயக்கப்பெயர்.
2. செக் உவரா? (check உவரா?)
   உவர்தான் காசோலைக் உரியவரா?
3. செக் உ(U)வரா?
   உது (cheque) உமது காசோலையா?

என்று மூன்று பொருள்கள் பொதிந்திருந்தன. வியப்பும் சிரிப்பும் பொங்க அவர்மீது பாராட்டுக்கள் சொரியப்பட்டமைக்குக் கேட்கவா வேண்டும்!

சொல்லும் செயலும் ஒன்றிவிட்ட இலட்சியவாதிக்கு வாழ்க்கையிலே சோதனை மேல் சோதனையாக வருவது ஒன்றும் வியப்பல்ல. அமரர் கார்த்திகேசன் அந்தச் சோதனைகள் யாவற்றையும் தம் தடந்தோள்களிலே தாங்கிக்கொண்டு தமது பொதுக்காரியங்களால் கவலையைத் தானும் மறந்து கேட்பவர்களையும் மறக்கச் செய்தமை உண்மையிலேயே மகத்தான சாதனையாகும்.

மீண்டும் சொல்கிறேன்!
பொதுவுடமைவாதி ஒருவர் - அவர் அமரர் மு.கார்த்திகேசன் அவர்களே!

கலாநிதி. க.சொக்கலிங்கம் (சொக்கன்),
நாயன்மார்க்கட்டு, யாழ்ப்பாணம்.

* * *

Mr. Karthigesan- Gentleman par Excellence

S. Navarajah

Communist Karthigesan , "Kaathar" – many a name come to my mind thinking of the good old days at Jaffna Hindu College . I am one of those privileged to be a student of Mr.M Karthigesan and belonged to the same athletic sports house, "Sellathurai", of which he was in charge. The colour of Sellathurai House was Red, which he relished being the colour of his Communist Party.

A Gentleman to the very word , lovable teacher . I vividly remember attending all his classes regularly, even though we had cut the previous ones. Not that he would chide us for being absent , but for the simple fact , that it was pleasant to be with him and enjoy the jokes he would crack. I do not remember any occasion , where he had been angry or harsh to any student, but he was able to correct and instill discipline and good behaviour with a sense of good will and humour.

I do remember the days after the Jaffna Municipal election results were out, he would display his equation and explanations, the next day in the class. He showed that his vote bank is on the increase every time, with a firm conviction. He assured that he will win the next time, which he proved too. He did all these with a few jokes thrown at the expense of his opponents.

I do also remember him, rattling off the cricket scores of Australia, England and West Indies of the matches played long time before, analysing scores . Such was his power of memory. Scores were at his finger tips and would relate and describe how a batsman played and how he made the opponent out etc. very vividly. You have to keep in mind there there were no TVs at the time. His discussion would be merely based on having listened to the commentaries over the radio.

His general knowledge classes were a treat, covering all subjects, which we realized only after we left the college. Be it sports, politics or anything, he had everything in stock. Ready wit answers for questions asked, all with full of humour.

He believed in Communism and had a practiced it through out his life. I preserved his entry in my school autograph, which, I clearly remember read thus-

'சிங்களவரின் தயவுடன் மகாவலி கங்கை
தமிழரின் காலில் பாய்ந்தால் வளமுண்டு வாழ்வுண்டு'

A great thought by a great Communist. But the autograph is no more, due to the losses caused by the 1984 holocaust, lest would have been an ideal reprint for the souvenir.

Mr.Karthigesan taught us many a thing in the class room as well as in the play ground will still keep me in good stead and am proud to be a student of this great teacher.

S. Navarajah,
Former student of Jaffna Hindu College

* * *

Reminicense of my Teacher, M. Karthigesan

Dr. T. Vicknarasah

Mr. M. Karthigesan was my teacher in English in the Prep S.S.C. and S.S.C. classes at Jaffna Hindu College when I was student there from 1946-56. I was born and lived at Brown Road, Neeraviady and had my entire school career at Jaffna Hindu Primary School and then at Jaffna Hindu College. As young idealist we were taken up by socialist ideals and our mentors were Mr. M. Karthigesan and Mr. A. Vaithilingam, both were teachers at J.H.C.

Now almost half a century has passed and I will try to recall some interesting moments from my memory about my teacher. I can still clearly visualize him in my mind coming to school on a bicycle, wearing tussore trousers and cotton shirt with a smile for anybody on the road. Occasionally he wore white cotton verti and national, particularly when he was actively involved in politics contesting in elections.

In the class, he was a strict disciplinarian, but never raised his hand or used a cane to punish an errant boy. A reprimand or a stern look was enough. A few boys who knew his ideological learnings tried to drag him into political discussions in the classroom. This was politely but sternly denied. But outside the classroom and college premises he would be ready with arguments to justify his political leanings. After the first parliamentary elections which was fought bitterly

against Mr. G.G. Ponnambalam and Mr. A. Mahadeva and when Mr. G.G. Ponnambalam joined the U.N.P. cabinet, a hand bill was printed and distributed by Mr. M. Karthigesan comes to my mind. I was standing near my house by the road side, he gave me one and cycled away. I can still remember it. It said, "UNP சாம்பாரில் G.G. பொன்னாங்காணி". There was so many others which I am unable to recollect.

When boys started writing English essays, also copying the vogue in Tamil ?, ? for rhyming ? after the films 'பராசக்தி' and 'மனோகரா'. He came to the class with the bundle of exercise books of English essays he has corrected put them on the table and with a big smile he asked, " ஏதடா மோனை இந்த எதுகை மோனைகள்?" Needeless to say the whole class burst out laughing.

He used to come out with his own ideas expressed pithily. One day he said the aim and hope of the average Jaffna parent is "வீட்டில் குமர் கரை சேரவேணும், அதற்காக தம்பி கொழும்பு சேரவேணும்" At that time unlike present days overseas travel, going to Colombo for employment or entering the university was the highest one could aspire for.

When he decided to contest in the municipal elections at ward 10, we worked for him. He was not successful in the first attempt. Later at the second attempt we threw our whole weight and campaigned for him. His opponent was Mr. Thurairajah, who was the Mayor at that time. He was the father of Rajamanohary Pulendran, former UNP MP for Vavuniya. Karthigesan master was able to win the election with a comfortable majority. The counting took place at the JHC Tamil school. When the results was announced we carried Mr. Karthigesan shoulder high and he got on to the hood of a car and addressed the crowd. There was a slight drizzle and some amongst the crowd opened umbrellas. Others began to

shout,"fold the umbrella - குடை மடி". It was so happened the opponent's symbol was umbrella and the shouting changed into a slogan to send a message to the opponent faced the defeat. Mr. Anthony Mareclus, who was MMC of Colombo Municipality, who came from Colombo for elections was also carried shoulder high. There was an exciting parade after a few days. Mr and Mrs. Karthigesan were taken around the ward in an AM car and the parade took several hours to conclude. They were also taken in a horse ridden chariot another day in his neighbourhood.

Later as per Mr. Karthigesan's saying, having been the only son of the family, I also found employment and came to Colombo (நானும் கொழும்பு சேர்ந்தேன்). After that I lost contact with my teacher but I followed the political progress and other actualities.

Everyone has to go his own way. But the esteem and respect I had for him has only enhanced and when I read in the papers a commemeration issue is going to be published. I thought I would share my reminiscences with others. Thank you for giving me an opportunity.

Dr. T. Vicknarasah,
Registered Medical Practitioner,
Sharaney Clinic, Mundel, Sri Lanka

* * *

Student Leader – Karthigesan

L. Ariyawansa

Nineteen forties was a different period for all peoples in the world, not only in the countries directly involved in the Second World War but also in the periphery not so directly involved. It was a time of great trial. The war was fought for six years from 1939 to 1945 resulting in tremendous loss of life and property unheard of in the history of mankind.

Fascist Germany and militarist Japan unleashed the war to establish domination over the entire world while Allied Forces fought to defend themselves against aggression. At the start it seemed as if fascism would triumph over democracy. The situation changed after Germany attacked the Soviet Union. The Red Army fought its way right into the enemy's land bringing hope to mankind for a renewal of democracy and ways of living the post – war world had its own problems – political and economic independence particularly of the countries that were still under colonialism.

These developments had a strong impact on students in our country as elsewhere in the world. They were preparing to take over from the elder generation. They were honest and more enterprising in the search for truth and justice.

However, there was little activity among them before the world war broke out. Development of the Indian national movement along with increased activity of left parties became an important factor contributing to the awakening of students

in Sri Lanka. The World was opened up prospects for national independence giving an impetus to the student's movement to make their voices heard. Small student groups had discussions among themselves in regard to the role they could play in building a democratic society. They did not confine their activities to purely student demands for better facilities for study, canteens, etc.

Without being too personal I could give my own example. Some students at Ananda College – I was among them – formed a discussion group which decided to invite Ven. Udakendewela Saranankara and Dr. Colvin R.De.Silva, then under police surveillance, to deliver lectures on national and international problems. News appeared in the papers and police got alarmed over it, asked the Principal why he allowed it. In fairness to Mr. P.de S. Kularatne, it must be said that he never found fault with us for inviting outsiders to speak but he said we should have informed him before we extended the invitations giving publicity in the press. I believe similar actions were taken by students in Jaffna where youth were more vocal and public – spirited. They were more influenced by the Indian National Movement which was quite strong at the time. In early stages Tamil students played a major role in the organization of the Student Movement in Sri Lanka.

I entered University College in 1941. It became the University in 1942 with 903 students, 519 Sinhalese and 275 Tamil. No sooner I entered University College, I met leaders of the newly formed Students Union which later became the National Students Union of which Mr.Dharmasiri Senenayake was one of the president. The nucleus of the new organization consisted mainly of Tamil students reflecting the position at that time. The leading role was played by students of the minority community not inconsistent with role played by Tamil leaders in the early stages of the National Movement. Ivor Jennings in one of his reports pointed out that the proportion of Tamil students in the country's population was higher than that of the Sinhalese. It is wrong to blame the Tamils for this as School education was more developed in Jaffna than in the south. They were also more hard-working as government employment was the only venue open to them.

I remember meeting M. Karthigesan, N. Shanmugathasan and I. R. Ariaratnam who were fellow students at the time. Having heard of my activities at Ananda College and my association with some left leaders they told me they were looking for a Sinhalese to become Secretary of the newly formed Students' Union. I agreed. Shanmugathasan became President and Karthigesan, Editor of Student News. It was printed and published regularly for a number of years. It had a wide circulation among students and youth. Karthy was an able writer, good organizer and a kind-hearted person. I remember him as an honest, selfless activist who fought against all kinds of injustice.

It must also be said that we had a common outlook on life as we were all associated one way or another with the united socialist party which later became the Communist Party. Karthy and I remained so till a split occurred in the international movement in the mid – sixties. To give brief idea of our work I must mention two events that took place in 1942. Ragging was a constant headache for university authorities as well as students who suffered most from it. Under the leadership of the Students' Union we put a complete stop to ragging that year. That may have been the only year when no ugly incident took place in any of the faculties.

Then there was the great 'Release Gandhiji' Campaign in which millions of Indians participated. We decided to support the campaign and set about organizing a demonstration starting from College House. I was taken to the IGP's office and warned not to proceed with the demonstration. When I came back there were already a few dozen policemen seizing our banners and placards in the premises of the University. Colonial police was so frightened even of a students' demonstration.

It is the organization formed in 1941 that developed into the National Students' Union that brought out the capabilities of many young men who later became Ministers and Members of Parliament. Some of them are there even today both in Government and the opposition.

L. Ariyawansa,
Former General Secretary of Lanka
Jathika Guru Sangamaya and,
Emeritus President of World Federation of Teachers.

தியாகச் சுடர்

மு. கார்த்திகேசன் *B.A., DLP (ED)*

தோழர் கார்த்திகேசன் அமரர் கந்தையாவின் உயிர்த்தோழர்களில் ஒருவர். ஒரே இயக்கத்தில் தியாகப் பணியாற்றியவர்கள். இன்னல்களையும், இடுக்கண்களையும் ஏற்றவர்கள் என்றாலும், இலட்சியம் பிறழாதவர்கள். கோட்பாடு தவறாதவர்கள். தனது அன்புத் தோழனைக் குறித்து கார்த்திகேசன் எழுதும் உருக்கமான கட்டுரை.

தனது 46ம் வயதில் திரு. பொன்.கந்தையா அகால மரணமடைந்தார். கம்யூனிஸ்ட் கட்சியும், சுதந்திரம், ஜனநாயகம், முதலிய முன்னேற்ற நோக்கங்களுக்கான பரந்த முற்போக்கு இயக்கமும் பெரும் நஷ்டமடைந்து விட்டன. இந்நஷ்டம் சுலபமாக நிவர்த்தி செய்யக் கூடியதொன்றல்ல.

1915ல் வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டி என்ற கிராமத்தில் ஒரு வறிய மத்தியதரக் குடும்பத்திலே கந்தையா பிறந்தார். அவர் வாழவிருந்த சரித்திர காலத்துக்கும், அவர் நடத்தவிருந்த வாழ்வுக்கும், அவர் பிறந்த காலகட்டம் முக்கியத்துவம் வாய்ந்தது. அது முதலாம் உலக யுத்தம் நடந்த காலம். முதலாளித்துவ தத்துவத்தின் நெருக்கடியான நிலை உத்வேகமடைந்து வந்த காலகட்டம். இன்னும் இரு வருஷங்களில் உலக சரித்திரத்தின் முதல் சோஷலிஸப் புரட்சி உத்வேகமடைந்து, முதலாளித்துவ நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவதற்கு வேண்டிய இயக்கம் ஆயத்தமாகிக் கொண்டிருந்தது. என்றும் மறக்க முடியாத, போற்றித் துதிக்கப்படும் லெனினுடைய தலைமையிலும், சக்தி வாய்ந்த போல்ஷ்விக் கட்சியின் தலைமையிலும் மகோன்னதமான ருஷ்யப் புரட்சி உருவாகிக் கொண்டிருந்தது.

மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான மாணவர்களைப் போல நாளடையில் கந்தையா ஆங்கிலக் கல்வியைத் தேடிச்சென்று, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றார். கீர்த்தி பெற்ற அரசியல், சமூக சிந்தனையாளன் என பிற்காலத்தில் அவரை எல்லோரும் வியந்து போற்றக்கூடிய மனவளர்ச்சித் திறனை அவர் அக்காலத்திலேயே காட்டத் தொடங்கினார்.



கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடிகளில் ஒருவராக
இளமைத்துடிப்பான கார்த்திகேசன்

அவருடைய அகால மரணத்திற்குக் காரணமாகவிருந்த, பிறப்புக் காலந்தொடங்கியே இதயக் கோளாறு காரணமாக உடல் பெலவீனமடைந்து பாடசாலை நாட்களில் விளையாட்டுகளில் பங்குபற்ற முடியாத நிலையில் இருந்தார்.

இதய நிலை எப்படியிருந்தபோதிலும், பாடசாலைக் காலங்களில் கூட, தெளிந்த சிந்தனை, தெளிவான விளக்கம் ஆகியவற்றிற்கேற்ப மூளை உள்ளவராக அவர் திகழ்ந்தார். ஆகவே கொழும்புச் சர்வகலாசாலையில் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கும் மாணவ அந்தஸ்தைப் பெற்ற போது எவரும் ஆச்சரியப்படவில்லை.

சர்வகலாசாலையில் சமஸ்கிருதம், பாலி ஆகிய கீழைத்தேச மொழிகளில் விசேஷ படிப்பைக் கைக்கொண்டார். அக்காலத்தில் உலக விவகாரங் களிலும், குறிப்பாக இந்திய சுதந்திரப் போராட்டத்தில் விசேஷ சிரத்தை உள்ளவராக இருந்தார். முதல் மாணவன் என்ற முறையில் தனது படிப்பு நோக்கத்தையும் மனதில் தெளிவாக்கிக் கொண்டார். பட்டதாரியாகியதுடன் இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் மேலும் கீழைத்தேச மொழிகளில் உயர்தரக் கல்வியில் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிக்கச் சென்றார்.

இதுமிக அபூர்வமான சாதனையாகும். ஏனெனில் எந்த ஓர் வருஷத்திலும் ஆறு அல்லது ஏழு மாணவர்கள்தான் இவ்விதமான உபகாரச் சம்பளம் பெற்றுப்படிக்கும் சலுகையைப் பெறக்கூடியதாக இருந்தது. அதே வருஷத்தில் திரு அ.வைத்திலிங்கமும் கணிதத்தில் திறமைகாட்டி உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்திற்குப் படிக்கச் சென்றார்.

இருவரும் தங்களுடைய படிப்பிற்காகவேதான் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலைக்குச் சென்றார்கள். அவர்கள் தங்கள் படிப்பைத் தொடர வேண்டியதுதான். அக்காலத்து வழக்கமான முறைப்படி, இலங்கைக்கு திரும்ப வந்ததும் 'சிவில் சேவையும்' ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத சம்பளம், மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி வேலை, இதற்கிடையில் இவ்வித உத்தியோகத்துடன் வரும் அந்தஸ்தும் அதிகாரமும் அதிகமாகவுண்டு.

உலகம் முழுவதும் தங்கள் காலடியிலிருக்க, படிப்பின் கௌரவிக்கப்பட்ட இவ்விரட்டையர்கள் புரட்சிகரமான பாதையில் செல்லத் தொடங்கினார்கள். இந்தியாவின் இன்றைய பாதுகாப்பு மந்திரியாகவிருக்கும் திரு.வீ.கே. கிருஷ்ணமேனனின் தலைமையிலிருந்த 'இந்திய லீக்' என்னும் ஸ்தாபனத்திலும், பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியிலும் அங்கத்தவராகச் சேர்ந்தார்கள் எங்கள் இரட்டையர்கள். வயதிற்கேற்ற உணர்ச்சிவேகச் செய்கையாகவோ அல்லது அதிகாரத்தை எதிர்க்கும் செய்கையாகவோ அவர்கள் இதைச் செய்யவில்லை.

மனித வர்க்கத்துக்கு முதலாளிகளும், சோஷலிஸ்டுகளும் என்னத்தை செய்கின்றார்கள் என்ற கேள்வியை அலசி ஆராய்ந்த முடிவின் அடிப்படையிலேயே ஓர் விளக்கம் சேர்ந்த செய்கையாகவே அவர்கள் இதைச் செய்தார்கள்.

கேம்பிரிட்ஜில், இரு வருடங்கள் படித்தபின், 'ஆக்ஸ்போர்ட்' சர்வகலா சாலைக்கான இன்னொரு உபகாரச் சம்பளம் பெறும் சந்தர்ப்பம் கிடைத்தது தோழர் கந்தையாவிற்கு. 1940ல் கந்தையாவும், வைத்திலிங்கமும் இலங்கைக்குத் திரும்பி வந்தார்கள். அரசியலில் இருந்து அவர்களை விலகி இன்னமும் கிடைக்கக்கூடிய பெரும் உத்தியோகங்களை எடுக்கும்படி நண்பர்களும், உறவினர்களும் அவர்களுக்குப் புத்திமதி கூறி நிாப்பந்தித்தார்கள்.

ஆனால், சோஷலிசத்தை நோக்கித் தொடர்ந்த பாதையிலிருந்து விலகிச் செல்ல அவர்கள் சம்மதிக்கவில்லை. இலங்கையிலுள்ள புரட்சிகரமான இயக்கத்தில் சேர்ந்தார்கள். வலுவடைந்த சக்தி வாய்ந்த தொழிலாளரின் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் வேலையில் அவர்கள் தங்களுடைய முழுசக்தியையும் அர்ப்பணித்து உழைத்தார்கள்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் ஸ்தாபகராக - அங்கத்தவரும், அமைப்பாளருமாக கந்தையா உழைத்தார். இன்று அது இலங்கையின் மிகப் பெரும் தொழிற்சங்க ஸ்தாபனங்களில் ஒன்றாக இருக்கிறது. மேலும் கொழும்புச் சர்வகலாசாலையில் கீழைத்தேச மொழிகளில் விரிவுரை யாளராகவும் நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் சர்வகலாசாலையின் முதல் மார்க்ஸிய குழு ஒன்றையும் அவர் ஏற்படுத்தினார். இவரின் தலைமையில்தான், இன்று கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சண்முகதாசனும் நானும் இவர் செல்வாக்கில் ஈடுபட்டோம். வேறெவரிலும் பார்க்கக் கந்தையாதான் எங்களுக்கு உத்வேகமூட்டும் சோஷலிசம் பற்றிய கண்ணோட்டங்களை எடுத்துக் காட்டினார். வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், அறியாமை ஆகியவற்றை அகற்றி, சோவியத் நாடு சாதித்த பெரும் சாதனைகளையும் உற்சாகமூட்டும் முறையில் எங்களுக்கு விளக்கிக் காட்டினார்.

ஆனால் நெடுங்காலமாக சர்வகலாசாலை விரிவுரையாளராக இருக்க முடியவில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்புக்காக அவர் உடனே பதவி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவரைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியும் அடக்குமுறைச் சட்டப்படி தடை செய்யப்பட்டது. ஆனால் கந்தையா மனம் தளராது, பல துறைகளில் உற்சாகத்துடன் தனது கடமையைச் செய்து ஆங்கில வாரப்பதிப்பு 'கேசரி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்தார்.

1943ல் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட பொழுது கந்தையா தலைவர்களில் ஒருவராக முக்கிய இடம் பெற்றார். சில வருடங்களுக்குப் பின் கந்தையா சர்வகலாசாலையில் வரவேற்கப்படக்கூடிய நிலையை அடைந்து,

உதவி நூல் நிலைய அதிபராக நியமிக்கப்பட்டார். சர்வகலாசாலை மாணவர்களுக்கு சோஷலிச கொள்கையைப் போதனை செய்து, ஊக்குவிக்கக்கூடிய நிலையில் கந்தையா திரும்பவுமிருந்தார். ஆனால் இந்த உத்தியோகமும் நீடிக்கவில்லை. வகுப்புவாதப் போக்கில் பிழையான பாதையில் கொண்டு செல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு ஓர் புதிய தலைமையைக் கொடுக்கவேண்டுமென கந்தையா தீர்மானித்தார். 1956ல் போட்டியிட்டு பாராளுமன்றத்தின் பருத்தித்துறை அங்கத்தவரானார். முன்னிருமுறைகளில் தோல்வியுற்றபோதும், அவரது தயங்கா மனத்தீர்மானம் இடம் கொடுக்க மறுத்துவிட்டது.

பாராளுமன்ற அங்கத்தவராக, தமிழரின் பிரதிநிதியான முதல் சோஷலிஸ்ட் என்ற முறையில் இலங்கை அரசியலிலும் ஜனங்களுடைய வகுப்பொற்றுமைக்கான, ஜனநாயகத்துக்கான, சோஷலிசத்துக்கான போராட்டத்திலும் ஓர் புதிய கண்ணோட்டத்தை கந்தையா புகுத்தினார். தமிழர்களிடையே உண்மை நண்பர்களை சுதந்திரப் போராட்டத்துக்காகச் சேர்க்க முடியுமென அவர் சிங்கள மக்களுக்குக் காட்டினார். அதேபோல தமிழரின் மொழியை, கலாச்சாரப் பின்னணியைப் பற்றி விளங்கியவர்கள் சிங்களவரிடையே உண்டென்ற உண்மையையும் அவர் தமிழருக்கெடுத்துக் காட்டினார்.

தியாகச்சுடர் அணைந்துவிட்டது! கந்தையாவின் இதயத் துடிப்பு நின்றுவிட்டது! ஆனால் அவருடைய இயக்கம் தொடர்கிறது. அவருடைய அரசியல் மாணவர்கள், அவருடைய கட்சித் தோழர்கள், அவருடைய நண்பர்கள் முதலியோரின் இதயங்களில் அவரின் இயக்கம் வளருகின்றது. தியாகச் சுடர் எரிந்து கொண்டேயிருக்கிறது. இலங்கை மக்கள், சோஷலிசத்தை நோக்கி ஓர் சக்திவாய்ந்த முன்னேற்றத்தை அடைந்து விட்டார்கள். அந்த சோஷலிச நோக்கம் கந்தையாவின் இதயத்தில் என்றுமே சுடர்விட்டு மக்கள் உள்ளத்தில் ஜீவன் ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

**'தேசாபிமானி' எனும் அந்நாள் தமிழ் முற்போக்கு வாரப்பத்திரிகை 1961ம் ஆண்டு செப்டம்பர் 9ந்தேதி 'அமரர் கந்தையா நினைவு மலர்' விசேஷ பதிப்பில் மு.கார்த்திகேசன் தனது உற்ற தோழனும், கட்சித் தலைவனுமான பொன். கந்தையாவின் இழப்பு பற்றி தனது கவலையைத் தெரிவித்ததுமல்லாமல், பெரும்பான்மையான மக்களுக்கு ஒரு விமோசனப் பாதையை வெற்றிகரமாக கட்சி எடுத்துச் சென்ற வேளையிலே ஏற்பட்ட இடையூறுபற்றித் தாங்கொணாத் துயரடைந்து தனது மனவெதும்பலை இக்கட்டுரை மூலம் தெரிவித்திருக்கிறார்.*

* * *

மாணவர் தலைவர் ~ கார்த்திகேசன்

எல். ஆரியவன்ச

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பதுகள் உலகின் அனைத்து மக்களுக்கும் ஒரு வித்தியாசமான காலமாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தில் நேரடியாக ஈடுபட்ட நாடுகளுக்கு மட்டுமல்ல, நேரடியாக ஈடுபடாத அண்டை நாடுகளுக்கும் அது ஒரு பெரும் சோதனைக் காலமாயிருந்தது. இந்த யுத்தம் 1939 - 1945 வரை ஆறாண்டுகள் நடைபெற்றது. அது மனித குல வரலாற்றிலேயே முன்னர் கேட்டிராத அளவுக்கு உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் பாரிய இழப்பை ஏற்படுத்தியது.

பாஸிச ஜெர்மனியும் ராணுவ வெறிபிடித்த ஜப்பானும் முழு உலகையுமே ஆதிக்கம் செய்யவென யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டன. இவற்றின் ஆக்கிரமிப்பிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள கூட்டுச்சக்திகள் அவற்றை எதிர்த்துப் போரிட்டன. ஆரம்பத்தில் பாஸிசம் ஜனநாயகத்தை வென்றுவிடும் போலத் தென்பட்டது. ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியதும் நிலைமை மாறியது. செஞ்சேனை எதிர்த்துப் போரிட்டு எதிரியின் நாட்டுக்குள்ளேயே புகுந்துவிட்டது. அதன்மூலம் அது ஜனநாயகம் மீட்டெடுக்கப்படும் நம்பிக்கையையும், குறிப்பாக காலனித்துவப் பிடியிலிருந்த நாடுகளுக்கு உலக யுத்தத்தின் பின்னர் தோன்றிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டி பொருளாதார அரசியல் சுதந்திரத்தையும் பேறும் வாய்ப்பையும் கொடுத்தது.

இந்த வளர்ச்சிகள் உலகெங்கிலும் போலவே எம் நாட்டு மாணவர் மத்தியிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அவர்கள் முந்திய தலைமுறையிலிமிருந்து நாட்டைத் தம் பொறுப்பில் எடுக்க ஆயத்த மாயிருந்தனர். அவர்கள் நேர்மையானவராயும், உண்மை, நீதி என்பவற்றைத் தேடிக் கண்டுபிடிப்பதில் மேலும் பெரு முயற்சியுடையவராயுமிருந்தனர்.

இருப்பினும், உலக மகாயுத்தம் வெடிக்கு முன்னர் அவர்கள் அவ்வளவாக நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. இந்திய தேசிய இயக்கமும் இடதுசாரிக் கட்சிகளின் அதிகரித்த நடவடிக்கையும் இலங்கை மாணவர் விழித்தெழ முக்கிய

காரணியாயிற்று. தேசிய சுதந்திரத்திற்கு உலகில் வாய்ப்புகள் ஏற்பட்டமை மாணவர் இயக்கத்தின் குரல் ஓங்கி ஒலிக்க ஒரு உந்து சக்தியாயிற்று. ஒரு ஜனநாயகச் சமுதாயத்தை கட்டியெழுப்புவதில் தாம் ஆற்றக்கூடிய பங்கு பற்றி மாணவர் சிறுகுழுக்களாக தமக்குட் கலந்துரையாடின. அவை தமது கல்வி, உணவகங்கள் போன்ற தம்மைச் சார்ந்த வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

என்னைப் பற்றிக் கூறுவதாய் இல்லாமல், நான் இதற்கு என் சம்பந்தப்பட்ட ஓர் உதாரணத்தைக் காட்டலாம். ஆனந்தாக் கல்லூரி மாணவர் சிலர், நான் உட்பட, ஒரு குழுவை அமைத்தனர். அக்குழு சங்கைக்குரிய ககென்தெவெல சரணங்கர அவர்களையும் அப்போது பொலிஸ் கண்காணிப்பிலிருந்த கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்களையும் தேசிய, சர்வதேசியப் பிரச்சினைகள் பற்றி உரையாற்ற அழைப்பதற்குத் தீர்மானித்தது. பத்திரிகைகளிற் செய்தி வெளியானது. பொலிஸ் பரபரப்படைந்து, இதற்கு அதிபர் ஏன் அனுமதி அளித்தாரென அதிபரைக் கேட்டது. உண்மையைச் சொல்லப்போனால், திரு.பி.டி.எஸ்.குலரட்ணவைப் பொறுத்தவரை வெளியாட்களைச் சொற்பொழிவாற்ற அழைத்ததில் அவர் எங்கள் மீது குற்றம் காணவில்லை. ஆனால் பத்திரிகைகளிற் பிரபலப்படுத்தி அழைப்பு விடுப்பதற்கு முன்னர் தனக்கு அறிவித்திருக்க வேண்டுமெனக் கூறினார். பெரும் குரல் கொடுக்கக்கூடியவராயும், பொதுநல அக்கறையும் உடையவராயுமிருந்த இளைஞரைக் கொண்ட யாழ்ப்பாண மாணவரும் இவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தனர் என நான் நிச்சயித்துக் கூறுவேன். அவர்கள் அந்நாட்களில் மிகுந்த பலம் வாய்ந்ததாயிருந்த இந்திய தேசிய இயக்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தனர். ஆரம்ப கட்டங்களில் தமிழ் மாணவர் இலங்கை மாணவர் இயக்க ஸ்தாபனத்தில் பெரும் பாத்திரம் வகித்தனர்.

1941ம் ஆண்டு நான் பல்கலைக்கழகக் கல்லூரியிற் சேர்ந்தேன். 1942ல் அது பல்கலைக் கழகமாகியது. அதில் 519 சிங்களவரும் 275 தமிழருமாக 904 மாணவர் இருந்தனர். நான் பல்கலைக் கழகக் கல்லூரியிற் சேர்ந்ததும் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் சங்கத் தலைவர்களைச் சந்தித்தேன். இச் சங்கம் பின்னர் தேசிய மாணவர் சங்கமாகியது. திருவாளர் தர்மஶ்ரீ சேனநாயகா அதன் தலைவர்களுள் ஒருவராயிருந்தார். இந் நிறுவனத்தின் மையமாயிருந்தவர் அக்கால நிலைமையைப் பிரதிபலிப்பவராயிருந்த தமிழ் சிறுபான்மை இன மாணவரே ஆவார். அது ஆரம்ப கட்டத்தில் தேசிய இயக்கத்திற் தமிழ் தலைவர்கள் ஆற்றிய பங்குடன் முரண்பட்டுச் செல்ல வில்லை. ஐவர் ஜெனிங்ஸ் தனது அறிக்கையொன்றில் நாட்டுச் சனத் தொகையிற் தமிழ் மாணவரின் விகிதாசாரம் சிங்கள மாணவரை விடக்கூடுதலானது எனக் குறிப்பிட்டிருந்தார். இதற்குத் தமிழரைக் குற்றம் சொல்லக்கூடாது. காரணம் யாழ்ப்பாணத்தில் கல்வி தென்பகுதியைவிட எவ்வளவோ மேம்பட்டிருந்தது. அரசாங்கத் தொழில் மட்டுமே அவர்களுக்கு ஏற்றதாய் உள்ளதால் அவர்கள் அரும்பாடுபடுபவராயும் உள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

எனது சக மாணவராயிருந்த எம்.கார்த்திகேசன், நா.சண்முகதாசன், ஐ.ஆர்.அரியரட்ணம் ஆகியோரைச் சந்தித்ததை நினைவுகூருகிறேன். ஆனந்தா கல்லூரியில் என் நடவடிக்கைகளையும் சில இடதுசாரித் தலைவர்களுடன் நான் கூட்டுச் சேர்ந்திருந்ததையும் கேள்விப்பட்ட அவர்கள் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் சங்கத்துக்கு காரியதரிசியாக்கத் தாம் ஒரு சிங்களவரைத் தேடிக்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். நான் ஏற்றுக்கொண்டேன். சண்முகதாசன் தலைவரானார். கார்த்திகேசன் மாணவர் செய்தியின் ஆசிரியரானார். அது சில ஆண்டுகள் ஒழுங்காக அச்சிட்டு வெளியிடப்பட்டது. அது மாணவர் மத்தியிலும் இளைஞர் மத்தியிலும் பெருமளவில் செல்வாக்குப் பெற்றிருந்தது. காத்தி ஒரு வல்லமையுள்ள எழுத்தாளர். ஒழுங்குகள் செய்வதிற் கெட்டிக்காரர். அன்பிதயமுடைய நபர். அவரை ஒரு நேர்மையான சகலவிதமான அநீதிகளையும் எதிர்த்து நின்ற தன்னலமற்ற செயல்வீரனாக எனக்கு ஞாபகமிருக்கிறது.

பின்னர் கம்யூனிஸ்ட் கட்சியாகப் பரிணமித்த ஐக்கிய சோஷலிசக் கட்சியுடன் நாம் அனைவரும் ஏதோ ஒருவகையிற் தொடர்பு கொண்டு இருந்தமையால் வாழ்க்கையைப் பொறுத்து நாம் ஒரே கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தோம் என்றும் இங்கு குறிப்பிடவேண்டும். அறுபதாம் ஆண்டுகளின் மத்தியில் சர்வதேச இயக்கத்தில் ஒரு பிளவேற்படும் வரை நானும் காத்தியும் இவ்வாறே இருந்தோம். எனது வேலைக்கு எடுத்துக்காட்டாக 1942ல் ஏற்பட்ட இரு நிகழ்வுகளை நான் குறிப்பிடவேண்டும். ராகிங் பல்கலைக்கழக அதிகார பீடத்திற்கும் அதனாற் பெரிதும் பாதிக்கப்பட்ட மாணவருக்கும் ஒரு நிரந்தர தலையிடியாய் இருந்தது. மாணவர் சங்கத் தலைமையில் நாம் அந்த வருடம் ராகிங்கிற்கு ஒரு பூரண முற்றுப் புள்ளி வைத்தோம். அந்த வருடந்தான் எந்தப் பீடத்திலும் எந்தவிதமான அசிங்கமான சம்பவமும் நிகழாத ஒரு வருடம் எனலாம்.

அடுத்து, ''காந்தியை விடுதலை செய்'' என்ற லட்சோப லட்சம் இந்தியர்கள் பங்கு கொண்ட மாபெரும் எதிர்ப்பியக்கம் ஒன்று நடைபெற்றது. நாம் அந்த எதிர்ப்பியக்கத்தை ஆதரிக்கத் தீர்மானித்து கல்லூரி விடுதியில் இருந்து ஆரம்பிக்கும் ஒரு ஊர்வலத்தை நடத்த ஒழுங்கு செய்ய முனைந்தோம். நான் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அந்த ஊர்வலத்தை மேற்கொள்ள வேண்டாமென எச்சரிக்கப்பட்டேன். நான் திரும்பி வந்தபோது பல்கலைக் கழக வளாகத்தினுள் ஏற்கனவே இருபது முப்பது பொலிஸார் வரை நின்று சுலோக அட்டைகளையும் பதாகைகளையும் பறித்துக் கொண்டிருந்தனர். காலனித்துவப் பொலிசார் மாணவர் ஆர்ப்பாட்டத்துக்கே பெரிதும் பயந்தனர்.

1941ல் அமைக்கப்பட்ட ஸ்தாபனந்தான் பின்னர் அமைச்சர்களாகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் வந்த பல இளைஞரின் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்த தேசிய மாணவர் சங்கமாக வளர்ச்சியுற்றது. அவர்களில் சிலர் இன்னும் அரசாங்கத்திலும் எதிரணியிலும் இருக்கின்றனர்.

எல். ஆரியவன்ச,
முன்னாள் தலைவர், லங்கா ஜாதிக குரு சங்கமய,
உலக ஆசிரியர் சங்க சம்மேளனம்.

Homage to Comrade Karthigesan

O. A. Ramiah

Time looks eternity, yet twenty-five years have rolled which looks so near and so far since Comrade M. Karthigesan breathed last. That painful event unveils the past and Com. M.Karthigesan's memory flashes glimpses of the life of this great Communist. Travelling was still possible then and I remember I proceeded to Jaffna to attend the funeral of Comrade M. Karthigesan and pay our homage.

Comrade Karthigesan came to Talawekelle in 1964 to attend a mass protest rally organized by the Red Flag Union. The Red Flag Union was developing fast and the Employers became jittery and used foul means to control the Movement. Comrade Rosario Fernando the Leader of Red Flag Union was arrested by the police on a thumbed up murder charge. The Rally was organized to protest against his arrest, but he was released and the protest rally turned out to be a victory rally. Comrade Sanmugathasan, the late Communist Leader came to Talawakelle for this Rally and he brought Comrade Karthigesan. Talawakelle was a sea of reds and the entire town was filled with militant People. Comrade Karthigesan was highly impressed and encouraged the cadres and leaders to develop the movement further.

My personal association with Comrade Karthigesaon strarts with the split in the Communist Movement. We both aligned with the Communist Party led by Comrade

Sanmugathasan and Premlal. We both were also signatories to the famous appeal of Ceylon Communists, which was broadcasted throughout the world. This statement was then printed in pending and distributed in a book form. Comrade Karthigesan's name cannot be found in that document, as he had his own iyakka name. Now it is common in Jaffna to have one's own name and iyakka name. Comrade Karthigesan called himself as K.Manikkavasagar and all party records bear this name.

Jaffna had galaxy of Tamil Communist Leaders. Nowhere in Sri Lanka, from one single region, so many great communist leaders emerged. After the split the Communist Parties were called Peking Wing and Moscow Wing for easy identification. When we say galaxy leaders, they were giants in their own field. During the split the leaders also were divided between both the parties, and they were leaders who made great contributions to the cause of revolution. They were branded by each other by various names, mainly because of the international character of the ideological struggle. That party of the struggle and history should not blur the great services rendered by the leaders who dedicated their life for the cause of the Communist Party. Comrade Karthigesan was a great Communist Leader belonging to that galaxy of Communist Leaders, though people may assess differently the role of different leaders. Comrade Karthigesan towers tall among all during that period, as his life was one of simplicity and devotion to the course. He who once ardently supported Comrade Sanmugathasan later drifted away and another split rocked the party. Thus the Communist party for which Comrade Karthigesan and others sacrificed so much couldn't withstand the pressure of history. The galaxy of leaders faded away without replacements and history witnessed the emergence of Tamil militants engaged in armed struggle for Tamil cause. How Comrade Karthigesan would have viewed the twentyfive years events is anybody's guess? The present generation may not be knowing, climbed on the dedication and service of leaders like Comrade Karthigesan as they were pioneers of selfless service.

Comrade Karthigesan was often referred as a Gandhian Communist due to his simplicity and humanity. Though he was soft-spoken he would roar like a lion if occasions arises. When he comes to Colombo sometimes he used to stay with me. I still remember that whenever we walked along Colombo streets, scores of his former students would greet him with great devotion. Comrade Karthigesan's life was embodied not only party life but also cause of education. He was hailed as a devoted teacher.

If the opportunity had come his way Comrade Karthigesan would have climbed Mount Everest and after conquering the peak he would have viewed the beauty of Universe and the star studded blue sky with his serene look forgetting the pain of life and climb.

Comrade Karthigesan was a powerful writer. I often wonder why he didn't bequeath a set of his writings for the future generation. His booklet on the controversy of Trotskyism is still treasured. Strains of life stole his time, and he couldn't devote himself for writing.

We pay homage to a great Communist Leader who would be always remembered for his selfless services for the cause of Communism. Eternal glory to him!

O.A. Ramiah,
General Secretary of Ceylon Plantation (Red Flag) Workers Union

* * *

தோழர் கார்த்திகேசனுக்கு மரியாதை

ஓ. ஏ. ராமையா

காலம் முடிவற்றதாகத் தெரிகின்றது, தோழர் கார்த்திகேசன் தனது இறுதி மூச்சை விட்டு நீண்ட காலமானபோதும் இருபத்தைந்து ஆண்டு உருண்டோடியது இன்று போலுள்ளது. அந்தத் துன்பகரமான நிகழ்வு இறந்தகாலத்தின் திரையை விலக்குகிறது. தோழர் மு.கார்த்திகேசனின் நினைவு இந்த மகத்தான கம்யூனிஸ்டின் வாழ்க்கை ஒளிக்கீற்றுக்களைப் பிரதிபலிக்கின்றது. அப்போது போக்குவரத்துச் செய்வது இன்னும் சாத்தியமாயிருந்தது. தோழர் மு.காத்திகேசனின் மரணச் சடங்கிற் கலந்து அவருக்கு இறுதி மரியாதை செலுத்த நான் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்டது ஞாபகம் இருக்கின்றது.

1964ம் ஆண்டு தோழர் கார்த்திகேசன் செங்கொடிச் சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வெகுஜன எதிர்ப்புப் பேரணி ஒன்றிற் கலந்து கொள்ளத் தலவாக்கெலைக்கு வந்தார். செங்கொடிச் சங்கம் வெகு வேகமாய் வளர்ச்சியடைந்தது. இது கண்டு பீதியடைந்த முதலாளிகள் இந்த இயக்கத்தைக் கட்டுப்படுத்தக் கள்ள வழிகளை மேற்கொண்டனர். செங்கொடிச் சங்கத் தலைவர் தோழர் றொசாரியோ பெர்ணான்டோ இட்டுக்கட்டப்பட்ட கொலைக் குற்றத்தின்பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அந்தப் பேரணி இவர் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே ஒழுங்கு செய்யப்பட்டது. அவர் விடுதலை செய்யப்பட்டார். அதனால் அந்தப் பேரணி வெற்றிகரமான பேரணி ஆயிற்று. அமரரான கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் சண்முகதாசன் இப்பேரணியின் பொருட்டு தலவாக்கெலைக்கு வந்தவர், தோழர் கார்த்திகேசனையும் அழைத்து வந்தார். தலவாக்கெலை செங்கொடியினரின் கடலாகவும், முழு நகருமே போராட்ட மக்களால் நிரம்பியும் இருந்தது. மனம் பூரித்த தோழர் கார்த்திகேசன் மேலும் இந்த இயக்கத்தை வளர்க்குமாறு ஊழியருக்கும் தலைவர்களுக்கும் ஊக்கமளித்தார்.

தோழர் கார்த்திகேசனுடனான எனது தனிப்பட்ட உறவு கம்யூனிஸ இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுடன் ஆரம்பமானது. நாமிருவரும் தோழர் சண்முகதாசனாலும் பிரேம்லாலாலும் தலைமை கொண்டோம். உலகம் முழுவதும் பிரகடனம் செய்யப்பட்ட பிரபலமான இலங்கைக் கம்யூனிஸ்ட்டுகளின் கோரிக்கைக்கு நாமிருவரும் கையெழுத்திடுபவர் ஆகவுமிருந்தோம். இந்த அறிக்கை அந்நாளில் உறுதி செய்தல் எதிர்பார்க்கப்படும் நிலையில் அச்சிடப்பட்டுப் புத்தகவடிவில் விநியோகிக்கப்பட்டது. அந்த ஆவணத்தில் தோழர் கார்த்திகேசனின் பெயர் காணப்படமாட்டாது. காரணம் அவருக்கு ஒரு இயக்கப் பெயர் இருந்தது. தற்போது தன் சொந்தப் பெயரையும் இயக்கப் பெயரையும் கொண்டிருப்பது யாழ்ப்பாணத்திற் சர்வ சாதாரணமாகிவிட்டது. தோழர் கார்த்திகேசன் தன்னை கே.மாணிக்கவாசகர் என்று கூறிக்கொண்டார். கட்சிப் பதிவேடுகள் அனைத்திலும் இப்பெயரே காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சிறந்த தமிழ் கம்யூனிஸ்ட் தலைவர்களை ஒருங்கிணைத்த ஒரு கூட்டமைப்பைக் கொண்டிருந்தது. சிறீலங்கா பூராவும் எந்த ஒரு பிரதேசத்திலும் இவ்வளவு பெருந்தொகையாகத் தலைசிறந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் தோன்றவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவுக்குப் பிறகு கம்யூனிஸ்ட் கட்சிகள் இலேசாக இனங்கண்டு கொள்ளும்பொருட்டு பீக்கிங் சார்பு, மொஸ்கோ சார்பு எனக் குறிப்பிடப்பட்டன. நாம் தலைசிறந்த தலைவர்கள் என்று கூறும் போது அவர்கள் தத்தம் துறையில் வல்லவராய் இருந்தனர் என்றே கூறுகிறோம். பிளவின்போது தலைவர்களும் இரண்டாகப் பிளவுபட்டுக் கொண்டனர். அவர்களே புரட்சி லட்சியத்துக்குப் பாரிய பங்களிப்புகளை வழங்கியவராவர். அவர்கள் ஒருவருக்கொருவர் பல்வேறு பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். இது பிரதானமாகச் சர்வதேசச் சிந்தாந்தப் போராட்டத்தால் ஏற்பட்டடதேயாம். கட்சியின் அந்தப் போராட்டமும், வரலாறும் கம்யூனிஸ்ட் கட்சியின் லட்சியத்துக்குத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தலைவர்களின் மகத்தான சேவைகளை இல்லையென்றாக்கிவிட முடியாது. ஆட்கள் வெவ்வேறு தலைவர்களின் பாத்திரத்தையும் வெவ்வேறாக மதிப்பீடு செய்தபோது தோழர் கார்த்திகேசன் இந்தக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு தலைசிறந்த தலைவராவார்.

அவரது வாழ்க்கை முறையின் எளிமையாலும் தான் கொண்ட கொள்கைக்குத் தன்னை அர்ப்பணித்த வகையாலும் தோழர் கார்த்திகேசன் அக்காலகட்டத் தலைவர் அனைவருக்கும் மேலால் உயர்ந்து நிற்கிறார். ஒருகாலத்தில் தோழர் சண்முகதாசனை உறுதியாக ஆதரித்த அவர், பின்னர் வேறுபட்டுச் சென்றார். இதனால் இன்னொரு பிளவு கட்சியை உலுக்கியது. இவ்வாறாக தோழர் கார்த்திகேசனும் ஏனையோரும் தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சி, வரலாற்றுத் தாக்கங்களை எதிர்த்து நிற்க

முடியாததாயிற்று. இந்த தலைவர்கள் கூட்டம் மாற்று ஆட்களின்றி மெல்ல மெல்ல மறைந்து போக, தமிழ் லட்சியத்துக்காக ஆயுதமேந்திப் போராடும் தமிழ்ப்போராளிகள் தோற்றம் பெற்றனர். தோழர் கார்த்திகேசன் கடந்த இருபந்தைந்து ஆண்டு கால நிகழ்வுகளை எப்படிப் பார்த்திருப்பாரோ யாருக்கும் தெரியாது. தோழர் கார்த்திகேசன் போன்ற தலைவர்கள் அர்ப்பணிப்பாலும் சேவையாலும் தன்னலமற்ற சேவையின் வழிகாட்டுனராகத் திகழ்ந்தனர் என்பதைத் தற்போதைய தலைமுறை அறியாமல் இருக்கலாம்.

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அவரது எளிமையாலும் மனிதநேயத்தாலும் காந்திய கம்யூனிஸ்ட் எனப்பட்டார். அவர் மென்மையாகப் பேசுபவராய் இருந்தாலும் சந்தர்ப்பம் ஏற்படும்போது சிங்கம் போலக் கர்ச்சிப்பார். கொழும்புக்கு வரும்போது சில சமயங்களில் அவர் என்னுடன் தங்குவார். எனக்கு இன்னும் ஞாபகமிருக்கிறது, நாம் கொழும்பு வீதிகளில் நடந்து சென்ற போது அவரது பழைய மாணவர் பலர் அவரை மிகுந்த பயபக்தியுடன் இனங்கண்டு வாழ்த்துக் கூறுவர். தோழர் கார்த்திகேசனின் வாழ்க்கை கம்யூனிஸ்ட் கட்சி வாழ்வை மட்டும் தழுவியதாய் இருக்கவில்லை. கல்வியையும் தழுவியதாய் இருந்தது. அவர் ஒரு அர்ப்பணிப்புடைய ஆசிரியர் எனப் போற்றப்பட்டார்.

வாழ்க்கையிற் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அவர் இமயமலை உச்சியையே அடைந்திருப்பார். உச்சியை அடைந்தபின் வாழ்க்கைத் துன்பம் அனைத்தையும் மறந்து உலகின் அழகையும் நட்சத்திரங்கள் பதித்த நீலவானையும் தனது தீட்சண்மான பார்வையால் கண்டு களித்திருப்பார்.

தோழர் கார்த்திகேசன் ஒரு வல்லமையுள்ள எழுத்தாளர். எதிர்காலச் சந்ததிக்கு தனது எழுத்துக்களில் ஒரு தொகுதியை ஏன் விட்டுச் செல்லவில்லை என நான் அடிக்கடி நினைப்பதுண்டு. ட்ரொஸ்கியவாதம் பற்றிய வாதப்பிரதிவாதம் என்ற அவரது கைநூல் இன்னும் போற்றிப் பேணப்படுகின்றது. வாழ்க்கை நெருக்கடிகள் அவரது நேரத்தை எடுத்துக் கொண்டதால் அவரால் எழுத்தில் ஈடுபட முடியவில்லை. மகத்தான இந்தக் கம்யூனிஸ்ட் தலைவருக்கு நாம் அஞ்சலி செலுத்துகின்றோம். தனது தன்னலமற்ற சேவைகளுக்காக அவர் என்றென்றும் நினைக்கப்படுவார். தெய்வீகப் புகழ் அவரைச் சாரட்டும்!

ஓ. ஏ. ராமையா,
பொதுக் காரியதரிசி,
இலங்கைத் தோட்டத் தொழிலாளர் செங்கொடி சங்கம்.



கொள்கைப்பற்றும் நேர்மைத்திறனும்
கொண்ட தோழர் கார்த்திகேசன்

அமரர் மு. கார்த்திகேசன்

அமரர் மு.கார்த்திகேசன் அவர்கள் அமரத்துவமடைந்தபோது வண்ணை. கலாஜோதி இளைஞர் ஒன்றியமும் மக்களும் கண்ணீர் மல்க வரைந்த இரங்கலுரை.

கார்த்திகேசன் என்றால் அறிவருவி
கார்த்திகேசன் என்றால் கொள்கைத்தங்கம்
கார்த்திகேசன் என்றால் ஏழைப்பங்காளன்
கார்த்திகேசன் என்றால் புதுவாழ்வின்
ஆக்கம் கூறும் ஆர்முரசே!

'தோழர் கார்த்திகேசன்' என்ற பெயரை தமிழ்கூறும் நல்லுலகம் மட்டுமல்ல, மேனாடுகளும் அறியும். அவர்தம் பெருமைபோற்றும், மத பேதம், இனபேதம், மொழி பேதமற்று யாவரும் வாயினிக்கக்கூறும் தொண்டன் எமது கார்த்திகேசன் ஆவர். அன்புநெறி நின்றவர்; அறிவாற்றல் மிக்க அறிஞர்; பண்பாளர்; பகட்டற்றவர்; அடக்கத்தின் சின்னம்; மாற்றுக்கருத்துக்கும் மதிப்பளித்த பெருமதியாளர்; சிந்தனையாளர்; மிகமிகச் சாதாரண மனிதனின் நம்பிக்கை மிகுந்த பிரதிநிதியாக இறுதிவரையிருந்தார். ஆற்றல்மிக்க எழுத்தாளர்; பேச்சாளர்; ஆங்கிலப் புலமையினால் அதிசயிக்கப்பட்டவர்; கல்லூரியின் பேராசான்; கடமை வீரன்; துறை அத்துணையிலும் தனிமுத்திரையைப் பதித்தவர்- உழைப்பால், அதாவது மக்களுக்கு உழைத்தமையால் வறுமையில் சிக்கினும், மக்கள் உள்ளத்திலுயர்ந்தார். மாறா இடம் பிடித்தார்.

தனக்கிருந்த கல்லூரி அலுவல்களுக்கிடையேயும் மக்கள் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்தித்த முற்போக்காளர் எமது கார்த்திகேசன்.

வண்ணார்பண்ணை இந்துக்கல்லூரியில் ஆசானாயிருந்தபோது, வண்ணை கலாஜோதி ஒன்றியம் வளர, வாழ, தலைநிமிர உழைத்தமையை; உறுப்பினராயிருந்து கண்ணியமுடன் உழைத்தமையை எப்படி மறப்போம்! இந்துக்கல்லூரி மூலம் எமது வட்டார மாணவர் சீரடைய உழைத்த உழைப்பை எப்படி மறப்போம் ஐயா!

தொண்டர்கள் மறைவதில்லை. மக்களிதயத்தில் ஒளிவிளக்காய் நிற்பர். கார்த்திகேசன் அவர்களும் எம்மிதயத்து ஒளியாகி விட்டார். அவர் ஆன்மா சாந்தி காண்க!

கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தினரால் 1977ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்டது.

Reminiscence of Late M. Karthigesan

S. S. Kumar

I am a native of Kopay , Jaffna, studied at J/Kopy Christian College before Mr. Kartigesan became the Principal there. I got employed in 1968. During my school days, I had been a regular visitor to the U.S. Information Center at 4th Cross Street, Jaffna and in the mid-60's. I remember having seen posters saying that Mr.Karthigesan would address a meeting. Although I liked, I haven't had a chance to attend any due to unavoidable circumstances. My next door friend listened to his speech once and I am narrating a part of what I heard from him.

When Mr. Karthigesan was an undergraduate at the University College in the Mid-40's, his University mates were Mr. Stanley Senanayakke and Mr. Vernon Abayasekara. On a certain weekend, all three obtained permission from the authorities to go out of the campus . Having walked along the streets, they decided to have lunch from a leading cafe. As they ordered their menu, the lunch was readily supplied, but the meals were sub- standard . When they complained of the quality of the meals to the owner in the presence of a large crowd gathered at the cafe, the owner got provoked and telephoned the Police stating that three persons who came to have meals were creating problems. Meanwhile, he himself dashed a few glasses, in order to put the blame on them. The

Police came in a vehicle and took all three of them to the police station and they were locked up. There was no one known to them to help except Mr.C.Sundaralingam, who was a Professor in Mathematics at the University College. They informed him of their plight. He immediately rushed to the police station, spoke to the officers and they were bailed out without any further legal proceedings against them.

Mr. Stanly Senanayakke who joined the Police Dept. as an Asst. Suprentendent of Police, after graduation, later became the I.G.P. in the early 70's and Mr.Vernon Abeysekara was the Govt. Agent of Jaffna in early 60's.

In the early 70's Mr.C.Sundaralingam agitated a campaign to prevent people belonged to certain castes from entering the Maviddapuram Temple. Police took counter action against this agitation. Mr.Stanley Senanayake, I.G.P . was present at the temple and all were able to hear Mr.C.Sundaralingam calling Mr.Stanley Senanayakke "Stanley come here". His tone indicated the relationship between the two and anyone could imagine how the I.G.P. would have responded to his call.

Mr. Karthigesan related these two incidents to make the people understand, how anyone could change to different situations and how the positions that they held could manipulate the situation and either work for or work against the people.

S. S. Kumar,
Sub Inspector of Police, Police Office,
Trincomalee

* * *

கம்யூனிஸ இயக்கத்தில் கார்த்திகேசனின் அழிக்க முடியாத பங்களிப்பு

கனடா வாழ். கம்யூனிஸ்ட் அபிமானிகள்

தோழர் எம்.கார்த்திகேசனின் வாழ்க்கை யாவரும் கற்கவேண்டிய ஒரு கம்யூனிஸ்ட்டின் வரலாறாகிவிட்டது. அவர் பயின்ற கல்வியினூடாக பெற்ற சமூகநெறிக் கொள்கை, மக்கள் பயன் கருதி அக் கொள்கைக்காக அவர் ஆற்றிய தீர்க்கமான வீரச் செயல்கள் யாவும் அவர் ஒரு 'மக்கள் நேசன்' என்பதையே காட்டுகின்றன. தோழர் கார்த்திகேசனை ஆழமாக அறிந்த புலவர் ம.பார்வதிநாதசிவம் அவர்கள்:

'ஆங்கிலத்தில் பேரறிஞன்
அருந்தமிழில் வல்லோன்
அன்பார்ந்த நெஞ்சுடையோன்
தீங்கறியா நல்லுள்ளத்தோன்
திகழ்பொதுமைக் கொள்கை
தெளிந்துணர்ந்தே தெளிந்தபடி
வாழ்ந்திட்ட மேலோன்'

என்று அவர்களைப் பற்றிப் பாடியிருப்பது சாலவும் பொருந்தும்.

இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சியை மார்க்ஸிச லெனினிஸ மாவோ சிந்தனையின் அடிப்படையில் அமைத்து தெளிவான அரசியல் நோக்கோடு அடக்கி ஒடுக்கப்பட்ட பாட்டாளிகள், தொழிலாளர், விவசாய மக்களுக்காக போராட்டங்களை நடத்தி இறக்கும் வரை தன் வாழ்க்கையை மக்களுக்காக முழுமையாக அர்ப்பணித்தவர் தோழர் கார்த்திகேசன். இருபதாம் நூற்றாண்டின் இருபதுகளில் பொதுவுடைமைக் கொள்கைகளை மக்களுக்கு விளக்கி அரசின் சுரண்டல் தனத்தையும், ஊழல்களையும் முதலாளிவர்க்க ஆதிக்கத்தையும் அம்பலப்படுத்தி மக்களை பொதுவுடைமை நெறியில் வழிப்படுத்திய தோழர், சிங்காரவேலர் போன்று யாழ்ப்பாணத்து மக்களுக்கும் ஒரு புரட்சிகர மாற்றத்தை காட்டியவர் அவர்.

புரட்சிகர சிந்தனைக்கு வித்திட்ட இளமைக்காலம்

மதச்சார்பின்மை இனபேதமற்ற இலங்கைத் தேசியவாதம், பிரித்தானிய ஆட்சியிலிருந்து விடுதலை ஆகிய உயரிய நோக்கத்துக்காக 1926ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் செயற்படத் தொடங்கிய இலங்கை இளைஞர் காங்கிரஸ், இலங்கையின் அரசியல் பரப்பில் புதிய திருப்பத்தை உண்டாக்கியது. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட தேசிய இளைஞர் காங்கிரஸ் 1927ம் ஆண்டு மகாத்மா காந்தியின் வருகையாலும் பின்னர் 1932ம் ஆண்டு ஜவகர்லால் நேருவின் யாழ்ப்பாண வருகையாலும் உத்வேகம் அடைந்தது. தென்னிலங்கையிலிருந்து வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க இளைஞர் காங்கிரஸில் முதன் முதலாக சமஷ்டி ஆட்சி பற்றிய கருத்துக்களை முன்வைத்தார். இலங்கை இளைஞர் காங்கிரஸ் 1931ம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பை எதிர்த்து சக்திமிக்க பகிஷ்கரிப்புப் போராட்டங்களை தமிழ்ப் பிரதேசங்களில் நாடாத்தியது. இலங்கை இளைஞர் காங்கிரஸின் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டங்கள் இளம் கார்த்திகேசனின் உள்ளத்தில் புரட்சிகர அரசியல் மாற்றத்துக்கான தேடலுக்கு வித்திட்டது.

லண்டன் சீனியர் கேம்பிறிஜ் பரீட்சையில் மிகச் சிறப்புச் சித்திபெற்று, மலாயா முழுவதிலும் மூன்றாவது நிலையைப் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகம் சென்றார். ஆங்கிலம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் முதலாண்டு பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகளைப் பெற்றார். இந்நிலையில் சிறப்புப் பாடமாக ஆங்கிலத்தையா? கணிதத்தையா தொடர்வது என்பது இவருக்கு ஒரு பெரும் வினாவாகிவிட்டது. ஆங்கிலப் பேராசிரியர் திரு. லுடாவைக்கின் மாணவனாகத் தீர்மானித்து தனது கல்வியை மேற்கொண்டார். ஆங்கிலம், வரலாறு, அரசியல் முதலிய துறைகளில் பல நூல்களைக் கற்று, சிறுவயதில் இவருக்கு இருந்த அறிவுக்கத்தையும் ஆய்வுக்கத்தையும் மேலும் மேலும் துளிரவைத்தார். பல்கலைக் கழக மாணவனாக இருந்தபோதே தான் கற்றவற்றை விமர்சன பாங்காக ஆராயத்தொடங்கினார். வர்க்கக் கண்ணோட்டத்தில் அரசியல் இலக்கிய நூல்களை விமர்சித்தார், சாதாரண மாணவர் போக்கிலும் பார்த்தார். முற்றிலும் வித்தியாசமான கண்ணோட்டமும், கணிப்பும் இவரிடம் கருத்தரிக்கத் தொடங்கிவிட்டன. திரு.எம்.கார்த்திகேசன் பல்கலைக் கழக மாணவனாக இருந்த காலத்தில் லண்டனில் கல்வி கற்று பொதுவுடமை வாதிகளாக இலங்கைக்குத் திரும்பிவந்த டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, பீற்றர் கெனமன், ஏ.வைத்திலிங்கம், பி.கந்தையா ஆகியோர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய கம்யூனிஸ பிரச்சார உரைகளும் கார்த்திகேசனைக் கவர்ந்தன. கம்யூனிஸக் கோட்பாடுகளால் கவரப்பட்டு பல்கலைக் கழக பத்திரிகையான 'ஸ்ரூடன்ற் நியூஸ்' பதிப்பாசிரியராக பலகட்டுரைகளை வெளியிட்டுள்ளார். தனது கருத்தை மற்றவர்க்கு எளிதாக விளங்க, தெளிவாகப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவரான காத்தி ஆங்கில சிறப்புப் பட்டதாரி பட்டத்துடன் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறினார்.

தோழர் கார்த்தி இலங்கை அரசியலில் ஆற்றிய பங்கு மிகப் பெரியதாகும். இலங்கையில் 1935ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி 1942ம் ஆண்டு உலக மகாயுத்தம் தொடர்பாக ட்ரொஸ்கியவாத கருத்துக்களை முன்வைத்து பாசிஸவாத ஹிட்லரை ஆதரித்தது. உலகத் தொழிலாள வர்க்கத்தை மார்க்ஸிச-லெனினிஸ மார்க்கத்திலிருந்து திசை திருப்பவும், சோசலிச அமைப்பை நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சோவியத் யூனியனுக்கு விரோதமாக இருந்த போக்கிற்கு எதிராக அணிதிரண்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1943ம் ஆண்டு யூலையில் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்க, எம்.ஜி.மென்டிஸ், பீற்றர் கெனமன், ஏ.வைத்திலிங்கம், பி.கந்தையா, கே.ராமநாதன், எம்.ஏ.காதர், ஏ.மகாலிங்கம், என்.சண்முகதாசன் ஆகியோருடன் எம். கார்த்திகேசன் இக்கட்சியின் ஸ்தாபக அங்கத்தவராக இருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கிலவார இதழான போர்வேட் (குழசறயசன) பத்திரிகையின் பதிப்பாசியரியராக தோழர் கார்த்திகேசன் தொழிற்பட்டார். ஆங்கிலேய காலனித்துவ அரசிற்கும், ட்ரொஸ்கிய கருத்துக்களுக்கும் எதிராக இப்பத்திரிகை குரல் கொடுத்தது.

இவர் கொழும்பிலுள்ள கொட்டா றோட்டில் வாழ்ந்த காலத்தில் தென்னிலங்கையிலுள்ள அரச வங்கி ஊழியர், தொழிலாளர் ஆகியோர் மத்தியில் ஆற்றிய சொற்பொழிவுகள் விவாதங்கள் மக்கள் மத்தியில் கம்யூனிஸ கருத்துக்களை எடுத்துச் செல்ல பெரிதும் உதவின. அரச ஊழியர் குறிப்பாக லிகிதர் சேவை, வணிக சேவை, ரெயில்வே சேவை முதலியவற்றில் கடமையாற்றிய ஊழியர்களை ஒன்றிணைத்து தொழிற் சங்கங்கள் அமைக்க இவர் பெரிதும் பாடுபட்டார். இலங்கையில் தொழிற் சங்கங்கள் வலுப்பெறவும், வளரவும் இவர் பெருமளவில் உதவினார்.

யாழ்ப்பாணக் கம்யூனிஸ்டுகளின் முன்னோடி

கொழும்பில் சில வருடங்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்காக உழைத்த பின்னர் யாழ்ப்பாணத்தில் 1946ம் ஆண்டு வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சியின் கிளையை ஆரம்பித்தார். 'சங்கமித்தா' நாட்டிய அரசமரக்கிளை இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்திலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பலமாற்றங்களை ஏற்படுத்தியது. தோழர் காத்தி யாழ் நகரில் உள்ள விக்டோரியா றோட்டில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து அதில் ஒரு பாதியை கட்சிக் காரியாலயமாகவும் மறுபாதியை தனது வதிவிடமாகவும் கொண்டு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டார். இவருடன் ஸ்தாபக அங்கத்தவர்களாக காலம் சென்ற தோழர்கள் டாக்டர் சு.வே.சீனிவாசம், வீ.ஏ.கந்தசாமி, எம்.சி.சுப்பிரமணியம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம், எம்.ஏ.காதர், எஸ்.கே.கந்தையா, கே.மகாலிங்கம், இராமசாமி ஐயர் ஆகியோர் இணைந்துகொண்டனர். பிற்காலத்தில் காலம் சென்ற கவிஞர் பசுபதி, சுபைர் இளங்கீரன், ஜனகன் மற்றும் வேறு பலரும் இக்கட்சியில் சேர்ந்து முன்னணியில் செயற்பட்டனர்.

சமயப் பற்றும், தீண்டாமையும், சாதி அடக்குமுறையும், நிலப்பிரத்துவ சிந்தனைகளும் இறுகிய சமூகக் கட்டுப்பாடுடைய யாழ் குடாநாட்டில் பொது உடமைக் கொள்கைகளை கடைப்பிடிப்பது ஆபத்தானதும் சிரமமானதுமான செயல்களாகும். கிராமங்களில் உடையார் மணிய காரர்களின் கைகளில் பொல்லும் அதிகாரமும் இருந்த காலத்தில் சமுதாய மாற்றத்துக்கான ஒரு புரட்சிகர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பது மிகவும் துணிச்சலான காரியமாகும்.

தான்விரும்பிய பெண்ணை மிகவும் எளிமையான முறையில் உள்ளூர் உறவினரின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் மணமுடித்த கார்த்திகேசன், கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் 'கம்யூன்' வாழ்க்கை நடத்தினார். கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியனாக வேலை செய்த கார்த்திக்கு கிடைத்த மிகக் குறைந்த வருவாயுடன் புதுமண வாழ்க்கையையும் கட்சியையும் கட்டிவளர்த்தார்.

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று நீதிமன்ற நீதவானாக வரவேண்டும் என்றே இவரின் பெற்றோர் எதிர்பார்த்தனர். இவர் நல்லதோர் அரச பதவியையும் செல்வந்தக் குடும்பத்தில் ஒரு பெண்ணையும் மணந்து சுகபோக வாழ்வு வாழ்ந்திருக்கலாம். இவற்றையெல்லாம் ஒருபுறம் தள்ளிவிட்டு எளிமையாகவும் மக்களுக்காகவும் வாழ்ந்தார்.

இடதுசாரிகள் தேர்தல் பரப்பில்

இருபதாம் நூற்றாண்டின் நாற்பதுகளில் இடதுசாரிக் கட்சிகள் தொழிலாளிவர்க்கத்தின் ஆதரவு பெற்று பலம்பொருந்திய சக்தியாக பரிணமித்தன. 1947ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் இடதுசாரிக் கட்சிகள் 95 மொத்த ஆசனங்களில் 20ஐக் கைப்பற்றின. யு.என்.பி இப்பொதுத் தேர்தலில் 41 ஆசனங்களை மட்டுமே பெற்று சிறுபான்மையாக இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றம் பற்றி தெளிவற்ற முரணான கருத்துக்களாலும் தங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளை பொதுத் தேர்தலின் போது பெருமளவு மிகைப்படுத்தியதாலும் அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற முடியாமல் போய்விட்டது. இதை நன்குணர்ந்த பூர்ஷ்வா வர்க்கம் பெரும்பாலான மலையகமக்களின் வாக்குரிமை, குடியுரிமைகளை பறித்ததன் மூலம் இடதுசாரி இயக்கங்கள் இனிவரும் தேர்தலில் ஆட்சி அமைப்பதை தடுத்து நிறுத்தினர். இவ்வேளை இடதுசாரி இயக்கங்களினூடாக தோழர்கள் கார்த்திகேசன், ஏ.வைத்திலிங்கம், பொன். கந்தையா, எம்.சீ.சுப்பிரமணியம் போன்றோர் தமிழ் காங்கிரஸ், தமிழரசு கட்சிகளுக்கெதிராக தேர்தல் களத்தில் குதித்தனர். இச்சகாப்தங்களில் அரசியல் செல்வாக்கு கறுத்தக் கோட் அணிந்த நியாயவாதிகளான அட்வகேட், புறக்ர், எம்.ஏ, பீ.ஏ பட்டங்கள் பெற்ற சிலர் கைகளில்தான் இருந்தது. இவர்களின் குலம் பார்த்து, கோத்திரம் அறிந்து ஆளணி சேர்த்து வோட்டுக்கள் வாங்கிக் கொடுக்க பழைமை பேணும் மணியகாரன், உடையார், விதானை போன்றோர்கள் எல்லா கிராமங்களிலும் இருந்தனர். இவர்களை எதிர்த்து மக்கள் பேசினால் அல்லது வாக்களித்தால்

அவர்களுக்கு நேரும் ஆபத்துக்கள் பல. இம் மேலாதிக்கக்காரருடன் ஒத்துப்போகாத ஏழை எளியவர்களின் வீடு வாசல்கள் தீக்கிரையாகின, செய் பயிர்கள் பிடுங்கி வீசப்பட்டன, வழி மறித்து தாக்கப்பட்டனர். உயர் சாதியில் பிறந்து ஆங்கிலம் கற்று அரசபதவி வகித்து 'வெள்ளைக்காரன்' போல காலனித்துவ மோகத்தோடு வாழ்ந்தவர் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகளை ஆதரித்தனர். முற்போக்கான சிந்தனையுடைய ஒரு சிலரும் இவ் வர்க்கங்களில் இருந்தனர். இவ்வாறான பிற்போக்கான சக்திகளை தோழர் கார்த்திகேசன் பொதுமேடைகளிலும் பகிரங்கக்கூட்டங்களிலும் எதிர்த்து தனது அறிவாற்றலாலும் சொல்வன்மையாலும் அம்பலப்படுத்தினார். எனினும் பாராளுமன்றத் தேர்தல்களில் இடதுசாரி அணிகள் ஐக்கியப்படத் தவறியதால் பாராளுமன்றத்திற்கு கார்த்திகேசன் செல்லும் வாய்ப்பை இழக்க நேரிட்டது.

அவரது மக்கள் நேசத்தாலும், மக்கள் அவருக்கு அளித்த ஆதரவாலும், எம்.கார்த்திகேசன் யாழ் மாநகரசபைக்கு 1950ம் ஆண்டுகளில் வண்ணார்பண்ணை பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். இக்கால கட்டத்தில் யாழ் நூலகம் கட்டுவதற்கு பொருத்தமான இட ஒதுக்கீடு பற்றிய விவாதம் சபையில் இடம் பெற்றது. யாழ் முற்றவெளியில் இருந்த முனியப்பர் கோவிலுக்கு அருகாமையில் இருந்த இடம் ஒன்று பிரேரிக்கப்பட்டது. அவ்வேளை கந்தர்மட வட்டார உறுப்பினராக இருந்த பிரதிநிதியான முதலியார் முத்துத்தம்பி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அவ்விடத்தில் நூலகம் கட்டப்பட்டால் அது முனியப்பர் கோவிலுக்கு குந்தகம் ஏற்படும் எனக்கூறிப் பிரரேரணையை எதிர்தார். அப்பொழுது தோழர் கார்த்திகேசன் ''கோயிலுக்கு முன்னால் குடித்துக் கும்மாளம் அடிக்க ஒரு 'கிளப்'ஐ அனுமதிக்கலாம் என்றால் ஒரு நிஜக்கோயிலுக்கு முன்னால் ஒரு கலைக் கோயில் நிறுவுவதில் என்ன தவறு இருக்க முடியும்?" என்று வினவி வாதிட்டார். அதன் பின்னர் சபை ஏகமனதாக முனியப்பர் கோவிலுக்கு முன்னால் அமைந்த இடத்தில் 'யாழ் நூலகம்' நிறுவுவதை ஏற்றுக்கொண்டது. யாழ்ப்பாண சரித்திரத்தில் சகல தமிழ் பேசும் மக்களும் ஒன்று என்றவகையில் யாழ் மாநகரசபையில் ஒரு முஸ்லீம் மக்களின் பிரதிநிதியாக ஜனாப் எம்.எம்.சுல்தான் அவர்களை பிரேரித்து தனது விவாதத்திறமையால் வாதிட்டு பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அவரை மேயராக்கிய பெருமை கார்த்திகேசனுக்குரியது.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டம்

ஸ்ரீலங்காவிலுள்ள தமிழர் மத்தியில் மிகநீண்டகாலமாக இறுகியிருந்த சாதி அமைப்பு முறை காரணமாக தாழ்த்தப்பட்ட தமிழர் (பஞ்சமர்) அடக்கி ஒடுக்கப்பட்டு தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கிவைக்கப்பட்டனர். வடபுலத்திலேயே இந்த அடக்குமுறை மிகக்கொடுமையாக இருந்தது. இந்நிலை ''கறுப்பு இனத்தவருக்கெதிரான வெள்ளையரின் நிறத்துவேசம் அமெரிக்காவிலுள்ளதிலும் பார்க்க கொடுமையான அடக்குமுறை யாழ்ப்பாணத்திலுள்ள தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கெதிராக உள்ளது" என்று பேக்ளி (Berkley) சர்வகலாசாலை

பேராசிரியர் காட் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். 60களின் நடுப்பகுதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி இவ் ஒடுக்குமுறையை எதிர்த்து போராட முடிவெடுத்தது. கம்யூனிஸ்ட் கட்சி தீண்டாமைக்கெதிராக போராடுவதால் உயர்குல மக்களின் ஆதரவை இழக்கநேரிடும் என சிலர் வாதிட்டனர். இச் சூழ்நிலையில் எம்.கார்த்திகேசன், எஸ்.ரி.என்.நாகரட்ணம், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், கே.டானியல், சு.வே.சீனிவாசகம், போன்றோர் சாதி அமைப்புக்கு எதிரான போராட்டத்துக்கு ஆதரவாக ஒன்றுதிரண்டு குரல்கொடுத்தனர். கட்சியின் வழிகாட்டலில் மக்கள் அணியைக் கட்டுவதில் முழுமூச்சுடன் ஈடுபட்டனர். 1966ம் ஆண்டு அக்டோபர் மாதம் 21ம் திகதி கம்யூனிஸ்ட் கட்சி சுன்னாகத்தில் இருந்து ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்த முற்பட்டபோது பொலிஸ் தடுத்து நிறுத்தி தாக்கியதால் எஸ்.ரி.என்.நாகரட்ணம், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், இ.கா.சூடாமணி போன்றோர் பலமாகத்தாக்கப்பட்டு பொலிஸ்காவலில் தடுத்து வைக்கப்பட்டனர். கொதித்தெழுந்த முற்போக்கான தமிழ் மக்கள் ஒன்று திரண்டு இவ்வூர்வலத்தை யாழ் நகர்வரை நடாத்தி யாழ் முற்றவெளியில் பொதுக்கூட்டம் ஒன்றையும் வெற்றிகரமாக நடாத்தி முடித்தனர். மேற்குறித்த கூட்ட மேடையில் என்.சண்முகதாசனும் பேசினார். 1966-1970 களில் நடந்த ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் எழுச்சிக்கு எஸ்.ரி.என். நாகரட்ணத்தின் தலைமையிலான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் மக்களை அணிதிரட்டுவதிலும் போராட்டங்களை நெறிப்படுத்துவதிலும் பலம்பொருந்திய சக்தியாக விளங்கியது.

இப்போராட்டத்தில் உயர் சாதி வெறியர் ஈவிரக்கமின்றி ஒடுக்கப்பட்ட மக்களை ஆயுத பலத்தால் அடக்க முற்பட்டனர். இதில் ஒரு சிலர் உயிர்ப் பலியாகினர். இவ்வன்முறைக்கு எதிராக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடாத்த வேண்டும் என்று இளைஞர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். இதில் உயர் சாதி வெறியர் சிலரும் பலியாக நேரிட்டது.

இலங்கையில் சிறுபான்மை இனங்களுக்கெதிரான ஒடுக்குமுறை

பௌத்த மேலாதிக்கமும் ~ கிறிஸ்தவர்களும்

1883ம் அண்டு ஆரம்பித்த கிறிஸ்தவர்களுக்கு எதிரான பௌத்த மேலாதிக்க சிங்களவரது முறுகல் நிலையானது கொழும்பு நகரின் தெருக்களில் பல வன்முறை மோதல்களுக்கு வழிவகுத்தது. கொட்டாஞ்சேனையில் 1883ம் ஆண்டு ஏப்ரல் மாதக் கலவரத்தில் 12 பொலிசார் உட்பட 30 பொதுமக்கள் காயமுற்றனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஆதிக்கத்திலிருந்த முஸ்லீம்கள், பிரித்தானியர், போராஸ், சிந்திகள், பார்சிகள், செட்டிகள் போன்றோரின் சந்தையை கைப்பற்றுவதற்கான சிங்கள பூர்ஷ்வா வர்க்கத்தின் போட்டி முஸ்லீம் மக்களுக்கெதிராக திசைதிருப்பப்பட்டது. பௌத்த மேலாதிக்கக் கருத்துக்களை அனகாரிக தர்மபாலா (1866 - 1933) நீர்கொழும்பைச்

சேர்ந்த வாலிசிங்க ஹரிச்சந்திரா (1877 - 1913) போன்றோர் மக்கள் மத்தியில் மிகவும் தீவிரமாக பரப்பினர். 1915ம் ஆண்டில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான முதலாவது கலவரம் நாட்டில் பல பகுதிகளில் நடைபெற்றது.

இடதுசாரி இயக்கங்களில் இனவாதம்

1930ம் ஆண்டுவரை தேசிய இனங்களுக்கு எதிரான பௌத்த சிங்கள மேலாதிக்க உணர்வுகள் பூர்ஷ்வா, குட்டி பூர்ஷ்வா வர்க்கங்களுக்கு மத்தியிலே கொழுந்து விட்டு எரிந்தது. தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கவும், அவர்களுக்கென முதன் முதலில் ஸ்தாபன வடிவம் கொடுத்து எல்லாத் தொழிற்சங்கங்களையும் ஒருங்கிணைத்து இலங்கைத் தொழிற்சங்க வரலாற்றில் அழியாத இடம்பெற்ற ஏ.ஈ.குணசிங்க பௌத்த மேலாதிக்க கருத்துக்களை, ஐக்கியத்தை பிளவுபடுத்த தொழிலாள வர்க்கங்களிடையே முன்னெடுப்பதில் மிகத் தீவிரமாக செயற்பட்டார். இக்காலகட்டத்தில் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியால் இலங்கையிலும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் குறைந்தன. ஆலைகளில், தொழிலாளர்களாகவும் பூர்ஷ்வாவாதிகளின் வீடுகளில் பணியாட்களாகவும், தேனீர்க்கடை, சிறு வணிகம், ஆசிரியத் தொழில்களில் ஈடுபட்ட மலையாளிகளை 'அந்நியராக' தொழிற்சங்கங்கள் சித்தரித்தன. ஏ.ஈ.குணசிங்காவின் தொழிற்சங்க ஏடான 'வீரயா' மலையாளி களுக்கு எதிரான பிரச்சாரங்களில் ஈடுபட்டது. இதன் விளைவாக குறைந்த வேலைகளில் ஈடுபட்ட மலையாளிகள் கொழும்பில் பல தெருக்களிலும் அங்கும் இங்குமாக திடீரென தாக்கப்பட்டனர். இதன் விளைவாக 1940களில் பெருந்தொகையான மலையாளிகள் இந்தியாவுக்கு நாடு திரும்ப நேரிட்டது.

மலையக மக்களுக்கெதிரான இனஒடுக்குமுறை

இலங்கையில் மிகவும் கொடூரமாக சுரண்டப்பட்டு அடக்குமுறைக்கு உள்ளான மலையகத் தோட்டத் தொழிலாளர்களை நாட்டைவிட்டு விரட்டு வதில் முதலாளித்துவ வர்க்கம் முனைப்பாக ஈடுபட்டது. 1960களின் பிற்பகுதியில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் இந்திய விஸ்தரிப்பு வாதிகளின் 5ம் படையாக பௌத்த சிங்கள பேரினவாதிகளாக சித்தரிக்கப்பட்டனர். 1947ம் ஆண்டு தேர்தலில் இடதுசாரிகள் ஈட்டிய வெற்றியைக்கண்டு பயந்த பூர்ஷ்வாக்கள் 1948-1949ம் ஆண்டுகளில் மலையக மக்களின் குடியுரிமை, வாக்குரிமை போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பறித்து பெரும்பான்மை மக்களை நாடற்றவர்களாகவும் கல்வி, சுகாதாரம், இருப்பிடவசதி போன்ற தேவைகளை சட்ட ரீதியாக இல்லாதொழித்தனர். இக்காரியத்திற்கு தமிழ்த் தலைவர்களும், சிங்கள பூர்ஷ்வா வர்க்கத்திற்கு ஆதரவு கொடுத்து தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தனர். இதேவேளை தோழர் கார்த்திகேசன் தானிணைந்து இயங்கிய கம்யூனிஸ்ட் கட்சியினூடாக வீறுகொண்டெழுந்து நடாத்திய வீரமிக்க

போராட்டங்களும் கட்சியின் ஏடுகளில் அவர் தீர்க்கதரிசனத்துடன் எழுதிய கட்டுரைகளும் மார்க்ஸிய கொள்கை என்றும் நிரந்தரமானவை என்பதை துல்லியமாக எடுத்துக்காட்டின.

தமிழ் மக்களுக்கெதிரான இனப்பாகுபாடும் ஒடுக்குமுறையும்

1950ம் ஆண்டு வரை இனவாத, மதரீதியான வன்செயல்களுக் குள்ளாகாது இருந்த இலங்கைத் தமிழர் பௌத்த சிங்கள மேலாதிக்க வாதிகளால் 'சிங்களம் மட்டும்' அரசகரும மொழியாக்க எடுத்த முயற்சியால் கொதிப்படைந்தனர். சிங்களம் மட்டும் கோரிக்கை தென்னிலங்கையில் மக்களுக்கிடையே பலத்த ஆதரவு பெற்றது. பிற்போக்கு இனத்துவேச சக்திகளின் கையோங்குவதை உணர்ந்த கார்த்திகேசன் 'தேசாபிமானி', 'குழசறயசன' போன்ற கட்சிப் பத்திரிகைகளினூடாகவும் தினசரி, வாரஏடுகளிலும் தனது கருத்தைக் கூறினார். யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக வேலை செய்யும் பொழுது ஒவ்வொரு வார இறுதி நாட்களையும் கொழும்பில் கட்சியின் ஆங்கில ஏடான குழசறயசன வெளியிடுவதற்கு செலவழித்ததை இன்னும் அவருடன் வேலை செய்த தோழர்கள் நினைவு கூருவர். 1954ம் ஆண்டு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக்கிளை தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு வல்வெட்டித்துறையில் மாநாடொன்றைக் கூட்டியது. இம்மாநாட்டில் தமிழ் பிரதேசங்களுக்கு பிரதேசசுயாட்சி அடங்கிய ஐந்தம்சத் தீர்மானத்தை தோழர் கார்த்திகேசன் மற்றும் முன்னணித் தோழர்களுடன் சேர்ந்து முன்வைத்தார். சார்பூநிலைப் பொருளாதாரம் போன்ற முதலாளித்துவப் பொருளாதார கொள்கைகளை எதிர்த்த கார்த்திகேசன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தோழர்களால் மகாவலி கங்கை நதியை வடபிரதேசத்துக்கு திசை திரும்பும் திட்டத்தை ஆதரித்து சுயசார்புப் பொருளாதாரத்தை தமிழ்ப்பிரதேசங்களில் கட்டியெழுப்ப வேண்டும் என மக்களிடையே பிரச்சாரம் செய்தார். 1956ம் ஆண்டு யூன் மாதம் 'சிங்களம் மட்டும்' மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போது, கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தனா ஆகிய சமசமாஜக் கட்சியினர் இலங்கை இருநாடுகளாகத் துண்டாடப்படும் எனும் (''ஒருமொழி இருநாடு, இருமொழி ஒருநாடு") அபாயத்தையும் கூறி, அந்நிய ஏகாதிபத்திய சக்திகள் இலங்கைக்குள் ஊடுருவ வழிசெய்யும் மசோதா என எதிர்ப்புத் தெரிவித்து வாதிட்டனர். ஆனால் 1970ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகித்த மிகப்பொறுப்பு வாய்ந்த பதவியை வகித்த இடதுசாரியான சமசமாஜக் கட்சியின் கொல்வின் ஆர்.டி.சில்வா தயாரித்த அரசியல் சாசனம் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை தீர்க்கமுற்படாதது மட்டுமல்ல, பலபுதிய அரசியல் சட்டத்திருத்தங்கள் மூலம் தமிழ் மக்களையும், தொழிலாள வர்க்கத்தையும் அடக்கியொடுக்க முற்பட்டாது.

இதேவேளை தொழிலாள வர்க்கப்புரட்சியுடன் அமையும் சோஷலிச அமைப்பில் சகல இனமக்களும் ஐக்கியத்துடன் வாழலாம் என வெறும் வெற்றுக் கோஷமிட்ட (இடதுசாரிகளுடன்) தோழர் கார்த்திகேசன் தத்துவப் போராட்டம்

நடாத்தினார். எழுபதுகளில் கூர்மையடைந்த தமிழ் மக்களின் போராட்டம் வன்முறை வடிவம் பெற்றது. மிகவும் தெளிவாகவும், தூர நோக்குடனும் சிந்தித்த கார்த்திகேசன் தமிழ் மக்களின் ஜனநாயக, அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பரந்துபட்ட வெகுஜன அணியை (இதில் குட்டிபூர்ஷ்வா, தொழிலாள, விவசாய வர்க்கங்கள் அடங்குவர்) இலங்கைக் கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்) கட்சியின் தலைமையின் கீழ் கட்டியமைக்க தமிழ்மக்கள் வாழ்ந்த இடமெல்லாம் எழுபதுகளின் நடுக்கூற்றில் சூறாவளிப் பிரசாரம் செய்தார். அவருடைய பெருமுயற்சியால் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி என்ற மக்கள் அணி உருவாக்கப்பட்டது. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் அரசியல் விஞ்ஞாபனம் 1954ம் ஆண்டில் வல்வெட்டித்துறையில் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவுகளை உள்வாங்கி காலத்திற்கேற்ற பல புதிய திருத்தங்களுடன் வெளிவந்தது. பல புத்திஜீவிகள் கார்த்திகேசனின் கருத்துக்களை பல்கலைக் கழகத்திலும், பாடசாலைகளிலும் பரந்துபட்ட மக்கள் மத்தியிலும் எடுத்துச் சென்றனர். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் பல வர்க்கங்கள் மத்தியில் உக்கிரமடைந்த பொழுது கார்த்திகேசனின் மரணம் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சர்வதேச நிலவும் உட்கட்சிப் போராட்டமும்

சோவியத் யூனியனில் அதிகாரத்திலிருந்த குருசேவ் மார்க்ஸிச லெனினிஸ கோட்பாடுகளை மாற்றி ஏகாதிபத்திய நாடுகளுடன் சமாதான சகவாழ்வு என்ற கோட்பாடுகளை முன்வைத்தார். இதனால் பல நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பிளவுபட்டன. திரிபுவாதக் கருத்துக்களை ஆதரித்து பீற்றர் கெனமன், விக்கிரமசிங்க முதலியோர் தலைமையில் ஒரு பகுதியினரும் தொழிலாளவர்க்க ஆயுதம் தாங்கிய கலாச்சாரப்புரட்சி என்ற கருத்துக்களை ஆதரித்து மறுபகுதியினரும் பிரிந்தனர். தோழர் கார்த்திகேசன், என்.சண்முகதாஸன் ஆகியோர் இரண்டாவது பிரிவினருடன் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை (சீனசார்பு) 1963ம் ஆண்டு ஸ்தாபித்தனர். தோழர் கார்த்திகேசன் சமூகத்திலுள்ள எல்லா மட்டத்து மக்களுடனும் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகினார். பஸ்சிலும், சைக்கிளிலும் பிரயாணம் செய்து பின்தங்கிய பிரதேசங்களில் அரசியல் வேலை செய்து வடபிரதேசத்தில் பலமிக்க ஒரு ஸ்தாபனமாக கம்யூனிஸ்ட் கட்சி வளர்வதற்கு முக்கிய காரணமாக இருந்தார். உட்கட்சியில் பல தத்துவார்த்த நடைமுறைப் பிரச்சினைகள் காரணமாக தோழர் கார்த்திகேசன் 1972ம் ஆண்டு வீ.ஏ.கந்தசாமி, வாட்சன் பொன்னன்டோ ஆகியோருடன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா.லெ) என்ற பெயரில் தனது அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டார். இக்காலகட்டத்தில் ''போராளி'' பத்திரிகைக்கு ஆசிரியராக பல கட்டுரைகளை எழுதினார். கார்த்திகேசனின் வழிகாட்டலில் உருவான பலர் இன்று அரசியல், பொருளாதார, சமூக, கலை இலக்கியத்துறைகளில் முத்திரை பதித்துள்ளனர். அவர் கைக்கொண்ட மார்க்ஸிச-லெனினிஸ சமூக விஞ்ஞானத்தை கருவியாக்கொண்டு சமூக மாற்றத்திற்கான அவர் சென்ற அடிகளை பின்தொடர்வதே கார்த்திகேசனை நினைவுகூரும் எமது கடமையாகும்.

ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்ச்சிக்காக உழைத்த உத்தமர்

கி. மகான்

தீண்டாமை எனும் கொடிய நோய் தலைவிரித்து தாண்டவமாடிய காலம். ஒடுக்கப்பட்ட மக்களை மாக்களாய் அவமதித்து பஞ்சமர் என பட்டம் சூட்டி உரிமைகள் மறுக்கப்பட்டு எம்மவர் மண்டியிட்டு கிடந்த வேளை பல இன்னல்களுக்கு மத்தியிலும் மறுக்கப்பட்ட உரிமைகளை எம்மின மக்களுக்குப் பெற்றுத்தர அயராது உழைத்தவர் எங்கள் ஐயா, கார்த்திகேசன் மாஸ்டர் ஆவார்.

இலட்சியத்திற்காக இறுதிவரை நெறி தவறாது சமதர்ம வழியிலே எம்மவரை நடாத்திச் சென்று எம்மின உயர்ச்சிக்காய் உழைத்தவர் எங்கள் ஐயா, கார்த்திகேசன் மாஸ்டர் ஆவார்.

மக்களை அணிதிரட்டி தமது தலைமையிலே பொதுப்பணி, சிரமதானப் பணிகள் மூலம் குளங்களை ஆழமாக்கிப் பல பொது நற்பணிகளை நிறைவேற்றி வந்தமை போற்றத்தக்க தொன்றாகும். அதை மக்கள் போற்றிப் புகழ்ந்து இன்றும் பேசுகின்றனர்.

இவரது இலட்சியம், உறுதியான கொள்கைகள், எவரையும் கவர்ந்து ஈர்க்கக் கூடிய வகையிலே அவரது பேச்சுவன்மை, கேட்கக் கேட்க சலிக்காத சுவையான அர்த்தமுள்ள நகைச்சுவைகள் யாவும் இன்னும் மக்கள் மனதினின்று நீங்காத இடம்பெற்றவை. நான் நேரடியாக அவரிடமிருந்து இவற்றைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புப் பெற்றவனல்ல. இருப்பினும் மக்கள் இன்னமும் மாஸ்டரின் ஆற்றலை, ஆளுமையை, இலட்சியங்களைப் பற்றிக் கூடிப் பேசவதைப் பார்த்தும் கேட்டும் கொண்டிருக்கிறேன்.

ஐயா இன்னமும் எம்மத்தியில் உயிர் வாழ்ந்திருப்பாரேயானால் பஞ்சமர் மட்டுமல்ல, எல்லா மக்களும், கிராமங்களும், ஏன் அவரது குடும்பமுமே தாமரைத் தடாகம் போல மலர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கி. மகான்,
வட்டுக்கோட்டைவாசியும், கார்த்திகேசன் குடும்பத்தின் நண்பருமாவார்

அன்பான அங்கிள் பற்றி.....

சுசீலா ஜோன்

திரு. மு. கார்த்திகேசனின் 25வது நினைவு தினத்தையொட்டி ஒரு சில வரிகளை அவரின் மகள் என்ற முறையில் எழுதக் கடமைப்பட்டுள்ளேன். திரு.கார்த்திகேசன் எனது தாயின் தங்கையைத்தான் மணம் புரிந்தார். அன்பாக 'அங்கிள்' என்று அழைப்பேன். 1956, 57ம் வருடங்களில் அவர் குடும்பத்துடன் தங்கியிருந்து படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர் அனேகமாக ஏழைமக்களுக்குச் சேவை செய்வதையே விரும்புவார். ஆசிரியர் தொழில் புரிந்ததால் விடுமுறை நாட்களில் ஏழை மக்களுக்கு உதவுவதற்காக வெளியில் சென்றுவிடுவார். வீட்டில் தங்குவது குறைவு. அப்படி தங்கும் ஒரு சில நாட்கள் எங்களோடு சிநேகித முறையில் சுவாரசியமாகப் பேசிப் பழகுவார்.

ஒரு முறை அவருக்குத் திருமண அழைப்பிதழ் ஒன்று வந்தது, அதில் மணமகன் கார்த்திகேசன், மணமகள் தையல்நாயகி என எழுதப்பட்டிருந்தது. அவ் அழைப்பிதழை முதலில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததால் நான் நேரே அவரிடம் சென்று, ''நீங்கள் என்ன இரண்டாம் முறை திருமணம் செய்துகொள்ளப்போகின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர் அவ்விதழைப்பார்த்துவிட்டு ''அதுவா! இது எனது மாணவன், இப்போ ஒரு தையல்நாயகியை மட்டுமே மணக்கப்போகிறான்" என்று கூறிவிட்டு, தனது வாழ்க்கைத் துணைவியர் மீது அன்பு பாராட்டுவது மட்டுமன்றி அவரது திறமைகளையும் பாராட்டும் நற்பண்பு கொண்டவராதலால், தையல், சமையல் இரண்டிலும் கைதேர்ந்த தனது மனைவியைக் காட்டி, ''நான் அவனது ஆசிரியன் ஆகையால், ஏற்கனவே ஒரு தையல்நாயகியையும் சமையல்நாயகியையும் ஒரேதரத்தில் மணந்துவிட்டேன்" என்று கூறினார்.

1967ல் சாதிச் சண்டை நடந்தது. கோயிலினுள்ளே அனைவரும் போக அனுமதிக்கப்படவில்லை. அதை அவரும் அவரோடு சேர்ந்த சிலரும் மாற்றியமைத்தார்கள். அவ்வேளை, ''மா-விட்ட-புரத்தில் (மாவிட்டபுரக் கந்தசாமிகோவிலில்) மனிதரை விட்டால் என்ன?" என்று கேட்டார்.

இன்று அவர் எம்மத்தியில் இல்லாவிட்டாலும், அவரது சுவாரசியமான பேச்சும், அன்புடனும் பண்புடனும் பழகும் சுபாவமும், சிந்தனையாற்றலும், பரந்த சேவை மனப்பான்மையும் என்றும் எம்மனதில் பசுமையான நினைவுகளாக நிறைந்துள்ளன.

சுசீலா ஜோன்,
மகள் முறையானவரும், கொழும்பு வாசியுமாவர்.



கார்த்திகேசன் தம்பதியருடன் அவர்கள் பராமரிப்பில்
வளர்ந்த உறவினர்கள்

எங்கள் ஐயா ~ அவர் ஒரு வரலாறு

சுமதி குகதாசன்

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்ற தனிமனிதனைப் பற்றி போற்றி, புகழ்ந்து, ரசித்து எண்ணற்ற பக்கங்களை எழுதிக் குவிப்பதற்கு என்னால் முடிந்திருக்கும் என்றிருந்திருந்தாலுங்கூட தற்புகழ்ச்சியை எள்ளளவேனும் விரும்பாத எளிமையான மனிதனுக்கு மகளாகப் இருப்பதன் காரணத்தால் நான் அவரைப்பற்றி எழுதுவது பொருத்தமற்றதாக அமைந்து விடுமோ என்ற அச்சத்தில் என்னை இதுவரை காலமும் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தேன். இப்போது இத்தகையதோர் சந்தர்ப்பத்தில் உந்துதலின் காரணமாக எங்களுக்கெல்லாம் பெரும்பேறாய் கிடைக்கப்பெற்ற எங்கள் ஐயாவைப்பற்றிச் சில குறிப்புகளை எழுத முனைகின்றேன்.

எனது பன்னிரண்டாவது வயதில் என்று நினைக்கிறேன், ஐயா ஆஸ்பத்திரி வீதியில் வந்து கொண்டிருந்தார். நானும் நண்பியொருவரும் அவ்வழியாக சென்று கொண்டிருந்தோம். ஐயாவைக் கண்டபோது நான் எனது நண்பிக்கு அவரை அறிமுகம் செய்யத் தயங்கினேன் - காரணம் அவர் மிக எளிமையானவராகக் காணப்பட்டார் என்பதற்காக. இன்னும் ஒன்று இரண்டு வருடங்களின் பின்னர் எனது அறிவும் சற்று விரிவடைய ஆரம்பித்த வேளையில் தான் நான் எனது ஐயாவின் எளிமையை விளங்கிக்கொள்ள ஆரம்பித்தேன். அதன் பின்னர் அவர் மறையும் வரை பல தரப்பட்ட பிரச்சினைகள், மன உளைச்சல்கள், நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் என்பதை எனக்கு விபரங்கள் எதுவும் சரிவரத் தெரியாவிட்டாலும் கூட அவரை அவதானித்ததிலிருந்து புரிந்து கொண்டேன். அதனால் எனக்கு மனவேதனை அப்போது இருந்தது என்றே சொல்ல வேண்டும். ஆனால் அவற்றைப்பற்றி அதிகம் என்னால் எவருடனும் கதைக்க முடிந்ததில்லை. குறிப்பாக ஐயா ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வு பெற்றமை அவரை அதிகம் பாதித்திருக்குமெனக் கருதினேன்.

ஐயா வாழ்ந்தது இற்றைக்கு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் என்பதை ஏறத்தாழ நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன்னர் என்றே கருத வேண்டும். அன்றைய காலத்தில் ஐயாவின் வாழ்க்கை முறை, ஐயாவின் குணாம்சம்

பெரும்பாலான மக்களுக்கு ஏற்புடையதாக இருந்தது. ஆனால் அறுபதுகளின் கடைசிப் பகுதிகளில் பல முரண்பாடான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விட்டன. அதனால் அக்கால கட்டத்தின் பின்னர் ஐயா இறக்கும் வரை அவர் வாழ்ந்தார் என்பதை விட வாழ்க்கையைத் தாக்குப்பிடித்துக் கொண்டிருந்தார் என்பதே எனது கருத்து. ஆனால் அவரால் இம்மாற்றங் களுக்கேற்ப இயைபாக்கம் அடைவது கடினமானதாக இருந்திருக்கும் ஆயினும் கூட, அவரின் அனுபவத்திற்கும் சாதுரியத்திற்கும் ஏற்ப இயைபாக்கம் அடைய முனைந்து வந்துள்ளார். ஐயாவின் கொள்கைப் பற்றும் உறுதியும் உயர்ந்த நேர்மையும் பண்பும் காரணமாக இதில் அவர் பெருமளவு வெற்றியடைந்திருக்க மாட்டாராயினும் தனது மரணத்தின் மூலம் அந்த முழு வெற்றியை அடைந்து விட்டார் என்பதே எனது எண்ணம். 'தக்கன பிழைத்தல்' என்ற டார்வினின் இயற்கைக் கோட்பாட்டின்படி மிகுந்த நேர்மையும் உயர்ந்த பண்பும் கொண்டவர்கள் சமூகத்தில் பிழைக்கக முடியாதவர்கள் என்பதே இதிலிருந்து புலனாகின்றது.

ஐயாவை உணர்ந்து கொள்ளவும் அவரைப்பற்றி விளங்கிக் கொள்ளவும் நான் எனது பதின்மூன்று வயதளவில்தான் ஆரம்பித்தேன். ஆயினும் அதன் பின் ஒரு வருடத்திற்குள்ளேயே அவரை இழக்க வேண்டிய நிலையேற்பட்டாலும் கூட அதை ஜீரணித்துக் கொள்ள வேண்டிய நிலைப்பாடே என்மனதில் தோன்றியிருந்தது.

இந்தச் சமூகத்தில் இதுவரை காலமும் வாழ்ந்து பெற்ற அனுபவத்தின் விளைவாக இன்று கார்த்திகேசனுக்கு மகளாகப் பிறக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறதா என்று அடிக்கடி என்னைக் கேட்டுக் கேட்டு அதிசயித்துப் போகிறேன்.

எனக்கு விபரம் தெரிய, சிறுபராயத்திலிருந்தே அன்பையும் சமத்துவத்தையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் செயலிலும் ஊட்டி வளர்த்தார். வீட்டிற்கு வரும் அத்தனை பேரையும் அவர்களது பெயரைக் குறிப்பிட்டு 'மாமா' என்று அறிமுகப்படுத்துவார். ஐயா தன் கட்சித் தோழர்களையும் மற்றவர்களையும் மாத்திரமல்ல, மார்க்ஸையும், ஏங்கல்ஸையும், லெலினையும், ஸ்டாலினையும், மாவோவையும் கூட எனக்குப் படங்களைக் காட்டிச் சொல்லித் தருவார். நானும் ஐயாவுக்காக, அவரை சந்தோஷப்படுத்துவதற்காக என்றே அக்கறையோடு கேட்பேன். எப்போதும் ஐயாவின் பேச்சில் இவர்களது பெயர்கள் வந்து கொண்டேயிருக்கும். அவ்வளவு தூரம் அவர்கள் மேல் மிகஅதிகமான அன்பும் விசுவாசமும் ஐயா கொண்டிருந்தார் என்பது மட்டும் எனக்கு அப்போது விளங்கியது.

நான் நினைக்கிறேன் 1975 அல்லது 1976ஆக இருக்க வேண்டும் ஐயா சிறிய நூலொன்றை எனக்குக் காண்பித்தார். அதில் கட்சி சம்பந்தமான கட்டுரைகளும் சிலரது புகைப்படங்களும் காணப்பட்டன. குறிப்பாக எனது ஞாபகத்தில் உள்ள வரையில் மாஓ, ஐயா, சண் இப்படிச் சிலரது புகைப்படங்களும் அதில் இருந்தன. அப்போது ஐயா எனக்கு மாஓ வினது படத்தைக் காட்டிவிட்டு, அதே தாளின்

பின்பக்கத்தில் மாஓவின் படத்துடன் பொருந்துமாறு தனது படம் பிரசுரித்திருந்தமையைக் காட்டி ''பாத்தியா எனது படம் மாஓவின் படத்திற்குப் பின்னால் அடுத்த பக்கத்திலேயே அதன் மேல் பொருந்துவதாக வந்திருக்கிறது" என்று மிகப் பெருமையும் சந்தோஷமும் மேலிடக் கூறி குழந்தைத்தனமாகச் சிரித்தார். அப்போது நான் ஐயா மாஓவை எவ்வளவு தூரம் நேசிக்கிறார் என்று எண்ணியபடி அவருடன் சேர்ந்து சிரித்தேன். ஐயா அவ்வளவு தூரம் மாஓவை விசுவாசித்ததானாலோ என்னவோ இந்தப்படம் மட்டுமல்ல இந்தப் பூமி உள்ளவரை நினைவு கூரத்தக்கதாகவும் குறிப்பிடும்படியாகவும் அவர் மாஓ இறந்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டு, அவரது இறந்த நாளுக்கு அடுத்த நாள் இறந்து போனார்.

ஐயாவைப்பற்றி சொல்வதென்றால் சொல்லிக் கொண்டே போகலாம். எந்த ஒரு மனிதரதும் அவர் சிறியவரோ பெரியவரோ அல்லது குடும்பத்தினரோ வெளியாரோ எவரது மனமும் நொந்து விடக்கூடாது என்பதை முதன்மையான எண்ணமாகக் கொண்டதாகவே எப்போதும் அவரது பேச்சும் சரி செயலும் சரி இருந்து கொண்டேயிருக்கும். பேசும்போது மிகச் சாந்தமாகவே பேசிக்கொள்வார். அபூர்வமாகக் கோபப்படும் சந்தர்ப்பங்கள் தவிர. நான் சிறுவயதில் ஏன் ஐயா இருந்தவரைக்கும் என்றே சொல்லலாம், படிப்பு விடயத்தில் அதிகம் நாட்டம் காட்டவில்லை. அவருக்கு இதையிட்டு மிகுந்த வேதனை நிச்சயம் இருந்திருப்பினும் கூட அதை என்றுமே வெளிப்படுத்தி என்னை வைததில்லை. எனது முன்னேற்ற அறிக்கையில் மிகக் குறைந்த புள்ளிகளையும் சில பாடங்களில் பெற்றிருப்பேன். ஐயாவிடம் கையெழுத்திற்காகப் போய் நிற்பேன் அறிக்கையுடன். அதை வாங்கிப் பார்த்துவிட்டு ''ஏன்..... ஆச்சி...." என்று மிக மென்மையான குரலில் கேட்பார். அவ்வளவுதான். ஐயா அப்போது எல்லாம் என்னில் கோபமடைவதற்குப் பதிலாக இரக்கம் கொண்டிருந்தார் போலும் என்றே இன்று நினைக்கிறேன். எப்போதாவது எனது விளையாட்டுப் போக்கு அவரது பொறுமையைச் சோதித்தீ வேளையில் மாத்திரம் என்னைச் சற்றுக் கடுமையாக அதுவும் ஓரிரு வார்த்தைகள் மாத்திரம் கூறியுள்ளார்.

ஐயா எங்களுக்கு மிகுந்த நேர்மையையும் மற்றவர்களில் நம்பிக்கையும் மதிப்பும் வைத்து நடக்கவும் தனது செயல்களாலேயே கற்றுத் தந்தார். அவர் எப்போதும் சம்பளம் எடுத்து வீட்டுக்கு வந்தவுடனேயே வீட்டில் சிறியவள் நான் ஆகையால் என்னை அழைத்து வீட்டு வாடகை, கடைப் பாக்கிகள், வேறு செலவுகளுக்கானது ஏதாயினும் என்றால் அவைக்குமான பணத்தைத் தந்து கொடுக்கப்பண்ணி விடுவார். அத்துடன் அம்மாவிடம் குறித்த தொகையை அன்புடன் கொடுப்பார். சற்று மனநலம் குன்றிய மனைவியாக இருந்த போதிலும் காசை வீணாகச் செலவு செய்துவிடுவார் என்றோ அல்லது அப்படிப்பட்டவருக்கு கொடுக்க வேண்டிய அவசியம் உண்டா என்றோ மனம் சஞ்சலப்படாமல் தனது மனைவிக்கு வழங்க வேண்டிய அந்தஸ்தையும் மதிப்பையும் எப்போதும் கொடுத்து வந்திருந்தார் என்பது நெகிழ்வுடன் நினைவு கூரத்தக்கதாகும். இவ்வாறு அவரது ஒவ்வொரு செயல் மூலமும் மிக உயர்ந்த பண்புகளை நாளும் பொழுதும் அவர் சொல்லித் தராமலேயே, நாம் கற்றுக் கொண்டோம்.

எங்கள் ஐயா உண்மையிலேயே ஒரு ஏழை இல்லையாயினும் அவர் தானே மனப்பூர்வமாக விரும்பி ஏற்றுக் கொண்டு ஏழ்மை வாழ்க்கையை வாழ்ந்தார் என்பதை இங்கு நான் மிகப் பெருமையுடனேயே குறிப்பிடுகிறேன். கார்ல்மார்க்ஸின் வரலாற்றில் அவர் தனது அன்புக்குரிய தோழன் ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதத்தில் வீட்டில் இன்னும் ஒரு வேளைக்குத் தேவையான உணவு மாத்திரமே உண்டென்றும், தனது பிள்ளையின் வைத்தியச் செலவுக்குக் கூடப் பணம் இல்லையென்றும் குறிப்பிட்டிருந்தமை சரித்திரமாகப் போற்றப்படும் போது ஐயாவின் ஏழ்மை வாழ்க்கையும் அவரது நடைமுறைகளும் வரலாறு ஆக்கப்படுவதில் நான் தயக்கம் காட்ட எண்ணவில்லை.

ஐயா இளைப்பாறிய பின்னைய நாட்களில் ஒரு நாள் காலை நான் காலக்கெடு தப்பிவிட்டதன் காரணமாக வரவழைக்கு பணம் கட்டவேண்டும் எனக் கேட்டேன். ஐயா சற்று யோசித்தபடியே ''இப்போது இல்லை. பின்னேரம் கொண்டு வந்து தருகிறேன் ஆச்சி'' என்றார். அவர் என்னைச் சமாதானப்படுத்துவதற்காகத் தான அவ்வாறு கூறுகிறார் என்று மனதுக்கள் எண்ணியபடி நான் பாடசாலை சென்றுவிட்டேன். மாலையில் வரவழைகெ வகுப்பில் இருந்த வேளை அங்கிருந்த ஆசிரியரும் நிர்வாகியுமானவரும் இன்னொரு ஆசிரியரும் வந்து ''ஏன் ஆயளவநச ஐ வரச்சொன்னீர்'' என்று சற்றுப் பதட்டமும் கடுமையும் கலந்து என்னிடம் வினவியபோதுதான் எனக்கு ஐயா தானே வந்து பணத்தைக் கொடுத்துள்ளார் என்பது விளங்கியது. நான் ஆச்சரியத்தால் விறைத்து நின்றேன்.

ஐயா ஒரு சமயத்தில் கூறினார் ''ஆச்சி, அப்பு (ஐயாவின் தந்தை) எல்லாத்தையும் விட்டுக் குடுத்துத் தான் நடந்தவர்'' என்று. அவர் முன்னுதாரணமாகக் குறிப்பிடும்படி அப்பு இருந்துள்ளார் என்பதுடன் நினைவில் நிழலாடிய எனது பேரனின் முகம் மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தாலும் கூட ஐயாவின் மூலமாக அவரின் மிகச் சிறந்த குணாம்சங்களை என்னால் ஊகிக்க முடிந்ததுடன் ஐயா தனது தந்தையாரில் வைத்திருந்த அன்பும் மதிப்பும் கூட தெளிவாகப் புலப்பட்டது.

ஐயா மற்றவர்களுடன் பழகும் போது பெருமை சிறுமை பார்ப்பதில்லை என்பது யாபேரும் அறிந்ததே. அவர் எங்கள் வீட்டு அயலிலுள்ள சிறு பையன்களுடன் கூட சந்தர்ப்பம் கிடைக்கும் போது அன்போடு உரையாடுவார். எனது ஒரே அண்ணையை(அப்பு) அப்பையன்கள் சினிமாப்படம் பார்ப்பதற்காக சிலசமயங்களில் கூட்டிச் செல்வதுண்டு. போய் வந்த பின்னர் தான் சண்டைப் படம் பார்த்த விபரத்தை அப்பு ஐயாவுக்குச் சொல்லுவார். அப்போது அவர் ''பிறகென்ன Sunday போய் சண்டைப் படம் பார்த்துவிட்டு வந்திட்டாய்'' என்று கூறி அப்புவைச் சந்தோஷப் படுத்துவார். அப்போது கூடவிருக்கும் பையன்கள் தம்பங்குக்கு 'அடிமைப்பெண்' எம்.ஜி.ஆர் போலவும், 'வசந்தமாளிகை' சிவாஜி



அன்பு மகள் சுமதியுடன்

சிவாஜி போலவும் நடித்துக்காட்டுவார்கள். தனக்கு அதில் ஆர்வம் இல்லை என்பதை வெளியில் சிறிதும் காட்டிக் கொள்ளாமல் அவர்களை மகிழ்விப்பதற்காக உற்சாகமாகக் கேட்டு ரசித்து அப்பையன்களின் மகிழ்விலே தானும் மகிழ்வார். ஒரு முறை அப்பையன்கள் தன்னை ''நீர் கலியாணம் கட்டவில்லையோ?" என்று கேட்டு கேலி பண்ணினார்கள் என்று அப்பு ஐயாவிடம் முறையிட்டு தான் அதற்கு ''ஐயா பேசுவார்" (வைதல் என்ற அர்த்தப்பட) என்று பதிலளித்தாகக் கூறினார். அதற்கு ஐயா ''பிறகென்ன நீ கெட்டிக்காரன் ஐயா பேசுவார் (பொருத்துதல்) எனச் சொல்லிவிட்டாய்" என்று கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார்.

இனி நான் ஆசிரியை என்ற ரீதியல் சிலவற்றை எழுதவிளைகிறேன். நான் முன்பு வட்டுக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் பள்ளிக்கூடம் செல்லும் நாட்களில் குறித்த பஸ்சை தவறவிட்டுவிட்டு மிகத் தாமதமானாலும் கூட அடுத்த பஸ்ஸிற்காகக் காத்து நிற்பேன். அடுத்தது வருவதற்கு மிக நீண்ட நேரம் பிடிக்கும். அந்த நேரங்களில், அப்போது ஐயா மெதுவாக பண்டதரிப்புக்குச் செல்வதற்காக சைக்கிளில் வந்து கொண்டிருப்பார். எனக்கு அவரைக் கண்டதும் தர்மசங்கடமாக இருக்கும். ஆனால் அவரோ என்னைப் பார்த்துவிட்டும் கூட முகமாறுதல் எதுவுமின்றி அதே சாந்தத்துடன் தாண்டிச் சென்று கொண்டிருப்பார். அப்போது எனக்கு நினைக்கத் தோன்றியது Principal மாருக்கு எவ்வளவு நல்லம் ஆறுதலாகப் பள்ளிக்கூடம் போகலாம் என்று. ஐயா என்னுடன் எவ்வளவு பொறுமையாக நடந்து கொண்டுள்ளார் என்பதுடன் எனக்கு இப்படியொரு மகளா என எண்ணி மனதுக்குள் வேதனைப்பட்டிருப்பாரோ என்று இப்போது நான் நினைத்துக் கொள்வதுண்டு. இவ்வளவிற்கும் நான் ஆசிரியையான பின்னர் மிகவேளைக்கே பாடசாலைக்குச் சென்றிருந்த சந்தர்ப்பங்களிலும்கூட அங்கே அதிபர்கள் எங்களுக்கு முன்னரேயே வந்து இருக்கையில் அமர்ந்திருப்பதைக் கண்டதும் எனக்கு ஆச்சரியமாகவும் அதே சமயம் ஒரு மூலையில் மெல்லிதான அதிருப்தியும் இருக்கவே செய்தது. அப்போது தான் நான் கொண்டிருந்த எண்ணம் மாறானது என்பது விளங்கியதுடன், ஐயா ஆறுதலாகப் போவதன் அர்த்தமும் விளங்கியது. ஐயா ஆசிரியர்கள் அனைவராலும் மிகவும் விரும்பத்தக்க ஒரு அதிபராகவும் அதேசமயம் மிகத் திறமையான நிர்வாகியாகவும் கடமையாற்றி வந்திருந்தார் என்பதை அவருடன் சேவையாற்றிய ஆசிரியர்களும் ஊழியர்களும் போற்றிப் புகழ்ந்து கூறியவற்றைக் கேட்கப் பெருமையும் சந்தோஷமுமாகக இருந்தது.

ஐயா ஒரு முறை வகுப்பொன்றிற்கருகில் நடந்து கொண்டிருந்த சமயம் வகுப்பினுள் ஆசிரியர் மேசையில் தலை சாய்த்து கண்மூடி இருந்தாராம். உடனே ஐயா ''நீங்கள் களைத்துப் போய்விட்டீர்கள் போல, staff room இல் போய் ஓய்வெடுங்கள் நான் வகுப்பைக் கவனிக்கிறேன்" எனக்கூறி அவ்வகுப்பில் பாடம் நடத்தத் தொடங்கிவிட்டாராம்.

ஐயாவின் பாடசாலை ஊழியர் ஒருவர் கூறினார், தான் ஏதோ ஒரு வேலையைத் தாமதமாகச் செய்துவிட்டேன் என்பதற்காகத் தன்னை உபஅதிபர் மனம் நோகும்படியாக ஏசிவிட்டாராம். தான் கண்கள் கலங்கியபடி வாடிய முகத்துடன் நிற்பதை அவதானித்த ஐயா காரணத்தை வற்புறுத்திக் கேட்டு அறிந்து கொண்டாராம். பாடசாலை விட்ட பின்னர் வடையும் தேனீரும் வாங்குவித்து தன்னைச் சாப்பிடும்படி கேட்டுக்கொள்ள, தான் மறுத்தபோதும் ''நீர் நடந்ததை மறந்து இதைச் சாப்பிட்டு சுமுகமான மனநிலைக்கு வந்த பின்னர் தான் நான் வீடு செல்வேன்" என்று கூறவே தான் மறுக்க முடியாமல் அவற்றை அருந்தினாராம்.

எங்குமே தனிநாட்டுப் பேச்சாக இருந்த நேரம் அது. ஒரு நாள் ''ஐயா தனிநாடு வந்தால் டுபாவ இருக்காதாம்; எங்கடை வெங்காயம் ஒன்றும் கொழும்புக்கு விற்கமுடியாதாம்" என்று மற்றவர் கதைக்கக் கேட்டதை அவரிடம் வினவினேன். அவர் அதற்கு ''ஆ...ஆச்சி.." என்று விட்டு மெல்லிதான ஒரு சிரிப்புடனும், சிறிய யோசனையுடனும் பதில் எதுவும் அளிக்காமல் மௌனமாகவே இருந்துவிட்டார். ஐயா மனதுக்குள் எனக்குச் சொல்லி விளங்க வைக்க முடியாது என்று எண்ணினாரோ அல்லது என்ன யோசித்தாரோ என்று இன்னும் நான் எண்ணிப் பார்ப்பதுண்டு. ஐயாவுடன் இன்னும் அதிகநாட்கள் வாழ்ந்திருக்கக் கூடியதாக நான் இன்னும் சில காலம் முன்னரேயே பிறந்திருக்கக் கொடுத்துவைக்காமல் போய்விட்டதே என்னும் மிகப் பெரும் மனக்கவலை எனக்கு உண்டு.

ஐயாவிடம் நான் கேட்ட நகைச்சுவைகள் சில. மக்களால் கடவுளாக மதிக்கப்படும் ஒரு சில மனிதர்களுள் முக்கியமான ஒருவர் பற்றி ஐயா குறிப்பிடுகையில் பாலருக்கான ஆங்கிலப் பாடல் ஒன்றைச் சைகையுடன் சொல்லிக் காட்டினார். ஆனால் அன்று எனக்குச் சரியான அர்த்தம் புரியவில்லை எனினும் விளங்கியது போல் சிரித்து வைத்தேன். பின்னர் பைலட் பிறேம்நாத் படம் வெளிவந்த போது அதில் வந்த ஒரு பாடலைக் கேட்ட பின்னர் தான் ஐயாவின் பகிடி எனக்கு விளங்கியது. அதன் பின் நான் மற்றவர்களுக்குக் கூறிச் சிரித்துக் கொள்வேன்.

வெள்ளைக்காரர்கள் நிறையக் கண்டுபிடித்தது தமிழரின் பல விடயங்களை அவதானித்துத்தான் என்று பகிடியாகக் குறிப்பிடுவார். காரின் புநயச ஐக் கண்டுபிடித்தது நமது ஆட்களின் கதியால் சண்டையைப் பார்த்துத்தானாம். வேலியின் ஒரு பக்கத்து வீட்டுக்காரர் கதியாலை அடுத்த வீட்டுப் பக்கமாகச் சாய்க்க, இந்த வீட்டுக்காரர் பிறகு அதனை முன்னைய வீட்டுப் பக்கம் சாய்ப்பாராம். ஆனால் இருவீட்டு இளசுகளும் காதலர்கள் என்பதால் அவர்கள் காணும் போது கதியாலை நடுவில் இழுத்து விடுவார்களாம்.

இதே போன்று வெள்ளையர்களிடமிருந்து நாம் உள்வாங்கிக் கொண்ட தமிழ்ச் சொல் என்று ஒன்றைச் சொல்வார். நம்மவர்கள் சம்பலை அம்மியில் அரைத்து கைகளில் உருட்டி உருண்டையாக வைப்பது வழக்கம். ஒருமுறை உணவருந்திக் கொண்டிருந்த வெள்ளையர் ஒருவர் இவ்வாறாக வைக்கப்பட்டிருந்த உருண்டையைக் காட்டி "What is this ball?" என்று கேட்டாராம். இதற்கு நம்மவருக்குப் பதில் சொல்ல முடியவில்லை என்பதால் 'This is some ball' என்று சமாளித்தராம். இதிலிருந்தே ''சம்பல்" வந்தது என்றார்.

இன்னொன்று வெள்ளைக்காரர் எப்போதும் தேநீரை ஊரி இல் வைத்து மெதுவாக சிறிது நேர இடைவெளி விட்டுவிட்டு உறிஞ்சிக் குடிப்பார்களாம். நாம் என்றால் மூக்குப் பேணியினுள்ள தேநீரை எடுத்தால் 'கட கட, கட கட' வென சத்தமிட்டபடி ஒரே மூச்சில் குடித்துவிட்டுத்தான் வைப்போமாம். இதை அவதானித்தே Petrol pump ஐக் கண்டுபிடித்தார்கள் என்றார்.

ஒருமுறை ஏதோ ஒரு தேவைக்காக அவரை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது வாகனத்தில் அழைத்துச் செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதாம். தான் அவர்களுடன் வருவதாக இருந்தால் அந்த வாகனத்தில் உதயசூரியன் கொடி பறந்தபடி வர விரும்பாததைத் தெரிவித்தாராம். அதன் பின்னர் உதய சூரியன் கொடி கழற்றப்பட்டதாம். இதற்கு ஐயா சொன்னார் ''அன்று சூரியன் இரண்டு மணிக்கே அஸ்தமித்துவிட்டது" என்று.

தனது பாடசாலையில் உயர்தர வகுப்புப் பெண் பிள்ளைகள் பரீட்சை முடிந்து ஒரே சத்தம் போட்டுக் கொண்டு நின்றார்களாம். தான் சொன்னாராம் ''கோழி கொக்கரித்தால் முட்டை தான் அர்த்தம்" என்று.

1958 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது தென் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் அனைவரையும் தமிழ்த் தலைவர்கள் எனப்பட்டவர்கள் கப்பலேற்றி அவர்களது சொந்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைத்தார்களாம் தாம் மாத்திரம் பாதுகாப்புப்படையினரின் தகுந்த பாதுகாப்பின் கீழ் இருந்து கொண்டு. இதற்காக ஐயா சொன்னது ''தமிழ் நாட்டில் கப்பலோட்டிய தமிழன் இருந்தான். இங்கே கப்பலேற்றிய தமிழன் இருக்கிறான்" என்று.

ஒருமுறை ஐயாவிடம் ஒரு முறைப்பாடு சென்றதாம் ஒரு பெண்பிள்ளை பையன் ஒருவருக்கு கடிதம் கொடுத்தார் என்று. இதற்கு அவர் காலைக் கூட்டத்தில் பொதுவாகச் சொன்னாராம் "Pen Pall" என்ற வகையில் எழுதுங்கள் தவறில்லை. 'பெண்பால்' என்ற வகையில் எழுதினீர்களாயின் அதோ வாசற்கதவு திறந்திருக்கிறது" என்று.

சுமதி குகதாசன்,
கார்த்திகேசனின் இளைய மகளாவார்.

Who Blew First, the Horse or the Veterinarian?

M. Sivasithambaresan

Karthigesan master was neither my class teacher nor taught any subject to me. He had never even talked to me for more than few minutes at any time, but he is "My Master', because he taught me all that I had to know to became a successful person, at the vulnerable age of 14 to 18. When most of the adults, apparently looked down at us and treated us not as human beings, but as some strange tiny monsters that should be chained and kept restrained, instead of being let free, he considered us somebody.

Karthigesan master instilled into us a feeling of self-esteem that took us a long way and still guides me in my present life, even at the age of 53 years. He didn't care what religious beliefs we had. He treated Hindus, Christians, Muslims, Budhists and non-religious students equally; Yes, we had students of many religions in our batch, including a Sinhalese Budhist student from Kegalle and one Muslim student from Puttalam.

He taught us how to laugh at our shortcomings & difficulties and face courageously the growing pains- the embarrassments and harassment all youngsters encounter as they grow up. With his help we enjoyed our lives and felt our inner energy continue to grow day by day and we gained a will power that was strong enough to pull through even when we failed in some of our exams or other aspect of life. He didn't mind whether other teachers and adults lost faith in us

or not. Students who would otherwise have dropped out of school, continued to succeed at their studies through sheer will power instilled into them by Karthigesan master. I failed in my GCE (A/L) exams twice due to undiagnosed diabetes, but the self confidence I gained through our association enabled me to pull through. Later I became a skillful Vetenary Surgeon, in spite of my illness.

Thereafter, I excelled in this field to gain a prestigious position as a Training Officer for United Nations Development Programme. Because of the faith teachers like him had in us we were able to achieve several qualifications and reach the heights we would otherwise have never imagined possible. I, for example, was able to amass several post graduate qualifications and am still striving to acquire more at the age of 53, in spite of my ill health. It's all because of teachers like Karthigesan master, who never considered us stupids, even when others around us did. For him, we were all admirable intellectuals, more valuable than precious gems, though for some others we – failed students, appeared like pebbles on the sidewalks.

His influence on his students, relatives and others was so great that almost everyone felt that associating with him, allowed them to acquire some of his excellent heavenly qualities. I gained a lot from associating with Karthigesan master's students too, who were close to him and followed in his foot steps. I am sure, if we go to any corner of the world, we would find at least one of Karthigesan master's students, relatives or associates doing some good deeds benefiting others, thereby spreading his goodwill.

Karthigesan master always believed in equality of human beings, regardless of the economical and social status. He treated every one one of us with respect, kindness and a pleasant smile that emanated right from his heart. Both, affluent students from the town and students from rural areas studied at Jaffna Hindu College. He would never allow peers to tease students whom they thought of a poor or from rural area, and he would always find some peaceful means to settle the

differences in cultural and behavioural patterns. A friend and I were from Iddaikaddu and our peers used to tease us thinking that Iddaikaddu is a rural area. One day he intervened and told them, "Don't you tease these boys. You all are in Iddai – kaddu (,ilf;-fhL)!", meaning in the middle of the journey to the cememtry (Rliyf;-fhL). We all laughed and that put an end to it.

When he was with us, we never felt that we were with a teacher, instead we saw him as a close friend in spite of the generation gap between us. He told so many jokes and anecdotes to us and mostly to his class students, which any teenager would enjoy. One of our favourite past-times was to exchange the jokes amongst ourselves.

Most of the jokes, anecdotes and stories had inner hidden themes and served as great educational tools. They made us think deeper and broader than usual and made us analyze the various aspects and virtues of human life. Those were the days teaching aids weren't available, students weren't allowed to go to movies very often, and no one had heard of the television. Thus, these discourses enriched us with a detailed knowledge of worldly matters, especially matters considered taboo in our culture those days. They also gave us wisdom to decide what is right and wrong. He knew the danger in keeping the youngsters in the dark; that an ignorant might crash down quickly and will never get up, when the fall hurts heavily. Even though he didn't believe in God, he knew the various ideologies depicted in Hinduism, such as worshiping Lord Shiva etc. and used those ideals, to educate us.

Since we studied at Boys' school and some of us resided at hostel with restricted access to the locality, he knew that the timid ones among us (shy-guys), might end up as grown-ups lacking the essential social skills required to succeed in this world. So, he was instrumental in organizing get-togethers with professionals in Jaffna town and students of Hindu Ladies College. He refined us in social etiquette. In 1964, when we attended our first social dinner organized for our batch, believe me, he even taught us how to talk to young girls, what things we could say to break the ice and to have friendly conversation, and what things to avoid in our talk. (In those days, boys were

not supposed to talk to girls and vice versa) .With the help of other staff, he also invited to these dinners, prominent professionals including technicians, craftsmen, university lecturers, doctors, engineers, etc, and taught us how to chat with them in a casual manner, and gather valuable information about their profession . This helped us a lot in deciding our future and also enabled us to feel that these "Big People" were not scary at all, but ordinary people like us. This gave us confidence, that, with hard work, one day we too could achieve their position.

Some times Karthigesan master tricked us too. For toasts at social dinners, and debates, he would help us prepare the facts we could put forth to support our views. Then when he assisted other schools, particularly Hindu Ladies College, provided the opposing teams, some of the points we were going to talk about and prepare them to face us and also made it very interesting. He wouldn't divulge our entire secrets, but only just sufficient facts for them to face us courageously. He had friends everywhere and others sought his assistance, so he was able to get away with his game! He not only trained us how to convey a message clearly, but also be prepared to face counter arguments from an opposing party.

During the last year of my college education, I was at Colombo Alexandra College. When I got selected for Veterinary Medicine, I went to thank him. And he gave me only one piece of advice, 'You always remember to blow first'. It was in my mind all the time, and I applied it only during my second year at the University. When I learnt that it was customary to medicate horses, by placing the medicine in a tube, and blowing it into a horse's mouth. The doctor is supposed to blow first, quickly before the horse spits out the tube. There was an incidental danger that if the horse blew first, the doctor would end up swallowing the medicine! Well, thanks to Karthigesan master's advice, you know who blew first during my training, it couldn't be the horse!

M. Sivasithambaresan,
Former student of Jaffna Hindu College.

கார்த்திகேசனும் செல்லத்துரையும்

க. கனகராசா

யாழ் இந்துக் கல்லூரியில் அறுபதாம் ஆண்டுகளில் செல்லத்துரை இல்லத்திற்கு ஒரு தனி இடம் இருந்தது. அந்த இடம் எதுவென்று அந்தக் காலத்தில் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும். இப்படியான சூழ்நிலையில் அந்த இல்ல ஆசிரியராக, அதுவும் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும், இருக்க மனம் சலித்தவரால் இயலாது. எதையும் தாங்கும் இதயம் மட்டுமல்லாமல் - எதையும் சந்தோஷமாகவும், சகஜமாகவும், பகிடியாகவும் எடுக்கக்கூடிய மனப்பக்குவமும் - மனப்பான்மையும் கொண்டவருக்கே முடியும்.

அப்படியான ஒரு இல்லத்திற்குச் சொல்லிச் செய்வித்தது போல் இருந்தவர் தான் ''காத்தார்'' என்று ஆசையுடன் அழைக்கப்படும் M.(எம்) கார்த்திகேசன் மாஸ்ரர் அவர்கள். எங்கள் இல்லம் கடைசியாக (வழக்கம்போல்) வரும்போது ''எங்கடை பொடியள் வெடிக்குப் பயப்படமாட்டார்கள்! சுட்டபிறகும் நிற்பார்கள். விருப்பம் என்றால் ஓடுவார்கள்'' என்று சொல்லுவார். இப்படியாகக் கவலையான சந்தர்ப்பத்தையும் - முசுப்பாத்தியாக மாற்றிவிடுவார்.

இன்னொருமுறை இல்லக்கூட்டம் நடைபெற்று தனாதிகாரியாக R. விக்கினேஸ்வரன் என்பவர் தெரிவு செய்யப்பட்டார். அப்போது இல்லத் தேவைக்காக ஒவ்வொருவரும் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். காசு சேர்ப்பது என்பது அவ்வளவு சுலபமான விடயம் இல்லை. காசு சேர்த்தவர்களுக்குத்தான் அந்த அனுபவம் தெரியும். தனாதிகாரி காசு சேர்க்க வரும்போது 'ஆர்?'. விக்கினேஸ்வரன் என்று கேட்டு மினக்கெடுத்தாமல், இவர்தான் சு.விக்கினேஸ்வரன் ஒரு ரூபாய்க் குத்தியை சுண்டி விடவும் என்பார்.

மாணவர்கள் சமபரம்பலாக (Even Distribution) இல்லங்களுக்குப் பகிரப்பட்டால், ஒவ்வொரு இல்லமும் சராசரியாக ஐந்து ஆண்டுக்கு ஒரு முறையாவது முதல் இடத்தைப் பிடிக்க வேண்டும். ஆனால் ஓரிரு இல்லங்கள் மாறி மாறி முதல் ஸ்தானத்தில் இருந்து வந்தன. அது அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

இந்த சூழ்நிலையில் - 1973ம் ஆண்டு கன்னி முயற்சியும் கடைசி முயற்சியுமாக செல்லத்துரை இல்லம் புதிய விளையாட்டு வீரர்களை உருவாக்கியது. ஏற்கனவே உள்ள வீரர்களை மேலும் மேலதிக நிகழ்ச்சிகளில் பங்கெடுக்க உற்சாகப்படுத்தியது. விளைவு - பாரதூரமாக மாறிவிட்டது. செல்லத்துரைக்கு முதலிடம். அதைவிடப் பெரிய சாதனை, J.S.S.A. விளையாட்டுப் போட்டியில் எமது அளவிற்கு மேலதிக புள்ளிகளுடன் முதலிடத்தைப் பெற்றது.

காத்தார் பல பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர். கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்று பெயர் பெற்றிருந்தாலும் சைவசமயத்தைக் கரைத்துக் குடித்தவர். ஒருநாள் சேக்கிழார் விழா கல்லூரியில் நடைபெறுகிறது. இந்தியாவில் இருந்து குன்றக்குடி அடிகளார் போன்ற பெரியவர்கள் வந்து சிறப்பித்து இரண்டு நாள் தொடர்ந்து நடைபெறும் மாபெரும் விழா. சேக்கிழார் திருவுருவம் வண்ணார்பண்ணை சிவன்கோவிலில் இருந்து கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கு வீதியுலா வருவது வழக்கம். ஒரு வருடம், சேக்கிழார் திருவுருவம் அடியார்களால் K.K.S. வீதி வழியாகக் காவிக் கொண்டுவரப்பட்டு கல்லூரி வீதிக்குத் திரும்ப முதல் அவ்விடத்தில் வாகன நெரிசல் கூடிவிட்டது. பல பஸ், கார்கள் (K.K.S. வீதி - கல்லூரி வீதி சந்தியில்) வர வழிவிடுவதற்காக திருவுருவத்தைத் தூக்கி வந்தவர்கள் கொஞ்சம் அவ்விடத்தில் நின்று கொண்டே சுற்ற வேண்டி ஏற்பட்டுவிட்டது. அதே நேரம் அவ்விடத்தில் வந்த காத்தார் உடனே ''சேக்கிழார் என்ன Circle அடிக்கிறார்?" என்று கேட்டார்.

இவர் ஆங்கிலம் இலகுவாகப் படிப்பிப்பதில் வல்லவர். இவர் எழுதி வெளியிட்ட G.C.E. O/L ஆங்கில சோதனைக்குரிய பரீட்சைப் புத்தங்கள் பெரும்பாலான கல்லூரிகளில் பாவனையிலிருந்தன. ஆங்கிலம் படிப்பதைப் பற்றியும் ஒரு பகிடி சொல்லுவார். உங்களுக்கு ஆங்கிலம் படிப்பது நோக்கம். ஆனால் ஆங்கிலமோ உங்களுக்கு ''நோ(க்)கம் -No come".

கம்யூனிஸவாதியாக இருந்ததால் மட்டுமல்ல, இயற்கையாகவே அவருக்குப் பொருட்களில் ஆசையில்லை ஒரு பொருளைத் தவிர. அது சந்திரா கபே சுருட்டு. அதனால் தான் போலும் இவரைச் சுற்றி எப்போதும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். Peoples' Princess என்ற டயனா இளவரசியை மேல்நாட்டு மக்கள் கூறுவது போல அவரும் மனிதநேயம் மிக்க ஒரு ''மக்கள் ஆசிரியர், மாணாக்கர் ஆசிரியர்" ஆக எங்கள் மனங்களில் எப்பொழுதும் உள்ளார். இவ்வளவுக்கும் எனக்கு இவரிடம் படிக்க ஒரு வாய்ப்பு கிடைக்கவில்லை என்ற ஒரு கவலை மனத்தின் ஒரு மூலையில் எப்போதும் ஆதங்கமாக இருக்கத்தான் செய்கின்றது.

க. கனகராசா,

முன்னாள் யாழ் இந்துக் கல்லூரி மாணவன் (1966-74)

காத்தி எனும் ஒளிவிளக்கு

தணிகையன்

குளிர்கால இளவெய்யில்
கோலங்காட்டும்
அதிகாலைப் பொழுதுகளில்
உலகறியா இளவயதில்
மாணவனாய்
உன் இல்லத்து முன்னறையில்
எதிரமர்ந்து
கல்வி பெற்ற காலம்
என் கண்முன் வருகிறது.

சிகப்பு மையால்
சரி பிழைகள்
வெட்டித் திருத்தி
வழிகாட்டிவைத்தவன் நீ
சமூகத்தில் மட்டுமல்ல
தேசத்து வாழ்க்கையிலும்
நீ தேர்ந்த வழி
தப்பவில்லை

ஆறாத வரலாற்றுப்
புண்ணாகி
அதிகாரம் அடக்குமுறை
தீராத அறியாமை
பசிதுன்பம் நோய் பிணிகள்
எல்லாமே நீறாக்கும்
செந்தீயை ஏற்றவன் நீ
அடுத்தவர் மேல் அக்கறையும்
அன்பும் கொண்டு
அகத்தினிலே சுயநலத்தை
அறுத்தவன் நீ
பொது நலத்தை மேம்படுத்தும்
புதுக் கருத்தை எம்
மண்ணில் விதைத்தவன் நீ

உன்னுறவைப் பெற்றவர்கள்
உயிர்ப்புப் பெற்றார்
மன்னுயிர்கள் சமத்துவமாய்
உரிமை பெற்று
ஒன்றாய்க் கூடி மகிழ்வுடனே
வாழ வழி
காட்டும் மார்க்கம்

சற்றே பின்னடைந்த போதும்
சலிப்படைந்து சோராது
முனைப்புடனே
முன்னெடுக்க
துணிவோர் நெஞ்சில்
கார்த்தி எனும்
ஒளிவிளக்காய்
நிலைப்பீர் என்றும

* * *



அதிபர் கார்த்திகேசனின் சேவையை
கௌரவிக்குமுகமாக நிறுவப்பட்ட
மண்டபத் திறப்பு விழாவின் போது

அமரர் மு. கார்த்திகேசன்

ந. சிவகடாட்சம்

எமது கல்லூரியில் 07.06.1971 தொடக்கம் 31.12.1971 வரை ஆறு மாத குறுகிய காலம் அதிபராக கடமையாற்றிய போதிலும் அன்னாரின் சேவை எமது கல்லூரியில் இன்றும் நினைவு கூரப்படுகின்றது. நேர்மை உள்ளம் படைத்த ஒரு சமதர்மவாதியான அன்னார் மாணவர்களை அன்பாலும் அறிவுரை கூறுவதன் மூலமும் திருந்த வழிகாட்டியவர். இதனால் மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு குழம்பிய போதிலும் அவர்களை அடிக்காமல் அவர்கள் செய்யும் தவறுகளை அவர்களே உணரப்பண்ணி திருத்த முற்பட்டார்.

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி அனைவரையும் சமமாக மதித்தவர். ஆசிரியர்கள், ஊழியர்கள் என்ற வேறுபாடு இல்லாதவர். தான் முதல் நாள் அதிபராக கடமையேற்ற போது அனைவரிடமும் அவர்கள் பணிபுரியும் இடங்களுக்குச் சென்று தன்னை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு அறிமுகமானவர். யார் அவரின் அலுவலகத்திற்குச் சென்றாலும் தனக்கு முன்னால் இருக்கும் கதிரையில் அவர்களை அமரச்சொல்லித்தான் உரையாடுவார்.

முன்னாள் அதிபர் E.C.A. நவரட்னராசா அவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட கட்டிடத்துக்கு நிதிசேகரிப்பு முயற்சிகளிலும் ஆர்வமாக முன்னின்று நிதி சேகரிக்க உதவியவர்.

இவரின் சேவை எமக்கு ஆறு மாதங்களே கிடைத்த போதும் அன்னாரை நினைவுகூர பழைய மாணவர் சங்கத்தால் ஆண்டு தோறும் முன் எடுக்கப்படும் அமரத்துவ அதிபர் நினைவு தினத்தில் அன்னாரின் படத்துக்கு மாலை அணிவித்து தீபமேற்றி மரியாதை செய்யப்பட்டு, அன்னாரின் சேவைகள் நினைவுகூரப்படுகின்றது. அன்னாரின் நினைவு என்றும் எம்முடன் இருக்க கல்லூரி கட்டிடம் ஒன்று அவரின் நாமம் தாங்கி உள்ளது.

அன்னார் அமரரான போதும் அவரின் நினைவுகளும் சேவைகளும் என்றும் எம்முடன் இருக்கும்.

திரு. ந. சிவகடாட்சம்,
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபர்

தமிழ் மக்கள் வாழ்வில் தோழர் கார்த்திகேசனின் பங்களிப்பு

சண்முகம் சுப்பிரமணியம்

எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய தோழரும் ஆசானுமான கார்த்திகேசன் அவர்கள் காலமாகி 25 ஆண்டுகள் கடந்துவிட்டன. 1977ம் ஆண்டு செப்ரெம்பர் 10ம் திகதி அவர் தமது 58வது வயதில் காலமானார். தமது குறுகிய வாழ்க்கைக் காலத்தில் ஒரு உண்மையான கம்யூனிஸ்டாக அவர் தம் வாழ்வை தகவமைத்துக் கொண்ட ஒரு ஒப்பற்ற தோழராவார்.

தம் வாழ்நாளில் சமூகத்திலும் அரசியலிலும் அவரைத் தேடி எத்தனையோ உயர்வான பதவிகள் வந்த போதிலும் இறுதிவரை தன்னைப் பற்றியே எள்ளளவும் சிந்திக்காத உத்தம பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதியாக எளிமையான மக்கள் தொண்டனாக தன் வாழ்வை நெறிப்படுத்தி வாழ்ந்தார். தனது பல்கலைக் கழக வாழ்வில் ஆரம்பித்த கம்யூனிஸ்ட் வாழ்வை தனது இறுதி மூச்சுவரை தொடர்ந்தார். தனது வாழ்வின் இறுதிக் கணங்களிலும்கூட காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை ஊழியர் ஒருவரின் பிரச்சினைகள் சம்பந்தமாக மகஜர் ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

மலேசியாவில் பிறந்த தோழர் கார்த்திகேசன் தனது ஆரம்பக் கல்வியை அங்கேயே பயின்றார். பிரித்தானிய மகாராணியால் கொமன்வெல்த் நாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் தோழர் கார்த்திகேசனுக்கும் அப்பொழுது கிடைத்தது. ஆனால் அவர் தனது பெற்றோரின் பிறந்த நாடான இலங்கைக்கு வந்து தனது உயர்கல்வியை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து சிறப்புப் பட்டதாரியானார்.

அன்றைய சூழ்நிலையில் அவரது பட்டப்படிப்பு அவருக்கு இலங்கையில் மிகச் சிறந்த சிவில் உத்தியோகமொன்றை வழங்கக் காத்திருந்தது. ஆனால் தனது பல்கலைக்கழக வாழ்வின் போதே மாணவர் நடவடிக்கைகளில் - குறிப்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்தின் எதேச்சாதிகாரத்துக்கெதிராகவும், நமது நாட்டைக்

கைப்பற்றி ஆண்ட பிரித்தானிய காலனித்துவவாதிகளுக்கு எதிராகவும், அதேவேளையில் சோஷலிச இயக்கத்திற்கு ஆதரவாகவும் அவர் ஏனைய தோழர்களுடன் இணைந்து தீவிரமாகச் செயற்பட்டு வந்ததினால் தன்னை முழுநேர அரசியலில் ஈடுபடுத்தத் தீர்மானித்தார். அவரை ஆசிரியராகக் கொண்டு பல்கலைக்கழகத்திலிருந்து வெளிக்கொண்டு வரப்பட்ட 'மாணவர் செய்தி' என்ற பத்திரிகை அப்பொழுது முற்போக்கு கருத்துக்களின் களமாக விளங்கியது.

1935ல் இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியாகவும் முற்போக்குக் கட்சியாகவும் ஆரம்பிக்கப்பட்ட இலங்கை சமசமாஜக் கட்சி, 1939ம் ஆண்டளவில் ரொட்ஸ்கிச தத்துவத்தை ஏற்று உலகின் முதலாவது சோஷலிச நாடான, மகத்தான லெனினாலும் ஸ்டாலினாலும் அகில உலகமே பிரமிக்கத்தக்கதாக கட்டியெழுப்பப்பட்ட சோவியத் யூனியனுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்தது. அதன் காரணமாக அதிலிருந்த கம்யூனிஸ்ட்டுகள் வெளியேறி 1940ல் இலங்கை ஐக்கிய சோஷலிசக் கட்சியை உருவாக்கினர். அதை ஸ்தாபித்தவர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவர்.

ஐக்கிய சோஷலிசக் கட்சி 1943 ஜூலை மாதம் 3ம் திகதி இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியாக பரிணாமம் பெற்ற போது அதனை ஸ்தாபித்த தலைவர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராகத் திகழ்ந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கத்தைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தினதும், மக்களினதும் ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டங்களில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகியது. அத்துடன் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி தனது வேலையையும் ஆரம்பித்தது. அங்கு கட்சியை உருவாக்கி வழி நடாத்தும் பொறுப்பு வாய்ந்த வேலை தோழர் கார்த்திகேசனிடம் ஒப்படைக்கப்பட்டது. தோழர் கார்த்திகேசன் 1946ம் ஆண்டு கட்சி நிர்மாணப் பணிகளுக்காக யாழ்ப்பாணம் சென்றார். தனது வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்காக அன்றும் இன்றும் புகழ்மிக்க கல்லூரியாக விளங்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு ஆசிரியராகச் சேர்ந்து சுமார் 25 வருடங்கள் வரை ஆசிரியராகவும் இறுதியில் அதிபராகவும் அதே பாடசாலையிலும், பின் வேறு பாடசாலைகளிலும் பணியாற்றினார்.

இதே 1944ம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு தெளிவான நிலைப்பாட்டை எடுத்தது. அதாவது *இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணய உரிமை உள்ளது என்ற தீர்மானத்தை எடுத்தது. இந்தத் தீர்மானத்தை எடுத்ததிலும், பின்னர் இதன் அடிப்படையில், ஐக்கிய இலங்கையில் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை 1954ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் கூடிய கட்சியின் வடபிரதேச மாநாடு எடுத்ததிலும் தோழர் கார்த்திகேசனுக்கு மற்றெல்லோரையும்விட காத்திரமான ஒரு பங்கு* உண்டு என்றால் அது மிகையாகாது.

தோழர் கார்த்திகேசன் வடபகுதியில் கம்யூனிஸ்ட் இயக்க வேலைகளை ஆரம்பித்த காலம் ஒரு சாதாரண சூழல் நிலவிய காலமல்ல. சோஷலிசக் கருத்துக்களை மட்டுமின்றி சாதாரண ஜனநாயகக் கருத்துக்களையே உள்வாங்க மறுத்த சமூகச் சூழல் வடபகுதியில் அப்பொழுது நிலவியது. இலங்கை முழுவதும் பிரித்தானிய ஆட்சி நிலவியதுடன் வடக்கில் கிறிஸ்தவ மிஷனரிகளின் பல பாடசாலைகள் நிறுவப்பட்டு பிரித்தானியர் வழங்கிய வெள்ளைக் கொலர்(white collar) உத்தியோக மோகத்தில் படித்தவர்கள் மூழ்கியிருந்தகாலம். மறுபக்கத்தில் நிலப்பிரபுத்துவத்தின் கொடூர வடிவங்களான சாதியமைப்பும் பெண்ணடிமைத்தனமும் காலாச்சார முறைமைகளும் கோலோச்சிய காலம்.

1930களில் ஹன்டி பேரின்பநாயகம் போன்ற காந்தீய சமூக சீர்திருத்த வாதிகளால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் போன்ற அமைப்புகள் பிரித்தானிய ஆட்சிக்கெதிராகவும், தீண்டாமைக் கெதிராகவும், மற்றும் சமூக நீதிக்காகவும் நடாத்திய இயக்கங்கள் யாழ்ப்பாண சமூகத்திடமிருந்து இந்தியாவில் சுதந்திர இயக்கம் பெற்ற அமோக ஆதரவைப் போன்று பெறத் தவறிய ஒரு சூழ்நிலையிலேயே தோழர் கார்த்திகேசன் தனது கம்யூனிஸ்ட் இயக்க வேலைகளை ஆரம்பித்தார்.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரசின் நடவடிக்கைகளினால் உந்தப்பட்ட ஒரு முற்போக்கு புத்திஜீவிகள் தலைமுறை, குறிப்பாக ஆசிரியர்கள் உருவாகி இருந்தமை தோழர் கார்த்திகேசனின் வேலைகளுக்கு ஒரு அடிஉரமாக பயன்பட்டது என்பதில் சந்தேகமில்லை. அந்தக் காலகட்டத்தில் உருவாகிப் பின்னர் செல்வாக்கு வகித்த வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் ஸ்தாபாகர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவர் என்பதிலிருந்து இது புலனாகும்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ளது போலவோ, குறைந்த பட்சம் தென்னிலங்கையில் இருந்த அளவிலோ வடபகுதிச் சமூகத்தில் தொழிலாளி வர்க்கம் அன்று உருவாகி இருக்கவில்லை. இன்று இருப்பது போல தமிழ் தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறையோ அதற்கெதிரான தீவிர போராட்டங்களோ கூட உருவாகி இருக்கவில்லை. தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி போன்ற தமிழ் இனவாத முதலாளித்துவக் கட்சிகளும் உருவாகி இருக்கவில்லை. இத்தகைய ஒரு தெளிவற்ற சூழலில் தோழர் கார்த்திகேசன் தமது மேதாவிலாசத்தின் மூலம் வடபகுதிச் சமூகத்தின் உள்முரண்பாடுகளை ஸ்தூலமாக ஆராய்ந்து இனம் கண்டு தமது வேலைகளை ஆரம்பித்தார்.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் முழு இலங்கை மக்களினதும் பொது எதிரியாக இருந்ததினால் அதற்கெதிரான வேலைகளை முதன்மைப் படுத்தினார். தென்னிலங்கையில் ஏகாதிபத்திய அரசுக்கும் அதனுடன் கூட்டுச் சேர்ந்த தரகு முதலாளிகளுக்கும் எதிராக தொழிற்சங்க இயக்கம் இடதுசாரிகளின் தலைமையில்

பலமாக இருந்தது. எனவே தமிழ் கீழ் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்த அரச ஊழியர்களான ஆசிரியர்கள், எழுதுவினைஞர்கள் ஆகியோரை ஸ்தாபன ரீதியாகத் திரட்டுவதில் கவனம் செலுத்தினார். முற்போக்கு கலாசார வேலைகளிலும் ஈடுபாட்டுடன் வேலை செய்தார். யாழ்ப்பாண சமூகம் பெரும்பாலும் நிலப்பிரபுத்துவத் தன்மையைக் கொண்டிருந்தமையால் அதன் கொடிய வெளிப்படான தீண்டாமைக்கும் சாதியமைப்புக்கும் எதிராக தாழ்த்தப்பட்ட மக்களை அணிதிரட்டி பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தோழர் கார்த்திகேசன் மிகச் சிறந்த ஆங்கில, கணித ஆசிரியராவார். அத்துடன் எந்தவொரு சிக்கலான விடயத்தையும் மிகவும் இலகுவாகவும் நகைச்சுவையாகவும் விளக்குவதில் வல்லவர். எனவே அவரது ஆளுமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கொடிகட்டிப் பறந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அவரைச் சுற்றி எப்போதும் ஒரு மாணவர் கூட்டம் இருந்து கொண்டிருக்கும். மாணவர்களால் 'காத்தார்' என அழைக்கப்பட்ட அவரிடம் எதுவித தயக்கமுமின்றி எந்த வேளையிலும் மாணவர்கள் அவரை தமது பிரச்சினைகளுக்காக அணுகினர். அவ்வாறான மாணவர்களில் பலர் பின்னாளில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுதியான உறுப்பினர்களாகவும் ஆதரவாளர்களாகவும் வளர்ந்தனர்.

யாழ்ப்பாண சமூகத்தின் உயர் வர்க்க சக்திகளான சாதி வெறிபிடித்த நிலப்பிரபுத்துவ சக்திகளும், ஆங்கிலேய அடிவருடிகளும் தமது முதலாவது அரசியல் கட்சியாக அகில இலங்கைத் தமிழ் காங்கிரசையும், பின்னர் தமிழரசுக் கட்சியையும் (இன்று அது தமிழர் விடுதலைக் கூட்டணி) உருவாக்கி தென்னிலங்கையில் செயல்பட்ட ஏகாதிபத்திய சார்பு படுபிற்போக்குக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் அரசியல் கூட்டுச் சேர்ந்து செயல்பட்டதுடன், அவர்களது அரசியல் கூட்டு தொழிலாளி வர்க்கத்துக்கு மட்டுமின்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், தமிழ் தேசிய இனத்துக்கும் எதிராகவே இருந்தது. எனவேதான் தோழர் கார்த்திகேசனின் தலைமையில் செயல்பட்ட வடபகுதி கம்யூனிஸ்ட்டுகளின் பணி பாரியதாகியது.

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து டீ.எஸ்.சேனநாயக்காவின் ஐ.தே.க மந்திரி சபையில் இணைந்தது மாத்திரமின்றி, மலையக இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளரின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் அவ்வரசு பறிப்பதற்கும் உடந்தையாகச் செயற்பட்டார். அதன் காரணமாக அதிலிருந்து பிரிந்து திருவாளர்கள் கு.வன்னியசிங்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் ஆகியோர் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தபோது, அக்கட்சி உண்மையான தமிழ் தேசியவாதக்கட்சியாகவும் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கட்சியாகவும் இருக்கும் எனக் கம்யூனிஸ்ட்டுகள் எதிர்பார்த்தனர்.

அதன் காரணமாக ஐ.தே.கட்சியின் தமிழ்ப்பகுதி மறுபதிப்பாக வடக்கில் செயல்பட்ட தமிழ்க் காங்கிரசின் அடாவடித்தனங்களால் தமிழரசுக் கட்சி பொதுக்கூட்டங்களைக் கூட நடத்தமுடியாது திண்டாடியபோது, கம்யூனிஸ்ட் கட்சியே அன்றைய காலகட்டத்தில் அவர்களது கூட்டங்களுக்கு மேடைப் பாதுகாப்பு வழங்கியது. கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்குக் காரணமாக 1953ம் ஆண்டில் ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராக நடைபெற்ற நாடுதழுவிய மாபெரும் ஹர்த்தாலின் போது தென்னிலங்கையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அதில் பங்குபற்றியதுபோல, வடக்கு கிழக்கில் கு.வன்னியசிங்கத்தின் தலைமையிலான தமிழரசுக் கட்சி அதில் பங்குபற்றியது.

ஆனால் திரு.வன்னியசிங்கத்தின் மரணத்தின் பின்னர் தலைமைக்கு வந்த திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை பிற்போக்குப் பாதையில் இழுத்துச் சென்று 1965ல் ஐ.தே.க. அரசிலும் இணைத்தார். இதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குத் துரோகம் இழைத்ததுடன் வடக்கில் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது ஒடுக்குமுறைகளை ஏவவும் தமிழரசுக் கட்சியினர் உடந்தையாகினர். அந்த ஒடுக்குமுறைக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சி தாழ்த்தப்பட்ட மக்களை 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில்' அணிதிரட்டிப் போராடி பல வெற்றிகளை அம்மக்களுக்கு ஈட்டிக் கொடுத்தது. இந்தப் போராட்டத்தின் போது தோழர் கார்த்திகேசன் அரசியல் ரீதியில் மட்டுமன்றி, அப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஏதுவாக தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பொருளாதார ரீதியாகவும், சட்டத்துறை ரீதியாகவும், பிரசார ரீதியாகவும் மாபெரும் பங்களிப்பை வழங்கியதை வடபகுதிக் கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமின்றி மக்களும் நன்கு அறிவர்.

ஒரு பக்கம் சிங்கள மக்களுக்கெதிராக இனவாதம் பேசிக் கொண்டு அதேவேளையில் சிங்கள ஆளும் வர்க்கங்களுடன் வர்க்கக் கூட்டை ஏற்படுத்தியிருந்த தமிழ்க் காங்கிரஸ் - தமிழரசுக் கட்சிகள், மறுபக்கத்தில் தமிழ் மக்கள் மத்தியில் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக கம்யூனிஸ்ட்டுகள் போராடியபோது 'தமிழ் மக்களைக் கம்யூனிஸ்ட்டுகள் பிளவுபடுத்துவதாக' ஒப்பாரி வைத்தனர். முதன்முதலாக தோழர் கார்த்திகேசன் பொது மேடை ஒன்றில் வைத்து திரு. செல்வநாயகத்திற்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டபோது, ''நீர்தான் தமிழர்களில் இரண்டு விதமான தமிழர்களைப் பற்றி பேசும் கார்த்திகேசனோ?'' என வினவியதிலிருந்து இதைப் புரிந்துகொள்ளலாம் எனத் தோழர் கார்த்திகேசன் குறிப்பிடுவதுண்டு.

தோழர் கார்த்திகேசனும் இதர கம்யூனிஸ்ட்டுகளும் தமிழ் தேசிய இனத்தின் விமோசனத்துக்காக நடாத்திய இயக்கங்களை மறைத்துவிட தமிழ் இனவாத சக்திகள் இன்று பகீரதப் பிரயத்தனம் செய்துவருகின்றனர். ஆனால் இலங்கையில் *முதன் முதலாக தமிழ் மக்களின் சுய-நிர்ணய உரிமையை அங்கீகரித்தது கம்யூனிஸ்ட் கட்சியே. இன்று பலர் சுயநிர்ணய*

உரிமை என்று வெறுமனே கோஷமெழுப்பிவிட்டுத் தப்பித்துக்கொள்வது போலல்லாது, அதன் அடிப்படையில் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடப் பிரதேசங்களுக்கு 'பிரதேச சுயாட்சி' வழங்கப்பட வேண்டும் எனும் கொள்கையையும் கம்யூனிஸ்ட் கட்சியினரே முன்வைத்தனர்.

1956ல் பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம், ஐ.தே.க.வின் அரசியல் கைதியாகி சிங்களம் மட்டும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தபோது (ஏனெனில் அதற்கு முன்னதாக களனியில் கூடிய ஐ.தே.க. மாநாட்டில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமது கட்சி ஆட்சிக்குவந்தால் சிங்களத்தை மட்டும் அரச மொழியாக்குவதாக தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருந்தார்), கம்யூனிஸ்ட் கட்சி சிங்களத்துடன் தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தது. இதற்கென கொழும்பு நகர மண்டபத்தில் கம்யூனிஸ்ட் கட்சி நடாத்திய கூட்டத்தின் மீது சிங்களப் பேரினவாதிகள் நடாத்திய தாக்குதலால் நூற்றுக்கணக்கான சிங்கள-தமிழ்-முஸ்லிம் கம்யூனிஸ்ட்டுகள் காயமடைந்து இரத்தம் சிந்தும் நிலை ஏற்பட்டது.

இதே காலகட்டத்தில் தோழர் கார்த்திகேசனும் ஏனைய வடபகுதிக் கம்யூனிஸ்ட்டுகளும் தமிழ் மக்கள் மத்தியில் செயல்பட்ட அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து வடக்குக் கிழக்கிலும் இவ்வாறான ஒரு இயக்கத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துச் செயலில் இறங்கினர். இதன் பொருட்டு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்தனர். தமிழையும் ஆட்சி மொழியாக்க வேண்டும் எனக்கோரி நடாத்தப்பட்ட அக்கூட்டத்திற்கு தமிழ் மக்களின் இரட்சகர்கள் என்று கூறிக்கொண்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், தமிழரசுக் கட்சியும் அன்று அனுப்பிய பதிலை இன்றைய தமிழ் சந்ததியினர் அறிந்தால் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைவர்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அனுப்பிய பதிலில் ஆங்கிலத்தையே தமது கட்சி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொண்டிருப்பதால் இக்கூட்டத்தில் பங்குபற்ற முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்தார். தமிழரசுக் கட்சியினர் அனுப்பிய பதிலில் தமிழ்க் காங்கிரஸ் கலந்து கொண்டால் மட்டுமே தாமும் கலந்துகொள்ள முடியும் என்று அறிவித்தனர். சமசமாஜக் கட்சியின் வடபகுதி கிளை அனுப்பிய பதிலில் அகில இலங்கை ரீதியில் இப்படியான ஒரு இயக்கத்தை ஆரம்பிக்காமல் வடக்கில் மட்டும் ஆரம்பித்துள்ளதால் தாம் அதில் பங்கு பற்ற முடியாது எனக்கூறிவிட்டனர். இந்த நிலையில் கம்யூனிஸ்ட்டுகளின் முயற்சி எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

1954ல் தோழர் ஸ்டாலினின் மறைவின் பின்னர் சோவியத் யூனியனில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முரண்பாடுகள் தோன்றி இறுதியில் சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கமே 1960

களின் முற்பகுதியில் பிளவு கண்டது. அப்பிளவு 1964ம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் ஏற்பட்டது. ஏகாதிபத்திய முகாமுடன் சமாதான சகவாழ்வு, முதலாளித்துவப் பாராளுமன்ற சமாதானப் பாதையினூடாக சோஷலிசத்தை அடைதல் என்ற துரோகி குருஷ்சேவ் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நவீன திரிபுவாதப் பாதையால் அப்பிளவு ஏற்பட்டது. இலங்கையில் அதற்கெதிரான அணியில் தோழர் கார்த்திகேசன் தன்னை இணைத்துக் கொண்டார்.

இக்காலகட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சிகள் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்து ஐ.தே.க. அரசில் இணைந்து கொண்டன. அதேவேளையில் பாராளுமன்றவாத இடதுசாரிக்கட்சிகள் ஐ.தே.க.வுக்கு எதிரான போராட்டத்தை இனவாதப் பாதையில் திருப்பி விட்டன. இந்த இரண்டு போக்குகளுக்கெதிராகவும், தோழர் கார்த்திகேசன் அங்கம் வகித்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (அக்கட்சி பொது மக்களால் சீனசார்பு என அழைக்கப்பட்டது) பல போராட்டங்களை நடாத்தியது. இரண்டு பிரதான தமிழ் கட்சிகளும் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு துரோகம் இழைத்து அரசுடன் சேர்ந்து கொண்டதால், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வலுவிழந்ததுடன் அக்கட்சிகளின் செயற்பாட்டால் வடக்கில் தீண்டாமைக்கெதிரான போராட்டம் முன்னணிக்கு வந்தது.

தோழர் கார்த்திகேசனும் வடபகுதியின் இதர புரட்சிகரக் கம்யூனிஸ்ட்டு களும் இந்தப் பிரச்சினையை இனம் கண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்திற்குத் தலைமையேற்று வழிநடத்தினர். அப் போராட்டத்தின் ஊடாக வடக்கில் வேறெந்தக் கட்சியையும் விட போராட்ட ரீதியாகவும், ஸ்தாபன ரீதியாகவும் கம்யூனிஸ்ட் கட்சியை (சீனசார்பு) வலுப்படுத்தி புதியதொரு உயர் நிலைக்கு இட்டுச்சென்றனர்.

இந்தச் சூழ்நிலையில்தான் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் பாராளுமன்ற இடதுசாரிகளையும் உள்ளடக்கிய கூட்டரசாங்கம் 1970ல் பதவிக்கு வந்தது. அவ்வரசாங்கம் குறிப்பிடக்கூடிய சில ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகளை எடுத்த அதேவேளையில், மறுபக்கத்தில் தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக சில பாதகமான செயல்பாடுகளையும் மேற்கொண்டது. 1971ம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுனை (J.V. P.) மேற்கொண்ட தவறான ஆயுதக்கிளர்ச்சி ஏற்படுத்திய எதிர்ப்புரட்சிகரச் சூழலில், அரசாங்கத்தில் வலதுசாரி சக்திகளின் கை ஓங்கிய நிலையில் பல தொழிலாளி வர்க்க-விரோத, மக்கள்-விரோத, சிறுபான்மை இனங்கள்- விரோத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

தீண்டாமைக்கெதிரான ஒரு கட்ட நடவடிக்கை மாவிட்டபுர கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச நடவடிக்கையின் வெற்றியுடன் பூர்த்தியடைந்த நிலையில் அடுத்து என்ன? என்ற கேள்வி வடபகுதிக் கம்யூனிஸ்ட்டுகள் மத்தியில் தலைதூக்கியது. தேர்தலில் தோல்வியடைந்த தமிழ்க் காங்கிரஸ் தமிழரசுத் தலைமைகள் அரசாங்கத்தின் இனப்பாகுபாட்டுக் கொள்கையைப் பாவித்து அரசியல்

அரங்கில் மீண்டும் முன்னுக்கு வரமுயன்று கொண்டிருந்தன. தமிழ் மக்களின் பிரச்சினையை கம்யூனிஸ்ட்டுகள் தமது தலைமையில் எடுத்து விடுவார்களோ என்ற அச்சம் அவர்கள் மத்தியில் உருவாகியிருந்தது. 'தமிழ் இளைஞர்கள் மத்தியில் கம்யூனிஸ்ட்டுகளின் ஈர்ப்பு' பற்றி 'ஊடுருவல்' என்று வேண்டுமென்றே தவறான கருத்தில் தமிழரசுக் கட்சியினர் தமது 'சுதந்திரன்' பத்திரிகையிலும் கூட்டங்களிலும் செய்திகளை நிறையவே எழுதியும் பேசியும் மக்களிடம் பரப்பி வந்தனர்.

உண்மையிலும் வடபகுதிக் கம்யூனிஸ்ட்டுகள் மத்தியிலும் இப்பிரச்சினை பாரதூரமாக விவாதிக்கப்பட்டு வந்தது. தோழர்கள் மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி தலைமையிலான பெரும்பான்மையான கட்சி வடபிரதேசக் கமிட்டித் தோழர்கள் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை கட்சி தனது உடனடி வேலைத்திட்டமாக எடுக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தனர். அதன் அடிப்படையில் கட்சி 'தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராகப் போராடுவது' என்ற மிகச் சரியான நிலைப்பாட்டை 1972ல் முன்வைத்தது. ஆனால் கட்சியின் தேசியத் தலைமையின் முக்கியமான தலைவர்கள் சிலரும் அவர்களைப் பின்பற்றிய ஒரு சிறுபகுதி வடபிரதேச கமிட்டி உறுப்பினர்களும் அதை எதிர்த்தனர். 'தேசிய இனப்பிரச்சினை ஒரு வகுப்புவாதப் (இனவாதப்) பிரச்சினை. அதைக் கம்யூனிஸ்ட் கட்சி தனது தலைமையில் எடுத்துப் போராடுவது தவறானது' என்ற வாதத்தை அவர்கள் முன்வைத்தனர்.

ஏற்கனவே கட்சிக்குள் ஜே.வி.பி. கிளர்ச்சி, கூட்டரசாங்கம் பற்றிய நிலைப்பாடு, தொழிற்சங்கவாதம், கட்சித் தலைமைத்துவம் என்பன பற்றி ஏற்பட்டிருந்த முரண்பாடுகளுடன் இப்பிரச்சினையும் சேர்ந்து 1972ல் கட்சிக்குள் மீண்டும் ஒரு பிளவு ஏற்பட்டது. இதன் காரணமாக நாடு முழுவதுமிருந்த பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்கள் இணைந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட்) என்ற புதிய கட்சியை அமைத்தனர். வடபகுதியிலிருந்த பெரும்பான்மையான கட்சித் தோழர்களுடன் இணைந்து தோழர் கார்த்திகேசன் இக்கட்சியை உருவாக்கியதுடன், இறக்கும் போது அவர் இக்கட்சியின் மத்திய செயலாளர் முழு உறுப்பினராகவும், கட்சிப் பத்திரிகையான 'போராளி'யின் ஆசிரியர் பீட உறுப்பினராகவும் செயற்பட்டார்.

இக்கட்சி உருவானதும் தோழர் கார்த்திகேசனும் இதர வடபகுதிக் கம்யூனிஸ்ட்டுகளும் செய்த முதல் வேலை தமிழ் மக்கள் மத்தியிலிருந்த ஜனநாயக சக்திகளை ஓரணியில் திரட்ட முயற்சித்தமையாகும். இதற்காக 1975ம் ஆண்டு மே மாதம் 19ம் திகதி கட்சியின் வடபிரதேசக் கமிட்டி கூடி தமிழ் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக முக்கிய தீர்மானமொன்றை எடுத்தது. (அத்தீர்மானம் சம்பந்தமாக தோழர் கார்த்திகேசனால் வரையப்பட்டு, கட்சி வெளியிட்ட அறிக்கை இக்கட்டுரையின் பின் இணைப்பாக பிரசுரிக்கப்பட்டுள்ளது)

அத்தீர்மானத்தின் அடிப்படையில் கட்சி, தமிழ் மக்களுக்கெதிரான அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுகின்ற அதேவேளையில் நாட்டைப் பிரிக்க முயற்சிக்கின்ற தேசவிரோத சக்திகளையும் எதிர்த்துப் போராடுவது எனத் தீர்மானித்து தமிழ் மக்களின் உடனடிக்குறைந்த பட்ச கோரிக்கைகளாக ஐந்து அம்சத்திட்டமொன்றையும் முன்வைத்தது. இந்த இயக்கத்தை கட்சி தனியாக முன்னெடுத்துச் செல்வது சாத்தியமில்லை என்று உணரப்பட்டதால் தமிழ் மக்கள் மத்தியில் செயல்பட்ட அனைத்து அரசியல் சக்திகளையும் ஐக்கியப்படுத்திப் போராடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதன் பொருட்டு தோழர்கள் கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி ஆகியோர் உள்ளடங்கிய ஐவர் கொண்ட பேச்சு வார்த்தைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இக்குழுவினர், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த மானிப்பாய் எம்.பி., திரு. வி. தருமலிங்கம், தமிழர் சுயாட்சிக் கழகம், நவசமசமாஜக் கட்சி வடபிரதேசக் கிளை, தமிழ் இளைஞர் பேரவை என்பனவற்றுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. தமிழ் காங்கிரஸும், பாராளுமன்றவாத இடதுசாரிக் கட்சிகளும் பேச்சுவார்த்தையைப் புறக்கணித்தன. இப்பேச்சுவார்த்தைகள் அனைத்திலும் தோழர் கார்த்திகேசன் முக்கிய பங்கு வகித்தார். அத்துடன் அதிகமாக தமிழரசுக் கட்சியின் கோப்பாய் எம்.பி., திரு.சி.கதிரவேற் பிள்ளையுடன் தொடர்ச்சியான கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டு தமிழ் தேசிய ஜனநாயக சக்திகளில் ஒரு கணிசமான பகுதியினரை ஒன்று திரட்ட தோழர் கார்த்திகேசன் முயன்றார். அதே வேளையில் கட்சியின் வாலிப அணியினர் தமிழ் இளைஞர் பேரவையின் முக்கிய தலைவர்களுடன் தொடர்ந்து கலந்துரையாடி வந்தனர்.

கம்யூனிஸ்ட்டுகளின் இந்த முன்முயற்சியைக் கண்டு அச்சமடைந்த தமிழ் பிற்போக்கு சக்திகள் துரிதகதியில் செயற்பட ஆரம்பித்தன. அவர்கள் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் சுயாட்சிக் கழகம் என்பனவற்றையும், மாவிட்டபுர ஆலயப் பிரவேசப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக மூர்க்கத்தனமாக நின்று செயல்பட்ட முன்னாள் வவுனியா எம்.பி., திரு.சி.சுந்தரலிங்கத்தையும் ஒன்றுபடுத்தி வல்வெட்டித்துறையில் கூட்டம் ஒன்றை நடாத்தி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற புதிய அமைப்பை உருவாக்கினர். (பின்னர் இக்கூட்டணிக்கு ஐ.தே.க. தனது சார்பில் கல்குடா எம்.பி., திரு.கே.டபிள்யூ. தேவநாயகத்தைக் கொடுத்து உதவியது.)

இம்முன்னணியின் நோக்கம் வடக்கு கிழக்கில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் உருவாகிவந்த புரட்சிகர சிந்தனையையும் கம்யூனிஸ்ட் இயக்கம் மீதான ஈர்ப்பையும் திசை திருப்பி ஏகாதிபத்திய சார்பு நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ சார்புத் தலைமையை மீண்டும் நிலைநாட்டுவதாகும்.

இதனால் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிச-லெனினிஸ)யின் முயற்சிகள் ஒரு பின்னடைவை எதிர்நோக்கினாலும் கட்சி தனது வேலையைக் கைவிட்டு விடவில்லை. கட்சி நேரடியாகவே பரந்துபட்ட தமிழ் பேசும் மக்களையும் இதர கட்சிகளிலிருந்த ஜனநாயக சிந்தனையுள்ள பிரமுகர்களையும் அணுகத் தீர்மானித்தது. எனவே கட்சியின் வழிகாட்டலின் கீழ் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பொன்றை உருவாக்கியது. இந்த முன்னணியின் சார்பாக ஐந்து அம்சத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டதுடன், அதை சுவரொட்டிகள் மூலம் நாடுமுழுவதும் பிரசாரம் செய்தது.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களும் கருத்தரங்குகளும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, சம்மாந்துறை, கொழும்பு, கண்டி, மலையகம் போன்ற பகுதிகளில் பரவலாக நடாத்தப்பட்டன. இவற்றில் எல்லாம் தோழர் கார்த்திகேசன் முதன்மைப் பேச்சாளராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

தமிழ் பிற்போக்கு சக்திகளின் பிரதிநிதியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கெதிராக தமிழ் மக்களின் ஜனநாயகக் கூட்டணி ஒன்று உருவாகுவதை விரும்பாத சக்திகள் அரசியல் ரீதியாக குறுக்கு வழியில் இறங்கி கம்யூனிஸ்ட்டுகளை ஓரம் கட்டத் திட்டம் தீட்டினர். கம்யூனிஸ்ட்டுகள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குள் நின்றுதான் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு ஒரு சுயாட்சி அமைப்புக்குப் போராடுவார்கள் என்பதால் பிற்போக்குத் தமிழ் தேசிய வாதிகள் அரசியல் ரீதியாகக் கம்யூனிஸ்ட்டுகளை பலவீனப்படுத்தும் ஆயுதமாக 'தனித் தமிழ் ஈழம்' என்ற தவறான அடையமுடியாத கோஷத்தை தமது வட்டுக்கோட்டை மாநாட்டில் 1976ல் நிறைவேற்றினர். அதன் மூலம் கம்யூனிஸ்ட்டுகளின் நேர்மையான, தூரதிருஷ்டிமிக்க, தமிழ் மக்களுக்கு இன்றைய சூழ்நிலையிலும் மிகச்சரியான கொள்கையான 'பிரதேச சுயாட்சிக் கொள்கை'யை பின்னுக்குத் தள்ளி, தமிழ் இளைஞர்களையும் பொதுமக்களையும் உணர்ச்சிப் பிரவாகத்திற்குள் வீழ்த்தி உடனடி லாபமாக 1977 பொதுத் தேர்தலில் வடக்கு கிழக்கில் அமோக வெற்றி பெற்றனர்.

பிற்போக்குத் தமிழ் தேசியவாதிகளின் தவறான போக்கை ஓரளவு முறியடித்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தை கம்யூனிஸ்ட்டுகள் முன்னெடுக்கக் கூடிய சூழலும் அன்றைய நிலையில் குறைவாகவே இருந்தது. முதற்கண் கம்யூனிஸ்ட்டுகளில் ஒரு சாரார் தேசிய இனப் பிரச்சினையைக் கண்டு கொள்ள மறுத்தமை. மறுபக்கத்தில் 1977ல் பதவிக்கு வந்த ஐ.தே.க. அரசு தமிழ் மக்கள் மேல் தொடுத்த அடக்கு முறையும் அதன் தொடர்ச்சியான உள்நாட்டு யுத்தமும், தமிழ் மக்களை தவறான அரசியல் போக்கின்பால் தள்ளி, வெறுமனே ஆயுத கலாசாரத்தின் பால் தள்ளியமை போன்ற பாதகமான நிலைமையைக் கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஏற்படுத்திவிட்டிருந்தது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில்தான் தோழர் கார்த்திகேசன் எம்மைவிட்டு மறைந்தார். அவர் மறைந்ததிற்கு அடுத்த நாள் 1977 செப்டம்பர் 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை எமது இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மா-லெ)யின் வடபிரதேசக் கமிட்டி யாழ்ப்பாணத்தில் கூடி, தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக முக்கிய தீர்மானங்களை எடுக்க இருந்த வேளையில் அவரது திடீர்ப்பிரிவு எம்மைப் பெரும் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. அதுமாத்திரமின்றி அன்றிலிருந்து இன்றுவரை மாலுமியை இழந்த கப்பலாக தத்தளிக்கும் நிலையில் நாமுள்ளோம்.

மாலுமியை இழந்த கப்பலாக இருந்தாலும் கட்டறுந்த நிலையில் இன்றைய அரசியல் அலைகடலில் அலைக்கழிக்கப்படாது அவர் எமக்கு வழங்கிய மார்க்ஸிச-லெனினிஸக் கொள்கைகள் என்ற கலங்கரை விளக்கம் எமக்கு வழிகாட்டி நிற்கின்றது.

அவருக்கு நாம் உண்மையான அஞ்சலியை நடைமுறையில் செலுத்த வேண்டும். அவருக்கு நரம் செலுத்தக்கூடிய அஞ்சலி இலங்கையில் வலுவான ஐக்கியப்பட்ட ஒரு புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டியெழுப்புவதும், தமிழ் மக்களின் ஜனநாயக முன்னணியை பரந்துபட மக்களைக் கொண்டு உருவாக்குவதுமாகும்.

தோழர் கார்த்திகேசனின் நாமம் நீடுழி வாழ்க.

வெல்லற்கரிய மார்க்ஸிசம் - லெனினிஸம் - மாசேதுங் சிந்தனை நீடுழி வாழ்க.

சண்முகம் சுப்பிரமணியம்,
முன்னாள் வட பிரதேசச் செயலாளர்,
இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட்)

* * *

தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராக தமிழ் மக்களே ஐக்கியப்படுவீர்!

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்),
வடபிரதேசக் கமிட்டி, 1975ம் ஆண்டில் விடுத்த அறிக்கை.

குடியரசு தினத்தைப் பகிஷ்கரிப்பது என்பதை தமிழர் கூட்டணி வருடாவருடம் ஒரு சடங்காக நடாத்திவருகின்றது. இது தமிழ் மக்களின் நலன்களுக்கு உகந்ததுதானா என்பதை தமிழ் மக்கள் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

தமிழ் மக்களினதும் சிங்களமக்களினதும் பொது எதிரி ஏகாதிபத்திய மாகும். அது உலக மக்களினதும் பொது எதிரியாகும். இந்த உண்மையை முன்பு தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பனவும் தற்பொழுது தமிழர் கூட்டணியும் அங்கீகரிக்க மறுத்தது மட்டுமல்லாமல், ஏகாதிபத்தியமே தமிழ் மக்களின் நலன்களுக்கு உதவவல்லது என்ற தவறான கொள்கையையே நீண்டகாலமாகப் பின்பற்றி வந்தனர். அதன் விளைவே தமிழ் மக்களை உரிமையற்றவர்களாக வாழவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளியது. அது மட்டுமல்லாமல் இலங்கை மக்கள் ஏகாதிபத்தியத்திற்கெதிராக - தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்கும் பாதையில் எடுத்த சகல நடவடிக்கைகளையும் (குடியரசு பிரகடனம் உட்பட) தமிழ்த் தலைவர்கள் எதிர்த்து வந்ததின் மூலம் இலங்கை மக்களின் பெரும்பான்மையோரின் எதிர்ப்பை சம்பாதித்ததுமல்லாமல் தமிழ் மக்கள் தேசிய சுதந்திரத்திற்கும், தேசிய அபிலாஷைகளுக்கும் எதிரானவர்கள் என்ற தவறான எண்ணத்தை தென்னிலங்கை மக்கள் மத்தியில் வளர்த்தும் விட்டது. இதனால் இலங்கையில் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் மக்களாக தமிழ் மக்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபுறத்தில் தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் கூட்டணி என்பன தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்த தேசவிரோதக் கொள்கையைச் சாட்டாக வைத்துக் கொண்டு அரசியல் சுயலாபம் தேடும் பூர்ஷுவாக் கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் தங்கியிருந்து பாராளுமன்ற ஆசனங்களை பெரும்பான்மையாக

வென்றெடுக்கும் குறுகிய தேசியவாத, சந்தர்ப்பவாதக் கொள்கைகளைப் பின்பற்றி வருவதால் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தேசிய நலன்களுக்கும் மிகவும் அவசியமானது என்பதை உணர மறுப்பது மூலம் ஏகாதிபத்திய வாதிகள் இப்பிரச்சினையில் தலையிட்டு சைப்பிரஸில் நடப்பதுபோல் அல்லது பாகிஸ்தானில் நடந்தது போல ஒரு நிலையை உருவாக்க வாய்ப்பைத் தேடிக்கொடுத்துள்ளார்கள்.

இந்த நிலையை ஏற்கனவே உணர்ந்ததினால் போலும் இலங்கையின் பிரபல தேசியவாதியான முன்னாள் பிரதமர் திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையையும், கொள்கையையும் 'பண்டா - செல்வா ஒப்பந்தத்தின்' மூலம் முன் வைத்தார். இந்த நல்லவாய்ப்பை ஏகாதிபத்திய சார்பு யூ.என்.பியும் இதர வகுப்புவாத சக்திகளும் வடக்கிலும், தெற்கிலும் நடாத்திய எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் சிதறடித்து விட்டார்கள். இது இந் நாட்டின் துர்ப்பாக்கியமாகும்.

இன்று பண்டாரநாயக்கா கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம், தமிழ் மக்களின் பிரச்சினை அடிப்படையில் ஒரு தேசியப் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட அமரர் பண்டாரநாயக்காவின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் செயல்படுத்தத் தயங்குவதன் மூலம் தமிழ் மக்களை ஏகாதிபத்திய, பிற்போக்கு முகாமில் தள்ளிவிட்டுள்ளது. இதனால் நாட்டுக்கும், தேசிய சுதந்திரத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரும்வாய்ப்பை ஏற்படுத்தி விட்டார்கள். இதையிட்டு நாட்டு நலனில் அக்கறையுள்ள சகலரும் சிந்திக்க வேண்டும். இந்த அபாயம் சிறிய விஷயமல்ல.

எம்மைப் பொறுத்தளவில் தமிழ் மக்களின் மொழி, இன பாதுகாப்புக்கான சரத்துக்கள் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படாததை நாம் எதிர்க்கின்றோம். அதேபோல பதிவுப் பிரஜைகளுக்கும், இலங்கைப் பிரஜைகளுக்கும் இடையில் பாகுபாடு காட்டப்படுவதை முற்றாக அகற்ற வேண்டும் என வற்புறுத்துகின்றோம். கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் இன ரீதியான பாகுபாட்டை நாம் எதிர்க்கின்றோம். பொருளாதார ரீதியாக சிங்களப் பிரதேசத்திற்கும், தமிழ்ப் பிரதேசத்திற்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறைந்த பட்சம் பண்டாரநாயக்காவின் கொள்கைகளையாவது அரசு நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தத்தளிக் கிறார்கள். தமிழ் தலைவர்களின் ஏகாதிபத்திய சார்புக் கொள்கை அவர்களை ஒரு புறத்தால் நாசம் செய்கிறது. மறுபுறத்தால் தமிழ் மக்களின் பிரச்சினையைத்

தீர்க்காமல் இருப்பதன் மூலம் சுயநல அரசியல் லாபம் தேடும் சந்தர்ப்பவாத, குறுகிய தேசிய அபிலாஷைகளைப் பிரதிபலிப்பதில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவதும், ஐக்கியப்படுவதுமான அரசாங்கத்தினதும். ஐக்கிய தேசியக் கட்சியினதும் தந்திரோபாயங்களினால் தேசிய வாழ்விலிருந்து தமிழ் மக்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த இரண்டு தவறான போக்குகளுக்கும் எதிராக தமிழ் மக்கள் ஐக்கியப்பட வேண்டும். போராட வேண்டும். இதைத் தவிர தமிழ் மக்கள் முன் வேறு மார்க்கமே கிடையாது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக சக்திகள், தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், புத்திஜீவிகள், தொழிற் சங்கங்கள், மற்றும் தேசாபிமானிகள் அனைவரும் ஒன்றுபட்ட தமிழர் விரோதப் போக்குக்கு எதிராக ஐக்கியப்பட்டு தமிழ் மக்கள் ஜனநாயக அணி ஒன்றைத் தோற்றுவிப்பதே தமிழ் மக்கள் பிரச்சினையின் தீர்வுக்கான முதற் தேவையாகும். ஒரு சிலரின் தனிப்பட்ட அரசியல் லாபத்திற்காக குடியரசு தினத்தைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்த நன்மையையும் அடைய முடியாது. மாறாக இளைஞர்களினதும், மாணவர்களினதும் எதிர்காலத்தைத்தான் பாழடிக்க முடியும்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையோ வேறெந்த ஏகாதிபத்திய நாட்டையோ அல்லது வேறு அந்நியநாடு எதனையுமோ நம்பி தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இலங்கை மக்களே தீர்வு காணவேண்டும். கம்போடியாவிலும், வியட்நாமிலும் மக்கள் ஈட்டிய மகத்தான வெற்றி நமக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும். ஏகாதிபத்தியத்தின் காலைப் பிடித்தோரையே ஏகாதிபத்தியம் உதறித்தள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தைச் சார்ந்தல்ல, எதிர்த்தே மக்கள் விடுதலை பெறமுடியும். தமிழ் மக்கள் இந்நாட்டில் சமத்துவ, ஜனநாயக உரிமையுள்ளவர்களாக வாழமுடியும். பெரும் முதலாளிகளாலும், வர்த்தகர்களாலும், நிலச்சொந்தக்காரர்களாலும், தலைமை தாங்கப்படும் தமிழர் கூட்டணியால் தமிழ் மக்களுக்கு எந்த நல்வழியையும் காட்ட முடியவில்லை. இனிமேலும் காட்ட முடியாது. ஆகவே இந்த நேரத்திலாவது தமிழ் மக்கள் தீர்க்கமாகச் சிந்தித்து செயல்படவேண்டும் என இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்) வடபிரதேசக் கமிட்டி வேண்டுகோள் விடுக்கிறது.

எமது தேசத்தின் ஒருமைப்பாடு; நமது மக்களின் ஐக்கியம்; நமது பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம்; இவையே நமது இலட்சியத்தின் நிச்சய வெற்றிக்கான அடிப்படை உத்தரவாதங்கள் ஆகும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்),
வடபிரதேசக் கமிட்டி, 19.05.1975

* * *

தோழர் மு. கார்த்திகேசன்
ஏழை, எளிய மக்களின் நண்பர்

வி. ரட்டாய்

தோழர் மு. கார்த்திகேசன் காலமாகிப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் பல ஆண்டுகளின் பின்னர் இவரது ஞாபகமாக ஒரு நினைவுமலர் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கார்த்திகேசன் காலமாகிவிட்டார் என்பதை அறிந்தவுடன் பலர் அதிர்ச்சி அடைந்தனர். எனக்கும் ஒரு விதமான மன அதிர்வு ஏற்பட்டது உண்மை. அவருடன் நீண்டகாலமாக நெருங்கிப் பழகியவர்களுள் நானும் ஒருவன். அந்தக் காலத்தில் நான் பெற்ற பல அனுபவங்கள் இன்னும் எனது நெஞ்சில் பசுமையாக இருக்கின்றன.

காலம் சென்ற தோழர் கார்த்திகேசனைச் சுருக்கமாகக் 'காத்தார்' எனவும் அழைப்பதுண்டு. இவர் எப்பொழுதும் மனிதநேயத்துடன் மக்களுடன் பழகும் தன்மையுடையவர். பல ஏழை எளிய மக்கள் துன்பப்படும்போது மனம் பொறுக்கமாட்டார். மனிதப் பண்புடனும் துணிவுடனும் பிரச்சனைகளை விஞ்ஞான ரீதியாக முகம் கொடுத்து துன்பப்படும் மக்களை துன்பத்திலிருந்து விடுபடச் செய்யும் ஆற்றல் கொண்டவர். இவரது ஆங்கில எழுத்தாற்றல்தான் மிகவும் முக்கியமானது. இவர் பலரைத் துன்பத்திலிருந்து காப்பாற்றும் பண்புடையவராக இருந்தமையால் இவர் பலரால் 'காத்தார்' என அழைக்கப்பட்டார்.

தோழர் கார்த்திகேசன் ஒரு தலைசிறந்த மூத்த இடதுசாரி. சிறந்த ஆங்கில, கணித ஆசிரியர் மட்டுமல்ல, யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகவும் சேவை செய்துள்ளார். இவரது ஆசிரியப் பணி பல ஏழை மாணவர்களுக்கு பல நன்மைகளைச் செய்துள்ளது. அவரிடம் கல்வி கற்ற பலர் மதிப்பான இடங்களில் தொழில் செய்து வருகின்றனர். இவரிடம் கல்வி கற்ற மாணவர்களுள் காலஞ்சென்ற

பேராசிரியர் கைலாசபதியும் ஒருவராவர். அவர் ஒரு முறை கார்த்திகேசனைப் பற்றி என்னிடம் கூறும் போது ''காத்தார் எனக்கு முதல் முதலாகக் கொடுத்த நூல் சீனப்புரட்சியாகும்". இந்த நூலைப் பேராசிரியர் மிகவும் பக்குவமாக பேணி வைத்திருப்பதாகவும் கூறினார். இதைப் போலக் காத்தார் பலவகைப்பட்ட நல்ல நூல்களைப் பல மாணவர்களுக்கு கொடுத்து சிந்திக்க வைத்த பெரியார். எதையும் மார்க்ஸிசக் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து தெளிவாகப் பதிலளிக்கும் ஆய்வாளர் அவர். அத்துடன் தன்னைப்போல் மக்கள் மார்க்ஸிச, லெனினிஸப் பாதையில் சென்று பிரச்சினைகளை அணுக வேண்டுமென்பதை பல இடங்களில் ஆணித்தரமாக கூறிய ஒரு பெருமகன். எனவே 'காத்தார்' எமக்கு ஒரு சிறந்த திசையறி கருவியாக இருந்தவர். அன்னாரின் இழப்பு எவராலும் ஈடுசெய்ய முடியாதது. இவரது வெற்றிடத்தை நிரப்புவதற்கு வேறு எவரால் முடியும்? இவரது இழப்பு தனிமனித சோகமல்ல, ஒரு சமூகசோகம் என நான் கருதுகின்றேன்.

இவர் மிகவும் ஹாஸ்யமாகப் பேசும் ஆற்றல் உடையவர். அதிலும் ஆங்கில மொழியில் பேச்சாற்றல் மிகவும் சிறப்பாக இருக்கும். 1977ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற புகையிரதம் அனுராதபுரத்தில் நிற்பாட்டப்பட்டிருந்தபோது, சில காடையர்கள் வண்டியுள் ஏறி அட்டகாசம் புரிந்தனர். அப்போது காத்தாரின் பாதணிகளை மட்டுமே அக்காடையர்கள் எடுத்துச் சென்று, அவரை எதுவும் செய்யாது விட்டுவிட்டனர். அந்த நிகழ்வின் பின்னணி பயங்கரமானதாகவும், வருந்தத் தக்கதாகவும் இருந்தபோதும், கார்த்திகேசன் அதையும் ஹாஸ்யமாகவே ''தம்பி, நான் போக வேண்டிய இடத்திற்கு என் பாதணிகள் செல்கின்றன" என்றார். இவரது சொற்களில் ஹாஸ்யமும், ஆழமான கருத்தும் அடங்கி இருப்பதைக் காணமுடியும்.

இன்னொருநாள் நானும், காத்தாரும் யாழ். சுப்பிரமணியம் புத்தகசாலை வாசலில் நின்று கதைத்துக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் காத்தாரின் பழைய நண்பன் தோழர் பீட்டர் கெனமன் வீடமைப்பு மந்திரி என்ற தோரணையில் கே.கே.எஸ். றோட்டால் காரில் சென்று கொண்டிருந்தார். தோழர் கெனமன், காத்தாரைக் கண்டதும் கையை உயர்த்திக் காட்டிய வண்ணம் சென்றார். அப்போது தோழர் கார்த்திகேசன் என்னைப் பார்த்து ''தோழர் பீற்றர் கெனமனுக்கு வீடில்லாதவர்களின் பிரச்சினையைக் கற்றுக் கொடுத்தவன் கார்த்திகேசன்தான்" என்றார். இதுபற்றிய விளக்கத்தைக் கேட்டேன். ''காத்தி தனக்கு கொழும்பில் வீட்டில்லாத காலத்தில் தோழர் கெனமனுடன் தங்கியிருந்த காலம் பற்றிக் கூறினார். அக்காலப் பகுதியில் 'முற்போக்கு- Forward' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவும் கடமையாற்றினார். இவரது ஆங்கில எழுத்து பேச்சுத் திறமைகளை மெச்சாதவர் எவரும் இல்லை. மிகவும் எளிய நடையில் எழுதி மக்களுக்கு விளங்கவைப்பார்.

தோழர் காத்தி கல்வித்துறையிலும் நல்லறிவும் ஆற்றலும் கொண்டவர். கல்வி தொடர்பான கருத்தரங்குகளில் பங்கு கொண்டு, எவ்வேளையிலும் கல்வி பற்றிய தமது சிந்தனைகளை ஒளிவு மறைவின்றித் தெளிவாகக் கூறும் தன்மை உடையவர். அவரது கருத்துக்களைக் கேட்டிருந்த படித்த மக்கள் கூட்டம் அவரின் கருத்துக்கள் பற்றிப் புகழ்ந்து கூறுவார்கள். கருத்தளவில் ஏற்கப்பட்டாலும், நடைமுறையில் எதையும், கொண்டுவர விரும்பமாட்டார்கள். கார்த்திகேசன் ஒரு மார்க்ஸிசவாதி என்பதே காரணம்.

யாழ்ப்பாண மக்கள் கார்த்திகேசன் நல்லவர், திறமையுடையவர், மனிதப் பண்புடையவர் என்றெல்லாம் கூறுவார்கள். முடிவில் அவர் ஒரு மார்க்ஸிய, லெனினிசவாதி என்பார்கள். இதுதான் அவரிடமுள்ள பெருங்குறை என்பார்கள். அதுதான் அவரது நிறைவிற்குக் காரணம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை.

தோழர் கார்த்திகேசன் மக்கள் மத்தியில் தானும் ஒருவனாக வாழ்ந்தார். மக்களை இயங்க வைத்தார். அதனால் மக்கள் நெஞ்சில் அவரின் சிந்தனைகள் என்றும் பசுமையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனிமேலும் நாம் ஒவ்வொருவரும் தோழர் கார்த்திகேசனின் சிந்தனைகளை உள்வாங்கிப் பயன்பெறுவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

வி. ரட்டாய்,
கணித ஆசிரியர், ஆர்ச். பெனடிற் கல்லூரி - கொழும்பு.

* * *

எங்கள் தோட்டத்து மல்லிகை

யோ. சே. நரேன்

''இது போன்ற ஒன்று இந்த உலகில் உயிரும் உடலும் கொண்டு உலவியது என்பதை எதிர்காலச் சக்தி நம்ப மறுக்கும்"

காந்தி குறித்து ஐன்சுடீனின் இக்கூற்று கார்த்திகேசன் மாஸ்டருக்கும் மிகவும் பொருந்தும்.

கலட்டியில் அவர் நீண்டகாலம் வாழ்ந்த காரணத்தால் அங்கு வாழ்ந்த எனக்கும் அவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நான் அப்போது பதினான்கு அகவை நிரம்பிய மாணவன். அவர் என்னை ஒரு தோழனாகக் கருதியே பழகினார்.

அவர் ஒரு பொதுவுடைமைவாதி, மிகச் சிறந்த அறிவாளி என்று அப்போது எனக்குத் தெரியாது. எப்போதும் கலகலப்பாக இருக்க, பழக ஒரு நல்ல மனிதர் என்றே அவரை எனக்குத் தெரியும். அவர் குறித்த எனது சிறு மனப்பதிவை அந்த நிலையில் நின்றே பதிவு செய்கின்றேன்.

யாழ் இந்துவின் அதிபராக இருந்து மாற்றம் பெற்றுச் செல்லும் கார்த்திகேசன் மாஸ்டருக்கான மாணவர்களின் பிரியாவிடை கல்லூரியின் வழிபாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போது பிரியாவிடைக்கான பேச்சை பேசிய நான் அதனைக் கீழ்க்கண்டவாறு ஆரம்பித்தேன்.

''துப்பாக்கி முனையில் அரசியல் அதிகாரம் பிறக்கும் என நம்பப்படும் காலத்தில் மாணவர்களை கைத்தடி கொண்டுதான் அடக்கலாம் என எண்ணப்படும் காலத்தில் மாணவர்களை அன்பினால் ஆண்ட பெருமகன் அதிபர் கார்த்திகேசன் ஆவார்".

இப்பேச்சால் புதிய அதிபர் கடும் கோபம் அடைந்தார். ஆனால் கார்த்திகேசன் மாஸ்டர் தனக்கேயுரிய பாணியில் ''ஆ, ஆ" எனச் சொல்லித் தலையாட்டி ரசித்தார். பேச்சைக் கீழ்கண்டவாறு முடித்தேன். ''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்றார் அறிஞர் அண்ணா, ஆனால் ''மாற்றான் தோட்டத்திலும் எம் மல்லிகை மணம் வீசும்".

எம்மைப் பொறுத்தவரை அவர் மாற்றான் தோட்டத்திற்கு செல்கிறார். அவரைப் பொறுத்தவரை எல்லாத் தோட்டமும் அவருக்குரியதே. இருந்தபோதும் அவர் யாழ் இந்துவை மிகமிக விரும்பினார் என்பதிலும் ஐயமில்லை.

''இன்று அமைச்சர்களாக இருப்பவர்கள் உங்கள் தோழர்கள். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் மாற்றத்தை நிறுத்தமாட்டார்களா?" என்று நாம் அவரைக் கேட்டோம். ''அவர்கள் எனது தோழர்கள், பொதுவுடைமை பற்றிப் பேசுபவர்கள், ஆனால் பெரிய காரில் செல்பவர்கள். காத்தார் இப்போதும் சைக்கிளில்தான் செல்கிறேன். காத்தான் தனக்கென சலுகைகள் கேட்பதில்லை" என தனது தலையை கையால் மேவியபடி கூறினார்.

''பல்கலைக்கழக வாசலிலே சிவப்பு சேட்டுக்கள் தொங்கும். உள்ளே போகும் பெரும்பாலோர் அவற்றை அணிவர். வெளியே வரும்போது அவற்றைக் கழற்றி மீண்டும் பழைய இடத்தில் தொங்கவிடுவர். அப்படியான வாழ்வு எனக்குரியதல்ல" எனக் கூறிச் சிரித்தார். அக்காலத்தில் பல்கலைக் கழகத்துள் செல்வோர் பலர் தம்மை பொதுவுடைமையாளர்களாக காட்டிக்கொள்வதையும், வெளியேறுகையில் அதனைக் கைவிட்டு விடுவதையும் குறித்தே இப்படிக் கூறினார். இங்கு சேட் ஒரு குறியீடே.

யாழ். இந்துவில் அவர் அதிபராக இருந்த வேளையில், பாடசாலை விட்ட பின்பு சாரத்துடன் விளையாட்டுத்திடல் அருகே என்னைக் கண்டு ''வா, வா" என தனது செயலகத்திற்கு அழைத்துச்சென்று ஓரிரு நாட்கள் பேசிக்கொண்டிருந்ததை மறக்க முடியாது. அதிபரின் செயலகத்தில் அதிபரும், சாரத்துடன் மாணவனும் இருந்து பேசிக்கொண்டிருக்கும் காட்சியை யாழ். இந்து முன் எப்போதும் கண்டிராது, இனியும் காணாது என்றே நம்புகிறேன்.

துடுப்பாட்ட போட்டிகள் மேற்கிந்தியத்தீவுகள், அவுஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கிடையே இடம்பெறும் போது அதிபர் பாடசாலையின் வானொலியை உயர்தர மாணவர்களிடம் தந்து விடுதி மண்டபத்தில் வகுப்புக்களற்ற வேளையில் ஆட்ட வருணனைகளை கேட்கும்படி அனுப்பி வைப்பார். அங்கு அவரது விருப்பத்திற்கு மாறாக வகுப்புள்ள மாணவர்களும், ஏன் ஆசிரியர்கள் சிலரும் வருணனை கேட்டுக்கொண்டிருக்கும் காட்சியையும் யாழ். இந்து ஒருபோதும் காணாது.

அவர் படிப்பிக்கும் வகுப்புக்கள் எப்போதும் கலகலப்பாக இருக்கும். ''ஆங்கிலம் படிப்பதுதான் நோக்கம், ஆனால் அது உங்களுக்கு நோ கம் (No Come)" என்பார்.

மலை மீது ''சுக்கு, சுக்கு" என ஏறும் தொடர்வண்டி ''ஐ வில் டு இற், ஐ வில் டு இற் (I will do it)" எனச் சொல்லியபடியே ஏறுகின்றது என்பார்.

குத்தெதிர் கோணங்கள் சமம் என பல வகையில் விளங்கப்படுத்தியும் விளங்கிக்கொள்ளாத மாணவன் அவனது தாயார் இடியப்பம் பிழிவதைப் பார்த்துக் கொண்டிருந்த போது உரல் மூடியை கழற்றத் தாயார் அதனை அங்கும் இங்கும் திரும்பும் போது குத்தெதிர் கோணங்கள் சமமாக இருப்பதைக் கண்டு கொண்டானாம் என்பார்.

நேர்கோட்டில் கோணம் 180 பாகை என்பதைக் காட்ட ஒரு அரை வட்டம் இடுவார்கள் அது கோயில் புக்கை தளிசை வடிவிலிருக்குமாம்.

வகுப்பில் அவ்வப்போது அரசியலும் நடக்கும். தமிழீழக் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்ப்பகுதியில் வலியுறுத்திய அதேவேளை, தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மறைவாக நல்லுறவைப் பேணியது. இதனை ''இக்கரைக்கு எப்போதும் அக்கறை பச்சையில்தான்" என்பார்.

இப்படியான நிகழ்ச்சிகள் இயற்கையில் காணப்படும் விடயங்களை நுட்பமாக கவனித்து அவற்றை எவ்வாறு தனது சொல்லாடல்களுக்கும், கற்பித்தலுக்கும் கார்த்திகேசன் மாஸ்டர் சிறப்பாகப் பயன்படுத்தினார் என்பதைக் காட்டுகின்றன. அவரது கண்டனங்கள், எள்ளல்களிலிருந்து மரபுவழிக் கடவுளோ, கடவுள் என அழைக்கப்படுவோரோ தப்புவதில்லை.

''பா பா பிளக் ஷீப்
ஹாவ் யூ எனி வூல்"
என்ற சிறுவர்களுக்கான பாடலை,

''பா பா (Ba Ba) பிளக் ஷீப்
ஹாவ் யூ எனி ஹெயர் (ர்யசை)
யெஸ் சேர், யெஸ் சேர்
த்ரீ பாக்ஸ் பு.ல்"
எனத் தலையைச் சுற்றி கைகளைப் பரந்து பிடித்தபடி பாடுவார்.

''சிவன் ஏன் இடது காலைத் தூக்கிக் கொண்டு நின்றார் தெரியுமா?" என்பார். ''தெரியாது" என்போம். ''சிவன் ஒரு முறை ஒளிப்படம் எடுக்க விரும்பினார். தொடக்க காலத்தில் எல்லாம் சரி என்றதும் படமெடுப்பவர் படமெடுக்கும் கருவியையும் தன்னையும் கறுத்தத் சீலையால் மூடிக்கொண்டு படமெடுப்பார். அவ்வாறு எல்லாம் சரி என்றதும் படமெடுப்பவர் தன்னைச் சீலையால் மூடிக்கொண்டு படமெடுக்க ஆயத்தமானார். அப்போது சிவனின் கோவணம் கழன்றுபோக, எதுவும் செய்ய இயலாத நிலையில் அவர் தனது இடது காலால் மறைத்து நின்றார். அதுதான் இவர் இடது காலைத் தூக்கி நிற்பதற்கான காரணம்" என்பார்.

பெண்கள் கணக்கில் புலி என்பார். ''அவர்கள் சிறு வயதில் இருந்தே தலையில் ஈர் எடுத்து அவற்றை நகத்தால் அழுத்திக் குத்தும் போது ஈர் ஒன்று இரண்டு எனக் கணக்கைப் படிக்கத் தொடங்குவதே இதற்குக் காரணம்" என்பார்.

உயர்தர மாணவர் ஒன்றியத்தின் இரவு விருந்துக்காக நான் பேச இருந்தபோது எனது பேச்சை நெறிப்படுத்திய தேவன் யாழ்ப்பாணம் (மகாதேவன் ஆசிரியர்) உமது பேச்சு சிறப்பாக அமைய சில விடயங்களை கார்த்திகேசன் மாஸ்டரை கேட்டு சேர்த்துக் கொள்ளும் என்றார். யாழ். இந்துவின் ஆசிரியர்கள் எல்லோராலும் மதிக்கப்படும் ஒருவராக கார்த்திகேசன் மாஸ்டர் இருந்தார்.

அதே இரவு யாழ். இந்து மகளிர் கல்லூரி இராப்போசன விருந்தும் நடக்கவிருந்தது. அக்காலத்தில் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஆறுமுகம், வேம்படிக் கல்லூரி அதிபர் செல்வி ஆறுமுகம். கார்த்திகேசன் மாஸ்டர் எனது பேச்சை சிறப்பிக்க தந்த குறிப்புக்களில் இதைச் சுட்டிக்காட்டித் தந்த குறிப்பு இவ்வாறு அமைந்திருந்தது.

யாழ். இந்துவும், இந்து மகளிரும் ஒரே குடும்பம்தான். இன்று இங்கு இரவு விருந்து நடக்கும் வேளையில் அங்கும் நடக்கின்றது. ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நாங்கள் ஒரே குடும்பம்தான், ஆனால் சமையல் வேறு. திருமதி ஆறுமுகம் இங்கு வருகை தராத போதும் செல்வி ஆறுமுகத்தின் வருகை மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ்வாறு வாழ்வில் எப்போதும் என்னுடன் கலகலப்பாகப் பழகிய கார்த்திகேசன் மாஸ்டர் வாழ்க்கையில் பெருந்துன்பங்களை எதிர்கொண்டவர் என்பதைக் காலம் கடந்தே தெரிந்துகொண்டேன். அதேவேளையில் யாருக்கும் மனத்தளவில்கூட தீங்கு செய்யவிரும்பாத ஒருவராகவும், மிகச் சங்கடமான சூழ்நிலையிலும் மனந்தளராதவராக கார்த்திகேசன் மாஸ்டர் விளங்கினார் என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டேன்.

யாழ் இந்துவில் அடிக்கடி ஒரு பெண் குடையுடன் ஒருவருக்காகக் காத்திருப்பார். ஏதோவொரு வகையில் அவரின் வருகையால் சற்றுச் சங்கடம் அடைந்தாலும் சமாளித்தபடி, வகுப்புக்களை முடித்த பின்பு அப்பெண்ணின் குடை நிழலில் மிதிவண்டியை உருட்டியபடி நடந்து செல்லும் மெல்லிய உயரமான மேல் நெற்றி விரிந்த ஆசிரியர் கார்த்திகேசன் மாஸ்டர் என்பது அந்நாளில் எமக்குத் தெரியும். அப்பெண் அவரது பூவரசம் மலர் (Poor Rose – துணைவி) எனப் பின்நாளில் அறிந்து கொண்டோம்.

யாழ் இந்துவில் ஆசிரியராக இருந்த அருணாசலம் ஆசிரியரிடம் மாஸ்டர் காசு கடன் வாங்கியிருந்தார். அடுத்தடுத்த நாள் அருணாசலம் ஆசிரியர் சுகவீனமுற்று இறந்துவிட்டார். அவரது சா வீட்டில் கார்த்திகேசன் மாஸ்டர் நிம்மதியற்று அடிக்கடி தன்னருகே வந்து சென்றதாகவும், அடுத்த நாள் காலை தன்னைச் சந்தித்து தான் அவரது கணவனிடம் காசு கடன் வாங்கியதையும் அவர்களுக்குப் பணம் வேண்டுமென்பதால் அதைத் தரவே வந்ததாகவும், சா வீட்டிலேயே பணத்தை தர முயன்றதாகவும் கூறிப் பணத்தைத் தந்து விட்டுச் சென்றதை அருணாசலம் ஆசிரியரின் துணைவியார் மனோன்மணி அவர்கள் அடிக்கடி நினைவு கூருவதுண்டு.

இவர் அதிபராக வந்த காலத்தில் எனது மாமாவான சேனாதிராசா ஆசிரியர் யாழ் இந்துவின் விடுதியின் ஆசிரியர் பொறுப்பு தனக்கே கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அதற்குரிய ஒழுங்குகளில் ஈடுபட்டார். ஆனால் இடையே சிலர் புதிய அதிபருக்கு பிழையான தகவல்களைத் தர அந்தப் பொறுப்பு எனது மாமாவுக்குக் கிடைக்கவில்லை. மனமுடைந்து போன மாமா ஆசிரியர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுப் பின் நைஜீரியாவுக்குக் கற்பிக்கச் சென்றார். இரண்டு ஆண்டுகளின் பின்பு அவர் விடுமுறையில் திரும்பியபோது கார்த்திகேசன் மாஸ்டர் அவரை அவரது வீட்டில் சந்தித்தபோது எனது மாமா தான் ஏன் ஓய்வு பெற்று நைஜீரியாவக்கு சென்றார் என விளக்கியுள்ளார்.

தான் அறியாமல் தன்னூடாக ஒரு தவறு நடந்ததை உணர்ந்த கார்த்திகேசன் மாஸ்டர் நிலை குலைந்து போனார். ஐந்து ஆறு நிமிடங்களுக்கு எதுவும் பேசவில்லை. பின்பு தமக்கே உரிய பாணியில் தன்னை நிலைப்படுத்திக்கொண்ட அவர் எனது மாமாவைப் பார்த்து ''எனி வே யு ஆ வெல் ஓவ் நவ்" (Anyway you are well off now) எனக் கூறினார்.

மனித விழுமியங்கள் உயர்ந்து செல்லும், அதனால் பொதுவுடமை வெல்லும் என நம்பியவர். தான் கொண்ட கொள்கையின் மீதான பற்றுறுதி காரணமாக தன் வாழ்வையும் அதற்கமையவே அமைத்துக் கொண்டார். இதன் மூலம் வாழ்விலும், சாவிலும் புகழடைந்தார்.

'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மாண்புக்கு மாய்வது மன்'

யோ. சே. நரேன்,
தருமபுரம், பரந்தன்

Comrade (Mr) Karthigesan, As I knew him

V. N. Somasundaram

When I think of Mr. Karthigesan my memory goes back to more than half a century, when I was a student at Chavakachcheri Hindu College. It was the period when Sri Lanka gained its independence and a parliamentary form of government was introduced. Simultaneously the Senior Association for the upper form students at our college too was transformed into a Parliament in keeping with the order of the day. In 1947, as I happened to head that parliament we were in search pf of an able speaker to address the same. The Patron of our Parliament came across to rescue and suggested Mr. Karthigesan's name as a suitable choice to address our forum. In response to our resolve Mr. Sivapalan handed me a letter addressed to Mr. Karthigesan requesting him to deliver a speech and had even suggested that he speaks on "Communism" if he so wishes. When this letter was handed over to him by me at Jaffna Hindu College, he readily accepted to our request and requested me to wait for him at the Chavakachcheri bus stand on the particular day of our meeting. On the scheduled date I was there to receive him at the bus stand and took him to our college, walking nearly a mile. I was very much taken up by the simplicity of his dress and demeanor. Normally had it been any other speaker he would have expected a car to go that distance. Being simple and humble and being a dedicated or loyal member of the party he represented, we were highly pleased with the way or

manner he conducted himself. At the meeting that followed he delivered an eloquent and attractive speech on "Communism" that captured the hearts and minds of the audience in our parliament, although he was only 28 years old then. I was fortunate enough to have proposed a vote of thanks to him and it was seconded by my good friend late Mr. K. Thillainathan, Commissioner of Labour.

Mr. Karthigesan was a member of the Jaffna Municipal Council in 1950s and had rendered yeoman service particularly to the ward he represented an dthe Jaffna Town in general. I was attached to the Municipal Council Jaffna and during my tenure of service there had observed his brilliant innovative ideas he brought into the working of the institution. He was simple in behaviour and a friend to the common man, the oppressed and the down-trodden, a trend that he perhaps imbibed while in the party he represented. He was better known as "Communist Karthigesan" by his endearing students and public that was privileged to get his services. People of all walks of life loved and admired his simplicity, devotion to selfless service to his community that he performed without regard to caste, creed or race. He had a very loving heart and was always there for the people he served.

Finally I take this opportunity to express my deep sense of gratitude to the Teacher and Social Worker who spent his time and energy for the upliftment of his people, on the occasion of the release of a souvenir to mark his 25th year memorial.

V. N. Somasundaram
is from Chavakachcheri and now lives in Canada

* * *

காத்தார் என் டைரெக்டர்

சுந்தரம் டிவகலாலா

மானிட வாழ்க்கையில், மாணவப்பராயம் மகோன்னதமானது என்பது, ஒரு அழிவில்லாத தத்துவமட்டுமன்றி அனுபவ இருப்புமாகும். - இந்த மகோன்னத அனுபவமும் மனநிலையும் எல்லோருக்கும் கிட்டுகின்றதா என்பது ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய வேறொரு விடயமாகும். அச்சிந்தனையை என் மனதிலேற்றி, இறந்த பின்பும் இன்று வரை அதற்கு எண்ணெய் ஊற்றிக் கொழுந்துவிட்டெரியச் செய்பவர் என் ஆசான், என் தோழன், என் நண்பன் திரு. மு. கார்த்திகேசன் எனும் மாமனிதன்.

இந்த மாணவப் பருவம் உரிய முறையில் நெறிப்படுத்தி உரமூட்டி, வழிநடத்தி, தொடர்ந்து வளப்படுத்த வேண்டிய காலம் - பாதை காட்டுவோன், திசையை மாற்றினால் மாணவன் தடம்புரள்வான்.

நான் தடம்புரள அகப்புறக் காரணிகள் அக்காலத்தில் அதிகம் இருந்தன. அக்காரணிகளையெல்லாம் விஞ்சியதாக மிஞ்சியதாக அமைந்தது திரு. மு. கார்த்திகேசனுடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு. என் பலம், பலவீனம் என்பவற்றை உரிய முறையில் இனங்கண்டு என்னை அவர் நெறிப்படுத்தி, வாழ்க்கையின் நோக்கத்தை புரியவைத்து, வாழ்வின் தாரக மந்திரத்தை சிறிது சிறிதாக, ஆனால் வலுவாக என்மனதில் பதியவைத்தார் அவர். அது இன்னும் என்னால் கடைப்பிடிக்கப்படுகின்றது.

என்னைச் சுற்றி இறுகத் தழுவிய சூழல் 'பத்தோடு ஒன்று பதினொன்றாக' என என்னை நிச்சயம் தாக்கியிருக்கும். அதற்கு முற்றிலும் வேறுபட்டதாக நான் தனித்து நிற்பதற்கும், பலர் மத்தியில் என்னை வேறுபடுத்திக் காட்டுவதற்கும் வித்திட்டவர் அப்பெருமகனார்.

அவரிடம் நான் பாடசாலைக் கல்வியைப் பெற்ற காலம் மிகமிகக் குறுகியது. ஆனால் வாழ்க்கைக்கு வேண்டிய கல்வியை பெற்றது நீண்டகாலமென்பதுடன் இன்னும் தொடர்கின்றது.

நான் யாழ். இந்துக்கல்லூரியில் 1952ல் சிறுவனாகச் சேர்ந்தேன். அவ்வருடம் நான் அவரை அறிந்திருக்கவுமில்லை. தொடர்புமிருக்கவில்லை. 53ம் ஆண்டிலும் அவ்வாறே. ஆனால் அவரை சில சமயங்களில் கண்டுள்ளேன். ஏனோ தெரியவில்லை என் பிஞ்சு மனத்தில் அவர் ஏனைய ஆசிரியர்களிடமிருந்து வேறுபட்டு நின்றார். 1954ல் ஒரு நாள் மாலை என் தந்தையார் நாகலிங்கம் சுந்தரம் அமரர் கார்த்திகேசன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார். தந்தையையும் என்னையும் கண்ட அவர் ஆதரவுடன் வீட்டிற்குள் அழைத்தார். சென்றபோது அங்கு சில மாணவர்கள் படித்துக்கொண்டிருந்தனர். எனக்கும் கணிதமும் ஆங்கிலமும் சொல்லித்தர வேண்டுமென எனது தந்தை வேண்டி நின்றபோது உடனே, இன்றிலிருந்தே படிக்கலாமென்றார். நானும் சேர்ந்தேன். அவரின் அரவணைப்பிற்கு உள்ளானேன். மாலை 6 மணியிலிருந்து 8 மணிவரை Tution. அது 1956 ஆண்டு வரை தொடர்ந்தது.

அக்காலப்பகுதியில் அவர் வீட்டிற்கு பலர், பல்வகை தரப்பினர் வந்து போனார்கள். அரசியல்வாதிகள், அவர்களிலும் மேல்தட்டினர், கீழ்த்தட்டினர், ஆசிரியர்கள், மாணவர்கள், அதிகாரிகள், உறவினர், பொதுமக்கள் எனப் பலர் வந்துபோவர். எல்லோருக்கும் ஒரேவிதமான வரவேற்புத்தான். ஆங்கிலத்தில் கடிதம் எழுதித் தரும்படி பலர் வருவர். எல்லோருக்கும் அவர்கள் மனம் சிறிதளவேனும் கோணாது, உறவாடி, தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து அனுப்புவார். பாட நேரத்தில் உதிரும் பகிடிகள், கருத்துக்கள் எங்கள் மனதில் இறுகப் பதிந்துவிடும். ஒருநாள் எங்களைக் கேட்டார் ''நான் ஏன் மு.கா என என் பெயரைச் சுருக்கி எழுதுகின்றேன்" என்று ''என்ன சேர்? அது உங்கள் அப்பாவினதும் உங்களதும் பெயர்களின் முதல் எழுத்துக்கள்" என்றோம். ''இல்லை, இல்லை" என ஒரு கணக்கைப் போட்டார். இலகுவானது.

$$3x = 15, \quad 1x = 5$$

x - எக்ஸ் என்பதை Egg என்று கூறி ஒரு முட்டையின் பெறுமதி ஐந்து. அதுதான் மு.கா. என்றார் - ஒரு முட்டைக் காசு எனப்பொருள்பட. இப்படி எத்தனை எத்தனையோ கதைகள்.

இடையிடையே அவர் வாயில் சுருட்டு இருக்கும். பாடசாலையில் 'பீகொக்' சிகரெட். அந்தக் காலத்தில் ஒரு பைக்கெற் 10 சதம். ஒரு சிகரெட் 1 சதம். மிகவும் மலிவான சிகரெட் அதுதான். எங்கள் மாணவ-ஆசிரிய உறவு சிறிது சிறிதாக வளரத்தொடங்கியது. பாடசாலையிலும் அடிக்கடி தொடர்பு கொள்வேன். வகுப்புத் தலைவனாக நான் இருந்ததால் அடிக்கடி பல வேலைகளுக்காக பாடசாலைக்குள் திரிவேன். என்னை எங்கு கண்டாலும் கூப்பிடுவார். எங்கே திரிகிறாய், போய்ப்படி என்பார்.

அவரின் சம்பள நாளன்று, பின்னேரம் பூபாலசிங்கம் கடைக்கு நான் போகவேண்டும். அந்தக் காலத்தில் பூபாலசிங்கம் (அவரும் ஒரு கம்யூனிஸ்ட்) புத்தகசாலை மலாயன் கபேக்கு எதிர்ப்புறத்தில் சிறு கொட்டகையாக அமைந்திருந்தது. புத்தகங்கள் வாங்கித் தருவார். பொதுவுடமை, மார்க்ஸிச புத்தகங்கள். அவற்றை நானும் எனது ஒருசில நண்பர்களும் வாசிக்க வேண்டும். விளங்காதவற்றினை அவர் விளக்கித்தருவார். ஒருநாள் ''எமது வீட்டில் யார் கடைக்குப் போவது?" எனக் கேட்டார். ''நான்தான்" என்றேன். ''சீனி சுற்றித்தரும் பேப்பரை என்ன செய்கின்றனீர்கள்" என்றார். ''அதை அம்மா எறிந்துவிடுவா அல்லது அடுப்புப் பற்ற வைக்கப் பாவிப்பா" என்றேன். ''நாளையிலிருந்து அந்தப் பேப்பர்த்துண்டில் இருப்பவற்றை நீ வாசிக்க வேண்டும். பின்னர் என்னிடம் அதில் என்ன எழுதியிருந்தது எனச் சொல்லவேண்டும். விளங்காவிட்டால் கேள்" என்றார். அது என்மனதில் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டியது. இன்று நம்மவரிடையே வாசிப்புக் கலாசாரம் மெல்ல மெல்லச் சாகின்றது. ஆசிரியர்களும் வாசிப்பதில்லை. மாணவர்களும் வாசிப்பதில்லை. இதற்கு மாற்றுத் திட்டம் அவசியமென பல திட்டங்கள் முன்மொழியப்படுகின்றன. வாசிப்புப் பழக்கமெனும் போது மற்றொரு ஆசிரியர் என் நினைவுக்கு வருகின்றார். அவர்தான் அமரர் ஏரம்பமூர்த்தி ஆசிரியர். அவரும், வகுப்பறையிலுள்ள மாணவர்கள் ஒவ்வொருவரையும் ஒரு புத்தகம் வாங்க வேண்டும் என வாங்குவிப்பார். வகுப்பில் 45 மாணவர்கள் என்றால் 45 புத்தகங்கள் வந்துசேரும். மாதமுடிவில் எல்லா மாணவர்களும் 45 புத்தகங்கள் வாசித்து முடித்துவிடுவர். இவ்வாசிப்பினால்தான் பிரபல எழுத்தாளர்களாகிய செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம், கயிலைநாதன் போன்றோர் தோன்றினார்கள் எனலாம்.

இவ்விடயத்தில் காத்தார், ஏரம்பமூர்த்தி மாஸ்ரரிலும் பார்க்க ஒருபடி மேலே நின்றார். ஏரம்பமூர்த்தி அவர்கள் தமிழ்ப் புத்தகங்களுடன் மட்டும் நிற்க, காத்தார் ஆங்கிலப் புத்தகங்களையும் வாசிக்க உரமூட்டினார். அத்தோடு வகுப்பறைகளிலும் வெளியிடங்களிலும் மாணவர்களிடையே மானிடப் பண்புகளை விதைத்தார். அதனால் அக்காலத்தில் காத்தாரின் அரசியல் கொள்கைகளுடன் ஒன்றிப் போகாத இவ் எழுத்தாளர்களும்கூட அவர் ஊன்றிய மானிட நேயத்திலிருந்து விலகிச் செல்ல முடியவில்லை. இவர்களின் எழுத்துக்களில் சமுதாயத்தின் அடிமட்ட பாமர மக்கள் காதாநாயகர்களாக மிளிர்வதற்கு காத்தரின் எண்ணக் கருவூட்டலே காரணமாகும்.

1956ல் நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது என்னை ஒரு பேச்சாளனாக்கியது காத்தாரே. இன்றும் எனது கன்னிப்பேச்சு நினைவிற்கு வருகிறது. ''மானமுள்ள தமிழன் மாற்றார் முன் மண்டியிடமாட்டான்" என்பதாகும். அதனை எழுதித் தந்தது எனது ஆரம்பக்கல்வி ஆசிரியர் வல்வெட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கடமையாற்றிய அமரர் வடிவேலு மாஸ்ரராகும். பேசப் பழக்கியது காத்தார். நாட்டில் மூலை முடுக்குகளிலும் வல்வெட்டியிலும் இதனை நான்

பேசாத இடங்களேயில்லை எனலாம். அன்று அவர்கள் இட்ட வித்திலிருந்து நான் இன்னும் வழுவாது அறநிலையிலேயே வாழ்கின்றேன். ஆம், மானமுள்ள தமிழன் மாற்றார் முன் மண்டியிடமாட்டான்.

காத்தார் ''ஒரு ஆசிரியரின் கடமை வகுப்பில் கடைசி வாங்கிலிலுள்ள மாணவனை முன் வாங்கிற்குக் கொண்டுவரவேண்டும். அதேபோல் ஒரு பொதுவுடமைவாதியின் இலக்கு சமுதாய அடிமட்ட மக்களை சமுதாயத்தின் முன்நிலைக்கு கொண்டுவருவது என்பதாகும்" என்று அடிக்கடி கூறுவார்.

1971ல் நான் இலங்கை நிர்வாக சேவையில் சேர்ந்த செய்திகிட்டியபோது காத்தரிடம் சென்றேன். அப்பரீட்சைக்கு கட்டுரை எழுதுவது சம்பந்தமாக காத்தாரும், அமரர் அற்புதரட்ணமும் என்னோடு பல விடயங்கள் பற்றிக் கதைத்து விவாதித்து எனக்கு உதவினார்கள். நான் சென்றபோது காத்தார் சொன்ன கருத்து இன்றும் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது.

''தேவதாஸ் இன்றுவரை நீயொரு சாதாரண மனிதன். சமுதாயத்தில் உன்னை எவரும் கணக்கெடுத்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்றிலிருந்து நீ சமுதாயத்தில் ஒரு முக்கிய புள்ளி. எல்லோரும் நாடிவருவர். உன் கடமையை சமுதாயத்தின் கீழ் மட்ட ஏழை மக்களை முன்னுக்குக் கொண்டுவரவும், அவர்களின் துயர்துடைக்கவும் உன்பதவிகளை உபயோகிக்க வேண்டும்." அதுதான் எனது 30 வருட அரச சேவையின் A.R, F.R எல்லாம். இலக்கும் அ.தே. அதனால்தான் என்னவோ நான் ஏனைய அதிகாரிகளிலிருந்து வேறுபட்டு நின்றேன். மக்கள் என்னை விரும்பினர். அதிகாரிகள் வெறுத்தனர். வெறுத்தது மட்டுமின்றி குழிகள் பலவும் தோண்டினர்.

இந்துவில் நாங்கள் கற்ற காலத்தில் மாலை வேளைகளிலும் சனி, ஞாயிறுகளிலும் யாழ் புத்தகசாலையில் ஒன்று கூடுவோம். காத்தார் நீர்வை பொன்னையன், அமரர் கந்தசாமி, அமரர் சுப்பிரமணியம், அமரர் டானியல் போன்றோர் மாணவர்களாகிய அமரர் செல்வபதமநாதன், கனகரெட்னம் (மாந்தோம்ப்பு கவிஞர்), செந்தில், செ.யோகநாதன், கந்தசாமி (தற்போது கனடாவில்) போன்றோருடன் மார்க்ஸிசம் பற்றிக் கதைப்பார். இது நாம் பல்கலைக்கழகம் சென்ற பின்னரும் தொடர்ந்தது. காத்தாரின் அரசியற் பக்கம் பற்றி வேறுபலர் எழுதுவர் என்பதாலும் இக்கட்டுரை நீண்டுவிடுமோ என அஞ்சுவதாலும் சுருக்கமாக அவரின் அந்தப்பக்கம் பற்றியும் அது இலங்கை வரலாற்றில் பதித்த தடயங்கள் பற்றியும் சுருக்கமாகக் கூறுகின்றேன்.

காத்தாரால் பொதுவுடமைக்குள் ஈர்க்கப்பட்ட மாணவர்கள் ஏராளம். ஒரு இலங்கைப் பொதுவுடமைவாதி எவ்வாறு இயங்க வேண்டுமென்றால் இந்தியாவில் அமரர் நேரு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நேர் எதிராகச் செயற்படுபவனாக இருக்க வேண்டும் என அவர் கூறுவார். யாழ்ப்பாணத்தில் காத்தார் இட்ட அடி

எங்களைப் பல்கலைக்கழக வாழ்க்கையில் ஏனைய மாணவர்களிடமிருந்து விலகிநின்று சிந்திக்கவும் செயற்படவும் தூண்டியது. பொதுவுடமைக்கட்சி சோவியத்பிரிவு, சீனப்பிரிவு என்று இரண்டாகப் பிரிந்த போது நாமும் காத்தாரோடு அவர் தெரிவு செய்த சீனப்பிரிவுடன் சேர்ந்தோம். அமரர் தோழர் சண்முகதாஸனை பேராதனைக்குக் கூட்டத்தில் பேச அழைத்தோம். திரு.எஸ்.டி.பண்டாரநாயக்கா தனது சீனதேசப் பயணத்தின் பின்னர், தோழர் 'எஸ்.டி' ஆகத் தோழர் சண்முகதாஸனைத் தேடி கண்டிக் கூட்டத்திற்கு வந்ததும், பேசியதும் இன்றும் நினைவிற்கு வருகின்றது. பேராதனைப் பூங்கா பார்க்க ஏனைய மாணவர்கள் செல்லும் காலத்தில் நாம் மார்க்ஸிச வகுப்புகளுக்காக அங்கு சென்றோம். சனி, ஞாயிறுகளில் பத்திரிகைகளான 'தொழிலாளி'யும், 'கம்கறுவ'வும் விற்க நாவலப்பிட்டி வரை சென்று வந்தோம்.

தினமும், மாலை வேளைகளில், கந்தானைக்கு ஏறக்குறைய 3 மைல்கள், மலைவழி சென்று தோட்டத் தொழிலாளார்களின் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தோம். பல்கலைக்கழக மாணவர் சங்கத்திலும் தமிழ்ச் சங்கத்திலும் போட்டியிட்டு அவற்றையும் கைப்பற்றினோம். சிங்கள, தமிழ், முஸ்லிம் என வேறுபாடு இன்றி தோழர்களாகச் செயற்பட்டோம். யாழ்ப்பாணத்தில் 'வசந்தம்' சஞ்சிகை வெளிவருவதில் ஈடுபட்டோம். மாவிட்டபுரக் கந்தன் உயர் சாதியாளர்களின் முற்றுகைக்கு உள்ளாகி இருந்தபோது கிளர்ந்தெழுந்தோம். சாதி ஒழிப்புப் போராட்டத்தில், அகிம்சை, ஆயுத முறையில் ஈடுபட்டோம். இவை எல்லாம், வரலாற்றுப் பதிவுகள். இதற்குப் பலர் காரணமாக இருந்தாலும் எம்மைப் பொறுத்தவரை மறைமுக இயக்கசக்தியாக இருந்தவர் காத்தார். பொதுவுடமைவாதியின் குறியீடு காத்தார் என்று அனைவரும் கூறுவார்கள்.

நான் 1963ல் பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்தேன். கல்லூரிக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாணவனாக, யாழ்ப்பாணத்தில் பெயர் எடுத்திருந்தபடியால், தேவதாஸ் ஆகிய எனக்கு, பொல்காவலை புகையிரத நிலையத்திலிருந்தே வரவேற்பு 'உரிய முறையில்' மூத்தமாணவர்களால் வழங்கப்பட்டது. இவ்வரவேற்பு பல்கலைக்கழகத்திலும் உரிய முறையில் ஒருவாரம் நீடித்தது. பல்கலைக்கழக வாழ்க்கையே வெறுத்தது. திரும்புவோம் என்று இருந்தநிலையில், பல்கலைக்கழக புத்தகசாலை வெளியில் யார் கண்ணிலும்படக் கூடாதெனப் பயந்தபடி நின்றபோது சில சிங்களமொழி சக மாணவர்கள் என்னிடம் வந்து, ''யாழ். இந்துக் கல்லூரியிலிருந்து இவ்வருடம் கலைப்பீடத்திற்கு வந்த தேவதாஸ் யார்?" என்று கேட்டனர். ''நான்தான்" என்றேன். ''வா, எங்கள் பின்னால்" என்று கூறி முன்னால் சென்றனர். 'இன்று முடிந்தேன்' என்ற உணர்வு மனமுழுவதும் வியாபித்த நிலையில் அவர்கள் பின் சென்றேன். பல்கலைக்கழகத் தேநீர்ச்சாலைக்குள் சென்றதும் என்னை இருக்கச் சொல்லி, மூத்தமாணவர்களின் மரபு ரீதியான பண்புகளுக்கு மாறாக தாம் சென்று தேநீரும் சிற்றுண்டியும் வாங்கி வந்து எனக்குத் தந்தனர். அவர்கள் எல்லோரது பெயரும் இப்போது

நினைவிற்கு வரவில்லை. ஆனால் மக்குணுசில்வாவும், பொன்னான்டோவும் ஞாபகத்தில் உள்ளனர். ''தோழர் காத்தியைத் தெரியுமா?'' என்று அவர்கள் என்னிடம் கேட்டனர். ''ஆம், அவர்தான் என் வாழ்க்கையின் வழிகாட்டி'' என்றதும், அவர்கள் சொன்ன வார்த்தைகள் இன்னும் நினைவிற்கு வருகிறது. ''ஆம், அவர்தான் எங்களது வழிகாட்டியும் கூட. எங்கள் உடலின் பாதி அவர். அவருக்காக உயிரையும் கொடுப்போம்'' என்ற போதுதான் காத்தாரின் இலங்கை தழுவிய பாதிப்பை உணர்ந்தேன். பெருமையுடன் என் கண்கள் நீர் அரும்பின. அவர்களுடன் மேலும் பேசியபோது, நான் பேராதனை செல்வதற்கு முன்பே என்னைப்பற்றி அவர்களுக்கு எழுதி தனது படைப்பு ஒன்று புதிய அங்கத்தவராகப் பேராதனை வளாகம் வருகின்றது எனத் தெரிவித்திருந்தார் என அறிந்து கொண்டேன். என்னோடுதான் காத்தாரின் மகள் ராணியும் பல்கலைக்கழகம் வந்திருந்தார். தனது மகளைப் பற்றிக் காத்தார் யாருக்கும் எழுதியிருந்தாரோ என்பது எனக்குத் தெரியாது. அதுதான் காத்தி.

கல்லூரிக் காலத்தில் நான் இந்து மன்றத் தலைவர். காத்தார் ருஷ்யா சென்று திரும்பிய நாட்கள், தனது ருஷ்ய விஜயம் பற்றி எண்ணப்பதிவுகளை எல்லா இடங்களிலும் கூறிவந்த காலம். இந்து மன்ற சிரேஷ்ட ஆசிரியர் பொறுப்பாளர் எங்களால் 'சாமி' என அழைக்கப்பட்ட அமரர் மயில்வாகனத்திடம் சென்று காத்தாரை இந்து மன்றத்தில் 'அவரின் ருஷ்ய விஜய அனுபவங்களைப் பற்றிப்பேச அழைக்கலாமா?' எனக் கேட்டதும், சாமியார் கோபித்துக் கத்தினார். ''அவன் கொம்யூனிஸ்ட். அவனை இந்த மன்றத்தில் அழைப்பதா?'' என்றார். ''இல்லை சேர். அவர் மார்க்ஸிசம் பேசமாட்டார். அதற்கு நான் பொறுப்பு'' என்று கூறி அவரின் சம்மதம் பெற்று காத்தாரை அழைத்தேன். நடந்தவற்றைக் கூறி அரசியல் பேசவேண்டாமென்றேன். ''ஆம்'' என்று வந்தார்.

கூட்டம் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் எனது தலைமையில் கூடியது. காத்தார் பேசத் தொடங்கி, ருஷ்யா பற்றிக் கூறவந்தவர், திடீரென்று, ''நல்லூருக்குப் போகிறனீங்களா?'' என மாணவர்களிடம் கேட்டார். அவர்கள் ஆமென்றதும், கந்தனின் கையில் உள்ள வேல் எதனால் ஆனது? எனக் கேட்டார். சிலர் இரும்பினால் செய்தது என்ற போது, சிலர் பவுண் என்றனர். காத்தார் கேட்டார், ''அது கல்லினால் செய்யப்பட்டதா?'' என்று ''இல்லை'' என்றனர். ''சரித்திரம் படித்தீர்களா?'' என்றார். ''ஆம்'' என்றனர். ''கற்காலத்தில் இரண்டு பிரிவு என்ன'' என்றார். 'ஓம் சேர்' என்று தமது அறிந்த அறிவைக்காட்ட எல்லோரும் ஒரேமுறையில் கூற ''கற்காலத்தில் இரும்புக் காலத்தைப் பற்றி மக்கள் அறிந்திருக்கமாட்டார்கள். அதுமட்டுமன்றி கற்பனையிலும் பார்த்திருக்க மாட்டார்கள் எனக் கூறினால் சரிதானே?'' என்று வினவினார். 'ஓம் சேர்' என்று கோஷமெழுப்பினர் என் சகபாடிகள். அப்படியானால் கற்கால மக்கள் முருகனை வழிபட்டிருந்தால் முருகனின் வேல் கல்லால் ஆனதாக இருந்திருக்கும். இரும்புக் காலத்தில் முருகன் வந்தபடியால்தான் அவனின் வேல் இரும்பினால் ஆனதாக இருந்துள்ளது. ஆகவே முருகன் இரும்புக் காலத்தவன். அவனுக்கு தோற்றமுண்டு.

எபொருளுக்கு ஆரம்பமுண்டோ அப்பொருளுக்கு அழிவுமுண்டு. அதுமட்டுமன்றி முருகன் மனிதனைப் படைக்கவில்லை. மனிதனின் கண்டுபிடிப்பே முருகன். அவனுக்கும் அழிவுண்டு என்றார். மண்டபத்தில் சத்தமில்லை. எம் முருகன், அதாவது மயில்வாகனம்(ன்) எனப்படும் சாமியார் தனது இருகண்களையும் மூன்றாம் கண்ணாகப் பாவித்து என்னைப் பார்க்க நான் செயலிழந்து அமர்ந்திருக்க, அப்பப்பா! என்ன சோதனை. கூட்டம் முடிந்ததும் சாமியர் எனக்குத் தந்த வாய், கை போஷணைகள் வேறு விடயம்.

காத்தாரின் பகிடிகள் பற்றி எல்லோரும் கூறுவர். அவரின் பழைய மாணவர்கள் பலர் அவரின் பகிடிகள் பற்றி இப்போதும் கதைப்பர். அவற்றினை ஒன்றிணைத்து கட்டுரைகள் வரைவர். அவரின் பகிடிகள் சமயோசிதமாகவும், அறிவியல் சார்ந்ததாகவும், அட்ட அவதானமாகவும் இருக்கும்.

ஒருமுறை சித்திரை மாதத்தில் யாழ். பட்டணத்தில் தென்னைமரத்தில் நடராஜப் பெருமானின் திருவுருவம் தெரிவதாகக் கூறி ஒரே சனக்கூட்டம். எமது பாடசாலை மாணவர்கள் வகுப்புகள் 'கட்' பண்ணி அதனைப் பார்க்கப் போய்வந்தபோது காத்தாரிடம் மாட்டுப்பட்டுக் கொண்டனர். ''எங்கே போய் வாறீர்கள்?" என்று அவர்கேட்க, மாணவர்கள் நடந்ததைக் கூறினர். உடனே அவர் ''ஓம், ஓம், சிவன் சித்திரையில் தென்னையில் ஏறுவார். வைகாசி வர பனையில் ஏறுவார்" என்று கூறினார். வைகாசியில் பனங்கள் மிகப் பெருக்கம் என்பதன் பின்னணியில் இப்பகிடிவந்தது.

அந்தக் காலத்தில் தேநீர்க் கடைகளின் முன் பக்கத்தில் தகரப் பேணிகள் கொளுவி இருக்கும். அது 'தாழ்த்தப்பட்டோர்' எனப்படுவோருக்கு ஆகும். 'உயர்சாதி' மனிதரின் பேணிகளில் அவர்களுக்கு தேநீர் கொடுக்க மாட்டார்கள். காத்தார் சொல்லுவார். அந்தப் பேணிகளை உயர்சாதி ஆட்கள் பாவிப்பதானால் 'மரமஞ்சள்' போட்டுக் கழுவ வேண்டும் அல்லது சாதி ஒட்டி வருத்தம் வந்துவிடுமென. அவர் விதைத்த கருத்து வீச்சினால் நாம் கவரப்பட்டு இன்றுவரை எங்களால் சாதி அடிப்படையில் சிந்திக்க முடிவதில்லை. எமது வகுப்பில் ஒரு விதானையாரின் மகன் யானை மாதிரிக் குண்டு. காத்தார் சொல்வார், ''இவரின் தகப்பனார் ஒரு விதானை. இவர் ஒருவித ஆனை" என்று.

அவரின் பகிடிகளை ஒன்றுதிரட்டி வெளியிட்டால் அவை அவரின் திறனை மட்டுமல்ல அவர் வாழ்ந்த கால சமூகக்கட்டுமானத்தின் பிரதிபலிப்பாகவும், ஆய்விற்குரியவனவாகவும் அமையும்.

காத்தார். யாழ். மாநாகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட காலம். எதிரணியிடம் பணம், படை, குண்டர்கள், கள்ளர்கள் எல்லாம். இவரின் பின்னால் எம்மிற் சிலர் கலட்டியில் வீடு வீடாக வோட்டுக் கேட்டுப் போவோம். எல்லாம் மாணவர் கூட்டம். காத்தாரின் வால்கள், விசுவாசிகள், உண்மையானவர்கள், கள்ளம்

கபடம் அற்றவர்கள. ஒருநாள் கலட்டியில் ஒரு வீட்டில் தாழ்த்தப்பட்ட சமூகம் எனக்கருதப்பட்டவர்கள் வீடு. அந்த வீட்டுத்தலைவன் வோட்டுக்கேட்ட எங்களிடம் முகத்தில் அடித்த மாதிரிக் சொன்னார். ''மாஸ்டர் எங்கள் வோட்டு அவருக்குத்தான் - வீணே மினக்கடவேண்டாம்" காத்தார் சிரித்தபடி ''ஓம், ஓம் நாங்கள் பழம் பழத்திட்டுதா எனச் சுண்டிப்பார்ப்பது போல் மனிதரின் சாதியைச் சுண்டிப்பார்ப்பதில்லை, நீங்கள் சுண்டிப்பார்ப்பவர்களுக்கே போடுங்கள்" என்றார். எங்களுக்கோ அடிக்க வேண்டும் போலிருந்தது காத்தார் விடாரே!

அரசியல் வேலைக்கு இரவு இரவாக காத்தாருடன் திரிவோம். அவரின் வாகனம் துவிச்சக்கர வண்டி என்ற பெயரில் ஒரு இரும்பு, லைட், பிறேக், அது, இது எதுவுமற்ற 'யக்கடை'. ஒருநாள் "Lake view" ஹோட்டலில் பிளேன்ரீ குடித்து வெளியில் வந்தால் இரவு 11 மணியளவில் யக்கடையை யாரோ எடுத்துச் சென்றுவிட்டான். நாங்கள் 'கொதியின்' உச்சத்தில். காத்தார் சொன்னார் ''சரி சரி அதையும் யாருக்கோ தேவைப்பட்டுள்ளது. போகட்டும். நாங்கள் போவம்" என்று Town இல் இருந்து தலையாளி மட்டும் பொடி நடைதான்.

சைக்கிள் என்றதும் ஞாபகம் வருகின்றது. 1976ல் காலம் சென்ற பிரதமர் அமரர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா யாழ். சென்றபோது நானும், திரு. தேசப்பிரியா சேனநாயக்காவும், பொலநறுவையிலிருந்து சென்று சுபாஸ் ஹோட்டலில் தங்கியிருந்தோம். காத்தார் தேசப்பிரியவின் நண்பர். அவரைக் காணவென இரவு வந்திருந்தார். இருவரும் கட்டிப்பிடித்து குசலம் விசாரித்த பின் தேசப்பிரியா அவர்கள் ''Karthi, meet my Assistant Director Planning" என்று என்னை அறிமுகப்படுத்தினார். காத்தார் அமைதியாக ''Yes, yes. He is one of my products" என்றார். எனக்குப் பெருமிதம் தாழவில்லை. அதன் பின்னர் திரு. தேசப்பிரியா என்னோடு மேலும் பிரியமானார்.

ஆசிரியர்கள், பலவிதம். எல்லோரும் கற்பிப்பவர்கள். அப்ப காத்திக்கென்ன Special? அவரின் Speciality யாரால் முடியும்? தான் வாழ்ந்த கால நாட்டின் சமூக அரசியல் வரலாற்றிலும் தான் சார்ந்த சமூகத்திலும் மாற்றங்கள் செய்து தடயம் பதிக்க?

அவர் பலரின் டைரக்டர்.

அவரின் வாழ்க்கையே அவர் எமக்கு விட்டுச்சென்ற செய்தி - தத்துவம் - கொள்கை இலட்சியம்.

இன்னும் எண்ணங்களைப் பதியலாம். விரிவஞ்சி முடிக்கின்றேன். எழுதியதில் ஒரு திருப்தி.

காத்தாரைப் பார்க்க அறிவு வேண்டும். அதிலும் ஆழ்ந்த அறிவு வேண்டும். ஊனக் கண்களால் அவரை அறிவது கடினம். அப்படிப் பார்த்தவர்கள் அவர் காலத்தில் அதிகம். ஞானக்கண்களால் பார்த்தால் தெரியும் அவரின் அறிவு ஆற்றல் ஆற்றுப்படை- அறுவடை.

என் ஆசானை நினைவுகூர்வதில் என் கருத்துக்களும் பதிப்பாகக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி. சந்தர்ப்பம் அளித்தோர்க்கு நன்றி. அதுசரி காத்தான் பூத்தானுக்கெல்லாம் வருடாந்த நினைவுரைகள் மேற்கொள்ளப் படும்போது 'கம்யூனிஸ்ட் காத்திக்கு' ஏன் இருக்கக்கூடாது? முயற்சித்தால் என்னுடன் சேர்ந்து கொள்வீர்களா?

காத்தாரின் மகள் ராணியுடனும் அவரின் கணவர் அமரர் சின்னத்தம்பி யுடனும் கடந்த காலங்களில் எனக்கு எற்பட்ட தோழமைத் தொடர்பு சுவாரசியமானது மட்டுமன்றி மனநிறைவைத் தருபவை.

சுந்தரம் டிவகலாலா,
காத்தாரின் அன்பு மாணவன்.
பணிப்பாளர்,
பாதிக்கப்பட்ட சிறுவர்களின் ஆரம்பக்கல்வி திட்டம்,
ஜேர்மன் தொழில் நுட்ப அமைப்பு,
வவுனியா
முன்னாள் செயலாளர்
(வடகிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு)

* * *

கொள்கைக்கு முதலிடம் கொடுத்த அமரர் திரு. கார்த்திகேசன் மாஸ்டர்

க. சிவகுருநாதபிள்ளை

யாழ் இந்து மாணவனாக நிற்பதற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து உதவியவர்கள் யாழ். இந்து பழைய மாணவர்களும் ஆசிரியர்களுமே என்பதைக் கூறிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். இதுவே யாழ். இந்துக்கல்லூரியின் மண்வாசனை.

தகவல் தொழில் நுட்பத்தின் பலனாக இன்று யாழ் இந்து மாணவர்கள் பூகோளத்தின் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் ஒருவருக்கு ஒருவர் தம்மைத் தாமே அறிமுகப்படுத்தி கருத்துக்களைப் பரிமாறி தம்மாலான உதவிகளை எமது பள்ளிக்கு அளித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதைக் கூறுவதிலும் பெருமைப்படுகிறேன். 50 ஆண்டுகள் கழிந்திருந்தாலும் எனது பள்ளி வாழ்க்கையில் தனி இடம் வகுத்த ஆசிரியர்கள் சிலர். ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்களான திரு.கனகரத்தினம் மாஸ்டர், திரு.கணேஷலிங்கம் மாஸ்டர், திரு.கே.வி.மயில்வாகனம் மாஸ்டர் ஆகியோரை இந்த இடத்தில் நான் நினைவுகூர விரும்புகிறேன். எனது காலத்தில் அதிபர்களாக இருந்த செட்டியார் திரு.குமாரசுவாமி, திரு வி எம் ஆசைப்பிள்ளை ஆகியோரையும் என்னால் மறக்க முடியாது.

திரு. கார்த்திகேசன் மாஸ்டரும் இவர்கள் காலத்தில் ஆசிரியராக இருந்து ஆங்கிலம் கற்பித்தார். திரு.கார்த்திகேசன் மாஸ்டர், கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என அழைக்கப்படுபவர், அவர்கள் தனது தனித்துவத்தினால் இன்றும் எனது நெஞ்சில் நீங்காது இடம் பெற்றிருக்கிறார்.

திரு. கார்த்திகேசன் மாஸ்டர் தனது கட்சிக் கொள்கைக்காக வாழ்ந்தவர். கட்சிக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். ஆனால் பள்ளியில் மாணவர்களுடன் தனது கட்சி பற்றியோ கொள்கைகள் பற்றியோ பேசியது கிடையாது. மாணவர்களை மனமாற்றம் செய்ய எண்ணியதும் இல்லை. தனக்கென்று ஒரு கொள்கையுடன் வாழ்ந்தவர். யாராயிருந்தாலும், அதிபராக இருந்தாலும் சரி நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற மனத் தைரியத்துடன் வாழ்ந்தவர். வாழ்ந்து காட்டியவர். இதை நான் நேரில் கண்டவன்.

நான் 1951-ம் ஆண்டு பள்ளியில் சேர்ந்த போதுதான் நான் முதன் முதல் மேல்நாட்டு உடையில் ஆசிரியர்களையும் உயர் மாணவர்களையும் கண்டேன். கிராமத்தில் அப்பாவின் பள்ளியில் செல்ல மாணவனாக இருந்த எனக்கு ஆரம்ப காலத்தில் யாழ். இந்து வாழ்க்கை பயத்தைத் தந்தது. எனது தந்தையார் வகுப்பில் என்னுடன் இருந்த நாட்களும் எனக்கு நினைவிற்கு உண்டு. ஒரு சில ஆசிரியர்கள், குறிப்பாக திரு.கார்த்திகேசன் மாஸ்டர் தந்த ஊக்கமும் உற்சாகமும் குறிப்பிடத்தக்கவை. அவருக்கும் எனக்கும் நெருங்கிய பிணைப்பு உண்டு. அவர் எவ்வாறு தனது கொள்கையில் பிடிவாதம் கொண்டவரோ, அதேபோல நானும் சில கொள்கைகளுடன் இருந்தவன். அவர் எமது பாட வகுப்பிற்கு தேசிய உடையிலும் வருவார், மேல் நாட்டு உடையிலும் வருவார். மேல் நாட்டு உடை அணிந்து ரை கட்டும் போது, தனது கம்யூனிஸ்ட் கட்சிக்கான சிகப்பு நிற ரை மட்டுமே அணிந்து வருவார்.

பள்ளிக்கு மட்டுமே நான் சேட் அணிவேன். ஏனைய இடங்களுக்கு ஒரு வேட்டியும் மேல் துண்டுமாகத் திரிவேன். நான் தரமான சினிமா பார்ப்பது உண்டு. ஒரு நாள் சினிமா பார்ப்பதற்கு வரிசையில் இக்கோலத்துடன் நின்றிருந்தேன். ''இந்த இடத்திலும் நீ உன் கொள்கையை விடவில்லை. உன்னை பார்த்து நான் பெருமைப்படுகிறேன்" என்று அந்தக் கூட்டத்தினுள் மாஸ்டர் கூறியது இன்றும் எனக்கு நினைவிலிருக்கிறது. அடுத்த நாள் பள்ளியில் சக மாணவர்களுக்கு எனது போக்கைப் பற்றிப் பெருமையாகக் கூறி வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஒரு கொள்கையின் அடிப்படையில் வாழவேண்டும். ''எப்படி வாழ்ந்தால் தான் என்ன?" என இருக்காது, எந்த சூழ் நிலையிலும் ''இப்படித்தான் வாழ வேண்டும்" என்றிருக்க வேண்டும் என்று கூறி மாணவர்களுக்கு அறிவுரை கூறியவர் மாஸ்டர் அவர்கள்.

கேத்திர கணிதம் கற்பிக்கும் போது வேடிக்கையாகப் பல வாழ்க்கை உதாரணங்களைக் கூறி எம்மவர் மனதில் கேத்திர கணிதத்தை பதியும் வண்ணம் விளக்கம்கூறி கற்பித்தவர் இவரேயாவர். ஏனைய கணித ஆசிரியர்கள் எனில் எமக்கு எல்லாம் ஒரே கலக்கம். குட்டு, பிரம்பு அடி, திட்டு இவைகளுடனும் கணிதம் கற்பித்த ஆசிரியர்களும் உண்டு. கேத்திர கணிதம் கற்பிக்கும் போது புதிய இணைப்புகளை உண்டாக்கி கணக்கில் கேட்டதை நிரூபிக்க வேண்டும் என்பார். புதிய இணைப்புகள் எனும் போது திருமணத்தினால் உண்டாகும் புதிய உறவுகள் மச்சாள், மைத்துனன், ஒன்றுவிட்ட தம்பி இவை போன்றன என்று மாஸ்டர் கூறி விளங்க வைக்கும் போது நாம் எல்லாம் மகிழ்ச்சியுடன் கேத்திர கணிதம் கற்றோம்.

க. சிவகுருநாதபிள்ளை,
முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி மாணவரும்,
தற்போது லண்டனில் வாழ்பவருமாவர்.

மு. கார்த்திகேசன் ~ சில நினைவுகள்

இ. முருகையன்

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலே இலங்கைத் தமிழர் சமுதாயத்தில் நேர்ந்ததொரு சிந்தனை விழிப்புக்கு, கல்வியாயாளரும், அரசியல் அறிஞரும், வரலாற்று வல்லுநருமாகிய சிலர் பெரிதும் உதவியுள்ளனர். அவர்களுள் மு.கார்த்திகேசன் அவர்கள் விதந்து பேசத்தக்க ஒரு பெருமகனாகத் திகழ்ந்துள்ளார்.

ஆசிரியர் கார்த்திகேசன் என்றவுடன் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முற்பட்டதொரு காலகட்டத்துக்கு என் நினைவு பின்னோக்கிச் சென்று நிலைக்கிறது. அப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே நான் படித்துக்கொண்டிருக்கிறேன். அக்கல்லூரியின் ஆசிரியர் குழாத்தில் ஒளி வீசிக்கொண்டிருந்த ஓர் ஆங்கில மொழி இலக்கியக் கல்விமானாகவே அவரை முதலில் நான் அறிந்து கொள்கிறேன்.

படிப்படியாக வகுப்பேற்றம் பெற்று, சிரேஷ்ட-உயர்தர வகுப்புகளுக்குச் சென்ற பொழுதுதான், கார்த்திகேசனின் ஆளுமையையும் பண்புகளையும் சிறிது சிறிதாக அறிந்துகொள்வது இயலுமாயிற்று. அப்பொழுது நான் கணிதம், பௌதிகம், இரசாயனம் ஆகிய பாடங்களைத் தான் தெரிந்தெடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன். ஆதலால் அவர் எனக்கு வகுப்பாசிரியராக அமையும் வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. எனினும், சற்றுத் தூர இருந்து அவர் பரப்பிக்கொண்டிருந்த கருத்துக்களின் வெளிச்சத்தை உணர்ந்துகொள்ளக் கூடியதாய் இருந்தது.

அன்றைய காலகட்டத்தில், யாழ். இந்துக்கல்லூரியில், வகுப்பறைக்கும் அப்பாலான செயற்பாடுகளுக்கு அனுசரணையாகத் தொழிற்பட்ட ஆசிரியர்களுள், வித்துவான் க.கார்த்திகேசு, திரு.வை.ஏரம்பமூர்த்தி, திரு. வி.அற்புதரத்தினம்,

திரு.ஏ.எஸ்.கனகரத்தினம், திரு.அ.சரவணமுத்து போன்றோர் மாணவர்களுடன் கொண்டிருந்த தொடர்பு அதிகமாய் இருந்தது. பொதுவுடைமைவாதி என நன்கு அறியப்பட்ட திரு.அ.வைத்திலிங்கம் எனக்குத் தூய கணிதம் படிப்பித்திருக்கிறார். ஆனால், வகுப்பறையில் அரசியல் பேசுகிற வழக்கம் கடுகளவிலேனும் அவரிடம் இருக்கவில்லை. மாணவர்கள் விரும்பி அவருடன் ஏதும் கதைவிட்டுப் பார்த்தாலும் கூட, வகுப்பறையிலே கணிதம் தவிர வேறு எது பற்றியும் அவர் பேசுவதில்லை.

ஆனால், கார்த்திகேசன் அவர்கள் முற்றிலும் வித்தியாசமானவர். அவர் அடிப்படையில் ஓர் ஆங்கிலமொழி ஆசியரியரே ஆயினும், பேச்சரங்கு, சொற்போர் அரங்கம், கட்டுரையாக்கம் முதலிய பல்வேறு வகையான பொதுப்புலமை முயற்சிகளிலும் மாணவர்களுக்கு உறுதுணையாய் இருந்தார். அதனால், அறிவு விழிப்புக்கு உதவும் பகுத்தறிவுப் பார்வையையும் தருக்கவழிச் சிந்தனையையும் சமகால உணர்வையும் ஊட்டிவிடும் வாய்ப்பும் திறமையும் அவரிடம் பிரகாசித்தன.

அந்தக் காலத்திலே, அவர் ஆசிரியராய் இருந்த அதே வேளையில், யாழ்ப்பாண முனிசிப்பல் கவுன்சிலுக்கான தேர்தல்களில் போட்டியிடும் ஒரு வேட்பாளராயும் அவர் விளங்கினார். அரசியல் ஈடுபாடு என்னும் மற்றுமொரு பரிமாணமும் அவருக்கு இருந்தது. இதனை ஒட்டியும் பிற தேவைகளின் பொருட்டும் துண்டுப் பிரசுரங்களையும், அரசியல் விளக்கக் குறிப்புகளையும் அவர் எழுதி வெளியிட்டதுண்டு. இதனால், அவர்தம் கொள்கையினாலே கவரப்பட்ட மாணவர்கள் அவருடன் உரையாடித் தம் அறிவுநிலையைச் செம்மைப்படுத்தும் வாய்ப்பினையும் பெற்றிருந்தனர். அவ்வாறு அவருடன் உரையாடலில் ஈடுபடுவது, அறிவுப் பசியுடைய மாணவர்களுக்குச் சிறந்த விருந்தாய் அமையலாயிற்று.

இந்த விதமான நல்லுறவைப் பேணிக்கொண்டமையால், தம் விழுமிய சிந்தனை விதைகளுக்கு ஏற்ற விதை நிலங்களைப் பெறுவதிலே, கார்த்திகேசன் பெருவெற்றி கண்டார். இந்த வெற்றிக்கு அவருடைய நகைச்சுவையும், கிண்டற் போக்கிலான குறுங்கதைகளும் துணுக்குகளும் பெரிதும் உதவின. அவர் விடும் 'பகிடி'களின் பொருட்டே, பூவைத் தேடி மொய்க்கும் தேனீக்கள் போல மாணவர்கள் அவரை நாடிச் செல்வார்கள்.

அவர் எல்லா வேளைகளிலும் அரசியல்தான் பேசிக்கொண்டிருப்பார் என்றும் சொல்லிவிட முடியாது. மனித நடத்தைகள், பழக்கவழக்கங்கள், மக்களின் மனப்பான்மைகள், நடவடிக்கைகள், போக்குவாக்குகள் பற்றிய ஆழமான விமரிசனங்களைக்கூட எந்த ஒரு சாராரின் மனமும் புண்பட்டுவிடாத பாங்கிலே, சாதுரியமான 'பகிடிகளாக்கி' எதிராளிகளும் கேட்டு இரசிக்கக் கூடிய விதத்தில் அமைத்துச் சொல்வது அவருடைய சாதுரியமும் சாமர்த்தியமும் ஆகும்.

பள்ளிக்கூடத்திலே அவர் பாடம் நடத்திக்கொண்டிராத சமயங்களிலும்கூட, அவரைச் சுற்றி ஒரு மாணவர் குழுவினை எப்போதும் காணலாம். அந்த மாணவர் குழுவிலே க.கைலாசபதியும் அடிக்கடி காணப்படுவார் என்பதைக் கூறாமல் விடமுடியாது.

அந்தக் காலத்திலே, யாழ்ப்பாணத்தின் பெருங்கல்லூரிகளிடையே உயர்வகுப்பு மாணவர்களுக்கான விவாதங்கள் நடப்பதுண்டு. அந்த விவாதங்களுக்கான விடயங்களைத் தெரிந்தெடுப்பதிலும், எதிரும் புதிருமான கட்சிகளுக்குச் சார்பாகவும் மறுப்பாகவும் வாதப் பிரதிவாதங்களையும் ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லி விளக்குவதிலும் கார்த்திகேசன் அவர்கள் பெரிதும் ஈடுபாடு காட்டினார். இவற்றின் வழியே உலகியல் பற்றிய தெளிவையும், புத்தி பூர்வமான ஆய்வு மனப்பாங்கையும், விமரிசன அக்கறையையும் மொழித்திறனையும் வளர்த்தெடுப்பதில் அர்ப்பணிப்புடன் ஓயாது உழைத்து வந்தார்.

அதுமட்டுமல்லாமல், சமகால உலக நிகழ்வுகளின் உள்ளோட்டங்கள், அவற்றின் மூல ஏதுக்கள் ஆகியவற்றை அணுகி ஆராய்ந்து நோக்கும் பண்பையும், மனப்பழக்கத்தையும் தம் மாணவரிடையே ஊக்கி வளர்த்தார். இதனால் கண்மூடித்தனமான கருத்துக்களையும் அறியாமையின்பாற்பட்ட நிலைப்பாடுகளையும் களைந்திட வேண்டும் என்ற குறிக்கோள், அவர்தம் பணிகளால் ஊட்டம் பெற்றது.

இவையெல்லாம் கல்விக்கூட எல்லைகளின் உள்ளே அவர் மேற்கொண்ட பணிகள். ஆனால், அவருடைய பணிகள், இந்த வரம்பின் உள்ளே மாத்திரம் அடங்கி நின்றவை அல்ல.

பள்ளி மாணவர்கள் என்ற வட்டத்துக்கு வெளியில் உள்ள மக்கள் திரளின் வாழ்நிலை பற்றியும் வருங்கால வரலாற்று வளர்ச்சி பற்றியும் அவர் மனப்பூர்வமான அக்கறை பூண்டிருந்தார். அதனாலேதான் பொது உடைமைச் சிந்தனைகளையும் செயல்களையும் கற்றறிவாளர் மட்டத்திலும் ஏனைய மக்கள் மன்றுகளிலும் அவர் பரப்ப முற்பட்டார். அவர் கட்சி அரசியலிலும் நிறுவனமயப்பட்ட பிரசாரப் பணிகளிலும் முன்னின்று உழைத்து வந்தார். அந்த அறிவியக்கத்தையும் அரசியல் இயக்கத்தையும் அவர் ஒரு பெருவேள்வியாகக் கொண்டு பணியாற்றினார்.

''மக்கள் வாழ்விற்கு உழைப்பதே நியதி. ஆகவே எக்காலத்திலும் எந்நாட்டிலும் உழைப்பாளர்களே காட்சிக்கெளிய, பல்லாயிரக் கணக்கான கரங்களை உடைய இவ்வுலக பிரம்மாக்கள் ஆவர்."

இவ்வாறு கார்த்திகேசன் அவர்கள் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்து இருக்கிறார். இந்த உன்னதமான பெருமகனாரின் நினைவு போற்றப்படும் இச் சமயத்தில், அவர்தம் நேரடி மாணவனாக இராவிடினும், அவர் பரப்பிய கருத்தொளியின் செல்வாக்கு வட்டத்துக்கு உட்பட்டிருந்த ஒருவன் என்ற முறையில், இந்தக் குறிப்புகளை எழுதக்கூடிய நிலையில் நான் உள்ளேன்.

மாணவப் பருவத்திலே கிடைத்த அளவு தொடர்பு வாய்ப்புகள் பிற்பட்ட காலங்களிலே கிடைக்கவில்லையாதலால், எனக்கு நன்கு தெரிந்த செய்திகள் சிலவற்றினை மாத்திரம் இக்குறிப்பில் உள்ளடக்கி உள்ளேன். முழுமையான வரலாற்றுச் செய்தி விவரங்களையும் அவரது அரசியல் ஆளுமையையும் அறிந்து கொள்வதற்கு உதவவல்ல தோழர்களும் சகபாடிகளுமான அபிமானிகள் பலர் நம்மிடையே உள்ளனர். அவர்கள் தரும் செய்திகளும் கருத்துகளும் குறிப்புகளும் ஒன்றிணையும்போது கார்த்திகேசணனார் பற்றிய முழுமையான படிமம் ஒன்று நமக்குக் கிடைக்கிறது.

அந்தப் படிமம் மிகவும் சக்தி வாய்ந்தது. நீதி எது, நியாயம் எது என்பதைத் திடமாக வரையறுத்துக் கொள்ள நமக்கு அது அருந்துணையாகி உதவும்.

பல்லாண்டு கால முடக்கத்திலே செயல் குன்றிக்கிடந்த ஒரு மக்கள் குழுவுக்கு, அறிவொளியின் பெறுமதியையும் வரலாற்று வளர்ச்சிகளின் வழிமுறைகளையும், மீட்சிப் பாதையின் நுணுக்க விவரங்களையும் வெறும் கற்பனையாக அல்லாமல், பரந்த உலகின் நடைமுறைப் பாடங்களின் ஊடாக உணர்த்த வல்லதாய் அந்தப் படிமம் விளங்கித் திகழ்ந்து வழிகாட்டும்.

இ. முருகையன்,
முன்னாள் யாழ். இந்துக்கல்லூரி மாணவரும்,
யாழ் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளரும் ஆவர்.

* * *

An Epic and an Era

T. Srinivasan

To be a Master of everything in life, one must possess a rare combination of gifts. One must reach a high standard in several different directions and must combine talents not often found together.

Teacher, Principal, Reformer, Trade Unionist, disciplinarian, socialist, politician, humanist, philanthropist, communist, comrade, colleague, friend, literati, organiser, critic, rationalist, scholar, humorist, visionary, educationist, dramatist, composer, aesthete - one hardly finds anyone gifted with all these talents combined these days, when specialists are the norm of the day. Mr. M. (vk;) Karthigesan was the Jack of all these and like the mechanical jack, served to lift the downtrodden, be it in career, education, vocation or life, to a new high.

Mr. Karthigesan hailed from Vaddukoddai, a village in the North of Jaffna. He had his primary education at Thirugnanasampantha Vidyalaya at Vaddukoddai and then proceeded to Malaysia to follow his secondary education, where his brilliant career as a student began. He and his brother played for the school Cricket Eleven in Malaysia. Having got through his London Senior Cambridge examination, he returned to Ceylon to follow his University education.

The University College of Ceylon at that time was adorned by such scholatic stalwarts as Profs. Mr. P.G.S. Kularatne, Mr. S. Sundaralingam, Mr. E.F.C. Luddowyke and Mr. S. Sivapatha- sundaram. He proved his mettle in both English and Mathe matics and his father wanted him to take Law, but by an odd quirk of fate, he was encouraged to follow an honours course in English. He became a favourite student of Prof. E.F.C. Luddowyke. He com- pleted his course of studies successfully at the University College.

The University college moulded his career and it was here that he came into contact with many a scholar, prospetive politician, statesman, nationalist, and socialist. His attention was drawn to the downtrodden and his zeal towards Communism developed. Instead of hammer and sickle, he took up as his tools, the pen and paper. He became the editor of "The Student News", a University College Newspaper.

After his University career, Mr. Karthigesan became a full time worker for the Ceylon Communist Party and worked with Mr. Pieter Kenueman, one of the founders of the Communist Party. For a time he was the editor of the Communist Party news bulletin 'Forward'. He was also acquainted with prominent Communist Party members Mr. P. Kandiah, Mr. A. Vaithilingam, Dr. S.A. Wickramasinghe and many others.

The University College was the turning point in his career for a number of reasons. Although his father's wish was that he should follow a course in Law, the lure of politics and the influence of political and national leaders decided otherwise. Mr. Karthigesan was caught in a whirl pool of warring political ideologies, most of which were anti-imperialist in nature. The University College magazine, "The Student News" was the stepping stone for his journalistic career. Had he taken to journalism, he would have been one of the foremost journalists. There again fate intervened and changed his career to pedagogy (out of teaching).



கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியில் கார்த்திகேசன்
பட்டப் பின் படிப்பு கற்ற காலத்தில்

He always looked forward to better times. His career as a teacher in a private school did not interfere with his political work. He continued to labour for his party in spite of the many odds against it. The common masses at the time were steeped in outdated social customs and superstitious and it was difficult to convince them. Often he and his associates were manhandled by the riff raff, for whose enlightment he was working. However, the people realised late in the career of Mr. Karthigesan their follies and not only accepted him but also elected him as one of the members of the Jaffna Municipality, which gave him an opportunity to help the downtrodden.

From 1947, till he died, he was contributing his eloquence as a poltical speaker for the Communist Party. During the 1960's when the political philosophy of the Soviet Union was swerving towards neo-colonial trends, the Communist Party split into two, the Moscow wing and the Peking wing, the former in support of Russia , then the USSR and the latter supporting People's Republic of China. Mr. Karthigesan joined the Peking wing, the philosophy of which was propounded by Mao Tse Tung.

As one of the favourite students of Mr. Karthigesan, I had the opportunity to not only study under him, but also to study him closely. I observed Mr. Karthigesan from every angle and found that he too had been observant of even the minutest of scruples. In this article I venture to write, from my experience and association with him, about the luminous luminary, which emblazoned across the length and breadth of Ceylon.

During the latter part of the 1940's, I was associated with Mr. Karthigesan as a student and in the late 1950's, I became a collegue of his as a graduate teacher. Throughout my association with him, he has been my mentor and friend and always obliged me when there was a need. I was one of his favourite students and he always called me "Crepe" (Crepe-Sugar, meaning 'Seeni' in Tamil) for that made him remember my name. There were occasions when, I along with my other classmates, helped him and there were times when he helped me. I will recount these in the ensuing paragraphs.

His career as a Teacher and later as a Principal may be divided into two - educational and political. His teaching was immaculate in that it was not mixed with any political indoctrination and no student was allowed to bandy about it. Outside school, it was different - it was all about his socialist activities, and thus sometimes vicarious education.

It is very difficult to say whether a teacher is made or born. According to educationists , teachers who have post graduate qualifications such as the "Diploma in Education" are better teachers than those without these qualifications. When Mr. Karthinesan began to teach us, he was without such postgraduate qualifications, but his teaching was par excellence. He captivated the class and his occasional jokes kept the students amused and spell bound. Students waited for more jokes. The jokes were in relation to the lessons and enabled the students to remember the reference and context. In "Twelth Night" there is a character by the name of Sir Toby Belch. By nature Toby Belch is a drunkard and a humorous character. If you ask Mr. Karthinesan, "Sir, why do they call him Toby Belch?". Immediately, he will come out with a reply, "He drinks and belches".

In "Trumpet Major" a novel written by Thomas Hardy, the Napoleonic wars prevailed and there was much soldiering going on, both in France and in England. The females were afraid of the soldiers and they wore high waisted muslin gowns. When students asked him the significance of the high waisted muslin gowns, Mr. Karthinesan gave a comparison with the second world war and said, here in Jaffna, you would have seen that people raised the heights of fences along the roads so that soldiers travelling in military trucks could not see females living within the raised cadjan fenced compounds.

In teaching Mathematics too, he would teach in a captivating way. In geometry, to give an idea of vertically opposite angles, he would point to the string hopper press (இடியப்ப உரல்) and for the semi-circle theorem he would point to the milk rice (புக்கைத் தளிசு) given by Brahmins.

In the class room, the younger students (ages between 13 and 16) were seated on the front benches and the older ones(ages between 17 and 20), those who hadn't been promoted, were seated in the rear. He called the back benchers, the uncle benchers (அம்மான் வாங்கில்காரர்). He would say to them , "I cannot bring you to the front here and you should not always remain in this class (வகுப்புக்காரர் - meaning labourers who carry loads). You must study, come up well in life, go out and serve the society".

He maintained discipline in the classsroom and in the school generally. He was one of those appointed to the Board of Discipline. Occasionally, he along with one or two of the other members of the board, went to the theatre to catch students who cut school to see films. He remembered the names of all those students who were in his classes. One day he was going along the "Windsor" theatre road and he saw a student coming out after a show. Most students preferred the gallery seats because it costed only 25cents. The following day on seeing that student in his class. He asked him to stand up and said, "You have been foolish enough to waste 25 cents. If it were me, I would have seen the entire show from the road with only 5 cents spent on ground nuts. The person who stood by the curtain, kept the curtain partially opened, so that anybody standing on the road could see the entire screen.

As a teacher, he was entrusted with the discipline in the assembly halls during prayers. He was very particular that all students dress properly, including their hair style when they attend school. A warning from him made the students comply with the rules.

He was very good at teaching literary appreciation and he was responsible for my obtaining a credit in English literature. He was also good at teaching English language. His knowledge of Mathematics and logics enabled him to teach English Grammer.

In the 1940's, apart from composition and precis, paraphrasing, analysis and synthesis, were parts of the English syllabus and these were taught by Mr. Karthigesan with ease.

He often says, "oratary and writing should be in single understandable clear sentences. Sentences following one after the other in logical order, like a river flowing its course smoothly. Don't use hard words. Intersperse your speech with captivating, hilarious and jocular examples. Read good books, listen to good speaches whether Mr. G.G. Ponnampalan, Mr. S.W.R.D. Bandaranayake, Dr. N.M. Perera, Mr. Colvin R. De Silva or Mr. Peter Kenueman, regardless of the speakers political belief. Listen to radio channels such as the B.B.C, All India News". These are words I still remember and they stand me in good stead up to the present day. I still cherish Mr. Kanthigesan's speeches for they were full of the ingredients of cut and thrust, parry and repartee, pleasantries and surprises.

His exemplary character and all round education manifested themselves in his subsequent career as a teacher. He would say to students who played Cricket all the time, "Trap (a nickname for a student whose head is almost in the shape of a trapezium) Cricket is not all life, you had better concentrate on your studies, too". He wanted every student to have a general education first.

He had a good command of both Tamil and English which enabled him to coin his riddles and puns, to quip and parry, to console and pacsify. He used his knowledge of Mathematics, too. One day he happened to meet one of our students who had become a lecturer in Tamil. Mr.S.Thanjeyarajasinghe, PhD, one of my class mates. He was bald headed. Mr.Karthigesan said, "You have lost all that is on your head, but all that is best is inside" To this Mr. Singhe said, "Sir, I applied medicinal oil on my head, but the hair grows on my back". Mr.Kathigesan said, "Don't worry about it. Every theorem has its converse. You had better apply the medicinal oil on your back and the the hair will grow on your head."

In the 1940's, motor vehicles were few and far between and students used to travel by bullock carts. There was one student by the name of T. Kathirgamanathan, who came to school by bullock cart. One day the cart driver was not well and Kathirgamanathan had to drive the cart in which other students also travelled. Mr.Karthigesan said this. In class, Mr.Karthigesan said to this student, "You are A B C D ", the other students were looking at one another and at Kathirgamanathan, too. Kathirgamanathan himself was in the dark. Then Mr.Karthigesan gave the answer. Assistant bullock cart driver.

At school, the teachers were interested in promoting their careers and safeguarding their interest. Mr Karthigesan was not interested in dabling in this kind of politics. His interests lay mostly outside. However, he was on the side of the teachers at school. In difficult circumtances they summoned him and he had to pull the chestnuts out of the fire. During the 1960's when most of the schools were nationalised, J.H.C was left in the lurch - to go private or public. Mr.Karthigesan represented matters to Mr.Peter Kenueman and this problem was brought to the notice of Parliament, vide HANSARD, and the result – J.H.C is now one of the leading National Schools.

He had no ambition to become a Principal, and most of the teachers who had their selfish motives did not like outsiders, much less Mr.Karthigesan becoming a Principal of J.H.C. All the teachers who had been teaching for a long time at J.H.C wanted one among them to become the Principal, but not an outsider. This was the politics at school.

Once, Mr. P.Nadarajah an assistant teacher at another school was sent on transfer to J.H.C and this happened to be manipulated from the top. The Acting Principal of J.H.C. was a relative of his. The teacher had the motive to become first the Vice Principal and then the principal. All the teachers had an inkling of this and convened a meeting in the staff room, Mr. P. Nadarajah was requested not to participate and he was told that the meeting was about his being sent back to his

previous school. But he insisted on being present at the meeting. In his presence, it was decided that he be sent back. After that incident, a principal from another school was transferred to J.H.C. as Principal. He was at J.H.C. as principal for a day. Then again, there was a hiatus – this time the suitable person was Mr. Karthigesan and so justifiably Mr. Kathigesan was appointed as principal by the Director of Education, Mr. W. Mahatantila. So in the list of Principals at J.H.C. Mr. Karthiganesan's name also finds a place. During the 1940's when he was about to be appointed as assistant teacher, many people objected to his appointment, his only disqualification was that he was a Communist. It was Sir Vaidilingam Duraiswamy (Speaker –State Council), the then President of the Board of Directors who said, "He will prove to be a very good teacher, because he is a Communist". An irony of fate in Mr. Karthigesan's career was that he never decided anything for himself, he took anything that came his way.

His politics outside school was entirely different from those at school. Along with his colleagues he appeared on Communist Party platforms. During the 1940's at Jaffna, the people considered communism as a bogey. I happened to go to one of the meetings and there the rival party had appointed their henchmen to disturb the meeting.The chief speakers were Mr. A, Vaithilingam, P. Ramaswamy Iyer, Mr. M. Karthigesan and some others who had come from the south. The meeting was held at the Jaffna Hindu primary school at Neeraviady. Some how the meeting was disturbed and the organizers were assaulted.

Despite the many odds, Mr. Karthigesan stood as candidate for the Jaffna Municipality. In one of the campaigns our class helped. Some of us, Mr. N. Sachithananthan, Mr. P. Kamalendran, Mr. V. Sabanayagam, Mr. P. Kulasegaram and I hired a car and went around Vannarponnai chanting slogans. Subsequently he won in one of the elections and became a Member of the Jaffna Municipal Council. Even then he always went on a bicycle and helped the poor.

As an active trade unionist, he not only laboured for the workers and farmers, but also fought for the cause of teachers. He was helping the NPTA - Northern Province Teachers Association and wherever, the teachers had been let down by the private school boards, he was found helping them. St. John's College at Jaffna is a private school and there four teachers were dismissed for holding views that were contrary to those of the Private Board. This cause was taken up by the trade union and a legal case was instituted thereby, Mr. Karthigesan was appointed to speak. The Principal of St. John's College had been Mr. Pooranampillai, former Principal of Hartely College. Mr. Poornampillai was instrumental in dismissing the teachers. In that meeting Mr.Karthigesan began, "It is fitting that Mr. Poornampillai was an effective Principal at Hartely college, but a pity he could hardly be a Principal at St. John's because he was responsible for dismissing 4 valuable teachers.....".

Mr.Karthigesan was a humanist, philanthropist and friend to all those who approached him. In cases where he was unable to help, he would straight away tell them that it was beyond his capacity, but that he would show them the way.

In the school hours, when poor people came to him for money, he would somehow help them. I still remember the days when he approached the Warden of the hostel who willingly helped him with the required finances. Mr. Karthigesan would promptly pay back the money to the Warden when he got the monthly pay. The visitors who came for succor, never went empty handed. He would be helping people by writing appeals, petitions and making cases. He went home late at night. He never ate or drank regularly and one would see a physically frail figure moving with a bicycle. He is athletic and always wears a smile on his face when he rides his rickety bicycle.

At Pandatherippu Hindu College , when he was presented with a new Road Master bicycle on his retirement by the students, he spoke,"All these days I have been serving

the school mostly, only because I was a School Master. It is apt that the School Master is being presented with a Road Master, because I have now to go on this Road Master to help the people who are on the roads.

He was a visionary. Who ever would have thought that the Soviet Union would change. Long before the change took place, he must have predicted and became part of the Communist Party supported Peoples Republic of China instead of Soviet Union. When the boys said, "Sir, the TULF is given the Rising Sun emblem, for which he said,"Only when the Rising Sun comes to the top, they will know". Are these not visions? He foresaw a day when all the temples would be opened to all irrespective of cast or race and he fought for it. He also envisaged that a classless casteless society will dawn. He would say, "When you buy earthen pots, you tap with your knuckles and choose, likewise when you choose castes do you tap and find out?".

Mr. Karthigesan while holding his Communist views, tolerated the views of others, listened to them and understood them. He was a critic, but with a difference – a reforming attitude. He shunned superstitions old and dilaidated customs and traditions. People have a wrong conception of the Communist belief in religion. Mr. Karthigesan was one of those who fought for the temple entry on behalf of certain sections of people. He would say, "Sannithy Kanthan is a poor man's Kanthan, Nallurkanthan is a city's Kanthan and a rich Kanthan, Maviddapuram Kanthan is a landlord's Kanthan. Therefore, Sannithy led in the temple entry followed by Nallur and Maviddapuram".

His humour pervades all his qualities and one of the factors responsible for his success. While teaching literature,he would dwell at length on humorous portions, his humour apart, he was an asthete and appreciated beauty. Like Kamban , the Tamil poet, while describing the beauty of men and matters,

he would touch on the finer points of beauty and give the figurative and literary concepts. He was good at composing poetry, but he did not have the time for it. Some of his verses about Lumumba, the President of Congo, appeared in the Daily News, an island wide circulated news paper. His advice and help was sought by many a writer and composer. He helped the school in publishing the school magazine. He helped teachers and students in literature and English, when they sat the London Degree exams. One had to study literary appreciation from him to understand the lengths to which he went to explain the nuances of literature. For the term end concerts, he wrote his own dramas and staged them.

He could have been a great educationist, if he had specialised in that line. When he followed a post graduate course in education late in lfe, others prepared day and night for the enterprise, but Mr. Karthigesan did not find time to prepare, for, when he should have to at the University, he would be on the platforms at Jaffna. He had the knack of reading and absorbing a lot within a short period. He never took notes. We asked him how he prepared. He said, "while travelling in the train I complete reading the required books. That's all". He got through without difficulty.

In 1971, after 16 years of service at J.H.C. , I was transferred to Batticaloa. This too had been the handiwork of some teachers who thought that I might he an impediment to their progress. My only ambition was to end up as an assistant teacher at J.H.C. I was married at that time and had two children. My father –in – law was on his death bed and I was the only male member of the family. I did not object to the transfer, except that I wanted a school near my home station. So I was trying to alter the transfer to one of the schools at Anuradhapura. With that in view, I wrote a letter to Mr. W. Mahatantila, depicting my plight in it. Mr. Karthigesan was the Principal at that time, but I did not want to bother him. In the meantime, Mr. M. Sameem, Director of Education. Batticaloa

(Now my Director at Harrow International College) was sending telegram after telegram urging me to go to Batticaloa, failing which it was stated my salary would he stopped. Undaunted as I was, I did not want to go to such a distant place. Mr. W. Mahatantila sent my letter to Mr. Karthigesan. Mr. Karthigesan vouched for my circumstances. Thereafter Mr. W. Mahatantila helped me to avert the transfer. For all this, I never saw Mr. Karthigesan nor did I ever talk to him about this. I was released for services to the Technical College and subsquently Mr. Karthigesan also was sent as Principal to J/Kopay Christian College and then to Pandatherippu Hindu College. I never saw Mr. Karthigesan again – an Epic in my life, "Sir, how I wish thou should be living at this hour". One day a friend of mine, the Warden of J.H.C. hostel and a colleague of mine came to my house and said, "Mr. Karthigesan has departed from the world. Both of us paid our last respects to him at his Vaddu residence. To this day the spirit of Mr. Karthigesan stands in good stead with me. People who are dedicated and devoted never look for rewards.

It is not very easy to give a full account of the stature of a person like Mr. M. Karthigesan. To my knowledge, I have only given a synopsis of what Mr. Karthigesan had been during my period of assocaiation with him. His students who have come up in life range from Peons to Clerical Servants, Technicians, Teachers, Principals, Accoutants, Engineers, Doctors, Lawyers, Judges, Parlimentary Secretaries, MPs, Commisioners, Vice Chancellors and so on. Each of them should give his own picture about Mr. Karthigesan and the gleanings of jokes from Mr. Karthigesan might run to volumes. Like Mao's teachings Mr. Karthigesan's ideas about life will continue to persist and these themselves are testimony to a man's greatness.

T. Srinivasan.
Former Teacher of Jaffna Hindu College
and a student of Karthigesan.

காலத்தால் அழியாத எம் கார்த்திகேயன்

கே. ஆர். திருத்தவராஜா

வடபுலத்தே வளமான நீர்சொரியும் மண்மீது
வைகறையில் செழிப்போடு விளைந்து நல்வித்தாகி
புடமிட்ட தங்கமகன் மாணவனாய் பள்ளிசென்று
பாடமதை பக்குவமாய் கற்பலகை கொண்டெழுதி
திடம் கொண்ட எண்ணும் எழுத்தும் பலநூலும் கற்று
தகமைசேர் ஆசானாய் அதிபருமாய் பணிசிறந்தார்
கடல்போன்ற பரந்த ஆழ் அறிவார்ந்த சிந்தனையும்
காலத்தே சித்தாந்த கொள்கைவழி நின்றாரே.

எழில்தரும் புலமதனில் ஒடுக்குமுறை ஓங்கிடவே
உழலுகின்ற ஏழைகளின் தாழ்வுநிலை வேரூன்ற
தொழிலாளர் வர்க்கமது துவளாது நிமிர்ந்துவிட
துணிந்துமே செங்கொடியின் பாதைதனில் நின்றாரே
விழிப்பான உரைநடையும் வலிமைமிகு நெஞ்சுரமும்
வச்சூரமாய் பொதுவுடமை கோட்பாட்டின் ஒட்டுறவும்
செழிப்பார்ந்த கருத்துக்கள் சாந்தமுடன் முன்வைக்கும்
சமத்துவமே சீரார்ந்த வாழ்வுநெறித்- தோழனவர்.

நெறியோடு எழுபத்து ஆண்டுகளின் விடியலிலே
நிலைபெறும் சிவந்தமுன் அட்டைநூல் உள்வாங்கி
வறியநிலை வாழுகின்ற மாணவ சமூகமது
வளமான கல்விபெற வழிசமைத்த ஆசானவர்
அறிவார்ந்த பேராசான் வாழ்வியலின் நேசனவர்
உறுதிமிகு கருத்துக்கள் ஏட்டினிலே காவியமாம்
குறியீடாய் வாழ்ந்த காலத்தின் விடிவெள்ளி
காலத்தால் அழியாத எம்கார்த்தி கேயன்.

கே. ஆர். திருத்தவராஜா,
அல்வாயூரைச் சேர்ந்த அபிமானியாவார்

* * *

காலத்தால் அழியாத தோழர் கார்த்திகேசனின் அரசியல் நினைவுகள்

சி. கா. செந்திவேல்

தோழர் மு. கார்த்திகேசன் மறைந்து 25 ஆண்டுகள் ஆகின்றன. காலச் சக்கரம் கால் நூற்றாண்டை வந்தடைந்த போதிலும் ஒரு நேர்மையான மார்க்ஸிச லெனினிஸவாதியாக வாழ்ந்து முன்னுதாரணம் விட்டுச் சென்ற தோழர் கார்த்திகேசனின் நினைவுகள் நமது நெஞ்சங்களில் பசுமை யானவையாகவே இருந்து வருகின்றன.

தோழர் கார்த்திகேசனின் முழுமையான அடையாளம் மார்க்ஸிச லெனினிஸவாதி - உறுதிமிக்க கம்யூனிஸ்ட் என்பதாகும். அவர் அரசியல் சமூக கல்வித்துறைகளில் ஆற்றிய பணிகளும் பங்களிப்புக்களும் பொது உடமை இயக்கத்தின் வரலாற்றிலும் யாழ்ப்பாண சமூகப் பரப்பிலும் ஆழமான முத்திரைகளைப் பதித்துச் சென்றுள்ளன.

தோழர் கார்த்திகேசன் யாவற்றிலும் அரசியலையே அடிப்படையானதாகக் கொண்டு முதன்மைப்படுத்திக் கொண்டவர். அந்த அரசியல் பாட்டாளி வர்க்க அரசியலாகும். மார்க்ஸ் ஏங்கல்ஸ்சால் முன்வைக்கப்பட்டு லெனினாலும் பின் ஸ்டாலினாலும் நடைமுறைப்படுத்தப்பட்டு, மாஓசேதுங் போன்றவர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட மார்க்ஸிச லெனினிஸ அரசியலையே கார்த்திகேசன் தனது இறுதி மூச்சுவரை முன்னெடுத்து வந்தார். அதன் அடிப்படையிலேயே அவரது சமூக கல்விப் பணிகளும் பங்களிப்புக்களும் இருந்தன.

தோழர் கார்த்திகேசன் தனது நாற்பது வருட கால பாட்டாளி வர்க்க அரசியல் வாழ்வில் தொடர்ச்சியான பணியினை வழங்கிச் சென்ற அதேவேளை பலதுறைகளில் ஆற்றல் மிக்கவர்களையும் சமூகஅக்கறை யாளர்கள் செயற்பாட்டாளர்களையும் உருவாக்கிச் சென்றவர். அவர் யாழ்ப்பாண பழமைவாதச் சமூக அமைப்புச் சூழலில் எதிர்ப்பு அரசியலினதும் மாற்று அரசியலினதும் ஒரு

சின்னமாக விளங்கி வந்தார். அவரை கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்று எதிர் அரசியல் சக்திகளும் பழமை வாதிகளும் அழைத்து வந்ததன் ஊடாக ஒடுக்குமுறைகளுக்கு எதிரானவர் என அடையாளம் பெற்று நின்றார்.

தோழர் கார்த்திகேசன் தமது 18வது வயதில் உயர் கல்விக்காக கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரியில் சேர்ந்து கொண்டார். அவருடைய பல்கலைக்கழக (1937-1941) காலகட்டம் தேசிய சர்வதேசிய ரீதியில் முக்கியத்துவம் மிக்க காலப்பகுதியாக விளங்கியது. சுதந்திரம், விடுதலை, ஜனநாயகம் என்பனவற்றை உள்ளடக்கிய காலனித்துவ எதிர்ப்புத் தேசிய இயக்கங்கள் முன் சென்றன. அதேவேளை பொதுவுடமைக் கட்சிகளின் தலைமையில் விடுதலை, சமூகமாற்றம், சோஷலிசம் என்பவற்றை முன்னெடுக்கும் வல்லமை பெற்ற போராட்டங்கள் வளர்ந்தும் காணப்பட்டன.

இலங்கையின் தேசிய இயக்கம் சுதந்திரத்திற்கான கோரிக்கையைப் பணிவான வழிகளில் வெள்ளை எஜமானர்களிடம் வேண்டி நின்றது. அதேவேளை இடதுசாரிகள் சுதந்திரத்திற்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டில் உறுதியான கோரிக்கைகளை முன் வைத்து பல்வேறு இயக்கங்களை நடாத்தி வந்தனர். அத்துடன் தொழிலாளர்களின் கோரிக்கைகளும் வற்புறுத்தப்பட்டு தொழிற்சங்க இயக்கங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

அதே காலத்தில் சோஷலிச சோவியத் யூனியன் தொழிலாளி வர்க்க ஆட்சியின் கீழ் வியத்தகு சாதனைகளை நிலை நிறுத்தி வந்தது. உலக முதலாளித்துவத்திற்கும் சோவியத் சோஷலிசத்திற்குமிடையிலான முரண்பாடும் போட்டியும் ஒரு போர்க்களத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தமை அக் காலத்தின் ஒரு போக்காக வெளிப்பட்டது.

இதன் மூலம் மார்க்ஸிசம் உலக அரங்கில் அதிக ஈர்ப்பை பெற்று வந்தது. ஒவ்வொரு நாட்டினதும் எல்லைகளை ஊடுருவி மார்க்ஸிசம் வேகமாகப் புகுந்து சமூக அக்கறையாளர்களையும், சிந்தனை யாளர்களையும், செயற்பாட்டாளர்களையும் பற்றிக் கொண்டது. இக் காலத்தில் இலங்கையின் பல்கலைக்கழகக் கல்லூரியிலும், இலங்கையிலிருந்து சென்று வெளிநாடுகளின் பல்கலைக்கழகங்களிலும் கல்வி கற்று வந்த மாணவர்கள் பலர் மார்க்ஸிசத்தினால் ஈர்க்கப்பட்டனர். பல்கலைக்கழக படிப்பை முடித்து வெளியேறியதும் மார்க்ஸிச இடதுசாரி அரசியலில் பிரவேசித்துக் கொள்ளும் முடிவை அத்தகைய மாணவர்கள் எடுத்திருந்தனர். அறிவுபூர்வமாகவும் நடைமுறைவாயிலாகவும் மார்க்ஸிச லெனினிஸத்தை வரித்துக் கொண்ட அவர்களிடையே மு.கார்த்திகேசனும் ஒருவராகிக் கொண்டார்.

1935ம் ஆண்டில் இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியாக லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. மார்க்ஸிசவாதிகள், கம்யூனிஸவாதிகள், ஜனநாயகவாதிகள், சமூக அக்கறையாளர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் அக்கட்சியில் இணைந்திருந்தனர். இதன் தலைவர்களாக டாக்டர்.எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, டாக்டர்.என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, பிலிப் குணவர்த்தனா, எம்.ஜி.மென்டிஸ் ஆகியோர் விளங்கினர்.

இக் கட்சி தெளிவான மார்க்ஸிச லெனினிஸத்தை ஏற்றுக் கொண்ட ஒரு தொழிலாளி வர்க்க கட்சியாக அமைந்து கொள்ளவில்லை. அதனால் தத்துவார்த்த குழப்பமும் கருத்து முரண்பாடுகளும் தோன்றி வளர்ந்து கொண்டன. அவற்றின் வெளிப்பாடாக 1940ம் ஆண்டில் அக்கட்சிக்குள் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அன்றைய சோவியத் யூனியன் தோழர் ஜே.வி.ஸ்டாலின் தலைமையில் சோஷலிசத்தை முன்னெடுத்து வந்த சூழலில் உலக ஏகாதிபத்தியத்திற்கும், தோற்றம் பெற்ற பாஸிசத்திற்கும் எதிராக எடுக்கப்பட்ட முடிவுகளை லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒரு பிரிவினர் எதிர்த்தனர். பிலிப் குணவர்த்தனா, என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோர் ட்ரொட்சிய வாதிகளாகி நின்று சோவியத் யூனியனையும் ஸ்டாலினையும் நிராகரித்தனர். அதேவேளை எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, எம்.ஜி.மென்டிஸ், ஏ.வைத்திலிங்கம், ஆரியவன்ஸ்ச குணசேகரா போன்றோர் மார்க்ஸிச லெனினிஸ நிலைப்பாட்டை எடுத்த காரணத்தால் சமசமாஜக் கட்சியில் இருந்து விலகினர்.

இவ்வாறு விலகியவர்கள் ஐக்கிய சோசலிசக் கட்சி என்னும் பெயரில் செயல்பட்டு, 1943ம் ஆண்டு யூலை 3ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தனர். இவ்வாறு இலங்கையில் பொதுவுடமை இயக்கத்திற்கு அத்திவாரமிட்டு கட்டியெழுப்ப முன் நின்றவர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராகினார்.

1943ல் ஆரம்பிக்கப்பட்ட பொதுவுடமைக் கட்சியை பல்வேறு இடர்பாடுகள், சவால்கள் மத்தியில் முன்னெடுத்துச் சென்ற ஆரம்பத் தலைவர்கள் பத்துப் பேர்களை எடுத்து நோக்கும் போது அதில் ஒருவராக தோழர் கார்த்திகேசன் இருந்ததை பொதுவுடமை இயக்க வரலாறு எடுத்துக் கூறும். தெற்கிலே டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், எம்.ஜி.மென்டிஸ், ஆரியவன்ச குணசேகரா போன்ற தலைவர்கள் என்றால், வடக்கிலிருந்து அ.வைத்திலிங்கம், பொன் கந்தையா, மு.கார்த்திகேசன், நா.சண்முகதாசன் ஆகியோர் பொதுவுடமை இயக்கத்தின் ஆரம்பத் தலைவர்களாகவும் முதலாவது தலைமுறையினராகவும் விளங்கினர். அதனால் அன்றைய சூழலில் பல்வேறு எதிர்ப்புகள், சவால்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் இயக்கத்தை முன்னெடுக்க வேண்டியவர்களாக அவர்கள் இருந்தனர்.

பொதுவுடமைக் கட்சியைக் கட்டியெழுப்பவும் தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியில் வேலைகளைச் செய்யவும் கட்சிக்கு முழு நேர ஊழியர்கள் தேவைப்பட்டனர். இம் முழுநேர ஊழியர்கள் கடினமான பணிகளை கையேற்று நின்றதுடன் கட்டுப்பாடு, எளிமை, சிக்கனம், மக்கள் மத்தியில் தொடர்பு என்பவற்றை முன்னெடுக்கும் கம்யூனிஸ்ட் வாழ்க்கை முறைக்கு இளம் வயதிலேயே தம்மை ஆளாக்கிக் கொண்டனர். அத்தகைய ஆரம்பப் பயிற்சிதான் அவர்களது இறப்புவரை மக்களால் மதித்து போற்றப்படக்கூடிய கம்யூனிஸ்ட்டுகளாக வாழ வழிவகுத்தது.

இத்தகைய கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர ஊழியர்களில் தோழர் கார்த்திகேசனும் ஒருவராகிக் கொண்டார். பல்கலைக்கழக பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு தமது பிள்ளைகள் காலனித்துவ ஆட்சியின் கீழ் உயர் உத்தியோகங்களைப் பெற்று நல்ல வாழ்க்கை நிலைமைகளைப் பெற வேண்டும் என்பதே சராசரிப் பெற்றோரின் விருப்பமாகவும் வேண்டுதலாகவும் காணப்பட்டது. அத்தகைய சூழலில் கார்த்திகேசன், சண்முகதாசன் போன்றவர்கள் எடுத்த முழுநேர கட்சி ஊழியர்களாகும் முடிவு அவர்களது குடும்பத்தார்களுக்கு அதிர்ச்சி தருவதாகவே அமைந்திருந்தது.

தோழர் கார்த்திகேசன் கட்சியின் முழுநேர அரசியல் பணியில் ஈடுபட்டு தனக்கிருந்த ஆங்கிலமொழி ஆற்றல் மூலம் கட்சியின் அன்றைய ஆங்கிலப் பத்திரிகையான போர்வாட் (Forward) ஆரம்ப ஆசிரியர் பொறுப்பில் இருந்து செயல்பட்டார். இப்பத்திரிகை மூலம் ஆங்கிலம் கற்ற அறிவுஜீவிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் மார்க்ஸிசம் லெனினிஸம் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு கார்த்திகேசன் தனது ஆங்கிலமொழித் திறனை பயன்படுத்திக் கொண்டார்.

இவ்வாறு கட்சியின் முழு நேர அரசியல் ஊழியனாகிய கார்த்திகேசன் தமது சொந்த ஊரான வட்டுக்கோட்டையில் தனது விருப்பத்தின்படியே காதலித்து திருமணத்தையும் முடித்துக் கொண்டார். யாழ்ப்பாண பழமைவாதக் குடும்பச் சூழலானது கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சி முழுநேர அரசியல் ஊழியனானதை ஏற்றுக்கொள்ள மறுத்தது போன்றே, அவரது காதல் திருமணத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவ்வாறிருந்த சூழலிலும் கூட தோழர் கார்த்திகேசன் தனது அரசியல் மார்க்கத்தில் அடிபிசகாமல் நின்று, குடும்ப வாழ்வையும் அதனுடன் இணைத்து நம்பிக்கையுடன் முன் சென்று ஏனையோருக்கு ஒரு முன்னுதாரணம் மிக்கவராகவும் விளங்கினார்.

இத்தகைய ஒரு நிலையிலேயே 1945ம் ஆண்டில் கம்யூனிஸ்ட் கட்சி தோழர் கார்த்திகேசனை யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து கட்சி வேலைகளை முன்னெடுக்கும்படியான ஒரு தீர்மானத்தை முடிவாக்கியது. அம்முடிவை ஏற்றுக்கொண்ட கார்த்திகேசன் தனது குடும்பத்துடன் யாழ்ப்பாணம் சென்று

யாழ் நகரத்தில் விக்ரோரியா வீதியில் ஒரு வாடகை வீட்டில் குடியிருந்து கொண்டு கட்சிப் பணிகளில் ஈடுபடலானார். அந்த வீடே ஆரம்ப கட்சிப் பணிமனையாகவும் இருந்தது.

அன்றுவரை யாழ் குடாநாட்டில் பொதுவுடமைக் கட்சியானது அறிமுகமற்ற ஒன்றாகவே இருந்து வந்தது. அதேவேளை இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியை வடமராட்சியைச் சேர்ந்த சட்டவாதியான கே.தர்மகுலசிங்கம் (ஜெயம்) அறிமுகம் செய்து அரசியல், தொழிற்சங்க வேலைகளிலும் ஈடுபட்டிருந்தார். தொழிற்சங்க செயற்பாட்டிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் ஜெயம் இடதுசாரி அடையாளத்துடன் குறிப்பிட்ட பகுதிகளில் வேலைசெய்து வந்தார் என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியின் அமைப்பு ரீதியிலான வேலைகளும் அதற்கான பிரச்சார நடவடிக்கைகளும் தோழர் கார்த்திகேசனின் யாழ்ப்பாண வருகையுடன் 1945லேயே ஆரம்பித்தது. அன்றைய யாழ்ப்பாணத்தின் பழமைவாத சமூக பண்பாட்டுச் சூழலில் பொதுவுடமைக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வது இலகுவான ஒன்றாக இருக்கவில்லை. அதற்கான நெஞ்சுறுதியும் துணிவான செயற்பாடும் அவசியமானதாக இருந்தது.

தோழர் கார்த்திகேசன் தனது ஆரம்பகால கட்சி வேலை பற்றி எமக்கு எடுத்துக் கூறும்போது 'கட்சியின் பத்திரிகைகளை விநியோகிக்கவும் குறிப்பிட்ட நபர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் ஒரு தேனீர்க்கடையைக் கண்டுபிடித்தேன். அதுதான் யாழ் புகையிரத நிலையம் முன்பாக அமைந்திருந்த கதிரேசு என்பவரின் கடையாகும். அக் கடைதான் எனக்கு பல தோழர்களை அறிமுகப்படுத்திக் கொடுத்தது' என்று கூறியது நினைவில் இருக்கின்றது.

இந்த தேனீர்க்கடையில் மாலை நேரங்களில் கார்த்திகேசனுடன் ஒரு சிறு கூட்டம் நின்று அரசியல் விவகாரங்களை அலசிக் கொள்வது வழக்கம். அந்த கடைச் சொந்தக்காரரின் மகன் மகாலிங்கம் என்பவர் கட்சியின் ஆரம்ப செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்டவர்களில் ஒருவர். இத்தகைய சந்திப்புகளிலேயே தோழர் டாக்டர் சு.வே.சீனிவாசகம் கார்த்திகேசனுடன் அறிமுகமாகி கம்யூனிஸ்ட்டாகிக் கொண்டவர். அதனை தோழர் சீனிவாசகம் தனது முதுமைக் காலத்திலும் பல்வேறு சம்பவங்களை நினைவுபடுத்திக் கூறக் கேட்டிருக்கின்றோம்.

வடபகுதிக்கான கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப உறுப்பினர்களாக தோழர் கார்த்திகேசன், டாக்டர் சு.வே.சீனிவாசகம், எஸ். கே. கந்தையா, எம்.ஏ.காதர், எம்.சி.சுப்பிரமணியம், ராமசாமி ஐயர், கே.குலவீரசிங்கம், ஆர்.பூபாலசிங்கம் ஆகியோர் இணைந்திருந்தனர். கட்சியின் அன்றைய தமிழ்ப் பத்திரிகை தேசாபிமானி, ஆங்கிலப் பத்திரிகையான போர்வாட் (Forward) என்பன யாழ்ப்பாணத்தில்

கட்சிப் பிரசாரத்திற்காக விற்பனை செய்யப்பட்டு வந்தன. கட்சிப் பத்திரிகைகளின் விற்பனையை விரிவுபடுத்துவதிலும் பிரச்சார இயக்கத்தை முன்னெடுப்பதிலும் கட்சி அமைப்புகளைத் தோற்றுவிப்பதிலும் தோழர் கார்த்திகேசனின் வழிகாட்டலும் கூட்டு வேலைமுறையும் அவரது அரசியல் ஆளுமையை வெளிப்படுத்தியது.

ஒருபுறம் கட்சியின் வேலை விரிவடைந்து செல்ல, மறுபுறம் வாழ்க்கை நெருக்கடி தோழர் கார்த்திகேசனைத் திணற வைத்தது. இந்நிலையில் யாழ்ப்பாணத்தின் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகச் சேர்ந்து கொள்ளும்படி அவருக்கு கட்சி ஆலோசனை வழங்கியது. அக் காலத்தில் பாடசாலைகள் பெரும்பாலானவை தனியார் பாடசாலைகளாகவே இருந்து வந்தன.

1947ல் கார்த்திகேசன் யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியருக்கான விண்ணப்பத்தைக் கொடுத்தார். ஆனால் அவரை ஆசிரியராக ஏற்றுக்கொள்ள நிர்வாகம் மறுப்புத் தெரிவித்தது. காரணம் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்பதே ஆகும். இருப்பினும் நாவலர் மரபிலே வந்த யாழ் இந்துக்கல்லூரி நிர்வாகம் கார்த்திகேசனுடைய குடும்பப் பின்னணியையும், விபரங்களையும் மிக நுணுக்கமாக ஆராய்ந்த பின் தமது பழமைவாத மரபுக்குள் நின்று மிகுந்த தயக்கத்துடன் அவருக்கு ஆசிரியர் பதவி வழங்கியது.

அவ்வாறு யாழ். இந்துக்கல்லூரி, ஆசிரியர் பதவி வழங்கிய போதிலும் தோழர் கார்த்திகேசன் தனது அரசியல் பணியைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் பின் நின்றது கிடையாது. பதவி உயர்வுகள், சுய ஈடேற்றம், புகழ் நாட்டம் போன்றவற்றுக்குத் துளியளவும் இடங்கொடுக்காது, தனித்துவ வழி நின்று தனது அரசியல் இலட்சியப் பயணத்தைத் தொடர்வதில் தோழர் கார்த்திகேசன் கால் நூற்றாண்டு கால இந்துக்கல்லூரியின் ஆசிரியப் பணியின் ஊடே பயணம் செய்தார்.

யாழ்ப்பாண பழமைவாத சிந்தனை மரபுக்கும் சாதியக் கருத்தியலுக்கும் எதிராக அவர் சளைக்காது சொல்லாலும் நடைமுறையாலும் ஒரு கம்யூனிஸ்ட்டுக்குரிய நிலைப்பாட்டில் நின்று போராடி வந்தவர். அதனால் தான் யாழ். இந்துக்கல்லூரியின் அதிபருக்கான இடம் வந்தபோது அதில் கார்த்திகேசன் கல்வி, சேவைத் தகுதிகள் இருந்தும் மிகக் குறுகிய காலமே அதிபராக சேவை புரிய வாய்ப்புக் கிடைத்தது. இதனையிட்டு தோழர் கார்த்திகேசன் சலனமடைந்தது கிடையாது. அவர் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும், அதன் பின் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும் அதிபர் பதவி ஏற்று தனது ஆசிரியக் கடமையை செவ்வனே நிறைவேற்றினார் என்பது குற்பிடப்பட வேண்டிய செய்தியாகும்.

தோழர் கார்த்திகேசனின் ஆசிரியப் பணியும் அரசியல் வேலை முறையும் வடபகுதியில் பெருந்தாக்கத்தைக் கொடுத்தது என்றால் மிகையாகாது. அக்காலத்தில் தோழர் கார்த்திகேசனைப் பின்பற்றி அ.வைத்திலிங்கம் உரும்பிராய்

இந்துக்கல்லூரியிலும், பொன் கந்தையா மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் ஆசிரியர்களாகி தமது அரசியல் பணிகளை முன்னெடுத்தனர். குறுகிய காலத்தில் ஒரு தொகையான ஆசிரியர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தும் ஆதரவாளர்களாகவும் வளர்ச்சி பெற்ற புதிய சூழல் தோன்றியது. ஐம்பதுகளின் பிற்கூறிலே குடாநாட்டில் அதிக ஆசிரியர்கள் கட்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து நின்ற ஒரு நிலைமை காணப்பட்டது.

1947ம் ஆண்டு இடம்பெற்ற மிகப்பெரிய வேலைநிறுத்தத்தில் யாழ்ப்பாணமும் பங்கு கொண்டது. அதனையடுத்து 1953ம் ஆண்டில் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்ட மகத்தான ஹர்த்தால் போராட்டத்தில் வடபகுதி பூரணமாக கலந்து கொண்டது. அன்றைய நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சி பெற்று தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆசிரியர்கள், அரசாங்க ஊழியர்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியது. அன்றைய ஹர்த்தாலில் தமிழரசுக் கட்சியைப் பங்கு கொள்ள வைப்பதில் கம்யூனிஸ்ட் கட்சி தனது செல்வாக்கைச் செலுத்தி வெற்றி பெற்றது. தமிழரசுக் கட்சியின் முதலானதும் முடிவானதுமான ஒரே ஒரு முற்போக்கு நடவடிக்கை என அதனையே குறிப்பிட முடியும்.

அக்காலத்தில் தோழர் கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் வடபிரதேச செயலாளராகவும் செயற்பட்டு வந்தார். ஐம்பதுகளின் முற்கூறிலே பல்துறை ஆற்றல் மிக்கவர்கள் கம்யூனிஸ்ட் கட்சிக்கு வந்து சேர்ந்தார்கள். அத்தகையோரை அமைப்பு ரீதியாக வழி நடாத்தி நெறிப்படுத்துவதில் தோழர் கார்த்திகேசன் தனது ஆற்றல் ஆளுமையை முழுமையாகப் பயன்படுத்தி நின்றார். அவரது கொள்கை, லட்சியம் என்பவற்றையும் அறிவுபூர்வமான சமூக, விஞ்ஞான சிந்தனையையும் பார்வையையும் அத்துடன் நடைமுறை வாழ்வையும் மாணவர்கள், ஆசிரியர்கள் முதல் மக்கள் வரை உற்று நோக்கிக் கொண்டனர். அதன் மூலம் தோழர் கார்த்திகேசன் பலரது ஈர்ப்புக்கு உள்ளானார். அவரிடம் கல்வி கற்றவர்களும் அரசியல், சமூகப் பணிகளில் ஈடுபட்டவர்களும் கார்த்திகேசன் என்ற கம்யூனிஸ்ட்டைப் பற்றிய உயர்வான எண்ணப் பதிவுகளையே கொண்டிருந்தனர். அவரது கொள்கைகளைப் பின்பற்றி அரசியலிலும் சமூக வாழ்விலும் பயனுள்ள மனிதர்களாக வாழ்வதற்கு தோழர் கார்த்திகேசன் வழிகாட்டியாக இருந்ததைப் பின் நாட்களில் நினைவு கூர்ந்து வந்ததை அடிக்கடி கேட்க முடிந்தது.

1964ம் ஆண்டின் போது கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டு பாராளுமன்றப் பாதை, புரட்சிகரப் பாதை என இரண்டு கட்சிகள் தோற்றம் பெற்ற வேளை தோழர் கார்த்திகேசன் புரட்சிகரப் பாதையில் அணிதிரண்ட கட்சிக்கு தலைமை தாங்குபவர்களில் ஒருவராக நின்று செயல்பட்டார். அவ்வேளை தோழர் கார்த்திகேசன் வடபகுதியில் டாக்டர் சு.வே.சீனிவாசகம், கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ.கந்தசாமி, எம்.குமாரசுவாமி, நீர்வைப் பொன்னையன், கே.டானியல், ஜனகன்,

இ.கா.சூடாமணி போன்றவர்களுடன் இணைந்து நின்று புரட்சிகரப் பாதைக்கு வலிமை சேர்த்து தலைமைப் பாத்திரத்தில் ஒருவராகி நின்றார். மார்க்சிஸம், லெனினிஸம், மா ஓ சேதுங் சிந்தனையை முன்னெடுத்த அக்காலகட்டத்தில் அவர் இளம் தலைமுறையினருக்கு கற்றுத் தந்த அரசியல் பாடங்கள் கல்மேல் எழுத்துக்களைப் போன்று நிலைத்து நின்றன.

ஒரு கம்யூனிஸ்ட்டின் உலகப் பார்வைக்கு அடிப்படையாக அமைய வேண்டிய சமூக விஞ்ஞானத்தின் வரலாற்று வளர்ச்சி பற்றியும் சமூக மாற்றத்திற்கான உலகப் புரட்சிகளின் நடைமுறைகள் பற்றியும் மிக நேர்த்தியான அரசியல் பாடங்களை அவர் கற்றுக் கொடுத்தார். அவர் பாடசாலையின் ஆசிரியர் மட்டுமன்றி கட்சிக்கான கல்வியைப் போதித்து கம்யூனிஸ்ட்டுகளை உருவாக்குவதிலும் சளைக்காது உழைத்த ஒரு தோழராவார்.

1966ம் ஆண்டின் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தெழுந்த சூழலில் சாதியொடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிராக கட்சி தலைமை தாங்கி வழிநடாத்தியது. நெருக்கடியும் பிரச்சனைகளும் போராட்டச் சூழலும் நிறைந்த அக் காலகட்டத்தில் தோழர் கார்த்திகேசன் கட்சியின் வடபிரதேச செயலாளராகவும், மத்தியகுழு உறுப்பினராகவும் இருந்து செயல்பட்டவர். அவர் அரசாங்கப் பாடசாலை ஆசிரியராக இருந்த காரணத்தால் நேரடி அரசியலில் பங்கு கொள்வது கட்டுப்படுத்தப்பட்டது. ஆனால் தோழர் கார்த்திகேசன் கட்சி வேலைகளில் வெவ்வேறு வழிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தார். அவருக்குரிய அன்றைய மாற்றுப் பெயர் மாணிக்கவாசகர் என்பதாகும். கடுமையான பொலீஸ் கண்காணிப்பின் கீழ் அவர் வேலை செய்ய வேண்டியதாக இருந்தது. அவரது பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் கட்சிக் காரியாலத்திலேயே கட்சி வேலைகளில் மூழ்கி இருப்பார். பல்வேறு பிரதேசங்கள் கிராமங்களில் அரசியல் வகுப்பிற்காக சென்று வருவது அவரது கட்சி வேலையின் ஒரு பகுதியாக இருந்து வந்தது.

தோழர் கார்த்திகேசன் என்றுமே தனது சொந்த குடும்ப வாழ்க்கை பற்றி தனிப்பட்ட அக்கறை செலுத்தியது கிடையாது. சொத்து, சுகத்தை நாடியும் தேடியும் கொண்ட ஒருவர் அல்ல. தனக்குள்ள வாழ்க்கைச் சுமை, பொருளாதார நெருக்கடி பற்றி ஏனையோருக்கு எடுத்துரைத்து கவலையோ அனுதாபமோ பெற்றதும் கிடையாது. அவர் எளிமையான வாழ்வும் கடுமையான கட்சிப் பணியும் மேற்கொண்ட ஒரு வாழ்க்கை முறையினைக் கடைப்பிடித்து வந்தார். அத்தகைய வாழ்வு முறை இன்றைய பொருள் தேடிச் சொத்துச் சேர்த்து முடிவற்ற பேராசைக்குள் நிற்போருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். ஆனால் இப்படித்தான் வாழ வேண்டும் என வரையறை செய்து சொல்லாலும் செயலாலும் நேர்மையான கம்யூனிஸ்ட்டுகளாக வாழ்ந்த, இன்னும் வாழ்ந்து வருகின்றவர்களுக்கு தோழர் கார்த்திகேசனின் வாழ்வு முன்னுதாரணமாகும். அவரைப் போன்ற பல கம்யூனிஸ்ட்டுக்கள் தம்மை மெழுகுவர்த்தியாக்கி வாழ்ந்தவர்கள் என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

'கார்த்திகேசன் நல்ல மாஸ்டர். நல்ல மனிசன். பெரிய படிப்பாளி. சேவை செய்வதில் சளைக்காதவர். ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியில் சேராமல் இருந்திருந்தால் எங்கேயோ இருந்திருப்பார்'. இவ்வாறு தான் யாழ்ப்பாண பழமைவாத பிரகிருதிகள் தோழர் கார்த்திகேசன் பற்றி கண்ணோட்டம் பரப்பி நின்றனர். இத்தகைய கண்ணோட்டம் இன்றும் வலுவுடையதாகத்தான் இருந்து வருகின்றது. இத்தகைய ஆதிக்க கருத்தியலால் மக்களில் பெரும் பகுதியினர் இன்றும் ஏமாற்றப்படுவது தான் சோகமானதாகும். ஒருவர் எவ்வளவு நல்லவராகவும், நேர்மையானவராகவும், சுய நலமற்றவராகவும் இருந்து அத்தகையவர் கம்யூனிஸ்டாக இருப்பாரேயானால் அவரை யாழ்ப்பாண பழமைவாத ஆதிக்க கருத்தியல் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளமாட்டாது. அதேவேளை ஒருவர் நேர்மையற்றவராகவும், அயோக்கியராகவும், சுயநலப் பித்தராகவும் இருந்து ஆதிக்க அரசியலில் உயர் இடத்தில் இருந்தால் அத்தகையோரை அதே பழமைவாத சக்திகள் ஏற்றிப் போற்றி அரவணைத்துக் கொள்ளும்.

தமிழர்கள் மத்தியில் தொடரப்படும் இத்தகைய வர்க்க வேறுபாடு கொண்ட ஒடுக்குமுறைகள் மிகுந்த ஆதிக்க அரசியலுக்கு எதிராகத் தோழர் கார்த்திகேசன் இறுதிவரை விட்டுக் கொடுக்காது, சமரசம் செய்யாது போராடி வந்தார் என்பது தான் அவருக்குரிய சிறப்பு இடமாகும். அவர் தனது ஆற்றல்கள் அனைத்தையும் மக்களுக்காகவும் அவர்களது அரசியல் சமூக மாற்றத்திற்குமான பயணத்தில் பயன்படுத்திக் கொண்டவர்.

தோழர் கார்த்திகேசன் மனிதாபிமானம் என்ற பெயரில் வெறுமனே பாவ இரக்கம் காட்டுபவர் அல்லர். அவரது மனித நேயம் மார்க்சிஸத்தின் விஞ்ஞானபூர்வமான வர்க்கக் கண்ணோட்டத்திலிருந்து பிறந்ததாகும். வர்க்க ஒடுக்குமுறையினையும் ஏனைய ஒடுக்குமுறைகளையும் புரட்சிகரப் போராட்டத்தால் உடைத்தெறிந்து மனிதர்களை மனிதர்களாக நேசிக்கும் ஒரு புதிய சமூக அமைப்பைக் காண்பதற்கான அவாவில் இருந்தே கம்யூனிஸ்ட்டுக்களின் மனிதநேயப் பார்வை உருவாகின்றது. இத்தகைய பார்வை ஒவ்வொரு நாட்டினதும் மக்களினதும் விடுதலையுடன் நின்று விடுவதில்லை. முழு மனிதகுல விடுதலையையும் வேண்டி நிற்கும் ஒன்றாகும். அதனால் தான் இன்றைய உலகம் வெறுமனே வியாக்கியானம் செய்வதற்குரிய உலகம் மட்டுமல்ல. மாற்றி அமைக்கப்பட வேண்டிய உலகம் என்ற மார்க்சிஸத்தின் தாரக மந்திரத்தைக் கொண்டே மார்க்சிஸ லெனினிஸ வாதிகள் செயல்படுகிறார்கள். அதன் அடிப்படையிலேயே மார்க்சிஸ்டுகளின் மனித நேயம் அமைகிறது. அதனை வெறுமனே மனிதாபிமானம் எனக் குறுக்கி விடக் கூடாது. தோழர் கார்த்திகேசனிடம் காண முடிந்ததும் மார்க்சிஸ மனித நேயமாகும்.

இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தின் வளர்ச்சியிலும் சரி பின்னடைவுகளிலும் சரி பின்வாங்காது முன்னோக்கிச் சென்றவர் தோழர் கார்த்திகேசன். கருத்து முரண்பாடுகளாலும் பின்னடைவுகளாலும் மனம் சலிக்காது

தனது மார்க்சிஸ-லெனினிஸ நிலைப்பாட்டில் மிகுந்த நம்பிக்கையோடு இறுதிவரை செயல்பட்டு வந்த அவரது நிலைப்பாடு புதிய தலைமுறையினருக்கு ஆதர்சம் மிக்கதாகும்.

பொதுவுடமை இயக்கத்தின் வாழ்வோடும் வளர்ச்சியோடும் தன்னைப் பிணைத்து நின்ற முதலாம் தலைமுறையைச் சேர்ந்த முதல் வரிசைத் தலைவர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர் தோழர் கார்த்திகேசன். அவரது வாழ்வையும் பணியையும் விரிந்த தளத்தில் வைத்துக் காணவும், படிக்கவும் முற்படும் போது மேலும் பல விடயங்களைக் கண்டு கொள்ள இயலும். அதன் மூலம் தோழர் கார்த்திகேசன் போன்ற முன்னோடிகள் முன்னெடுத்து வந்த சமூக மாற்றத்திற்கான பொதுவுடமை அரசியலைத் தொடர்ந்தும் உறுதியுடன் முன்னெடுத்துச் செல்ல முடியும். இன்று தேசிய, சர்வதேச அளவில் மார்க்சிஸம் லெனினிஸம் தனது முன்னோக்கிய பயணத்திற்காக கடந்த காலத்தின் அனுபவங்கள் பட்டறிவுகள் ஊடாகப் புதிய சூழல்களுக்கு முகம் கொடுத்து முன்னேற வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் நிற்கின்றது. எனவே ஒவ்வொரு நாட்டினதும் விஷேட சூழலுக்கு ஏற்றவாறு மார்க்சிஸ லெனினிஸ இயக்கத்தை மீளமைப்புச் செய்து முன்னெடுத்துச் செல்லும் தேவை அவசியமாகின்றது.

அந்த வகையில் தோழர். மு.கார்த்திகேசன் போன்ற நேர்மையும் உறுதியும் தூரநோக்குடனும் செயல்பட்டு வந்த ஒவ்வொருவரினதும் சாதகமான பங்களிப்புகளை கையேற்று அவர்களைப் புதிய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்து முன் செல்வோம். அதுவே அவர்களது - இலட்சிய பூர்வமான கொள்கைக்கும் நடைமுறைக்கும் வாழ்வுக்கும் நாம் செலுத்தும் அஞ்சலியும் கௌரவமுமாகும்.

சி. கா. செந்திவேல்,
பொதுச் செயலாளர்,
புதிய ஜனநாயகக் கட்சி

* * *

Karthigesan – A Dedicated Comrade

S. D. Bandaranaike

I have known Comrade Karthigesan, one of the pioneers of the Communist movement in Sri Lanka, since 1952 when I was the M.P. for Gampaha. My ties with him got strengthened, after my eldest son Subash and Karthigesan's daughter Rani became close friends when they were in Bejing.

In 1940's Karthigesan had rooted himself in Jaffna and had become a popular figure in the politics of Jaffna. He was a young leader at that time. Since I was the General Secretary of the S.L.F.P and it's youth Federation, also the President of Trade Union Federation, Karthigesan visited me off and on at my residence at Madugaswalawuwa, Yakkala, Gampaha. During these visits, we exchanged our views mainly on the Tamil issue, with especial emphasis on caste problem that prevailed in the north. When the S.L.F.P led Government brought the famous Bandaranaike – Chelvanayagam pact in 1957, he was supportive of the pact.

During these years, J.R. Jayawardene, M.D. Banda, R. Premadasa and Ananda Tissa de Alwis led a march on 3rd October 1958 from Vihara Mahadevi Park, Colombo hoping to arrive in Dalada Maligawa in Kandy. The Marchers stayed at Kadawatte on the 3rd night and were preparing to continue the march in the next morning at 5 am. On the 3rd night, I was summoned by S.W.R.D. Bandaranaike, the then Prime Minister

of SriLanka to his office and was requested to stop the march to Kandy. In the early hours of October 4th, I rallied round my people in Gampaha around 5 a.m. and got on to the two strategic hills at Imbulgoda, walking all the way. Around 6.00 am, the procession reached Rambulgoda and we started throwing empty thamilies and the marchers couldn't proceed beyond Imbulgoda because of the massive crowd that had collected around this area. People blocked the way on one side form Yakkala to Imbulgoda and on other side from Imbulgoda to Kadawatte.

Around 11 am a Helicopter flew over Imbulgoda and the I.G.P arrived at the Imbulgoda Junction, where J.R. and I were talking. I told the I.G.P and the Leaders of the March, that thousands of People would be killed if they continued the march walking all the way and that if they wanted to go, they could go in vehicles and that they should not walk and go. The I.G.P then gave an alternative and requested the Marchers to get back to Colombo. with this Kandy march came to a end.

Because of the communal passion that was whipped up by the reaction in the B.C. pact was abrogated soon after this Karthigesan and I met and discussed the ethnic issue. At that time, he expressed his gratitude to the people of Gampaha District, for having stopped the Kandy march, led by J.R. Jayawardena.

Karthigesan was always firm in his conviction. He and I always were of the same opinion as regards the self-determination of the Tamils. In 1961, the Tamil parties staged the "Satyagraha" in front of Jaffna Kachcheri and I was sent by Mrs. Srimavo Bandaranaike to assess the situation. I met almost all the Tamil Leaders like Chelvanayagam and discussed the matters with them. I also met M. Karthigesan, V.A. Kanthasamy, M.C. Subramaniam, P. Kandaiah, A. Vaithilingam and other Leaders of the Communist Party, Jaffna District and they briefed me of their stand on the "Satyagraha"

issues. I was and always of the view that the Tamils in Srilanka should enjoy the same equal status like the brethren Sinhalese. To substantiate what I stand for, when I came back to colombo after seeing all these leaders in Jaffna, I told Srimavo Bandaranaike that the demands put forward by the Tamil leaders were justifiable. I made this point clear in my speeches in parliament as well.

This went on and a split occurred in the Communist Party of Sri Lanka and I came closer to Mr. N. Sanmugathasan and Karthigesan. We very often sat together and exchanged views and reached consensus on matters concerned with International Communist movement and local political issues.

Karthigesan championed the rightful cause of the Tamils and fought the rights of the minority Tamils of Jaffna. He was a life-wire behind the all Ceylon Minority Tamil Maha Sabha led by M.C. Subramaniuam and the mass movement for the Eradication of Untouchability, led by S.T.N. Nagaratnam.

I came to understand his personal life, full of dedication and sacrifice through his daughter Rani and her late husband Sinnathamby, He was a dedicated stalwart and a pioneer leader of the Communist Party of Sri Lanka.

I always admired his way of dealing with public of different political views. It is very difficult to find a person like Karthigesan to lead the down trodden massed of the country. He was a tower of strength to all those, who were affected by bourgeois class.

Comrade Karthigesan in no more, but the policies he stood for, will go from strength to strength, till the right are attained by the community to which he belonged to.

S.D. Bandaranaike,
Former M.P for Gampaha.

His Life is His Message

S. Selvapaskaran

The life of late Karthigesan master touched us all. He was associated with me from year 1956, who inspired love and affection of all who came across and I am not an exception to it.

He served with distinction in his professional carrier in the field of education as a respected member of the teaching staff at Jaffna Hindu College. Thereafter he took over the reigns of "Pandatherippu Hindu College" and there has been an enormous growth of the college activities. He had the inspiration, charisma and courage to mould the young minds of his period to aspire to great heights of academic excellences and noble manhood. His contributions to the educational field was felt and well recognized at the local and national levels. He had a unique and remarkable personality and acclaimed as a leading light as a teacher as well as a dedicated pioneer of the Marxist-Leninist movement till the end of his eventful life.

When the private schools were nationalized, he commented on the educational system in Sri Lanka as thus "The education is not merely for living, but it is for a fruitful life for the person concerned and the community as well". The education as it stands today, exacerbates the problem and imprints competitiveness even more deeply in students who are already programmed by ambitious parents. This ultimately results in producing, instead of well rounded individuals, but individuals who are discontended, unfulfilled

and without a sense of direction. Education is not merely an art of collecting information of the objective world, it must also include the far more important task of transferring into a true human. He related an incident when Maxim Gorky, who visited a school along with one of the inspectors. There the children demonstrated their ability to jump like a frog, swim like a fish and sing like a bird. But when Maxin Gorky asked them whether they knew how to act like a man. None of the children could demonstrate. Children today are a mirror image of the society and its problems.

Together the teachers, parents and administrators of education services are the sculptures who have to shape and mould the figures of the students. We must instill in them a sense of purpose, give them the proper guidance and provide them with afirm foundation for the cultivation of human values." But he often said that the "voice of the teacher" was missing from the educational reform and the self seeking and self opiniated policy makers have done more damage to children's education than anything else." He was frankly the best of us with his inner strength and wonderful personality, who was the key bond between communist doctrine and the people. He remained young in heart to the unpredictable challenges and always remained defending and safeguarding the rights of the oppressed and campaigned vigorously to ensure a death knell to the feudal caste system and dedicated his lifetime for the workers and peasants welfare. He made people feel better about themselves, with his humour and beautiful smile. People loved him and his heart belonged to this beautiful land and its inhabitants, whom he served with unswerving dignity. For nearly a quarter century of his life, which meant so much to the down trodden people. He enriched their lives. We are all the richer for his teachings and everything he stood for. He left an irreplacable chasm in countless lives.

He used a bicycle for his travel during his whole period of life. He often remarked, " service is not done at the convenience of the one who serves, it is a service done with sacrifices of one's convenience, comfort, time etc. It is a service that seeks the convenience and comfort of the one in need

and not the server". "Also, do not just provide what you think is easy to provide or offer". He reminded us that, "people are economically poor, educationally illiterate with only bookish knowledge and politically powerless".

During the period when revisionism of Marxism-Leninism entered the Ceylon Communist Party, he stood against the revisionist philosophy and policies and was in the vanguard against the degeneration of the party and founded the Ceylon Communist Party Marxist-Leninist along with Comrade Shanmugathasan. I can recollect Kathigesan Master addressed a group discussion at Alaveddy on our invitation on the theme "Present and Future of Soviet Revisionism". He quoted from "Lenin's Selected Works" and "Mao-Tse-Tung's Thoughts." He had the foresight and predicted that the Soviet Union will disintegrate into several fragments and will sink to the bottom resulting in economic and political disaster. The country will crumble under the hands of revisionist leadership and will be at the dictates of world bank and the capitalist nations. What a foresight he had and we can judge his vision as we are witnessing the vents through mass media and television network.

I learnt so much from his immense value to my life. His turn of humour and vocabulary could be memorable in our mind. He is an institution in his own right, with an immensely strong character combined with a natural grace and infectious optimism. About life itself and above all he understood the Sri Lankan character.

He was an active trade unionist and was in the leadership of both the Northern Province Teachers Association as well as National Union of Teachers Union. He served the people faithfully and effectively. In 1954, he was elected from the "Vannarponnai" Municipal Ward of Jaffna Municipal Council. He contested on the Communist Party ticket the parliament electoral seat of Jaffna town. He served the people faithfully and effectively with no thought of credit and no trace of vanity. He inspired the people and aroused their respect and affection.

In the 1964, he attended my wedding reception at Chunnakam. He came to the function with a group of Marxist-Leninists and brought along with him my wedding and reception invitation. With his usual humour he mentioned on that occasion, "Comrade, your wedding invitation very much of significance because it is printed in our mother tongue, Tamil and our brother tongue, Sinhala, which is the language of our Sinhala brothers. You have given the parity of status, denoting the future that will have equal rights. It is our duty to light the quest to make a difference." He valiently stood in the vanguard for equality, justice with honour, freedom and the right to self determination of the Tamils of Sri Lanka. His determination, dignity, strength and extraordinary courage are his special qualities, which were his assets to bravely face the obstacles during the turbulent policies and activities launched in the northern part of Sri Lanka.

At every turn he emphasized the right to self determination of the minorities as enshrined in the Marxist-Leninist philosophy. His political sagacity, foresight, ingenuity, strong sense of duty, truthfulness, indomitable courage and his deep faith in the Marxist-Leninist philosophy gave him the strength to do his best with openness. Based on cultural perspectives, socialist goals and universal perceptions, he often mentioned that, "Today man's inhumanity to man is incredibly far more extensive and effective because of the refinement of the tools of exploitation and destruction by the capitalist system. However much the philosophy is reminded, it will lack credibility without our true dedication. Our own place in the chain of responsibility to heal or uplift by re-vitalising the lives of millions of people facing innumerous oppression, discrimination, persecution and starvation." Sensible and intelligent thinking is needed for us to say enough is enough. Let's hope we will hear those words soon. We can open our eyes and see all he has left. We can cherish his memory of his special qualities, earthed in his Marxist-Leninist philosophy, that clothed his life so richly. We too may try to seek to put on fresh in our own lives and the life of our community and the country at large.

S. Selvapaskaran,
133 Lynton Road, Harrow,
Middlesex HA2 9NH, UK

மென்மை உள்ளம் படைத்த புரட்சிவாதி

ஐ. ஆர். அரியரத்தினம்

கடந்த முப்பது ஆண்டுகளில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரியுடன் தொடர்புள்ள ஆசிரியர்களில் அமரர் மு. கார்த்திகேசனே எல்லோருடைய நன் மதிப்பையும் பெற்று மேம்பட்டுத் திகழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை. எந்தவித பண பலமுமின்றி, 1954ல் மாநகரசபை உறுப்பினராக - அதுவும் உள்ளூராட்சி அரசியலில் 'பெரிய புள்ளி'யாக அதுவரை விளங்கிய ஒருவரை 'வெளியூரானா'கவிருந்தும் தோற்கடித்து, தெரியப்பட்டாரென்றால் அது அவர் மீது மாணவர்களும் பெற்றோரும் கொண்டிருந்த அன்பையும் பெருமதிப்பையும் கோடிட்டுக் காட்டுகின்றது.

அவர் மென்மையுள்ளம் படைத்தவர். தற்பெருமை அற்றவர். எந்த நேரத்திலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் உதவிக்கரம் நீட்டத் தயங்காதவர். இக்குணங்களே எல்லோரையும் அவர்பால் ஈர்த்தன. ஆனால் இந்த மென்மையுள்ளத்தில் புரட்சித் தீ கனன்றது. இதை அவருடன் நெருங்கிப் பழகியவர்களே அறிவர்.

1930 களின் நடுப்பகுதியிலிருந்து அவரோடு நான் மிகவும் நெருங்கிப் பழகினேன். அப்பொழுதுதான் அவர் இலங்கைப் பல்கலைக் கல்லூரியில் (அப்போதைய பெயர்) சேர்ந்தார். கல்லூரிப் படிப்பை மலேசியாவில் முடித்துவிட்டு உயர்படிப்பிற்காகத் தாயகம் வந்திருந்தார். அவரது வாழ்க்கைப் பின்னணியும் அன்றைய கால கல்வி முறையும் அவரை ஒரு 'துரை'யாக உருவாக்கியிருக்க வேண்டும். அதுவே அக்காலக் கல்வி நிறுவனங்களின் குறிக்கேளாயிருந்தது. ஆனால் நுண்ணுணர்வு படைத்த அவரது உள்ளம் இந்நிறுவனங்கள் திணிக்க முயன்ற அன்னிய விழுமியங்களை அறவே வெறுத்தது. உணர்ச்சிமிக்க புரட்சிவாதியாக அவர் மாறினார்.

1930 இல் ஐக்கிய சோசலிச கட்சியை நிறுவ முன்னின்று உழைத்த புரட்சிகர மாணவ முன்னோடிகளுள் கார்த்தியும் ஒருவர். மாணவத் தலைவர் என்ற முறையில் அவருடைய முக்கிய பணிகளுள் ஒன்று 'மாணவர் செய்தி' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தமையே. வாரந்தோறும் இப்பத்திரிகையை

வெளியிடுவதற்கு அவரும் வேறு சில திறமைசாலிகளும் நீண்ட காலமாக உழைத்தனர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏதேச்சாதி காரத்திற்கு எதிராகவும் அதன் அடிவருடிகள் பல்கலைக் கழகத்தைத் தான்தோன்றித் தனமாக நடாத்திவந்ததை எதிர்த்தும் இப்பத்திரிகை மேற்கொண்ட இயக்கம் மாணவர்களை விழிப்புணர்வு பெறச் செய்தது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்ட காலகட்டத்திலேதான் கார்த்தியும் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறினார். யூலை 3, 1943ல் நிறுவப்பட்ட இக்கட்சியின் ஸ்தாபகர்களில் கார்த்தியும் ஒருவர். ஆரம்பத்திலிருந்தே முழுநேரக் கட்சி ஊழியராக மிகச் சொற்ப ஊதியத்திற்கு அவர் கடமையாற்றினார். அப்பொழுது அவரது முக்கிய பணி கட்சியின் ஆங்கில வாரப்பத்திரிகையான 'போவட்'ஐ வெளியிடுவதே. அவர் பத்திராதிபராக மட்டுமல்ல அச்சுக்கோப்பாளனாகவும், பத்திரிகை விற்பனையாளனாகவும் கடமையாற்றினார். இவையெல்லாவற்றிற்கும் அவர் பெற்ற ஊதியம் மிகச் சொற்பமானதே. ஆனால் எதுவித முணுமுணுப்புமின்றி அவர் பல ஆண்டுகளாக இவ்வாறு கடமையாற்றினார். இதே காலத்திலேதான் அவர் திருமணம் செய்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையானார். கட்சிக் காரியாலயத்திலேயே கடமையாற்றுவதற்கு அவரது உள்ளம் உந்தியபோதிலும் அவர் பெற்ற ஊதியத்தில் கொழும்பிலே குடும்பவாழ்வு நடாத்துவது முடியாத காரியமாயிற்று. அப்பொழுதுதான் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பதவியை ஏற்பதெனத் தீர்மானித்தார். அவரது வாழ்க்கைப் படலத்தின் மிகப் பயனுள்ள கட்டம் இத்துடன் ஆரம்பமானது. அவரது ஆசிரிய வாழ்வை விரித்துரைக்க வேண்டிய அவசியமில்லை. அது எல்லோரும் அறிந்ததே.

அமரர் பி. கந்தையா, காலஞ்சென்ற ராமசாமி ஐயர், எம்.சி. சுப்பிரமணியம், ஆர்.ஆர்.பூபாலசிங்கம் போன்றோருடன் இணைந்து யாழ். மாவட்டத்தில் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதில் ஈடுபட்டார். இது அன்றும் இன்றும் இடர்மிக்க பணியே. பழமைபேண் மனப்பான்மையும், சாதி முறையும் இங்கு வேரூன்றியிருந்ததுடன், இலங்கை முழுவதும் ஆதரவு திரட்ட முயன்ற கட்சியை சிறுபான்மை இனம் சந்தேகக் கண்ணுடன் நோக்கியமை இயல்பே. ஆனால் மாநகரசபை உறுப்பினராகவும், பாராளுமன்ற வேட்பாளராகவும் அவர் ஆற்றிய சேவைகளும், நடாத்திய இயக்கங்களும் கம்யூனிஸ்ட் கட்சி குடாநாட்டில் பிரபல்யம் அடைவதற்கு ஏதுவாக அமைந்தன.

முற்போக்குவாதிகள் மிகக் கஷ்டமான நிலையை எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர் எம்மைவிட்டுப் பிரிந்துள்ளளார். எனது பழைய நண்பருக்கு அஞ்சலி செலுத்தும் இந்நேரத்தில், அவரது வாழ்வு வீண்போகவில்லை. அவரது அரும்பெரும் குணங்கள் அவரது சீடர் வாழ்க்கையில் பிரதிபலிக்கும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்த விரும்புகின்றேன்.

எம். கார்த்திகேசனின் மறைவின் போது செப்டம்பர் - நவம்பர் 1977 'மல்லிகை'யில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி.

ஐ. ஆர். அரியரத்தினம்

ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்குழு உறுப்பினராக கார்த்திகேசனோடு செயற்பட்டவரும், நெருங்கிய நண்பருமாவார்.

கர்மவீரர் காத்தி ~ நினைவுகள் சில

கே. கணேஷ்

1930ன் இடைப் பகுதிக்கும் 50க்கும் இடையிலும் உலக வரலாற்றில் பல குறிப்பிட்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. முதலாளித்துவத்தின் முற்றிய அசுர நிலையான பாசிஸம், நாசிஸம் போன்ற இயக்கங்களும் அதற்கு எதிரான சக்திகளும் உருவாகின. இதன் முற்றிய நிலையில் இரண்டாம் உலகப் பெரும் போரும் தோன்றியது. குடியேற்றநாடுகளைக் கொண்டிருந்த பிரித்தானிய பேரரசு தமது ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளுக்கு விடுதலை அளிக்கவேண்டிய நிலை தோற்றுவிக்கப்பட்டது. இத்தகைய தாக்கங்கள் இலங்கையில் பாதிப்பைத் தோற்றுவித்தன.

ஐரோப்பாவில் தோன்றிய பாசிஸ, ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வுகளை இங்கிலாந்தில் கல்வி கற்றுத் திரும்பிய இளைஞர்கள் இலங்கையில் பரப்பினர். மாத்தறையின் பிரபல மருத்துவரான டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹவும், லண்டன் பல்கலைக்கழகத்தின் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தத்துவ நெறியாளரான ஹெரால்டு லாஸ்கியின் பிரபல பொருளாதார மேதையின் மாணக்கரானவரும் பொருளாதாரத்தில் இரட்டைக் கலாநிதி பட்டத்தைப் பெற்றவருமான டாக்டர் என்.எம்.பெரேராவும், மற்றும் சட்டம் அரசியல் வரலாற்று மூதறிஞரும் கவர்ச்சிமிகு பேச்சாளருமான டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வாவும், இலங்கையின் பெரும் நிலக்கிழாரான சர். சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவின் மகனான ரிச்சர்ட் பண்டாரநாயக்க என்ற எஸ்.டப்ளியு.ஆர்.டி.பண்டாரநாயக்க என்ற பிரித்தானிய கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தமது பேச்சுத் திறனால் மாணவர் கழகத்தின் தலைவராகப் புகழ்பெற்ற அவரும், வேறு பலரும் இலங்கையின் சுதந்திர வேட்கையைப் பெருக்கியவர்களாவார்கள். இவர்களின் தாக்கத்தால் உருவானவையே சமசமாஜ, கம்யூனிஸ்டு, தேசிய காங்கிரஸ் போன்ற இலங்கை அரசியல் கட்சி அமைப்புகள். இவ்வமைப்புகளுக்குக் கேந்திர நிலையமாகவும் தூணாகவும் அமைந்தது இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரி.

அக்காலத்தில் இப் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைக் கழகத்தின் கிளையாகவே விளங்கியது. பிரிட்டிஷ் அரசியல் சட்ட நிபுணரான ஐவர் ஜென்னிங்ஸ் என்ற அறிஞர் தலைமைவகித்தார். பேராசிரியர்கள் மயில்வாகனம், சுந்தரலிங்கம் போன்றோரும், பி.கந்தையா போன்றோரும் நெறிப்படுத்திய மாணவர் மணிகளாகத் திழ்ந்தவர்கள், அநுராதபுரத்தில் பிரபல வழக்கறிஞராகத் திகழ்ந்த நடராஜா அவர்களின் மகன் மகாதேவா, இடதுசாரி இயக்கத்தில் புகழ்பெற்ற சண்முகதாசன், மு.கார்த்திகேசன், எஸ்.பி.அமரசிங்கம் (பிற்காலத்தே 'ட்ரிப்யூன் - Tribune' ஆசிரியர்), பிற்கால 'கேசரி' ஆசிரியர் நீர்வேலி எஸ்.கே.கந்தையா, வீ.கணபதிப்பிள்ளை ஆகியோராவார். இத்தகையோர் கூட்டுமுயற்சியினால் மாணவர் இதழ் "Students Journal" உருவாகியது. அதன் ஆசிரியர் பீடத்தில் மகாதேவாவும் கார்த்திகேசனும் செயலாற்றினர். இது மாணவர்களுக்கிடையேயும் அந்நிய அறிவுஜீவிகளிற்கிடையேயும் பிரபலமாகி இருந்தது. ஆசிரியபீடத்தினரின் ஆக்கமான பந்திப் பகுதியில் கார்த்திகேசன் 'Falstaff' என்ற புனைபெயரில் எழுதிய பகுதி ஆழ்ந்த நொடிப்பும் கிண்டலும் நிறைந்தனவாகவும் வாசகர்களின் ஆர்வத்தூண்டலாகவும் அமைந்திருந்தது.

வருணத்திற்குள் சாதி, சாதிக்குள் கிளைச்சாதி உருவானது போல் இடதுசாரிக் கட்சிகள் சமசமாஜ, போல்ஷ்விக் - லெனினிஸ்ட், புரட்சிகர சமசமாஜி, மூன்றாவது அகிலம் சார்ந்த ஸ்டாலினிஸ்ட், நான்காவது அகில ட்ரொட்சியிஸ்ட், கம்யூனிஸ்ட் மாஸ்கோ சார்ந்தவை, பீக்கிங் சார்ந்தவை என்ற சாதிபேதமற்ற நிலையில் பிரிவுபடாதிருந்த பொன்னான காலம். Guildford Crescent தெருவில் தற்போதைய லயனல்வென்ட் அரங்கம் அமைந்துள்ள இடத்திற்கு முன்பாக பல்கலைக்கழக கல்லூரி மாணவர் விடுதி முற்போக்குத் தமிழர் சிந்தனைக் களஞ்சியக் கூடமாகத் திகழ்ந்தது.

இத்தகைய அபூர்வகாலகட்டத்திலும் சூழ்நிலையிலும் எனது கொழும்பு அஞ்ஞாதவாச காலத்தில் மேற்குறித்தவர்களுடன் பழக வாய்த்தது. மெலிந்த உடல்வாகும் நீண்ட முகமும் ஒவ்வொரு உரையாடலிலும் நொடிப்பும் நகைப்பும் பொதிய மகிழ்வித்த கார்த்திகேசன் உற்ற அன்பரானார். அக்காலந் தொடங்கி அவர் மாஸ்டர் கார்த்தியாக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த காலம்வரை நீடித்திருந்தது.

கொழும்பு மாணவர்காலத்தில் அப்பொழுது நிலவிய பாசிஸ எதிர்ப்பு இலக்கியங்கள் குறித்து உரையாடுவோம். அவரது ஆழ்ந்த தீட்சண்ய ஆங்கில இலக்கிய ஞானம் வியக்கத்தக்கதாக இருந்தது. அவரது யாழ்ப்பாண ஆசிரியப்பணி காலத்தில் கார்த்தி மாஸ்டரிடம் ஆங்கிலப்பாட 'டியூஷன்' நாடி ஆவலுடன் நாடினவர் பலர். பாடங்களை எளிய முறையிலும் மாணவனின் ஆர்வத்தைத் தூண்டி ஐயங்களைப் போக்கி விளக்குவதில் திறனுடையவராகவும் காணப்பட்டார். இவறறை நான் யாழ்ப்பாணத்தில் சிறிது காலம் அவரது யாழ் ஆஸ்பத்திரிக்குப் பின்னாலுள்ள விக்ரோரியா ரோடு வீட்டில் உடன் தங்கி இருந்த காலத்தில் அறிய நேர்ந்தது.

1950ல் கல்கத்தாவில் நடந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டு கூட்டத்தில் ஒரு முக்கிய தீர்மானம் நிறைவேறியது. அதன்படி கட்சியின் பி.சி.ஜோஷி, செயலாளராக இருந்தவர், அவரது கொள்கைகள் மிதவாதப் போக்குடையவை என வாதாடிய பி.டி.ரணதேவைத் தெரிவு செய்ததில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது இலட்சியம் ஈடேற வன்முறையிலேனும் அரசின் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடி பாட்டாளி அரசை அமைக்கத் தீர்மானித்தது. அக்காங்கிரஸிற்கு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகச் சென்றிருந்தவர் மாத்தறை டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ. அம்மாநாட்டிற்கு தமிழ் நாட்டுக்கட்சியின் பிரதிநிதியாக நாவலர் ப.ஜீவானந்தமும் பங்குபற்றியிருந்தார். கட்சி எடுத்த தீவீர் தீர்மானத்தின் போக்கை உணர்ந்த இந்திய அரசு கட்சியைத் தடைசெய்து முக்கிய உறுப்பினர்களைக் கைதுசெய்து சிறையிலடைக்கும் சூழ்நிலை உருவாகும் என உணர்ந்த டாக்டர் விக்கிரமசிங்ஹ ஜீவாவைத் தம்முடன் தற்போதைய கொல்கத்தாவினின்று விமான மூலம் கொழும்புக்கு அழைத்து வந்தார். அக்காலத்தே இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளும் பிரிட்டிஷ் ஆட்சிக்குள் உட்பட்டிருந்தன. இன்றுபோல் குடியேற்றக் குடிவரவுக் கட்டுப்பாடுகள் நிலவவில்லை. விசா, கடவுச் சீட்டு கெடுபிடிகள் இருந்ததில்லை. எனவே பயணச்சீட்டு மட்டும் பெற்று ஜீவாவை கொழும்பிற்கு அழைத்து வந்துவிட்டார் டாக்டர் விக்கிரமசிங்ஹ.

அந்நேரம் அரசச் சட்டங்கள், அடக்குமுறைகள் அமுலாகவில்லை. எனவே ஜீவா கட்சி சார்பாக நடந்த கூட்டங்களில் இலங்கையில் பல ஊர்களில் அவரது சிம்மக்குரலைக் கேட்டு மகிழும் வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தது. இந்திய அரசும் டாக்டர் விக்கிரமசிங்ஹ கம்யூனிஸ்ட் கட்சியை அவசரச் சட்டமியற்றித் தடை செய்ததுடன் அதன் தலைவர்களைக் கைது செய்து சிறையிலும் அடைத்தனர். பலர் Under Ground எனும் தலைமறைவு வாழ்க்கை நடத்தினர். இத்தகைய சூழ்நிலையில் ஜீவா இலங்கையில் சில மாதங்கள் கழிக்க நேர்ந்தது. இடையே இந்தியக் கட்சி இவரது வருகையை வலியுறுத்தி இலங்கைக் கட்சிக்கு வேண்டுகோள் விடுத்ததன் பேரில் அவரை அக்கரையிற் சேர்க்கும் கடமை அமைந்தநிலையில் அக்கரைக்கு அவரை அனுப்பும் ஏற்பாட்டினை பல்கலைக்கழகக் கல்லூரியில் நூலகராகப் பணிபுரிந்த திரு.பி.கந்தையா விடம் தரப்பட்டது. தமிழகத்துச் சூழ்நிலை அனுபவமுள்ள ஒருவனாக என்னைக் கருதி உடன் அங்கு சேர்ப்பிக்கும் பணியில் என்னைக் கேட்டுக்கொண்டனர். கந்தையா அவர்கள் தாங்கள் யாழ்ப்பாணத்தில் எல்லா ஏற்பாடுகளையும், அங்கு மத்திய கல்லூரியில் பணிபுரிந்த ஆசிரியர் மகாலிங்கத்திடமும், மாஸ்டர் கார்த்திகேசனிடமும் அளித்திருப்பதாகவும் என் பணி அவரை அங்கு அழைத்துச் சென்று துணையிருந்து அக்கரைக்குச் சேர்த்து கையளிக்க வேண்டிக்கேட்டுக் கொண்டபடி முனைந்தேன். யாழ் புகையிரத நிலையத்திலிருந்து கார்த்திகேசனின் அகத்திற்கு கார்த்திகேசனும் மகாலிங்க மாஸ்டரும் எங்களை அழைத்துச் சென்றனர்.

ஜீவா திருநெல்வேலியிலிருந்த கட்சி உறுப்பினரான கொழும்புவாசி ரி. துரைசிங்கம் வீட்டில் தங்க, நான் விக்டோரியா றோட்டிலுள்ள கார்த்தி கேசனின் வீட்டில் தங்குவதாக ஏற்பாடு. இத்தகைய பணியின் சூழ்நிலையில் ஓரிரு திங்கள் அன்பர் கார்த்தியுடன் விடுபட்ட முந்தைய மாணவர்கால கலந்துரையாடல்கள் உடனிருந்து உரையாடி மகிழும் வாய்ப்பு அமைந்தது. அவரது இல்லத்தின் முன் அறையை எனக்கு ஒதுக்கியளித்திருந்தார். அங்கு தங்கி ஆஸ்பத்திரி வீதியிலிருந்த சுபாஷ் க.்.பே என்ற உணவகத்தில் உணவருந்தி, மாஸ்டர் மகாலிங்கத்துடன் மத்திய கல்லூரிக்கும் திருநெல்வேலியில் தங்கிய ஜீவாவுடனும் நடமாடும் நிலை அமைந்தது.

ஜீவாவை அக்கரையிற் சேர்க்கும் பணி நியமிக்கப்பட்ட நாட்கள் தடங்கி விட்டன. இந்தியாவில் அச்சமயம் சுயராஜ்யம் பெற்று நேரு முதல் அமைச்சராகவும், வல்லபாய் பட்டேல் உள்நாட்டு அமைச்சராகவும் இருந்து, இந்தியாவின் ஒருபகுதி பாகிஸ்தான் எனப் பிரிவுபட்டு உள்நாட்டுக் கலவரங்கள் தோன்றி பலர் மறைந்த நிலையில் மகாத்மாகாந்தி கொலை செய்யப்பட்ட காலம். தவிரவும் சமஸ்தானங்களான குறுநிலமன்னர்கள் இந்திய ஆட்சிக்கு உட்படாது தனித்தியங்கி ஆள முரண்டுபிடித்த நேரம். வல்லபாய் பட்டேலின் வலிய முயற்சியால் திருவிதாங்கூர், கொச்சி, போபால், காஷ்மீர், மைசூர் இசைந்து இந்திய அரசுடன் இணைந்து கொள்ள ஹைதராபாத் சமஸ்தான நிஜாம் ரஜாக்கார் என்ற குறுநிலமன்னன் குண்டர் படையினர் துணையுடன் எதிர்த்திருந்து அராஜகம் புரிந்த நிலையில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு இந்தியா யுத்த சூழ்நிலையில் அமைந்தது. எனவே இந்தியக் கரையோரப்பகுதிகளில் பலத்த ராணுவப்பாதுகாப்பு நிலை தோன்றியதால், கடலோர எல்லைப்பகுதிகளில் தலைப்படும் படகுகள் அனைத்தும் பரிசீலனைக்கு உள்ளாகும் எனும் நிலையில், இன்று நாளையென பல கிழமைகள் கழிந்தன.

அக்காலத்தே இன்றுபோல் யாழ்நகரில் தொலைபேசி வசதிகள் இன்மை யால் மத்திய கல்லூரி மகாலிங்கம் மாஸ்டர் வல்வெட்டித்துறை ஊர்ச்சபைத் தலைவர் திரு. திருப்பதியாரை அறிமுகப்படுத்தி பயண ஏற்பாடுகளை அறிந்து கொள்ளும்படி அறிவித்தபடி வல்வைக்கும் யாழ்நகருக்கும் பன்முறை சென்றபின் தமிழகத்துக் கடற் பகுதி ஹைதாரபாத் கலவரம் தீர்ந்ததால் தடையற்றுள்ளதாகவும் குறித்த நாளில் செல்ல வாய்க்கும் எனவும் அறிவிக்கப்பட்டது. ஒருவகையாக யாழ்வந்த ஓரிரு நாளில் முடியுமென எண்ணிய நிகழ்வு நீண்டுவிட்டது. ஜீவா காரைக்கால் அதிராம பட்டினத்தில் அங்கு காத்திருந்தவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு, சென்னைக்கு நான் சென்று, அச்சமயம் யாழ் நகருக்கு 30 ரூபாய் (என ஞாபகம்) கட்டணத்தில் காத்தி வீட்டின் அருகே இருந்த 'ஏர்சிலோன்' விமானப்பயணத்தில் திரும்பினேன். முன் குறித்தபடி கடவுச் சீட்டு விசா போன்ற

கெடுபிடிகள் இல்லாததால் வாய்த்தது. இத்தகைய பயணச் சுணக்ககாலத்தில் வசித்தகால இடைவெளி காத்தியின் பழக்கம் அவரது மேதாவிலாசம், ஆளுமை, எடுத்த செயலை இடையீடின்றி முடிக்கும் ஆற்றல், நேர்மை, தன்னலம் பேணாத்தகைமை ஆகியவற்றை உணரவாய்த்தது.

இவை அவரது மாணவகாலத்து நிகழ்ச்சி நினைவு, முன்னைய தொடர்பு நினைவுக்கு வருகிறது. இடதுசாரி இயக்கத்தில் பிற்காலத்தே பிரபலமாக இருந்த சண்முகதாசன் (சண்), காத்தியின் பல்கலைக்கழகத்து உடன்கால மாணவர். ஒருநாள் எனக்கு கொழும்பினின்று எஸ்.பி.அமர சிங்கத்தினிடமிருந்து தந்தி வந்தது. கண்டி புகையிரத நிலையத்தில் நாளை காலை வந்து சேரும் கொழும்பு கடுகதி வண்டியில் சந்திக்கவும் என்பது. மறுநாள் குறித்தபடி சென்றேன். கார்த்தியும் அமரசிங்கமும் ஒரு பெண்மணியுடன் இறங்கினர். இறங்கிய பெண் மாணவி சீதா, சண்ணைக் காதலித்து மணக்க இருப்பதாகவும், செல்வவான்களான பெற்றோர்கள் எதிர்ப்பதாகவும் இங்கு கட்டுகஸ்தொட்ட ராகுல கல்லூரியில் ஆசிரியர் பதவி பெற இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவ்வம்மணிதான் சண்ணின் முதல் மனைவியாரான சீதா விக்கிரமசூரிய. பெயரைக்கேட்டதும் தொடர்ந்து காத்தி நொடிப்புடன் உணர்த்தியது நினவு வருகிறது. ராவணனிடமிருந்து சீதையைக் காப்பாற்றிய அநுமானாகத் துணை கொடுத்தேன் என்றார். காத்தி சம்பந்தப்பட்ட இவ்விரு முக்கிய நிகழ்வுகளும் என் நெஞ்சில் இன்றும் பசுமையாக உள்ளன.

கே. கணேஷ்,
கட்சித் தோழரும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க ஸ்தாபகர்களில் ஒருவருமாவார்.

* * *

மு. கா. என்னும் மாமனிதன்!

ஷெல்லிதாசன்

ஆர்ப்பாட்டமற்ற
புன்சிரிப்பை இதயத்திலிருந்து வரவழைக்கும்
யதார்த்த அரசியல்வாதி!

புரியாத வார்த்தைகளுக்குள்
புதைந்து கிடந்த
பொதுவுடமை வைரத்தின்
மகிமையை
பாமரனும் புரியும்படி
எளிமையாக்கிப் பதியவைத்த
எங்கள்
மார்க்சிய ஆசிரியன்!

எங்கள்
இளமை இதயங்களில்
புதிய உத்வேகத்தை விதைத்து
சமதர்மப் பயிர்வளர்த்த
பாட்டாளித் தோழன்!

மு.கா.வின்
சீரிய வழித்தடத்தில் சென்றதால்
எங்கள் சிந்தனைகள்
இன்னும் செம்மை குன்றாது
தலைநிமிர்ந்து நிற்கிறது!

அந்த-
இனிய தோழரின் புன்சிரிப்பு
இன்றும் - ஏன் என்றென்றும்
எமது இதயங்களில்
ஒரு சிவந்த சூரியனைப் போல!

ஷெல்லிதாசன் (பி. கனகரத்தினம்),
திருகோணமலை.

முன்னாளில் யாழ் நாச்சிமார் கோயில் - கலட்டியில் தோழர் மு.கா வின் அயலில் வசித்ததோடு அன்னாரின் வழிகாட்டலில் வளர்ந்தவர்.

மக்கள் சேவையே கடவுள் சேவையென வாழ்ந்து காட்டியவர்

க. வாமதேவன்

அமரர் மு. கார்த்திகேசன் மாஸ்டர் புகழ்பூத்த கல்விமான்களில் ஒருவராவர். இந்த மண்ணில் வாழ்ந்து இவர் மறைந்து கால் நூற்றாண்டு காலம் சென்றுவிட்டது. நாம் இன்றும் எம்மோடு வாழ்பவராகவே கருதுகின்றோம். மாஸ்டரின் ஒவ்வொரு செயலும் நினைவாகவுள்ளது.

திரு. மு.கார்த்திகேசன் மாஸ்டர் எங்களுடன் அன்பாக உறவு கொண்டு விளங்கிய நாட்களை நாம் மீண்டும் நினைக்க நினைவுமலர் குழுவினர் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு முதலில் எனது பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து மகிழ்கிறேன்.

மாஸ்டர் ஆங்கில அறிவில் அதிகம் மேம்பட்டவராகவும், சாதாரண மக்களின் அன்றாடப் பிணக்குகள், தேவைகளை நிறைவு செய்பவராகவும் விளங்கி வந்ததுடன், மேடைகளில் நல்ல கருத்துக்களையும் பேசுவார். அவர் விடயத்தை விளக்கி வைக்கும் பாணி மிக மிக அபாரமாகும். ஒரு நாள் தான் செய்யும் சேவை பற்றி இவ்வாறு எடுத்துக் கூறினார், ''நான் மக்கள் பணியை கடவுள் பணியாகவே கருதுகிறேன். அவ்வாறே செய்கிறேன். என் சேவை மக்களுக்கு சென்றடைந்தால் அதுவே எனக்கு நிறைவாகும்.''

இந்த மண்ணில் வாழ்ந்த, வாழ்கின்ற பண்பாளர்கள், கல்விமான்கள், பொதுச் சேவையாளர்கள், ஆத்மீகவாதிகள் ஆகியோர்களுடன் பலவகைத் தொடர்புகளுடன் உறவாடி வாழும் சிறப்பைப் பெற்றவன் அடியேன். இந்த சிறப்புக்கு மூலகாரணமாக அமைந்தது எனது பத்திரிகைத்துறையேயாகும். அமரர் மு.கார்த்திகேசன் மாஸ்டரை நான் ஒரு தொண்டராகவும் கல்விமானாகவும் கண்டு மகிழ்ந்தேன். மிகவும் சாதாரண கோலத்துடன் வாழ்ந்து வந்த இவரது சிறப்பை இங்கு இரு சம்பவங்கள் மூலமாக தெரிவிக்க விரும்புகிறேன். சாதாரண மக்களின் அன்றாடப் பிரச்சனையில் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை நான் நேர்முகமாகக் கண்டேன்.

மக்கள் சேவை கடவுள் சேவை: ஒருவர் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி சிவன் கோவிலடியில் வந்து கொண்டிருந்தார். வந்தவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த கார்த்திகேசன் மாஸ்டரை மறித்து ''நான் உங்களை தேடித்தான்

வருகின்றேன். இந்தப் படிவத்தை நிரப்பித் தாருங்கள்" என்று வேண்டினார். அவ்வேளை ஆசிரியர் படிவத்தை வாங்கிப் பார்த்து விட்டு அவ்விடத்திலேயே நின்று அப்படிவத்தை நிரப்பிக் கொடுத்துவிட்டு உரிய இடத்தில் கொடுக்குமாறு கூறிவிட்டு சென்றார். அப்படிவத்தைக் கொண்டு வந்தவர் அவ்விடத்தில் கூறிய வார்த்தை இன்றும் என் மனதில் நினைவாக உள்ளது. ''மாஸ்டரைக் கொண்டு இவ்வேலையைச் செய்யாது விட்டால் எனக்கு நிறைவாக அமையாது. மாஸ்டர் மக்கள் சேவையை கடவுள் சேவையாகச் செய்து வருகின்றார்" என்று குறிப்பிட்டார்.

நீதவான் கொடுத்த மதிப்பு: இந்தச் சம்பவம் சித்தன்கேணி சந்தி தேநீர் கடையின் முன்பாக நடைபெற்றது. மாஸ்டர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் அதிபராக விளங்கிய நாட்கள். வீடு செல்வதற்காக பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நீண்ட காலமாக ஆசிரியராகக் கடமையாற்றி வந்த திரு.மு.கிருஷ்ணபிள்ளையின் (தற்போதும் வாழ்கின்றார், வயது 84) துவிச்சக்கர வண்டியில் சித்தன்கேணி சந்திக்கு வருவது வழமை. வந்து சந்தியிலுள்ள தேநீர் கடையில் தேநீர் அருந்தி ஒரு சுருட்டையும் பற்றிய வண்ணம் அந்தக் கடை முதலாளி இருக்கும் ஸ்ரூலில் இருப்பது வழக்கம். அவ்வேளை அங்குள்ளவர்களுடன் பல்வேறு விடயங்களைப் பற்றி பேசிய வண்ணமாக இருப்பார். பஸ் வரும் நேரம் பார்த்து தெருவிற்கு வருவார். அவ்வேளை அதுவரை ஒரு மாநாடு நடந்து முடிவடைந்தது போன்ற உணர்வை எமக்கு கொடுத்திருக்கும். பலர் தம் அறிவுப்பசிக்கு இரை கிடைத்த நிறைவு பெற்றவர்களாகவும் இருப்பர்.

ஒருநாள் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதியாக விளங்கிய திரு. விஸ்வநாதன் தமது கடமையை முடித்து வீடு செல்வதற்காக தமது மோட்டார் வாகனத்தில் வீதியால் வந்தவர் மாஸ்டரைக் கண்டதும், தமது மோட்டார் வாகனத்தை அவ்விடத்தே நிறுத்தி விட்டு உடனே இறங்கி வந்து, ''மாஸ்டர் நான் உங்களைக் கொண்டு போய் வீட்டில் இறக்கி விட்டுச் செல்கின்றேன் வாருங்கள்" என்று கேட்டார். மாஸ்டர் நீதிபதியின் வாகனத்தில் ஏறி வீடு சென்றார். இருவரும் கல்லூரிச் சகபாடிகளாக கல்வி கற்றவர்கள் என்றும் நீதிபதிக்கு ஆங்கில போதனைக்கு உறுதுணையாக கார்த்திகேசன் மாஸ்டர் இருந்தவர் என்றும் பின்னர் அறிந்தேன்.

மக்கள் பணி கடவுள் பணி என்று கூறி கார்த்திகேசன் மாஸ்டர் குரல் எனது நெஞ்சில் பதிவாக இருப்பது போல், இவருடன் தொடர்பு கொண்ட யாவரும் இவரை மறக்க மாட்டார்கள். இவரை என்றும் நினைவு கூர்ந்து இன்புறுவோம். அன்புதான் இன்ப ஊற்று.

திரு. க. வாமதேவன் ***J.P.,***

பத்திரிகையாளரும், பண்ணாகம், சுளிபுரம் வாசியுமாவார்

கடைசி அடி

ஒரு தடவை யாழ் இந்துக்கல்லூரியில் கார்த்திகேசன் வகுப்பு நடாத்திக் கொண்டிருக்கும் போது, அந்தக்கால சகல வழமைகளையும், முறைகளையும் கடைப்பிடித்து ஒரு பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்தது. பறை மேளம் முக்கிய அம்சமாகவும், இடைஇடையே நிறுத்தி அமர்க்களமாக காதுபிளக்க அடிக்கப்பட்டு சென்று கொண்டிருந்தது. மாஸ்டர் ஏற்கனவே இவற்றில் நம்பிக்கை யில்லாதவரும், அதேவேளை அந்தச் சத்தம் பாடத்தைக் கொண்டு நடாத்த அனுமதிக்காததும் அவருக்கு விரக்தியைத் தந்தது.
அதுவரை காதை இறுகப் பொத்திக் கொண்டிருந்த மாஸ்டர், மேளம் அடித்து ஓய்ந்த போது கூறியது, ''கடைசி அடியும் அடிச்சுப் பார்த்திட்டாங்கள், ஆளை எழுப்ப முடியுமாவென்று!".

கார்த்திகேசன் ஒரு உயர்ந்த மனிதன்

E. K. சதாசிவம்

வெள்ளரிக் கொடி போல் உயர்ந்த மனிதன். நான் அறிந்த கார்த்திகேசன் உயரத்தால் மட்டுமல்ல குணத்தாலும், நடத்தையாலும் உயர்ந்த மனிதன் அவர். மனிதனென்ற சொல்லுக்கே இலக்கணமாகத் திகழ்ந்தவர் கார்த்திகேசன். ஒரு ஆசிரியரான நான் கூட்டங்கள், கருத்தரங்குகள் யாழ் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடத்தப்படும் போது பெருவிருப்புடன் செல்வதுண்டு. நானறிந்த உயர்ந்த மனிதனின் படத்தை ஒருமுறை பார்க்க கிடைக்குமே என்ற நினைப்புடன்.

நான் வாழ்ந்த காலத்திற் காணாத ஆனால் காணவிரும்பிய ஒரு மனிதனை இந்த உயர்ந்த மனிதனிற் கண்டு திருப்தியுற்றேன். இந்தியாவின் மாநில முதல்வராக நான்கைந்து முறை தெரிவு செய்யப்பட்டு அப்பதவி வகித்த ஜோதி பாசு தனது முதல்வர் காலத்தில்கூட ஒரு சைக்கிளிற்கும் ஒரு சில நாலுமுழ வேட்டிகளுக்கும் மாத்திரமே சொந்தக்காரராக இருந்தார். அவர் மாடமாளிகையில் வாழவில்லை. சாதாரண ஒரு அறையிலேயே வாழ்ந்தார். கம்யூனிஸ்ட் என்றால் வாழ்க்கைத் துறவி என்று சொல்லக்கூடிய வகையில் வாழ்ந்தவர் ஜோதி பாசு. அது போலவே நான் அறிந்த உயர்ந்த மனிதன் கார்த்திகேசனும், ஒரு ஏழையல்லாத போதிலும் ஒரு உண்மையான கம்யூனிஸ்ட் என்ற காரணத்தால் எளிமையாக படாடோபமற்ற வாழ்க்கை வாழ்ந்தார்.

உழைத்ததைச் சேமிக்கவோ தேட்டம் தேடிக் கொள்ளவோ பயன்படுத்தவில்லை. பசித்தவனுக்கும் படிப்பைத் தேடி அலைந்தவனுக்கும் வேண்டியதைக் கொடுத்து உதவினார். அதனையும் வலது கை கொடுப்பதை இடது கை அறியாதவாறு செய்தார் அந்த உயர்ந்த மனிதர்.

கார்த்திகேசனைக் கண்டால் வியட்நாம் தலைவர் ஹோ சி மின் அவர்களும் நினைவுக்கு வருவார். இவ்வாறு தெரியாத மனிதரை தெரிந்த மனிதனிற் காண வழிவகுத்தார் உயர்ந்த மனிதன் கார்த்திகேசன்.

அவரின் நினைவாக அவரைப் போலவே நானும் ஷேட் கையை மடிக்காது நீளமாகவே விட்டுக் கொள்வேன். அவரைச் சந்தித்த வேளைகளில் அவருடன் குடித்த பிளேன் டீயை இன்றும் மறக்க முடியவில்லை.

எளிமையும், அன்பும், ஆதரவும், பாரபட்சமின்மையும், தனது கஷ்டத்திற்கு தலை வணங்காத் தன்மையும் கொண்ட இந்த உயர்ந்த மனிதனின் வாழ்க்கையில், நான் கண்ட ஒரு சில சம்பவங்கள் அவர் உண்மையில் ஒரு உயர்ந்த மனிதன்தான் என்று எடுத்துக் காட்டும்.

அவர் ஆசிரியர்களைக் கடிந்து கொள்வதேயில்லை. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்க்கைப் பிரச்சினையையும் நன்கு உணர்ந்து கொண்டவர். ஒருமுறை பாடசாலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த போது ஆசிரியை ஒருவர் வகுப்பில் களைத்து தூங்கி விட்டதைக் கண்டார். கண்டவர் வகுப்பறையினுள் நுழைந்து நீங்கள் களைத்து விட்டீர்கள் போலிருக்கிறது, நீங்கள் ஓய்வெடுங்கள் நான் வகுப்பெடுக்கின்றேன் எனத் தானே அந்த வகுப்பை எடுத்தார். இவ்வாறு ஆதரவும் அன்பும் காட்டி ஆசிரியர்களைக் கொண்டு நன்கு வேலை செய்வித்தார். தானும் ஆசிரியர்களுள் ஒருவராய் இருந்து கடமையாற்றினாரேயொழிய அதிபர் என்ற மிடுக்கோடு நடந்து கொள்ளவில்லை. போக்குவரவின் போது பஸ்ஸில் ஆசிரியர்கள் எழுந்து இடம் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளாது கையமர்த்தி அவர்களை இருக்கச் சொல்லி விடுவார்.

ஒருமுறை கல்வி அலுவலகத்திற்கு இவர் தனது மகளின் அலுவல் காரணமாகச் சென்ற போது குறிப்பிட்ட உத்தியோகத்தர் இவரது மகளின் கோவை (file) பிறர் கோவைகளுக்கு மேலே எடுத்து வைத்து அலுவல் பார்க்க முற்பட்டபோது அவ்வாறு செய்ய வேண்டாமெனத் தானே கைகாட்டித் தடுத்தார். லீவு முதலிய விடயங்களில் நேர்மையாக நடந்து ஆசிரியர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினார்.

மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட போது வாக்குச் சேகரிப்பில் சென்ற சமயம் சிலர், ''மாஸ்டர் நீங்கள் நல்லவர், ஆனால் கட்சி கூடாது'' என்றார்கள். அதற்கு இந்த உயர்ந்த மனிதன், ''நீங்கள் என்னை நல்லவன் என்கிறீர்கள், நல்லவன் எப்பொழுதும் நல்ல இடத்திற்தான் நிற்பான். ஆகவே நல்லவன் நிற்கும் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சியும் நல்லதாகவே இருக்கும்'' எனக் கூறியே சில இடத்தில் வாக்குச் சேர்த்துக் கொண்டார்.

அவரிடம் ஆங்கில இலக்கியம் படிக்கும் நோக்கத்துடன் அவரது வீட்டிற்குச் சென்றேன். படிக்கச் சென்றதற்காக ஒரு ஆங்கிலக் கவிதையை படிப்பித்து விட்டு, ''மகாலிங்கம் மாஸ்டரிடம் ஒழுங்கு செய்து விடுகிறேன், சரியாக

மூன்று மணிக்கு வாருங்கள்"என்று குறிப்பிட்ட இடத்திற்கு வரச் சொன்னார். ஆனால் நான் 10 நிமிடம் தாமதமாகச் சென்றதால் நான் படிக்கும் வாய்ப்பை இழந்தேன். நேரம் தவறாமையையும் அவர் பெரிதும் கடைப் பிடித்தார். ஒரு தடவை அந்நாள் கல்வியதிகாரி மன்சூரைச் சந்திக்கச் சென்ற போதும் நேரம் தவறாது குறிப்பிட்ட நேரம் அவ்விடத்தில் நின்றார்.

''ஏறேறு சங்கிலி இறங்கிறங்கு சங்கிலி
சிங்கக் கொடியிறங்க செங்கொடி ஏறவேண்டும்" என்பார்.

கலகலவென்று பேசும் அவர் பொது நிகழ்வுகள், மேடை என்பவற்றில் அதிகம் பேசாது அமைதியாக இருப்பார்.

உள்ளும் புறமும் ஒன்றான எளிமையானவர். நீதி நியாயம் என்பனவற்றிற்கு கட்டுப்பட்டவர். நேர்மையானவர். இவரது இயல்பிற்கும் குணநலனிற்கும் திறமைக்கும் இவர் இருந்திருக்க வேண்டிய இடம் வேறு. மக்கள் அவற்றை மேலும் தமக்குப் பயன்படுத்திக் கொள்ள சந்தர்ப்பத்தை அவருக்குக் கொடுக்கவில்லை.

கார்த்திகேசனை நான் இன்றும் அடிக்கடி நினைத்துக் கொள்வேன். என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் இரண்டு கம்யூனிஸ்ட்தான் இருந்தார்கள். ஒருவர் கார்த்திகேசன், மற்றவர் இராமசாமி ஐயர். யாழ்ப்பாணத்தில் இவர்கள் இருவராலும்தான் கம்யூனிஸம் மணத்தது.

E. K. சதாசிவம்,
இளைப்பாறிய ஆசிரியர்,
உயரப்புலம் மெதடிஸ்ட் மிஷின் பாடசாலை,
கொள்கை ஈடுபாட்டால் பரிச்சயமானவர்

* * *

கார்த்திகேசன் ஓர் அறிவாளி

தி. மாணிக்கவாசகம்

இக் கட்டுரையை ஆண்டில் இளமையும் அறிவில் வறுமையையும் படைத்த நான் சமர்ப்பிக்கிறேன்.

இலங்காபுரி என்பது ஒரு சிறப்பான நாடு ஆகும். இந்த இலங்காபுரி ஒன்பது மாகாணமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த ஒன்பது மாகாணத்தில் ஒன்றான வடமகாணத்தில் யாழ்ப்பாணம் ஒரு குடாநாடு. யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியே வட்டுக்கோட்டையாகும். இந்த வட்டுக்கோட்டை என்னும் ஊர் பல வழியிலும் சிறந்த ஊர் ஆகும். அந்தக் காலத்தில் இற்றைக்கு நூறு ஆண்டுகட்கு முன்னர் இங்கு யாழ்ப்பாணக்கல்லூரி நிறுவப்பட்டது. அப்பேற்பட்ட சிறந்த ஊரைச் சேர்ந்தவர்தான் கார்த்திகேசன் அவர்கள். இவர் யாழ் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இவர் ஒரு (கம்யூனிஸ்ட்) பொதுவுடமைவாதியாவார். இவர் ஒரு பட்டதாரி ஆவார். கார்ல் மாக்ஸ், லெனின், ஸ்ராலின், ரொட்ஸ்கி முதலியவர்களின் நூல்களை வாசித்தவர். ஆங்கிலம் நன்கு கற்றவர். சிறந்த அறிவாளி. டாக்டர் விக்கிரமசிங்ஹ, முன்னைநாள் மந்திரி பீற்றர் கெனமன், முன்னைநாள் பருத்தித்துறை பா.உ. பொன்னம்பலம் கந்தையா என்பவர்களின் நண்பர் ஆவார். பரிணாம வளர்ச்சிக் கொள்கையைப் பற்றி நன்றாக அறிந்தவர் ஆவார். யாழ்ப்பாணத் தொகுதியில் 1956ம் ஆண்டு போட்டியிட்டவர் ஆவார். 1959ம் ஆண்டு கொங்கோ பிரதமர் பற்றிக்ஸ் லுமும்பா இறந்தபோது "Patricks Lumumba - Flame of Freedom" என்னும் கவிதைத் தொகுப்பை வெளியிட்டவர் ஆவார். இவர் கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி, பண்டத்தரிப்பு கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் ஆவார். கம்யூனிஸ்ட கட்சிக்கூட்ட மேடைகளில் வடபகுதி எங்கும் பேசுவார். பொது மக்களுடன் அன்பாகப் பழகுவார். இப்பேற்பட்ட சிறந்த தலைவரை நாம் பாராட்டுவோமாக.

இன்றைய செய்தி நாளைய வரலாறு ஆகும். ஆகையால் திருவாளர் மு. கார்த்திகேசன் அவர்கள் வாழ்நாளில் ஆற்றிய கல்விச்சேவை மக்கட்சேவை எல்லாவற்றையும் வரலாற்று ஏட்டில் பதிப்போமாக.

தி. மாணிக்கவாசகம்,
உசனை வளவு, தும்பளை, பருத்தித்துறை வாசியாவார்.

Flame of Freedom

M. Karthigesan

Where ape had first raised its head
to stand up as man
And the lording alien had whip-lashed him
to stoop again,
Out of the darkness and despair
of decades on end
Flashed Lumumba, flame of Freedom,
Scorching forest and savanna,
fox-hole and uranium mine,
Smoking out the white ant
for the black man to rule.

But turning on their tracks lit up
for the whole world to see,
Belgium's Baudoin and his bloated beasts,
Kasavubu's skunks and Katanga's jackals
Snuffed out the flame and sniffed at the flesh.

The flesh is dead: but the flame only flickered
To burn more fiercely in the hearts of millions
Who, with steel tempered in grief and swords
whetted on revenge,
Will hammer (the) shield of imperialism
And, Paul Robesons all, proclaim the voice
of Lincoln's America—
From out the stripes of slavery shall emerge
the stars of freedom!

This poem was written by M.Karthigesan, when he compiled Poems of Patrice Lumumba, Prime Minister of the Congo, who fought and died at 35.

மனித குல மாணிக்கம்

வீ. சிவானந்தன்

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டர் என்ற கொள்கைவாதியைப் பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருந்தேன். அவருடன் அளவளாவ வேண்டும் என்ற விருப்பம் நெடுநாட்களாக இருந்தது. ஒருநாள் தற்செயலாக வீதியில் அவரைக் கண்டபோது அவருடன் பேசும் வாய்ப்பு ஏற்பட்டது. பேசுகையில் எனது தொழிலையறிந்து, தற்பொழுது எங்கு கற்பிக்கிறீர் என வினாவினார். அந்நேரம் செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று இருப்பதாகக் கூறியபோது, தனது சகோதரன் அங்கு இலங்கை வங்கியில் முகாமையாளராகக் கடமையாற்றுவதாகக் கூறி அவரை அறிமுகப்படுத்துவ தால் எம்மிருவருக்கும் நல்லது என உடனடியாக அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்று என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவரது அந்த அறிமுகத்தால் பின்பு நானே பெரிதும் பயனடைந்தேன். இதுதான் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டருடன் ஏற்பட்ட முதற் சந்திப்பு. இதுவே அவரது நற்குணங்களை உடனடியாக எடுத்துக்காட்ட ஏதுவாக அமைந்தது.

கார்த்திகேசன் மாஸ்டர் ஐயா அவர்கள் மனிதாபிமானமும் மனிதநேயமும் படைத்தவர். யாருக்கும் எந்த நேரத்திலும் உதவி புரியும் மனம் கொண்டவர். தலை சிறந்த கல்விமான், தலை சிறந்த ஆசிரியர், கலைஞன், கலைப்பிரியன் என பல அம்சங்களடங்கிய முழுமையான மனிதனாக வாழ்ந்தவர். தனக்கென வாழாப் பிறர்குரியாளன்.

அவர் ஒடுக்கப்பட்ட, நலிந்த, உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களுக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். மென்மையான இதயம் கொண்டவர். அவரது சொல்லும் செயலும் ஒன்று என்பதை அவரது நடவடிக்கைகள் மூலம் எடுத்துக்காட்டியவர். பாரதியார் கூறியது போல ''அச்சம் இல்லாத கொள்கை வீரன்". அவரது நிமிர்ந்த நடை அவரைப் பெரியவர் எனக் காட்டும். தன்னைப் போல் பிறரையும் நேசித்தவர். காந்தியடிகள் கூற்றுப் போல, ''ஒருவனது பிழையான கொள்கைகளையே எதிர்க்கிறேன், அவனையல்ல" என்றவாறு மனிதர்களை நேசித்தவர், ஆனால் தவறான கொள்கைகளை எதிர்த்தவர். அவரது வாழ்க்கை ஒரு வையத்து வாழ்வாங்கு வாழ்பவனுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அவரது கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம் மனித சமுதாயம் மேன்மையுறும். அவரைப்பற்றி சிறியேன் பக்தி மேலீட்டால் எழுத வாய்ப்புக் கிடைத்தமைக்கு, அவர்களின் கொள்கைகளைப் போற்றி ஏற்றி அதன்படி வாழும் மலர்க்குழுவினர்க்கு எனது இதயம் கனிந்த நன்றிகள்.

வீ. சிவானந்தன்,
அதிபர், யாழ். சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை

எம். கார்த்திகேசன்

குகன்

தலைவர்களும் வழிகாட்டிகளும் எந்தவொரு அமைப்பிற்கும், சமூகத்தவருக்கும், இனத்திற்கும் இருப்பதுண்டு. இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைப்பட்டவர்களாக இருப்பார்கள். தேர்தல் வோட்டுகளுக்காக வாக்குகளை அள்ளி வழங்குபவர்கள், தலைமைக்காக அறிக்கை விடுபவர்கள், மக்களின் சாதாரண உணர்வு மேலீட்டை சாதகமாக்கி அரசியல் பிழைப்பு நடாத்துவோர், மக்கள் எதை விரும்புகிறார்களோ, எதை ஏற்பார்களோ அதைக் கூறுபவர்கள் எனப் பலவகை. இப்படியான எந்த வகைக்குள்ளும் அடங்காமல் யதார்த்தமாகப் பேசி உண்மையாக நடப்பவர்களை சமூகம் உடனடியாக அறிந்து கொள்வதுமில்லை, புரிந்துகொள்வதுமில்லை. இது காலகாலமாக நடக்கும் விபரீதமாகும். இதற்குக் காரணம் மக்களில் பெரும்பான்மையானவர்களின் அறிவு மட்டமேயாகும்.

நான் எம் கார்த்திகேசனிடம் படிக்கும் வாய்ப்பைப் பெற்றவனோ அல்லது நெருங்கிப்பழகி அவரது அர்த்தமிக்க வார்த்தைகளைக் கேட்டவனோ அல்ல. ஆனால் அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அதிபரானபோது அங்கு கற்ற வாய்ப்பை மட்டும் பெற்ற பாக்கியசாலி. அவர் பற்றிப் பிறர் பேசக் கேட்டதிலிருந்து அவர் நான் முன்பு குறிப்பிட்டவர்களில் இறுதி வகையைச் சேர்ந்தவர் என்பது மட்டும் திண்ணம். அவர் எளிமையான, தோழமைமிக்க ஒரு மனிதன். மற்ற அதிபர்களைப்போல் அவர் காரில் வந்ததில்லை. ஆனால் கல்லூரி ஒழுங்காகவே இயங்கியது. கல்விமானாகவும் காந்தீய பற்றாளனாகவும் ஈழநாடு பத்திரிகையின் ஆசிரிய தலையங்கமான நமது நோக்கின் மூலமும், கண்டிப்பின் மூலமும், தனது இருமொழியாற்றலால் தனி நடைபோட்ட என். சபாரட்ணம் இளைப்பாறிய போது, எம் கார்த்திகேசன் பதவியேற்க கல்லூரியில் ஒரு குலுக்கமோ நடுக்கமோ ஏற்படவில்லை. அதிபர் வருகிறார் என்று பயந்து ஓடி ஒதுங்கியவர்கள் குறைந்திருக்கலாம் அல்லது கடவுள் நம்பிக்கையற்ற ஒரு கொள்கையால்

கவரப்பட்டவர் இந்துக்களின் கல்லூரியில் அதிபராக இருப்பதை பக்குவமில்லா சன்னியாசிகள் ஜீரணிக்காத ஒரு நிலை இருந்திருக்கலாம். ஆனால் குறைகள் எதுவுமிருக்கவில்லை. அவர் எம் கார்த்திகேசனாக எமது தோழனாக எளிமையாக இருந்தார். அவருக்குத் தண்டிக்க கைப்பிரம்பு தேவைப்படவில்லை. அதற்குப் பதிலாக தனது அதிவிசேஷ திறமையான நகைச்சுவைத் தன்மையைப் பயன்படுத்தினார். அவருக்கு அந்தஸ்தையும் அதிகாரத்தையும் காட்டி தனக்கும் மாணவர்க்கும் இடையே இடைவெளி யொன்றை வைத்துக்கொள்ள வேண்டிய அவசியமேற்படவில்லை. அவர் மயிலேறிப் பறந்த கந்தனோ, கடம்பனோ, கார்த்திகேயனோ அல்ல. சாதாரண சயிக்கிளில் தினமும் பாடசாலைக்கு வந்த ஒரு மனிதன். மனிதக் கந்தன் உயர்திணை;. வெளவால் அ.்.றிணை; கந்தன் கோவிலிற்குள் போகமுடியாது; ஆனால் வெளவால் போகலாம் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் நிலையை தெட்டத் தெளிவாக எடுத்துரைத்த ஒரு மனிதன்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் வரலாறானது, அதன் நூற்றாண்டுவிழா மலரில் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.ச.சத்தியசீலனால் எழுதப்பட்ட அதிபர்கள் பற்றிய குறிப்புக்களில் கீழ்க் கண்டவாறு கூறியிருந்தார்:

1971 இல் திரு.ந.சபாரத்தினம் ஓய்வு பெறவே கல்லூரியில் திறமைமிக்க ஆசிரியராக இருந்த திரு.எம்.கார்த்திகேசன் கல்லூரி அதிபர்(1971) பொறுப்பை ஏற்றார். அவர் சார்ந்து இருந்த அரசியல் அடையாளம் காரணமாக ஒரு நல்ல அதிபரை இந்தக் கல்லூரி இழந்துவிட்டது.

அதே மலரில் நீண்ட நாள் ஆசிரியரான திரு.கே.சிவராமலிங்கம் அதிபர்களை வரிசைப்படுத்தி எழுதும்போது குறிப்பிட்டதும் அதுவே.

மேற்கண்ட குறிப்புக்கள் ''எங்கட கார்த்திகேசன்'' என பேசப்பட்ட எம் (எமது) கார்த்திகேசனைப் பற்றியறியப் போதுமானவையாகும். ஆக சோக்கிரட்டீஸையும், யேசுவையும், காந்தியையும் போல கார்த்திகேசனையும் சாமான்யர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமையே அவர் சிறப்பிற்கான சான்றிதழாகும்.

குகன்,
யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவன்,
ரொரன்டோ, கனடா

* * *

கார்த்திகேசன் மறைவின் கால் நூற்றாண்டு நினைவு மலர் வெளியீடு

நிஸாம்

இரண்டாயிரத்து இரண்டாம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 'தினக்குரல்' இல் மேற்காணும் தலையங்கத்தையும் எங்களால் என்றும் மறந்திட முடியாத கம்பீரமான முகத்தையும் கண்ட கணமே இதை வரைய வேண்டுமென்று எண்ணினேன்.

1950 தசாப்தத்தில் நான் யாழ் இந்துக்கல்லூரியில் ஒரு விடுதி மாணவனாகக் கல்வி பயிலுங் காலத்தில் எங்கள் வகுப்பு ஆங்கில ஆசிரியராகவிருந்த திரு.மு.கார்த்திகேசனிடம் சனி ஞாயிறுகளில் கணிதம், ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்களுக்காக அக்காலத்தில் அவர் குடியிருந்த நாச்சிமார் கோயிலடி வீட்டுக்கு வாடகைச் சைக்கிளில் நான் வந்து போவதுண்டு.

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த என்னை யாழ் இந்துக்கல்லூரியில் சேர்த்து வைத்து அவரின் இடதுசாரி இயக்க நண்பராகிய கார்த்திகேசன் மாஸ்டரை அறிமுகம் செய்து வைத்தது யாழ்ப்பாணம் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையில் வாழ்ந்த S. கந்தசாமி B. A. மாஸ்டர் ஆவார். அன்னார் சில வருடங்களுக்கு முன் கனடாவில் காலமானார்.

அக்கால எங்கள் S.S.C (Arts) வகுப்பிற்கு ஆங்கில ஆசிரியராகக் கார்த்திகேசன் மாஸ்டர் இருந்தார். கார்த்திகேசன் மாஸ்டர் வாய்கேட்டு, செயல் கண்டு சுவைத்து மகிழ்ந்தவொரு சம்பவத்தை இங்கு அறியத் தருகிறேன்.

கல்லூரியிலும் எங்கள் வகுப்பிலும் பல சிங்கப்பூர் பென்சன்காரர்களின் புதல்வர்கள் கல்வி பயின்றனர். அவர்களில் ஒருவர் கொஞ்சம் புரளிக்காரப் பிள்ளை. கொடுக்கப்படும் வீட்டு வேலைகளை வேளைக்குச் செய்து கொடுக்கமாட்டார். வகுப்பிலும் கொஞ்சம் குழப்படி. ஒரு நாள் வகுப்பில்

கார்த்திகேசன் மாஸ்டர் கேட்ட ஏதோ ஒரு கேள்விக்கு உடனே பதில் கொடுக்காமல் சிரித்துக் கொண்டும், இளித்துக் கொண்டும் இருந்தார். மாஸ்டருக்கு தாங்கமுடியாத கோபம் வந்தாற் போல், சட்டென்று எழுந்து நின்று, ஏதோ தனக்குள் முணு முணுத்துக் கொண்டு, தனது கைகள் இரண்டையும் ஒரு குத்துச்சண்டை வீரரின் பாணியில் இறுகப் பொத்திக்கொண்டு மாணவனை முறைத்துப் பார்த்த வண்ணம், இரண்டு மூன்று எட்டுக்களில் தாவிப்பாய்ந்து, மாணவனை அணுகி, நன்றாகக் குறி பார்த்து, ''நீ ஒரு பூரான் போல இருக்கு'' என்று சொல்லிக் கொண்டே, உறுமிய வண்ணம் (அதற்கிடையில் இரண்டு மூன்று Peacock Cigarette இருமலும் கூட), மாணவனின் தோளில் ஒரு நல்ல இடி கொடுத்தார். நாங்கள் பயத்தினால் நடுங்கி விட்டோம். ஆனால் மாணவனோ ஒன்றும் செய்யாது தன்பாட்டில் சிரித்துக் கொண்டேயிருந்தான். கார்த்திகேசன் மாஸ்டரும் ''சிங்க...ப்...பூரான்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே தனது ஆசனத்தில் போய் அமர்ந்தார். அப்போது தான் எங்களுக்குத் தெரிய வந்தது மாஸ்டர் கையோங்கிய அளவிற்கு shot connect ஆகவில்லையொன்று. மாஸ்டரும், மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து குலுங்கச் குலுங்கச் சிரித்து விட்டு பாடத்தைத் தொடர்ந்து செய்துகொண்டு போனோம். அந்த மாணவன் பிற்காலத்தில் கொழும்பு நீதிமன்றத்தில் ஒரு சட்டத்தரணியாக கடமை புரிந்தார்.

நிஸாம்,
மாஸ்டரின் அன்புள்ள மாணவன்,
Retired DIG, Police

* * *

Cherished Memory of "Karthi"

P. Balasubramaniam

Introduction

Mr.M.Karthigesan an eminent teacher of Jaffna Hindu College is affectionately known openly as "KARTHI" among his students with due respect but without his knowledge. So, being a very close student of his, I too used this nickname with love, much affection and high respect.

Mr. Karthigesan was a full-time member of the Ceylon Communist Party and was the editor of the party weekly journal "FORWARD" published in Colombo and circulated all over the Island. In order to build the party in the North, he was sent to Jaffna as the most suitable person to handle such an arduous task. He came to Jaffna entirely for this purpose presumably during the late forties and commenced his assignment. It is needless to mention at this juncture that Jaffna was a society with strong beliefs, caste consciousness, superstitious inclination and reactionary notions. Hence breaking through such a set up was a Herculean task. While engaging himself in this unprecedented task which was quite strange to Jaffna's population, Mr. Karthigesan had to find ways and means to keep his home-fires burning as well since he had a heavy family responsibility, in addition to his political activities.

Teaching Profession

Although the efficiency and eligibility of Mr. Karthigesan to be a model teacher was well recognized in the educational sector of Jaffna, all were very reluctant to have him as a member of their teaching staff since he had espoused Communism and they therefore feared that he would entice the younger generation to embrace communist ideas thus causing damage to religious beliefs. Nevertheless the educationists in the peninsula did not want to miss his services knowing well his capability to serve as a teacher. Since they could not come to a firm conclusion even after much contemplation and deliberation, it is reliably understood that they approached 'Yogar Swami' who responded quite favourably by stating that although Mr. Karthigesan was a communist, he was quite fit to educate students to the satisfaction of the management and encouraged the representative to absorb him in to the teaching profession. It is learnt that Mr. Karthigesan was taken-on as a teacher at Jaffna Hindu College on this advice.

Trade Unionism

He played a vital role in the 1947 strike by Govt. servants and the famous 'Hartal' of August 1953 which shook the whole country, exhibiting the strength of the working class and the common masses.

Elections

Mr. Karthigesan contested the election of the Jaffna Municipal Council during early fifties, against the Tamil Congress stalwart, Mr. T.S. Durairajah. The Jaffna community, at that time, was adverse to Communism, following the malicious propaganda of the capitalists and reactionary class to the effect that communists were anti religious, anti-caste etc. Such sinister propaganda, the aggressive war embarked on by the Americans against Vietnam and their lackeys who were deadly against Communist movement added fuel to the burning fire, thus making the innocent people to believe that communists were blood-hounds because their color is red, murderers because their sympol is hammer & sickle and their

leaders are fierce looking, Marx with spreaded beard, Angels with long beard, Stalin with a long mustache, Lenin with a short beard and so on. Such treacherous propaganda could be easily instilled into the innocent minds of the masses. In fact his own students could not resist such propaganda and thereby Mr. Karthigesan inevitably suffered defeat.

It was after this unfortunate defeat of Mr. Karthigesan, that we students of Jaffna Hindu College came in close contact with him as we gradually matured when we reached upper classes in school and had opportunity to study in the classes of Mr. Karthigesan. During that time we were not quite conversant with the English Language to read and understand the philosophy of Marxism well, in view of the fact that Marxist literature were mostly available only in English and the books translated from Russian Language were not comprehensible to us.

During the fifties, Master contested the Jaffna Municipal Council Election for the second time. During this period almost all of us were employed. About a fortnight prior to the election we all arranged among ourselves and came to Jaffna. We were fully aware of the financial position of Master. So we pooled our financial resources from our meager salaries and met the expenditure for pamphlets, flags, banners, paints, car hire, etc. while applying ourselves fully and tirelessly until the election was over and hearing that we had won the election.

Thereafter, Master contested the General Election against Mr. G.G. Ponnampalam, the so called uncrowned king of Tamils. At a meeting Mr. Ponnampalam raised the question as to who was this Master, contesting him. What was his capacity and capability to contest against him (Ponnampalam). Mr. Ponnampalam was a Criminal Lawyer who had efficiently handled a number of criminal cases thus getting criminals acquitted in courts, but Karthi had produced thousands of students to hold eminent positions not only in Sri Lanka but all over the world. However, we could have defeated G.G. if

the parties of the left were united. Had Karthi entered the parliament, the whole country would have seen an eminent, efficient and sincere parliamentarian who would have rendered services to the toiling masses regardless of caste, creed, race, religion or language. He would have been the voice of the voiceless lot of this country.

Acquaintance with Marxist Theory

During this era, the D.M.K. (Dravida Munetta Kalzaham) under the leadership of C.N. Annadurai, was gaining momentum by his attractive speeches, writings, dramas and films. The D.M.K. acclaimed the Great Russian Revolution of 1917 and the communist policy. On the demise of Joseph Stalin, C.N. Annadurai wrote an article in the their journal "Dravida Nadu" which enlightened the young minds of the unparalled patriotism displayed by him in safeguarding the Soviet Union from the aggressive attempts of Capitalist countries and the emancipation of the masses from the prolonged exploitation by feudalism and capitalism. In fact M. Karunanithy named his new born son at that moment after this great leader "Stalin". It may be that fact that the D.M.K. utilized the Marxist policy to win the hearts of the toiling masses who were suppressed by caste consciousness of Brahmins in South India, it indirectly helped the younger generation of Jaffna to know about the genuine policy of Marxism as a panecea for all evils in society.

Life Style of Mr. Karthigesan

When we closely watched the life style of Mr. Karthigesan, we could observe the devoted services rendered by him towards the down-trodden masses, devoid of selfishness, forgetting the plight of his wife and children who were living in a rented house with his meager salary as a teacher and that never reached home fully as a big share of same went to help poor people and aspiring students. In fact he was forced to raise loans on interest to tide-over the legitimate needs of his home. When we watched the way of



தேர்தல் வேட்பாளராக
திரு. மு. கார்த்திகேசன்

life of Mr. Karthigesan we really wondered as to how such an exemplary person could be an active member of an organization which was considered detrimental to society.

While we were struggling to make up our minds and come to a determined conclusion regarding Marxism, we availed ourselves of an opportunity to witness a meeting in which Peter Kenuman delivered a speech. We were fortunate to attend that meeting as we had never attended the meetings of the Communist Party earlier due to prejudiced minds. At the meeting M.Kathigesan, A.Vaidyalingam, Dr. S.A. Wickramasinghe, Subair Ilankeeran and several others belonging to different communities were present on the stage. During his speech he pointed out that he (the speaker) was a burgher, Dr. Wickramasinghe, a Sinhalese, Illankeeran, a Muslim, M. Karthigesan & A.Vaidylingam, Tamils. Since they all belong to he communist party, they were all together without any discrimination as the party was devoid of any race, religion, caste, creed or language. He also pointed out the misconception prevailing among people that the communists were thugs, rowdies, hooligans and undesirables and then showed M.Karthigesan and A.Vaidiyalingam and put forward the question to the audience as to whether Karthi & Vaithy were people of such calibre.

It was only then we came to realise the true and genuine stand of the Communist Party. From then onwards we began to rally around "Karthi" and was in touch with him every now and then, for his guidance and teachings. But it was a virtue in Karthi & Vaithy that they never came out with their political ideology while conducting classes at school. But Karthi had the flair of jokes which he cracked sarcastically and indirectly hinting at the double standard of the political policies of the Tamil parties. If we pose any question regarding Communist theories during our class time, we were asked to meet him after the class time and that too outside the premises of the college. While doing so we were given very convincing

answers to our questions. At the same time he used to give us candid advice that if we wished to embrace Marxism, we should fully concentrate in our studies and should become shining students of the college, secondly we should always adopt decent behavior in such a way to win the good impression of the public that the followers of the Communist Party were exemplary people and assets to society.

Furthermore, he voluntarily came forward to conduct Marxist classes for the youths of our area during week ends and holidays, thereby the younger generation of our time benefited by being alive to the national and international political situations. It is felt pertinent to mention at this juncture that whenever Master was returning home after school and if we found that he had spare time, we used to assemble at a corner of a junction to listen to his discourse regarding the prevailing national and international political situation, while we all, including Master enjoyed cups of plain tea. It was indeed a pleasure to all of us to avail of such a useful opportunity. Since his discourses were so absorbing neither we nor Master never felt the consumption of time. On one such occasion and after the winding up of the discussion, it was surprising to find that Master's push cycle was missing. We all made an exhaustive and unsuccessful search. But Master took the matter with much ease saying that it had been probably removed by somebody who needed it. So saying he left the place on pillion.

While I was serving at Trincomalee during 70's , the progressive minded youths of the area approached me with a request to make arrangements for them to listen to " Karthi". Accordingly I wrote to Master and he responded promptly and positively. We arranged a hall and also printed hand bills. In the handbill I was assigned to deal with the "Introduction Speech". On the scheduled date Master arrived at Trincomalee and after lunch at home I wanted to arrange a taxi to proceed to the venue with Master. But he totally rejected my transport

arrangements and insisted that we should walk the distance to the venue. It was only while walking to the venue I felt how useful it was. On the way hundreds of his students and friends met him and followed us to the venue. So, Master was introducing me to the lot, when we reached the hall, which was fully packed and Master was received with an ovation. I strongly felt that a lengthy introduction speech was not warranted since it was Master who introduced me to a lot of people while on our way to the hall. So I curtailed my speech and called upon Master to take the floor. He gave a lengthy speech for more than two hours which was very convincing and absorbing. All questions raised from the house were readily, wittily and humorously answered.

On the same day, he wanted to proceed by the night mail to Colombo in order to help an employee of the Cement Corporation who was under interdiction. That person, too, arrived in Trincomalee and did not have the money for him to proceed to Colombo with Master. Master had to help that person with his traveling & meals. I mention this minor incident with just to point out the manner in which Master was helpful to others.

Jokes:

I could write a number of jokes from Karthigesan, but I am sure many others, who writer about Karthigesan will include many such jokes in their contributions.

Mr. Mahendran, a staff member of Jaffna Hindu College got married and there was a reception held, exclusive for the JHC staff. On that occasion several staff members delivered speeches wishing prosperity, longevity, etc. to the newly wedded couple. The last speech was reserved for Karthi and all were expecting a humorous speech as usual from him. When his turn came it was rather late in the night. Karthi got up from his seat majestically and said, "Now the time is too late for a long speech. So I want to make it short and sweet. Mahendran is short and the bride is sweet. So we should not take their time anymore. Let them go and enjoy".

One day when I was at Kalviyankadu junction, I saw Master cycling towards Kopay. When he saw me he stopped. I asked him as to where he was proceeding that way, as I was not aware of his transfer to Kopay Christian College. He sarcastically and with an assumption a heavy heart at the same time said "You know I was in Jaffna Hindu for a long period of time and managed to destroy Hinduism. SinceI had successfully accomplished that task, I am now sent to Kopay Christian college to destroy Christianity".

He retired from service while he was at Pandatherippu Hindu College. At the time of his retirement from service, a farewell function was accorded to him and he was presented with a ROAD MASTER bicycle and a portable type writer. It was presumed that these presents would help him to serve the people during his retired life. At the end of the function Karthi had to give his speech. On conclusion of his speech he said "All these days I was a SCHOOL MASTER, but from tomorrow I am going to be a ROAD MASTER".

Conclusion:

We have not seen Karl Marx, Engles, Lenin, Stalin or Mao. But we have seen only "Karthi" as the embodiment of all these leaders and Karthi was living life as a Communist true to its word. His practical and exemplary life had attracted several people not just his preaching. Any-body can easily say that the only way to be faithful to Master is to follow his footsteps. But I can frankly say that it is very difficult for anybody to adopt his way of life. At this juncture I am prompted by another memory. One day while we were casually discussing matters he said "even tomorrow I am prepared to die, if I could live in a Socialist society today". So his thoughts, deeds and breath were for Socialism and the welfare of the human race. He will live in our hearts until we breathe our last.

Perampalam Balasubramaniam *is originally from Kaladdy Amman Road, Vannarponnai East, Jaffna in the neighbourhood where Mr. Karthigesan lived and began to contest elections.*

தியாக தீபம்

இவ்வுலகில் சமதர்ம சமுதாயத்தை, அன்பை அமைதியை, இறையாண்மையை உணர்த்தப் பிறந்த இலட்சியவாதிகளில் ஒருவராக;

மனிதநேயம் மக்களிடையே வேரூன்றவும், சகோதரத்துவம் நிலைநாட்டப் படவும், பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதிமத வேறுபாடு, பெண் அடிமைத்தனம் போன்ற தீயசக்திகள் ஒழிந்திடவும் உழைத்த செம்மல்களில் ஒருவராக;

அறியாமை ஒழிந்து அறிவொளி பெருகிட, கற்றவர்கள் மேன்மேலும் கற்போம், கற்பிப்போம் என்ற மனப்பான்மையில் கல்லாமை இல்லாமை ஆக்கிடப் பாடுபட்ட முன்னோடிகளில் ஒருவராக;

சொர்க்கத்தைத் தேடி எங்கெல்லாமோ அலையாது தான் வாழ்ந்த இடத்திலேயே சொர்க்கத்தை உருவாக்கிய கர்மவீர்க்ளில் ஒருவராக;

காடுபோய் ஞானம் பெறாது தான் வாழ்ந்த வீட்டிலேயே ஞானத்தைப் பெற்று மற்றவர்களுக்குக் கொடுத்த நன்மரபில் தோன்றிய ஒருவராக;

எல்லோரும் ஓர் இனம் என்ற நன்னெறிக்கு மாறுபடாத, ஊறுபடாத வகையில் வாழ்க்கைக்கு வித்திட்ட பண்பாளர்களில் ஒருவராக;

ஆம்! அன்றும் இன்றும் தனக்கு நிகரின்றி, தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என, வாழ்வாங்கு வாழ்ந்து இறைபதம் எய்திய எமது பெருமதிப்பிற்குரிய ஆசான் திரு. மு. கார்த்திகேசன் அவர்கள் மறைந்த 25வது ஆண்டு நினைவு இவ்வேளையில் நாம் அனைவரும் ஒருமனதுடன் ஒன்றுபட்டு அவர் இலட்சியம் நிறைவுபெற செயற்படுவோமாக.

இவ் ஆக்கத்தை எழுதியவரின் பெயர் கிடைக்கவில்லை.

தோழர் கார்த்திகேசன் சாகவில்லையே.....

வ. சுப்பிரமணியம்

எம் கார்த்திகேசன் தோழருக்கு இவ்வுலகில் மரணம் வந்ததோ! நேர்த்தியாக வளர்த்து விட்ட மக்கள் தோழர் சுற்றம் சூழ பார்முழுதும் பரந்துபட்டு வாழ்பவர் வெளியிடும் நினைவுமலர்

யார் சொன்னார் கார்த்திகேசன் மறைந்தார் என்று! சாகா வரம் பெற்று வந்து பிறந்த பெருமைதரு மானிடமணிகள் ஒரு சிலர் பரம்பரையான கல்வி கேள்வியுடன் பொறுமையில் திளைத் தியம்பிய அறிவுரைகள் பொன்மொழிகள் கற்பித்தலை வாழ்த்தி பயம் என்ற சொல்லினை அகற்றிட மாணவமணிகளுக்கே தன்னையர்ப்பணித்த தகைசால் ஆசிரியர் அவரே என்று பேச நன்றியுணர்வுடன் உலகம் பரந்துவாழ் மாணவரில் ஒருவன்

எழுந்து நின்றே பேசுவான் ''மனிதகுல உணர்வின் நேசா அழுத்தமாகப் பொதுவுடமைதனை நீவிர் ஏற்றதாலே சக ஆசிரியர்கள், தோழர்கள் அனைவரையும் குசலம் உசாவி ஆசிவழங்கி, ஆங்கிலம் கற்பித்தலில் மேதை நீங்கள் உலகில் உமைப் போன்ற மனிதநேயர்கள் என்றும் சாவது இல்லை எம்மெல்லோர் இதயத்திலும் நீங்கள் என்றென்றும் வாழ்வது மெய்யே!"

திருமதி வ. சுப்பிரமணியம்,
முன்னாள் கட்சித் தோழமையுடன் எழுதியவர்,
தற்போது சிங்கப்பூரில் வாழ்பவர்

* * *

மாமனிதர் திரு. மு. கார்த்திகேசன்

க. அ. சின்னத்தம்பி

"The greatest source of life in any person is the inner power, the character, courage, determination, knowledge and skills of such individual"

- Shri Mahatma Gandhi -

நெடிந்துயர்ந்த துரும்பான உடல் எனினும் இரும்பான ஓர் உறுதி நிமிர்ந்த நன்னடை; அதில் நிதானமான கால்பதிப்பு.

தமிழினத்தை மட்டுமல்ல மனித குலத்தையே முழுமையாக நேசித்த மாமனிதன். ''எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் உலகில் இல்லாமை எனும் நோய் அகலவேண்டும்" என்ற உயரிய நோக்கோடு சேவை செய்த செம்மல் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பேராளன்.

பணிந்த மொழிப் பேரறிஞன். ஆங்கிலத்திலும் இனிய தமிழிலும் அழகாகப் பேசவும் எழுதவும் வல்ல பேரறிஞன். 'அழுக்கறுத்த தூய சிந்தை, அந்தண்மை, அடக்கம், அணியிவைதாம் எனக் கொண்டோன், அற நெறியில் நின்றோன்' எனும் முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் செய்யுளுக்குப் பெருமை சேர்த்தவர். சிறந்த நிருவாகி. பரந்த அறிவுக் கருவூலம்.

'பிறப்பால், தோற்றத்தால், தொழிலால், செல்வநிலையால் மனிதரைத் தீர்ப்பிடாமல் அனைவரையும் ஒரு குலமக்களாக ஏற்றுச் சகோதரத்துவத்தை மனிதப்பண்பினை வளர்ப்பதே தனது இலட்சியம்' என்ற கண்ணோட்டம், இவரது ஈடுபாடு ஒவ்வொன்றிலும் பட்டை தீட்டிய வைரம்போல பிரகாசித்தது யாவரும் அறிந்த உண்மை.

மேற்கூறிய அத்தனைக்கும் சொந்தக்காரர்தான் எமது அன்புக்கும் மதிப்புக்குரிய மாமனிதன் திரு.மு.கார்த்திகேசன் அதிபர் அவர்களாகும்.

மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலமே, கல்வியில் பெரிய கம்பபெருமானின் காலமாகும். அதுவே தமிழரின் பொற்காலம் என்கிறது வரலாறு. யாழ் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் பொற்காலம் திரு.மு.கா.வின் அதிபர் காலம் என்றால் அது மிகையாகாது.

சிவபாதசுந்தரனார், ஹன்டி பேரின்பநாயம் போன்ற ஜம்பவான்கள் எமது கல்வி வளர்ச்சிக்காக ஆற்றிய சேவையை இன்னும் நினைவுகூர்ந்து போற்றுவார் உள்ளனர். இவர்கள் வழியிலே பழமைக்குப் பழமையாகப் புதுமைக்கு புதுமையாகப் புகழ் பூத்த அதிபராக வாழ்ந்தவர் திரு.மு.க.ா.வாகும். அதிலும் 1972ல் இருந்து 1976 வரையிலான காலப்பகுதி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வரலாற்றில் இவர் தனது கால்பதித்த காலமாகும்.

இக்காலப் பகுதியில் நானும் மனைவியும் வெளிமாகாணத்திலிருந்து மாற்றலாகி இக்கல்லூரிக்கு வந்தோம். திரு.மு.கா அவர்களை அதிபராகச் சந்தோஷத்துடன் சந்தித்தோம். முதல் சந்திப்பே மறக்க முடியாததாகி விட்டது.

'சின்னத்தம்பி தானே நீங்கள்?' இது அதிபர்.

'ஆமாம்' என்று தலையாட்டினேன்.

'அப்படியானால் நீங்கள் என் மருமகன்' எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் சிரித்துச் சமாளித்தேன்.

எனது மகளின் கணவர் பெயரும் சின்னத்தம்பிதான். தற்போது அவர் பீக்கிங் வானொலியில் அறிவிப்பாளராக இருக்கிறார் என அதிபர் அவர்கள் விளக்கம் தந்தார். உள்ளத்திலுள்ளதை வார்த்தைகளில் மறைக்கத் தெரியாத வெள்ளையுள்ளம் அவருடையது. இவரது மருகர் சின்னத்தம்பியும் இவரைப் போன்ற மக்கள் தொண்டன். தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். இவருடன் பட்டி மன்றம் ஒன்றில் நான் பங்குபற்றிய போதே இவரது பேச்சுவன்மையை என்னால் அறிந்து போற்றமுடிந்தது.

எனது நாற்பது வருடங்களுக்கு மேலான கல்விச் சேவையில் பழைய பாராம்பரிய அதிபர்களையும் புதிய பரம்பரை அதிபர்களையும் சந்தித்துள்ளேன். இவர்களில் திரு.மு.கா. ஒரு தனி ரகம். அன்பினால் கல்லூரியில் ஆட்சி நடத்தியவர். இவரது அன்புக்குப் பணிந்தே கல்லூரியிலுள்ள சகலரும் இயங்கினர்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இவர் கூறிய கருத்துரைகள் எக்காலத்துக்கும் பொருந்துவனவாக உள்ளன. இன்றும் அவை என்னுள்ளத்தில் பசுமையாக நிலைத்துள்ளன.

''தமிழ் நாட்டிலே தலைவர் திரு.மு.க. இங்கு இப்பாடசாலைத்தலைவர் திரு.மு.கா. ஒரு அரவு மட்டுமே வித்தியாசம் பாருங்கள்'' என்பார். இவரது இலக்கிய விமர்சனங்கள் ஆக்கபூர்வமானவை. அறிவுக்கு விருந்தானவை. ஒரு முறை ஆசிரியர் அறையில் நான் அமர்ந்திருந்த போது என் அருகில் வந்து இருந்தபடி ''உங்களுக்கு இந்த இராமன்களில் எந்த இராமனைப் பிடிக்கும்?'' என்று கேட்டார். நான் மௌனமானேன்.

''என்ன யோசிக்கிறீர்கள்? கோதாண்டராமனா? பட்டாபி இராமனா? அல்லது சாப்பாட்டு இராமனா?''.

எனக்குப் பொதுவாகவே வாலிவதத்தின் பின் இராமனையே பிடிக்காது.

''சீதா-இராமன்'' இவனைத்தான் எனக்குப் பிடிக்கும். ஏன் தெரியுமா? பிறர் மனை நயக்காத தோள்தோயாத ஏகபத்தினி விரதன். அதுமட்டுமா? எல்லா ஆண்களும் தங்கள் பெயருக்குப் பின்னாலேயே பெண்களின் பெயரை வைப்பார்கள். ஆனால் சீதா-இராமன் முன்னாலே தன் மனைவி பெயரை வைத்துப் பெண்ணின் பெருமை காத்தவன். இது அவரது இலக்கிய விமர்சனம் மட்டுமல்ல, இலட்சிய விமர்சனமும் கூட.

இலக்கியம் பேசத் தொடங்கிவிட்டால் வள்ளுவனும், இளங்கோவும், கம்பனும் சங்கப் புலவர்களும் வந்துவிடுவார்கள். ஷேக்ஸ்பியரும், செல்லியும், மில்ரனும் ஒப்பீட்டு முறையில் விமர்சிக்கப் படுவார்கள். விமர்சனம் இவருக்குக் வைகவந்த கலையாகும்.

1975ம் ஆண்டு நடைபெற்ற கல்லூரி வருடாந்தத் திரட்டிலே என்போன்ற சில ஆசிரியர்களின் சான்றிழ்களில் 'Very Satisfactory' என்று எழுதக் கல்வி அதிகாரி தவறிவிட்டார். அதில் வேதனையடைந்தவர்களில் நானும் ஒருவன். இதனையறிந்த எங்கள் அதிபர் திரு.மு.கா ''என்ன 'வெறி' வைக்கவில்லை என்ற புழுக்கமா? நீங்கள் ஒழுக்கசீலர்கள். உங்களுக்கேன் 'வெறி'? என்று கூறி எம்மைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தார். அதிபர் என்ற கோதாவில் கல்வியதிகாரியைக் காக்கா பிடித்து எமக்கு Very Satisfactory பெற்றுத் தர அவர் விரும்பவில்லை. இதுவே உண்மை.

'யாவரும் ஒன்றே; இங்கு மேலோர் கீழோர் என்றில்லை' என்ற எண்ணத்தைச் செயல்படுத்தியவர். அடிக்கடி ஆசிரியர்களிடம் ''நீங்கள் எல்லாரும் இந்தக் கல்லூரி அதிபர்கள்'' என்று கூறி களிப்புடன் வேலை செய்ய வைத்தார். சமசந்தர்ப்பங்களும் அளித்தவர்.

இவர் அதிபராக இருந்த காலத்தில், எந்த ஒரு கல்வியதிகாரியும் வகுப்பறைகளுக்குள் நுழைந்ததில்லை. கல்லூரிககு வரும் மேலதிகாரிகள் காரியாலயத்தில் இவரைச் சந்தித்ததோடு சரி. அத்தனை ஆளுமையும் அறிவாற்றலும் இவரிடம் நிரம்பியிருந்தன. அதிகாரிகள் இவருக்காகக் காத்திருப்பார்களே தவிர, இவர் அவர்களுக்காக காத்திருந்தது மிகக்குறைவு.

எச்சாதியத்தைச் சேர்ந்த பெற்றோராயினும் அவர்களை அமரச்செய்து, அன்புடன் அவர்கள் வேண்டும் அத்தனையையும், காலம் கடத்தாமல் முடித்துக் கொடுப்பார். இன்னாரும் இனியாரும் இவருக்கில்லை. வாய்ப்பந்தல் போடுபவர்களை இவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதிலும் குறிப்பாக சோம்பேறிகளைக் கட்டோடு பிடிக்காது.

கல்லூரியில் நடைபெறும் கூட்டங்களில் முன் கதிரை போட்டு இருக்கும் அதிபர்களையே அதிமாகக் காணலாம். இவரோ அதற்கு எதிர்மாறானவர். தான் தலைமை தாங்கவேண்டும் என்பவற்றைத் தவிர, ஏனைய கூட்டங்களில் அவர் பார்வையாளர்களோடு சேர்ந்து அவர்களில் ஒருவராக இருந்துவிடுவார்.

அரசியலில் இவர் ஒரு உண்மைப் பொதுவுடமைவாதியாகவே இறுதிவரை வாழ்ந்தார். இவரது கொள்கைகள் மனிதகுல ஈடேற்றத்துக்கானவை. சந்தர்ப்பவாத அரசியல் இவர் வெறுத்து ஒதுக்கியதொன்று.

இனப்பிரச்சினை பற்றிய இவரது நோக்குப் புரட்சிகரமானது. திரு.மு.கா பிரச்சினை உச்ச நிலையை அடைந்திருந்த வேளையில் கொழும்பிலிருந்து யாழ் நோக்கிப் பிரயாணம் செய்தபோது அநுராதபுர புகையிரத நிலையத்தில் பாதிப்புக்குள்ளானர். காடையர்களின் வெறியாட்டம் அவரை நிலைகுலையச் செய்தது. அவரது அரசியல் சிந்தனைகளுக்கு இந்நிகழ்ச்சி ஒரு தெளிவைத் தந்ததாகக் கூறினார். ஆனால் அவர் கொள்கை மாறுபட்டு வேறுபட்டதில்லை. அவரது அரசியல் நோக்கில் சிங்களத் தோழர்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களில் பெரும்பாலானோர் நல்லவர்கள் என்பதே அவர் நம்பிக்கையாகும்.

''தமிழர் பிரச்சனைக்கு ஒரே வழிதான் உண்டு. தமிழர்கள் எல்லோரும் துவக்கெடுத்தேயாக வேண்டும். புரட்சிபூக்கவேண்டும். ஆடுகிற மாட்டை ஆடியே கறக்கவேண்டும். இல்லையேல் நாம் அழிக்கப்படுவோம். கத்திக்குத்து வழக்குப் பேசியவரும், கதிகால் வழக்குப் பேசியவரும் கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்தவர்கள். இவர்களால் தமிழர் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிந்ததா? ஒற்றுமையில்லையெனில் அனைவர்க்கும் தாழ்வே." இப்படி அவர்கூறியது இன்று நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறது. இவரது அரசியல் நோக்கும் போக்கும் அர்த்தமுள்ளதும் அசைக்க முடியாததுமாகும்.

'மனிதம்' என்ற ஒன்று பூரணத்துவமடைந்து மற்றவருக்குப் பயன்பட்ட தென்றால் அது இப்பெரியாரின் பயனுள்ள வாழ்க்கையில் தான். கல்லூரியிலே சம்பளநாளில் அல்லது அடுத்த நாளில் சிலர் வந்து காத்திருப்பார்கள். எதற்காகத் தெரியுமா? மாதாந்தப் 'படி' பெற்றுச் செல்ல. இது அல்லவோ கொடை! தருமம் என்றால் இப்படியல்லவோ இருக்க வேண்டும். இத்தனைக்கும் திரு. மு. கா. ஒரு பெரிய செல்வந்தரல்ல. ஒரு முறை என்னிடம் பேசும் போது ''கொடுப்பதற்கு மாஸ்டர் பணம் தேவையில்லை. மனம்தான் தேவை" என்றார். எத்தனை உண்மை.

இறுதியாக இவரது மரணச் சடங்கில் படித்தோரும், பாமரரும், பணக்காரரும், ஏழைகளும், மாணவரும், ஆசிரியரும் என பலரும் கலந்து கொண்டார்கள். இரங்கலுரை நிகழ்த்திய இவரது சகபாடியும் முன்னாள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபருமான திரு. சபாரத்தினம், ''என் நண்பனே நான் இப்பொழுது உன்னைப் பற்றி பேசுவதா? அல்லது ஒப்பாரி வைப்பதா? என்று தொடங்கிய போது அவருடைய கண்கள் பனித்தன. அங்கு கூடியிருந்தோர் அத்தனை பேரின் இதயங்களும் கரைந்தன. கவலையால் கனத்தன.

''வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே" என்ற பாரதியின் அடிநாதமே எம் அதிபர் திரு. மு. கா அவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. இம் மாமனிதனின் திருநாமம் என்றும் அவரை அறிந்தோர் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

க. அ. சின்னத்தம்பி,
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
பண்டதரிப்பு.

* * *

Karthi, peep for a while

K. Sachithananthan

Karthy, peep for a while, through the barred clouds
See your cherished land and hear the people's cry aloud
Blood smeared, sweat-wet, tear- washed, mined soil,
Among a forest of guns and slavish toil.

The huts and the mansions all alike flat
The worker or capitalist on mat
Sharing the rice-water anguishly chat
Homeless under shell torn-trees fat.

Peep, Karthy, where is the class differences;
Here once you fought against! the walls cast-fences
Collapse in the hurricane-swept land; uprooted trees
With mount of human skulls, tyre-burnt ashes, strewn free.

This moment you should be here, Karthy, here
To share the life between two guns-fire,
Amongst, your comrades, my fellow beings
All alike rolled on, no finger raised seeing.

Death is a sleep; a balm; you enjoy above,
Heaving your bosom-friends in agony to bow
The worst evil that your land has destined
Is to embrace silent suffering, confined;

The lip closed, toungue-tied, the heavy heart
Heaves deep; warms the air, still and hurt

K. Sachithananthan,
Mavittapuram, Tellipallai

* * *

காத்தி சற்றே எட்டிப் பாருங்கள்

கே. சச்சிதானந்தன்

காத்தி, சற்றே எட்டிப் பாருங்கள் முகில்களினிடை
பாருங்கள் உங்கள் தாய்த்திருநாட்டை
கேளுங்கள் உங்கள் மக்களின் ஓலத்தை
குருதி படிந்த, வியர்த்து நனைந்த,
கண்ணீர் கழுவிய, கண்ணி வைத்த
மண்ணை, துப்பாக்கிக் காட்டில்
உழலும் அடிமைத்தனத்தில்

குடிலும் மாளிகையும் ஒருங்கே தரைமட்டம்
மனையிழந்தோர் ஷெல்லடிப்பட்ட மரத்தின் கீழே
தொழிலாளி முதலாளி பேதமின்றி பாயிலே
கஞ்சியைப் பகிர்ந்து குலவும் அழகை..

எட்டிப் பாருங்கள் காத்தி, வர்க்க பேதமெங்கே?
அது ஒருகால் நீங்கள் எதிர்த்த போரன்றோ இங்கே!
சாதி வேலிகள் நொருங்கின சுழன்றடித்த புயலினிலே
பாறுண்ட மரங்கள், மலையாக கபாலங்கள் அதன் கீழே
ரயர் எரிந்த சாம்பல் நீக்கமறப் பரவியெங்கும்

இக்கணம் நீங்கள் இங்கு வேண்டும், காத்தி, இங்கே!
இரு துப்பாக்கிச் சமரிடை வாழ்வைப் பகிர
உங்கள் தோழர்களிடையே, எனது சகபாடிகளிடையே
ஒத்துருண்டனர் சகலரும், ஒருவிரலேனும் உயரக்காணோம்

இறப்பு ஒரு உறக்கம்; நீரனுபவிக்கும் இன்பம்,
துன்ப நெடுமூச்செறிவர் உம்நெஞ்சார்ந்த நண்பர்
நாட்டின் கேடுகெட்ட விதியின் குரூரத்தை
அணைத்தே எமதுள்ளே, அமைதியான சோகத்தை

உதடுகள் மூடி, நாக்கட்டி, கனமான இதயத்தின்
ஆழ்ந்த நெடுமூச்சு; சூடேற்றும்
அசையாத, நொந்துபோன காற்றினை!

கே. சச்சிதானந்தன்,
மாவிட்டபுரம், தெல்லிப்பளை

அமரர் எம். கார்த்திகேசன் அவர்கள்

வ. வள்ளுவன்

பண்டத்தரிப்பு, இந்துக்கல்லூரியில் நான் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். பொன்னையா கணபதிப்பிள்ளை என்பது போல் கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் என்றோர் ஆசிரியர். கொம்யூனிஸ்ட் என்பது ஓராளின் பெயர் என்று நான் எண்ணினேன். இந்த எண்ணத்திற்கப்பால் என் சிந்தனை விரியாத பருவமது.

மெலிந்த, நெடிய தோற்றம். நீள்சதுர வடிவான முகம். குறும்புடன் துருதுருப்பும் சேர்த்துப் படைத்த வசீகரச் சிரிப்பு, புகைப்பழக்கத்தால் கறுத்துப்போனது போன்ற மெல்லிய உதடுகள். நிரந்தரமாய் அமைந்துவிட்ட நகைச்சுவை கலந்தபேச்சு. விவரிப்புக்குள் அகப்படாத நிதானம். தீட்சண்யமான கண்களில் அறிவின் பளபளப்பு, தாம் சிரிக்காமலே கேட்போரைச் சிரிக்க வைக்கும் விகடப் பெருக்கு, பேசும் போது நர்த்தனமாடும் மிடறு. இத்யாதி இலட்சணங்களோடு தான் எங்கள் அதிபர் அமரர் மு.கார்த்திகேசன் அவர்கள் என் நெஞ்சில் ஓவியமானார்.

நினைவில் சஞ்சரிக்கும் சம்பவங்கள் பல. அவற்றுள் இது ஒன்று மறக்க முடியாதது. ஆறாம் வகுப்பு A,B,C என மூன்று பிரிவுகள். 'A' பிரிவு வகுப்பைச் சேர்ந்த என் சகாக்கள் உடற்பயிற்சி நேரம் மைதானத்தில் கால்பந்தாட்டத்தில் தம்மை மறந்திருந்தார்கள். அப்போது இடையே வந்து புகுந்த ஒன்பதாம் வகுப்பு மாணவர் சிலர் எங்கள் பந்தைப் பலவந்தமாகப் பறித்துச் சென்று விளையாடினர். இதனாலேற்பட்ட களேபரத்தில் ஒன்பதாம் வகுப்பு மாணவன் ஒருவன் மயங்கி விழ நேர்ந்தது. காரியாலயத்திலிருந்து கொண்டே இவற்றை அவதானித்த அதிபர் அந்த இடத்தை நோக்கி வந்தார். குற்றவாளி நானே என்பது சகமாணவர்களின் ஏகோபித்த சாட்சியானது. காரியாலயத்துக்கு என்னை வருமாறு கூறிவிட்டு அதிபர் நடக்கலானார். பின்னே நடந்து சென்ற என்னை ஒரு சாரார் பரிகாசத்தோடு நோக்க, என் வகுப்பு மாணவர்கள் என்மேல் பச்சாதாபப்பட்டார்கள். மயக்கமுற்ற மாணவன் முகத்தில் நீர் தெளிக்கப்பட்டு மெல்ல நடந்து போவதைக் கண்டபோதும்

என் மனப் பதற்றம் போகவில்லை. உடலும், உள்ளமும் படபடக்க காரியாலயத்தின் ஒரு மூலையில் கலங்கியபடி கைகட்டி நின்றேன். சில நிமிடங்கள் மௌனமான ஏக்கத்தில் கரைந்து போயின. எனக்குக் கிடைக்க இருந்த தண்டனையைப் பார்க்கத் துடித்த கண்களும் ஓய்ந்து போன வேளை, ''வா இங்கே" அதிபர் தான் கூப்பிட்டார். கால்களில் தோன்றிய நடுக்கம் உடலெங்கும் பரவ, தயங்கியபடி அவர் முன்னே சென்றேன். தமது சட்டைப்பைக்குள்ளிருந்து எடுத்த பணத்தை என் கைக்குள் திணித்தபடி ''இந்தா இன்னொரு பெடியனையும் கூட்டிக்கொண்டு போய் ஒரு புதுப்பந்து வாங்கி வா. அது இனி உங்கள் வகுப்புக்கே" என்றார்.

அன்று எங்களுக்கு ஒரு புதுப் பந்து என்ற மகிழ்ச்சியே எனக்குக் கிடைத்த தண்டனை. மார்க்ஸிசப் பொருள்முதல்வாத உண்மைச் சிறப்பு. இச்சம்பவத்தின் பின்னணியில் இருந்த உண்மை என்ன என்பது எனக்கு அன்று புரியாத ஒன்று. நுகர் பொருள் எல்லாருக்கும் பொதுவாகக் கிடைக்காத இடத்தில் பிச்சல், பிடுங்கல், சண்டை, சள்ளுக்குக் குறைவிராது என்பதும் அன்று எனக்கு விளங்காத விஷயமே.

பாடசாலை வசதிக்கட்டணம் கட்டாத மாணவர் வகுப்புக்கு வெளியே நிறுத்தப்படுவது யாழப்பாணப் பாடசாலைகளில் ஒரு சாதாரண நிகழ்ச்சி. அப்படி நிற்கும் மாணவர்கள் அதிபர் காரியாலயத்துக்குச் செல்ல வேண்டும் என்பது வகுப்பாசிரியர்களின் கட்டளை. தவணைப் பரீட்சை நெருங்கும் காலங்களில் இவ்வகைக் காட்சி மலிந்திருக்கும். இவ்வாறு நின்ற மாணவர்களின் முகங்கள் வாடிப்போயிருப்பதைக் காணச் சகிக்காத எங்கள் அதிபர் தமது பொக்கற்றுக்குள்ளிருந்து எடுத்த பணத்தை அவர்களிடம் அன்பாகக் கொடுத்த காட்சியை கண்கள் பனிக்கக் கண்டு நெகிழ்ந்துபோன மாணவர்களுள் நானும் ஒருவன்.

கார்த்திகேசன் மாஸ்டர் அங்கு அதிபராக வந்த பின்னர் தான் A/L வகுப்புக்கள் ஆரம்பமாகின. விவசாய பாடமும் அறிமுகமானது. கல்லூரியின் தரிசு நிலம் எங்கனும் வெங்காயம், மிளகாய், தக்காளி பயிர்வகைகளும், வாழைமரங்களும் பசுமையை பரப்பியிருந்தன. எங்களுக்கோ, எங்கள் உழைப்பில் விளைந்த விளைச்சல் என்ற பெருமிதம்!

எங்கள் சங்கீத ஆசிரியர் ஒரு நாள் எங்கள் வகுப்புக்கு வர பிந்திவிட்டார். வகுப்பு முழுவதும் பேச்சொலியும், சிரிப்பும், சிறுசண்டைகளுமாக தூள் பறந்தது. அடுத்துள்ள வகுப்புகள் அமைதியை இழந்தன. அப்போது அதிபர் மெல்ல உள்ளே வந்தார். என்ன பாடம் என்று கேட்க முன்னரே ''சேர், இப்ப எங்களுக்கு சங்கீதம் சேர்" என எல்லோரும் ஏகோபித்த குரலில் உரத்துக் கூறினோம். வேறு எந்தப் பாடமாயினும் அதிபர் திறமாகக் கற்பிப்பார், சங்கீதம் வராது என்ற துணிச்சல் எங்களுக்கு. ஆசிரியரின் ஆசனத்தில் அமர்ந்து கொண்ட அதிபர் ''சரி இப்போ ஒவ்வொருவரும் ஒரு பாட்டு பாடவேணும்" என்று ஒரு மாணவனைச் சுட்டிக் காட்டினார். ''ஆடிக்கொண்டார்" என்ற பாடலை அந்த மாணவன் பாடினான்.

பின்னர் அடுத்த மாணவன். அவனும் ''ஆடிக்கொண்டார்'' தான் பாடினான். தொடர்ந்து பலரை அதிபர் சுட்டிக்காட்ட ஒவ்வொருவரும் ''ஆடிக் கொண்டாரை''யே பாடினர்கள். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் சங்கீத ஆசிரியர் அங்கு வந்து சேர்ந்தார். அவரது முகம் கலவரத்தில் குழம்பிப்போய் கிடந்தது. ''வாருங்கோ மாஸ்டர், எனக்கும் சங்கீதத்தில் இந்த ஒரு பாட்டுத்தான் தெரியும்'' என்று கூறிக்கொண்டே அதிபர் வெளியேறினார். ஆசிரியரின் முகம் ஏனப்படி வெளிறிப்போனது என்ற உண்மை இன்று வரை எனக்கு வெளிச்சமாகவில்லை.

இன்னொரு காட்சி அதுவும் நெஞ்சில் நிற்கிறது. எங்கள் பாட ஆசிரியை பாடம் தொடங்கி சில நிமிட நேரத்தில் அடுத்த வகுப்புக்குச் சென்று, அந்த வகுப்பிலிருந்த இன்னோர் ஆசிரியையுடன் எதையோ பற்றி சுவாரசியமாகப் பேசிக்கொண்டிருந்தார். அதிபர் எங்கள் வகுப்புள் நுழைந்தார். மாணவர்கள் போட்ட 'குட்மோர்னிங்' சத்தம்கூட ஆசிரியையின் காதில் விழவில்லை. அதிபரோ வந்ததும் தானே பாடத்தைப் படிப்பிக்கத் தொடங்கினார். சிறிது நேரத்தின் பின் குற்றம் சுமந்த முகத்தோடு எங்கள் வகுப்பை நோக்கி வந்து, உள்ளே புகமுடியாத தவிப்புடன் வெளியே நின்ற ஆசிரியையைப் பார்த்து மிக நிதானமாக, ''பரவாயில்லை. வாருங்கோ ரீச்சர், முக்கியமான விஷயங்களை அவ்வப்போதுதானே கதைக்க வேணும்'' என்று கூறிக்கொண்டே பாடத்தைத் தொடர்ந்தார். பொருத்தமான ஒரு கட்டத்தில் பாடத்தை நிறுத்திவிட்டு சிரித்துக்கொண்டே வெளியேறினார்.

தலைசிறந்த ஆசிரியராகவும், ஒப்புயர்வற்ற அதிபராகவும் மு.காவைக் கண்டோம். கண்டு வியந்தோம். வியந்து புகழ்ந்தோம். ஆனால் மாணவப் பருவத்தைத் தாண்டி, மனிதப் பருவத்துள் புகுந்தபோதுதான் கார்த்திகேசன் என்ற மேதையை அறியவும், புரியவும் முடிந்தது. கொம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் அவரை ''வெல்லப்பட முடியாத அரசியல் பாட வித்தகர்'' என இன்றும் புகழ்வர். அவரது வாழ்நாளில் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் பலபாகங்களிலும் அவரது சிறப்புகள் விஸ்தாரமாகப் பேசப்பட்டன. அவரது பேச்சுத்திறன் வேறு எவரிடமும் காணமுடியாதது. ஆழ்ந்த பொருளையும் நகைச்சுவையோடு பேசுவதில் அவர் நிகரற்று விளங்கினார்.

'மார்க்ஸிச அறிஞர்' என்று சிலரால் புகழ்ந்து பேசப்படும் மார்க்ஸிசப் பண்டிதர்களைப்போல சொல்வேறு செயல்வேறு என வாழ்ந்தவரல்ல அவர். வெகுஜனப் பெருங்கூட்டத்தில் அவர் தாமும் ஒரு சாதாரண மனிதர் போலவே வாழ்ந்தார். தமது மனைவி, மக்களையும் அவ்வாறே வாழ வழி செய்தார். இத்தகைய அசாதாரண சிறப்புகளைக் கொண்ட கார்த்திகேசன் மாஸ்டரோடு நாம் பழகக் கிடைத்த பொழுதுகள் பொன்னைவிட மேலானவை. அவர் நினைவு என்றும் எம் நெஞ்சத்தில் அழியாது நிற்கும்.

வ. வள்ளுவன்,
முன்னாள் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மாணவராவார்.



பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஊழியர்களுடன்

வாழ்ந்து காட்டிய காத்தார்!

வி. ரி. இளங்கோவன்

ஈழத்திருநாடு இனிதே மேன்மையுற்று
இலங்கிட மார்க்ஸிஸமே வழியென
ஆழச்சிந்தித்தார் கட்சி கண்டார்
அருமையிது வெனப் போதித்தார்
ஏழைத் தழிழர்க்கும் இயம்பினார்
இயன்றவரை உதவினார் நன்றே
வாழ்வில் ஏற்றத்தாழ்வின்றித் தானே
வாழ்ந்தும் காட்டினார் காத்தார்.

புன்னகை தவழும் முகத்தோடு
புதுக்கருத்து நகைச்சுவை இழைத்து
என்னவிதமாய் எடுத்து விளக்குவார்
இதயமெலாம் மாணவர் சுமந்தார்
சொன்னகதைகள் நினைத்துச் சுவைத்து
சமத்துவத்துவம் ஏற்றோர் ஏராளம்
பென்னம்பெரிய அறிஞர் அவரெனப்
பெரிதும் உணர்ந்தோர் பல்லாயிரம்.

எழுத்தறிவித்து இயக்கத் தத்துவம்
எடுத்தியம்பி எங்குமே திரிந்து
ஏழைமக்கள் வாழ்வுக்காய் உழைத்து
எத்தனையோ துன்பம் ஏற்றும்வாழ்வில்
பழுத்த கம்யூனிஸ்ட் காத்தாரென்று
பாரில் புகழ்பெற்ற மனிதரவர்
வாழும் தன்மக்கட்கும் வையகத்தில்
வைத்துவிட்டுச் சென்றதுவும் தத்துவமே.

சாகாத தத்துவத்தை ஈழத்துச்
சனங்களுக்குத் தந்துவிட்டு அவர்
மீளாத துயிலுக்குப் போயின்று
முடிந்த ஆண்டு இருபத்தைந்தாகிலும்
நாளாந்தம் அவர்கண்ட தத்துவம்
நன்றெனவே அவனியில் வளரும்
வேளைவரும் வெல்லும் காலம்
பொதுவுடமைப் பூமலரும் நம்பும்!

Karthigesan Master
a legendary Communist and philanthropist

T. Ganeshwaran

Some are born to live not just for themselves nor for their immediate family, but for others. Karthigesan master, affectionately called 'Kathar' by his students, was one of them. He personified the essence of philanthropy in its modest, but true form. "Love all, Serve all", was Kathar's motto in life. He was so passionate in this belief that he extended his helping hand to each and every person who approached him, regardless of their background or length of his acquaintance with them.

We live in an era where people tend to move a lot, often seeking greener and more peaceful pastures. As a devoted Communist, Kathar had a different vision. He came from Malaysia, the land of milk and honey, and decided to settle down in the impoverished Sri Lanka where he thought his service would be most needed.

After graduation, he took up residence at Vaddukoddai, the birthplace of his parents. It was at Vaddukoddai that he met his would-be wife Valambihai, whose staunch support for all his endeavours through thick and thin became a formidable source of energy. He came to Jaffna at a time when the Jaffna society was plagued by

the heinous caste system. Undaunted by the strength of the guardians of such an evil system, he began his long march for the liberation of the oppressed with courage and determination. His life was both a scholarly campaign to recover forgotten human values and a political campaign for social justice. He strove to achieve these through his party, media and personal contact.

He began his professional career as a teacher at Jaffna Hindu College (JHC), Jaffna in 1946. So much was known of his ideologies in the early days of his career at JHC that when the subject of his permanent appointment came up, the Board of Management faced a dilemma. Should they recruit a known Communist to the prime Hindu institution or lose a young, well-qualified teacher? Unable to decide, they made a special trip to the great saint Yogar Swami, to consult the advisability of appointing him. 'Take him; he is a good man; he will be an asset to the school', was the response from the saint. True to his prophecy, Kathar never mixed politics with education at the school. Instead he stood by the ethos of the school till the very end of his career working hard for twenty-five glorious years to be rewarded with the post of Principal in January 1971. During his period at the school, JHC excelled itself so creditably that it became one of the seven Super Grade Schools in the whole of Sri Lanka. He deserves a share of that well earned credit.

Undoubtedly, he was one of the founding fathers of socialism and the trade union movement in the Jaffna peninsula. He demonstrated in the worst days of the caste system that even those who were free to enjoy the privileges of the system could ally themselves with the oppressed in the interests of equal rights. His struggle for the under-privileged reached a climax in the late 1960s when the Communist Party in Jaffna launched the 'temple admission struggle' alongside the 'cast eradication struggle'.

In many ways a liberal Communist full of revolutionary socialist ideas, Kathar might be found at one moment at the party office discussing important strategies, at another on the cricket grounds enjoying the game with senior students or attending a meeting at the local community centre. Another day he might be en route to Colombo where a busy schedule awaited him, or offering free tuition at home. He was a teacher in the classroom and assumed the role of a solicitor when representing the cases of aggrieved parties. As the editor of a newspaper, he was a journalist and through his association with the Communist Party and trade unions, he was known as a politician and trade unionist. Such was the multiplicity of his tasks and roles that he never rested.

An avid reader, he usually read well into the early hours of the following day. A meticulous scholar, he had a flair for writing. Speech writing, especially the after dinner speech, was his speciality. His socialist ideas through numerous contributions in left-wing publications such as Tribune, Forward and Tholilali were respected even by those who did not share his views. His writings were intellectually demanding but always in good, plain, accessible language and their wit and sharp edge made them a pleasure to read. Due to the legal constraints on public servants engaging in political activities, he mostly wrote under the disguise of a nom de plume. As a teacher and platform orator with a great sense of humour, he had a rich, warm vein of didactic polemic in a style that is now all but vanished in Sri Lanka.

Money or social status were never uppermost in his mind. Young or old, rich or poor, he treated everybody as equals. For all his relaxed and jovial manner, paradoxically, Kathar held a firm grip on classroom discipline. To many, he was a source of strength, inspiration and guiding light. The bond that existed between him and his students was so strong that many of them forged immense and lifelong loyalties to their school's inspirational teacher. His knowledge of cricket was astonishing.

A keen follower of world cricket tournaments and an admirer of Don Bradman, he was instrumental in initiating a lot of students into the habit of listening to commentary as a means of improving both English and general knowledge. He published a handbook on cricket, full of statistics that baffled even the trained sports personalities.

Communism is a wonderful political theory. He had mastered it to its core and was crystal clear in his thinking. He became disenchanted with the direction of the Soviet Union in the 1970s and became a keen supporter of the Chinese Communist Party. If Kathar were to be alive today, he would be bleeding tears watching the speed with which both Russia and China are embracing capitalism. For genuine theoreticians of his calibre, politics is an enigma. Although Kathar managed to become the Councillor of Jaffna Municipal Council once, he never conquered the art of politics because he couldn't tell lies. Nikita Khrushchev, former Prime Minister of the USSR once said, 'Politicians are the same everywhere. They promise to build a bridge even when there is no river'. That explains why Kathar didn't succeed as a politician. Whether he succeeded as a politician or not, his life epitomised the great theory of Communism, which is sadly becoming a Sanskrit of our time. Long live Kathar's ideals!

T. Ganeshwaran,
Former student of Jaffna Hindu College and a cousin of M. Karthigesan.

* * *

மேலாண்ட செம்மல்

மூலபாரதி

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் மாஸ்டர் என்றால்
கவலை விட்டெழுவார் மக்களெல்லாம்
தம் வீட்டு சுகதுக்கம் பேண வின்றி
தரணியில் அவர் செய்த சேவைகள் மெத்த
எம்மவர் இம்மண்ணில் மேலோங்குதற்கு
ஏற்றுத்தான் சுமந்தார் சிலுவைதன்னை
கம்யூனிஸ்ட் கொள்கையை மேலாண்டசெம்மல்
கல்விக்கொள் கையால்விளங்கும் சிம்மம்!

தாழ்த்தப்பட்ட மக்கள்பால் நின்றுழைத்து
'தாழ்ந்தவர்கள் இல்லைநீவிர் தாழ்த்தப்பட்டு
ஆழ்ந்தவர்கள்' என்ற உண்மையை எடுத்துச் சொல்லி
ஆரம்பத்தில் தீண்டாமையைப் போக்கியதாலே
காழ்ப்புணர்வால் மேலோங்கு சமூகத்திருந்து
கார்த்திகேசன் தான்கீழி றங்கிது மந்த
தாழ்த்தப்பட்ட மக்கள்சேவையிலு மிருந்து
தான் விலகிச் சென்றிடாத அண்ண லன்றோ?

நகைச்சுவை யாய்பேசும் ஆற்ற லாலே
நாசுக்காய் கருத்ததனை வெளிப்படுத்தும்
தகைசால் ஆங்கிலத்து வன்மை யோடும்
தரணியதில் உலாவந்த போதும் வீட்டில்
புகைக்காத அடுப்போடு பெண்டில், பிள்ளை
புழங்கினும் புரிந்துணர் வோடு அந்நாள்
நகைக்காது ஊருலகம் போற்ற வாழ்ந்த
புருஷரவர் கார்த்திகேசன் நாமம் வாழி!

த. பரமலிங்கம்,
''மூலபாரதி'' எனும் புனைபெயர் கொண்ட எழுத்தாளர்.
யாழ்ப்பாணம் வண்-வடமேற்கு, நாவலடி ஒழுங்கை வாசியாவார்.

பொறுமையின் இமயம், கார்த்திகேசன்

R. M. வேகாவனம்

உயர் திரு. எம். கார்த்திகேசன் எனது குரு. யாழ். இந்துக்கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக அவர் கடமையாற்றிய பொழுது அவரின் கற்பித்தலை செவிமடுத்து வாழ்க்கையில் உயர்ந்தவன் நான்.

எனக்கு வயது 73. நிரந்தர வதிவிடம், ஒட்டுசுட்டான், முல்லை மாவட்டம்.''ஜெயசிக்குறு''இராணுவ நடவடிக்கையால் புலம் பெயர்ந்து குதித்து மிதித்து வந்து, எனது குடும்பம் பிள்ளைகளுடன் ஒரு ''லொட்ஜ்'' வாழ்க்கை இன்று.

எனது குருவுக்கும் எனக்கும் சிவன் கோயிலடி ஒட்டுசுட்டானில் இருக்கும் பொழுது பல கடிதத் தொடர்புகள் இருந்தன. அவைக்ளைப் பேணி வந்தேன். இடப்பெயர்ச்சியால் எல்லாம் கை கடந்து, ஒரு படலமாகி விட்டது. பெரும் கவலை!

சூழ்நிலை காரணமாக எமது இனிய தமிழைக் கையாள வேண்டு மென்பதால் தமிழில் அன்று தொடக்கம் எழுதி வருகிறேன். அவசியமேற்படின் கூறிய வார்த்தைகளை (ஒருவர்) அப்படியே எழுதுவது இயல்பு. அதனால் ஆங்காங்கே ஆங்கிலப் பிரயோகம் தவிர்க்க முடியாததாகிவிட்டது.

எனது குருவைப் பற்றி ஓரளவு நன்றாக ஞாபகப்படுத்தியே எழுத முயல்கிறேன். 1946ம் ஆண்டு இரண்டாம் தவணைப்பாட ஆரம்பம். அன்று ரம்மியமான காலைப் பொழுது. எமது 10ம் ஆண்டு வகுப்பறைக்குள் கம்பீரமான நடையுடையுடன், எமக்கு ஓர் உதய சூரியன் போல் பிரவேசித்தார் திரு. எம். கார்த்திகேசன். சாதாரண கபில நிற லோங்ஸ், வெள்ளை நிற சேட், அதன் மேல் கபில நிறக் கோட்டுடன் வந்து மிக அமைப்பாக மேசை மேல் கொணர்ந்த

புத்தகங்களை வைத்தார். "Good Morning Sir", என்று வகுப்பே எழுந்து நின்று மனதார வரவேற்க, குரு திரு எம்.கார்த்திகேசன் அவர்களும் ''Good Morning, sit down please" என்று முறுவலித்துக் கூறினார்.

இதற்கு முன் கணித ஆசிரியரின் கணிதக்கடைச்சலிற் சிக்கிக் கணக்கு விட்ட களைப்புகள் காரிருளாக மறைய, ஆங்கில இலக்கியப் பூங்காவுள் காலம் தாழ்த்தாது, அழைத்துச் சென்று விட்டார், திரு.எம்.கார்த்திகேசன் சேர்.

மிக எளிமையாக அழுத்தம் திருத்தமாக ஆங்கில வாக்கியங்களை மாணவர்ளுக்கு இலகுவாக விளங்கக் கூடியதாக அர்ப்பணிப்பாக விரிவுரைபோல் விளக்கினார். நாங்கள் மகுடியிற் சிக்குண்ட நாகங்கள் போல் ரசித்து மனதின் உண்டியலில் போட்டது போல், பின்னர் அசை போட சேமித்துக் கொண்டிருந்தோம்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு சகமாணவன் துடிப்பானவன் (ஒரு பிரபல வர்த்தகரின் மகன்) அவர் பெயரை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. எழுந்து நின்று, "Sir, why din't you remove your coat today?– Is your shirt with no sleeves? (ஐயா, ஏன் உங்கள் கோட்டை இன்று கழட்ட வில்லை? உங்களது சேட்டிற்கு கைப்பட்டைகளில்லையா?)" என்றான், கேலியாக. மின்னல் போல் அவன் கன்னத்தில் பளீர் பளீரென அடிக்கு மேல் அடி விழும் என அதிர்ச்சியுடன் எதிர்பார்த்தோம்! ஆம், கை மின்னல் போல் பறந்தது. அவன் கன்னத்துக்கு அருகே சென்றது. சற்று அருகே கன்னத்திற்கு சமீபமாக திடீரென ஸ்தம்பித்து, நின்று விட்டது! குருவின் குரல் கேட்டது. அவர், "I don't want to dirty my hand (எனது கையை நான் அழுக்காக்க விரும்பவில்லை)" என்று கூறி புன்முறுவலுடன் எங்களைக் கனிவுடன் பார்த்தார்கள்.

அந்த மாணவனின் அகம்பாவ அழுக்கு நீர் வழிந்தோடி தூய்மையாகிக் கொண்டிருந்தது. எமது குருவின் அளப்பரிய பொறுமை பாரெங்கும் வியாபித்ததென்றால், அது மிகையாகாது. ஆங்கிலத்தில் ஆற்றல், தேர்ச்சி பெற வேண்டும் என எனக்கு ஒரு அவா ஏற்பட்டது. ஒரு ஆங்கில மாஸ்டரிடம் தனியாக எனக்கு ஆங்கிலம் கற்பிப்பீர்களா? எனத் தயவாகவும் நயமாகவும் வேண்டினேன். அவர் மாதம் 30 ரூபா தரவேண்டும் என நிபந்தனையிட்டார். ''இருபத்தைந்து சதத்துடன் காலைச் சாப்பாட்டை பூர்த்தியாக்கும் இன்றைய நிலையில், தண்டப்பணமா?" என்றான் என் நண்பன் நிசார். ''அப்ப என்ன செய்வது?" என்றேன். ''கொம்யூனிஸ்ட் கார்த்திகேசன் சேர் இருக்கவே இருக்கிறார்", என்றான்.

அவ்வமயம் ஒரு பிற்பகல் 4 மணியளவில், கார்த்திகேசன் சேர் விடுதிப் பக்கம் வந்தார்கள். நான் வணக்கம் தெரிவித்து, விடயத்தைக் கூறினேன். நூலகத்திலிருந்து 'Daily Mirror' பத்திரிகையிலிருந்த பத்திராதிபர்

குறிப்பை வாசித்து சுருக்கி 110 சொற்களில் எழுதித் தினமும் சமர்ப்பிக்குமாறு அன்பாய் வேண்டினார்கள். அப்படியே தினமும் திருத்தித் தந்தார்கள். ஒரு மாதம் முடிய 15 ரூபாவை எனது அப்பியாசக் கொப்பிக்குள் வைத்து திருத்தம் செய்ததற்காகச் சமர்ப்பித்தேன். என்ன 15 ரூபா என்று ஆங்கிலத்தில் கேட்டார். உங்களுக்கு குநநள என்றேன். "I won't accept fees for anything" என்று சொல்லி மீள உடனே பணத்தை எனது சேட் உறையில் இடுமாறு வேண்டினார்கள். பரீட்சைகளில் திறமைச் சித்திகள் பெற்றேன். மனதில் அவர் அர்ப்பணிப்பின் ஆசிகள் இன்றும் நறுமணம் வீசிக் கொண்டிருக்கிறது. அவரை பின்பற்றியே செயலாற்ற வேண்டுமென என் மனச்சாட்சி கூறியதால் அன்றுதொடக்கம் செயல்களைப் பலனை எதிர்பாராது, ஆற்ற உறுதி பூண்டு விட்டேன்.

1973ம் ஆண்டு ஒட்டுசுட்டானில் எனது சிவன் கோயிலடி, தோழர் என்று அழைக்கப்படும் திரு.துரைரெத்தினத்துடன் எனது பாசத்துக்கு உரிய குரு உயர் திரு.எம்.கார்த்திகேசன் அவர்கள வந்தார்கள். அவரைக் கண்டதும், எதிர்பாராது அதிர்ந்துவிட்டேன்! கை கூப்பி வணங்கினேன். "Why didn't you go for your duty?" என்று சிரித்துக் கொண்டு கேட்டார். ஏதோ எதேச்சையாக லீவு போட்டு விட்டேன் நேற்று, என்றேன்.

பல வருடங்களுக்குப் பின்னர் ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலத்தின் பின்னர், உங்களை நேரில் கண்டு கலந்துரையாட வழி சமைத்து விட்டது, எனக் கூறி மெய்மறந்து, கதிரையில் இருந்தவர் பாதங்களை கண்ணீர் மல்க இரு கைகளாலும் தொட்டுக் கும்பிட்டேன். என்னைத் தொட்டு சிரித்துக் கொண்டு, ''என்ன? கம்பராமாயணத்தில் பரதன் இராமர், கட்டத்தை இன்று இங்கு நன்கு உணர்ந்தேன்", என்றார்கள்.

R. M. வேகாவனம்,
முன்னாள் மாணவனும், திருகோணமலை வாசியுமாவார்.

* * *

தோழர் கார்த்திகேசன் பற்றிய நினைவலைகள்

மு. சின்னையன்

தோழர் கார்த்திகேசனைப் பற்றி எழுத முற்பட என் மேனி சிலிர்க்கிறது. பல்வேறு உணர்வுகள் நெஞ்சை நெருடுகின்றன. என்னைப் போன்ற ஒரு சாதாரண மனிதன் ஒரு மேதையோடு தோழமை உணர்வோடு சகஜமாகக் கலந்துரையாட, பழகக் கிடைத்த சந்தர்ப்பங்களை நினைத்துப் பெருமித மடைகிறேன். அவரின் சிரித்த முகம் இதயத்தை நிறைக்கிறது. அந்த நினைவுகளை அசை போடுகிறேன்.

அவருடைய நகைச்சுவையொன்றினை பகிர்ந்துகொள்கிறேன். கட்சி அலுவலகத்தில் ஒரு நாள் தோழர் காத்தி உட்பட பல தோழர்கள் கூடியிருக்கின்றனர். அரசியல் நாட்டு நடப்புக்கள் பற்றி உரையாடிக் கொண்டிருக்கிறோம். அந்த வருடம் வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கலுக்கு விசேட பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்காக தென் பகுதியிலிருந்தும் இ.போ.ச பஸ்கள் பல வந்து சேவையிலீடுபட்டன. அப் பஸ்வண்டிகளை ஓட்டி வந்தவர்கள் சிங்கள டிரைவர்கள். அவர்களுக்கு பஸ்தரிப்பு இடங்கள் தெரியாததால் மணி அடித்த இடமெல்லாம் பஸ் நிறுத்தப்பட்டு போக்குவரத்து ஒரே அல்லோல கல்லோலப்பட்டது. அதில் ஒரு பஸ் தடம் புரண்டு விட்டது. தடம்புரண்ட பஸ்சில் இருந்த பெண்மணியின் தங்கச்சங்கிலியை யாரோ திருடன் அறுத்து விட்டான். இச் செய்தி அப்போ யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ''ஈழநாடு" பத்திரிகையில் வெளிவந்து இச் செய்தி பற்றி ஒரு தோழர் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த கார்த்திகேசன் ''அவன் திருடன் அல்ல, ரெயிலில் போவதாக நினைத்து விட்டான், அவ்வளவுதான்" என்று கூறினார். ''ஏன்" என்பது போல் அவரை நாம் பார்த்தோம். அவர் அதற்கு இவ்வாறு விளக்கமளித்தார். ''ரெயிலில் போகும் போது, ஆபத்தென்றால் அபாயச் சங்கிலியை பிடித்து இழுக்க வேண்டும். பஸ் தடம்புரண்டு ஆபத்திலிருக்கும்

போது அவன் பக்கத்திலிருந்த பெண்மணியின் சங்கிலியை இழுத்திருக்கிறான், அவ்வளவுதான்" என்று சொல்லிவிட்டு வயிறுகுலுங்கச் சிரித்த எங்களுடன் சேர்த்து தானும் சிரித்தார் எங்கள் நகைச்சுவை மன்னர்.

வேறொரு சந்தர்ப்பம் மாஸ்டரை நடுநாயகமாகக் கொண்டு அரட்டைக் கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது. அப்போது தான் அங்கு நுழைந்தேன். என்னைக் கண்டதும் நகைச்சுவை மன்னன் திடீரெனக் கேட்டார், ''நடராசப் பெருமான் இடது காலைத் தூக்கி அரையில் வைத்திருப்பதன் தத்துவம் என்ன? மார்க்சிஸவாதியின் சமய விளக்கத்தையறிய நீங்களே சொல்லுங்கோ எனக் கேட்டுக் கொண்டே வாங்கிலில் இருந்தேன். நடராசப் பெருமான் புலித்தோலை அரையிலணிந்து சிவதாண்டவம் ஆடினார். அந்த திருநடனத்தை பக்த கோடிகள் பார்த்துப் பரவசம் அடைந்து கொண்டிருக்கிறார்கள். நடன அசைவால் புலித்தோல் ஆடை தளர்கிறது. அதையுணர்ந்த நடராசப் பெருமான் இடது காலைத் தூக்கி புலித் தோலாடையை அரையோடு சேர்த்து அழுத்தி அவிழ்ந்து விழாதவாறு பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். பக்தர்கள் பரவசமடைந்து ஏற்றிப் போற்றிப் பாடுகிறார்கள். ''கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்".

கடந்த காலத்தை இரை மீட்கிறேன். அந்நினைவில் சுகம் காண்கிறேன்.

மு. சின்னையன்,

மானாவளை. மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி வாசியாவார்.

* * *

சில வேளைகளில் சில தீரர்களை வெளி உலகம் அறிவதில்லை

டொமினிக் ஜீவா

தோழர் கார்த்திகேசனை எனக்கு முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தெரியும். ஆரம்ப காலத்தில் தினசரி அவரை நான் காண்பது வழக்கம். என்னை அரசியல் இயக்கத்தில் பங்கேற்கப் பழக்கியவரே அவர்தான்.

திரிகரண சுத்தியாகத் தான் நம்பிய இலட்சியத்திற்கு உழைத்தவர் அவர். எந்தவித கபடுசூதுமற்று உண்மையாக உழைக்கும் மக்களுக்கு கடைசிவரையும் பாடுபட்டவர்.

என்னைப் போன்று பல இலக்கியவாதிகளை தமிழுக்குத் தந்த பெருமை அவருக்குண்டு. இது அரசியல்வாதிகள் அதிகம் உற்சாகம் காட்டாத வழி. இருந்தும் அவரது ஆளுமையால் உருவாக்கப்படாத, அவரது தாக்கத்தால் பண்படுத்தப்படாத முற்போக்கு எழுத்தாளர் இல்லை என்றே சொல்லி விடலாம்.

அவரது நகைச்சுவைச் சம்பாஷணையே தனித்தன்மை வாய்ந்தது. ஆணித்தரமாக அவர் சொல்லும் சிரிப்புக் கதைகள் தொகுக்கத் தக்கவை என்பது எனது கருத்து.

பின் தங்கிய சமூகப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அவர் மீது காட்டும் பாசம்வெறும் சகோதரபாசம் மாத்திரமல்ல. உண்மையான ஒரு தோழனுக்குரிய ஆழ்ந்த நட்புடனேயே அவர்கள் அவர் மீது அன்பைப் பொழிந்தனர், தோழமை பூண்டனர்.

பிற்காலத்தில் அரசியல் மாற்றுக் கருத்துக் காரணமாக நாங்கள் இருவரும் இரு திசைவழி திரும்பிய பொழுதும் கூட, எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியுமற்று அவர் நடந்து கொண்டது அவரது மனித நேயத்தைக் காட்டுகின்றது.

ஒரு பூரண மனிதனுக்குரிய பண்புகளுடன் அவர் யாவருடனும் பழகினார். விவாதித்தார். அரசியல்வாதிகளிடையே இப்படியான குணாம்சங்களைக் கொண்டவர்கள் புகழ் பெறுவது அரிது. அவரது புகழ் அடக்கமானது ஆடம்பரமற்றது. எனவேதான் அவரது இழப்புக் கேட்ட சகல பகுதி மக்களும் கண்ணீர் விட்டு அழுதனர்.

அந்தக் கண்ணீருக்கு ஒருவித பெறுமதி உண்டு. அது போலித் தனமானதல்ல. ஆத்ம உணர்வின் வெளிப்பாடே அது.

நாங்கள் மிக நெருங்கியவர்கள் அவரைக் குறிப்பிட்டுப் பேசும் போது மிக நெருக்க மானவர்களுடன் சம்பாஷிக்கும் போது ''காத்தார்'' எனச் செல்லப் பெயரிட்டு அழைத்துக் கொள்வோம். ஆனால் அவருடன் உரையாடும் பொழுது அல்லது அவருடன் நேரில் பேசும் பொழுது மாஸ்டர் என்றே சொல்லிக் கொள்வோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர் யாழ்ப்பாண நகரில் விக்டோரியா வீதியில் தான் குடியிருந்தார் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தார். அரசியலில் மிகத்தீவிரமாக செயல்பட்டு இயங்கி வந்தார். இவரது இருப்பிடத்தில் தான் 1948-ல் நான் முதன் முதலில் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களைச் சந்தித்தேன். அதன் பின் எத்தனையோ சந்திப்புகளுக்கு இவரது இல்லம் இடமமைத்துத் தந்துள்ளது.

அந்தக் காலத்தில்தான் அவரது வீட்டில் எனக்குக் கே.கணேஷை அறிமுகப்படுத்தி வைத்தார். கே.ராமநாதனும் அங்கேதான் அறிமுகமானார். கந்தையா, எம்.சி., அரியம், வைத்தி, பூபால் ஆகியோர் அவருடைய அறிமுகத்தின் பின்னர்தான் எனக்கு அறிமுகமானார்கள். அதன் பின் பலர்.

சாதாரண கீழ் மட்டத் தோழர்களையும் தனக்குச் சமதையாக நடத்திக் கௌரவிக்கும் பெரும் பண்பு கடைசி காலம் வரையும் அவரிடம் இருந்து வந்துள்ளதை அவரை அறிந்தவர்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

நடு இரவில் கூட்டச் சுவரொட்டிகள் ஒட்ட அவரது வீட்டிலிருந்துதான் பசை வாளி, பிரஸுடன் புறப்படுவோம். அவரும் ஒரு வாளியைச் சுமந்து கொண்டு வருவார். போகும் வழியெல்லாம் நகைச்சுவைப் பகிடிகள் தான். இரவு நித்திரை விழிப்பின் தூக்கச் சுமையே அழுத்தாத அளவிற்கு உற்சாகமாகக் கதைகள் பல கூறி வருவார். இடைநடுவே இரவுக் கடைகளில் நடுச்சாம நேரத்தில் தேநீர் அருந்தச் செல்வோம். சகலருக்கும் பிளேன்டீ தான் ஓடர்.

யாழ். மாநகர சபையின் உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் ஆற்றிய பணிகளில் குறிப்பிடத் தக்கதொன்று, சிறுபான்மை இனத்துக்குள் இன்னும் சிறுபான்மையாக வசித்து வந்த யாழ்ப்பாண முஸ்லிம் மக்களுக்குக் கௌரவமளித்து அவர்களின் பிரதிநிதிகளில் ஒருவரை - சுல்தானை - யாழ்ப்பாண நகர மேயராக்கிய சாதனை இன்னமும் முஸ்லிம் மக்களால் நன்றியுணர்வுடன் நினைவு கூரத்தக்கதாக அமைந்துள்ளது.

எதற்குமே வளைந்து கொடுக்காத இவரது நேர்மை சகல அரசியல் கட்சியினராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். காத்தியின் நெஞ்சம் ஓர் அரசியல்வாதியினுடையது என்பதை விட, அவரது இதயம் ஒரு கலைஞனுடையது என்பதே சரியானதாகும். ஏனெனில் மனிதாபிமானம் மிக்க மிகச்சிறந்த பெரும் மனிதன் அவர்.

டொமினிக் ஜீவா,
முற்போக்கு எழுத்தாளர்,
செப்டம்பர்-ஒக்டோபர் 1977ம் ஆண்டு ''மல்லிகை''யில்
பிரசுரமான கட்டுரையின் ஒரு பகுதி

எம். கே. - M. K.

அ. நமசிவாயம்பிள்ளை

தூய மனம், தூய செயல், நேரிய நோக்கு, சிறந்த கல்வியாளர், கவர்ச்சியான பேச்சு, எப்போதும் நகைச்சுவை. ஏராளமான பகிடிகள். நாற்பத்தைந்து நிமிட வகுப்பு பாடவேளையில் நேரம் போவதே தெரியாது. பிரம்பினைத் தொட்டு அறியாதது அவரது கை. ஆம், அன்பினால் சாதிக்க முடியாதது ஒன்றும் இல்லை என்பதற்கு கார்த்திகேசன் மாஸ்டர் ஒருவரே எடுத்துக்காட்டு.

அவரது சைன் (குறியீடு) M.K. 1971ம் ஆண்டு என்று நினைக்கிறேன் இலங்கையில் எல்லோரும் மிளகாய் கன்று நாட்டினார்கள் அல்லது நாட்ட எத்தனித்தார்கள். ஒரு கிலோ மிளகாய் அப்போது நூறு ரூபாய். இப்போது ஆயிரம் ரூபாய்க்குச் சமானம். மரவள்ளியும் அந்நேரத்தில் பெறுமதியான விளைச்சலே. கார்த்திகேசன் மாஸ்ரர் தனது சைனில்,

மிளகாய்க்கன்று - MK = M - மிளகாய் + K- கன்று

மரவள்ளிக்கட்டை- MK = M - மரவள்ளி + K- கட்டை

இப்படியாக இன்னுமெத்தனையோ உதாரணங்கள் கூறி M.K. யின் மகிமையை தமாஷாக எடுத்துக் கூறுவார்.

மாணவரது வகையறிந்து, அவர்களது கொள்ளளவு அறிந்து மனம் மகிழ கல்வியை தித்திக்கச் செய்து தேனொழுக ஊட்டியதால் இன்றும் ஏராளமான மாந்தர்களது உள்ளங்களில் தெய்வமாக வாழ்கின்றார்.

மொத்தத்தில் ஆளுமைமிக்க ஆசிரியர், அதிபர் பலரை பெற்று பாரினில் பெருமை சேர்த்து வருகிறது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. அமரர் மு.கார்த்திகேசன் அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியராகவும், அதிபராகவும், மற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பண்டத்தரிப்பு கல்லூரியிலும் அதிபராக கடமையாற்றி எல்லோரதும் நன்மதிப்பை பெற்றிருக்கிறார். சுருங்கக் கூறின் கார்த்திகேசன் மாஸ்டர் ஒரு நடமாடும் பல்கலைக்கழகம். இளையதலைமுறையினருக்கு ஒரு நிழல் தரும் விருட்சம் அவரது சேவையைப் பெற்று உயர்ந்தவர்கள் ஏராளம். அன்னாரின் 25 ஆவது நினைவுதின நந்நாளில் எமது உள்ளத்தே அவரது நடமாடும் நல்லுருவத்தினை போற்றி நிறைவு செய்கிறேன்.

அ. நமசிவாயம்பிள்ளை,
ஆசிரியர்,
காரைநகர், இலங்கை.

* * *

Shiva Thandavam
from coconut tree to palmyrah

A freak sheath (பாளை) appeared on one of the coconut trees in the Jaffna town. It resembled Lord Natarajar in his dancing posture -Shiva Thandavam. It was not only an attraction, but many believed that was a wonder. It had drawn many devotees to the spot to worship.

Since the students talked very freely with Mr. Karthigesan, this was brought for discussion. They asked him whether he had been to that spot. His reply was -

''தில்லையில் தாண்டவர், தென்னையில் தாவினார்,
சித்திரை பிறந்தால் பனைக்குத் தாவுவார்".

He meant that coconut toddy season is early in the year and then in April toddy is tapped on palmyrah sheath (பனம் பாளை).

பெருந்தகை உயர்திரு மு. கார்த்திகேசன் அவர்களின் வெள்ளி விழா ~ கவிதாஞ்சலி

''கவிமணி'' - இராசையா ஸ்ரீதரன்

சிந்தனையில் என்றுமே சிறப்பான எண்ணங்கள்
சீர்தூக்கிப் பார்த்திடும் திறன்மிக்க சிற்பியான
உந்தனை எண்ணினால் உயர்வான தத்துவங்கள்
உள்ளத்தில் மிளிருதே உவகையைத் தருகுதே!
வந்தனை செய்தே உம்மைச் சிந்தனை செய்கின்றோம்
வளமிக்க வாழ்வுக்கு வழி சமைத்த பெரியோய்!
எந்தனை உலகினில் ஏற்றமுடன் வாழச் செய்த
ஏந்தலே உம்மை நாம் மறக்கத்தான் முடியுமா?

கண்ணியத்துடன் வாழ்ந்த பொன்மனச் செம்மலவர்
காலத்தால் அழியாத கருத்துருக் கலசங்கள்
புண்ணியஞ் செய்திட்ட புகழ்மிக்க பண்பாளர்
பூவுலக மீதினிலே புது உலகம் படைத்திட்ட
எண்ணிய கருத்துக்களை ஏற்றமுடன் அமுல்செய்ய
எத்துணை தீரமும் எழில்மிகு வீரமும்
மண்ணிலே என்றும் மங்காத மணி விளக்காய்
மாண்புடன் வாழியவே மங்காத திருவிளக்காய்!

சேர்த்தொன்றாக அனைவருக்கும் வெளிச்சமாய்த் தெரிந்தவரே!
வேதனை தீர்த்திட நற் சாதனை புரிந்தவரே!
கார்த்திகேசன் நாமங்கொண்ட காருண்ய சீலரே
கம்யூனிஸ்ட் கட்சிக்கெனக் கடுமையால் உழைத்தவரே!

பார்த்திருந்தோம் நாமும் ஒரு பாமாலை சூட்டிடவே
பாமர மக்களிடையே பசுமையாய் உறைந்தவரே!
நீர்த்திவலை வாழ்க்கையென நீடுலகுக் குணர்த்தியவரே
நின்னையே நினைந்து நிதமும் வாடுகின்றோம்.

பத்தரை மாற்றுப் பொன்னாய்ப் பாரிலே திகழ்ந்த ஐயா!
பாராளும் வேந்தனைப் போல் ஊரார்கள் மத்தியிலே
அத்தரைப் போல் மணம் வீசி அகிலத்திலே அருமருந்தாய்
நித்திலமாய் ஒளிவீசி நிரந்தரமாய் வாழ்ந்திடவே
இத்தரை மீதினுன்போல் இனிப் பிறப்பார் எவருமுண்டோ?
வித்தகத் திறமை மிக்க மெத்தவன்புள்ளங் கொண்ட
புத்தரைப் பணிந்தே நாளும் புனிதமுடன் திகழ என்னை
சத்திய நெறியில் செல்ல வைத்தவுனை மறவோம்!

பாருலகில் என்னையே பாங்குடன் வாழவைத்த
பரந்த நோக்கங்கொண்ட பண்பான மனிதரே!
நீருலகில் வாழ்ந்த வாழ்க்கை சரித்திரமாய் ஒளிவீச
நேசமுடன் எம்மனதில் பாசமுடன் உறைந்தீரே!
சீருடைய நற்பழக்கம் சிறந்திடவே பணி செய்து
சித்திரமாய் வாழ்ந்து முத்திரை பதித்தவரே!
வேருடைய மரம் போல வேரூன்றி மனங்களிலே
முத்தெனவே பதிந்திட்ட முத்தையினிக் காண்போமோ?

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
என்று சித்தமிரங்கியே எமக்குப் பயிற்றுவித்து
புத்திமிகு ஆசான் ஆளுமை மிக்க அதிபர் அன்புத்தந்தை
அன்று கற்பித்ததனால் இன்று நலம் வாழ்கின்றோம்
கத்திமுனை போன்ற புத்தியைப் பெற்றதனால் இத்தரணியில்
பொன்னான வாழ்வு நீர் வாழ்ந்தீரையா!
சுத்திகரித்த நீர் போல் தெளிந்த அறிவுபெற்ற
கார்த்திகேசன் மாஸ்ரரே
உம் திருவடிகள் வாழ்க பல்லாண்டே

நான் கற்கும் காலத்தில் எனக்குக் கல்வியறிவூட்டி என்னை அறிஞனாக உருவாக்கிய திருவாளர் மு.கார்த்திகேசன் மாஸ்ரர் அவர்கள் தெய்வத்துக்கு நிகரானவர். அவரது அஞ்சா நெஞ்சமும் ஆளுமையும் திறமையும்

யாருக்குமில்லை. அவருடைய உருவாக்கத்தில் வந்தவர்கள் நிறையப் பேர் உண்டு. அந்த வகையில் சிறியேனையும் உருவாக்கிய பெருமை அவருக்கு உண்டு.

ஒருமுறை கட்டுரை எழுதுவதற்கு எனக்குக் கற்பனை வரவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் ஹாஸ்யமாக 'கள் பனையில் ஏறி இருப்பதாகப் பாவனை செய்து கற்பனையை வளர்த்துக் கொள்ள வேண்டியது தானே' என்று கூறியது இப்போதும் என்னுடைய காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இப்படிக் கற்பிக்கும் போது இடையிடையே சிரிப்புப் பகிடிகளும் கூறிக் கற்பிப்பதை மனதில் பதிய வைப்பதில் அவருக்கு நிகர் அவரே.

அவர் உடல் தான் மறைந்ததே தவிர உருவம் மறைவில்லை. இப்போதும் நம்மிடையே தோன்றாத் துணையாக இருந்து வாழ்ந்து கொண்டு தானிருக்கின்றார். இருபத்தைந்து ஆண்டுகள் ஓடி மறைந்து விட்டன. ஆனால் அவரது நினைவுகள் பசுமரத்தாணிபோல் மனங்களில் பதிந்து விட்டன.

அவருடைய வாழ்க்கைப் பாதையில் நாமும் பின்சென்று அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். இன்றும் நிழலாடிக் கொண்டிருக்கும் அவரது அன்புருவம் நம்மை வழிநடத்திச் செல்லும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

''கவிமணி''- இராசையா ஸ்ரீதரன்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம் வாசியாவார்

* * *

அரசியல் நகைச்சுவைகள் சில:
பலரும் கேட்டு சுவைத்தவையும் சமர்ப்பித்தவையும்

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன் அரசியலை அறப்படித்தவர், அதிலும் ஈழத்து அரசியலையும் தமிழின் பெயரில் அப்பாவி மக்கள் தமிழ் அரசியல் வாதிகளால் ஏமாற்றுப்படுவதையும் ஆரம்பத்திலிருந்தே நன்குணர்ந்தவர். காலத்திற்கு காலம் ஈழத்து அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களையும் நடைமுறைகளையும் விகடமாகவே மக்களுக்கு எடுத்துக் கூறி உணரவைக்க முயன்றிருக்கிறார்.

பலரும் அந்நேரம் அதை விகடமாகவே ரசித்துச் சென்றனர். ஆனால் காலப்போக்கில் அவற்றின் ஆழ்ந்த அர்த்தத்தையும், அவற்றிலிருந்த உண்மையையும் புரிந்து கொண்டார்கள், இனியும் புரிந்து கொள்வார்கள்.

செல்வ(ம்)~நாயகம் எங்கே?

தோழர் கார்த்தி பேசும்போது நகைச்சுவை கசியவே பேசுவார். பகிரங்க மேடைகளில் காத்திரமாக கருத்துக்களை ஹாசியமாக கூறி எளிதில் விளங்கவைப்பார். தமிழரசுக் கட்சி தலைவராக இருந்த காலஞ் சென்ற எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் கொழும்பு நீதிமன்றங்களில் வழக்காடி உழைத்தவர். மலைநாட்டில் பல ஏக்கர் தேயிலைத் தோட்டத்திற்குச் சொந்தக்காரர். காங்கேசன்துறை தொகுதியின் பாராளுமன்ற பிரதிநிதியாக பலகாலம் இருந்தவர். செல்வத்தைத் தெற்கிலும் அரசியல் தலைமைத்துவத்தை வடக்கிலும் பெற்றிருந்த செல்வநாயகத்தை அம்பலப்படுத்துவதற்கு ஓர் கூட்டத்தில் ''செல்வம் அங்கே! நாயகம் இங்கே! என்று கிண்டலாகக் கூறினார்.

சீற் பிடித்தார் அமிர்தலிங்கம்!

இன்னொரு சந்தர்ப்பத்தில் காலம் சென்ற அமிர்தலிங்கம் அவர்களின் பாராளுமன்ற ஆசன ஆசையை விளக்குவதற்கு எடுத்துக்கூறிய விடயம் மிகச்சுவையானது. அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டைத் தொகுதியில் 1970ல்

தோல்வியுற்று அத்தொகுதியில் தான் மேற்கொண்டு வெல்ல முடியாது எனக் கருதி, எஸ்.ஜே.வி. செல்வநாயகம் விட்டுச் சென்ற காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டார். அக்காலத்தில் வடபுலத்திலிருந்து கொழும்பிற்குப் புகையிரதத்தில் செல்வோர் வசதியான 'கோனர் சீற்' (மூலை இருக்கை) பிடிப்பதற்காக காங்கேசன்துறைப் புகையிரத நிலையத்திற்கு சென்று வசதியான ஆசனம் பிடித்து அமர்ந்துவிடுவார்கள். இத் தாற்பரியத்தை வைத்து ''அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டையிலிருந்து காங்கேசன்துறைக்குப் போய்விட்டார் சீற் பிடிக்க' எனக் கிண்டலாக கூறினார்.

கா. க. பொன்னம்பலம்

ஆரம்ப காலங்களில் யாழ்ப்பாணத் தொகுதியில் தேர்தலில் திரு.மு.கார்த்திகேசன் அவர்கள் ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் போட்டியிட்டார் என்பது பலரும் அறிந்ததே. தேர்தலில் நிற்கும் போட்டியாளர் மனுவினை, மற்றைய போட்டியாளர் பரிசீலிக்கும் உரிமை உள்ளது. அந்தவகையில் கார்த்திகேசன் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினது மனுவைப் பரிசீலித்த போது அவரது பெயரில் 'ஜ' எனும் எழுத்திற்குப் பதிலாக 'ஐ' பிரயோகமாகி ஜீ.ஜீ.பொன்ன.... என்று எழுதப்பட்டிருந்தது. கார்த்திகேசன் தமிழில் இப்படியான ஓர் எழுத்து இல்லையென்றும், ஆகவே இந்த மனுவினை ஏற்றுக்கொள்வதை தான் ஆட்சேபிப்பதாகக் கூறினார்.

ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்றவர்களுக்கு வால்பிடிகள் அதிகம் என்பதால், இச்செய்தியை அவருக்கு விரைவாக எட்டச்செய்து உடனே தேர்தல் காரியாலயத்திற்கு வரவழைத்து விட்டார்கள். தனது சகபாடிகளுடன் வந்திருந்தாலும் மனு நிரப்புவதற்கு போட்டியாளரே முழுப்பொறுப்பும் எனும் பட்சத்தில், ஜீ.ஜீ.பொன்னம்பலம் தானே அதை நோக்கவேண்டிய இக்கட்டான நிலைக்குள்ளானார். அதைப் பார்த்தவருக்கு தவறும் புரியவில்லை, எதைத் திருத்துவது என்றும் தெரியவில்லை. வந்த சகபாடியொருவர், தனது முக அசைவினால் 'ஐ' இல் இருந்த வளைவை மாற்றி 'ஜ' ஆக்க வேண்டுமென காட்டினார். உள்ளே வரும்பொழுதே, ''இந்த நஞ்சனா?" என்று கார்த்திகேசனைப் பார்த்து முணுமுணுத்தபடி நுழைந்தாராம். பிறகு ஏதோவொரு மாதிரி பிழையைத் திருத்தி மனுவை மறுபடி தாக்கல் செய்து சென்றனர்.

சென்று கொண்டிருந்த ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்கு கார்த்திகேசன் அவர்கள் கா.க.பொன்னம்பலம் என பெயரை வைத்துக் கொண்டிருந்தால் இந்தச் சிரமம் ஏற்பட்டிருக்காதே எனக் கூறி நன்கு கடுகடுக்க வைத்து அனுப்பிவிட்டார். (காங்கேசு கணபதி என்ற பெயர்களுக்கான முதல் எழுத்துக்களையே பொன்னம்பலம் ஜீ.ஜீ என்று பாவித்தார்)

சீ. சீ. பொன்னம்பலம் ~ திரவியம் தேடி திரைகடலோடினார்

தனது பணபலத்தையும், ஏற்கனவே இருந்த அரசியல் செல்வாக்கினையும் பயன்படுத்தி தொடர்ந்தும் தொடர்ந்தும் தேர்தலில் வெற்றி பெற்றுவந்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் இறுதியில் மண்கவ்வ வேண்டிவந்தது. அத்தேர்தல் முடிவினை கார்த்திகேசன் அவர்கள் இவ்வாறு எடுத்துரைத்தார். வடபிரதேச மக்கள் ஒருபடியாக அது புளிப்பானதுதான் எனப் புரிந்து, ''சீ.சீ.பொன்னம்பலம்" என்று வீசியெறிந்து விட்டார்கள்.

அரசியல் பதவியை இழந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அதற்கு மேல் நாட்டில் தங்காது வெளிநாடுகளுக்குச் சென்றார். அதுபற்றியும் கார்த்திகேசன், ''திரைகடலோடி திரவியம் தேடு" என்பது முதுமொழி, ஆனால் ''திரவியம் தேடி திரைகடலோடு" என்பது தமிழ்த் தலைவர்கள் எனக் கூறப்படுவோர் மொழி என்று பெருஞ்சொத்துக்களை தமது நாட்டிலேயே பலவழிகளாலும் சேர்த்துவிட்டு அதை அனுபவிக்க பிறநாடுகளுக்கு சென்ற ஜீ.ஜீ. எனக் கிண்டலாகக் குறிப்பிட்டார்.

ஜீ.ஜீ.யின் ஆங்கில ஷொட்

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் காலம் சென்ற திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமது தமிழ்ச் சொற்பொழிவின் இடையே சற்று நேரம் ஆங்கிலத்தில் முழங்கி பார்வையாளர்களை மயங்கவைப்பார். இது பற்றி மாஸ்ரர்:

உதைபந்தாட்டத்தில் 'கோண (Angle) கிக்' மூலம் 'கோல்-Goal' செலுத்துவது ஒரு விறுவிறுப்பான காட்சி. அதுபோல் ஜீ.ஜீ. யின் ஆங்கில இடைப்பேச்சு ஒரு 'ஆங்கில் ஷொட் (Shot)'. ஆங்கில் என்பது ஆங்கிலம், Angle இரண்டையும் கலந்து காத்தார் ஏற்படுத்திய சொல்லாகும்.

தமிழனைத் தட்டி எழுப்பியவன் யார்?

1956 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் இனவாத உணர்வுகளைத் தட்டி எழுப்பி அதனால் அரசியல் வளர்த்தவர்கள் பலர். ''தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா!", ''தூக்கு மேடை பஞ்சு மெத்தை", ''துப்பாக்கிக் குண்டு விளையாட்டுப் பந்து", ''சிறைச்சாலை பூஞ்சோலை" என கோஷங்களைக் கிளப்பிப் பல பிரமுகர்கள் பவனிவந்த காலம் அது. அக்காலகட்டத்தில் ஆசிரியனாகப் பணிபுரிந்த கார்த்திகேசன் மாஸ்ரர் ஒரு பாடவேளை, ''தூங்கிக் கிடந்த யாழ்ப்பாணத் தமிழனைத் தட்டியெழுப்பியவர் யார்?" என மாணவரைக் கேட்டார். மாணவர் பொன்னம்பலம், இராமநாதன், செல்வநாயகம் எனப் பல பெயர்களைக் கூறி பட்டியலைத் தொடர்ந்தார்கள்.

மாஸ்ரர் சிறிதுநேர மௌனத்தின் பின்னர் சிரித்துக் கொண்டு ''வேறு யாருமில்லை அனுராதபுரத்து சிங்களவர் தான்" என்றார். யாழ்ப் பாணத்திலிருந்து ரயில் ஏறி முழுசீற்றிலும் நீட்டி நிமிர்ந்து இடையில் வரும் ஸ்டேசன்களில் ஏறுபவர்களைக் கவனியாதது போல் பாசாங்கு செய்து படுத்திருப்பது அவ்வேளைகளில் சில யாழ்ப்பாணத் தமிழரின் வழமையாகிருந்தது. புகையிரதம் நின்றதும், அங்கு ஏறும் சிங்கள மக்கள் இவர்களைத் தட்டி எழுப்பிவிடுவார்கள். இதனாலேதான் தூங்கிய தமிழனைத் தட்டி எழுப்பியவன் சிங்களவன் எனக் கூறுவோம்.

இக்கரைக்கு அக்கறை பச்சையில்!

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் ஈழக்கோரிக்கையை தமிழீழப்பகுதியில் வலியுறுத்திய அதேவேளை, தெற்கில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மறைவாக நல்ல உறவைப் பேணியது. இதனை ''இக்கரைக்கு எப்போதும் அக்கறை பச்சையில்தான்" என்றார் கார்த்திகேசன்.

சாயம் இறங்கியதும் ஏறியதும்

வடபகுதிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர், பிரபலமானவர், மேலும் பிரபலம் வேண்டி, கட்சியும் மாறி, கார் ஒன்றும், அதுவும் சிவப்புநிறத்தில், வாங்கியிருந்தார். அப்பொழுது மாஸ்ரர் கூறினார்:

அவருடைய சாயம் இறங்கி, இப்பொழுது அவர் காரில் ஏறிவிட்டது.

* * *

கொள்கைப் பற்றாளன்

சி. சபாநாத்தன்

கார்த்திகேசன் மாஸ்ரர் யாழ்ப்பாணத்தில் வசிப்பதாயும், கம்யூனிஸ்ட்காரன் அவருக்கு 5 பெண்பிள்ளைகளென்றும், குடும்பத்திற்கு தேடவேண்டுமென்றும் என்ற எண்ணமில்லாமல் ஒரேகட்சி அலுவலாய் திரிவாரென்றும் எமது ஊரில் நான் சிறியவனாயிருக்கும் போது காதில் விழுந்த கதை.

நான் ஒரு சமயவாதி என்பதால் கடவுள் இல்லை என்ற கோட்பாடுள்ள கம்யூனிஸட் கட்சிக்காரரில் ஒருவெறுப்பு. காலப்போக்கில் கார்த்திகேசன் மாஸ்டரின் ஓய்வு நெருங்கும் காலத்தில் அவர் ஊரோடு வந்து பண்டத்தரிப்பு இத்துக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றினார். எம்மூரிலும் அவருடைய பொதுமக்கள் தொடர்புப்பணிகள் ஆரம்பமானது. கடிதம் வரைதல், அவரைக்காணல், பெரியவர்களைக் காணல் என்று பணிகள் செய்து கொண்டிருந்தார். ஒன்றும் தேடவில்லை என்பதை அவரது அன்றாட வாழ்வில் காணக்கூடியதாயிருந்தது. ஓய்வு எடுத்தும் அவரது பணிகள் காரணமாக கொஞ்சம் பண நெருக்கடியான சூழ்நிலையிலேயே ஒருமாதிரி சமாளித்து வாழ்ந்து வந்தார்.

அக்காலங்களில் கருத்தரங்குகளில் கலந்துகொள்வார். ஒரு தடவை, ''நீங்கள் தமிழரசில் சேர்ந்தால் M.P. ஆக வரலாம்" என்று அவருக்குக் கூறினேன். அது யதார்த்தமானதுதான் என்றும் கூறி, தான் அதை செய்ய மாட்டார் என்பதற்கும் தக்க விளக்கமும் தந்தார். டாக்டர் கோவூரின் கூட்டத்திற்கு தலைமைதாங்கி நல்ல வடிவாய் நெறிப்படுத்தினார்.

இல்லை என்று அங்கலாய்க்காதவர். கல்விப் பெருமை இல்லாதவர். அவருடைய ஈமக்கிரியைகளின் போது அவருடைய மதிப்பு ஊரவர்கட்குத் தெரிந்தது. ஐந்து பெண் பிள்ளைகள் பெற்றால் அரசனும் ஆண்டியாவானென்பது அவருடைய வாழ்வைப் பொறுத்தவரை பொய்யாகிவிட்டது. அவருடைய பிள்ளைகளெல்லாம் நல்ல நிலையில் குறைவின்றி சமூகப்பணிகள் புரிகின்றனர். அவர் ஒரு அசையாத கொள்கைப்பற்றாளன்.

சி. சபாநாதன்,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை

யாழ் இந்துக் கல்லூரியின் ஒளிவிளக்கு அமரர் மு. கார்த்திகேசன் அதிபர்

டாக்டர் குமாரசாமி நந்தகுமார்

இந்துக் கல்லூரியின் வரலாற்றிலே கல்லூரிக்குப் பெருமை சேர்த்துத் தந்தவர்களுள் ஒளிவிளக்காகத் திழ்ந்தவர் அமரர்.மு.கார்த்திகேசன் என்றால் மிகையாகாது.

யாழ் இந்துக் கல்லூரியில் நான் அவரது மாணவனாக இருக்கும் வாய்ப்புக் கிட்டியது. கண்ணியத்துடன் கட்டுப்பாடாக மாணவர்களை வழி நடத்தி தனது கடமையினின்றும் வழுவாத அவர் செயற்பாடுகள் என்னை அடிபணிய வைத்தது உண்மையே. ''தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற ஆன்றோர் வாக்கிற்கேற்ப எனது வாழ்க்கையில் வழிகாட்டிகளுள் ஒருவராக அவர் அமையப் பெற்றது யான் செய்த தவப் பயனேயாகும்.

எளிமையான, பிறரைக் கவரக்கூடிய தோற்றம் கொண்ட அவர் தனது சொல்லாலும் செயலாலும் என்னை மட்டுமல்ல பலரையும் கவர்ந்த பண்பாளர். சொல்லொன்றும் செயல் இன்னொன்றுமாக வாழும் இச் சமுதாயத்தின் மத்தியிலே அவர் தனது சொல்லிலும் செயலிலும் உறுதியாக நின்ற பண்பு போற்றற்குரியது. ''கற்கக் கசடற" என்பதற்கேற்ப ஆங்கிலத்தை துறைபோகக் கற்றவர். மாணவர்களுக்கும் கற்பித்தவர். இவர் பலதுறைகளிலும் திறமை பொருந்தியவர். கல்வித்துறையோடு விளையாட்டுத்துறையையும் சமமாக மதித்தவர். துடுப்பாட்டமாக இருந்தாலும் சரி, உதை பந்தாட்டமாக இருந்தாலும் சரி, இல்லமெய்வல்லுனர் போட்டியாயினும் சரி இவருடைய பிரசன்னத்தை அங்கு காணலாம். மாணவர்கள் உச்ச பயனைப் பெறவேண்டும் என நினைத்து அறிவுரைகளை வழங்கியவர். ஆசிரிய வாண்மை விருத்திக்கெனத் தான் புதிய ஆங்கில தமிழ் நூல்களை வாசித்ததோடல்லாமல் தன்னோடு கூடிய ஆசிரிய நண்பர்களையும் வாசிக்கத் தூண்டினார்.

ஒரு கருவியானது கணினியை, நேரம் பார்க்கவல்ல கடிகாரத்தை வானொலியை, ஒலிப்பதிவுகருவியை என்று பல அம்சங்களைக் கொண்டிருக்கும் போது அதன் பெறுமதி அதிகரிக்கின்றது. சிறப்புறுகின்றது. இது போலவே ஒரு மானிடன் பல்வகை ஆற்றல்கள் படைத்தவனாக இருக்கும் போது அவன் சிறப்புமிக்கவனாய், ஆளுமைக்குரியவனாய் பரிணமிக்கிறான். இவ்வாறே அமரர். மு. கார்த்திகேசன் அவர்களும் எழுத்தாற்றல், பேச்சாற்றல், மொழி பெயர்ப்பாற்றல் போன்ற இன்ன பிற ஆற்றல்களையும் கொண்டிருந்தார். இவை இவரது தலைமைத்துவப் பண்பை வளர்க்க உதவின.

மாணவரோ, ஆசிரியரோ, பெற்றோரோ யாராக இருப்பினும் அவர்களது குறைகளை நன்கு செவிமடுத்து தனது தராசில் அக்குறையை நிறுத்து பரிகாரம் காணும் அவரது பண்பு வியக்கத்தக்கது. கல்லூரியின் வளர்ச்சிக்கும் மாணவர்களது முன்னேற்றத்துக்கும் என்னென்ன தேவையோ அவை எல்லாவற்றையும் தேடிப் பெற்றுக் கொள்வதில் வல்லவர்.

மானிட நேயத்தை மதிக்கின்ற போற்றுகின்ற அமரர் மு.கார்த்திகேசன் அவர்களை நம்நெஞ்சங்கள் ஒரு போதும் மறப்பதற்கில்லை.

மேலும் வருவதும் போவதும் இயற்கையெனினும் இதில் வாழ்ந்து நிலைப்பவர் சிலரன்றோ! அவர்களில் ஒருவர்தான் அமரர் எம். கே.

டாக்டர் குமாரசாமி நந்தகுமார் (ஜே.பி),
விஞ்ஞான ஆசிரியர், றோயல் கல்லூரி,
முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி மாணவராவார்.

* * *

Messages

The following collection of messages were obtained from the publications of Jaffna Hindu College

Farewell Message

Mr. M. Karthigesan
B.A.Hons. (Lond), Dip-in-Ed. (Cey).
Teacher, J.H.C., 1946-1970,
Acting Principal, J.H.C.,
January - May 1971

Versatility is a rare gift. Mr. M. Karthigesan's claim to greatness lies mainly in the possession of this gift. Literature, Scicnce, Mathematics, philosophy and politics are all within his intellectual grasp. As if to embellish this wide knowledge, he has wit and intelligence of a very high order. Considering these talents, one cannot but feel he has missed his vocation. He should have been a Univeresity Professor or a brilliant lawyer or a top ranking civil servant. But the stars at his birth had intended him for a much nobler service-the service of humanity. The medium for this service presented itself to him in the teaching profession of which he has been a shining ornament for the last twenty-six years.

His career both at School and the University has been equally brilliant. While completing his Secondary School education at School in Malaysia he missed a Cambridge University Scholarship by just one place.

Returning to his homeland in the late nineteen thirties he joined the University College of Ceylon where he distinguished himself as an outstanding student and eventually passed the B.A. English (Hons) Examination of the London University. Being a born writer, he took to Journalism immediately after his University career. He pursued it for some years with remarkable success. When his journalistic fervor waned, he looked for some employment where he could harness his talents not only for the advancement of knowledge, but also for the betterment of society. Luckily for him, it was then that a vacancy for an English teacher arose at Jaffna Hindu College and he was selected to fill it. This was in 1946-a momentous year in the history of Jaffna Hindu College. It was momentous because it marked the advent of a man who identified himself whole-heartedly with the school in all its ups and downs, more than many others, during the twenty-five years that followed. He championed the causeof the school, the cause of its teachers and the cause of its students with equal zeal, sincerity and courage. In this noble work his triumphs were many and his defeats were few. He was Principal of the College for just a short period but even then he stuck to his principles in the performance of his duties. There is no question of compromising his principles for any earthly gain, however big or however alluring. His life's motto has always been 'principle above self".

As a teacher of English he has a few equals. He is undoubtedly the model English Teacher who gets his students to learn the language with comparative ease. His students find his classes not a drudgery but a veritable delight. Even if they forget English, they will never forget Mr. Karthigesan, their English Teacher. His wit, his humour and his lovable ways have forged. a link between him and his students which nothing can break.

Mr. N. Sabaratnam a former Principal of our College, used to call Mr. Karthigesan the Poet Laureate of Jaffna and there is no doubt he deserves every letter of that appellation.

He is both a fine writer and a speaker. Whatever he writes is lucid and elegant. Whatever he speaks is informative, witty and humorous. If it is a delight to read his writings, it is an inspiration to listen to his speeches. The powers of his pen and tongue add laurels to the immense popularity he enjoys as an able teacher and a dedicated social worker.

There are so many other good points about Mr. Karthigesan which enforced economy of space restraints me from enumeration. But this one thing I shall say and finish. He is now Principal of a school at Pandaterrupu. It is unlikely for him to remain there long. He is sure to be elevated soon to a position in keeping with his talents, merit and qualifications.

S. Genesharatnam,
Former Staff of Jaffna Hindu College and
the Message was Published in the Young Hindu, 1972.

* * *

M. Karthigesan

T. Sri Visakarajah

A memorial for Mr. Murugapillai Karthigesan? My predicament is all the more like the proverbial blindman and the elephant. Such is, yes is, his immeasurable stature. We live too close to his times to evaluate the man. Let's leave it to posterity.

What strikes most in Mr. Karthigesan was the uprightness of his heart. His path and purpose could never be corrupted, compromised or diverted. He pursued honesty for its own sake. Political honesty, he used to say, was none other than dissimulation and hypocrisy. He said policy too was selfish but genuine integrity had no regard to self. That was Karthigesan the Great.

In the service of a man be burnt like incense to the finish. Even at death's door the last he served was a letter for a retrenched labourer. There is poignancy, an aching void in many thousands of hearts helped with his pen, purse and his all.

Mr. Karthigesan was part and parcel of Jaffna Hindu College for over a quarter century. Persuaded, with good intentions, he consented to be in the Principal's chair for a few months. As a teacher he cut, chopped, chipped and chiselled many thousands of students who are today shining all around the globe. Many of them will openly admit that Karthi lifted them out of the gutter.

Mr. Karthigesan was a humorist of the highest order and a resourceful educationalist. He offered English, and not Mathematics, which he did equally well, for his degree because his Professor wanted him to do so. As a young student he got the highest marks in Geography in the whole of South East Asia. This fact transpired at his funeral through one of his own Malaysian teachers living in Jaffna. But Mr. K. never liked to reveal his achievements. Many great things he did were for the poor. All that is now a limbo of the past. But, Karthigesan, still lives in the hearts. Receiving a "Road Master" bicycle presented at his retirement he said in Tamil amidst laughter "இந்த school master ஐ ஒரு Road Master ஆக்கியிருக்கிறீர்கள், நன்றி" Yes! Indeed Karthigesan's bicycle, pen and all were sacrificed for the service of man - the biggest that any man could do. He has done enough and more. He knew he did not do all these in vain. For the world he laboured for is in labour. It is struggling to be born. Let's wait.

Admittedly Karthi was the only communist, par excellence in Sri Lanka. As Vannarponnai Member of the Municipal Council his contributions to the Municipality and his ward are considerable. He not only widened the narrow lanes into roads, but widened the narrow minds of men also. Is it any wonder that a Community Centre is crying for a memorial statue for him?

T. Sri Visakarajah,
Montreal, Canada.
Former Teacher of Jaffna Hindu College and a student of Karthigesan.
He is also a brother of T. Srinivasan.
Original article was published in The Young Hindu 1976/77.
Minor editorial was made to the original.

* * *



விளையாட்டுக்குழவினருடன் பொறுப்பாசிரியருடனும்
யாழ் இந்துவில் அதிபராக (1971)

குறிப்புகள் சில....

திரு. மு. கார்த்திகேசன

B.A.Hons. Lond. Dip-in-Ed. (Cey)
Jan-May 71

1946 தொடக்கம் என்று நினைக்கிறேன் H.S.C. வகுப்பில் நான் படித்துக் கொண்டிருக்கும் பொழுது திரு.கார்த்திகேசன் ஆசிரியரானார். அவரின் மாணவனாக இருக்கும் பேறு எனக்குக் கிடைக்கவில்லை. ஒரு தீவிரமான Communist எப்படி யாழ். இந்துக்கல்லூரியில் ஆசிரியராகிறார்? என்று பலர் குசுகுசுத்ததை அறிவேன். அன்று ஆட்சிக் குழுத்தலைவர் (President - Board of Director J.H.C and affiliated School) Sir.W. துரைசுவாமி, திரு. கார்த்திகேசனை செவ்வி கண்டபோது மிகவும் கவரப்பட்டாரென்றும், ஐயப்பாடு எழுப்பப்பட்ட போது "Mr.Karthigesan is appointed to teach English" என்று தனக்குரிய பாணியில் கூறியதாகவும் கேள்விப்பட்டேன்.

சிறந்த ஆசிரியராக விளங்கிய அவர் கீழ் வகுப்புகளில் கணிதமும் கற்பித்தார். தன் வெள்ளை உள்ளத்தாலும், என்றும் எவர்க்கும் உதவ முன்னிற்கும் பண்பாலும் அறிவுத்திறத்தாலும் மிகக் குறுகிய காலத்திலேயே மாணவர்கள், ஆசிரியர்கள், அயலோர் உள்ளங்களைத் தன்பால் ஈர்த்துக் கொண்டார். தன் அரசியல் கொள்கையை அயத்து மறந்தும்கூட வகுப்பறையில் விதைக்காவிட்டாலும், இவர் பண்பெனும் காந்தம் இவர் சித்தாந்தத்தில் மாணவர் பால் ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தியதை யாரும் மறக்க முடியாது. திரு N.Sab ஓய்வு பெறும்போது திரு மு. கா. அதிபராகக் கடமையாற்ற சிபார்சு செய்யப்பட்டார். (Performing Principal) கல்லூரியில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டன. அயோத்தியில் இராமன் முடிசூடிய போது மக்கள் தங்கள் தலைகளிலும் முடி இருந்ததாக நினைத்துத் தொட்டுப் பார்த்தார்கள் என்று பேசப்படுவது போல மாணவர்களும், ஆசிரியர்களும் கருதினார்கள். அதிபர் பணிமனையில் மாணவர்கள்

அமர்ந்திருக்கும் நிலை கூட உருவாகி விட்டது. ஆசிரியர்களாகிய நாங்கள் சிலர் இதை ஜீரணிக்கக் கஷ்டப்பட்டோம் என்பது மட்டுமல்ல சில சமயங்களில் திரு.மு.காவே அறைக்கு வெளியே வந்து நின்ற நிலையில் தன் கடமைகளைச் செய்யவேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டது உண்மையே. இந்த நிலைப்பாடு கல்லூரி ஒழுங்குமுறைக்கு ஒருவித பங்கமும் ஏற்படாது நின்றமை அதிசயத்திற்குரிய ஆட்சியின் ஆளுமை எனலாம். கண்டிப்பும் கடமையுணர்வும் இம்மியளவும் இளகவில்லை - தளரவில்லை.

இருந்தும் என்ன! பொதுவுடமையைச் சொப்பனமாகக் கண்ட அரசு திரு.மு.காவை நிரந்தர அதிபராக்க மறுத்து விட்டமையால் ஒரு மாமனிதன் யாழ். இந்துக்கல்லூரி அதிபராகப் பணியாற்றும் வாய்ப்புத் தவறிவிட்டது.

யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா மலரிலிருந்து பெறப்பட்டது.

M.Karthigesan B.A. Hons, (Lond), Dip-in-Ed. (Cey) who acted as Principal during January to May 1971 was a sectional head when he took over as acting Principal. He had been a member of the Jaffna Municipal Council for three years while serving as a teacher.

Obtained from the Jaffna Hindu College Centenary Publication.

1971 இல் திரு.ந.சபாரத்தினம் ஓய்வு பெறவே கல்லூரியில் திறமைமிக்க ஆசிரியராக இருந்த திரு.எம்.கார்த்திகேசன் சிறிது காலம் கல்லூரி அதிபர் பொறுப்பை ஏற்றார். அவர் சார்ந்து இருந்த அரசியல் அடையாளம் காரணமாக ஒரு நல்ல அதிபரை இந்துக் கல்லூரி இழக்க வேண்டி ஏற்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி நூற்றாண்டு விழா மலரிலிருந்து பெறப்பட்டது.

1971 இன் நடுப்பகுதியில் முன்னைய அதிபர் இடமாற்றலாகிச் சென்றதைத் தொடர்ந்து திரு.எம்.கார்த்திகேசன் அவர்களைத் தினைக்களம் அதிபராக அனுப்பி வைத்தது. அன்னார் முன்னைய அதிபர்களைப் போலக் கல்லூரிக்கு முன்பு தொடர்புகள் கொண்டவராக இல்லாத போதும், தன்னால் இயன்ற பணிகளை ஆற்றியதுடன் விஞ்ஞான கூட நிதி திரட்டுவதற்கும் பலவழிகளில் உதவி செய்தார். மாணவர்களை அன்பாலும் அறிவுரைகளாலும் திருத்தி முன்னேற்றலாம் என்ற கொள்கையுடன் கல்லூரி உயர்வுக்குப் பணிபுரிந்தார். ஆறு மாதகால சேவையின் பின்பு அவர் இடமாற்றம் செய்யப்பட்டார்.

திருமதி ச. கனகரட்ணம் இந்து இளைஞன், 1993 கல்லூரி சஞ்சிகையில் எழுதிய கட்டுரையின் ஒருபகுதி

Mr. M.Karthigesan was no Communist in the College Premise. Amid his politics Mr.M.K. passed the Dip-in-Ed. exam in his stride. He was Jaffna MMC for some time and mostly indentified himself with the down-trodden. He became Principal JHC and then of Pandetheruppu Hindu College. His English Literature classes were unforgettable and brilliant. He was equally brilliant in his teaching of Maths. He was a journalist, poet and politician. His prize-day speeches written for our Principals speak volumes for the intellect he was. He was a humourist of the highest order. No student of his ever forget him as a genial gentleman. One day one student brought a lame excuse letter stating that his absence was due to "hay-fever". He looked up at him and asked him "Why did you sleep in a hay-stack?"

Obtained from the Jaffna Hindu College Centenary Publication.

இவர் ஓர் பட்டதாரி. இந்துக்கல்லூரி உதவியாசிரியராகப் பல வருடங்கள் சேவையாற்றியவர். நேர்மையுள்ளம் படைத்த ஓர் சமதர்மவாதி. பாடசாலை நேரத்துக்கு அப்பால் மாணவர்க்குப் படிப்பித்து அவர்களைக் கைதூக்கி விட்ட பெருமையும் இவர்க்குண்டு. இவரது அதிபர் சேவை (1.06.1971 - 31.12.71) மாத்திரமே எமது கல்லூரிக்குக் கிடைத்தது.

க. இ. குமாரசாமி, 1992 இல் தமிழ் சங்கம் வெளியிட்ட வண்ணம் இதழில் எழுதிய கல்லூரியின் வரலாற்று கட்டுரையின் ஒருபகுதி

திருவாளர் கார்த்திகேசன் குறுகியகாலம் அதிபராய் இருந்தார். இவர் ஓர் இடதுசாரி. உண்மையில் எல்லாரையும் சமமாய் மனிதராய் மதிக்கும் பண்பாளர். இவர் புதிதாய் வந்த போது ஒவ்வொருவரும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று விசாரித்து கை குலுக்கி வரவேற்றார். அதிபரின் அறைக்குச் சென்றால் முன்கதிரையில் அமரவைத்துத் தான் கதைப்பார். ஓர் சிறந்த பண்பாளர்.

தீ. ஆ. செல்லையா, இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர் எழுதியது.

* * *

Mr. M. Karthigesan

N. Sabaratnam

Mr. M.Karthigesan who is an Honours Graduate in English of the London University and who holds a Diploma in Education of the Ceylon University has completed an uninterrupted period of 24 years as teacher at our College.

He has been a distinguished teacher of English Language and Literature as evidenced by the results at the public examinations and the reputation he enjoys at college and outside. As a specialist in the teaching of English Language and Literature he has given of his best not only to his students but also to teachers of the subject particularly during this period of change in content and methods of teaching. As Head of the Department of English at College, he commands the esteem and confidence of his colleagues. He is at present functioning as Sectional Head of Language and Religion in the New Organization of Schools by the Ministry of Education.

Besides classroom work and academic pursuits he takes a leading role in many an extra mural activity – Sports and Games,The College Magazine, the A/L Students Union and The Teachers Guild. As a popular House Master, and member of the Board of Discipline his contribution in putting forward the students point of view has been remarkable.



எண்ணமும் எழுத்தும் இறுதிவரை உடன் இருந்த
தோழர் மு. கார்த்திகேசன்

He reads widely, speaks both in English and Tamil effectively and writes with ease and elegance. There's hardly any happening at College where his guiding voice and pen have not been put to proper use.

Suave in manners, helpful and dependable in his ways, he has been a great acquisition to the College. He bears a good moral character.

Mr. N. Sabaratnam,

Former Principal of Jaffna Hindu College and a friend of Mr. M. Karthigesan. Mr. Ns.Sabaratnam, who cherished the memories of Karthigesan wrote a few articles , when he served as the Editor of Eelanadu. Unfortunately, there is no trace of those now.

* * *

மு. கார்த்திகேசன்

ந. சபாரட்ணம்

திரு. மு. கார்த்திகேசன், லண்டன் பல்கலைக்கழக ஆங்கிலச் சிறப்புப் பட்டதாரியும், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி டிப்ளோமா பட்டம் பெறறவருமாகிய இவர் எமது கல்லூரியிற் தொடர்ச்சியாக 24 வருடம் ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார்.

இவர் ஆங்கில மொழியிலும் ஆங்கில இலக்கியத்திலும் மேன்மைமிக்க ஆசிரியராக விளங்கி வருகிறார். இது பொதுப் பரீட்சைப் பெறுபேறுகளாலும் பாடசாலைக்குள்ளேயும் வெளியேயும் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியம் இரண்டையும் கற்பிப்பதில் சிறப்புடையவர் என இவர் பெற்றுள்ள புகழாலும் நிரூபணமாகியுள்ளது. ஆங்கில மொழி, இலக்கியம் இரண்டையும் கற்பிப்பதிற் சிறப்புடையவர் என்ற வகையில் இவர் தனது மாணாக்கருக்கு மிகச் சிறந்த முறையில் கற்பித்தது மட்டுமல்ல, குறிப்பாகக் கற்பித்தல் அம்சத்திலும் முறையிலும் மாற்றம் பெற்றுவரும் இக்காலகட்டத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கும் தனது திறமையால் வழிகாட்டினார். கல்லூரியின் ஆங்கிலப் பகுதித் தலைவர் என்ற முறையில் இவர் சக ஆசிரியர்களின் மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொண்டவர். இவர் தற்போது கல்வி அமைச்சின் புதிய பாடசாலை அமைப்புப் பிரகாரம் மொழியும் சமயமும் என்ற பகுதித் தலைவராக விளங்குகிறார்.

கற்பித்தல் சம்பந்தமானதும் கல்வி சம்பந்தமானதுமான நடவடிக்கைகளில் மட்டுமல்லாது புறநிலை நடவடிக்கைகளான விளையாட்டு, பாடசாலைச் சஞ்சிகை, A/L மாணவர் சங்கம், ஆசிரியர் சங்கம் போன்ற பல நடவடிக்கைளிலும் முக்கிய இடம் வகிக்கிறார். ஒரு பிரபலமான விளையாட்டு

இல்ல ஆசிரியர் என்ற வகையிலும், நல்லொழுங்கு சபையின் அங்கத்தவரொருவர் என்ற வகையிலும் மாணவர்களின் எண்ணக் கருத்துக்களை முன்வைப்பதிற் குறிப்பிடத்தக்கவராயுள்ளார்.

இவர் நிறைய வாசிப்பவர், ஆங்கிலம், தமிழ் இரண்டையும் சிறப்புறப் பேசுபவர், அம் மொழிகளை இலகுவாகவும் அழகுறவும் எழுதுபவர். இவரது வழிகாட்டலோ, எழுத்தாற்றலோ இல்லாத எந்த நிகழ்வும் பாடசாலையில் நடப்பதேயில்லை எனலாம்.

வசீகரமான பண்பாளர், உதவும் பண்புடையவர், நம்பிக்கைக்கும் பொறுப்புக்கும் பாத்திரமானவர், பாடசலைக்கு இவர் ஒரு பெரும் சொத்தாவார். இவர் ஒரு ஒழுக்கசீலர்.

திரு. ந. சபாரட்ணம்,
முன்னாள் அதிபர், யாழ். இந்துக் கல்லூரி,
கார்த்திகேசனின் நண்பருமாவார்.
கார்த்திகேசனை நினைவுகூர்ந்து காலத்துக்குக் காலம் திரு.சபாரட்ணம்
அவர்கள் 'ஈழநாடு' பத்திரிகையாசிரியராக கடமையாற்றிய
வேளையில் சில கட்டுரைகள் எழுதியிருந்தார்.
அவற்றை மீளப்பெறமுடியாமை மனவருத்தத்திற்குரியது.

* * *

Mr. M. Karthigesan

S. Sivapathasundaram

I met Mr.M.Karthigesan first as a student in my tutorial group when I was for a time a visiting lecturer in English at the Ceylon University College. I found him so good,that I decided that he deserved the best guidance available and I got him transferred to Prof. Ludowyke's group.

I have now known Karthigesan as a fellow teacher and a friend for over twenty five years. He is one of the best.

He has been taught how to read and he reads widely. He write intelligently and with ease. He teaches most acceptably and is loved by his students.

His sense of humour invariably gets the better of the almost ascetic discipline of his life, and he is very lovable company.

Mr. S. Sivapathasundaram, M.A. *Cantebury,*
Principal, Vaidheeswara Vidhyalayam,
Jaffna provided this reference letter in 1969.

* * *

மு. கார்த்திகேசன்

S. சிவபாதசுந்தரம்

திரு. மு. கார்த்திகேசனை நான் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஆங்கில வருகை விரிவுரையாளராகக் கடமையாற்றிய சமயத்தில் எனது போதனைக் குழுவின் மாணவனாக முதன் முதலிற் சந்தித்தேன். அவர் மிகவும் கெட்டிக்காரனாய் இருந்ததால் அவருக்கு மிகச் சிறந்த வழிகாட்டல் தேவை என உணர்ந்து பேராசிரியர் லுடோவைக் அவர்களின் குழுவுக்கு மாற்றம் பெற்றுக்கொடுத்தேன்.

தற்போது நான் அவரை ஒரு சக ஆசிரியராகவும் ஒரு நண்பராகவும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அறிந்து வருகிறேன். அவர் தலைசிறந்தவர்களுள் ஒருவர்.

அவர் எவ்வாறு வாசிக்க வேண்டுமெனக் கற்றுக் கொண்டவராதலால், அவர் நிறையவே வாசிப்பவர். அவர் புத்திசாலித்தனமாகவும் இலகுவாகவும் எழுதுபவர். அவர் மிகவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையிற் கற்பிப்பவர். அதனால் மாணவர்களால் விரும்பப்படுகிறார்.

தன்னலமற்ற ஒழுக்கசீலமான அவரது வாழ்வில் சிறப்பான அம்சமாக அதில் விரவியிருக்கும் நகைச்சவை உணர்வு விளங்கும். அவர் மிகவும் விரும்பத்தக்கதொரு கூட்டாளியுமாவார்.

எஸ். சிவபாதசுந்தரம், *கன்ரபரி,*
அதிபர்,
வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

* * *

புதிய தலைமுறையின் சிறந்த ஆதர்ஷ புருஷர்

எஸ். சிவதாசன்

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் மட்டுமல்லாமல் சிங்கள் மக்கள் மத்தியிலும் குறிப்பாக முற்போக்கு எண்ணம் கொண்ட சகலரின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான ஒரு பெரியாரைப் பற்றி எழுதுவது என்பது மிகக் கடினான ஒரு விடயமாகும். இந்த வகையில் சிறந்த கம்யூனிஸ்டாகவும் மதிப்புமிக்க ஆசிரியனாகவும் ஆற்றல்மிக்க பேச்சாளனாகவும் ஒரே சமயத்தில் திகழ்ந்த அமரர் மு.கார்த்திகேசன் மறைந்து இன்றுடன் பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

சமூகத்தின் அடித்தட்டில் வாழும் ஏழை, எளிய மக்களுக்கும் சமூகத்தின் பல்வேறு தரத்தைச் சார்ந்தோர்களுக்கும் ஆற்றிய அளப்பரிய சேவை காரணமாகவும், நடை, உடை, பாவனையில் முன்னுதாரணமிக்க அரசியல்வாதியாகவும் எவ்வித படாடோபமின்றி வாழ்ந்தமையாலும் இந்த நாட்டின் சகல பிரிவினர் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

யாழ். இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அவரிடம் கல்வி கற்ற மாணவர்களாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லோரும் இன்று பல்வேறு துறைகளிலும் நன்கு பிரகாசிப்பதைக் காணலாம். இலங்கையில் மிக உயர்பதவிகள் வகிக்கும் அரச அதிகாரிகள், அரசியல்வாதிகள், மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், கல்விமான்கள் தொட்டு யாழ்ப்பாணத்து மாநகரசபையின் நகரசுத்தித் தொழிலாளர் வரை தங்களில் ஒருவராகவே அமரர் கார்த்திகேசனை கருதி வந்தனர். சகல தரத்து மக்களாலும் கார்த்திகேசன் நேசிக்கப்படும் அளவுக்கு இங்கு வேறெந்த அரசியல்வாதியும் உரிமைகோர முடியாதென்பது எனது கருத்தாகும்.

ஆரம்ப காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கிலவார ஏடான 'போவேட்டின்' ஆசிரியராக இருந்து தனது ஆங்கிலப் புலமையை வெளிப்படுத்தியது மட்டுமன்றி, அக்காலத்தில் இருந்த மிகக் குறுகிய அச்சுயந்திர வசதிகளோடு தமது உடலுழைப்பையும் செலுத்தி பத்திரிகை அச்சிட்டது மாத்திரமன்றி, மக்கள் குழுமி நிற்கும் பகிரங்க இடங்களுக்கு அப்பத்திரிகைகளைத் தாமே கொண்டு சென்று விற்பனை செய்து வந்தார். கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்ட சகல வெளியீடுகளையும் சகதோழர்களையும் இணைத்துக் கொண்டு பஸ்நிலையத்தில் பகிரங்கமாக நின்று பொதுமக்களுக்கு விற்பனை செய்து வந்தமையை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது. அவருடன் இணைந்து பத்திரிகை விற்பனை செய்தமையை பெரும் பேறாகக் கருதும் பலர் இன்றும் பெருமையுடன் அச்சம்பவங்களை நினைவுகூருவதை என்னால் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

நாட்டின் மிகச்சிறந்த அறிவாளிகளையும் புத்திஜீவிகளையும் செயல்வீரர்களையும் மட்டுமன்றி, இன்று அரசியலில் முன்னணியில் திகழும் ஒரு இளைய சந்ததியையும் உருவாக்குவதில் அவர் ஆற்றிய பணி மிக உயர்ந்ததாகும்.

இன்று இலக்கியத்துறையில் தமக்கென தனித்துவமான இடத்தைப்பிடித்துள்ள திருவாளர்கள் டொமினிக்ஜீவா, டானியல், பொன்னுத்துரை, பெனடிக்பாலன், நீர்வை பொன்னையன் போன்றோரும் அவரால் வளர்க்கப்பட்டு வழிகாட்டப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

1954ம் ஆண்டில் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் அன்றைய சகாவான துரைராசாவை யாழ். மாநகரசபைத் தேர்தலில் தோற்கடித்து முதன்முதலில் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அன்று கல்லூரி மாணவனாக இருந்த நான் வீ.ஏ.கந்தசாமி, டொமினிக் ஜீவா இன்னும் பலருடன் இணைந்து இத்தேர்தல் வேலைகளில் ஈடுபட்டது இன்னும் என்மனதில் பசுமையாக நிற்கிறது. தனியொரு கம்யூனிஸ்ட்டாக நகரசபைக்கு சென்ற அமரர் கார்த்திகேசன் தனது வாதத்திறமையாலும் தம்மீது ஏனைய உறுப்பினர் கொண்டிருந்த மதிப்பின் காரணமாகவும் தம்மோடு ஐக்கியப்படுத்தக்கூடிய சகலரையும் ஐக்கியப்படுத்தி முஸ்லிம் உறுப்பினரான ஜனாப் எம்.எம்.எம்.சுல்தானை தாமே பிரேரித்து யாழ்ப்பாணத்தின் நகராதிபதியாக்கிய பெருமை அன்னாரையே சார்ந்ததாகும்.

தனது அரசியல் வாழ்வின் ஆரம்பம் தொடக்கம் இறக்கும் வரை சாதியின் பெயரால் ஒரு பகுதி மக்கள் அடக்கியொடுக்கப்படுவதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சகல போராட்டங்களோடு இணைந்து நின்றதும் அல்லாமல், அவ்வியக்கங்களை வெற்றியை நோக்கியும் வழி நடத்தினார். இடதுசாரிகள் என்று கூறிக்கொள்ளும் இன்றைய கொள்கையற்ற சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளைப் போலன்றி எத்தகைய அரசியல் நெருக்கடிகள் நிறைந்த காலத்திலும் அப்பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து கட்சியின் கருத்துக்களை முன்வைத்தது மட்டுமன்றி, அவற்றிற்க்காக இடையறாது போராடிய நேர்மையான அரசியல்வாதியும் இவர்தான்.

யாழ். இந்துக்கல்லூரியில் கற்ற அவரது மாணவர்கள் அரசியலிலும் அவர் வழிகாட்டலின் கீழ் வளர்ந்து, இன்று பாராளுமன்ற உறுப்பினர் களாகவும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் அமைச்சர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. சொந்த நலன்களிலும் பார்க்க தேசத்தினதும் மக்களினதும் நலனை முழுமையாக நேசித்து, இந்நாட்டு மக்களை முதலாளித்துவ சமூக அமைப்பிலிருந்து பூரணமாக விடுவிப்பதில் அல்லும் பகலும் ஓய்வு-ஒழிச்சலின்றி உழைத்த அமரர் கார்த்திகேசன் இன்று புதிய உணர்வோடு வளர்ந்து வரும் புதிய தலைமுறையினருக்கு ஒரு சிறந்த ஆதர்ஷ புருஷராக விளங்குவார் என்பது திண்ணம்.

திரு. எஸ். சிவதாசன்,

முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவராவார்.

'ஈழநாடு' 10.09.1989 இல் 12வது ஆண்டு ஞாபகார்த்த தினத்தில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதி

* * *

The Karthigasan I knew .....

E. P. B. Ediriweera

Years senior to me both in age and service I wouldn't have had the privilege of knowing him and enjoying his friendship, if not for my involvement in politics. In fact when I was introduced to him by a mutual friend somewhere in the late sixties or early seventies he did mention about my political affiliation. On that occasion I remember him telling me that he was glad that it was so, and added that I was somewhere close to him in that respect.

Comrade Karthigasan as I knew him was a staunch Marxist and a true party loyalist who made use of every opportunity to extol the virtues of his brand of politics. He always stood up in defence of his political beliefs and would go to any length to serve its cause. A man with a keen sense of humour, his arguments, laced with wit, could at times be devastating though not made with any ill-will.

A Marxist to the core, he was not prepared to conform to the stereotype and would never allow things to pass without having his say. Once it so happened that somewhere in the early seventies the Ministry of Education summoned all the Heads of Schools in the region for a conference. The purpose of the conference was to acquaint them with the then famous Educational Reforms of the goverment. I cannot remember

whether he was a Principal or a Deputy by then, but he was there. The venue was the Jaffna Hindu College Auditorium and all the big-wigs of the Ministry were present. Now at the end of each lecture, in the ensuing discussions Comrade Karthigasan was seen taking an active part. But those who knew the man were aware that he wasn't serious but was only doing so just for the fun of it. However, his best wisecrack was to come after the lecture on Pre-Vocational subjects. After a lengthy discourse on the demerits of the then prevailing system and the merits of the proposed reforms, the lecturer sat down quite satisfied with his performance. Then after a brief respite, when it was time for questions and comments, who, but Karthi the irresistible was the first to get up and rebut the whole thing in one fell swoop. I cannot remember the exact words he used but the gist of what he said was "This pre-vocational business is not something new under the Sun you see. It had been there even in pre-historic times. The elders have always been teaching pre-vocational skills to their young you know. Now just look at our own Veddhas. When they go hunting they take their young with them and teach them everything about it - from holding the bow to the roasting of the carcass. Now isn't that pre-vocational training?" he quippd. Amidst the din of laughter, the lecturer tried to laugh it off with a quick rejoinder, but it was Karthi who had the last laugh.

In matters of Education and students affairs he was a rebel and a non-conformist. The way he dealt with the students of a Maha Vid: for being "unnecessarily silent" amply demonstrates his attitude towards children and education. The story that went round was that on assuming duties at the new school, he had found the place to be "unusually silent". Assuming that it would return to normal in a day or two as per "standard practice" he had taken it on his stride and had continued to be busy with routine matters. On his second day at this school he had witnessed an "unbelievable

phenomenon". He had observed students in the classes adjoining his office queing up to the taps for a drink of water after their mid-day meals and returning to their classes in the same manner and taking their seats. This had happened during the luncheon interval and they had been maintaining "absolute silence" all the while. Now to use his own phraseology, on the third day when he had found that nothing had changed "without allowing things to go out of control" he had gone to their classes and chased them out to the playground - to go there and "run shout and play". He had also "warned" them "never" to "keep their mouths shut" when there's no teacher in the class. That was Karthigasan the Educationist non-parallel!

The case of the 'lost bicycle' illustrates another aspect of his human outlook on life. One day he had parked his bicycle by the roadside in front of a known person's shop in town and had gone marketing. After sometime on returning to the spot, he had found the bike missing. Making sure that it was not the work of a prankster he had decided to call it quits as it were. But not so the infuriated sympathisers who had by then gathered around him. They had pressed him to go to the police station and lodge a complaint. Dismissing their suggestion Karthi has pronounced philosophically "Whoever who took it must have been in need of a bicycle. So let him have it". So saying he had walked home nonchalantly. Such was his humanism!

E. P. B. Ediriweera,
Retired Deputy Director of Education,
Formerly Principal of Sinhala M.M.V., Jaffna.

* * *

A Silent Leader

K. Sachithananthan

A common fate brought M.Karthigesan and I together. Thereafter, we both became close-bosom friends. It happened in the days of U.Somasegaram's unbridled administrative reign, that we both were interdicted for political participation. He was a Communist; I was a federalist. Loss of employment and the consequent financial burden were very heavy. So we both met daily in a house behind Jaffna Hindu College to share our feelings and ideas in the hope that we may be relieved of the mental stress.

The recollection brings a host of ideas in a chain, forty one years back. Then staffroom of Hindu College looked like a Zoological garden metaphorically. We, both in our free periods or after lunch, met in a vacant class room to discuss many matters on Literature, politics and education. The Communist party had split and Karthy didn't agree with Russian politics and therefore he joined the Peking wing. I was against the armed struggle; but Karthy was vehemently for it, saying political power is born in the barrel of a gun. I argued that such a power gained by arms is very short lived and temporary. He gave very interesting example to silence me. He would say, "Our Hindu Gods, whoever it may be, carried arms with them; Siva, trident and axe; Muruga, spear; Vishnu, chakarawheel and katha, Vairava, trident and so on. Our Hindu Gods wage war. Kantha Puranam is story war". This, though forty years have elapsed, still haunt my mind.

In any party, he was a lively figure. The speeches over tea or lunch were humourous and entertaing. He would say something novel; addused very plausible reasons connecting events too remote to be brought together. In some occasions, he was too serious and spoke with responsibility. Though fully immersed in politics, he never carried it to the classroom. Duty concious as he was, always punctual and regular to his work. He was simple, but dignified. No one would believe that he was a full time Communist party leading activist.

In his political field, he believed in action not theoretical niceties. Silently, he would draw his followers, himself being a monument, which proclaimed louder than the words.

K.Sachithananthan,
Mavittapuram, Tellipallai

* * *

Karthigesan in Customs

Due to political reasons, Mr. M. Karthigesan was interdicted for a short time. The students missed him terribly. One day when the class was in session on the ground floor of a building, the students spotted their beloved Master right opposite at a bus stand. They all ran towards the window of the classroom and shouted, "Master, why is that you don't come to school anymore". Where do you work now?". His reply was - "I am in the Customs now" (meaning plural of கஸ்டம்)

அமைதியானதொரு தலைவர்

கே. சச்சிதானந்தன்

(ஆங்கிலக் கட்டுரையின் தமிழ் மொழியாக்கம்.)

ஒரு பொதுவிதி மு. கார்த்திகேசனையும் என்னையும் ஒன்றிணைத்தது. அதன் பின்னர் நாம் ஆத்மார்த்த நண்பரானோம். இது வி.சோமசேகரத்தின் கட்டவிழ்த்த ஆட்சியின்போது நடந்தது. நாங்கள் இருவரும் அரசியலிற் பங்குபற்றியமைக்காக இடை நிறுத்தப்பட்டடோம். அவர் ஒரு கம்யூனிஸ்ட், நான் ஒரு சமஷ்டிவாதி. வேலையிழப்பும் அதனாலேற்பட்ட பொருளாதாரக் கஷ்டமும் மிகப் பெரும் சுமையானது. ஆகவே நாமிருவரும் (யாழ் இந்துக் கல்லூரிக்குப் பின்னால் அமைந்த ஒரு வீட்டில்) எமது மனச் சுமையைக் குறைக்கும் நோக்கில் எமது உணர்வையும் கருத்தையும் பரிமாறிக்கொள்ள தினமும் சந்தித்துக் கொண்டோம்.

இந்த நினைவுகூரல் நாற்பத்தோராண்டுகளுக்கு முற்பட்ட எண்ணச் சங்கிலியை இழுத்து வருகிறது. அன்றைய இந்துக்கல்லூரி ஆசிரியர் ஓய்வறை உருவகித்துக் கூறின் ஒரு உயிரியற் தோட்டம் போலிருந்தது. நாம் இருவரும் எமது ஓய்வு வேளையிலோ மதிய உணவுக்குப் பின்னரோ யாருமற்ற வகுப்பறையிற் சந்தித்து இலக்கியம், அரசியல், கல்வி விவகாரங்கள் குறித்தும் பல்வேறு விடயங்கள் பற்றியும் பேசுவோம்.

கம்யூனிஸ்ட் கட்சி பிளவுபட்டபோது காத்தி ரஷ்ய அரசியலில் முரண்பாடு கண்டு சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். நான் ஆயுதப் போராட்டத்திற்கு எதிரானவன். ஆனால் காத்தியோ விடாப்பிடியாக அதிகாரம் துப்பாக்கிக் குழலிலிருந்தே பிறக்கிறது என்று கூறவும், நானோ அப்படிப் பெறப்படும் அதிகாரம் நிலைத்திராது தற்காலிகமானதாகவே இருக்கும் என்றும் வாதிடுவேன். அவர் மிகச் சுவாரசியமான உதாரணத்தைக் கூறி என் வாயை அடைத்து விடுவார்.

''எங்கள் இந்துக் கடவுள் எல்லோரையும் எடுத்துப் பாருங்கள் ஒருவர் தப்பாது ஆயுதந் தாங்கியுள்ளனர். சிவன் திரிசூலமும் மழுவும், முருகன் வேல், விஷ்ணு சக்கரமும் கதாவும், வைரவர் சூலாயுதம் என்றிப்படியே எமது இந்துக் கடவுளர் போரிட்டனர். கந்தபுராணம் ஒரு யுத்தக் கதை என்பார். அவர் இதனைக்கூறி நாற்பதாண்டுகள் உருண்டோடிவிட்டாலும், இன்றும் அது என் நினைவில் பேயாய்க் குடைகிறது.

எந்த வைபவத்திலும் அவர் உயிர்த்துடிப்பான ஒரு நபராய் விளங்கினார். தேநீர் விருந்துகளிலும் மதிய போசன விருந்துகளிலும் அவராற்றிய உரைகள் நகைச்சுவை ததும்புவனவாயும் சுவாரசியமானவையாயும் விளங்கின. அவர் ஏதாவது புதுமையாகவே கூறுவார். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்று எங்கெங்கெல்லாமோ நடப்பவற்றை மிக ஆதாரபூர்வமாக இணைத்து தொடர்புபடுத்தி அழகாகக் கூறுவார். சில சமயங்களில் அவர் மிகவும் ஸீரியசாக நடந்து கொண்டு மிகப் பொறுப்புடன் உரையாற்றுவார். அவர் அரசியலில் ஊறித் திளைத்தவரானாலும், அரசியலை வகுப்பறைக்கு ஒருபோதும் கொண்டு வந்தவரல்லர். கடமையுணர்வுடைய வராதலால் அவர் எப்போதும் வேலைக்கு ஒழுங்காகவும் நேரந் தப்பாதும் வருவார். அவர் எளிமையானவர், ஆனால் மதிக்கத்தக்கவராய் இருந்தார். அவர் ஒரு முழுநேரக் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணி செயல்வீரன் என யாருமே நம்பியிருக்க மாட்டார்கள்.

தனது அரசியற் துறையில் அவர் செயலையே நம்பினார், தத்துவார்த்தத்தையல்ல. அமைதியாக அவரே ஒரு ஸ்தூலமாக இருந்து, அது சொற்ஃளிலும் மேலாக செயலை மதித்து, தன்னைப் பின்பற்றுவோரை தம்வசம் ஈர்த்தார்.

கே. சச்சிதானந்தன்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

* * *

உயர்ந்த மனிதன்

க. க. அருமைநாயகம்

காத்தார் என்று நாம் கண்ணியமாய்க் கூறுகின்ற
கார்த்திகேசனார் காலம் பலவாக - யாழில்
காத்தார் கண்ணாக கம்யூனிஸக் கொள்கையினை
பூத்தார் அதனால் புகழோடு புவியினிலே

சொல்லொன்று செயலொன்றாய் வாழ்பவர் மத்தியிலே
சொல்வதையே செய்து நல்லதையே சொல்லி
நல்லவராய் நாளும் எம்மோடு வாழ்ந்ததினால்
எல்லையில்லாப் பற்றோடு எல்லோரும் போற்றுகின்றார்

புன்னகை பூத்திருக்க, அன்பு மணம் வீச
மென்சொல் மெதுவாக ....ம் ....ம் என்று வரும்
தன்னலம் தரியாது பொதுநலம் பேணியவர்
உண்மையிலே உயர்ந்த மனிதனன்றோ!

செங்கொடி ஓங்கிநிற்கச் செம்மையாய் செயற்பட்டார்
தங்குதடையின்றி ஏழைகட்கு உதவி செய்தார்
எங்கள் மக்கள் ஏற்றமுற ஏணியானார் - அதனால்
மங்காது வாழும் காத்தார் பெயரென்றும்

அதிகமாய்க் கற்பித்தார் ஆங்கிலப் பாடமதை - மனதில்
பதியவைக்க மாணவர்க்கு பகிடிபல பகர்ந்திடுவார்
தகுதிகண்ட யாழ் இந்துக்கல்லூரி - காத்தாரை
அதிபராய் அமர்த்தியது அன்று

காலன் கவர்ந்து கால்நூற்றாண்டு கழிந்தாலும்
ஈழத்தில் காத்தாரின் பெயர் இன்றும் வாழ்கிறது
காலத்தின் நினைவாக மலரும் மலரதனை
சூழவிருந்து நாம் வாழ்த்தி வணங்கிடுவோம்

* * *

கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்
ஒரு நினைவுக் குறிப்பு

ஸ்ரீபதி

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவரும், கம்யூனிஸ்ட் கட்சியின் ஆங்கில ஏடான குழசறயசன இதழின் ஆசிரியரும், பெருமதிப்புக்குரிய ஆசிரியருமான தோழர் கார்த்திகேசன் மாஸ்டர் அவர்கள் காலமாகி இரண்டு தசாப்தங்கள் முடிந்து விட்டன. உறுதிமிக்க ஒரு கம்யூனிஸ்ட்டாகவும், கட்சியின் தலைமைத்துவ பண்புகள் நிறைந்த ஒரு புரட்சித் தோழராகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து மறைந்த தோழர் கார்த்திகேசன் மாஸ்டர், தமிழ் மக்கள் மத்தியில் கம்யூனிச சிந்தனைகொண்ட ஒரு இளம் தலைமுறை உருவாகி வளர்வதற்கு ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானது. அவரது அயராத உழைப்பும், அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடும் இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட இன்றைய நிலையிலும் நினைவுகூரத்தக்க சிறப்புமிக்கவை.

கார்த்திகேசன் மாஸ்டரின் தாய்தந்தையர் யாழ்ப்பாணம் வட்டுக் கோட்டையைச் சேர்ந்தவர்கள். பழமையில் ஊறிக்கிடந்த இந்தக் கிராமத்திலிருந்து ஆங்கிலம் படித்தவர்கள் மலேஷியா சென்று தொழில் பார்க்கும் போக்கு நிலவிய அன்றைய காலகட்டத்தில், மாஸ்டரின் பெற்றோரும் மலேஷியா சென்றிருந்தனர். சாதிவெறியும், தீண்டாமையும் தலைவிரித்தாடிய காலம் அது. மாஸ்டரின் தாய்தந்தையர் மலேஷிய தைப்பிங் நகரில் இருந்த காலத்தில், உலகைக் குலுக்கிய ரஷ்யப் புரட்சி நடைபெற்று இரண்டு ஆண்டுகளுக்குப் பின், அதாவது 1919ம் ஆண்டு கார்த்திகேசன் மாஸ்டர் பிறந்தார். ஆயினும், பழைமையும், மரபு இறுக்கங்களும் மூடநம்பிக்கைகளும் மலிந்து கிடந்த அன்றைய யாழ்ப்பாணத்தின் வட்டுக்கோட்டையில் மாஸ்டரின் சிறுதுகால ஆரம்பக் கல்வியுடன் தனது கல்வியை மலேஷியாவிலும், பட்டப்படிப்பை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்று 1941ல் ஒரு பட்டதாரியானார்.

அன்றைய ஆங்கிலம் கற்ற படித்த வர்க்கத்தினர், 1948ல் சுதந்திரம் என்ற பெயரில் கறுப்புத்துரைமாரிடம் கைமாறிய வேளையில், அதில் சேர்ந்து கொள்வதற்காக போட்டிப் போட்டுக்கொண்டிருந்தனர். இந்த மேட்டுக்குழாத்துடன் தன்னை இனங்காட்டிக்கொள்ள விரும்பாத இளம் கார்த்திகேசன் தன்னை அன்று வேகமாக பரவி வந்த சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டார்.

இவருடைய பணியின் மகத்துவம் பற்றிப் புரிய வேண்டுமாக இருந்தால், அவர் பொதுப்பணியில் ஈடுபடத் தொடங்கிய 1943ல் நிலவிய யாழ்ப்பாண சமூகச்சூழ்நிலை பற்றி நன்கு புரிந்திருக்க வேண்டும். இந்நூற்றாண்டு ஆரம்பகாலத்தில் சாதிப்படியமைப்பை அடிப்படையாகக் கொண்ட சிறுவீத உற்பத்தி முறைமையே யாழ்ப்பாண வாழ்க்கை முறையில் மேலோங்கி இருந்துள்ளது. மிஷனரிமாரின் தாக்கத்தினால் ஆங்கிலம் கற்ற ஒரு குழாம் உருவாகி இருந்தும்கூட சமூகத்தின் குணாம்சத்திலே பாரிய மாற்றம் ஏற்பட்டிருக்கவில்லை. ஆங்கிலக் கல்வி பெறும் வாய்ப்புக்கூட வசதி படைத்த நிலவுடைமையாளர்களாக இருந்த உயர் சாதியினருக்கே கிடைத்தது. எனவே அரசாங்கத்துறை, பெருந்தோட்டத்துறை, மலேஷியா போன்ற இடங்களில் தொழில் பெறும் வாய்ப்பு இழிசாதியினர் என்று இவர்களால் அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்கவில்லை. சாதியை அடிப்படையாகக் கொண்ட ஒடுக்குமுறை தொடர்ந்து நீடிக்கவே செய்தது. கல்வி, சமயத்துறைகள் கூட சாதி ஒடுக்குமுறையில் இருந்து தப்பமுடியவில்லை. 1920களின் பிற்பகுதியில் 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' என்னும் அமைப்பு துளிர்விட்டு சிறிது காலம் சாதி அமைப்புக்கு எதிரானதும், தேசபக்த உணர்வுமிக்கதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. பின்னர் உருவான இடதுசாரி இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் முக்கிய உறுப்பினரான ஹண்டி பேரின்பநாயகம் இருந்துள்ளமை இங்கு குறிப்பிடப்பட வேண்டும். இராமகிருஷ்ண மிஷன் துறவியான சுவாமி விபுலானந்தர், கொழும்பு ஆனந்தா கல்லூரியைச் சேர்ந்த பி.டி.எஸ்.குலரட்ன போன்றோர் இந்த வாலிபர் காங்கிரசுடன் தொடர்பு கொண்ட தேசபக்த ஜனநாயகவாதிகளாவர்.

இலங்கையில் முதல் தடவையாக நடைபெற்ற சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் பணியில் ஓரளவு வெற்றிகரமாகப் பணியாற்றிய இவ்வமைப்பு தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முடியவில்லை. சீர்திருத்தப் பண்பு கொண்ட இராமகிருஷ்ண மிஷன் இலங்கையில் தனது முதல் பாடசாலையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தும்கூட அதிபர் நியமனங்களின் போது (இன்னும்கூட) வின்ணப்பதாரியின் சாதியை உரைத்துப் பார்க்கும் பாடசாலைகளே பெரும்பாலும் உருவாகியுள்ளன. சைவம், தமிழ் என்ற சொற்கள் உரக்க உச்சரிக்கப்பட்டபோதும் ஆட்சியாளரின் தேவையை உணர்ந்து குறிப்பறிந்து நடக்கும் அடிமைப்போக்கே

யாழ்ப்பாணத்தின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. இந்த சக்திகள் யாழ்ப்பாண மண்ணில் தமது ஆதிக்கத்தை ஆழமாகப் பதிக்கத் தொடங்கியிருந்தன. இது முழு இலங்கைக்கும் பொதுவானதாக இருந்தபோதும் கூட இதன் செறிவு யாழ்ப்பாணத்தில் கூடுதலாக இருந்தமை முக்கிய அவதானிப்பிற்குரியது. இச்செறிவின் அளவு வித்தியாசத்தை 1950, 1960களில் இலங்கையில் காணப்பட்ட அரசியல் போக்குகளிலே நாம் காணமுடியும்.

இந்தச் சூழ்நிலையில்தான் இலங்கையின் வடபகுதியில் கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையை அமைக்க வேண்டுமென்ற முடிவைக் கட்சி எடுத்தது. அந்த நோக்கத்தை செயற்படுத்துவதற்காகவே தோழர் கார்த்திகேசன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் வந்து யாழ். இந்துக்கல்லூரியின் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தார். அப்பதவிக்குரிய எல்லாத் தகுதிகளும் மேம்பாடாக இருந்தபோதும் அவர் ஒரு கம்யூனிஸ்ட் என்ற நிலையில் விண்ணப்பம் கேள்விக்குரியதாகிறது. எனினும், இவரின் பாடம் சார்ந்த புலமையும், சிறந்த அர்ப்பணிப்பு மனப்பாங்கும் அவருக்கு அப்பதவி கிடைப்பதைத் தவிர்க்க முடியாததாக்கியது. அவரைப் பதவியில் அமர்த்துவதில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க வேண்டி யோகர் சுவாமிகளிடம் சிலர் இது பற்றி விசாரித்தபோது அவருடைய கூற்று பின்வருமாறு அமைந்தது. ''எடேய்! அந்த கம்யூனிஸ்ட் நல்லாப் படிப்பிப்பான். அவனை எடுங்கடா.'' அன்று யோகர் சுவாமிகளிடம் எதிர்க்கருத்துள்ளவரின் நேர்மையை, பண்பை, தியாகத்தை மதிக்கின்ற ஒரு மனிதப் பண்பு இருந்தமையால் கார்த்திகேசனுக்குப் பதவி கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட ஆரம்ப கம்யூனிஸ்ட் குழுவில் தோழர் கார்த்திகேசனுடன் சு.வே.சீனிவாசகம், எஸ். கே. கந்தையா, எம்.ஏ.காதர், ராமசாமி ஐயர், எம்.சி.சுப்பிரமணியம், க.மகாலிங்கம் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

இவர் கொழும்பிலிருந்த காலத்தில் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ, ஏ. வைத்திலிங்கம், பொன்.கந்தையா, பீட்டர் கெனமன் ஆகியோரால் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து அதன் ஒரு ஸ்தாபக உறுப்பினரானார். பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதிலும், கட்சி அமைப்புகளைக் கட்டுவதிலும் முக்கிய பங்கு வகித்தார். கட்சியின் உத்தியோகபூர்வ பத்திரிகையான போவேட் (Forward) இன் ஆரம்ப ஆசிரியராகப் பணிபுரிந்தார். கம்யூனிஸம் பற்றிய தெளிந்த அறிவும், கொழும்பின் நகர்ப்புற அரசியல் அனுபவமும் கொண்ட இளைஞனான தோழர் கார்த்திகேசன், கிராமப் பண்புகள் கொண்ட யாழ்ப்பாணத்திற்கு கட்சிப்பணிக்காக 1946ல் அனுப்பப்பட்டார். அங்கு சென்ற அவர் தனது செயற்பாடுகளுக்காகத் தேர்ந்துகொண்ட தொழிலே

ஆசிரியர் தொழிலாகும். அவர் ஆசிரியப்பணியுடன் பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிரான அரசாங்க ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் 1947ல் நடைபெற்றது. இதற்கு ஆதரவான வேலைகளில் முன்னணியில் நின்று பணிபுரிந்தார். பொதுத் தேர்தலில் பருத்தித்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நின்ற பொன். கந்தையா அவர்கள் வெற்றியீட்டியது இங்கு மிக முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. நடைபெற்ற பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போதும் கட்சியை முன்னெடுக்கும் பணியில் மிக முக்கிய பங்காற்றினார். யாழ். மாநகர சபையில் போட்டியிட்டபோது அன்று 'தமிழ் மக்களின் தனிப்பெரும் தலைவர்' என்று மார்தட்டிக் கொண்டிருந்தவரின் ஆதரவாளரைத் தோற்கடிக்கக் கூடிய அளவிற்கு மக்களின் அன்பும், ஆதரவும் அவருக்கிருந்தது. மாநகரசபை உறுப்பினராக இருந்த போது தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதில் கணிசமான பங்காற்றிய பண்பாளான். ஓர் உண்மையான ஜனநாயகவாதி. 1956ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றார். அன்று அக்குறிப்பிட்ட தொகுதியிலே இடதுசாரிகள் மத்தியிலே ஒற்றுமை நிலவியிருந்தால் தோழர் கார்த்திகேசன் வென்றிருப்பார் என்ற கருத்து பலரிடம் உண்டு.

மொழி உரிமைப் போராட்டமாக மேற்கிளம்பிய தமிழ்த் தேசிய இனப்போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, தமது மத்தியில் ஒரு பகுதியினரின் (தாழ்த்தப்பட்ட மக்களின்) ஜனநாயக உரிமைகளை மறுக்கும் போக்கு தீண்டாமை என்னும் வடிவில் மேற்படி தலைமைகளிடம் காணப்பட்டது இங்கு உற்று நோக்கத்தக்கது. 1966ம் ஆண்டு நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தில் வி.ஏ.கந்தசாமி, ஏ.சி.இக்பால், மார்க், கே.ஏ.சுப்பிரமணியம், எஸ்.ரி.என்.நாகரெத்தினம், சலீம், கே.டானியல், முத்தையா போன்றோருடன் இணைந்து போராட்டத்தை வெற்றிகரமாக வழி நடத்தினார். ஆலயப் பிரவேசத்தின் போது சமயம் சார்ந்த ஆதிக்கக் குழுவினர் பொலிசின் உதவியுடன் மக்களுக்கு எதிராக நின்றபோது, மக்கள் சார்பாக போராட்டத்தை முன்னெடுப்பதில் முக்கிய பங்காற்றினார்.

இவர் ஆசிரியர் சேவைக்காக யாழ். இந்துவிற்கு வந்தபோது ஆரம்பத்தில், அவரை அன்றைய கல்விச் சமூகம் தேர்வு செய்தமை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். பிற்காலத்தில் அதிபராக இருந்தபோதும்கூட, இது போன்றதொரு நிலையே அவருக்கு ஏற்பட்டது. அன்றைய யாழ். இந்துக் கல்லூரிச் சமூகம் என்பதைவிட, அரசியல் சலுகை பெற்றவர், கார்த்திகேசனும் சேர்ந்து வளர்த்துவிட்ட அந்த பாடசாலையின் அதிபர் பதவிக்கு குறிவைத்ததனால் அவர் அதிககாலம் அதிபராக அங்கு இருக்க முடியவில்லை.

எனவே, கார்த்திகேசன் மாஸ்டர் யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு மாற்றப்பட்டார். ஆனால், அவர் அவ் இடமாற்றத்தையும் இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு கல்லூரியில் புதுப்பொலிவூட்டினார். அவர் தனது கற்பித்தலின் போது மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக மட்டும் உருவாக்கவில்லை. அவர்களை சமூக நோக்குள்ளவர்களாகவும் ஆக்குவதற்கு பெரும் பணியாற்றினார். தான் தன்னுடைய வாழ்க்கை முறையாக வரித்துக்கொண்ட தத்துவத்தினூடாகவே கல்வியையும் நோக்கினார். சமூகத்தைப் புரிந்துகொண்டு சமூக மாற்றத்திற்கு உழைத்துக் கொண்டிருந்த தோழர் கார்த்திகேசன், தன்னுடைய அனுபவத்தை நகைச்சுவை உணர்வுடன் வெளிப்படுத்துவதில் மிகவும் கெட்டிக்காரர். பின் வாங்கு மாணவர்களை முன்னுக்கு கொண்டு வருவதை தனது முக்கிய பணியாகக் கொண்டிருந்தார். அவருடைய பல மாணவர்கள் இடதுசாரிக் கொள்கையை நாட்டத்தோடு கற்கவும் அதன் ஊடாக சமூக உணர்வையும், ஆழ்ந்த ஆய்வு மனப்பாங்கையும் பெற்றுக்கொள்ளவும் காரணகர்த்தாவாக விளங்கினார். தன்னுடைய ஆசிரியத் தொழிலையும், அரசியல் தொழிற்பாடுகளையும் பிரித்துப் பார்க்காதது அவரின் சிறப்பான அம்சமாகும். தன்னுடைய காலத்தில் பல மாணவர்களைச் சமூக அக்கறை உள்ளோராய்ப் பயிற்றுவித்துள்ளார். இவருடைய அரசியற் கொள்கையை ஏற்காத மாணவர்கள்கூட அவரை ஒரு வீரனாகவும், நேர்மையுள்ள மனிதனாகவும் நேசிக்கத் தவறவில்லை. சொல்லிலும், செயலிலும் முரண்படாத வாழ்க்கை முறை, விடயங்களை நகைச்சுவை உணர்வுடன் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் இலகுவாக மனதில் தைக்கும்படி கூறும் பண்பு என்பன இதற்கான காரணங்களாகும். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட பல துறைகளில் உள்ளோர் மாணவராய் இருந்தபோது இவருடைய செல்வாக்கிற்குட்பட்டமையால் அவர்களிற் பலர். சமூகப் பொறுப்புடன் தொழிற்பட்டனர். இவர்களில் மிக முக்கியமானவராக பேராசிரியர் கைலாசபதியை இங்கு குறிப்பிடலாம்.

மார்க்ஸிசப் புத்தகங்களைப் படித்துவிட்டு தம்மை அறிவாளிகளாகக் காட்டுவதற்காக புரட்சி பேசும் கூட்டமொன்றும் அன்று இருந்தது. மார்க்ஸிசத்தை உரத்து பேசுவதன் மூலம் தம்மை மேதாவிகளாகக் காட்டிக்கொள்ள விரும்பியது. ஆனால் கார்த்திகேசன் அப்படியல்ல. மார்க்ஸிசத்தை வாழ்க்கைத் தத்துவமாகப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில், தான் வாழ்ந்த சமூகத்தை மிக உன்னிப்பாக அவதானித்தார். இந்தப் பின்னணியில் மாணவர் மத்தியிலென்றாலென்ன, பொதுமக்கள் மத்தியிலென்றாலென்ன, மார்க்ஸிசத்துவத்தில் முழ்கி அதன் அடிப்படையில் புரிந்துகொண்ட பிரச்சினைகளை எளிமையான உதாரணங்களுடன் நகைச்சுவைத் ததும்ப விளக்கினார். அவற்றில் ஒரு சிலவற்றையேனும் அறிந்து கொள்வது அவருடைய ஆழ்ந்த புலமையை அறிய உதவியாக இருக்கும்.

அன்று யாழ்ப்பாண மக்கள் மத்தியில் மத்தியதர வர்க்க தத்துவமாக கந்தபுராணக் கலாச்சாரம் செல்வாக்குப் பெறத் தொடங்கியிருந்தது. இவ்வாறு கந்தபுராணப் படிப்பு தொடங்கிய மடங்களெல்லாம் பிற்காலத்தில் முருகன் ஆலயங்களாக உருமாற்றம் அடைந்தன என்பது இங்கு முக்கியமான அவதானிப்பிற்குரியதாகும். குறிப்பிட்ட ஆலயங்களிற்கும் அவற்றின் வழிபாட்டில் ஆதிக்கம் செலுத்தியோரின் மன ஆசைகட்கும் ஏற்ப அன்னதானக் கந்தன், அலங்காரக் கந்தன் போன்ற பெயர்களால் பெரும்பாலான முருகன் ஆலயங்கள் அழைக்கப்பட்டன.

ஆலயப் பிரவேச வெற்றியின் கால ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கோவில் முருகனினதும், பண்பைப் பற்றி அவர் அற்புதமான நகைச்சவையுடன் இப்படிக் கூறுவார்.

''சன்னதிக் கந்தன், ஏழைகளின் கந்தன், அன்னதானக் கந்தன் ஆகவே ஆலயப் பிரவேசம் முன்னதாக நடந்தது. நல்லூர்க் கந்தன், நகரக் கந்தன், பணக்காரக் கந்தன். முதலாளித்துவக் கந்தன் அவனுக்குப் பணம்தான் முக்கியம். ஆகவே, நல்லூரானின் ஆலயப்பிரவேசப் போராட்டம் பெரும் சிக்கலைத் தரவில்லை. ஆனால், மாவிட்டபுரக் கந்தன், நிலப்பிரபுத்துவக் கந்தன், அதனால்தான் இவ்வளவு போராட்டமும் இத்தனை தடங்கலும்."

21ம் நூற்றாண்டு பிறக்கும்போது வெளியுலகுடன் பிரயாணத் தொடர்பு கொள்ள முடியுமோ என இன்று ஏங்கித் தவிக்கும் யாழ். குடாநாடு, 20ம் நூற்றாண்டு ஆரம்பிக்கும்போதே பிறபகுதிகளுடன் புகையிரதம் மூலமான பிரயாணத் தொடர்புடன் இருந்த அன்றைய ரயில் பிரயாணம் யாழ்ப்பாணத்தாரின் எத்தனையோ கதைகளைக் கூறும். அதை ஒரு நாவலாக எழுதினால் தமிழ்த்தலைமைகள் தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாய உரிமைகளை மதிக்காமல்விட்டாலும் கூட இன உணர்வுகளைத் தூண்டிவிட்டு அதில் குளிர் காய்ந்து கொண்டிருந்த காலம் அன்றும் இருந்தது புரியும். தமிழனென்று சொல்லடா! என்று தனிப்பெரும் தலைவன் ஒருவர் பவனிவந்த காலம். காத்தார் வகுப்பறைக்குச் சென்றபோது ''நித்திரையாகக் கிடந்த தமிழனை தட்டி எழுப்பியவர் யார்?" என்று ஒரு கேள்வி கேட்டார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பதிலைக் கூறினார்கள். ''பொன்னம்பலம், செல்வநாயகம்.... " என பட்டியல் நீண்டது. அவர் சிரித்துக்கொண்டு சொன்னார். ''வேறு யாருமல்ல, அனுராதபுரத்துச் சிங்களவன் தான்". அன்று யாழ்ப்பாணம் - கொழும்பு மெயில் ரயிலில் சீற்றொன்றில் இடம் கிடைத்தால் சீற்று முழுவதையும் உரிமையாக்கிப் படுத்துக்கொண்டு பயணம் செய்யும் போக்கே எம்மவரிடம் காணப்பட்டது. ரயில் பிரயாணத்தில் இடையில் ஏறிய ஒருவர் ஒரு நோயாளியாக அல்லது ஒரு வயோதிபராக இல்லை, ஒரு

கைக்குழந்தையைத் தாங்கிய பெண்ணாக இருந்தாலும் கூட யாராவது வந்து தட்டியும் எழும்ப மாட்டார்கள். நித்திரைபோல் நடித்துக்கொள்வர். ஆனால் அனுராதபுரம் வரும்போது ஏறுகின்ற சிங்களவர்கள் வந்து சிங்களத்தில் ஏசி எழுப்பும்போது துடித்து பதைத்து எழும்புவார்கள். இதையே காத்தார் நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

1940களின் பிற்பகுதியில் இருந்து வடக்கினதும், தெற்கினதும் அரசியல் போக்குகள் வெவ்வேறான திசைகளில் செல்லத் தொடங்கியதையும் சேர்த்தே இக்கூற்றை நாம் நோக்க வேண்டும். தனிப்பெருந் தலைவரை அடுத்துவந்த தந்தை காட்டியவழி சற்று வித்தியாசமானது. அவருக்குக் கொழும்பிலே ஒரு முகம் யாழ்ப்பாணத்திலே வேறொரு முகம். வடக்கே தூண்டியது இனவெறி. கொழும்பிலே காட்டியது எஜமானாரின் மீதான விசுவாசம். இதனை விளக்கக் காத்தார் பாவித்த உவமை இதுதான். யாழ்ப்பாணம் இருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ரயிலில் பயணம் செய்யும் அவர், அவரது பெட்டிக்குபின் பெட்டியிலுள்ள சிற்றுண்டிச் சாலைக்குச் செல்கின்றார். அவரை அண்டிய ஒருவர் ''என்ன ஐயா! கொழும்பிற்கோ போகிறீர்கள்?" என்று கேட்கவும், ''இல்லை நான் இப்போது யாழ்ப்பாணம் அல்லவா போகிறேன்" என்ற பதிலளித்தாராம். உண்மைதான் தெற்கு நோக்கி ரயில் சென்றாலும் அதற்குள் அவர் பின்னோக்கி செல்வதால் வடக்கு நோக்கித்தானே போகின்றார். எப்படி தந்தையின் பம்மாத்து? இது இன்று வெட்ட வெளிச்சமாகிவிட்ட பம்மாத்து அல்லவா?

பாராளுமன்றப் பாதையில் கேள்விகள் எழுந்தபோது நடந்த இன்னொரு சம்பவம் இது. தனது தொகுதியில் வெற்றிவாய்ப்புக் குறைந்த நிலையில் தளபதி ஒருவர் தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி தேர்தலில் வெல்ல காங்கேசன்துறையில் போட்டியிட்டார். இதற்குக் காத்தார் கொடுத்த விளக்கம் ''அவர் (தளபதி) சீற்பிடிக்க காங்கேசன்துறைக்குச் சென்றுவிட்டார்" என்பதாகும். அன்று கொழும்பு செல்லும் பயணிகள் ரயிலில் இடநெருக்கடி இன்றி ஏறிவர இருக்கை பிடிக்க காங்கேசன்துறை செல்வதுண்டு. இதையே கார்த்திகேசன் தேர்தலில் நின்றதுடன் ஒப்பிட்டார். இவ்வாறே தோழர் கார்த்திகேசனின் நகைச்சுவை கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாக இருந்தன.

இவருடைய குடும்ப வாழ்க்கையும் ஏனையோருக்கு முன்மாதிரியாகவே அமைந்தது. பொதுவாழ்வையும், குடும்ப வாழ்கையையும் சமாந்தரமாகவும் அதேநேரத்தில் ஒன்றையொன்று விழுங்காமலும் சம நிலையில் பேணியுள்ளார். சாதாரண யாழ். மத்தியதர வர்க்கத்தில் பிறந்து, ஒரு மிகச் சாதாரணமான பெண்ணைக் கரம்பிடித்து வாழ்க்கையை ஆரம்பித்தார். அவர் இறக்கும்போது கூட அவருக்குச் சொந்தமான ஒரு வீடு இருந்ததில்லை. வாடகை வீடுகளிலும்,

உறவினர் வீடுகளிலும் தான் வாழ் நாள் முழுவதையும் கழித்தார். ஆசிரியத் தொழிலிலும், கட்சிப் பணிகளிலும் ஈடுபடுத்தியதால், வீட்டு முன்னேற்றம், பிள்ளைகள் முன்னேற்றம் என்று செலவழித்த நேரம் மிகக் குறைவு. அவரைப் புரிந்து கொண்ட மனையாள் வாய்த்திருந்ததால் பிள்ளைகளின் முன்னேற்றம் குறைந்ததாக இல்லை. ஏனையோரைப் போல ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றுவிட்டேனே என்று சீதனத்திற்கு பணம் சேர்க்க ஆலாய் பறந்து அவதிப்பட்டதில்லை. யாழ்ப்பாணத்தில் வழமையாக பயன்படுத்தப்பட்ட ஒரு சொல்லான 'வான்பயிர்கள்' என்று தன் பிள்ளைகளைக் குறிப்பிடுவது வழக்கம். அவர்களும் வான் பயிர்போன்று வளர்ந்தது மட்டுமல்ல, சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாக இன்னும் வாழ்கின்றனர். அவர் ஆரம்பத்தில் ஏனைய கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியர்களுடன் பழகிக் கொண்ட கம்யூனிஸ்ட் வாழ்க்கைபோன்ற வாழ்க்கை நெடுகவும் தொடர்ந்ததென்றே கூறவேண்டும். இதற்கு அவருடன் கூடிக்குலவி வாழ்ந்த நண்பர்களும் உறவினர்களும் சாட்சியாவர். இவர் தனது நேரத்தின் பெரும் பகுதியை சமூகப் பணியில் செலவிட்டபோதும், மனைவி, பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களுடன் பாசத்துடன் நல்லுறவைப் பேணினார்.

யானையைப் பார்த்த குருடரைப் போன்று எதற்கும் நியாயம் கற்பிக்கவும், பூசிமெழுகவும் மாத்திரமே தெரிந்துகொண்ட புத்திஜீவிகள் பவனிவரும் இக்காலத்தில் அவரது சமூக நோக்குப் பற்றிய புரிந்துணர்வை நாம் முக்கியமாக கவனத்தில் எடுக்க வேண்டும். வடகிழக்கிற்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டுமென்ற கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானத்திற்கு இவரது பங்களிப்பும் உண்டு. பின்னாளில் இடதுசாரிகள் உட்பட அனைத்துப் பாராளுமன்றக் கட்சிகளும் இனவாத நிலையை எடுத்துச் சீரழிந்தபோதும், தமிழ் மக்களின் ஜனநாய உரிமைகளை வென்றெடுக்க ஒரு மக்கள் ஜனநாயக அமைப்பின் தேவையை தனது கடைசிக் காலத்தில் நன்கு உணர்ந்து அதற்கான பணியையும் தொடங்கி வைத்தார்.

இவருடைய வழிகாட்டலில் சமூக வளர்ச்சிக்காக உழைத்தோர் பலர். அதேவேளை போலிகளும் உருவாகாமலுமில்லை. அவரிடம் பயின்றமையும், அவருடன் சமூகப் பணியாற்றியதையும் வைத்து தமது சமூக அந்தஸ்தை மட்டும் உயர்த்தியுள்ளோரும் உள்ளனர். இன்று இந்த நபர்கள் சமூகத்திற்கு துரோகம் இழைத்து தமது பொறுப்பைத் தட்டிக் கழிக்கின்றனர். நவீன கறுப்புத்துரைமார்களாக உலாவரும் இவர்களிடமிருந்து தோழர் கார்த்திகேசனை மீட்டெடுப்பது இன்றைய எமது தலையாய கடமையாகும்.

*ஸ்ரீபதி எனும் கட்டுரையாளரால் எழுதப்பட்டு இருபத்தோராவது வருட நினைவு நாளையொட்டி 'சரிநிகர்' நவம்பர் 26 - டிசம்பர் 09,1998 பிரசுரத்தில் வெளிவந்த கட்டுரையாகும்.

வடபுலத்துக்கு பொதுவுடமை கருத்துக்களை முதன் முதல் எடுத்துச் சென்ற கார்த்திகேசன்

வெகுஜனன்

இந்த நூற்றாண்டின் இருபதுகளிலே தமிழகத்தில் முதன் முதலாகப் பொதுவுடைமைச் சித்தாந்த விதைகளை விதைத்து அவற்றை வளர்த்தெடுப்பதில் அரும்பாடுபட்டவர் ம.சிங்காரவேலர் என்பது வரலாறு கூறும் செய்தியாகும். அத்தகைய ஒரு கனதிமிக்கப் பணியினை மேற்கொண்டு நாற்பதுகளின் நடுக்கூற்றிலே இலங்கையின் வடபுலத்து தமிழர்கள் மத்தியில் முதன்முதலாக பொதுவுடமைக் கருத்துக்களை கம்யூனிஸ்ட் கட்சி மூலமாக எடுத்துச் சென்று பரப்பியவர் தோழர் மு.கார்த்திகேசன்.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் 1935ல் தோற்றம் பெற்றதாயினும் பொதுவுடைமைக் கட்சியான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி 1943ம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதே காலப்பகுதி காலனி ஆதிக்க் எதிர்ப்பும் ஏகாதிபத்திய எதிர்ப்பும் தொழிற்சங்க இயக்கங்களும் வீறுபெற்று வளர்திசை நோக்கி நின்றதோர் காலகட்டமாகும். அக்காலத்தில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்து இளம் பட்டதாரிகளாக வெளியே வந்த ஒரு தொகுதியினர் மேல் நோக்கிய உயர் அரசாங்க பதவிகளை நாடிச் செல்வதற்குப் பதிலாக இடதுசாரி இயக்கத்தினாலும் கம்யூனிஸ்ட் கட்சியினாலும் ஈர்க்கப்பட்டனர். அவர்களில் தமிழர்களான மு.கார்த்திகேசன், எஸ்.கே.கந்தையா, அ.வைத்திலிங்கம், நா.சண்முகதாசன், பொன். கந்தையா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவருமே தம் வாழ்நாள் பூராவும் கம்யூனிஸ்ட் இலட்சியத்துடனும் அதற்கான வழியிலும் வாழ்ந்து மறைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தோழர் மு. கார்த்திகேசன் மலேசியத் தொடர்பு நெருக்கமாக இருந்த குடும்பத்தில் இருந்து வந்தவர். பட்டதாரிப் படிப்பை முடித்ததுடன் ஆங்கிலத்தில் சிறந்த புலமை பெற்றவராகவும் திகழ்ந்த அவர் மலேசியாவிலோ அன்றி இலங்கையிலோ அரசாங்க உயர் பதவியைப் பெற்று உயர் நிலை நோக்கிச் சென்றிருக்க முடியும். தன்னையும் தனது குடும்பத்தையும் மேம்படுத்தி சொத்து சுகங்களைத் தேடிக்கொள்ளும் சராசரி யாழ்ப்பாண மத்தியதர வர்க்க சிந்தனைக்குள்

புகுந்துகொள்ளாது பொதுவுடமைப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். தனது பட்டப்படிப்பிற்குப் பின் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகிக் கொண்டு கொழும்பில் கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் முக்கிய பணியேற்று செயல்பட்டு வந்தார். இக்காலத்தில் வடபுலத்தில் கட்சியின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக கார்த்திகேசனை கட்சி யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தது. 1945ம் ஆண்டில் அவர் யாழ்ப்பாணம் சென்றடைந்தார்.

அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் நிலை மிகவும் கட்டிறுக்கம் பெற்ற பழைமைவாதத்தினால் கட்டுண்டிருந்த நிலைதான். நிலவுடமை ஆதிக்கத்தின் ஓர் உறுதிமிக்க கூறாக விளங்கிய சாதியம் தன் முனைப்புடன் காணப்பட்டது. தீண்டாமை ஏற்றுக்கொள்ளப்பட்ட விதியாக இருந்து வந்தது.

ஏற்கனவே தமிழகத்தில் வளர்ச்சி பெற்றிருந்த ஈ.வே.ரா பெரியாரின் திராவிட கழக சீர்திருத்தக் கருத்துக்கள்கூட இலைமறைகாயாகவே இருந்து வந்தது. காந்தியக் கருத்துக்கள் பரவலாகக் காணப்பட்டாலும் அவைகூட யாழ்ப்பாணக் கட்டமைப்புக்கு ஏற்ற வகையில் மட்டுப்படுத்தப்பட்ட தொன்றாகவே உள்வாங்கப்பட்டிருந்தது.

இத்தகைய சமூக அரசியல் சூழலிலேயே கார்த்திகேசன் பொதுவுடைமைக் கருத்துக்களையும் மார்க்ஸிசத்தையும் வடபுலத்தில் அறிமுகம் செய்துவைக்கும் கடுமையான பணியில் இறங்கினார். அவரது கட்சிப் பணிக்கும் அன்றாட வாழ்வுக்கும் இடையில் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆதலால் கட்சியின் முடிவுடன் ஆசிரியர் தொழிலை தேர்ந்தெடுத்துக்கொண்டார். தனது வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவன்றி கட்சிப் பணிக்காகவே ஆசிரியர் தொழில் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

முதன் முதலாக ஏழு உறுப்பினர்களுடன் கம்யூனிஸ்ட் கட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது. மு.கார்த்திகேசன், சு.வே.சீனிவாசகம், எஸ். கே. கந்தையா, எம்.ஏ.காதர், இராமசுவாமி ஐயர், எம்.சி.சுப்பிரமணியம், க.மகாலிங்கம் ஆகிய ஏழுபேர் மட்டுமே ஆரம்ப உறுப்பினர்களாக விளங்கினர்.

அன்று ஆரம்பித்த கம்யூனிஸ்ட் இயக்கமே பிற்காலத்தில் வடபுலத்தில் பரந்த வெகுஜனப் போராட்டங்களையும் தொழிற்சங்க இயக்கங்களையும் முன்னெடுத்து நின்ற சக்திமிக்க இயக்கமாக அறுபதுகளின் பிற்கூறிலே வளர்ச்சி கண்டு நின்றது. அத்தகைய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வழிகாட்டிகளில், தலைமைத்துவம் வழங்கியவர்களில் மு.கார்த்திகேசன் தனது இறுதி மூச்சுவரை செயல்பட்டு நின்ற ஒருவராக இருந்து வந்தார்.

தோழர் கார்த்திகேசன் வடபுலத்து கல்வித்துறையிலும் அரசியல் அரங்கிலும் அடிநிலை மக்கள்தொட்டு உயர் நிலைப் புத்திஜீவிகள் வரை நன்கு அறியப்பட்ட ஒருவராக வாழ்ந்து வந்தார். ஓர் உறுதிமிக்க கம்யூனிஸ்ட்டின் உயர்ந்த பட்சக் குணாம்சங்களையெல்லாம் கார்த்திகேசன் கொண்டிருந்தமை அவரது சிறப்பின் அடித்தளமாகும். மார்க்ஸிசத்தை வெறுமனே போதனைக்குரிய தத்துவமாக அன்றி

வாழ்வியலுக்கான தத்துவமாகக்கொண்டு வாழ்ந்து வழிகாட்டி நின்றவர் கார்த்திகேசன். எளிமையான வாழ்க்கையும், கடுமையான கட்சிப்பணியும் என வாழ்ந்தவர். மக்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் காத்திகேசன் என அழைக்கப்பட்டவர்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்றிருந்த போதிலும் மார்க்ஸிசத்தை மிக எளிமையாக சாதாரண மக்களுக்கு எடுத்து விளக்குவதில் வல்லவராக அவர் இருந்து வந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியப் பணிபுரிந்த அவர் மாணவர்களுக்கு தகுந்த பாடசாலைக் கல்வியை வழங்கியதுடன் தனது அரசியல் கருத்துக்களையும் பரப்பிக் கொள்ளத் தவறவில்லை.

வடபுலத்து தொழிலாளர்கள், விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், மாணவர்கள் என்போரிடையே கார்த்திகேசன் ஒரு மக்கள் தொண்டனாக, கம்யூனிஸ்ட் போராளியாக இருந்து வந்தார். ஆரம்ப காலத்தில் அவரது அரசியல் எதிரிகளும் பிற்போக்கு சாதி வெறியர்களும்கூட கார்த்திகேசனை நெருங்க முடியாத அளவுக்கு உழைக்கும் அடிநிலை மக்களால் சூழப்பட்ட ஒரு கம்யூனிஸ்டாக வாழ்ந்து வந்தார்.

கட்சி வளர்ச்சி பெறாத ஆரம்ப காலத்தில் யாழ்ப்பாணத்தின் பழைமைவாதச் சூழலை உடைத்து முன்செல்வதில் தானும் மற்றைய தோழர்களும் எதிர்கொண்ட எதிர்ப்புகள், அவற்றை வெற்றிகொண்ட அனுபவம், இறுதிவரை நிலை குலையாத திடசித்தம் போன்றவற்றை தனது காலத்து இளம் தலைமுறையினருக்கு நம்பிக்கையுடன் கையளித்துச் சென்றவர் கார்த்திகேசன். அவர் வடபுலத்து கம்யூனிஸ்ட் இயக்கத்தின் பரந்த வளர்ச்சிக்கு உயர்ந்த பங்களிப்பை வழங்கிச் சென்றார். அதேநேரம் அவர் தனது குடும்பத்திற்கு அன்றாட தேவைகளையும், பிள்ளைகளுக்குக் கல்வியையும், புதிய உலகக் கண்ணோட்டத்தையும் மட்டுமே விட்டுச் செல்ல முடிந்தது.

சொத்து, சுகம், ஆடம்பரம் போன்றவற்றை ஒருகணம் தானும் நாடிநின்ற ஒருவராகவோ, இரட்டை வாழ்க்கை வாழ்ந்த லேபல் கம்யூனிஸ்டாகவோ அவர் ஒருபோதும் இருந்தது கிடையாது. கார்த்திகேசன் கட்சியையும் கட்சித் தோழர்களையும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களையும் ஒரு பெரிய கூட்டுக் குடும்பமாகக் கருதிச் செயல்பட்டவர்.

கார்த்திகேசன் 1919ல் பிறந்தவர். 1977ல் இறந்தவர். இந்நாள் அவரது இறப்பின் 20வது வருட நினைவாகும். இந்நாளில் பொதுவுடைமைப் பணி புரிந்து தனக்கென வாழாது அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வாழ்ந்து மறைந்த அவரை இன்றைய இளம் தலைமுறையினரிடையே நினைவு கொள்வது ஒரு அவசியமான தேவையாகும்.

*'வெகுஜெனன்' *எனும் பத்திரிகையாளரால் எழுதப்பட்டு இருபதாவது வருட நினைவுநாளிலே , செப்டம்பர் 10, 1997 அன்று பிரசுரமான 'தினக்குரல்' பத்திரிகையில் வெளிவந்த கட்டுரையாகும்.*

M. K. யின் சில நகைச்சுவைத் துணுக்குகள்

கிரிக்கட் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. போட்டி நடந்து கொண்டிருக்கும் போது துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் நடுவரின் அனுமதியுடன் தண்ணீர் குடிக்க வந்தனர். ஆசிரியர் கூறியநகைச்சுவை,

''எதிரணியின் பந்துவீச்சினால் நெஞ்சிற்குள்ள தண்ணீர் இல்லை அதுதான் தண்ணீர் குடித்தனர்.''

□□□□□□□□□□

அவர் கதைக்கும் போதெல்லாம் M.K என்ற எழுத்து வரக்கூடியதாகக் கதைப்பார்.

1. இது என்ன M.K. - மனக்கணிதம்?
2. எவருக்கும் M.K - மனக்கட்டுப்பாடு தேவை.
3. இன்றைக்குச் சரியான M.K - மழைக்குளிர்.

இப்படிப் பலபல M.K. க்கள் அவரது வாயிலிருந்து அவ்வப்போது உதிரும்.

□□□□□□□□□□

யாழ்ப்பாணத்தில் பிரமுகர் ஒருவருக்கு அரசடிச்சந்தியில் வைத்து அடி விழுந்தது. ஆசிரியர் அதையிட்டு,

''அரசடிச்சந்தி அல்ல அசலடிச் சந்தி''

என்று நகைச்சுவையாகக் கூறினார்.

□□□□□□□□□□

முன்னர் யாழ்-இந்து விடுதியில் வாளி மலசல கூடந்தான் இருந்தது. அவர் அதிபராக வந்த பின்னர்தான் நீர்க்குழி மலசலகூடம் அமைக்கப்பட்டது. அதையிட்டு அவர் கூறியது,

''நான்தான் இந்த இந்துக்கல்லூரியிலே (மும்)மலத்தையடக்கியவன்."

□□□□□□□□□□-

பழைய மாணவர்கள் விளையாட்டு மைதான மதில் மேல் ஏறியிருப்பார்கள். இவரைக் கண்டதும் இறங்கி மரியாதையாக நிற்பார்கள். இவர், அவர்களைப் பார்த்துக் கேட்பார், ''என்ன செய்கிறீர்கள்? என்று, அவர்கள் சொல்லுவார்கள் S.I (உதவிப்பொலிஸ் பரிசோதகர்) நேர்முகப் பரீட்சைக்குப் போய் வந்துள்ளோம் என்பர். அவர் கூறுவார் ''ஓ! சும்மா இருக்கிறது (S.I.) என்று."

□□□□□□□□□□-

நான் ஒரு நாள் குளிப்பதற்குத் துவாய்,சாரம் என்பவற்றோடு சென்று கொண்டிருந்தேன். அப்போது அவர் என்னைப்பார்த்து ''நாண்ட- குமார்" என்றார்.

நாண்ட-குமார் என்பது தமிழில் எனது பெயரின் உச்சரிப்புப் போலவும்,

குளியுங்கோ-குமார் என சிங்களத்தில் பொருள்படவும்,

அதே போல் நாண்ட-குமார் குளிக்க குமார் போகிறது என சிங்களம்-தமிழ் இரண்டும் கலந்த பேச்சுவாக்கு மொழியிலும்

பல அர்த்தம்பட, அச்சந்தர்ப்பத்தில் மிகவும் பொருத்தமாக எடுத்துவிட்டது பாராட்டத்தக்கது.

Dr.Kumarasamy Nandakumar,
Justice of Peace (All Island)
கொழும்பு றோயல் கல்லூரி
விஞ்ஞான ஆசிரியரும்,
யாழ்- இந்துக் கல்லூரிப்
பழைய மாணவருமாவார்.

* * *

ஆசிரியர் கார்த்திகேசன்

க. அருணாசலம்

யாழ். இந்துக்கல்லூரி ஆசிரியரும் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவருமான கார்த்திகேசனின் ஞாபகமாக ஒரு நூல் வெளியிடுவதை யிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். அவருடைய சேவையை தமிழ் மக்கள் என்றும் மறக்க முடியாது. அவருடைய காலத்தில் யாழ் கல்வி வரலாறு உன்னத நிலையில் இருந்தது.

யாழ்ப்பாண மக்கள் கல்வி வளர்ச்சிக்கு என்றுமே முக்கியத்துவம் கொடுத்து வந்தனர். இன்னும் இலங்கையில் யாழின் சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிக் கல்விப் பாரம்பரியம் பற்றி தென்பகுதியில் வசிக்கும் இன்றைய கல்வியாளர் பேசிக்கொள்கின்றனர். அக்காலத்தில் யாழ். கல்லூரிகள் திறம்பட இயங்கி சிறந்த பிரஜைகளை உருவாக்கின. அக்காலத்தில் இங்கு வந்த பிறநாட்டுக் கல்வியாளர் யாழ். குடாவில் காணப்படும் இரண்டாம்தரக் கல்வி (Secondary Education) உலகில் மிகவும் உன்னத நிலையில் உள்ளது என்று கூறியுள்ளனர். இக்காலம் அநேகமாக 1959, 1960ஐ அண்டி உள்ளது எனக் கொள்ளலாம்.

இங்குள்ள சில பாடசாலைகள் இங்கிலாந்தில் உள்ள சிறந்த பொதுப் (Public Schools) பாடசாலைகளான Eton, Harrow, Rugby க்கு இணையாக இருந்தன. யாழ்ப்பாணத்தில் பல சான்றோர் உருவாகவும், பல்கலைக் கழக புகுமுக வகுப்பில் அனுமதி பெறவும் இப்பாடசாலைகள் ஊன்றுகோலாக அமைந்தன. இந்நாட்களில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி பல்கலைக் கழகத்திற்கு கூடிய மாணவர்களை அனுப்பியது.

யாழ். கல்லூரிகள் இவ்வுயர்நிலையை அடைவதற்கு காரணகர்த்தாக்கள் ஆசிரியர்களே. அக்காலத்து ஆசிரியர்கள் தங்கள் பாடங்களில் நிபுணத்துவம் பெற்றவர்களாயும், சான்றோர்களாயும் இருந்தனர். ஆசிரியரின் சான்றாண்மை

மாணவர்களையும் சான்றோராக்கியது. இதற்கு உதாரணம் கார்த்திகேசன் மாஸ்டராகும். அவரினது ஆளுமையும் சான்றாண்மையும் (Gentleman inevery sense of the world) மாணவர்களை சான்றோராக்கியது. இவர் தனது மாணவர்களைத் திருத்துவதற்கு கதைகளையும் பகிடிகளையும் (jokes) உபயோகித்து அவர்களுடைய பிழைகளை உணரச்செய்தார். இன்றும் அவரது பழைய மாணவர்கள் அவரின் நகைச்சுவை துணுக்குகளை நினைவு கூர்ந்து மகிழ்கின்றனர். இவர் போல் அன்றைய மற்றைய ஆசிரியர்கள் தமது ஆளுமைகளைப் பாவித்து மாணவர்களை வழிப்படுத்தினர்.

அன்றைய உயர்வகுப்பு ஆசிரியர்களின் கற்பிக்கும் ஆற்றல் அளப்பரியது. கார்த்திகேசனுடைய பாடம் ஆங்கிலம் ஆகும். ஆங்கில இலக்கியத்தில் இவரது அறிவு அளவிடற்கரியது. இவர் வாழ்க்கையில் பலதரப்பட்ட அனுபவம் பெற்றவராதலால் தனது கல்வியூட்டலில் தனது அனுபவங்களை புகுத்தி, உதாரணங்கள் மூலம் மாணவரைக் கவர்ந்து ஆங்கிலத்தை அனுபவித்து கற்பித்தார். இதனால் மாணவர்களின் ஆங்கில அறிவு வளர்ச்சி பெற்றது.

வாழ்க்கையில் கார்த்திகேசன் அரசியலில், சமூக சேவையில், தொழிற் சங்க அலுவல்களில் முழுமையாக ஈடுபட்டு உழைத்தார். ஆனால் இவற்றை வகுப்பறைக்கு எடுத்துச் செல்வதோ, கல்வி கற்பிக்கும் நேரத்தில் தனது கொள்கைகளை தொடர்புபடுத்துவதோ கிடையாது. இதுவும் அவரது சிறந்த பண்புக்கூறு ஆகும்.

பாடசாலை முடிந்ததும் அன்றைய ஆசிரியர்கள் உடன் வீடு செல்லாமல் ஆசிரியர் அறையில் இருந்து அன்றைய பாடசாலையின் செயற்பாடுகள், தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஆகியவற்றை மற்றையவர்களுடன் பகிர்ந்தும், கஷ்டமான பாடங்களைப் பற்றி விவாதித்தும், மாணவர்களைப்பற்றி கலந்துரையாடியும் கல்லூரியில் ஒரு சுமூக நிலையை உண்டாக்கியவர்கள்.

அன்றைய யாழ். இந்துக் கல்லூரியில் இருந்த ஆசிரியர் வெவ்வேறான வாழ்க்கைத் தத்துவங்களைப் பின்பற்றியவர்களாயும், வாழ்க்கையைப் பற்றிய வெவ்வேறு நோக்கு உடையவர்களாயும் இருந்தனர். ஆகையால் ஆசிரியர் அறையில் தங்கள் கருத்துக்களை பரிமாறி விவாதிப்பதனால் ஆசிரியர்கள் அனுபவஸ்தராகத் திகழ்ந்தனர். வடுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஆசிரியராக இருந்த நான் மாதத்தில் ஓரிரு நாட்கள் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் அறையில் இருந்து இம்மாதிரியான விவாதங்களை அனுபவிக்கும் சந்தர்ப்பங்கள் எனக்கும் கிடைத்தது. இதற்குக் காரணம் நான் 1956ம் ஆண்டு தொடங்கி 1960ம் ஆண்டுவரை யாழ. இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

செயலாளராக இருந்ததுவே. இதன் பயனாக யாழ். இந்துக் கல்லூரியின் அன்றைய ஆசிரியர்களின் இறுக்கமான தொடர்பினால் பல ஆசிரியர்களின் பண்புக்கூறுகளை அறியும் தன்மையுடையவனாய் இருந்தேன். இதில் கார்த்திகேசனின் ஆசிரியப் பண்புக்கூறு மேன்மையுடையது என்பது வெறும் புகழ்ச்சி அல்ல.

தொழிற்சங்கவாதியாக கார்த்திகேசனை வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நிருவாக சபை அங்கத்தவராக இருக்கும் (N.P.T.A) போது நன்றாக அறியமுடிந்தது. அன்றைய வடமாகாண ஆசிரியர் சங்கத்தில் அக்காலத்து முன்னணி ஆசிரியர்களான Perinpanayakam, A.E. தம்பர், ஒறேற்றர், J.P. துரைரத்தினம், N. சபான், E. சபாலிங்கம், A. வைத்திலிங்கம், A.S.K. ராஜசேகரம் போன்றவர்களுக்கு இணையாக கார்த்திகேசனும் விவாதங்கள், கலந்துரையாடல்களில் கலந்து ஆசிரியர்களின் சேவையை முன்னெடுப்பதற்கு காரணியாய் இருந்தார். அந்த ஆசிரியர் சங்க விவாதங்களும் காரசாரமாய் இருந்தாலும் பண்புடையதாய் அமையும். கார்த்திகேசனின் பங்கேற்பு ஆசிரிய விவாதங்களில் புதிய கோணங்களில் புரிந்துணர்வு உடையதாக அமையும். இந்தக்காலத்தில் நான் செயலாளராக இருந்த காலம் அரசாங்கம் உதவிபெறும் பாடசாலைகளை பொறுப்பேற்ற காலமுமாகும். இந்நிலையில் ஆசிரியரின் பல பிரச்சினைகளை சங்கம் ஏற்று நிவர்த்தி செய்ய வேண்டி இருந்தது. இதனால் சங்கத்தின் பல குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு இராப்பகலாய் இயங்க வேண்டியிருந்தது. இவற்றில் அநேக உபகுழுக்களில் முக்கிய பங்கு ஏற்றுத் தொழிற்பட்டவர் கார்த்திகேசன் ஆகும். அவரின் ஆலோசனைகள் பெரிதும் பயன் உடையதாய் அமைந்தது. அவரின் ஒத்துழைப்பு எனக்கு மிகவும் ஆசிரிய சங்க அலுவல்களை நிறைவேற்ற உதவியாய் இருந்தது.

அவர் இன்று அமரத்துவம் அடைந்து விட்டாலும் அவர் யாழ். மக்களின் மனதில் என்றும் நிலைத்து நிற்பார் என்பது உறுதி.

க. அருணாசலம்,
முன்னாள் அதிபர்.
சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி

* * *

எந்தன் வாழ்வின்
கருத்தியல் வெளிச்சமாய்.....

கலாநிதி ந. சண்முகலிங்கன்

பிஞ்சு வயதில்
பதிந்த நின் ஆளுமை
நெஞ்சில் என்றும் புதிதாய் உள்ளது....

நீவிர் தந்த
எல்லோர்க்கும் வாழ்வென்ற
இனிதான பாடல்
என்றென்றும் எனக்குள்ளே
உயிராக உள்ளது....

அன்று உங்கள்
எல்லையிலா அறிவினை
முழுமையாய் நுகரும்
ஆற்றல் இல்லை
ஆனாலும்
உங்கள் ஆளுமை வீச்சின்
அரங்குகள் தந்த
உணர்வுப் பொறி எமைத் தொற்றும்

எந்தன் வாழ்வின்
கருத்தியல் வெளிச்சமாய்
கார்த்திகேசன் மாஸ்டர்
கனலாய் நிலைத்திருப்பார்

கலாநிதி ந. சண்முகலிங்கன்,
தலைவர், அரசறிவியல் - சமூகவியல்துறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

* * *

He Moulded Men

S. Pathmanathan

It happened in 1953. I was at Jaffna Hindu - in the Prep S.S.C. My maternal uncle who was supporting me felt I was not making much headway in Mathematics. So, he took me to Karthigesan. That was the beginning of a relationship that was to last for a quarter of a century.

Karthi's residence at Nachimarkovilady was a hive of activity - students and party workers popping in and out. He was at the table on the verandah meeting people. There was a Peacock cigarette tin within reach (It was the cheapest brand in the market and Karthi was a heavy smoker!). His doors were always open to the common man. I have never seen a more ardent, a more Committed Communist. I mean, he was a practising Communist.

That takes me to Karthigesan's tryst with the C.P. Born in Malaya, Karthi was educated there up to Senior Cambridge. Thereafter, he was sent to Ceylon for higher studies. He entered the Ceylon University College in 1937. He was so good in both English and Maths that two illustrious professors E.F.C.Luddowyke and C. Suntharalingam were voicing to get him into their departments. Finally Karthi opted for English honors. At the University he was editor of "Student News".

An English honours graduate with a flair for writing could have simply 'walked into' the Lake House to join its Editorial Department - to draw a handsome salary. But Karthi was destined for greater things. He was content to be the Editor of Communist Party's organ, "Forward".

It was about this time that full - time party workers like Peter Kenueman, his wife, K. Ramanathan and others lived in a Commune at 89, Cotta Road, Borella. Karthi and his 'Poor - rose' - the woman he fell in love with and married - joined the commune. Such was his idealism.

Jaffna Hiudu College, the premier Hindu institution needed an English teacher. Karthi was an applicant. "Hindu was then managed by a Board headed by Sir Waitilingam Doraisamy, the first Speaker of independent Ceylon. The board members were not happy at the prospect of employing a Communist. Yogar Swami, the mystic to whom many a pious Hindu went, was consulted. He is said to have yelled in his own blunt manner. "Take the Communist. He will prove to be a good teacher!" Indeed Yogar was right. Karthi was a different kind of teacher.

He won't be content with claiming a few bright students as his products. His aim was always to bring the back - bencher to the front. In an insane world, which makes a lot of fuss about students "topping the list", Karthi was different. His priority was not "coaching" students for examination. He moulded the minds of men, perhaps of, his (most) illustrious student Kailasapathy he said:

"Most of my students were armed with Thevaram, Thiruvachakam or the Bible - avenues that would take them to heaven. Among them was a smart boy who was different. He was plodding his way with books on Social Science and Anthropology. I guided him. He started looking earthwards. He subscribed himself to the Communist ideology. That boy was Kailasapathy".

Karthi was highly principled. He was an avowed Communist. While serving as a teacher, he fought both the Municipal and Parliamentary elections. There were hectic campaigns outside. But he won't discuss politics in the classroom. We were all his admirers - followers, but that was

in the field. I still remember: Karthi had led the temple entry at Nallur that morning but he was in our class within a couple of hours - in national dress - but not a hum, no loud claims!

Karthi had a good sense of humor. Looking back, I think it kept him going; it helped him to meet the challenges both personal and public. His students like Srinivasam used to have a rich store of his quips. For my part, I would like to conclude this tribute with two.

It was on the eve of the 1977 election. The TULF was going all out to get a mandate for Tamil Eelam. I bumped into Karthi at the bank.

"Sir, what is your reaction to the TULF nominating Rasalingam for Udupitty?"

"The high-caste herd is fielding a spotted doe. (சாதிமான்கள் சேர்ந்து ஒரு புள்ளிமானை விட்டிருக்கிறாங்கள்.)

Karthi happened to be traveling by the night mail to Jaffna at the outbreak of the 1977 riots. The train was attacked. But Karthi wasn't hurt, but his pair of new shoes were taken. Back in Jaffna, while recounting the nightmore, he quipped: "Some Barathan!" (ஆரோ பரதன்!) The reference was to Barathan of the **Ramayana** who faithfully carried his banished brother Rama's pair of sandals as a token and ruled the country in his name.

Why do we cherish this man's memory twenty five years after his demise? Because he sat in motion forces that were to change our thinking, our outlook and our attitudes. Because he was brilliant, yet humble and simple; because he served the people, at the expense of his personal comforts. He never owned a house! But he still inspires us.

S. Pathmanathan,
Retd. Principal,
Palaly Teachers' College

திரு. மு. கார்த்திகேசன் ~ அதிபர், கோப்பாய். கிறிஸ்தவ கல்லூரி

திருமதி. தவபுத்திரி செ. ஜேசுதாசன்

திரு. மு. கார்த்திகேசன் அவர்கள் தம் சேவைக் காலத்தில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு அதிபராக கடமையாற்றியுள்ளார். அன்னார் எங்கள் கல்லூரிக்கு 1971ம் ஆண்டு ஆனிமாதம் அதிபராக நியமனம் பெற்று எங்கள் கல்லூரியில் தாய்மை நிறைந்த முகத்தோற்றத்துடன் சில மாதங்கள் கடமை புரிந்தார். அந்தக் காலப் பகுதியில் நான் கல்லூரி லிகிதராக கடமையாற்றிக்கொண்டு இருந்தேன். நான் இக் கல்லூரியிலேயே 1951ம் ஆண்டு முதல் மாணவியாக இருந்து 1958ல் லிகிதர் பதவியில் அமர்த்தப் பட்டேன். அதன் நிமித்தம் அன்னார் எனது கல்லூரி வாழ்க்கையில் ஆறாவது அதிபர்.

மற்ற அதிபர்களை விட இவரில் இரண்டு வேறுபட்ட காரியங்கள் காணப்பட்டன. இவர் கல்லூரிக்கு கடமை ஏற்று வரும்போது 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' எனத்தான் விளங்குவதாக எனக்கு தெரிவிக்கப்பட்டது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே எனக்கு எல்லாம் என்ற விசுவாசத்துடன் வாழ்ந்து கொண்ட எனக்கொரு மனத்திகிலே ஏற்பட்டது. ஆனால் அவரது பேச்சு வார்த்தை, நடத்தை எனக்கு மனத்தெளிவைக் கொடுத்து சந்தோஷமாக காரியாலய கடமைகளை செய்யக்கூடியதாக இருந்தது. இதன் மூலம் அன்னார் மற்றவர்களுடைய சமய வாழ்க்கையில் கஷ்டம் கொடுப்பவர் அல்ல என்று தெளிவுபட்டது.

சில சமயங்களில் ஆசிரியர்களுக்கு இக்கட்டான சூழ்நிலை வரும் வேளையில் அவர் எல்லாவற்றையும் இலகுவாக்கி சமாதானத்துடன் அனுப்பிவைப்பார். அன்னார் கல்லூரியில் வசிக்க வேண்டிய இடத்தில் நான் இருந்ததினால் அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து கடமைக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அடுத்ததாக, அவருடன் ஒட்டிய வண்ணம் புகைபிடிக்கும் வழக்கம் இருந்தது. நான் சிறு வயது முதல் விடுதியில் இருந்ததால் புகை பிடிக்கும் தொழிலாளரை ''சுக்கு சுக்கு வண்டி வாரார்'' என்று பகிடிவிடுவேன். ஆனால் கார்த்திகேசன் அதிபரைப் பார்த்து ''சேர் புகைப்பிடித்தலை விடுங்கோ'' என்று தயவுடன் கேட்பேன். ஆனால் அவர் தனக்கு இது முடியாத காரியம் என்று கூறுவார்.

அவருடைய காலங்களில் தட்டெழுத்து வேலையையும் நான் செய்ததினால் அவருடைய ஆங்கில திறனை காணக்கூடியதாய் இருந்தது. எத்தனை எண்ணிக்கையான கடிதங்கள் எழுதினாலும் ஆங்கிலச் சொற்கள், பதங்கள், நடைமுறைகள் எல்லாம் புதிதாகவே இருக்கும். இதன் மூலம் அவருடைய ஆங்கில வாசிப்பின் பழக்கத்தின் திறனையும் ஞாபக சக்தியையும் அறியக்கூடியதாய் இருந்தது.

எனக்கும் அவருடன் சிக்கல் ஏற்பட்டது. அவருடைய காலத்தில் எனது தாயார் கொழும்பில் மரித்ததினால் நான் திரும்பிய பின் அடுத்த நாள் வேலைக்கு எதிர் பார்த்தவர். ஆனால் என்னுடைய உறவினர் மரணச் சடங்கில் பங்கு பெறாததினால் என் வரவை எதிர்பார்த்து என்னிடம் சமூகம் கொடுத்ததினால் எனது விடுமுறை நாட்கள் கூடியது. அவருக்கும் காரியாலயத்தில் கஷ்டம் கூடியது. ''அடிக்கிற கைதான் அணைக்கும்'' என்பதுபோல என் நிலையை சற்று அறிந்த பின் மிகவும் கவலைப்பட்டார். இதன் மூலம் அவருடைய உள்ளம் கனிந்த உள்ளம் என்பதை நாங்கள் உணரக்கூடியதாய் இருந்தது.

அன்னார் மார்கழி 71 முடிய பண்டத்தரிப்பு கல்லூரிக்கு மாற்றலாகிச் சென்றார். அவருடைய குறுகிய காலத்தில் அவரிடம் இருந்து தந்தையின் அன்பு, தாய்மையின் உள்ளம், மன்னிக்கும் மனப்பான்மை உள்ளவர் என்பதை எல்லோரும் அறிந்தோம். அவரின் மரணத்தின் பின் ஆண்டவர் தாமே அவர் குடும்பத்தை ஆறுதல்படுத்தினார்.

திருமதி. தவபுத்திரி செ.ஜேசுதாசன்.,
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

* * *

ஈழத்து மார்க்ஸ், லெனின், மாசேதுங் தோழர் கார்த்திகேசன் மாஸ்டர்

மருதூர்க்கனி

தோழர் கார்த்திகேசன் மாஸ்ரரை நினைவுகூர்வது என்பது மார்க்ஸையும், லெனினையும், மாசேதுங்கையும் நினைவுகூர்வது போலாகும்.

1970களில் தோழர் கார்த்திகேசன் மாஸ்ரரின் அரசியல் வகுப்புக்களுக்கு மருதமுனையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்று வந்த அந்த நாட்களை இன்று நினைத்தாலும் பசுமையாகவே இருக்கிறது. அவர் காலமாகி கால்நூற்றாண்டு கழிந்த நிலையிலும் அவரை நினைவுகூர்வது என்பது மார்க்ஸிசத்தையும் லெனினிஸத்தையும் மாவோவின் சிந்தனைகளையும் நினைவுகூர்வது என்று அர்த்தமாகும்.

மார்க்ஸ், ஏங்கல்ஸ் மறைவுக்குப் பின்னர் லெனின் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் மாபெரும் தலைவராகவும் உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளர் வர்க்கத்தினதும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களினதும் மாபெரும் ஆசானாகவும் விளங்கினார். பூர்ஷ்வா வர்க்க ஜனநாயகப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கமே தலைமை கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையை தத்துவார்த்தத்தினாலும் நடைமுறையினாலும் விளக்கினார். ரஷ்யப் பாட்டாளி வர்க்கத்திற்கு தலைமைகொடுத்தார். மகத்தான ஒக்டோபர் புரட்சியை நடத்தி முடித்தார். அதன் மூலம் பழைய முதலாளித்துவ உலகத்திலிருந்து, புதிய சோஷலிஸம் செல்லுகின்ற பாதையை திறந்துவைத்தார். அந்தப் பாதை மனிதகுலத்தின் வரலாற்றை புதியதோர் யுகத்திற்கு இட்டுச் சென்றது.

ஒக்டோபர் புரட்சியின் பீரங்கி முழக்கம் உலகம் முழுவதற்கும் கேட்டது. முதலாளித்துவ ஏகாதிபத்திய உலகம் நடுங்கியது. ''ஒக்டோபர் புரட்சியின் பீரங்கி முழக்கம், எமக்கு மாக்ஸிச - லெனினிஸத்தைக் கொண்டுவந்தது" என்றும், ''சீனர் மார்க்ஸிசம் - லெனினிஸம் என்ற சர்வவியாபகமாகப் பிரயோகிக்கக்கூடிய பொதுமை தழுவிய இந்த உண்மையை கண்டு பிடித்தார்கள்.

சீனாவின் தோற்றம் மாற ஆரம்பித்து" என்றும் தோழர் மாசேதுங் கூறினார். ''சீன மக்கள், சீனப் புரட்சியை மகத்தான ஒக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் தொடர்ச்சி என்றே எப்பொழுதும் கருதுகிறார்கள்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். லெனினின் மறைவுக்குப் பின்னர், ஸ்டாலின் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்த வர்க்க எதிரிகளுக்கு எதிரான போராட்டத்திலும் கட்சிக்குள் இருந்த 'வலதுசாரி' 'இடதுசாரி' சந்தர்ப்பவாதிகளுக்கு எதிரான போராட்டத்திலும் தொடர்ந்து ஈடுபட்டு லெனினின் இலட்சியங்களை கையேற்று முன்னெடுத்துப் பாதுகாத்தார். சோஷலிஸப் பாதையில் தொடர்ந்துமுன்னேறி சோவியத் மக்கள் மகத்தான வெற்றிகளைப் பெறுவதற்கு தலைமை கொடுத்தார். இரண்டாவது உலகப் போரின்போது பாஸிஸ ஆக்கிரமிப்பிலிருந்து சோவியத்தைப் பாதுகாத்து, பாஸிஸத்தை தோற்கடிக்கும் பிரதான சக்தியாக விளங்கினார்.

லெனின் காலம் முதல் ஸ்ராலின் காலம்வரை சர்வதேசத்திலும் மண்ணையும் விண்ணையும் அதிரச் செய்யும் மாற்றங்கள் நிகழ்ந்தன. முதலாளித்துவ - ஏகாதிபத்திய உலகத்திற்கு சோவியத் நிர்மாணம் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தது. ஆயினும் வரலாறு நெளிவு சுழிவுகளையும் ஏற்ற இறக்கங்களையும் கொண்டது. அதனால் என்ன தடங்கல்கள், பின்னடைவுகள் வந்தாலும் இயக்கம் - இயக்கவியல், செக்கிழுக்கும் மாடுகள்போல சென்ற தடத்திலேயே சென்று கொண்டிருக்காமல், சுழல் ஏணியைப் போல் சுழன்று சுழன்று மேல்நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. பிரட்ரிக் ஏங்கல்ஸின் மறைவுக்குப் பின்னர் பான்ஸ்தியன் கோர்ட்ஸ்கியின் திரிபுவாதம் தோன்றியதுபோலவே ஸ்டாலினின் மறைவுக்குப் பின்னர், குருஷ்சேவ் - பிறஸ்னேவ் திரிபுவாதம் தோன்றியது. உலக கம்யூனிஸ வரலாற்றில், பாட்டாளி வர்க்கத்தின் துரோகியும் சமூக ஏகாதிபத்திய வாதியுமான குருஷ்சேவினால் தொடங்கிவைக்கப்பட்ட திரிபுவாதம் கறைபடிந்த அத்தியாயமாயிற்று. உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றில் மன்னிக்க முடியாத பெருங்குற்றவாளிகளாக குருஷ்சேவ் திரிபுவாதிகள் கருதப்படுகின்றனர். மக்கள் சீனாவில் மாசேதுங்கின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களுக்கும், சோவியத் நாடு சிதறுண்டு சிதைந்து போனதற்கும் குருஷ்சேவ் - பிறஸ்னேவ் திரிபுவாத துரோகிகள் தொடங்கிவைத்த பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை மறுத்த - எதிர்த்த பாராளுமன்ற சந்தர்ப்பவாதமே முழுக்காரணமாக அமைந்தது.

''அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மத்தியிலும் புகழ் பெற்ற புரட்சிகரத் தலைவர்கள் மறைந்தபின்னர், அவர்களுடைய எதிரிகள் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை ஏமாற்றுவதற்காக அந்தத் தலைவர்களின் பெயர்களைப் பயன்படுத்த முயல்வது வரலாற்றில் அடிக்கடி நிகழ்கிறது" என்று லெனின் ஒருமுறை கூறினார். ஆனால் அதற்கும் மேல் ஒருபடி மேலே சென்ற திரிபுவாத துரோகிகள் சோவியத்தை அழித்தது மட்டுமல்லாமல் மாபெரும் தலைவர் லெனினின் நாமத்தையே அழிக்கும் முயற்சியிலும் ஈடு பட்டிருக்கிறார்கள். அவர்களை வரலாறு ஒருபோதும் மன்னிக்கப் போவதில்லை.

எவ்வாறாயினும் குருஷ்சேவ் - பிறஸ்னேவ் திரிபுவாத சமூக ஏகாதிபத்திய வாதிகள் தொடங்கிவைத்த, பாட்டாளிவர்க்க புரட்சிக்கு எதிரான- பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்கு சார்பான போக்குகளால் உலக கம்யூனிஸ இயக்கத்தில் தத்துவார்த்தப் போராட்டமும் அதைத்தொடர்ந்து மீளவும் ஏற்பட்டது. உலகம் முழுவதும் அது வியாபித்தது. இலங்கை கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் திரிபுவாதம் தலைதூக்கி அது தனது பாதையை பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தினூடாக தெரிவு செய்து கொண்டது. அதேவேளை இலங்கை இடதுசாரி இயக்கத்தில், மார்க்ஸிச - லெனினிஸ- மாசேதுங் சிந்தனையை திடசங்கற்பத்துடன் முன்னெடுத்துச் சென்று வழிகாட்டுவதில் இறுதிவரை போராடியும் செயற்பட்டும் வந்த தலைவர்களாக தோழர்கள் என். சண்முகதாசன், வாட்சன் பெர்னாண்டோ, ஹிக்கொட தர்மசேன, ஆரியவன்ச குணசேகர, மு.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி ஆகியோரைக் காண்கிறோம். தோழர் சண்ணனின் அரசியல் வகுப்புகளில் கலந்துகொள்ளும் பாக்கியம் நமக்கு கிட்டாதபோதும் அவரின் தலைமுறையைச் சேர்ந்த தோழர் கார்த்திகேசன் மாஸ்டரின் அரசியல் வகுப்புகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் கிட்டியமைக்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம். கார்ல் மார்க்ஸையும் பிரட்ரிக் ஏங்கல்ஸையும், லெனினையும், ஸ்டாலினையும் மாசேதுங் சிந்தனை களையும் சமூகவாழ்வின் யதார்த்தத்தினூடாக நோக்குகின்ற 'ஒரு பார்வையை' அவர் நடத்திய வகுப்புகளிலிருந்து கற்க முடிந்தது. தலைவர்களின் தத்துவார்த்த நூல்களைப் படித்து அறிந்து கிரகித்துக் கொள்வதற்கு தோழர் கார்த்திகேசன் மாஸ்டரின் வகுப்புகள் உதவியாக இருந்தன. உலகத்தை மாற்றிய மாபெரும் மேதைகளான மார்க்ஸும் ஏங்கல்ஸும் முன்வைத்த விஞ்ஞான அடிப்படையிலான வரலாற்றுப் பொருள் முதல்வாத ஆய்வின் மூலமாக உலகத்தையும் நாட்டையும் சமூகத்தையும் பார்க்க முடிந்தது.

''பாட்டாளி வர்க்கத்தை ஆளும் வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவதும் ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது என்பதும்தான் உழைக்கும் மக்களின் போராட்டத்தின் முதல் நடவடிக்கையாகும்" என்று பொதுவுடமை அறிக்கை கூறுகின்றது. ''வர்க்கப்போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்ஸிசவாதிகள் ஆகிவிடமாட்டார்கள். வர்க்கப்போராட்டத்தை ஏற்று பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்படுத்துவதுவரை விரித்துச் செல்பவனே மார்க்ஸிஸவாதியாவான்" என்று லெனின் கூறினார். அதுமாத்திரமன்றி ''வர்க்க சமுதாயத்தின் ஒவ்வொரு வடிவமும் - அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், முதலாளியச் சமுதாயம், இவை ஒவ்வொன்றுமே ஆளும் வாக்கத்தின் சர்வாதிகாரமாகும். முதலாளியச் சமுதாயத்தில், அதாவது பூர்ஷ்வா சமுதாயத்தில் இது, அனேகமாக ஜனநாயகமாக இருக்கலாம். இது அனைவர்க்கும் வாக்குரிமை என்ற அடிப்படையைக் கொண்ட பாராளுமன்ற தேர்தல்களையும் அனுமதிக்கலாம். ஆயினும் இது இன்னும் ஒரு சர்வாதிகாரம்தான்.

''பாராளுமன்ற வடிவங்கள் என்றும் முகமூடி அணிந்த முதலாளிவர்க்கச் சர்வாதிகாரம்தான்'' என்று லெனின் பாராளுமன்றப் பாதையை தோலுரித்துக்காட்டினார். ஆயினும் குருஷ்சேவ் - பிரஸ்னேவ் திரிபுவாத துரோகிகள்

சத்தியத்துக்கு மாறாக, பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் பாதையை நிராகரித்து, முதலாளியப் பாராளுமன்றப் பாதையை தெரிவு செய்துகொண்டனர். இதன் மூலம் மார்க்ஸிசத்திற்கும், லெனினிஸத்திற்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் பெருந்துரோகம் செய்தனர். இதனால் முதலாளிவர்க்கமும், ஏகாதிபத்தியமும் மீண்டும் சோஷலிஸ உலகத்தில் உயிர்ப்பதற்கு வழிவகுக்கப்பட்டது. அக்டோபர் புரட்சியினாலும் அதைத்தொடர்ந்து சீனப் புரட்சியினாலும் 'பாரிய அடி வாங்கிய' முதலாளி வர்க்கமும் ஏகாதிபத்தியமும் ஏறக்குறைய அரைநூற்றாண்டின் பின்னர் மெல்ல எழுந்து நிற்க முயற்சிக்கின்றது. குறிப்பிட்ட காலகட்டங்களில் வாழ்ந்த தத்துவவாதிகளும் சிந்தனையாளர்களும் அந்தந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த துரோகிகளால் காட்டிக்கொடுக்கப்பட்ட வரலாறுகள் நிறையவே உண்டு. ஆயினும், மக்கள் அந்த வரலாற்றை மாற்றி அமைத்துள்ளார்கள். அதேபோல பாட்டாளி வர்க்கமும் தனது விதியைத் தானே எழுதும்! கொஞ்சம் தாமதமாகலாம் அவ்வளவுதான். பாட்டாளி வர்க்கப்புரட்சி இன்று நீறுபூத்த நெருப்பாக அடங்கிக் கிடந்தாலும் முதலாளிவர்க்க ஏகாதிபத்தியத்திற்குள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் உள்முரண்பாடுகளால் அந்த 'நீறு' நெருப்பாகும். தோழர் மாசேதுங் கூறியதுபோல 'ஒரு சிறுபொறி காட்டுத் தீயையே உண்டாக்கும்' அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு காகிதப்புலி' என்று கூறிய மாசேதுங்கின் கூற்று வியட்நாமில் நிரூபிக்கப்படவில்லையா? அதேபோல 'செப்டம்பர் 11' அமெரிக்காவையும் முதலாளித்துவ உலகத்தையும் கிடுகிடுக்க வைக்கவில்லையா? ஐரோப்பிய நாடுகளில் 'பூகோள மயமாக்கல்' என்ற 'அதிநவீன சுரண்டல்'களுக்கு எதிராக ஏற்பட்டுவருகின்ற எதிர்ப்பலைகள் எதைக்குறிக்கின்றன? அபிவிருத்தி அடைந்துவரும் உலகம், மேலும் அபிவிருத்தி அடைய முடியாமல் அபிவிருத்தி குன்றுவதற்கு யார் காரணம்? வறிய நாடுகள் இன்னும் எவ்வளவு காலத்திற்கு அமெரிக்கா போடும் பிச்சைக்காக காத்திருக்க முடியும்? சோஷலிஸ சோவியத் சிதைக்கப்பட்டு ரஷ்ய திரிபுவாதம் - முதலாளித்துவமாக சமூக ஏகாதிபத்தியமாக மாற்றப்பட்டதே அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும் சீரழிவுகளுக்கும் என்ன பதில் சொல்வார்கள்? இலங்கையில், பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினூடாக அதிகாரத்தில் அமர்ந்துகொண்ட திரிபுவாதிகளின் முகவர்களிலும் பார்க்க புரட்சிகரப்பாதையை ஏற்றுக்கொண்டவர்களான, தோழர்கள் என். சண்முகதாஸன், வாட்சன் பெர்னான்டோ, ஆரியவன்ச குணசேகர, ஹிக்கொட தர்மசேன, மூர்த்தி, கே.குலவீரசிங்கம், மு.கார்த்திகேசன், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், நீர்வை பொன்னையன் ஆகியோரின் வழிகாட்டலில் நம்பிக்கையோடு செயற்பட்டனர். அவர்களுக்கு மார்க்ஸிச, லெனினிஸமும், மாசேதுங் சிந்தனைகளும் ஆதர்சமாக இருந்தன.

மார்க்ஸிச கண்ணோட்டத்தில் தேசத்தையும் சமூகத்தையும் நோக்கிய கலை - இலக்கிய கர்த்தாக்களையும், விமர்சகர்களையும், புத்திஜீவி களையும் கொண்ட ஒரு பெரும்படையே சண் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் அணியிலிருந்தது. கலாநிதியும், தமிழில் புதியதோர் முற்போக்கு கலை இலக்கியப் பார்வையை வகுத்தவருமான பேராசிரியர் க.கைலாசபதி தொடக்கம், அந்தப் 'படை' செயற்பட்டது. நாவலாசிரியர் இளங்கீரன், செ. கணேசலிங்கம், சின்னத்தம்பி

(பாரதிநேசன்), கே.டானியல், அ.ந.கந்தசாமி, செ.கதிர்காமநாதன், மாதகல் கந்தசாமி, பெனடிக்பாலன், வி.ஏ.கந்தசாமி, இ.முருகையன், எம்.ஏ. நு.ஃமான், நீர்வை பொன்னையன், மருதூர்க்கனி, ஜெயரட்ணம், என்.சண்முகரட்ணம் (சமுத்திரன்), சி.மௌனகுரு, சுபத்திரன், சாருமதி, என்.கே.ரகுநாதன், யாழ்ப்பாணக் கவிராயர் (பசுபதி), சில்லையூர் செல்வராசன், ஏ. இக்பால் ..... என்று, இன்னும் பலருடன் இந்தப் பட்டியல் நீண்டு செல்கின்றது. இந்தப் பெயர்கள், எழுந்தமானமாக எனக்கு நினைவிற்கு வந்தபடி குறிப்பிடப்பட்டனவே அன்றி முன்வரிசைப்படி நிரற்படுத்தப்படவில்லை என்பதையும் குறிப்பிடவிரும்புகிறேன்.

தோழர் சண், ஆரியவன்ச குணசேகர, ஹிக்கொட தர்மசேன, கே. குலவீரசிங்கம் ஆகியோர் தாம் செய்த கட்சிப்பணியைப்போல, அவர்களின் தொழிற்சங்கப் பணியும் முக்கியத்துவம் பெறுகிறது. தோழர் சண் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளராகவுமிருந்து தொழிலாளர்களின் பல்வேறு உரிமைகளை வென்றெடுத்தார். தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் மயப்படுத்தவேண்டுமென்று அதற்காக உழைத்தார். இச் சந்தர்ப்பத்தில், இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக இருந்த எம்.ஜி.மென்டிஸ், பொருளாராக இருந்த கே.குலவீரசிங்கம் ஆகியோரையும் நினைவில் கொள்ளாமலிருக்க முடியாது. வடக்கில் தோழர் எம்.கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி, நீர்வைப் பொன்னையன், எம்.ஏ.சி.இக்பால் ஆகியோரின் தலைமையை ஏற்ற கட்சி கணிசமான அளவுக்கு வளர்ந்தது. ஆயினும் சிங்களப் பேரினவாதம் தமிழ் பேரினவாதத்தை வளர்த்தது. தமிழ் காங்கிரஸ் பேரினவாத அரசுடன் கொஞ்சிக்குலாவியதைத் தொடர்ந்து 'தந்தை' செல்வாவின் தலைமையில் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தீவிரமாக வளர்ந்தது. சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்பட்ட காலத்திலிருந்து மாறிமாறி வந்த சிங்களப் பேரினவாத அரசாங்கத்திடமிருந்து உரிமைகளைப் பெறலாம் என்று நடத்திய அத்தனை போராட்டமும் விழலுக்கு இறைத்த நீராயிற்று.

பாராளுமன்றத்தினூடாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்த சிங்களப் பேரினவாத முதலாளிவர்க்கத்திற்கு சுரண்டுவதற்கும் மேலாதிக்கம் செய்வதற்கும் தமிழினம் அவசியமாக இருந்தது. இருக்கிறது. 'மூக்கு இருக்கும் வரைக்கும் சளிபோகாது' என்பதுபோல் பாராளுமன்றம் இருக்கும் வரையும் பிரச்சினை தீர்ப்போவதில்லை. அப்படித்தான், ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களின் போராட்டத்தினால் 'அரசியல்' வழிகாட்டாமல், ஆயுதம் வழிகாட்டுகின்ற சூழ்நிலையில் 'யுத்தநிறுத்தம்' 'பேச்சுவார்த்தை' என்று ஏற்பட்டு 'ஏதாவது' கிடைத்தால் அதை, தமிழ், முஸ்லிம் இனத்தை மேலாதிக்கம் செய்யவும் சுரண்டவும் முற்படும். அதுமாத்திரமின்றி 'பாராளுமன்றம்' என்ற ஒன்று இருக்கும் வரை, சிங்கள முதலாளிவர்க்கம் சிங்கள மக்களை மாத்திரமல்ல, தமிழ் முஸ்லிம் மக்களையும், தமிழ் முதலாளிவர்க்கம் தமிழ் மக்களை மாத்திரமல்ல முஸ்லிம் மக்களையும், முஸ்லிம் முதலாளிவர்க்கம் முஸ்லிம் மக்களையும், பொதுவாக முதலாளி வர்க்கம் தொழிலாளர் வர்க்கத்தையும் சுரண்டியே தீரும். அதற்கு வசதியாகவே 'பாராளுமன்றம்' அமைந்திருக்கிறது.

பாராளுமன்றத்தினூடாக அதிகாரத்தை கையில் எடுக்கும் ஒரு முதலாளித்துவ அரசு, பேரினவாத அரசாகவும் இருப்பது இன்னும் ஆபத்தானது. அது பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை மட்டுமல்ல, சிறுபான்மை இனங்களின் போராட்டத்தையும் நசுக்குகின்றது. 'அவசியம்' ஏற்படும் போதெல்லாம் இனங்களுக்கிடையில் விரிசல்களையும் ஏற்படுத்துகின்றது. தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளுகின்றது. தமது வர்க்க நலன்களை காப்பாற்றிக் கொள்ளவும் சுரண்டல்களைத் தொடரவும் பேரினவாதிகளின் 'பாதாரவிந்தங்களை' சகல பாதுகாப்புப் படைகளாலும் அரண் அமைத்துக்கொள்கிறது.

'கட்சி' வேலைகளிலும் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் தோழர்களான சண், கார்த்திகேசன், வி.ஏ.கந்தசாமி, கே.டானியல், என்.கே.ரகுநாதன், நீர்வை பொன்னையன், கே.ஏ.சுப்பிரமணியம் ஆகியோர் எவ்வாறு தீவிரமாக இருந்தார்களோ, அதேபோல் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலும் தீவிரமாக இருந்தார்கள். பல வெற்றிகளையும் ஈட்டினார்கள். அதற்குப் பக்க பலமாக வேறுபல கட்சித் தோழர்கள் இருந்தனர். யாழ் குடாநாடெங்கும் 'கட்சி' கால்பதித்திருந்ததுபோல, யாழ்ப்பாணம் 'சோனகதெரு'விலும் கட்சி கால்பதித்து வளர்ந்து இருந்தது. தடுக்கி விழுந்தால் ஒரு முஸ்லிம் தோழரின் கால்களில் விழக்கூடியதாக அன்று நிலைமை காணப்பட்டது. கட்சியின் வளர்ச்சிக்கும் சாதி ஒழிப்புப் போராட்டத்திற்கும் குறிப்பாக தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கும் யாழ் முஸ்லிம் தோழர்கள் ஆற்றிய பணியை மறக்கவே முடியாது. உலகத்தில், அன்வர் ஹோஸாவின் தலைமையில் சின்னஞ்சிறு அல்பேனியா திகழ்ந்தது போல, இலங்கையில் யாழ்ப்பாணம் 'சோனகத் தெரு' திகழ்ந்தது. அங்கு எப்போதும் தோழர் கார்த்திகேசன் மாஸ்டரின் பிரசன்னம் காணப்பட்டது. ஆயினும் அரசியல் வழிகாட்டலில் ஆயுதம் வழி காட்டிய இனவாதத் தலைமைத்துவம் வடக்கிலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றி இனச்சுத்திகரிப்புச் செய்த கறைபடிந்த வரலாற்றையும் முஸ்லிம்கள் மறக்கவில்லை. பாராளுமன்றத்தினூடாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலும் பார்க்க அதை ஆயுதப்போராட்டத்தால் அடைவது இன்னும் ஆபத்தானது. ஆகவேதான் மார்க்ஸியக் கண்ணோட்டத்தில் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்று மார்க்ஸிச, லெனினிஸ, மாவோ சிந்தனை யாளர்கள் விரும்புகின்றார்கள்.

சிங்கள பௌத்த பேரினவாதத்தை மாத்திரமல்ல தமிழ், முஸ்லிம் பேரினவாதத்தையும் விமர்சித்த அதேவேளை தேசத்தின் ஒருமைப் பாட்டுக்குள் சகல இனங்களும் சமத்துவம் பெறவேண்டும் என்றும், அந்த விடுதலை பாராளுமன்ற சந்தர்ப்பவாத ஆட்சியின் கீழ் சாத்தியப்படப் போவதில்லை. பாட்டாளி வர்க்கப் புரட்சியினூடாக அதன் தலைமைத்து வத்தின் கீழ் உருவாக்கப்படும் சோஷலிஸ நிர்மாணத்தில் மாத்திரமே சாத்தியப்படும் என்பதில் 'கட்சி' உறுதியாக இருந்தது.

ரோஹண விஜயவீரவும் குழுவினரும் 'சண்'ணின் தலைமையை விமர்சித்து அதற்கு 'இனவாதச் சாயம்' பூசிவிட்டு வெளியேறும் வரை கட்சி நாடளாவிய ரீதியில் சிங்கள தமிழ், முஸ்லிம் மக்களை குறிப்பாக தொழிலாளர் வர்க்கத்தை தழுவிய இயக்கமாகவே வளர்ந்தது. '1971 ஏப்ரல் கிளர்ச்சி' 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தது' போல புரட்சியை ஆக்கிற்று. தொழிலாளர், விவசாயிகளை அரசியல்மயப்படுத்தி பாட்டாளிவர்க்க தலைமை கொடுக்கவேண்டிய புரட்சி, குட்டி பூர்ஷ்வா வர்க்கத்தின் தலைமையில் காட்டிக்கொடுக்கப்பட்டது. அது சிங்கள இனவாதிகளின் புரட்சியாக மாறி விட்டில் பூச்சிகளாக மடிய வேண்டி ஏற்பட்டது. ஆயினும் அந்த விட்டில்களின் வாரிசுகள், மீண்டும் சிவப்பு இனவாதிகளாக பாராளுமன்றப் பாதையை தேர்ந்தெடுத்துள்ளனர். அது பாட்டாளி வர்க்கத்திற்கும் சிறுபான்மை இனங்களுக்கும் இன்னும் ஆபத்தாகவே முடியும். 'பூர்ஷ்வா வர்க்க அரசு, தானாக மாறியதும் அந்த இடத்தை, பாட்டாளி வர்க்க அரசு எடுக்க முடியாது; பலாத்காரப் புரட்சி மூலம்தான் அது நிகழமுடியும்' என்று லெனின் கூறினார்.

சோஷலிஸப் புரட்சி என்பது 'உக்கிரமான வர்க்க மோதல்கள் நிறைந்த சகாப்தமாக அமைகிறது' என்றும் 'இந்த சகாப்தம் முடிவடையும் வரை, சுரண்டல்காரர் தவிர்க்க முடியாதபடி மீட்சிக்கான நம்பிக்கையை கொண்டிருப்பதோடு, இந்த நம்பிக்கை மீட்சிக்கான முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர்' என்றும் லெனின் சுட்டிக்காட்டினார். எனவேதான், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துவதற்காக பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் பல்வேறு காலாசாரப் புரட்சிகளை நடத்தவேண்டிய அவசியத்தைப் பற்றியும் அவர் குறிப்பிட்டிருந்தார். சோவியத் நாட்டில் அதற்கான சந்தர்ப்பம் வாய்க்காத காரணத்தினால், அங்கு மீண்டும் முதலாளித்துவம் திரிபுவாத முகமூடியுடன் உயிர்த்தது. அந்த அனுபவத் தினூடாக மக்கள் சீனாவில் தோழர் மாசேதுங், நாடுதழுவிய கலாசாரப் புரட்சியை நடாத்தினார்.

'சோஷலிஸ சமுதாயம், ஒரு கணிசமான அளவு நீண்ட காலகட்டமாகும். சோஷலிஸம் என்ற சரித்திர காலகட்டத்தில், வர்க்கங்கள், வர்க்க முரண்பாடுகள், வர்க்கப் போராட்டம் என்பன இன்னும் நிலவுகின்றன; சோஷலிஸப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்குமிடையில் போராட்டம் நிகழ்கின்றது, 'முதலாளித்துவ மீட்சி' என்ற ஆபத்து நிலவுகின்றது' என்று கூறிய தோழர் மாசேதுங் 'திரிபுவாதம் அதிகாரத்துக்கு வருவது பூர்ஷ்வா வர்க்கம் அதிகாரத்துக்கு வருவது என்று அர்த்தமாகும்' என்றும் கூறினார். பாட்டாளி வர்க்கப் புரட்சிகரப் பாதையை தேர்ந்துகொண்டவர்களுக்கு இன்று சோவியத் நாடோ, மக்கள் சீனாவோ, வியட்நாமோ அல்லது சின்னஞ்சிறு அல்பேனியாவோ ஆதர்சமாக இல்லாமலிருக்கலாம். ஆனால் கார்ல் மார்க்ஸும், பிரட்ரிக் ஏங்கல்ஸும், விலாடிமிர் இலிச் லெனினும், ஜே. வி.ஸ்ராலினும், மாசேதுங்கும் என்றென்றைக்கும் ஆதர்சமாக இருப்பார்கள்! ஏனெனில் அவர்களின் 'தத்துவமும் நடைமுறையும்' எந்த ஒரு முதலாளிவர்க்க, ஏகாதிபத்திய, சமூக ஏகாதிபத்திய, திரிபுவாத சிந்தனையாளனாலும் 'தவறு' என்று விஞ்ஞானரீதியாக நிரூபிக்கப்படவில்லை.

மருதூர்க்கனி

ஒரு ஆசான் ஒரு தோழர்

பேராசிரியர் ந. சண்முகரத்தினம்

ஷேக்ஸ்பியரின் பிரபல நாடகமான Julius Ceaserன் உருக்கமான பகுதியை அவர் உரக்க வாசிக்கிறார். மார்க் அந்தனியின் உரைக்கு வருகிறார். அதை உணர்வு பொங்க வாசிக்கிறார். அந்த வாசிப்பில் நாடகக்கலைத்துவம் பலமாக இழையோடுகிறது. அவர் அடிக்கடி நம்மை நோக்கி முகபாவங்களை லேசாக உதிர்த்து ஷேக்ஸ்பியரின் ஆங்கிலத்தைத் தெளிவாக உச்சரித்து ஒரு அரங்கு நிலை உணர்வை ஏற்படுத்துகிறார். முழு வகுப்புமே அமைதியாக அவரைப் பார்த்த வண்ணம் கேட்டு லயித்திருக்கிறார்கள். 1950களில் யாழ் இந்துக்கல்லூரி வகுப்பறை ஒன்றில் இடம்பெற்ற இந்தக் காட்சி என் மனதில் ஆழப்பதிந்துள்ளது. அப்போது எனக்கு பதினான்குவயது. அந்த ஆங்கில ஆசிரியரால் மிகவும் கவரப்பட்ட மாணவர்களில் நானும் ஒருவன். அந்த ஆசிரியரின் பெயர் கார்த்திகேசன். அவரது அறிவு, ஆசிரியத் தொழிலில் அவருக்கு இருந்த அளப்பரிய ஆற்றல், அவரின் நகைச்சுவை எல்லாம் அவரை யாழ் இந்துக்கல்லூரியின் புகழ்மிக்க ஆசிரியனாக்கின. கார்த்திகேசன் மாஸ்டர் எளிமையின் உறைவிடம். ஒரு கிறீச்சிடும் சைக்கிளில் பாடசாலைக்கு வருவார். அக்காலத்தில் மலிந்த பிரசித்தி வாய்ந்த Peacock (மயில்) சிகரெட்டைப் பிடிப்பார். இதனால் அவருக்கு நாம் 'மயில்வாகனன்' எனப் பட்டம் சூட்டியதுண்டு.

கார்த்திகேசனின் ஆளுமையால் மாணவர்கள் ஆகர்ஷிக்கப்பட்டனர். ஆனால் அவருடைய பூரணமான ஆளுமையை வகுப்பறைக்கு வெளியே, பாடசாலைக்கு வெளியே நாம் வாழ்ந்த யாழ்ப்பாண சமூகத்தில்தான் கண்டோம். பரந்த சமூகத்தில் அவர் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான அரசியல்வாதிகளில் ஒருவராக விளங்கினார். கார்த்திகேசன் மாஸ்டரின் அறிவு ரீதியான செல்வாக்குக்குள்ளான என் போன்றோர் மார்க்ஸிசத்தில் நாட்டம் கொண்டனர். இடதுசாரிக் கருத்துக்களும் சர்வதேசியத்துவ சிந்தனைகளும் பரவிக்கொண்டிருந்த காலகட்டமது. வைதீக விழுமியங்கள் ஆழமாக வேரூன்றியிருந்த யாழ்ப்பாண சமூகத்தில் சாதியத்தையும், மற்றைய பிற்போக்கு நிறுவனங்களையும் கம்யூனிஸ்டுகள் தொடர்சியாக விமர்சித்து எதிர்த்து வந்தனர். பலநூற்றாண்டுகளாக மேலாட்சி செலுத்திவந்த விழுமியங்களுக்கும் சமூக அரசியல் போக்குக்களுக்கும் எதிராகத் துணிந்து நின்ற அறிவாளர்கள் மத்தியில் 'கம்யூனிஸ்ட் கார்த்தி' முன்னணியில் நின்றார்.

யாழ். இந்துக்கல்லூரியில் எனது கல்வி தொடரவில்லை. நானே அதை குழப்பிக்கொண்டேன். பள்ளி செல்லாது பதினெட்டு மாதங்களைக் கழித்தேன். இந்தக் காலவெளியில் ஒருநாள் யாழ் நூல்நிலையத்தின் முன்னே கார்த்திகேசன் மாஸ்டரைக் காணநேர்ந்தது. நான் என்ன செய்கிறேன் எனக்கேட்டார். என்ன சொல்வதென்று தெரியாது விழித்தேன். எனது நிலையை அவர் புரிந்துகொண்டார் போலும். மீண்டும் கல்வியைத் தொடரும்படி புத்திமதி கூறிச்சென்றார். நான் ஒரு நல்ல மாணவனெனத் தான் கருதியிருந்ததாகவும் இப்படிப் போய்விடுவேன் என்று எதிர்பார்க்க வில்லையென்றும் கூறிச்சென்றார்.

நான் பின்னர் பல சிரமங்களுக்கு ஊடாக ஒறேற்றர் சுப்பிரமணியம் தலைமை ஆசிரியராகவிருந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அனுமதி பெற்று எனது கல்வியைத் தொடர்ந்தேன். ஸ்கந்தவரோதயாவில் V.பொன்னம்பலம் அவர்கள் கடமையாற்றிக் கொண்டிருந்தார். 'தோழர் காத்தி'யைப் பற்றி மிகவும் மதிப்புடன் புகழ்ந்து பேசுவார். யாழ் இந்துவில் மாணவனாயிருந்த காலத்திலிருந்தே கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலங்களிலும் தேர்தல் கூட்டங்களிலும் கலந்துகொள்ளும் இளம் மாணவர் குழாமில் ஒருவனாயிருந்தேன். அப்போது தமிழரசுக் கட்சியின் எழுச்சியும், தமிழ் காங்கிரஸின் வீழ்ச்சியும் ஆரம்பித்துவிட்டன. இடதுசாரிக் கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜ கட்சிகள் ஆகியன நீண்டகாலமாக வட இலங்கையில் இயங்கி வந்தன. இவை அப்போது, அதாவது 1950களில் - சிங்கள தமிழ் இனவாதங்களைப் பலமாக எதிர்த்து நின்றன. தமிழ் தேசியவாதத்திற்கு வலுவூட்டியபடி வளாச்சி பெற்றது தமிழரசுக்கட்சி.

கார்த்திகேசன், வைத்திலிங்கம் (இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய ஸ்தாபகர்களில் ஒருவர். யாழ் இந்துக் கல்லூரியில் பௌதிகவியல் ஆசிரியர்) V.பொன்னம்பலம் ஆகியோர் கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகர்களாகப் பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிட்டனர். கார்த்திகேசன் யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலிலும் போட்டியிட்டதுண்டு. இத்தேர்தல்களில் இவர்களுக்காக மாணவர்கள் உள்ளூர் மட்டங்களில் பிரச்சாரம் செய்தார்கள். இதைப்பற்றி எனது உறவினர் ஒருவர் நக்கலாக சொன்னது நினைவுக்கு வருகின்றது. ''கம்யூனிஸ்ட் கட்சி கார்த்திகேசன், வைத்திலிங்கம், பொன்னம்பலம் போன்றோரின் பிரதான பிரச்சாரங்கள் வாக்கில்லாத வாலிபர்களுக்கும் பள்ளிச் சிறார்களுக்கும்தான், இவர்கள் வாக்களிக்கும் வயதை எட்டியதும் வேறு கட்சிகளுக்குப் போய்விடுவார்கள்."

யாழ்ப்பாண சமூகத்தை பீடித்திருந்த தீண்டாமையையும் அதற்கு தீனி போட்ட சாதிய விழுமியங்களை எதிர்ப்பதிலும் மார்க்ஸிச சிந்தனையில் அவை முன்வைக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதத்தையும் ஆதரித்து மக்களுக்கு விளக்குவதில் ஈடுபட்டிருந்த தோழர் கார்த்திகேசன் போன்ற கம்யூனிஸ்டுகள், மலிந்த வாக்குகளைத் தேடி அலையவில்லை. தேர்தல் தோல்விகள் அவர்களின் கொள்கைத் திடகாத்திரத்தை பலவீனமாக்கவில்லை.

1960கள் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியினதும், பொதுவாக இடதுசாரி இயக்கத்தினதும் வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாகும். 1958க்குப் பின் சோவியத் - சீன கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் கூர்மையடைந்து சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தின் பாரிய பிரிவினைக்கு வழிவகுத்தன. 1964ல் சோவியத் சீனா பிரிவினையைத் தொடர்ந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் மொஸ்கோ - பீக்கிங் அணிகள் என பிளவுண்டது. இந்த காலகட்டத்தில் நான் பேராதனை பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்தேன். உள்கட்சி விவாதங்களும் பிளவும் பல்கலைக்கழக பொதுவுடமை மாணவர் சங்கத்தையும் பாதித்தது. கட்சி இரண்டாக பிரிந்தது. பேராதனை பொதுவுடமை மாணவர் சங்கமும் இரண்டாயிற்று. ஆயினும் மார்க்ஸிச லெனினிஸ கோஷ்டியினரே பெரும்பான்மையினராயிருந்தோம்.

கட்சியின் பிளவுக்குப் பின் தோழர் கார்த்திகேசன் முன்பை விட தீவிரமாக இயக்க வேலைகளில் ஈடுபட்டார். கொழும்பு யூனியன் பிளேஸில் இருந்த கட்சிக்காரியாலத்திற்கு சென்ற போது பல தடவைகள் கார்த்திகேசனை காண வாய்ப்புக் கிடைத்தது. நமது உறவு மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அவருடைய எளிமையான போக்கும் நகைச்சுவையும் மாறவில்லை. இந்த கட்டத்தில் சர்வதேசிய அரசியலும் சர்வதேசிய மார்க்ஸிச சோசலிச இயக்கங்களின் வரலாறுகளும் தேசிய விடுதலைப் போராட்டங்களும் நமது உரையாடல்களில் முக்கிய இடத்தை பிடித்துக் கொண்டன. இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு பற்றி தோழர் கார்த்திகேசனிடமிருந்து பல விடயங்களைத் தெரிந்து கொண்டேன்.

மார்க்ஸிச - லெனினிஸ போக்கில் கட்சி இயங்க ஆரம்பித்த பின் யாழ்ப்பாணத்து தீண்டாமைக்கெதிரான போராட்டம் புத்துயிர் பெற்றது. மலையகத்தில் செங்கொடிச்சங்கம் வளர்ந்தது. பல்கலைக்கழகத்தில் மாவோயிஸ்ட்டுக்கள் தீவிரமாக இயங்கினர். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போக்குகளும் சோசலிச கருத்துக்களும் சர்வதேச ரீதியில் வலுப்பெற்றுக் கொண்டிருந்த காலம் அது. மூன்றாம் உலக நாடுகள் பலவற்றில் விடுதலைப் போராட்டங்கள் மார்க்ஸிச சிந்தனையாலும் போல்ஷேவிக், சீனப் புரட்சியினாலும் பலமாக ஆகர்ஷிக்கப்பட்ட காலம் அது. அதுமட்டுமல்ல மேற்கு ஐரோப்பாவிலும் ஜப்பானிலும் மாணவர் இயக்கங்கள் எழுச்சி பெற்றவண்ணம் இருந்தன. வியட்நாமிய மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தென் வியட்நாமை விடுவிக்க நடாத்திய மகத்தான போராட்டத்தினால் இவ்வியக்கங்கள் உந்தப்பட்டன. அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் நடத்தி வந்த கொடுமையான போரை எதிர்த்து அமெரிக்க மக்கள் திரண்டு கொண்டிருந்தனர். இவை எல்லாம் தென் ஆசியா மீதும் செல்வாக்கினை செலுத்தின.

1965ல் எனது இறுதியாண்டில் பேராதனையில் இடம்பெற்ற மாணவர் போராட்டத்தில் நான் வகித்த பங்கிற்காக பல்கலைக்கழக நிர்வாகம் என்னை ஒருவருடம் விலக்கி பல்கலைக்கழக வளாகத்தின் 5 மைல் வட்டத்திற்குள்

நுழைவதற்குத் தடை விதித்தது. அந்த ஒருவருட காலத்தில் தோழர் கார்த்திகேசனை பல தடவைகள் சந்தித்தேன். அந்தச் சந்திப்புக்கள் எனக்கு ஆத்மீக பலத்தைத் தந்தன.

1960களின் பிற்பகுதியிலிருந்து 1973வரை அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. நான் நாட்டின் தென்பகுதியில் தொழில் செய்ததும் கல்வி கற்க வெளிநாடு சென்றிருந்ததும் இதற்கு முக்கிய காரணங்களாய் இருந்தன. பின்னர் அரசியல் உதிரிகளான கூட்டத்தில் ஒருவனாக நான் கொழும்பில் வாழ்ந்து வந்தேன். 1974க்குப் பின் கார்த்திகேசன் கொழும்புக்கு வந்த சில சந்தர்ப்பங்களில் எனது இல்லத்திற்கும் வருகை தந்தார். அப்போது பொதுவான அரசியல்பற்றி பேசிக் கொண்டோம். அவருடைய நகைச்சுவை மாறவில்லை. அவர் மரணிப்பதற்கு சில நாட்களுக்குப் முன்னர் கூட கொழும்பு வந்து சென்றதாக நண்பர்களிடமிருந்து அறிந்தேன். அவருடைய மரணச் செய்தியை அறிந்த போது வேதனைப்பட்டேன். என் மனத்திரையில் 1950, 60களின் காட்சிகள் தோன்றிய வண்ணம் இருந்தன. ஒரு தடவை அவர் யாழ் மாநகரசபைத் தேர்தலில் தோல்வியுற்ற போது பேசிய பேச்சில் தன்னை 'இந்த கம்யூனிஸ்ட் காத்தி' என பலதடவைகள் அழைத்து பேசியது நினைவுக்கு வந்தது. சோசலிசத்தின் வரலாறுபற்றி மூன்றாம் அகிலம் சம்பந்தப்பட்ட விவாதங்கள் பற்றி இலங்கையின் இடதுசாரி இயக்கங்களின் தத்துவார்த்தக் கருத்து வேறுபாடுகள் பற்றி அவரிடமிருந்து கற்றறிந்ததை நினைவு கூர்ந்தேன். அவருடைய நகைச்சுவை மிகுந்த கதைகள், அவரின் எளிமை, மனிதத்துவம் எல்லாம் நினைவுக்கு வந்தன.

யாழ்ப்பாணத்தில் எனது சந்ததியினர் பலர் சோசலிசச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டதற்கு ஆரம்ப காரண கர்த்தாக்களாக இருந்தவர்களில் கார்த்திகேசன் முக்கியமான இடத்தை வகித்தார். கடந்த இருதசாப்தங்கள் சோசலிசத்தின் வரலாற்றின் துன்பகரமான காலகட்டமாயின. நவதாராள வாதத்தை அரசுகளும், வலதுசாரிக் கட்சிகளும், தேசியவாதிகள் எனத்தம்மைச் சொல்லிக் கொள்வோரும் கண்மூடித்தனமாக ஏற்றுக் கொண்டுள்ள இந்தக் காலத்தில், சோசலிசத்தின் மீள்கற்பித்தலின் அவசியத்தை நாம் உணருகிறோம். இந்த மீள் கற்பித்தலிற்கு வலுவூட்டுதல் நமது கடமையாகும். இந்தக் கடமையைச் செய்தல் கார்த்திகேசனை நினைவுகூரச் சிறந்த வழியென நம்புகிறோம்.

போராசிரியர் ந.சண்முகரத்தினம்,
சர்வதேச சூழல் அபிவிருத்தி கற்கை நிலையம்,
நோர்வீஜிய விவசாயப்பல்கலைக்கழகம்,
நோர்வே.

காத்தாரின் பணியும்
கேத்திர கணிதமும்

கார்த்திகேசன் மாஸ்ரரின் ஆசிரியப்பணி ஏனைய ஆசிரியர்களினதைப் போன்றதன்று. கணிதபாடத்தில், குறிப்பாக கேத்திரகணிதத்தைப் கற்பிக்கும்போது மிகவும் நகைச்சுவையாக, தனது கற்பனை, சொல்வீச்சு, செயல்வீச்சு அத்தனையையும் பிரயோகித்தே கற்பிப்பார். மாணவர்களின் மனதில் நிலைத்து நிற்கக் கூடியதாக அவ்வப்போது பொருத்தமாக ஏதாவது சொல்லிக் கற்பிப்பது, மாணவர்களுக்குப் பிடித்தது மட்டுமல்ல, அவையே தம் வகுப்பிலல்லாத மாணவர்களுக்கோ அல்லது தத்தம் வீடுகளிலோ சொல்லிச் சிரித்து மகிழக் கிடைத்த விருந்தாகவும் கருதினர். அதே கல்லூரியில் கல்வி கற்றும், காத்தாரிடம் நேரடியாகக் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த மாணவர்களுக்கு இது பெரும் மனக்குறையே! காத்தார் பிரயோகித்தவற்றில் சில இங்கே தரப்பட்டுள்ளன.

ஐயோ மிதி! ~ ஜியோமிதி (Geometry)

கேத்திர கணிதத்தில் முதலாவது தேற்றத்தை வைத்தே எப்படி Geometry என்ற பெயர் வந்தது எனச் சொல்லித்தான் கேத்திர கணிதப் பாடத்தை ஆரம்பிப்பார். இதுதான் அவரது விளக்கம்:

முதலாவது தேற்றம் ஒரு நேர்கோட்டின் அயற்கோணங்கள் 180 பாகையை ஆக்கும் என்பதை விளக்க, ஒரு கிடையான கோட்டின் மேலே ஒரு சாய்ந்த கோடு உள்ளதாக வரையப்பட்டிருக்கும். அதை மாஸ்ரர் ஒருவன் மேல் இன்னொருவன் ஏறி மிதிப்பதாகவும், கீழே விழுந்தபடி மிதிபடுபவன் வலி தாங்காமல், 'ஐயோ மிதி'க்கிறானே என்று கத்தவும், அவ்வழி சென்ற கணிதமேதை அச்சம்பவத்தைக் கண்டும், கூச்சல் 'ஐயோ' என்பது 'ஜியோ' எனக் காதில் கேட்டும், இதுவே இப்பாடத்திற்குப் பொருத்தமான பெயர் என எண்ணி 'ஜியோமிதி (Geometry)' என்று வைத்து விட்டாராம்.

மாடு முட்ட வேலி பாய்ந்தால்

ஒரு புள்ளியிலிருந்து ஒரு கோட்டிற்கு வரையப்படும் செங்குத்துயரமே மிகக்கிட்டிய தூரமெனப்படுவது ஒரு தேற்றமாகும். அது எப்படி நிருபணமாகுமென்பதற்கு காத்தாரின் விளக்கமிது:

ஒருவனை மாடு முட்ட வந்தால், அவன் மிகக் குறுகிய தூரத்தையே ஓடி, வேலியால் பாய்ந்து அதிலிருந்து தப்பிக்க வழி பார்ப்பான். அம்மனிதனை புள்ளியாகவும், வேலியைக் கோடாகவும் கொண்டால் அதை சுலபமாக விளங்கிக் கொண்டு நிருபித்துவிடலாம் என்றார்.

அறுசுவையான தேற்றங்கள்

ஒவ்வொரு தேற்றத்துக்கும் ஒரு பட்டப் பெயரைக் கூட வைத்திருந்தார். மாணவர்களின் மீட்டலின்போது நூற்றுச் சொச்சத் தேற்றங்களினதும் பட்டப பெயரைக் குறிப்பிட்டுக் கேள்வி கேட்பார். உதாரணத்துக்கு சில:

இடியப்ப உரல் தேற்றம் - இரு நேர்கோடுகள் இடைவெட்டும் போது உருவாகும் குத்தெதிர் கோணங்கள் சமன் எனும் தேற்றம்.

புக்கைத் தளிசைத் தேற்றம் - அரைவட்டம் 180 பாகை ஐத் தரும் தேற்றம்.

அல்வாத் துண்டுத் தேற்றம் - இணைகரம் ஒன்றை மூலைவிட்டத்தினூடு பிரிக்க இரு சர்வசமமான முக்கோணங்கள் கிடைக்கும் தேற்றம்

பனங்கிழங்குத் தேற்றம் - ஏதாவது இரண்டு கோணங்கள் சமனான ஒரு முக்கோணத்தை, அவ்விரு கோணங்களுக்கும் பொதுவான பக்கத்தை இரு சமகூறிடும் வகையில் இரண்டாக்கினால் இரு சர்வ சமமான முக்கோணங்கள் பெறப்படும் எனும் தேற்றம்.

* * *

மக்கள் நேசன்

பாரதிநேசன்

அவர் ஒரு கிரிக்கெட் அபிமானி. கிரிக்கெட் விளையாட்டு வீரர். கிரிக்கெட் சீசனில் ட்ரான்சிஸ்டர் வானொலிப் பெட்டியுடன் இருப்பார். இளம்பிள்ளைகள் கிரிக்கெட் விளையாடினாலும் 'டெஸ்ட் கிரிக்கெட்'டைப் பார்ப்பதுபோல் ரசிப்பார். அவருக்கு கணிதவியல் விருப்பமான பாடம். இலக்கியத்தைப் படிப்பிப்பது போல் கணித பாடத்தைப் போதிப்பார். அவர் ஓர் ஆங்கில இலக்கிய விற்பன்னர். ஆங்கிலக் கவிஞர்களின் நூல்களை அழகாக வாசித்து உச்சரித்து தனியாகவும் பலர் மத்தியிலும் ஆராய்வார். அவர் ஒரு தமிழ் இலக்கிய ஆர்வலர். நவீன தமிழ் இலக்கியத்தில் அத்தகையவரைப் பொறுத்தவரையில் அரிதான ஈடுபாடு கொண்டிருந்தார்.

அவருடைய மாணவர்கள் பலர் தமிழ் இலக்கிய உலகில் தலைசிறந்த இலக்கிய விமர்சகர்கள், நாவலாசிரியர்கள், சிறுகதை எழுத்தாளர்கள், நடகாசிரியர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியுள்ளனர். தவிர மாணவரல்லாத பிறரும் 'மண்ணிற் புழுவாக நெளிந்த தம்மை மனதராக்கிய தெய்வம்' என்று பாராட்டியுள்ளனர். 'அவர் தான் நாங்கள் கற்ற பல்கலைக்கழகம்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

அவர் மென்மையானவர். மற்றவர் மனதைப் புண்படுத்தி விடக்கூடாது என்ற எண்ணத்துடனேயே வாழ்ந்தவர். அவர் அழகியல் ரசனையில் ஆழந்தவர். எழுதும் எழுத்திலே, பேசும் பேச்சிலே, நடக்கும் நடையிலே, உடுக்கும் உடையிலே, உண்ணும் முறையிலே - இவ்வாறு வாழக்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் அழகியல் ரசனைகளைக் கொண்டவராக அவர் திகழ்ந்தார்.

மலாயாவின் 'தைப்பிங்' நகரத்தில் பிறந்த அவர் குடும்பத்தால், பிறப்பால் வளர்ப்பால், படிப்பால் ஒரு நகரவாசி. ஆனால் கிராம மக்கள் மதித்துப் போற்றும் ஒரு மனிதனாக வாழ்ந்து மறைந்தார். மேற்குறிப்பிட்ட குணாம்சங்கள் பொருந்திய

தன்னிரிகல்லாத அந்த மனிதனை 'கம்யூனிஸ்ட் கொள்கைக்கு விசுவாசமாக தனது வாழ்வின் இறுதிநாள் வரை இருந்த ஒரேயொருவர் கார்த்திகேசன் மாஸ்ரர் தான்' என்று பலரும் கூறுவதை இன்றும் கேட்க முடிகின்றது.

கார்த்திகேசன் மாஸ்ரரிடம் கல்வி கற்றோம், ஆங்கிலம் படித்தோம் என்று கூறுவதில் மட்டும் அல்ல, கார்த்திகேசன் மாஸ்ரரிடம் அடி வாங்கினோம் என்று கூடக் கூறுவதில் பெருமை அடைவோர் இருக்கிறார்கள்.

கார்த்திகேசன் மாஸ்ரருடன் வீதிகளில் சென்று போஸ்டர்கள் ஒட்டியதையும் தேநீர் கடைகளில் 'பிளேன்ரீ' அடித்ததையும் நினைவுகூரும் பலர் அவர் கடன் வாங்கியதையும் கடன் கொடுத்ததையும் அதே அன்புடன் எடுத்துரைப்பார்கள். அவருடய சம காலத்தவர், சம தொழிலைச் செய்தவர், சம கட்சியாளர்களிலும் பார்க்க கார்த்திகேசன் யாழ்ப்பாண மக்களின் இதயங்களில் நிறைந்திருக்கிறார். ஆசிரியர் கார்த்திகேசன் காலமாகி 16 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் யாழ்ப்பாணம் என்ற காட்சியிலிருந்து அவரின் தோற்றம் விலகாமல் இருப்பது எதனால்? கார்த்திகேசனின் வாழ்க்கை வரலாறு இக்கேள்விக்குப் பதிலை அளிக்க முடியும்.

மலாயாவில் பிறப்பு

கார்த்திகேசனின் தந்தை முருகபிள்ளை யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். அவர் இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் வீட்டு நெருக்கடியால் ஜீவனோபாயம் தேடி மலாயாவுக்குச் சென்ற யாழ்ப்பாண இளைஞர்களில் ஒருவர். மலாயாவில் திரு.முருகபிள்ளை ஒரு வைத்தியசாலை டிஸ்பென்சராக (உதவி வைத்தியர்) வேலை பார்த்தார். தனது மைத்துனியான தங்கரத்னத்தை திருமணம் செய்தார்.

அவர்களுக்கு மலாயாவின் 'தைப்பிங்கில்' 2 ஆண் குழந்தைகளும் 2 பெண் குழந்தைகளும் பிறந்தனர். மூத்த ஆண் குழந்தையே கார்த்திகேசன் ஆவார். அவருக்கு அடுத்ததாக இப்பொழுதும் மலேசியாவில் வாழ்கின்ற திரு.வைத்தியநாதனும் இலங்கையில் வாழும் திலகவதியும் இலண்டனில் வாழ்கின்ற இரத்தினவதியும் பிறந்தனர்.

1919ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25ஆம் திகதி பிறந்த கார்த்திகேசன் தமது ஐந்தாவது வயதில் தம்பியார் வைத்தியநாதனுடன் சேர்ந்து தாயுடன் முதல் தடவையாகத் தமது தாய்நாட்டுக்கு வந்தார். தாயார் சில காலம் இங்கு தங்கிய பின் க்ணவனுடன் சேர்ந்துவாழ மலாயா திரும்பிச் சென்றுவிட்டார். அப்போழுது சிறுவன் கார்த்திகேசன் அவருடன் செல்லவில்லை. வட்டுக்கோட்டையில் பேரன் முறையானவருடன் தங்கியிருந்து வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்றார்.

இவ்வாறு கற்றபொழுது சிறுவன் கார்த்திகேசன் சக மாணவர்களுக்கும், கீழ்வகுப்பு மாணவர்களுக்கும் தனது புத்தகங்களைக் கொடுத்து உதவினார் என்று வட்டுக்கோட்டை ஆசிரியர் திரு.மருதபிள்ளை கூறுவார். அவர் சில ஆண்டுகள் வட்டுக்கோட்டையில் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்ற பின் மீண்டும் மலேசியாவின் தைப்பிங்கிற்குச் சென்று அங்கு ஆங்கிலக் கல்லூரியில் தமது கல்வியைத் தொடர்ந்து பெற்றார்.

கல்லூரியில் அவர் சிறந்த மாணவனாகவும், கிரிக்கெட் விளையாட்டு வீரனாகவும் திகழந்தார். அவரும் அவருடைய தம்பியும் கல்லூரிக் கிரிக்கெட் கோஷ்டியில் உறுப்பினர்களாக இருந்தனர். அப்பொழுதே ஆங்கில மொழியில் அவர் திறமைசாலியாக இருந்தார். அங்கு நடைபெற்ற லண்டன் சீனியர் கேம்பிரிட்ஜ் சோதனையில் அவர் மலாயா முழுவதிலும் மூன்றாவதாகச் சித்தி பெற்றார்.

தனயனின் திறமையைக் கண்ட தந்தையாரும் உறவினர்களும் திரு கார்த்திகேசனை உயர் கல்விக்காக இலங்கை பல்கலைக்கழகக் கல்லூரிக்கு அனுப்பினார்கள். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த உறவினரான திரு.செல்லையா என்பவரின் பராமரிப்பின் கீழ் அவர் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரியில் உயர் கல்வி கற்றார். மலாயாவில் இருந்த தந்தையும், உறவினர்களும் தமது பிள்ளை கார்த்திகேசன் பல்கலைக்கழகக் கல்வி பெற்று ஒரு நீதிவானாக வருவார் வரவேண்டும் என்று விரும்பினார்கள்.

பல்கலைக்கழகத்தில்

கார்த்திகேசன் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்ற (1937 - 1941) ஆண்டுகள் எமது நாட்டின் அரசியலில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிரான உணர்வும் இயக்கங்களும் முகிழ்த்தெழுந்து வளர்ந்த காலமாகும்.

1935இல் டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ, எம்.ஜி.மென்டிஸ், ஏ. வைத்தியலிங்கம், என்.எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா ஆகியோரின் தலைமையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான லங்கா சமசமஜக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது.

லண்டனில் கல்வி கற்றுத் திரும்பிய டாக்டர் எஸ்.ஏ.விக்ரமசிங்ஹ, ஏ.வைத்திலிங்கம், பீட்டர் கெனமன், பொன்னம்பலம் கந்தையா ஆகியோர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கம்யூனிஸப் பிரசாரத்தைச் செய்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பமாகி ஹிட்லரின் பாசிஸத்துக்கு எதிரான உலகளாவிய யுத்த நிலைமை தோன்றிய போது லங்கா சமசமாஜக் கட்சியில் இருந்த கம்யூனிஸ்டுகளுக்கும் ட்ரொஸ்கியவாதிகளுக்கும் இடையில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. இதனால் டாக்டர் எஸ்.ஏ. விக்ரமசிங்ஹவைத்

தலைமையாகக் கொண்ட கம்யூனிஸ்டுகள் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து பிரிந்து முதலில் ஐக்கிய சோஷலிசக் கட்சி என்பதை அமைத்து பின்னர் 1943இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உத்தியோக பூர்வமாக அமைத்தனர்.

மலாயாவிலிருந்து நீதிவானாகக் கல்விகற்க வந்த முருகபிள்ளை கார்த்திகேசன் இந்த அரசியல் சுழல் காற்றில் இழுத்தெடுக்கப்பட்டார். லண்டனிலிருந்து திரும்பிய கம்யூனிஸ்ட் தோழர்களுடன் சேர்ந்து அவரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவராகினார். திரு.கார்த்திகேசனின் பல்கலைக்கழகக் காலம் பலராலும் பல காரணங்களுக்காக நினைவு கூரப்படுவதுண்டு. திரு.கார்த்திகேசன் பல்லைகலைக்கழகத்தில் பிரவேசித்த காலத்தில் ஆங்கிலத்திலும், கணிதவியலிலும் அசாதாரண திறமை காட்டினார். அப்பொழுது பல்லைக்கழக ஆங்கிலப் பேராசிரியர் திரு.லுடொவைக், கணிதவியல் பேராசிரியர் திரு.சி.சுந்தரலிங்கம். இவர்கள் இருவருக்கும் இடையில் கார்த்திகேசன் என்ற பட்டதாரி மாணவனை யார் எடுப்பது என்பது பற்றி ஒருவகைப் போட்டி நிலவியது. இறுதியில் பேராசரியர் சி. சுந்தரலிங்கம் விட்டுக் கொடுத்தார். 'எங்களிடம் கணிதவியலுக்குப் போதிய ஆட்கள் இருக்கிறார்கள். நீ ஆங்கிலத்துறையில் சேர்வதுதான் நல்லது' என்று திரு.கார்த்திகேசனை அவர் ஆசீர்வதித்துவிட்டார்.

பல்கலைக்கழக காலத்தில் ஆங்கிலப் பிரசுரங்களை வெளியிடுவதில் திரு.கார்த்திகேசன் முக்கிய பங்காற்றினார். 1942-43 இல் 'ஸ்ருடென்ற் நியூஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தார்.

ட்ரொஸ்கியின் கருத்துக்களுக்கு எதிராகவும், கம்யூனிஸத் தத்துவத்தைப் பிரசாரம் செய்யவும், உலகின் முதலாவது சோஷலிச நாடான சோவியத் யூனியனைப் பாராட்டியும் கார்த்திகேசனின் முன் முயற்சியில் பல நூல்களும் துண்டுப் பிரசுரங்களும் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டன.

கார்த்திகேசனின் பல்கலைக்கழக வாழ்வில் இன்னொரு சிறப்பான அம்சம், அவர் அங்கு எண்ணற்ற நண்பர்களைப் பெற்றதாகும். பின்னர் இலங்கை அரசியல், நிர்வாக, பொருளாதார, கலை இலக்கிய பத்திரிகைத் துறைகளில் முக்கியமானவர்களாக விளங்கிய பலரும் அவருக்கு நண்பர்களாகினார்கள்.

கம்யூனிஸ்ட் என்ற முறையில் மிகவும் உறுதியானவராக இருந்த கார்த்திகேசன் வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் இருந்த கம்யூனிஸ்ட் அல்லாத எண்ணற்றோரின் நன்மதிப்பையும் நட்பையும் பெற்றது அவருடைய தனித்துவமான குணாம்சங்களில் ஒன்றாகும்.

திருமணம்

பல்கலைக் கழகப் படிப்பு முடித்து ஆங்கிலச் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தைப் பெற்ற அதே காலத்தில் கார்த்திகேசன் குடும்ப வாழ்விலும் புகுந்தார். பல்கலைக்கழகப் பட்டதாரியாகிய கார்த்திகேசன் அக்காலத்திலும் பின்னரும் பொதுவாக அத்தகையவர்கள் எல்லோரும் செய்வது போல் சீதனத்தைப் பெற்றுத் திருமணம் செய்யவில்லை. மலாயாவிலிருந்து வந்து பெற்றோர்களை இழந்ததினால் உறவினர்களுடன் வாழ்ந்த, கார்த்திகேசனின் உறவினர்களில் ஒருவரான வாலாம்பிகை என்பவரை அவர் காதலித்துத் திருமணம் செய்தார். பிற்காலத்தில் திரு. கார்த்திகேசன் தமது மனைவியைப் பற்றிக் குறிப்பிடும்போது தமக்கே உரித்தான சொல் விளையாட்டுப் பாணியில் வருமாறு கூறுவார். 'பக்கத்து வீட்டில் இருந்த பூவரச மலர் ஒன்று என்னைக் கவர்ந்தது. அந்தப் பூவர் ரோசை (Poor Rose - பூவரஸ்) நான் மணந்து கொண்டேன்'.

1942 ஆம் ஆண்டில் தனது உறவினரின் ஆதரவு கிடைக்கப்பெறாத நிலைமையில் ஓர் பிராமணரின் முன்னால் சம்பிரதாய பூர்வமாக செல்வி வாலாம்பிகையைக் கைப்பிடித்துத் தமது மனைவியாக்கிக் கொண்டார். திருமணம் முடிந்ததும் முடியாததுமாக திரு.கார்த்திகேசன் அப்போழுதுதான் ஆரம்பிக்கப்பட்டிருந்த இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் முழு நேர ஊழியராகினார்.

கம்யூன் வாழ்க்கை

அப்பொழுது கொழும்பு பொறளையில் கொட்டா வீதியிலுள்ள 89 ஆம் இலக்க வீட்டில் 'கம்யூன்' வாழ்க்கை நடத்தினார். மிக் குறைந்த அலவன்ஸே அவருக்குக் கிடைத்தது. புதுமணப் பெண்ணும் அவருடன் சென்று கொழும்பில் வாழ்ந்தார்.

'கம்யூன்' வாழ்க்கை ஒரு கூட்டு வாழ்க்கை. கம்யூன் உறுப்பினர்கள் தமது அலவன்ஸ்களைப் பகிர்ந்து ஒன்றாகச் சமைத்து உண்டார்கள். இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியத் துடிப்பான இளைஞர்களின் கம்யூன் வாழ்க்கை இலங்கை அரசியல் வரலாற்றிலேயே ஓர் அரிதான நிகழ்ச்சியாகும். அப்பொழுது தான் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துத் திரும்பியபின் சிலோன் ஒப்சேவரில் கட்டுரை, கதை பகுதிக்குப் பொறுப்பாயிருந்த தொழிலைத் துறந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் முழுநேர ஊழியராகிப் பொதுச் செயலாளர் பதவியை ஏற்ற பீட்டர் கெனமன், அவருடைய மனைவி, தேசாபிமானி ஆசிரியராகப் பணியாற்றிய கே. ராமநாதன் மற்றும் பலர் இந்தக் கம்யூனில் வாழ்ந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவர்களில் ஒருவரான திரு. கார்த்திகேசன் கொழும்பில் கட்சியைக் கட்டியமைப்பதில் சுறுசுறுப்பாக ஈடுபட்டார். கொழும்புப் பொதுமக்கள் மத்தியில் அவர்கள் கட்சிப் பிரசாரத்தில் ஈடுபட்டு சொல்லடியும் கல்லடியும் பட்டார்கள்.

Retd. Municipal,
Vaduthodai.
3-12-76.

My dear Chandrakumar,

I am told by Balendran (Engineer) that you are both at the same place. In case you aren't, I'm addressing the letter c/o him hoping he will pass it on to you. Your sister's wedding wasn't quite the occasion for a chat. So, how are you getting on? Do write and let me know about your studies and matters in general as well as of political interest to one.

Also, could you please let me know how I could get at the book — Essays on Dravidian Com. to Slavery — which I sent you more than a year ago.

Jothi writes to say she meets your sister quite often at Salford a Manchester. Now that

Fatima Vincent is also there for her M.Sc., that makes it a happy trio.

We talk of ஜனாசை only. The Chinese have, more than talking, got at சுவனாசை too — the acupuncture point that J.P. in India and J.R. in Sri Lanka have been unable to locate for the improvement of their own political health.

And look where G.G. is now. The Jaffna electorate thrice (the magical number) pronounced [illegible] on him, but yet he is back to the position of [illegible] [illegible] (Sri Lanka) and [illegible] (world) after taking up the case of the [illegible] [illegible] Karuna'nithi'! This only means the Tamils here have got back to 1947, firmly ensconced on the political merry-go-round singing "round-and-round the mulberry bush" — or is it [illegible] [illegible] [illegible]?

With kind regards. Yours sincerely,

[illegible]

தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த அவர்கள் தொழிற்சங்கங்களை அமைக்க ஆரம்பித்தார்கள். பஸ்தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், இறக்குமதி ஏற்றுமதித் தொழிலாளர்கள் ஆகியோரின் தொழிற் சங்கங்களை அவர்கள் அமைத்தார்கள். இவ்வாறு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் (சி.ரி.யு.எப்.) என்ற தொழிற்சங்க கேந்திரத்தை உருவாக்கினார்கள்.

கட்சியின் தொழிற்சங்க நடவடிக்கைகளில் கலந்துகொண்ட திரு. கார்த்திகேசன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் உத்தியோகபூர்வமான வாரப் பத்திரிகையான 'போர்வார்ட்' (Forward) டின் ஸ்தாபக ஆசிரியராகவும் பணிபுரிந்தார்.

பத்திரிகைப் பணி அக்காலத்தில் இன்றைய காலம் போல் வசதியானதாக இருக்கவில்லை. விஷயதானங்களைச் சேகரிப்பது, அச்சுக் கோர்ப்பது, இயந்திரத்தில் பத்திரிகையை அடிப்பது, பேப்பரை மடிப்பது, இறுதியாகப் பேப்பரைக் கொண்டு சென்று விற்பது - இத்தியாதி வேலைகள் அனைத்திலும் ஆசிரியரான திரு.கார்த்திகேசனும் பங்குபற்றினார்.

திரு.கார்த்திகேசன் வரட்சியாக ஏனோதானோ என்று எழுதும் இயல்புடையவர் அல்ல. கருத்துக்கு எவ்வளவு முக்கியத்துவமோ அந்த அளவுக்கு வடிவ அழகுக்கும் முக்கியத்துவம் கொடுப்பவர் அவர். அரசியலில் ஆழ இறங்கியிருக்காவிட்டால் திரு.கார்த்திகேசன் ஒரு தலைசிறந்த ஆங்கிலப் பத்திரிகையாளனாக விளங்கியிருப்பார் என்ற கருத்தை இத்துறைகளில் பிரபல்யமான பலர் கூறியிருக்கிறார்கள். அவர் சாதாரணமாக எழுதும் ஒரு தனிப்பட்ட கடிதத்தில் கூட ஆங்கிலப் புலமையும் நகைச்சுவையும் எழுத்து நாசூக்கும் மிளிர்வதைக் காணலாம்.

திரு.கார்த்திகேசனின் கொழும்பு வாழ்க்கை 1946ஆம் ஆண்டு முடிவுற்றது. இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்து வளர்க்கவேண்டும் என்ற நோக்கத்துடன் கட்சியால் பணிக்கப்பட்டு அவர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவருடைய இல்லம் அப்பொழுது யாழ்ப்பாணம் விக்ரோறியா வீதியில் அமைந்த ஒரு வாடகை வீடாகும். அதுவே கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகமாகவும் அமைந்தது.

திருவாளர்கள் சு.வே.சீனிவாசகம், வீ.ஏ.கந்தசாமி, பி.பூபாலசிங்கம், எம்.சி. சுப்ரமணியம், ராமசாமி ஐயர் முதலியோர் திரு.கார்த்திகேசனுடன் சேர்ந்து கம்யூனிஸ்ட் கட்சியை வடபகுதியில் ஸ்தாபித்துப் பணியாற்றினார்கள். பிற்காலத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களான எஸ்.பொன்னுத்துரை, கே.டானியல், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன் ஆகியோர் இக்காலகட்டத்தில் கார்த்திகேசனின் ஆளுமைக்கு உட்பட்டார்கள்.

ப. ஜீவானந்தத்துடன்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரும் மாபெரும் இலக்கியவாதியுமான காலஞ்சென்ற ப. ஜீவானந்தம் 1947ம் ஆண்டில் இந்தியாவில் தலைமறைவாகி யாழ்ப்பாணத்தில் கார்த்திகேசன் இல்லத்திலேயே சிலகாலம் வாழ்ந்து வந்தார்.

ஜீவா என்று அழைக்கப்படும் ப. ஜீவானந்தம் இங்கு வாழ்ந்த காலத்தில் கம்யூனிஸம் பற்றிய நூல்களை எழுதினார். அவற்றைப் பிரசுரித்து விநியோகிக்கும் பொறுப்பைக் கார்த்திகேசன் அவர்களே ஏற்றுக் கொண்டார்கள். ப.ஜீவானந்தம் மீது தாம் கொண்ட அன்பின் நிமித்தம் திரு.கார்த்திகேசன் தமக்குப் பிறந்த முதல் மகனுக்கு ஜீவானந்தம் என்று பெயர் சூட்டினார். இதற்கு முன் அவருக்கு இரண்டு புத்திரிகள் பிறந்திருந்தனர். அந்த ஆண்குழந்தை இறந்துபோகவே அடுத்ததாகப் பிறந்த பெண் குழந்தைக்கு ஜீவஜோதி என்று அவர் பெயரிட்டார். கார்த்திகேசனைப் போலவே ஜீவானந்தமும் ஓர் அரிதான கம்யூனிஸ்ட். மனிதவாதியான ஜீவானந்தம் கலையுணர்வு நிரம்பப் பெற்றவர். பயில்வான் போன்ற தோற்றமும் தடித்த மீசையும் உடைய அவருடைய உரையாடலில் அரசியலும் இலக்கியமும் ஆழமாக இளையோடி விளையாடும். ஜீவானந்தத்தைப் பற்றிச் சுவையான பல கதைகள் உண்டு. அவற்றில் அவருடைய உண்டி பற்றியும் சிலர் எடுத்துக் கூறுவார்கள். பிற்காலத்தில் ஒரு தடைவை கார்த்திகேசன் இந்தக் கதைகளைக் கேள்விப்பட்டபோது ''நான் ஜீவாவுக்கு சரியாக உணவு கொடுத்தேனா என்று எனக்கு மிகவும் கவலையாக இருக்கின்றது" என்று பாரதூரமாகக் கூறினார்.

1947ம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அரசாங்க ஊழியர்களின் பொது வேலை நிறுத்தம் இடம்பெற்றது. வடபகுதியில் இந்த வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகத் திரு. கார்த்திகேசன் பல பணிகளைச் செய்தார். அதே ஆண்டில் இலங்கையின் பொதுத் தேர்தலும் நடைபெற்றது. பொன்னம்பலம் கந்தையா கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகராகப் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிட்டார். இதனுடன் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம் - தேர்தல் அத்தியாயம், பாராளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல்-அத்தியாயம் ஆரம்பமாகியது. வாக்காளர்களைக் கவர்ந்திழுக்க கல்விமான்களும் பேச்சாளர்களும் அவசர தேவையாகினார்கள்.

திரு.கார்த்திகேசன் சிறந்த பேச்சாளராக கம்யூனிஸ்ட் கட்சி மேடைகளை அலங்கரிக்கத் தொடங்கினார். 1947ம் ஆண்டு தொடக்கம் இறக்கும் வரையில் - 30 ஆண்டுகளாக - சுவையானதோர் மேடைப் பேச்சாளராகக் கார்த்திகேசன் திகழ்ந்தார். அவருடைய பேச்சில் அவரின் சிறிய 'கொன்னை' கூட அழகு

பெற்றது, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, தமிழரசுக் கட்சி ஆகியவற்றுக்கு எதிராக அவர் நிகழ்த்திய பேச்சுக்களில் கணத்துக்குக் கணம் வெளிவந்த அங்கதக் கதைகளை, நையாண்டிப் பேச்சுக்களை இன்றும் பலர் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

ஆசிரியராகிய கதை

இதற்கிடையில் திரு.கார்த்திகேசன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒரு ஆசிரியராகினார். கம்யூனிஸ்டான கார்த்திகேசன் 'இந்துக் கல்லூரி'யில் ஆசிரியர் பதவி பெற்றதே ஒரு கதையாகும்.

இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பதவிக்காக திரு.கார்த்திகேசனின் விண்ணப்பம் நிர்வாக சபையால் ஆராயப்பட்டது. ஒருவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் அவரை ஆசிரியராகச் சேர்ப்பதை எதிர்த்தார்கள். ஆதரித்த ஒருவர் இலங்கை ராஜ்ய சபையின் (State Council) முதல் சபாநாயகரான சேர். வைத்திலிங்கம் துரைசாமி ஆவார். ஒரு கம்யூனிஸ்டை இந்துக் கல்லூரி ஒன்றில் ஆசிரியராக நியமிப்பதா என்பதே மற்றவர்களுடைய வாதமாக இருந்தது. சேர்.வைத்திலிங்கம் துரைசாமி இந்தப் பிரச்சினையைத் தமது ஆன்மீக ஆலோசகரான யோகர்சுவாமிகளிடம் எடுத்துச் சொன்னதாகவும் அவர் உடனே ''எடே அந்தக் கம்யூனிஸ்டை எடுங்கோடா அவன் நல்லாய்ப் படிப்பிப்பான்" என்று கூறியதாகவும் கதையுண்டு. இவ்வாறுதான் கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்-மாஸ்ராராகினார்.

யாழ். இந்துக்கல்லூரியில் கார்த்திகேசன் ஆசிரியராகப் பணிபுரிந்த கால் நூற்றாண்டுக்கும் மேலான காலத்தில் மாணவர்களின் இதயங்களை மட்டும் அல்ல: பெற்றோரின் இதயங்களையும் சக ஆசிரியர்களின் இதயங்களையும், ஊழியர்களின் இதயங்களையும், சுற்றுப்புறம் மக்களின் இதயங்களையும் கவர்ந்த ஓர் ஆசியரியராக விளங்கினார். யாழ். இந்துக்கல்லூரியில் கார்த்திகேசன் விசேஷமாக ஆங்கிலம், கணிதம் ஆகிய பாடங்களைப் போதித்தார். அவரிடம் கல்வி கற்ற ஆயிரக் காணக்கான மாணவர்கள் இன்றும் வகுப்பறையில் அவருடைய பகிடிகள் ஏற்படுத்திய கலகலப்பைக் கதை கதையாகச் சொல்லுவர்.

பேச்சால் அல்லாது கூடுதலாகத் தனது வாழ்க்கையால் ஓர் ஆதர்ச கம்யூனிச ஆசிரியராக விளங்கிய கார்த்திகேசன் இந்துக்கல்லூரியில் உருவாக்கிய மாணவர் சமுதாயம் இன்று வாழ்வின் சகல துறைகளிலும் முக்கியமானவர்களாகத் திகழ்கின்றார்கள். மாணவர்களை வெறும் புத்தகப் பூச்சிகளாக அவர் பயிற்றுவிக்கவில்லை. ஒவ்வொரு மாணவனினதும் உள்ளார்ந்த திறமைகளைக் கண்டுபிடித்து அவற்றை வெளிக்கொணர்வதில் கார்த்திகேசன் மாஸ்ரர் ஒரு தனித்துவமான பங்காற்றலைச் செய்துள்ளார்.

தமது அரசியல் கொள்கைக்கு இயைந்த கல்விக் கொள்கையையும் திரு.கார்த்திகேசன் கொண்டிருந்தார் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். திரு.கார்த்திகேசனின் கல்விப்பணி தாம் சார்ந்த பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் உரித்தானதாக இருக்கவில்லை. விக்ரோறியா வீதி இல்லத்திலிருந்து அவர் மாறி வண்ணார் பண்ணைக் கலட்டி வீதியிலும், நாச்சிமார் கோயிலடியிலும் வாழ்ந்த போதும் வெளியேயுள்ள எண்ணற்ற மாணவர்கள் அவரிடம் இலவசக் கல்விப் போதனையைப் பெற்றார்கள்.

இயற்கையாகவே கார்த்திகேசன், ஆசிரியர் சங்க வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார். வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் ஊடாக அவர் ஆசிரியர்களின் உரிமைக்காகப் போராடிய அதேவேளையில் வடமாகாணத்தில் கல்வியின் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டார். கல்விமானான கம்யூனிஸ்ட் கார்த்திகேசனை எதிரிகள்கூட மறக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

கார்த்திகேசனின் ஆசிரியர் வாழ்வில் அவர் எழுதிய இராப்போசனத்துக்குப் பிந்திய பேச்சுகளும் குறிப்பிடத்தக்கவை. அண்மைக்காலம்வரை ஆங்கிலத்தில் அமைந்த, அவர் மாணவர்களுக்காக எழுதிய பேச்சுக்களில் நகைச்சுவை நடமாடும். யாழ்ப்பாணத்தில் இத்தகைய பேச்சுக்களை எழுதி மாணவர்களுக்கு உதவுவதில் கார்த்திகேசன் தன்னிகரில்லாததோர் இடத்தை வகித்தார்.

அரசியல் பணியும் சேதனைகளும

கல்லூரி ஆசிரியராகியபோதும் திரு. கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சி வேலையை இடைவிடாது செய்துவந்தார். அக்காலத்தில் கம்யூனிஸ்டுகள் ஒவ்வொருவரும் இரகசியப் பொலிஸாரின் இடைவிடாப் பார்வைக்கு உட்பட்டார்கள். திரு.கார்த்திகேசன் தமது அரசியல் ஆவணங்களை குசினிப் பானை, சட்டிகளுக்குள் மறைத்து வைத்திருப்பார். அவருக்கு எதிராகப் பொலிஸாருக்கு முறையீடுகள் சென்றதும் உண்டு.

யாழ். இந்துக் கல்லூரி தனியார் பாடசாலையாக இருந்தபோது வெளியே அவருக்கு ஓரளவு அரசியல் சுதந்திரம் இருந்தது. 1960ல் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்ற போது ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களாகி அரசியல் உரிமைகளை இழந்தார்கள். இத்தகைய காலங்களில் திரு.கார்த்திகேசன் பல கஷ்டங்களை எதிர்நோக்கியபோதிலும் தமது கட்சி வேலைகளை முழு மூச்சுடன் செய்து வந்தார்.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் 'தேர்தல் சகாப்தம்' 1947ல் ஆரம்பித்தது என்று முன்னர் குறிப்பிடப்பட்டது அல்லவா? 1956ல் திரு. பொன்னம்பலம் கந்தையா பருத்தித்துறைத் தொகுதியின் முதலாவது கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினராகத்

தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தல் வெற்றி தமிழ்ப் பிரதேசங்களில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பெற்ற மிக உச்சக் கட்ட வெற்றியாகும். இதைத் தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் பல கிராமசபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் ஆகியவற்றில் தேர்தலில் நின்று வெற்றியீட்டினார்கள். சில சபைகள் கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இன்னும் சிலவற்றில் கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் அபரிமிதமான செல்வாக்கை வகித்தார்கள்.

தேர்தல் வெற்றி

திரு.கார்த்திகேசனும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் வண்ணார்பண்ணை தேர்தல் வட்டாரத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு.ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் ஒரு பலத்த ஆதரவாளரான திரு. துரைராசா என்பவரை அவர் அத்தேர்தலில் தோற்கடித்தார். யாழ். மாநகரசபையின் ஓர் உறுப்பினராக இருந்த காலத்தில் திரு. கார்த்திகேசனின் மக்கள் சேவை மேலும் அதிகரித்தது.

சமூக சேவை

கட்சி வேலை, ஆசிரியத் தொழில் ஆகியவற்றுடன் பரவலான சமூகசேவையும் சேர்ந்து கொண்டது. திரு. கார்த்திகேசன் எந்நேரத்திலும், எங்கேயும் சந்தித்து உதவி பெறக்கூடிய ஒருவராகச் சாதாரண மக்களிடையே விளங்கினார். சாதாரண கடிதம் ஒன்றை எழுதுதல், விண்ணப்பப் படிவம் ஒன்றை நிரப்புதல் முதலான சகல வேலைகளையும் செய்விக்கச் சாதாரண மக்கள் திரு. கார்த்திகேசனை நாடிச் சென்றார்கள். அது மட்டும் அல்ல, அவரிடம் பண உதவி பெற்றவர்களின் எண்ணிக்கையும் குறைவல்ல.

1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிட்டு கணிசமான வாக்குகளைப் பெற்றார். இந்தத் தேர்தல்களின் போது திரு.கார்த்திகேசனுக்கு ஆதரவாக ஏழை, எளிய மக்களும், இளைஞர்களும் பிரசார வேலை செய்தார்கள்.ஆனால் ஒரு தேர்தல் என்று வந்தால் நோட்டீஸ், சுவரொட்டி, அதற்கான பசை, கூட்டம், ஒலிபெருக்கி, தேர்தல் அலுவலகம், தேர்தல் பட்டியல் தயாரிப்பவர்கள், அவர்களுக்குச் சாப்பாடு, விளம்பரத்துக்ககுக் கார்கள் என்று பல செலவுகள் தவிர்க்க முடியாதவை. தேர்தல்கள் திரு.கார்த்திகேசனுக்கு மீளமுடியாத பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தின.

கட்சிப் பிரிவின் போது.....

அறுபதாம் ஆண்டுகளில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பாரிய தத்துவார்த்த வேற்றுமைகள் ஏற்பட்டன. ஸ்டாலினின் மறைவுக்குப் பின் ரஷ்யாவின் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றிக் கொண்ட குருசோவ் ஏகாதிபத்தியத்துடன் சமாதான சகவாழ்வுக் கொள்கையை கடைப்பிடித்ததுடன் உள்நாட்டிலும் கம்யூனிஸம் அல்லாத கொள்கைகளை தொழிற்துறை, விவசாயம் ஆகியவற்றில் புகுத்தினார். மாசேதுங்கைத் தலைவராகக் கொண்ட சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் உலகக் கம்யூனிஸ்டுகள் குருசோவின் கொள்கைகளைத் 'திரிபுவாதம்' என்று அழைத்து அதற்கு எதிராக உலகந் தழுவிய போராட்டம் ஒன்றை ஆரம்பித்தார்கள். உலகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் அனைத்தும் இந்தத் தத்துவார்த்தப் போராட்டத்தால் பிளவுபட்டன. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை.

1963 ஆம் ஆண்டில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி இவ்வாறு இரண்டாகப் பிளந்தது. இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் பிரிவின் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கார்த்திகேசன் கடமையாற்றினார். புதிய நிலைமையில் பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல், போராட்டத்தில் வன்முறையின் பங்கு ஆகியன பற்றிய அரசியல் பிரசாரத்தில் திரு. கார்த்திகேசன் ஈடுபட்டார். கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 20 க்கு மேலான ஆண்டுகள் கழிந்தபோதும் 'அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல்' என்ற விஷயம் இக் கட்சியால் பாரதூரமாக விவாதிக்கப் படாதது ஒரு விந்தைக்குரிய விஷயமாகும்.

மற்றது, வர்க்க அரசியல் பேசும் கம்யூனிஸ்ட் கட்சி எதிரி அதிகாரத்தை வெள்ளித் தட்டில் ஏந்தி வந்து கொடுப்பான் என்று எதிர்பார்ததது இன்னொரு தவறாகும். புரட்சிகர வன்முறை இன்றிப் பொதுமக்களுக்குப் புது வாழ்வு ஏற்பட முடியாது என்ற மார்க்சிய நெறித்தத்துவத்தைப் புதியதோர் உத்வேதகத்துடன் திரு.கார்த்திகேசன் முதலிய கம்யூனிஸ்டுகள் பிரசாரம் செய்தார்கள்.

தீண்டாமை ஒழிப்புப் போராட்டத் தலைவர்

யாழ்ப்பாணத்தில் 1966ம் ஆண்டில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் பிரிவின் தலைமையில் மேற்கூறிய தத்துவார்த்தப் பின்னணியில் நடைபெற்றது. தாழ்த்தப்பட்ட மக்களின் கோயில் பிரவேசத்தையும் தேநீர்க் கடைப் பிரவேசத்தையும் பிரதான கருப்பொருள்களாகக் கொண்ட இப்போராட்டம் குறிப்பிட்ட வெற்றியையும் பெற்றது. திரு.கார்த்திகேசன், திரு.வீ.ஏ.கந்தசுவாமி, திரு.ஏ.சி.இக்பால், திரு.மார்க்,

திரு.கே.ஏ.சுப்பிரமணியம், திரு.எஸ்.ரி.என்.நாகரத்தினம், திரு.கே.டானியல், திரு. சலீம், திரு.முத்தையா ஆகியோர் இப்போராட்டத்துக்குத் தலைமை வகித்தார்கள். இப்போராட்டத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரவேசம் மிக உக்கிரமானதாகவும், மிகச் சிக்கலானதாகவும் அமைந்தது. சொத்துக்காரர், சமய ஆதிக்கக்காரர், பொலீஸ் ஆகிய சக்திகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து மக்களுக்கு எதிராக நின்றன. இறுதியில் மக்கள் வென்றார்கள்.

திரு.கார்த்திகேசனைப் பொறுத்தவரையில் போராட்டம் இன்னொரு விசேஷத்தையும் கொண்டிருந்தது. தம்முடைய பல்கலைக்கழக ஆசானான திரு.சி.சுந்தரலிங்கத்துக்கு எதிராக அவர் போராடவேண்டியிருந்தது. திரு.கார்த்திகேசன் இக்காலத்தில் தமது பேச்சாலும் எழுத்தாலும் செயலாலும் மிகப்பெரும் பங்கை ஆற்றினார்.

1963 - 1966 காலத்தில் திரு.கார்த்திகேசனுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்பட்டது. அவர் அரசியல் காரணங்களுக்காக அரசாங்கத்தால் ஆசிரியர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார்.

1963 முதல் 1971 ஏப்பிரல் வரை திரு.கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் கட்சியின் பீக்கிங் பிரிவில் ஒரு முக்கிய தலைவராக விளங்கினார். 1972ம் ஆண்டு அவர் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) என்ற கட்சியினூடாகச் செயற்பட்டார். காலஞ்சென்ற வாட்சன் பர்னாந்து, திரு.வீ.ஏ.கந்தசாமி ஆகியோருடன் அவர் இந்தக் கட்சியின் செயலாளர்களில் ஒருவராகப் பணிபுரிந்தார்.

தமிழர் உரிமைக்காக

சுரண்டல், அடக்குமுறை ஆகியவற்றிலிருந்து முழு மனிதகுலமும் விடுதலை பெறவேண்டும் என்ற உன்னத நோக்குடன் கம்யூனிஸ்ட் இலட்சியத்தைக் கடைப்பிடித்த திரு.கார்த்திகேசன் இலங்கையின் ஒரு சிறுபான்மை இனமான தமிழர்கள் தமது நியாயமான உரிமைகளை இழந்திருப்பது பற்றியும் பெரும் கவனம் செலுத்தினார். இன ஒடுக்குமுறையும் ஒருவகை வர்க்கச் சுரண்டலே என்று நம்பிய திரு.கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு உள்ளேயும், வெளியேயும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தினார்.

திரு.பொன்னம்பலம் கந்தையா, திரு.கார்த்திகேசன் ஆகிய தலைவர்கள் கட்சிக்குள்ளே தமிழர்களின் உரிமைகளுக்காக கம்யூனிஸ்ட் கட்சி போராடவேண்டும் என்று இடைவிடாது முயற்சி எடுத்து வந்தார்கள். இதன் பலனாகவே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆரம்பத்தில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தது. வடகிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி வேண்டும் என்று 1954ல் வல்வெட்டித்துறை மாநாட்டில் முடிவெடுத்தது.

அதிபராக....

அயராத அரசியல் வாழ்க்கையின் மத்தியில் ஆசிரியப் பணியிலும் திரு. கார்த்திகேசன் புதிய பொறுப்புக்களை ஏற்றார். அவர் யாழ். இந்துக் கல்லூரியின் அதிபராகவும், பின்னர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராகவும் இறுதியாக பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பணிபுரிந்தார்.

பதவி மாறியதே தவிர கார்த்திகேசன் மாஸ்ரர் முன்பு போலவே இருந்தார். அதிபர் பதவியை அவர் தன்னுடைய அன்பாலும் அறிவுரையாலும் அழகுபடுத்தினார். அவருடைய இளகிய சுபாவம் அதிபர் பதவிக்கு பொருத்தமற்றது என்று கருதியவர்கள்கூட வியக்கும் வண்ணம் அதிபர் வேலையை அவர் செய்துமுடித்தார். திரு.கார்த்திகேசன் அதிபராக இருந்த காலத்தில் மேற்குறிப்பிட்ட மூன்று கல்லூரிகளும் புதிய தோற்றத்தை எடுத்தன. அவர் கூடுதலான காலம் அதிபராகக் கடமையாற்றிய பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் புதிய கட்டடங்களை அமைக்க அவர் முன்னின்று உழைத்தார்.

ஓய்வும் மறைவும்

ஆசிரியப் பணியிலிருந்து ஒய்வு பெற்ற பின் திரு.கார்த்திகேசன் தமது அரசியல் பணிகளுடன் சேர்த்து பல சமூகப் பணிகளையும் மேற்கொண்டார். மரம் நடுதல், குளங்களை ஆழமாக்குதல் முதலிய சமூகநல வேலைகளைக் கூட அவர் தொடக்கிவைத்துச் செய்தார்.

இவ்வாறு மக்களின் நல்வாழ்வுக்காக வாழ்ந்த திரு.கார்த்திகேசன் 1977ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ம் திகதி மாரடைப்பு நோயால் மரணம் அடைந்தார்.

திரு. கார்த்திகேசனின் மறைவு ஒரு நிரப்பமுடியாத இடைவெளியை ஏற்படுத்தியது. ஆதர்ச கம்யூனிஸவாதியாக, தலை சிறந்த ஆசிரியராக, ஏழை பங்காளனாக, சமூக சேவகனாக, மனிதாபிமானியாக அவர் ஆற்றிய பணிகள் என்றும் மக்களால் நினைவுகூரத்தக்கவை ஆகும்.

கம்யூனிஸத்தால் கார்த்திகேசன் சிறப்புப் பெற்றாரா அல்லது கார்த்திகேசனால் கம்யூனிஸம் சிறப்புப் பெற்றதா என்ற கேள்வியைப் பலர் மனங்களிலும் எழுப்பும் வகையில் திரு.கார்த்திகேசனின் வாழ்க்கை அமைந்தது. அத்தகைய சொல்லும் செயலும் இணைந்த வாழ்க்கை அவருடையது.

**காலஞ்சென்ற பத்திரிகையாளர் வீ.சின்னத்தம்பி*
'பாரதிநேசன்' என்ற புனைபெயரில் எழுதி வெளியிட்ட
'மக்கள் நேசன் கார்த்திகேசன்' என்ற வெளியீட்டிலிருந்து
பெறப்பட்ட கட்டுரையாகும்.
வீ.சின்னத்தம்பி அமரர் கார்த்திகேசனின் மூத்த மருமகனும்,
கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினருமாவார்.

எங்கள் ஐயா

திருமதி. ராணிரத்தினதேவி சின்னத்தம்பி

எங்கள் ஐயாவை 'வான் பயிர்கள்' என அவராற் குறிப்பிடப்பட்ட பிள்ளைகளாகிய நாங்கள் அறிந்ததைவிட அவரது முன்னாள் மாணவர்களும் சக ஆசிரியர்களும் அவருடன் பழகியோரும் அறிந்ததுதான் அதிகம். அவர் இறந்த பின்னர் அவரைப் பற்றிய பல விடயங்களைப் பிறரிடமிருந்துதான் நாம் கேட்டறிந்தோம். ஒரு அன்பர் குறிப்பிட்டது போன்று எங்கள் ஐயாவின் முசுட்டுக் கோபமும் தனது நேரத்திற் பெரும்பகுதியை வெளியே செலவிட்டதும் எங்களை அவரிடமிருந்து எவ்வளவோ பிரிந்து வைத்திருந்தன.

எது எவ்வாறாயினும் அவரை நான் எனது வாழ்க்கையில் ஒரு அன்புமிகுந்த மகனாக, பொறுப்புணர்புடைய சகோதரனாக, கட்டியவளை எந்நிலையிலும் கைவிடாத உதாரணபுருஷனாக, ஐந்து பெண்களையும் நோயால் வலது குறைந்த ஓர் ஆண்மகனையும் பெற்றும் மனதளவில் ஆண்டியாகாத பாசமிக்க தந்தையாக, நல்லாசிரியனாக, இலக்கிய ஆர்வலனாக, விளையாட்டு வீரனாக, எல்லாவற்றுக்கும் மேலாக தான் இளவயதுமுதல் ஈடுபாடுகொண்ட கொள்கைகளில் இறுதிவரை ஊன்றி நின்ற ஒரு அரசியல்வாதியாக, சமூக சேவையாளனாக, மென்மையான, இளகிய அன்பிதயம் கொண்ட ஒரு மனிதனாகக் கண்டிருக்கிறேன்.

தந்தையை விஞ்சிய மைந்தன்.

உருவத்திலும் உள்ளடக்கத்திலும் தன் தந்தையாரைக் கொண்டு பிறந்தவர் எங்கள் ஐயா. உற்றார் உறவினரை நேசித்துத்தான் உழைத்ததிற் பெரும்பகுதியைச் செலவிட்ட தன் தந்தையாரை ஒரு படி மிஞ்சி அவர் மனித குலத்தையே நேசிக்க ஆரம்பித்தார். இதன் காரணமாய் தன் தந்தையின் ஆசையை நிராசையாக்கினார். இதையிட்டுத் தன் தந்தையின் மனம் நோகக்கூடாதென்பதற்காக ''உங்கள் மகன் உங்களைப் போலத்தான் இருப்பான்'' என்று எழுதிச் சமாளித்ததாய்ப் பெருமைப்பட்டுக் கொள்வார். இதேபோன்றுதான் தாய் தந்தையரின் சம்மதம் பெறாத தனது மனதுக்குப் பிடித்த பெண்ணை மணந்து

கொண்டவிடயத்தைக் கூறும் போதும் ''கடிதத்தில் 'ஐ' என்று எழுதி வந்ததை 'We' என்று மாற்றி எழுதினேன். ராணி பிறந்ததும் 'We Three' என எழுதி முற்றாகச் சமாளித்து விட்டேன்' எனச் சிரித்துக்கொண்டு கூறுவார். தனது தாயாரதும் எனது தாயாரின் தாயாரதும் பெயரை இணைத்தே எனக்குப் பெயர்சூட்டினார். அதைக்கூடப் பெருமையாகத்தான் சொல்லிக்கொள்வார்.

குடும்ப வாழ்வே பொதுவாழ்வு.

எனது தாயாரைத் திருமணம் செய்தபோது அவர் தனது வாழ்க்கைமுறையுடன் முரண்படாது, இணைந்து வாழவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தாராம் என்று சொல்வார் என் தாயார். இருவரும் வாழ்க்கையில் எத்தனையோ மேடுபள்ளங்களைக் கண்டார்கள். இடையிடையே முரண்பாடுகளும் இழுபறிகளும் ஏற்படாமலும் இல்லை. ஆனாலும் எனது தந்தையாரின் சமூகவாழ்வு இவ்வளவு சிறப்பற அமைந்ததற்கு என் தாயார் பெரும் பங்காற்றினார் என்றுதான் கூறவேண்டும்.

அன்பும் அக்கறையும் உடைய தந்தை.

நான் "H.S.C" படித்தபோது தன் நன்மாணாக்கர் ஒருவரிடமிருந்து எனக்குப் புவியியற் குறிப்புகளைத் தானே வாங்கிவந்து தந்த என் தந்தையின் அக்கறையையும் நான் மறப்பதற்கில்லை. அவரது அன்பும் அக்கறையும் எமக்கு இன்னும் அதிகமாகக் கிடைத்திருந்தால் நாங்கள் எவ்வளவு பாக்கியசாலிகளாக இருந்திருப்போம் என்றே இவ்விடத்தில் நான் எண்ணித்தவிக்கிறேன்.

எனது தங்கை ஒரு தடவை ஒரு திருமணத்திற்குச் சென்று திரும்பிவரும் வழியில் ஒருவன் எனது தங்கையின் சங்கிலியை அறுத்துச் சென்றுவிட்டான். எனது தந்தையார் சங்கிலி போனது பற்றிப் பதறாமல் எனது தங்கையை முதலிற் கேட்ட கேள்வி ''கழுத்தில் காயம் ஏதேனும் ஏற்பட்டுவிட்டதா ஆச்சி?" என்பதுதான்.

எவரையும் தனக்காக வருத்தக்கூடாது என்ற நல்லியல்பு கொண்ட எங்கள் ஐயா பெற்ற பிள்ளைகளுக்குக் கூடத்தொல்லை கொடுக்க விரும்பாதவர்.

நாங்கள் சமையல் வேலையில் அமளியாக இருக்கும்போது தனக்கும் தேநீர் குடிக்கவேண்டும் போல் இருந்தால் குசினியை ஓரிருமுறை வலம் வந்துவிட்டு மெதுவாக ''அடுப்பில் சுடுநீர் இருக்கோ, ஆச்சி!" என்று அன்புடன் கேட்பார்.

உடுப்புகளுக்கு ஸ்திரிக்கை போட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் தனக்கு எங்கேயாவது போகவேண்டி இருந்தால் ''இந்த ஷேட்டுக்கும் கடைசிச் சூட்டைப் பிடித்துவிடு ஆச்சி" என்று அன்புடன் கேட்பார்.



கார்த்திகேசனும் அவரது குடும்பமும்

ஏன், தனது இறுதி நேரத்தில் நெஞ்சுவலியாற் துடிதுடித்த போதுகூட பள்ளிக்கூட வேலை செய்துகொண்டிருந்த எனது தங்கையைக் குழப்பக்கூடாதென்று தன் நெஞ்சுவலியைத் தாங்கிக்கொண்டாராம். அவர் நிம்மதியின்றி நடந்து திரிவதை அவதானித்த தங்கைதான் அவருக்குத் தானே தேநீர் ஊற்றிக்கொடுத்தாராம். அந்தத் தெம்புடன், வந்து கடிதம் எழுதியபடியே தன் சுயநினைவிழந்து போனார் என் தந்தையார்.

குடும்பத்தைக்கொண்டு நடத்துவதில் அதிக சிரத்தையும், நேரமும் அற்றவராய் இருந்தாலும் மனம் நிறைந்த பாசமும், குடும்பப் பிணைப்பும் கொண்டிருந்தார் என் தந்தை. வீட்டில் விசேடமென்றால் இரத்த உறவு முறை பேணுவதிலும், உறவினர், நண்பர் வீட்டில் விசேடமென்றால் அழைப்பை மதித்து ஒருமுறை தலையைக் காட்டிவிட்டாவது வருவதிலும் மிகக் கருத்தாய் இருந்தார்.

மனிதரை மதிக்கப் பழக்கியவர்.

நான் ஒருதடவை வந்தவர்களுக்குத் தேநீர் பரிமாறியபோது 'கப்'பிற் கொடுக்காது கிளாஸில் கொடுத்துவிட்டேன் என்று என்னிடம் விளக்கம் கேட்டார் என் தந்தை. எங்கே நான் மனிதரின் தராதரம் பார்த்து விட்டேனோ என்று தந்தையார் பயந்ததுதான் அதற்குக் காரணம்.

''பத்துச் சீலை வைத்திருக்கும் நீங்கள் சீலை இல்லாதவருக்கு ஏன் ஒரு சீலை கொடுக்கக்கூடாது" என்று இரக்க சிந்தையையும் சிக்கனத்தையும் படிப்பித்தவர் எங்கள் தந்தை.

சுருங்கக்கூறின், தன் வாழ்க்கை முறையால் மனிதநேயத்தை, இரக்கத்தை, எளிமையை, பொறுமையை, நேர்மையை, அச்சமின்மையை, மனச்சாட்சிக்குப் பயந்து வாழ்தலை, சொற்திறம் பாமையை வாழ்க்கைச் சவால்களை எதிர்நோக்கும் உறுதியை எமக்குப் போதித்ததுடன் இன்றும் எமக்கு வழிகாட்டியாக விளங்குபவர் எங்கள் ஐயா!

**'மக்கள் நேசன் கார்த்திகேசன்' நூலில் கார்த்திகேசனின் மூத்தமகளின் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.*

* * *

வாழ்க்கையைச் சிந்தனையால் வென்ற விந்தையான தந்தை

ஜானகி பாலக்கிருஷ்ணன்

''கார்த்திகேசன் மாஸ்டர் ஒரு கம்யூனிஸ்ட்;
அவர் ஒரு பொதுவுடமைவாதி.;
தனது உழைப்பை மற்றவர்க்கு அள்ளிக் கொடுத்தார்;
அதனால் அவர் தானும் ஏழையானார்;
தனது மனைவி மக்களைக் கஷ்டத்தில் வாழவைத்தார்;
அவர்களுக்கென்று எதையும் விட்டுச் செல்லவில்லை."

இது கார்த்திகேசன் மாஸ்டருடன் அதிகம் பழகாதவர்களும், எமது குடும்பத்தை அதிகம் தெரியாதவர்களும், நெருக்கமாகப் பழகியும், ஏன் அவர் குடும்பத்துடன் வாழ்ந்தும் அவரையும் அவ்வாழ்க்கையையும் நன்கு புரிந்து கொள்ளாதவர்களும் அல்லது அவரது கொள்கையையும் வாழ்க்கையின் போக்கையும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் அல்லது அவருடன் கொள்கையை அனுசரித்து நடந்தால் தாமும் அந்நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோமோ என்று அஞ்சியவர்களும் கொண்ட கருத்தாகும். மேற்கூறிய கருத்தினை முற்றுமுழுதாகக் கொண்டு வாழாவிட்டாலும், குடும்ப அங்கத்தினர்களும், நானுட்பட ஒருவிதத்தில், மேலே கூறப்பட்டவர்களுடன் சேர்க்கப்பட வேண்டியவர்களே.

நாம் கொண்ட எண்ணங்கள், கருத்துக்கள் தப்பானவையே என நிரூபிக்கும்படியே எமது தந்தையார் மு.கார்த்திகேசன் வாழ்ந்திருக்கிறார். தனது வாழ்க்கையின் தடயங்களையும் விட்டுச் சென்றிருக்கிறார் என்றால் அது மிகையாகாது. அவர் சமூகத்தில் மற்றவர்களுக்கு எப்படி அதை நிரூபித்தார் என்பதைவிட்டு, அவரது மகளாக அந்நிரூபணங்களை நான் எவ்வாறு புரிந்து கொண்டேன் என்பதைப் பகிர்ந்து கொள்ளுமுகமாகவே இக்கட்டுரையை வரைந்துள்ளேன்.

பெருஞ்சொத்து சேர்த்தவர்

எமது தந்தையார் மு. கார்த்திகேசன் அவர்கள் அவர் பெற்ற பிள்ளைகளான எமக்கு இவ்வுலகில் விட்டுச் சென்ற சொத்துக்கள் ஏராளம். அவர் விட்டுச் சென்ற சொத்துக்களில் பல மிகவும் அரிதானவை. அவை பலருக்கும் கிட்டாதவை மட்டுமல்ல, யாபேரும் போற்றக்கூடியதும், மற்றவர் கண்டு ஏங்கக்கூடியதுமாகும். இவ் அரும்பெரும் சொத்துக்களைப் பெற்றுத் தந்த எமது தந்தையாரைப் பற்றி எழுதக் கிடைத்தது எனது பெரும் பாக்கியமே.

''பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவான்" என்பது முன்னோர் வாக்கு. ஆனால் பெண்கள் ஐந்தினைப் பெற்றது பெருவிருந்தென மகிழ்ந்தவர் எமது தந்தை. அதைவிட சமூகத்தில் ஒரு பெண்ணிலும் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்ட உடல் ஊனமுற்ற பையனையும் பெற்றும் களிப்போடு வாழ்க்கையின் யதார்த்தங்களை ஏற்று வாழ்ந்தவர். பெண்ணைப் பெற்றவர் பலர் பெண்ணின் வருங்காலத்தை எண்ணித் திட்டமிட்டு பெரும் பொருட்சொத்து சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்த வேளையில், எமது தந்தையார் தான் திட்டமிடாமலே தனது பெருமையை எமக்கு அழியாச் சொத்தாகச் சேர்ப்பதில் செயற்பட்டிருக்கிறார் என்றால் அதுவும் மிகையாகாது.

''தந்தை மகற்காற்றும் உதவி
சபையில் முந்தியிருக்கச் செயல்"

என்பதற்கியைய அவர் பெயரைக் கூறினாலே பலரும் எம்மை மதிக்குமளவிற்கு ''பெருமை" எனும் அரும்பெரும் செல்வத்தைத் தன் கொள்கையால், பொதுவுடமைப் பணியினால், மக்கள் சேவையால், மாண்புமிகு குணத்தினால், நற்பண்பினால் பெற்றுத் தந்துள்ளார்.

''கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு" என நன்கறிந்து கல்விச் செல்வத்தை தவறாமல் எமக்களித்தும், அதைப் பெற்றுக்கொள்ள வேண்டிய வசதியையும், ஆர்வத்தையும், ஊக்கத்தையும் எமக்கு ஏற்படுத்தினார். அவரைப் பொறுத்தவரை, ''கற்பித்தவர்க்கு எடுத்து வைத்த அடியெல்லாம் சிறப்பு" என்று பல வேளைகளிலும் பல இடங்களிலும் நிரூபித்தார்.

அந்நியமாக வாழ்ந்தவர்

இவ்வளவிற்கும் வாழ்க்கையில் அவரை அன்றாடம் சந்திப்பது ஒருசில நிமிடங்கள் கூட தொடர்ச்சியாக இருந்திராது என்பதும், சிலநாட்கள் தொடர்ச்சியாகக் காணாமலே இருந்ததும், அவருடனான சம்பாஷணைகள் எண்ணக்கூடிய வார்த்தைகள் அளவிலேயே இருந்ததும் எனக்கேற்பட்ட நிலை மட்டுமல்ல, எனது மூத்த சகோதரர்களுக்கும், குறிப்பாக சகோதரிகளுக்கும், ஏன் சில காலங்களில் எமது தாயாருக்கும், அத்துடன் எம்முடன் வாழ்ந்த அவரது தாயாருக்கும், சகோதரிகளுக்கும் ஏற்பட்ட நிலையும்தான்.

இது ஓரளவு அக்கால எமது சமூக வாழ்க்கை முறையோடு - ஒரு தந்தைக்கும் பிள்ளைகளுக்கும், ஆணானாலும் பெண்ணானாலும், இடையில் நெருங்கிய தொடர்பு இல்லாமை - ஒத்திருந்ததனால், மனச்சங்கடம் ஏதுமின்றி வாழப்பழகியிருந்தோம் என்பதிலும், அதை அவரது பிள்ளைகள் அந்நேரம் விரும்பியும் ஏற்றுக் கொண்டோம் என்றும் கூறலாம். அதற்கு முக்கிய காரணம் தந்தை என்ற மதிப்பினால் ஏற்பட்ட பயம். எமது சுதந்திரத்திற்கும், விளையாட்டுகளுக்கும், சந்தோஷங்களுக்கும் இடைஞ்சலாகி விடுமோ என்ற கிலி, அதிகம் கண்டிப்புகளுக்கும், கேள்விகளுக்கும் ஆளாக வேண்டுமே, சகோதரர்களுக்கிடையே ஏற்படும் சிறு சண்டைகள், சச்சரவுகள், ஆர்ப்பாட்டங்களுக்குப் பதில் சொல்ல வேண்டிவருமே என்ற அச்சம். இவ்வாறு பல கிறுக்குத்தனமான, ஆனால் அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய காரணங்களுக்காக அவர் எம்மைத் தவிர்க்க விரும்பாத நிலையிலும், மிக அத்தியாவசிய தேவையன்றி ஏனைய நேரங்களில் அவரிடமிருந்து ஒதுங்கியே இருந்தோம். சமூகத்தில் பலருக்குக் கிடைத்த வாய்ப்பினை எமக்குக் கிட்டாமல் பண்ணிவிட்டோமேயென்று, இன்று அதையிட்டு மனமிகு வருந்துகிறேன்.

அவரின் கட்சியின் நோக்கமும் செயற்பாடுகளும் ஓரளவு புரிந்திருந்தாலும், முழுவதும் விபரமாகத் தெரிந்திருக்கவில்லை. சிறுபிராயங்களில் மற்றவர் அவரது கட்சியைப் பற்றி எதிர்மாறாகக் கூறும் வியாக்கியானங்களையும் விமர்சனங்களையுமே கேட்க வேண்டியதாயிற்று. இருந்த போதும் எமது தந்தை நல்லவர் என்று பலரும் கூறுகிறார்கள், அவருடன் இணைந்து செயற்படுபவர்களும் நல்லவர்களாகவே தென்படுகிறார்கள், அதற்கேற்ப அவரைத் தேடிப் பலரும் வருகிறார்கள், அதனால் அவரது செயற்பாடுகள் மக்களுக்கு வேண்டியவையே என்று என்னைத் திடப்படுத்திக் கொண்டு மற்றவர்களிடம் அதிகம் இதுபற்றிப் பேச்சுக் கொடுத்ததுமில்லை, அவர்களுடன் வாதாடியதுமில்லை. வீட்டில் வந்து எமது தாயாரிடம் அது பற்றி விளக்கம் கேட்க முயன்றதாக ஞாபகமுமில்லை. ஆனால் இடையிடையே நாம் ஆர்வமாகத் துருவிக் கேட்டதனால் திருமணமான புதிதில் தம்பதியராக பீட்டர் கெனமன் போன்றோருடன் இருந்தது பற்றி எமது தாயார் அதிக விளக்கங்கள் இல்லாமல் கூறியிருக்கிறார். அவை அவவின் நினைவைவிட்டு நீங்காத பொன்னான நாட்கள் என்பதை, எமது தந்தையார் இறந்து ஏறத்தாழ ஒருவருடத்தின் பின், தனது மந்திரி பதவியை இழந்து இருந்த வேளையில் தனது யாழ் விஜயத்தின் போது துக்கம் விசாரிக்க வந்த பீட்டர் கெனமனைத் தனது சுகயீனமான நிலையிலும் இனங்கண்டு கண்ணீர் உகுத்ததிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

இல்லத்தில் உலகை அறிமுகம் செய்தவர்

எங்கள் வீட்டில் பலரும் வந்து செல்வதால், ஒரு சிலரை கட்சிக்காரர்கள் என ஏதோ ஒருவிதத்தில், தந்தையால் அல்லது தாயாரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்டிருந்தோம். எனக்குத் தெரிந்து கட்சி அலுவல்களாக வீட்டிற்கு வந்து சென்றவர்கள், கொழும்பு போன்ற வேறிடங்களிலிருந்து வந்து தங்கிச் சென்றவர்கள்

என்று பலரைக் கண்டிருக்கிறோம். அனைவருடைய பெயரும் தெரியாது. தெரிந்தவர்கள் எல்லோரது பெயர்களும் ஞாபகத்திலும் இல்லை. அக்காலத்தில் மிக நெருங்கியவர் என்று அரியரட்ணம் மாஸ்டரைக் குறிப்பிடும்படியாக இருந்தார். அதிகமாக விடுமுறை நாட்களில் காலையில் அவர் வந்து சைக்கிளால் இறங்கியதும், ''காத்தி! காத்தி!" என்று அழைத்தபடி தானே வீட்டினுள்ளே வந்து, குசினிவரையும் கூடத் தந்தையைத் தேடிச்சென்று, காலைச் சாப்பாடு அருந்திக் கொண்டிருந்தால் வைத்திருந்த ஒருகப் கோப்பியில் பங்கு போட்டுக் குடித்து சாப்பாட்டு மேசையிலேயே வந்த விஷயத்தைப் பேசிமுடித்துச் சென்றுவிடுவார். இது சிறிது நூதனமாக இருந்தாலும், அது எமது வாழ்க்கைக்கு இடைஞ்சலாக இல்லாமலும், அவர்களுடைய அந்த அந்நியோன்யமான நட்பு விரும்பத்தக்கதாகவும் போற்றத் தக்கதாகவும் அச்சிறுவயதில் எனக்கிருந்தது. அக்கால கட்டத்தில் அவர்களிருவரும் வடபிரதேசக் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளராகவும், பொருளாளராகவும் கடமையாற்றியிருந்தார்கள் என்று பின்பு கேட்டறிந்த போது, சிறிது நேரத்தையும் வீணாக்காது அவர்களுடைய செயற்திறன் எப்படியிருந்திருக்கிறது என்று வியந்து போகிறேன். கம்யூன் வாழ்க்கையின் தன்மையும் நெருக்கமும் கூட அதில் வெளிப்பட்டது எனலாம்.

வீ.பொன்னம்பலம், எம்.சீ.சுப்பிரமணியம் போன்றோரும் இடையிடையே வருவார்கள். அவர்கள் பெரும்புள்ளிகளாகத் தென்படுவார்கள், அது உண்மையுமே. எஸ்.பீ.நடராஜா மாஸ்டர், கொக்குவில் பாடசாலை, வெள்ளை வெளேரென்று ஷேட், காற்சட்டை அணிந்து ஸ்கூட்டரில் வருவது எனது சகோதரனுக்கும், அயலிலுள்ள இளம்பையன்களுக்கும் ஒரு கிளுகிளுப்பைக் கொடுக்கும். அதிலும் எமது தந்தையையும் எஸ்.பீ.நடராஜா மாஸ்டர் ஸ்கூட்டரில் பின்னால் இருத்திக் கொண்டு சென்றால் எனது சகோதரனின் புழுகத்தைப் பார்க்க வேண்டியதில்லை. வைத்திலிங்கம் மாஸ்டர், ஜனகா மாஸ்ட்ர் போன்றோருடன் ஓர் குடும்ப உறவு ஏற்பட்டிருந்தது. வைத்திலிங்கம் மாஸ்டர் காரில் வருவது அயலவர்கட்கு ஒரு மதிப்பிற்குரிய வருகையுமாக தென்பட்டது. பின்பு வந்து சென்றவர்கள் இக்பால், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், மோட்டார் சைக்கிளில் வரும் டானியல் ஆகியோர். அவர்களது பெயர்கள் நிலைத்து நிற்பதற்குக் காரணம் அவர்கள் பெயர்கள் தாங்கிய எழுத்துக்கள் எமது வீடுவந்து சேர்ந்ததேயாகும். வாட்சன் பொன்னான்டோ என்பவர் கொழும்பிலிருந்து கூட்டத்திற்காகவென்று வந்து செல்வார். தலையாளியில் வசித்த குணம் என்பவர் ஒரு தொண்டர் போல் அடிக்கடி வந்து போவார். இவர்கள் தவிர கம்யூனிஸ்ட் கட்சியிலும் சில வழிப்போக்கர்களும் வந்து சென்றிருப்பார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்க தோற்றமுள்ளவராயும், அதிரவைக்கும் பேச்சும் சிரிப்பும் கொண்டவராய் சிறிது காலம் வந்து சென்றவர் 'தீப்பொறி' ஆசிரியர் அந்தனிசில்.

இடையிடையே எமது குடும்பத்தில் ஏற்ற இறக்கங்கள் எமது தாயாரின் சுகநிலையைப் பொறுத்திருக்கும். அதைப்பொறுத்தும் வந்து செல்பவர்களினது, குறிப்பாகக் கட்சிக்காரரினது வருகையும் கூடிக் குறையும். அதைவிட அவ்வவ்

காலத்து கட்சி செயற்பாடுகளுக்கேற்பவும் தேடிவரும் ஆட்கள் வேறுபட்டிருப்பர் என்று இப்போது புலனாகிறது. இருப்பினும் விக்டோரியா றோட், கலட்டி றோட் வீடுகள் பற்றி எனக்குத் தெரியாததால், நானறிந்து கே.கே.எஸ். றோட்டிற்கு அருகாமையிலிருந்த நாச்சிமார் கோவிலடி வீட்டிற்கு வந்து சென்றதைப் போல் பெருந்தொகையானோர், அதன் பின் மாறிச்சென்ற மற்ற வீடுகளுக்கு வந்ததில்லை. ஆரம்பத்தில் நாச்சிமார் கோவிலடி வீட்டின் முன்புறமிருந்த திறந்த விறாந்தையும், அதில் போடப்பட்ட மேசையும் வாங்கில்களும் வாய்ப்பாக இருந்ததும், அந்த வசதி ஏனைய வீடுகளில் இருந்திருக்காததால் என எண்ணினேன். ஆனால் அதற்குக் காரணம் கட்சியின் பிரிவும், அதையொட்டி ஏற்பட்ட மாற்றங்களுமே என்பது பின்புதான் சிறிது சிறிதாகத் தெரிய வந்தது.

கட்சிப் பதவிகளின் நிலைப்பாடுகள் அதிகம் புரிந்திருக்காத காலம். தோழர் சண்முகதாசன் பற்றிப் பெரிதாகப் பேசப்படும். எனது ஆறாவது வகுப்பில் கொழும்பில் அவர் வீட்டில் தங்கி அகிலஉலக கண்காட்சி பார்ப்பதற்கு எமது தந்தை தனது பெண்பிள்ளைகளையும், தனது இளைய சகோதரியையும் அழைத்துச் சென்றார். அதுதான் முதல்முதலாக அவர் மாத்திரம் எம்மை அழைத்துச் சென்ற ஒரு பயணம். அதைத் தொடர்ந்து ஒருதடவை சண்ணின் யாழ் விஜயத்தின் போது அவர் தன் மகளுடன் எங்கள் வீட்டிற்கும் வந்திருந்தார். நாங்கள் அனைவரும் அரசியலில் ஞானசூனியமாக இருந்ததும், சகஜமாகப் பழகும் தன்மை இல்லாவிட்டாலும் மற்றவர் முன்னால் கூச்சப்படாமல் பேசக் கற்றுக் கொள்ளாததும் எமது தந்தைக்கு ஏமாற்றத்தைத் தந்த விஷயங்கள். நான் யாழ்ப்பாணத்தை விட்டு படிக்கவென்று வெளியால் சென்ற போது கூடுதலாக வந்து சென்றவர்கள் எம். குமாரசாமி, வீ.ஏ.கந்தசாமி ஆகியோராவார்.

தேர்தல் கால அனுபவத்தை அளித்தவர்

தேர்தல் காலங்களில் தாயாருடன் வாக்குக் கேட்டு பல வீடுகளுக்கு, பல சமூகங்கள் மத்தியில் சென்றது நன்கு நினைவிலுள்ளது. வேறு பலர் வீட்டில் எம்மைத் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடுத்தியதையும், கூடுதலாக வீட்டு மதில் மேலேற்றி, ''போடு புள்ளடி திறப்புக்கு நேரே'', ''எங்கள் நேசன் கார்த்தி - கேசன்'', ''சைக்கிளிற்கு காத்துப் போச்சு, ...விற்கு (எதிராளிக்கு) மூச்சுப் போச்சு'' போன்ற சுலோகங்கள் கூறவைத்ததையும், தேர்தல் சாவடிக்கு அண்மையில், தாயார் தைத்துத் தரும் சிவப்புச் சட்டை அணிந்தபடி, இறுதிநேர முயற்சிகளில் ஈடுபடுத்தியதையும் பசுமையான நினைவுகளாக மனதில் பதித்துள்ளேன். இவ்வளவும் நடக்கும் தேர்தல் காலங்களில் ஒருதடவையேனும் எமது தந்தையாரைக் வீட்டிலோ வெளியிலோ கண்டிருக்க மாட்டேன். ஒருதடவை தேர்தல் கூட்டமொன்றில் எமது தந்தை பேசப் போவதாக, அவரது இளைய சகோதரி, எனது மூத்த சகோதரிகளின் வயதொத்தவர், என்னையும் அழைத்துக் கொண்டு கூட்டம் நடந்த இடமான கலட்டி அம்மன் கோவிலடிக்கு அழைத்துச் சென்றார். நாம் வந்ததும் அவருக்குத் தெரிந்திராது. வேறெவர்க்கும் தெரிந்திருக்க

வேண்டிய அவசியமும் இருக்கவில்லை. கூட்டத்தின் பேச்சு புரிய முயற்சித்தாலும் எள்ளளவேனும் புரியாத வயது. கூட்டம் முடியும் தருணத்தில் மழை பெய்து, கும்மிருட்டாகி, கூட்டம் கலைந்து எல்லோரும் அங்குமிங்கும் ஓட, வீடு வந்து சேர்ந்தால் போதும் என்றளவில், வேறெவரினதும் துணையுமில்லாமல் பயந்து நடுங்கியபடியே ஓட்டமும் நடையுமாக மழையில் நனைந்தபடியே நாச்சிமார் கோவிலடி வீட்டிற்கு வந்து சேர்ந்தும் ஒரு தேர்தல் அனுபவம்தான்.

தேர்தல் என்பது ஒரு சாதாரண விஷயமல்ல, குறிப்பாக வாழ்வில் ஒடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும் நொடித்துப் போய் வாழும் மக்களுக்காகத் தேர்தலில் நிற்பது என்பது அதிஅசாதாரண தீரச்செயலென்பதும் இப்போது நன்கு புரிகிறது. இதன் நடுவே நாம் குடும்பமாக சில வசதியீனங்களைச் சந்தித்திருந்தாலும், வாழ்க்கையில் பல கற்பித்தல்களையும், தொடர்புகளையும், அனுபவங்களையும் பெற்றிருக்கிறோம் என்பதுதான் உண்மை. இவ்வாறான ஒரு பெருமைக்குரிய மிகவும் அரிதான அனுபவத்தை எமது தந்தை எமக்குப் பெற்றுத் தந்ததற்கு நாம் அவருக்கும் அவர் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கடசிக்கும் நன்றி கூறவேண்டும். தேர்தலில் வெற்றி பெற்ற வேளை நான் நினைவு தெரிந்தவளாக இல்லாமல், குழந்தையாக இருந்துவிட்டேன் என்பது மிகவும் மனச்சங்கடமான விடயமாக இன்றும் உள்ளது.

காண்பதற்கு அரிதானவர்

தேர்தல் அல்லாத மறுவேளைகளிலும் அவர் தனது பொதுப்பணிகள் முடித்து வீடுதிரும்பும் வேளை தூங்கிவிடுவோம். சிலவேளைகளில் பஸ் தொழிலாளர்களின் கடைசி பஸ் டியூட்டியும் முடிந்து அவர்களுக்கான கடிதம் எழுத வேண்டியது போன்ற வேலைகள் செய்து சைக்களில் வீடு வந்துசேர நடுநிசியாகிவிடும். அடுத்த நாட்காலை நாம் பாடசாலைக்கு அவசர அவசரமாகத் தயாராகிச் செல்லும் வேளையில் அவரிடம் விசேட வகுப்பிற்கென மாணவர் வந்து, அவர்களைக் கவனித்துக் கொண்டிருப்பார். விடுமுறை நாட்களிலும் பல கட்சித் தோழர்களும், வேறு பலரும் தமது தேவையையொட்டி வந்தபடியே இருப்பர். பல காரியங்களும் செய்து களைத்துப் போவதால் இடையிடையே கோழித்தூக்கம் போடுவார். அதற்குள் வேறு யாராவது சந்திக்க வந்துவிட்டால், அவரைத் தூக்கத்திலிருந்து எழுப்பவேண்டிய பொறுப்பு ஏற்படும். அவதானமாக மிகவும் மெல்லிய குரலில், ''ஐயா! ஐயா!" என்று அழைத்து எழுப்பும் போது களையிலும் அசதியிலும் பதறித் துடித்து எழுந்தாலும், வந்தவர்களிடம் நிதானமாகவே நடந்து எந்தவிதத்திலும் மனங்கோணாது வந்த காரியத்தை முடித்துக் கொடுப்பார். மீதிநாளை கூட்டங்களுக்கு சென்று முடித்துவிடுவார். சிலவார இறுதி நாட்களில் கட்சி அலுவலாக கொழும்புக்கும் செல்வது வழக்கம். இவ்வாறாக நாம் விரும்பியோ விரும்பாமலோ அவரிடமிருந்து அன்னியமாகவே வாழ்ந்திருந்தோம்.

ஆரம்ப காலங்களில், பாடசாலையில் படிக்கும்போது அவரை அணுகவேண்டிய அத்தியாவசிய தேவையென்பது Report Card இல் கையெழுத்து வாங்குவது என்பது மட்டுமே. காலை மற்றவர்களுக்கு டியூஷன் கொடுப்பதன் நடுவே, மிகவேகமாக ஆனால் அவதானமாகப் பார்த்துக் கையெழுத்துடன், கடுமையில்லாமல் கூறும் அன்பான ஓரிரு வார்த்தைகளே குறைவாகப் புள்ளிகள் எடுத்த பாடங்களில் அடுத்த முறை புள்ளிகளை அதிகரிக்க வைத்துவிடும். அதைவிட எப்போதாவது பாடசாலையில் நோய்த்தடுப்பு ஊசி போடுவதற்கு பெற்றோரின் அனுமதி அல்லது ஆட்சேபணைக் கையெழுத்துப் பெறுதல் அவசியம் வரும்போது, போடப்படும் ஊசியின் நோவை எண்ணியபடி, அதைக் கொடுக்கும் போது ஆட்சேபணை தெரிவிக்க மாட்டாரா என்ற அங்கலாய்ப்புடன் பார்த்தாலும், ''ஊசி போட்டால் நல்லதுதானே, ஆச்சி?'' என்று அந்த அங்கலாய்ப்பைக் கவனியாதது போல மடக்கி அனுப்பிவிடுவார். இது பாடசாலை நாட்களில் மட்டுமல்ல, இன்றும் அதிக நோய்வாய்ப்படாமல் எம்மைக் காப்பாற்றி வருகிறது. எமது தாயார் சுகவீனமுற்ற வேளையில் மட்டுமே பாடசாலைக் கட்டணம் கட்டுதல், புத்தகம், கொப்பி வாங்குதல் போன்றவை அவரை நாட வேண்டிய மேலதிக தேவைகளாயின.

பெண்ணியவாதத்தை செயற்படுத்தியவர்

எமது தந்தை அதிகம் எம்முடன் பேச்சுக் கொடுக்காதபடி நாம் பார்த்துக் கொண்டாலும், எமது அரசியல் ஞானம் வெகுமட்டமாக இருந்தும், அவர் இடையிடையே ஏதாவது அந்நேர அரசியல் செய்திகளை வைத்தோ அல்லது பாடசாலைச் செய்திகளை வைத்தோ எம்முடன் தானே வலிந்து வந்து பேச்சுக் கொடுப்பார்.

காலஞ்சென்ற சிறிமாவோ பண்டாரநாயக்க உலகின் முதற்பெண் பிரதமராக வந்தது பற்றி, தனது அரசியல் நிலைப்பாடு முற்றிலும் வேறுபட்ட நிலையிலும், ''உங்கள் பெண்கள் பாடசாலையில் பெருமையாகப் பேசிக்கொண்டீர்களா?'' எனக் கேட்டார். அவ்வாறு எமது பாடசாலையில் முற்போக்காக அதிகம் சிந்திக்கவுமில்லை, பேசவுமில்லை என அறிந்த போது மிகவும் விரக்தியடைந்தார்.

'இன்றைய சீனா' சஞ்சிகையில் சீனப்பெண்கள் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் உயர் அழுத்த (High Voltage) மின்கம்பிகளில் வேலை செய்வது பற்றி கட்டுரையைக் காட்டி வாசித்துப் பார்க்கச் சொல்வார்.

இதையெல்லாம் செய்தும்கூட எந்தவேளையிலும் பெண்களாக நாம் எப்படியிருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்துமில்லை, கற்பித்ததுமில்லை. அதைவிட எம்மிடமிருந்து தனது எதிர்பார்ப்புகள் என்னவென்று கூறியதுமில்லை. இந்த அதிகாரப் போக்கல்லாத, எமது ஓரிரு விடயங்களில் மட்டுமே தனது கருத்துக்களையும், முடிவையும் செயற்படுத்தி, மீதி விடயங்களிலும் வீட்டு

நிர்வாகத்திலும் முழு அதிகாரத்தையும் எமது தாயாருக்கு வழங்கியிருந்தது, பெண்களுக்கு, குறிப்பாகத் தனது மனைவிக்கு குடும்பத்திலும் சமூகத்திலும் அவர் கொடுத்திருக்கும் உயர்வான இடத்தையும், தன்மையையும் காட்டியது. இதுவே பெண்களாயினும் எமது தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்க்கையில் முன்னேற ஏதுவாகவிருந்தது. அக்காலங்களில் ஏனைய சில பாடசாலை நண்பிகள் வீடுகளிலும், அயல்வீடுகளிலும் தந்தையாரின் ஆணதிகாரம் அவ்வீட்டுப்பெண்கள் உண்ணும் உணவிலிருந்து உடுக்கும் உடைவரை கொடிகட்டிப் பறப்பது ஒரு வினோதமாகவே எமக்கிருந்தது.

எமது வீட்டின் பெண்கள் நிர்வாகம் பற்றி அவ்வேளை அவரிடம் பேசியிருந்தால் தனது அரசியல் கொள்கை விபரங்களைக் கூறியிருப்பார் என்பது ஐயம். ஆனால் நிச்சயமாக பெண்களின் எண்ணிக்கையே எப்போதும் அதிகமாகவிருந்த எமது குடும்பக் கொம்யூன் வாழ்க்கையில், ''அல்லி ராஜ்யமே பொருத்தமானது, தான் சொல்லி எதுவுமே ஆகாது" என்று தமாஷாகக் கூறிச் சென்றிருப்பார். இருப்பினும் எனது தாயார் இன்னும் கூடிய அளவில் அரசியல் விடயங்களிலும், வேறு சமூக முன்னேற்ற விடயங்களிலும் ஈடுபட்டிருக்க வாய்ப்பிருந்திருந்தால் எங்களுக்கு அரசியல் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்குமோ என்று இன்று சிந்தித்துப் பார்க்கிறேன். ஆனால் எமது குடும்ப நிலை, பொருளாதார நிலை, அன்றைய குறிப்பாக வடபகுதி சமூகக் கட்டுக்கோப்புகள் அதற்கு இடம் கொடுத்திருக்கச் சாத்தியமில்லை என்றே நம்புகிறேன். உண்மையைக் கூறினால் நாமும் எமது தந்தையின் பெருந்தன்மையை எமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி அன்றைய சராசரி மக்களின் விருப்பு வெறுப்புகளுடன் தான் வாழ்ந்திருக்கிறோம். அதற்கு எமது சுற்றுப்புறச் சூழலும் ஒரு காரணியாக அமைந்திருந்தது எனலாம்.

இருப்பினும் ஏற்றுக் கொள்ளமுடியாதவற்றைச் செய்யும் போதும், மிகப் பொருத்தமில்லாத முறையில் நடந்து கொள்ளும் போதும் அவ்வப்போது சிக்னல் கிடைக்கத் தவறவில்லை. நிச்சயமாக எமது மனம் நோகாத முறையில் கூறித்திருத்தியுள்ளார். உதாரணமாக காலையில் எழுந்ததும் தலை சீவத்தவறினால் சீவும்படி கூறியும், பாடசாலை யூனிபோ.ம் அல்லது வேறு உடை நாம் வளர்ந்து கட்டையாகிய பின்பும் அணிந்து சென்றால், ''சட்டையின் மடிப்பைக் கொஞ்சம் அவிட்டுவிட முடியாதா, ஆச்சி?" என்று கேட்டும் இருக்கிறார். செய்தி எமக்குக் கிடைத்துவிடும். அவர் விடும் பாணங்களும் தன்நிலையுணர்ந்து மிக அவதானமாகவே இருக்கும். வேறு சட்டை போடச்சொன்னால், ''இந்த ஒரு சட்டைதான் இருக்கிறது" என எதிர்ப்பதில் வராதவண்ணம் பார்த்துக் கொண்டார் போலும்.

ஒருதடவை, நான் சிறுபிள்ளையாக இருக்கும்போது, எமது வீட்டிற்கு வேலியடைக்க வருபவர் தனது மகள் கணவனால் அன்றாடம் இம்சைப் படுத்தப்படுவதாக எமது தந்தையிடம் முறையீடு செய்ததைக் கேட்டேன். ஒருசில நாட்களில் நாச்சிமார்கோவில் றோட் வீட்டு விறாந்தையும், முன் முற்றமும்,

எமது தந்தை, அந்நாள் விதானையார் சகிதம் நீதிமன்றமாகி அந்த அபலைப் பெண்ணின் துயர்துடைக்க முனைந்ததையும் கண்டேன். அந்நாளில் ஏனையோருக்கு அது வினோதமாகவும், ஏன் ஏளனமாகவும் கூட இருந்திருக்கலாம். ஆனால் இன்று, குறிப்பாக வெளிநாடுகளில் வாழ்பவர், மிகவும் காலங்கடந்த நிலையில் அந்த இம்சைகளைத் தடுக்க எடுக்கும் முயற்சிகளுடனும், அதற்கான பரிகாரங்களுடனும் ஒப்பிடும்போது அக்காலகட்டத்தில் அந்த முயற்சி ஒரு சமூகப் புரட்சியேயாகும்.

அது மாத்திரமல்ல அந்நாட்களில் விதவைத் திருமணத்தை ஆதரித்த வெகுசிலரில் எமது தந்தையும் ஒருவரே என்பதும் கேட்டறிந்தது.

சிந்தனையை ஊட்டியவர்

ஒருதடவை அந்நாள் யூ.என்.பி. பிரதமர் காலஞ்சென்ற டட்லி சேனநாயக்க யாழ் விஜயம் செய்த போது, வேம்படிப் பாடசாலையும் வரவேற்பளித்தது. சகல மாணவர்களும் பங்கு கொண்டோம். அவரது ஊர்வலம் தாமதமாகியதால் இளஞ்சிறார்களாகிய நாம் வேகும் வெயிலில் நிற்க வேண்டியதாயிற்று. அதைப்பற்றியும் அப்படியேன் செய்விக்கவேண்டும் என்று நயமாகவே கேட்டார். நாங்கள் மறுத்திருக்க வேண்டுமென்றோ, மறுத்திருக்க முடியுமென்றோ அல்லது பாடசாலைக்கு போகாமல் விட்டிருக்கலாம்தானே என்றோ கூறவில்லை. எதையும் நாமே சிந்தித்து சரியானதைச் செய்யட்டும் என்று விட்டுவிட்டார் போலும்.

இடையிடையே தனது கட்சிப் பத்திரிகைகளில், எனக்குத் தெரிந்து 'தொழிலாளி' அல்லது அக்கால ஆங்கிலப் பத்திரிகை, சில கட்டுரைகளை தனக்கு வாசித்துவிடும்படி கேட்பார். ஒருவேளை அதை அவ்வாறு வாசிக்கப் பண்ணுவதால் அவரது விஷயங்களில் அக்கறையும் ஆர்வமும் ஏற்படுத்த முயற்சித்தாரோ தெரியவில்லை. நாமோ சராசரி கீழ்மத்தியதர வகுப்பினராகவே வாழ்ந்து சிந்தனைகளையும் அவ்வாறே வளர்த்துக் கொண்டோம் என்பதும், எவ்வாறு கல்வியைப் பெற்று அதன் மூலம் நல்ல சம்பாத்தியம் பெற்று மேல்மத்தியதர வகுப்பினராக வரவேண்டும் என்ற அபிலாஷையுடன் செயற்பட்டோம் என்பதுமே உண்மை. பணக்காரராகாது மேல்மத்தியதர வகுப்பினருடன் மட்டுப்படுத்திக் கொண்டதற்குக் காரணம் நாம் கல்வி கற்ற பாடசாலையில் அவ்வாறானோர் அதிகமாகவிருந்தது முதன்மையானது. இரண்டாவது எமது உறவினர் மத்தியில் எம்மைவிட பொருளாதாரத்தில் குன்றியவர்கள் பலர் இருந்தனர். ஆகவே அவர்களுக்கும் கொடுத்துதவி மிஞ்சுவதில் அந்தமட்டத்தைப் பிடிக்கவே அதிகப் பிரயத்தனம் எடுக்கவேண்டும் என்பதும் புரிந்ததால் போட்ட மனக்கணக்கேயாகும். அந்தவகையில் மற்றவருக்கும் கொடுத்துதவி வாழவேண்டும் என்று சிந்திக்கும் மனப்பக்குவத்தை தந்தையார் மட்டுமல்ல, எமது தாயாரும் ஏற்படுத்தித் தந்திருக்கிறார். இருபத்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்புதான்



வேம்படி மகளிர் கல்லூரி இராப்போசன
விருந்தில் உரையாற்றும் போது

தந்தையாருக்கு ஒரு நினைவு மலர் முயற்சியில் இறங்க முடிந்ததும் இன்னும் நாம் போட்ட கணக்கை எட்ட முடியாதிருப்பதுதான். ஆனால் இப்போது அந்த அங்கலாய்ப்பு இல்லையென்றே சொல்லலாம்.

எக்கால கட்டத்திலும் எமது தந்தையின் ஈடுபாடுகள் என்ன, எமது வீட்டிற்கு வந்து செல்லும் சில கட்சித்தோழர்களைவிட வேறு எவ்வாறான மக்களைச் சந்திக்கிறார், எங்கெல்லாம் அச்சந்திப்புகள் நடக்கின்றன என்பனவெல்லாம் எனக்குத் தெரியாத விடயங்களாகவே இருந்தன. ஆகவே எமது பொதுவுடமை செயற்பாடுகளும், திட்டங்களும் எமது வீட்டாருடனும், உறவினருடனும், அயலவருடனும், வீட்டிற்கு வந்து போகும் வேலையாட்கள் போன்றோருடனும் மட்டுமே இருந்தன.

தமிழரில் பெரும்பாலோர் சிங்கள எதிர்க்கோஷம் போட்ட வேளையில், 'பொன்னம்பெருமா' எனும் அதிபட்டங்கள் பெற்ற கல்விமானும் விஞ்ஞானியுமானவரைப் பற்றி மிகவும் பெருமையாகக் கூறிவிளக்கினார். முதலில் 'பொன்னம்பெருமா' என்பது தமிழ்ப் பெயரா? சிங்களப் பெயரா? என்பதற்கு எம்மிடம் பதிலை எதிர்பார்த்து அவர் சிங்களவர்தான் என விளக்கம் தந்து தனது வழமையான பாணியில், ''பொன்னம்பெருமா இலங்கைக்குப் 'பென்னாம் பெருமை' தேடித் தந்திருக்கிறார்" என்ற போது, எமது தந்தை கல்விக்கு எவ்வளவு முதலிடம் கொடுத்தார் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இவ்வாறான சில குறுகிய சம்பாஷணைகளே கல்வியில் நாட்டம் செலுத்தவும் அதில் கண்ணும் கருத்துமாயிருக்கவும், எம்மிடமிருந்து அவரது எதிர்பார்ப்புகளில் முக்கியமானது என்ன என்பதையும் புரிய வைத்தன.

கல்விக்குத் துணை நின்றவர்

எமது தந்தையார் தனது அரசியல் கருத்துக்கள் மூலமும் கட்டுரைகள் வாயிலாகவும் கல்வி அனைவர்க்கும் கிடைக்காத ஒரு அருமையான விடயமாக இருந்தது என்று கூறியதை எனது சிறிய வயதில் முற்று முழுதாக உணர்ந்து கொள்ளவில்லை. அதற்குக் காரணம் கற்றவர், கற்பவர் இருவராலும் சூழ நான் வாழ எமது பெற்றோர் வழியமைத்துத் தந்தது என்று சொல்வேன். சிலர் தாமாகவே கல்வியை விரும்பாமல் ஒதுக்கிவிட்டார்கள் என்பதுதான் கூடியளவு எனது அனுபவத்தில் கண்டது. இருந்த போதும் நாம் குடியிருந்த சூழலில் பல தொழில் பார்ப்பவர்களும், பலதரப்பட்ட வருமானம் உள்ளவர்களும் வாழ்ந்தார்கள். எமது குடும்பம் பணக்காரக் குடும்பம் அல்ல. ஆனால் அந்தச் சுற்றாடலில் நாம் நிச்சயமாக ஏழைகளே அல்ல. எமது கல்வி முன்னேற்றத்திற்கு அதுதான் முக்கிய காரணம் என்பதை இன்று நன்கு புரிந்து கொண்டேன்.

எனது அந்நாள் சிறுவயது பக்கத்து வீட்டு நெருங்கிய சினேகிதி, தனது தாய் தந்தையரை விட்டு வந்து தனது ஆச்சியுடன் வளர்ந்தார். மாட்டில் பாலெடுத்தும், அன்றாடம் மாவிடித்து அடுத்தநாள் அப்பம், இடியப்பம் செய்தும் விற்றால்தான் வாழ்க்கையோடும். பாடசாலைக்குச் செல்வதுடன் தனது ஆச்சிக்கு உதவி ஒத்தாசையாக அவ்வேலைகளில் நேரத்தைக் கழிப்பார். அவர்கள் வீட்டிலேயே வாங்கிச் சாப்பாடு கட்டிக் கொண்டு நான் பாடசாலைக்குப் போகும் போது, எனது சினேகிதி ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்று கற்கவில்லையே என்ற கவலை எனக்கிருந்தது. அவருக்கு சிலவேளைகளில் பாடசாலைக்கான வீட்டுவேலைகளில் உதவியாக இருந்ததைவிட, வேறு எவ்வாறு ஈடுசெய்வது என்பது எனக்குத் தெரியவில்லை. அதற்கெல்லாம் விடை காணத்தான் எமது தந்தையார் இடையறாது உழைத்தார் என்பது அவ்வயதில் எனக்குப் புரியவில்லை. ஏன் அவர்களுக்கும் அவர்களைப் போன்ற பலருக்கும் அது புரியவில்லை என்பதைத் தேர்தல் வேளைகளில் எனது தந்தைக்குப் புரிய வைத்திருக்கிறார்கள் என்று இப்போது உணருகிறேன்.

ஒருதடவை முதலாம் வகுப்பில் என்னுடன் படித்த பஞ்சமர் வகுப்பைச் சேர்ந்த சிறுமிக்கு நான் கணக்கு சொல்லிக் கொடுத்து அவர் சரியெடுத்ததால், நான் வாத்தியரிடம் பிரம்பினால் உள்ளங்கையில் நல்ல அடி வாங்கினேன். பிழையாகச் சொல்லிக் கொடுத்திருந்தால் அடித்திருக்க மாட்டார் என்று இப்போது புரிகிறது. எனது காலத்திலேயே, சிறுமியாக இருந்தபோது இப்படியொரு அனுபவம் என்றால், எமது தந்தை சமூக நலனுக்காகப் போராடிய போது, சமூகத்தில் கண்டது, கேட்டது, அனுபவித்தது எவ்வளவாக இருக்குமென்பதைப் புரிந்துகொள்ள நீண்டநாட்கள் எடுக்கவில்லை. பல கட்டுரைகளும் அதை வெளிப்படுத்தும் என்று நம்புகிறேன். இவைபோன்ற சமூக ஒடுக்குதல்களை எதிர்த்து அவரெடுத்த முயற்சிகள், செயற்பாடுகள் விபரமாகத் தெரியாவிட்டாலும் சமூக விழிப்புணர்ச்சியை ஓரளவு எமக்கு ஏற்படுத்தியதெனலாம்.

அன்றாட சீவியத்திற்கும், நீண்டகால முன்னேற்றத்திற்கான கல்விக்கும் பொருள்வளம் சிறிதேனும் வேண்டுமென்பதை நன்குணர்ந்தவர் எமது தந்தை. அதேவேளை சமூகநிலைமையும் அரசியல்நிலைமையும் அதை எல்லோருக்கும் கொடுப்பதை மறுப்பதையும் நன்கறிந்தவர். அதற்கான மாற்றத்தை ஏற்படுத்துவது சுலபமுமல்ல, உடனடியாகவும் நடைபெறாது, அதுவரை பொறுத்திருக்கவும் முடியாது என்பதையும் நன்கு புரிந்தவர். ஆகவேதான் ''தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியார் பாடியது போல, கார்த்திகேசன்,

''தனியொருவனுக்கு வாழ்வில்லையெனிலும்,
மாணவனொருவனுக்கு கல்வியில்லையெனிலும்
என் பொக்கற்றை வழித்திடுவேன்"

என்று முடிந்தவரை தன்னாலானவர்க்கு வாழவும் கல்வி பெறவும் உதவினார். அவர் ஒவ்வொரு தடவையும் ஒருவருக்காகத் தன் பையில் கைவைக்கும் போதும், அவ்வொருவர் மனதில் இடம் பிடித்தார்.

வளமிகு நிறைந்தவர்

அவர் தன் பொருள்வளத்தை மட்டும் பகிர்ந்து கொள்ளவில்லை. அதற்கு மேலாக தனது அறிவுவளத்தைப் பலருடனும் பகிர்ந்து கொண்டார். தனது சொல்வளத்தை (பேச்சாற்றல்), கைவளத்தை (எழுத்தாற்றல்) மேலும் பலருடன் பகிர்ந்து கொண்டு, அதன் மூலம் பல அறிவாளிகளை, கல்விமான்களை, உத்தியோகத்தரை, பேச்சாளரை, எழுத்தாளரை உருவாக்கி அவர்கள் மனதில் இடம் பிடித்தார். தன் மேல் மதிப்பும் மரியாதையும், தனது கொள்கைமேல் நம்பிக்கையும் கொண்ட தானே உருவாக்கிய பலர் மூலம், தனது செல்வாக்கையும் அவர்களது திறனையும் உதவியையும் பயன்படுத்தி மேலும் அவ்வகையான வாரிசுக்களை தொடர்ந்தும் உருவாக்கி அவ்வாரிசுக்கள் மனதிலும் இடம் பிடித்தார்.

இவ்வாறு தன்னிடமிருந்த சகலவளங்களையும் பகிர்ந்து சமூகத்தில் நல்லதொரு மனிதவளத்தைப் பெருக்கினார் என்றால் அது மிகையாகாது. இன்று இந்த மனிதவளம் பல்கிப் பெருகி ஆறாகப் பெருக்கெடுத்து இலங்கையின் பல பாகங்களையும் உலகின் பல தேசங்களையும் சென்றடைந்திருப்பதை யாவரும் அறிவர். இந்த மனிதவளத்தின் முதன்மையானவர்கள் சிலர் தமது கடமையை முடித்து ஏற்கனவே இந்த உலகிலிருந்து நிரந்தர ஓய்வு பெற்றுவிட்டார்களென்பது மனவருத்தத்திற்கு உரியது.

இத்துணை பெருமனிதர், வளமிக்கவர் எவ்வாறு ஏழையாக முடியும். பொக்கற் நிறைந்திருக்கவில்லை என்ற காரணத்தினால் ஏழையாகிவிட முடியாது. பணநெருக்கடியில் கடன்பட்டவரெல்லாம் ஏழைகளென்றால், Credit Card இலும், Bank Loan இலும், Mortgage இலும், எவற்றிற்குமே கடனெடுத்து வாழ்க்கையை நடாத்தப் பழக்கிக் கொடுக்கும் முதலாளித்துவ நாடுகளில் வாழும் அனைவரும் ஏழைகளே!

கஷ்டமும் நஷ்டமும் ஒவ்வொருவரும் வாழ்க்கையை சீர்தூக்கிப் பார்க்கும் தன்மையிலேதான் உள்ளது. எனது தந்தை எனது சகோதரிக்கு கூறும் போது சிறுவயதில் கேட்ட பாடம். எம்மைவிட வசதிகுறைந்தவர்களையும், எமக்குக் கிடைத்த வாய்ப்புகள் கிடைக்காதவரையும் பார்த்து அவரது கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டால், நாம் அதிகம் கஷ்டத்திலும் இல்லை, நஷ்டத்திலும் இல்லை எனப்புரிந்து கொள்ளலாம் என்றார். உண்மையும் அதுவே. அதை மனதளவில் ஏற்றுக் கொள்வதுதான் எமக்கிருந்த கஷ்டம். அவருக்கு அன்றாடம் அப்பேற்பட்டவர்களைச் சந்திக்க, அவர்களது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க

அவசியம் இருந்தது. அப்படிப்பட்ட நெருக்கடியான சூழ்நிலைக்கு எம்மைத் தள்ளாமலும், அப்படிப்பட்ட அவசியமும் ஏற்படாமல் நாம் வாழ வழியமைத்துத் தந்தவர் நிச்சயமாக எம்மைக் கஷ்டத்தில் ஆழ்த்தவில்லை.

பெருமை தேடித் தந்தவர்

எமது வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும், அவர் இறந்த பின்பும் கூட, தனது ஆற்றலாலும், அரும்பெரும் சேவையாலும் பெற்ற பெருமையால், எமக்கு பெருமையும் தேடித் தந்து உதவியாகவும், அனுசரணையாகவும் இருந்திருக்கிறார் என்பதை பின்வரும் உதாரணத்திற்கான ஒருசில சம்பவங்கள் எடுத்துக் கூறும்:

பேச்சாற்றல் தந்த சிறப்பு:

இந்துக்கல்லூரியில் ஒரு நிகழ்ச்சியென்றால் பேச்சுகள் எழுதிக் கொள்ளவும் பயிற்சி பெறவும் மாணவர் வீடுவரை தேடிவந்து எமது தந்தையின் உதவியைப் பெற்றுச் செல்வார்கள். அவர்களது பேச்சுத்திறனையும், பேச்சுக் கற்றுக் கொடுத்தும், அதே நிகழ்ச்சிகளில் சிலசமயம் பேசும் எமது தந்தையின் அதிவிசேட சொற்பொழிவுத் திறனைப் பார்க்கவும் கேட்கவும் எமக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்காத போதிலும், அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புப் பெற்ற எமது வேம்படிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு, குறிப்பாக அதிபருக்கு பலதடவை கிடைத்தன. இதனால் ஒருதடவை எனது மூத்த சகோதரியின் வகுப்பு இராப்போசன விருந்து வைபவத்திற்கு அவரை ஒரு சிறப்புப் பேச்சாளராக அழைத்திருந்தது எமக்கு மிகுந்த பெருமையைத் தேடித் தந்தது. கடந்த காலங்களில் வேறுபல மாணவர்களின் பெற்றோர், நல்ல பதவியில் இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே வைபவங்களுக்குத் தலைமை தாங்க அழைக்கப்பட்டார்கள். எமது தந்தைக்கு கிடைத்த கௌரவம் வித்தியாசமானதும், வேறெந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் அவரது திறமையை மெச்சியும், அதை மற்றவர்களும் கேட்க வேண்டும், ரசிக்க வேண்டும், பழக வேண்டும் என, என்றுமே ஒரு கம்யூனிஸ்டை பார்க்க வேண்டும், கேட்க வேண்டும் என்ற அவா கொண்டிராத மாணவிகள் மத்தியில் ஒழுங்குபடுத்தப்பட்டதும் அவரது பிள்ளைகளான எமக்கு மிகவும் பெருமை தேடித் தந்த விடயமாகும்.

தன்னம்பிக்கை ஊட்டலில் தந்த சிறப்பு:

இதன் பிறகு ஒருதடவை வழமையாக வேம்படிப் பாடசாலையில் ஆசிரியர்கள் பொறுப்பாகவிருந்த ஒரு வேலையை எமது தந்தையின் மேல் சாய்த்துவிட்டார் எமது காலஞ்சென்ற அந்நாள் அதிபர் செல்வி. தம்பையா. அது என்னவென்றால் மாணவிகள் விளையாட்டுத் தலைவியான என்னை விளையாட்டுப் போட்டியொன்றிற்கான பிரதம விருந்தினருக்கும், ஏனையோருக்கும் நன்றி கூறும் பேச்சை எமது தந்தையைக் கொண்டு எழுதுவித்து தயார் பண்ணும்படி கூறிவிட்டார். நான் ஏற்கனவே கூறியது போல் நாம் அவரைச் சந்திப்பதே அபூர்வம். அதில்

இவவாறான பொறுப்பை அவர் மூலம் செய்வித்து எடுப்பது எவ்வாறு சாத்தியமென எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் அவரைக் காணக் கிடைத்த போது கேட்டேன், அதிலும் மிஸ்.தம்பையா சொன்னாவென்று அழுத்திச் சொல்லி, எழுதித் தருகிறேன் என்றார். எப்போது என்று சொல்லவில்லை. விளையாட்டுப் போட்டி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது. பேச்சு கைக்கு வரவில்லை. மிஸ்.தம்பையா கேட்ட பொழுது எனது வீட்டின் இக்கட்டான நிலைமையை சொல்ல முடியாது இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தேன். அவரும் கேட்டுக் கேட்டு அலுத்து, எதையாவது பேசும் என்று சொல்லிக் கைவிட்டு விட்டார். எந்நிலை அதோகதிதான் என்றிருந்தேன். வழமையாக நாம் கேட்டு நடைபெறாத பட்சத்தில் தாயாரிடம் சென்று முறையிட்டு, அவர் மூலம் சிறிது துரிதகதியில் காரியங்களைப் பெறுவோம். அவ்வேளை அந்த வாய்ப்பும் இருக்கவில்லையென நினைக்கிறேன். நானாகவே நிர்ப்பந்தித்து குறிப்பிட்ட நாளுக்கு ஒரிரு நாட்கள் முன்பாக, நானிருக்கும் பொழுதே பாடசாலைக்கு செல்வதற்கு முன்பாக ஒருசில நிமிடங்களில் அவர் எழுதித் தந்த பேச்சினைப் பெற்றுக் கொண்டேன். ஒரு தடவை வாசித்துக் காட்டினார். என்னைக் கொண்டு ஒருதடவை வாசிப்பித்தார். அந்தக் குறுகியகால எல்லைக்குள் எமது PTIக்கு மாத்திரமே அதை ஒருதடவை பேசிக் காட்ட முடிந்தது. நாளும் வந்தது. நேரமும் வந்தது. பேசத் தொடங்கினேன், முடித்தேன், அவ்வளவுதான் எனக்குத் தெரியும். மிஸ்.தம்பையா, எமது PTI, மிஸ்.தர்மலிங்கம் ஆகியோரின் பாராட்டையும் பெற்றுக் கொண்டேன்.

பாராட்டு யாருக்குப் போய்ச்சேர வேண்டும் என்பது மட்டுமல்ல, சில நிமிடங்களே எழுத எடுத்த அந்தப் பேச்சை ஏன் முன்கூட்டியே எழுதித் தரவில்லை என்பதும் இன்றும் புரியாததாகவே இருக்கிறது. அவர் தன் மீதும், தனது திறமை மீதும் நம்பிக்கை கொண்டவர். அதன் பிரகாரம் எப்போதும் அவசரப்படாமல், பதட்டப்படாமல், நிதானமாகவே காரியங்களைச் செய்து முடிப்பார். அதேபோல் எம்மையும் பயிற்றுவிக்க முயன்றாரா அல்லது தான் எழுதித் தரும் பேச்சிலே எப்போதும் ஒரு Surprise ஐ வைத்து அதை முதலிலேயே தெரியப்படுத்தக் கூடாது என்று விரும்பினாரா என்று தெரியவில்லை. கேட்டறியும் நிலையிலும் நாங்களிருக்கவில்லை. முதலாவது காரணமாகத்தான் இருக்கமுடியும் என்பது எனது நம்பிக்கை. எதுவாக இருப்பினும் அன்று அவர் மூலம் பாராட்டும் பெருமையும் எனக்குக் கிடைத்தது.

கற்பித்தவர் எடுத்து வைத்த அடி தந்த சிறப்பு:

எனக்கு கட்டுப்பத்த பல்கலைக்கழக அனுமதி கிடைத்த போது, எமது அயலவரும் குடும்ப நண்பருமானவருமானவரின் மகளுக்கும் அங்கேயே அனுமதி கிடைத்தது. முதல்தடவை பதிவு செவ்வதற்காக அவரது மகள், ரேவதியை அழைத்துச் செல்லும் போது நானும் கூடச்சென்றேன். Standardization பிறகு ஒரு புதிய அணுகுமுறையில் பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் பதிவு அதிக சலசலப்பில்லாமல் நடந்தது. அவருடன் தங்க இடமும் ஒழுங்குபணணி

வீடு வந்து சேர்ந்தாகிவிட்டது. மறுபடி பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் போது பிரயாணம் செய்ய வேண்டிய வேளை ரேவதிக்கு சுகயீனம் காரணமாக உடனே வரமுடியவில்லை. நான் தனியாக பிரயாணம் செய்ய வேண்டிய நிலை. அனைவரும் அறிந்தது போல், ராகிங் என்ற பெயரில் ஆட்கொல்லி விளையாட்டுக் காட்டும் காலமது. தனியப் போவது என்றதும் வயிற்றைக் கலக்கியது. அதை வெளிப்படையாகச் சொல்லாமல், போய்வர வழிப்பரிச்சயம் போதாது, ஒருவகையில் உண்மைதான், எமது தந்தையை அழைத்துச் செல்லும்படி கேட்டேன். தயக்கத்துடன் இசைந்தார். இங்கும் மேற்படிப்பு படிக்க முன்வந்த நான், பயணத்தையும் தனியாகச் செய்ய வேண்டுமென எத்ர்பார்த்தாரோ தெரியாது அல்லது போதிய அவகாசம் அல்லாமல் மற்றைய வேலைகளை விட்டு விட்டு வரவேண்டுமென்று எண்ணினாரோ தெரியாது.

மிகக் குறுகியகால அவகாசத்தில் முடிவெடுத்து இரவு மெயில் ரெயினில் பிரயாணம் செய்து கொழும்பை அடைந்ததும், அதிகாலை நேரம் எந்தவித முன்னறிவிப்புமில்லாமல், அவரது நீண்டகால கட்சித் தோழரான நீர்வை பொன்னையன் வீட்டுக்கதவைச் சென்று தட்டினார். நான் தனியாகவென்றால் ஒழுங்கு ஏற்கனவே பண்ணிய இடத்திற்குச் சென்றிருக்கலாம். அவரும் மனைவியாரும் அவ்வேளையிலும் மலர்ந்த முகத்தோடு களையாற பலவசதிகளும் செய்து கொடுத்து, காலை உணவும் பரிமாறி எம்மை வழியனுப்பி வைத்தனர். அது அவர் கட்சிக்குள் சம்பாதித்திருந்த மதிப்பையும் மரியாதையையும் எடுத்துக்காட்டியது. இதுபோன்று எமது தந்தையும் எமது வீட்டிற்கு விருந்தினர்களை பொண்டு வந்திருக்கிறார். அது கட்சியினருக்குள்ள உடன்பாடு போலும்.

கட்டுப்பத்த றோட்டின் ஆரம்பத்தில் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட வீட்டில் எனது சூட்கேஸை வைத்து, அவரே சிங்களம், ஆங்கிலம் இரண்டிலும் பேசி விபரங்களைப் பெற்றபின் இருவரும் வளாகம் நோக்கி நடக்கலானோம். தந்தையுடன் வந்ததற்காக பின்பு ராகிங் அதிகப்படியாகக் கிடைக்குமோ என்ற அச்சம் வேறு. பதுங்கியபடியே அவருடன் செல்கிறேன். அவரோ நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையுமாக எந்தவித சலனமும் இல்லாமல் நடந்து வருகிறார். வளாகத்தினுள்ளே காலடியெடுத்து வைத்ததும், 'காத்தார்' என்ற குரல் கேட்டது. திடீரென்று அவரிடம் படித்த மாணவர்கள் அவருடன் வந்து கதைத்தனர். நான் இப்போது தனிய விடப்பட்டேன். நான் கூறவேண்டியதில்லை. எவரும் ராகிங் என்று இம்சைப்படுத்தவில்லை.

சிந்தனையால் வென்று தந்த சிறப்பு:

அதைத் தொடர்ந்த பின்னைய நாட்களிலும் அதிகம் வதைப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. நான் காத்தாரின் மகள் என்பது ஒருவகையிலாவது எனக்குப் பின்பும் பாதுகாப்பளித்திருக்குமென நிச்சயமாக நம்புகிறேன். அதைவிட சிலவருடங்கள் முன்புதான் அறிந்து கொண்டேன், அவர் அங்குள்ள வேறுசில

மாணவர்களுடன் பிற்பாடு ஒரு கபேக்குச் சென்று தனது மகளைப் படிக்க விட்டுச் செல்வதாகவும், கவனமாகப் பார்த்துவிடும்படியும் கூறினாராம். அதிலுள்ள விசேஷம் என்னவென்றால், அவர் கூறிவிட்டுச் சென்ற பையன்கள் மிகவும் குழப்படிகாரர்கள், மாணவர்கள் என்ற வரையறைக்குள் அடங்காதவர்கள் என்று மற்றவர்கள் கருதக்கூடியவர்கள். அவர்கள் எனக்கு அதைச் சொன்னதும், நான் பகிடியாகக் கூறியது என்னவென்றால், எனது ஐயா புத்திசாலி, உங்களிடம் அந்தப் பொறுப்பைத் தந்தால்தான் நீங்களும் கவனமாகப் பார்த்து, மற்றவர்களையும் இம்சைப்படுத்த விட்டிருக்கமாட்டீர்கள் என்று உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். சிந்தனையால் வென்ற விந்தையான தந்தை.

அருஞ்சேவையால் தந்த சிறப்பு:

இலங்கையில் பட்டம் பெற்றும் எனக்குப் பலகாலமாக நிரந்தர வேலை கிடைக்கவில்லை. அவருக்கும் விருப்பமிராது என்று தெரிந்ததால், எமது தந்தையிடம் சிபார்சு செய்துவிடும்படி கேட்காமல், நானே முயற்சிகள் செய்தேன். ஆனால் எனக்கு கிடைத்த நீர்வழங்கல் வடிகாலமைப்புத் திட்ட வேலைபற்றி முதலில் அவரே அறிந்து கொண்டார். தேர்ந்தெடுக்கப்பட்டவரின் பெயர்ப்பட்டியல் அலுவலகத்தில் முக்கிய பதவியில் இருந்தவருக்குப் போய்ச்சேர, அந்த நபர் எமது தந்தையின் முன்னாள் மாணவனாதலால் பெயரிலிருந்து ஊகித்து அவரைக் கொழும்பில் சந்தித்த போது தெரியப்படுத்த, எந்தவிதத்திலும் ஈடுபடாதிருந்த போதும், எனக்குக் கிடைத்த வேலைபற்றி அவருக்கே முதன்முதலாகத் தெரியவந்ததும், தெரியவந்த முறையும் எவ்வளவு தூரம் அவரது செவ்வாக்கு எமது வாழ்வில் ஒவ்வொருபடியிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

அவர் உயிர் வாழ்ந்தபோது மட்டுமல்ல, மறைந்த பின்பும் தனது பெருமையையும் செல்வாக்கையும் இன்னும் அதிகமாகவே பெற்றுத் தந்திருக்கிறார். நான் கனடா வந்த புதிதில் வான்கூவர் எனும் அதிகம் தமிழ் மக்கள் வாழாத இடத்தில் இருந்தேன். தொழில் வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், மிகவும் மனம் நொந்த நிலையில் ரொரன்டோ வந்து சோந்தேன். தொழில் வாய்ப்புகள் இருந்ததோ இல்லையோ, நான் கார்த்திகேசனின் மகள் என்ற முறையில் நீண்ட உதவிக்கரங்கள் ஏராளம். அதுவே எனது மனதைத் தென்படுத்தி எனது வாழ்வைச் சீர்செய்யவும், முன்னேற்றவும் உதவியது என்றால் அது மிகையாகாது.

மிகஅரிதான பரிசுகள் தந்தவர்

எமது வாழ்க்கையிலே தந்தையிடமிருந்து மிக அரிதான பரிசுகளையே நாம் பெற்றிருக்கிறோம். எனக்குக் கிடைத்தவை பொருளாக இரண்டு, உயிராக ஒன்று. நான் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போது அவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகாக ரஷ்யாவிற்கு விஜயம் செய்து திரும்பிய போது, முதல்

தடவையாக ஸ்வெட்டர் ஒன்று கொண்டுவந்து பரிசளித்தார். இதுதான் அவரைப் போன்ற எல்லா கம்யூனிஸ்ட்டுகளின் வீட்டு நிலையாக, அல்லது இதுவுமே இல்லாத நிலையாகத்தான் இருந்திருக்கலாம். அது எனது வாழ்நாளில் மறக்க முடியாதது. அந்த ஸ்வெட்டரை பல வருடங்கள் பேணிக் காத்து வந்தேன் என்பது தெரியும். பிறகு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இரண்டாவது என்னைப் பல்கலைக்கழகத்தில் விட்டுச் சென்ற போது வாங்கித் தந்த ஆங்கில அகராதி. தமிழில் உயர்தர வகுப்புவரை சகல பாடங்களையும் கற்றுவந்த எனக்கு, அந்த அகராதி எவ்வளவு உதவியிருக்குமென எவருக்குமே புரியும். அது இன்னும் என் கைவசமுள்ளது. ஆனால் பாவனையில் பக்கங்கள் உதிர்ந்த நிலையில், மற்றவர் பார்த்துக் கேலி செய்யும்படியாக இருந்தாலும், எனக்குப் பொக்கிஷமாகவே உள்ளது.

உயிரொன்று என்று கூறினேன் அல்லவா? நான் பலவருடங்களாக குடும்பத்தில் கடைசிப் பிள்ளையாகவே இருந்தேன். எனது சகோதரி களுக்கும், எனக்கும் சிறுபிள்ளைகளென்றால் மிகவும் பிரியம். அயலிலுள்ள குழந்தைகளை வீட்டிற்குக் கொண்டுவந்து குளிப்பாட்டி, அழகான உடை தைத்து அணிவித்து அழகு பார்த்து, மழலை சொல் கேட்டு மகிழ்ந்திருந்தோம். ஆனால் எனக்குப் பத்து வயதானபோது அந்த இன்பத்தை எமது குடும்பத்திலேயே அனுபவிக்க, ஒரு இளைய சகோதரியை எம்மீது தாயார் மூலம் பரிசாகத் தந்தார். அது வாழ்க்கையில் மிகுந்த மகிழ்ச்சியைத் தந்த ஒரு அனுபவம் என்றே சொல்வேன். அதை அவரும் அறிவார். தானும் 45 not out என்று தனது நகைச்சுவைப் பாணியில், காலங்கடந்து குழந்தை பெற்றது பற்றி மற்றவர்களுக்குக் கூறிக்கொள்வாராம்.

எம்மிலே பெருமை கண்டவர்

எமது தந்தை தன்னைச் சார்ந்தவர்கள் ஒவ்வொருவரிலும் பெருமை கண்டவர். எவ்வாறு அவரிடம் கற்றவர்கள் பற்றி பெருமையாகக் கூறிக் கொள்வாரோ, அதே போல் தன்னைப் பெற்றவரிலும், தனது சகோதரரிலும், தன்னைக் கைபிடித்தவரிலும், தான் பெற்ற ஒவ்வொரு பிள்ளையிலும், பெரிய சாதனையாளர்கள் இல்லாவிட்டாலும், தனது பேரக் குழந்தைகளிலும், உறவினரிலும் ஒவ்வொருவிதமான பெருமையைக் கண்டு அகமகிழ்ந்தவர்.

படித்ததனால் பட்டம் பெற்றதால் மட்டும் பெருமை கூறிக்கொள்பவரல்ல. மற்றவர்கள் நினைத்திருக்காத வேறுபல காரணங்களையும் கூட பெருமையாகச் சொல்வார். எமது ஒரேயொரு சகோதரன், வலது குறைந்தவர், வீட்டிலேயே இருந்தவர், தற்போது காலமாகிவிட்டார். அந்தாளில் அவர் சகோதரனைப் பற்றியும் மற்றவர்களிடம் பெருமையாகக் கூறுவார். மனவருத்தமானாலும், குறிப்பிடக் கூடியதாகவொன்று. நான் ஒரேயொரு ஆண்பிள்ளையைத்தான் பெற்றேன். பலரும்

தம் ஆண்பிள்ளைகளைத் தூரதேசம் அனுப்பிவிட்டு, கொள்ளி போடுவதற்கு ஆளில்லாமல் தவிக்கிறார்கள். ஆனால் நானோ அந்தப் பிரச்சனைக்கு ஆளாகாமல் கையோடு வைத்திருக்கிறேன் என்பார். அவர் கூறியது போலவே எமது சகோதரனும் தனது கடமையை செவ்வனே முடித்துத்தான், இவ்வுலகை விட்டுச் சென்றார்.

ஒருதடவை நான் கட்டுப்பத்த வளாகத்தில் படிக்கும் வேளையில் கந்தானையில் வசித்த தந்தையின் மூத்த சகோதரியான எனது மாமியாரையும் குடும்பத்தையும் பார்க்கவென்று கொழும்பில் பஸ் ஏறினேன். அந்நேரம் எமது தந்தையும் அதே வண்டியில் ஏற்கனவே தனது சகோதரியிடம் செல்ல பிரயாணம் செய்து கொண்டிருந்தா. நான் அப்போது அவரை எதிர்பார்க்கவுமில்லை, அதேவேளை சிறிது கொழும்பு நாகரீகத்திற்கேற்ப உடையுமணிந்திருந்தேன், அதைப்பற்றி என்ன நினைப்பாரோ சொல்வாரோ என்று, எனக்கு ஒருவித அதிர்ச்சிதான். ஒருவகையில் சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த பையன் தகப்பனிடம் பிடிபட்டால் எப்படியிருக்குமோ அப்படியொரு தவிப்பு, ஆனால் நினைத்ததற்கு எதிர்மாறாக, அவர் உடனே சீற்றிலிருந்து எழுந்து எனக்கு தனது இடத்தையும் தந்து, ஏற்கனவே தனக்குப பக்கத்திலிருந்த சிங்களவரிடம், அறிமுகமானவரோ இல்லையோ தெரியாது, ''மகே துவ (எனது மகள்)'' என்று சிங்களத்தில மிகுந்த முகமலர்ச்சியோடு அறிமுகம் செய்து வைத்தார். கேட்டவரும் அவரைப் போலவே நானிருப்பதாகக் கூற மகிழ்ச்சியாகத் தலையசைத்தார். இதே போன்று தனது இளம் வயதில் எமது தாயாருடன் பஸ்வண்டியில் பிரயாணம் செய்த போது வேறோர் சிங்களவர் அவர்களைப் பார்த்து, ''ஹொந்த ஜோடுவ (நல்ல ஜோடி)'' என்று கூறினாராம் என்பதையும் அங்கு சொன்னார். எமது தந்தையின் அப்படியொரு பக்கத்தை அன்றுதான் எனக்குக் காணக் கிடைத்தது.

இப்படிச் சிறுவிஷயங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியடைந்த எமது தந்தை நிச்சயமாக எமக்குக் கூறாவிட்டாலும், எம்மைப் பற்றி மனதில் பெருமைப்பட்டிருப்பார் என்பது நிச்சயம். அவரது பெருமையை நான் முதன் முதலில் கண்டது தனது சீனாவில் பிறந்த மூத்த பேத்தியார், சீனோதயாவின், இலங்கை விஜயத்தின் போதுதான். சீனோதயாவும் எவரையும் கவரும் வசீகரமான தோற்றமும் பேச்சும் கொண்ட குழந்தையாகவும், கூடியளவு ஒரு சீனப்பிள்ளையைப் போலிருப்பார். அவர் தனது பேத்தியாரைப் பற்றி எவருக்குமே மிகவும் பெருமையாக, நடை, உடை, பேச்சு அனைத்து பற்றியும் சொல்வார். சீனமொழியையும், தமிழ் மொழியையும் கலந்து பேசுவது பற்றி, அதனால் ஏற்படும் உச்சரிப்பு வித்தியாசம், அதனழகு பற்றியும் மிகவும் வியாக்கியானமாகக் கதை சொல்வார். அவர் தனது பேத்தியை பெருமையாக நடாத்திய விதத்தைப் பார்த்த போது, மா ஓ வின் பிரதிநிதி வந்தது போல் இருக்கும். அவரது கட்சி ஈடுபாடும், குடும்பமும் ஒருங்கிணைந்திருந்தால் அவருக்கு மகிழ்சசியாக இருந்திருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

உண்மையான பற்றுள்ள பற்றில்லாதவர்

எமது தந்தை தனக்கென்று பொருள்களைத் தேடி வாங்கியதையோ, சேகரித்து வைத்ததையோ நான் கண்டதில்லை. உடைகளானால், ஆரம்ப காலங்களில் எமது தாயார் அவருக்காக வாங்கித் தயார் செய்து கொடுப்பவை. பிற்காலங்களில் எமது சகோதரி, அவரது சகோதரி,அவரது உறவினர்கள், மாணவர்கள் கொண்டுவந்து கொடுப்பவை.

நானறிந்து ஒரேயொரு பொருளை மட்டும் மிகவும் பத்திரமாகத் தனது பொக்கிஷமாக வைத்திருக்கப் பிரியப்பட்டார். ரஷ்யப் பயணத்தின் பின் அழகான பொருட்களை, கட்சி பிரசாரம் சம்பந்தமானவை, ரஷ்ய நாடு பற்றியதென்று பலவற்றைக் கொண்டு வந்தார். வந்தவை அனைத்தும் சில நாட்களிலேயே, பலருக்கும் பொடுத்து இடம் தெரியாமல் மறைந்து விட்டன. ஆனால் வெள்ளை மாபிளாலான லெனினின் சிலையொன்றை மாத்திரம் தனக்கெனத் தக்க வைத்துக் கொண்டார். அதைப் பாதுகாப்பதில் மிகுந்த கவனமும் கொண்டிருந்தார். இருப்பினும் அதுவும் தங்காமலே எங்கோ சென்று விட்டது. அவர் மிகவும் பாதுகாத்து வந்த மற்றவை நூல்களும் ஆவணங்களுமே. இக்காலச் சூழ்நிலையில் அழியாச் சொத்தெனச் சேகரித்த அவையும் தொலைந்துவிட்டன அல்லது அழிந்துவிட்டன.

இன்றுவரை நிலைத்த செல்வம் அவரது பெருமையே. அது அவர் சேர்த்து வைத்த அழியாச் செல்வம். அதன் பயனை அனுபவிப்பது நாமே!

ஜானகி பாலக்கிருஷ்ணன்,
அமரர் கார்த்திகேசனின் ஐந்தாவது புத்திரியாவார்.

* * *

கார்த்திகேசனின் பாடசாலைப் பகிடிகள் ருசிக்கச் சில .....

ஜூனியர் டிஸ்க்

இந்துக்கல்லூரியில் செல்லத்துரை இல்ல ஆசிரியராக இருந்த போது இல்லநிதியாக ஒரு ரூபா 'டிஸ்கை' எறியுமாறு மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

அப்பொழுது சூட்டியான ஒரு மாணவன் ''சேர் அரை ரூபா 'டிஸ்க்' எறிந்தால் எப்படி" என்று கேட்டான்.

உடனே பதில் வந்தது: அது ஜூனியர் டிஸ்க், ஆகவே இரண்டு என்று.(50 சதம், 1 ரூபா குற்றிகளை வைத்தே இந்த 'டிஸ்க்' பகிடி)

சேமியாக் குணம்

வெள்ளிக்கிழமைகளில் இந்துக்கல்லூரி விடுதியில் விசேஷ மதிய போசனம். அங்கு தங்காத மாணவர்க்கும், விரும்பியவர்க்கு, அளிக்கும் வழமை இருந்தது. மதிய போசனத்துக்குப் பின் மாணவர்கள் தூங்கி விழுவதுண்டு. இதற்கு மாஸ்டர் கூறுவார்:

''வெள்ளிக்கிழமை எட்டுக் கறியும் சோறும்: அதன் மேல் பாயாசம் - சேமியாக் குணம், அதுதான்".

உள்ளங்கை வியர்வை

கார்த்திகேசன் மாஸ்டருடன் மாணவர்கள் நெருங்கிப் பழகுவார்கள். அவருக்கு அவர்கள் பயப்படுவதில்லை. இது அவருக்கும் தெரியும்.

ஒரு நாள் வகுப்பில் மாணவன் ஒருவன் மிகவும் குழப்படியாக இருந்தான். மாஸ்ரர் நடிப்புக் கோபத்துடன் அவனை முன்னுக்கு வரும்படி அதட்டிக் கூப்பிட்டு அடிப்பது போல் பாசாங்கு செய்து பேசினார். பின் கோட்டார்:

''நீ பயந்துவிட்டாய் என்ன?".

மாணவன் கூறினான்: ''இல்லை சேர், நான் உங்களுக்கு பயப்பட மாட்டேன். நீங்கள் அடிக்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும் தானே".

''இல்லை நீ பயந்துபோனாய். எங்கே உள்ளங்கையை கரும்பலகையில் வை'' என்றார். வைத்ததும் மாணவனுடைய உள்ளங்கை வியர்வை கரும்பலகையில் பதிந்திருந்தது.

''பார்த்தாயா பயந்துபோனாய்" என்று மாஸ்ரர் அனுதாபத்துடன் கூறினார்.

கேளம்பி ஷொட்

கார்த்திகேசன் மாஸ்ரர் சிலவேளைகளில் மாணவர்களின் குறும்பைப் பொறுக்க முடியாமல் ''விட்டன் எண்டால் உனக்கு கேளம்பி ஷொட்" என்று உறுமுவாராம்.

அடிக்கடி டோஸ் வாங்கிய மாணவர்களுக்குத்தான் தெரியும் அது ''கோம்பயன்மணல் மயான ஷொட்" என்று.

அடிக்கமாட்டார் ... ஆனால் ...

கார்த்திகேசன் மாஸ்ரர் அதிபரானவுடன் குழப்படி மாணவர்களுக்கு மிகவும் குதூகலம் ஆகிவிட்டது.

மாஸ்ரரிடம் நேரே சென்று ''சேர், நாங்கள் கிளாஸ் 'கட்' பண்ணினால் இனியும் அடிக்கமாட்டீர்கள் தானே?" என்று கேட்டார்கள்.

அவர் சர்வசாதாரணமாக ''காத்தார் இனியும் அடிக்கமாட்டார் ... டிஸ்மிஸ்" என்று கூறி மாணவரின் வாயை அடக்கினார்.

சினிமாப்படக் கதை

வகுப்பு 'கட்' பண்ணி சினிமாப்படம் பார்ப்பதை இரு மாணவர்கள் வழமையாகக் கொண்டிருந்தனர். அதை நிறுத்துவதற்கு மாஸ்டருக்குத் தென்பட்டது ஒரு புதுமையான வழி:

மாஸ்ரர் ஆங்கில வகுப்பு நேரம் அவர்களிடம் சென்று ''நீங்கள் கிளாஸ் 'கட்' பண்ணி சினிமாப்படம் பார்த்ததைப் பற்றி பரவாயில்லை?'' என்று சர்வசாதாரணமாகக் கூறினார். அவ்விரு மாணவரும் உட்பட அனைவரும் திகைத்தனர்.

மாஸ்ரர் தொடர்ந்து ''இவர்களில் ஒருவர் பார்த்த சினிமாப்படத்தின் கதையை ஆங்கிலத்தில் இப்போது சொல்லுவார். மற்றவர் அதை அடுத்த வகுப்பிற்கு எழுதிக் கொண்டு வந்து வாசிப்பார்'' என்றார்.

அவ்வளவுதான் அம்மாணவரின் வகுப்பு 'கட்' பண்ணி சினிமாப்படம் பார்க்கும் படலம் அத்துடன் முடிவடைந்தது.

போதிய பணம் இருக்கா?

கார்த்திகேசன் மாஸ்ரர் யாழ். இந்துக்கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில், ஒருநாள் இரவு மூன்று விடுதி மாணவர்கள் படம் பார்க்க மதிலைப் பாய்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது கார்த்திகேசன் மாஸ்ரர் வந்துவிட்டார். ஏறிய மதிலிலேயே ஒரு மாணவன் நின்றுவிட்டான்.

''மூன்றுபோரும் படம் பார்க்கப் போதியபணம் இருக்கா?'' இவ்வளவுதான் கார்த்திகேசன் மாஸ்ரர் கேட்டார். அந்த மாணவர்கள் அதற்குப் பிறகு அத்தகைய முயற்சியில் ஈடுபடவேயில்லை.

கோழி கொக்கரித்தால் முட்டை

இருபாலாரும் படித்த கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அதிபராக இருந்த காலங்களில் க.பொ.த உயர்தர வகுப்புப் பரீட்சை முடிந்ததும் ஆண்பிள்ளைகள் அதிகம் பேசாது தத்தம்வழியே சென்றார்கள். பெண்பிள்ளைகள் மண்டபத்திற்கு வெளியே வந்ததும் ஒன்றுகூடி பரீட்சை எழுதியது பற்றி ஆவலுடனும் பதட்டத்துடனும் தங்களுக்குள் பேசித் தர்க்கம் செய்ததனால் மிகவும் சத்தமெழுந்தது. அவ்வழியே சென்ற கார்த்திகேசன், ''கோழி கொக்கரித்தால் முட்டை என்று தான் அர்த்தம்'' என்று சொன்னதும், பெண்பிள்ளைகள் அனைவரும், தங்களை மறந்து போட்ட சத்தத்தை எண்ணியும், அதிபர் வேணுமென்றில்லாவிட்டாலும் கேலியாகச் சொன்ன அர்த்தத்தைப் புரிந்து கொண்டும் ''ஐயோ!! மாஸ்டர்'' என்று கூறி வெட்கிச் சிரித்துக் கொண்டே ஓடிவிட்டார்களாம்.

பெண்பாஷம் Pen Palம்

இருபாலாரும் படித்த இன்னொரு கல்லூரியில் ஒருதடவை ஒரு பெண்பிள்ளை பையனொருவருக்குக் கடிதம் கொடுத்து விட்டதாக முறைப்பாடு வந்ததாம். அதற்கு அவர் காலைக்கூட்டத்தில், Pen Pal என்ற முறையில் கடிதம் எழுதுங்கள். தவறில்லை. ஆனால் பெண்பால் என்ற முறையில் கடிதம் எழுதினீர்களானால், அதற்குத் தண்டனையிருக்கிறது" என்று கூறி பொதுவாகக் கண்டித்துவிட்டாராம். தனியே அழைத்து மாணவியை அவமானத்துக்கு உள்ளாக்காமலும், ஒரு பெண் ஆணுக்கு கடிதம் எழுதிவிட்டார் என்பது அனைவருக்கும் புரிந்து ஒரு சங்கடமான சூழலை பாடசாலையில் ஏற்படுத்தாமலும், இப்படி நிலைமையைப் புத்திசாதுரியமாகச் சமாளித்துவிட்டார்.

சைக்கிள் Control

ஒருதடவை மாஸ்டரின் சைக்கிள் காணாமல் போய்விட்ட போது, அவரது கல்லூரி மாணவன் ஒருவன் தனது சைக்கிளை புதியது வாங்கும்வரை உபயோகிக்கக் கொடுத்தான். அந்தப் பையனுக்கு ஒரு காதலி இருந்ததும், காதலியின் வீடு இந்துக்கல்லூரிக்கு வரும் றோட்டிற்கு சரி எதிரான பக்கத்திலிருந்ததும் வகுப்பு மாணவர்களுக்கும் மாஸ்டருக்கும் தெரிந்திருந்தது. கார்த்திகேசன் ஒருநாள் வகுப்பில் அந்தப் பையனைப் பார்த்து, ''உனது சைக்கிளைக் Control பண்ணுவதற்கு கஷ்டமாகவுள்ளது. நான் இந்தப்பக்கம் (கல்லூரிப் பக்கம்) திருப்ப திருப்ப, அது அந்தப் பக்கம் திரும்புகிறது" என்றார். இப்படியொரு மாஸ்டர் யாருக்குக் கிடைத்திருப்பார்? பையன்களின் புழுகத்திற்கு கேட்கவா வேண்டும்.

தாயின் சணற்கொடி

''தாயின் மணிக்கொடி" என்று பாடிய பாரதியார் இன்று இருந்தால், ''தாயின் சணற்கொடி பாரீர்" என்று பாடியிருப்பார் என்றார். காரணம் வறுமையில் உழலும் தாய்மார் பொற்றாலிக்குப் பதிலாக மஞ்சற் கயிற்றை அணிகின்றனர் என்று விளக்கமளித்தார்.

வால்பிடி மந்திரி

ஐ. தே. கட்சி வால்பிடி மந்திரி என நினைத்து மீன்பிடி மந்திரிப் பதவியை வழங்கியதா என்றும் அதே கட்சி இன்னொரு அமைச்சருக்கு ''லோக்கல் கவுன்மன்ட்" (இளக்கமான) துறையைக் கொடுத்ததும் வெந்த புண்ணில் வேல் பாய்ந்த மாதிரி எங்கள் திருச்செல்வம் அவர்களை தெருச்செல்வமாக்கிவிட்டதே என்ற கண்டனங்களை செவிநயமாகக் கொடுப்பார்.

A tribute to a scholar and a noble man

Jothie Karthigesan

I am writing this note, hoping that year 2002 is going to be another special year, and a year to be remembered by our family and friends, and by the young and old generation, alike.

It may seem poignant now, but while I was a graduate student in England, and as a grown-up daughter, I had begun to communicate with my father more freely through our letters. Because these letters meant so much to me at that time, and even more now, I am glad that I kept many of them. Twenty-five years have passed, since I received this letter, dated 9.9.77 (he died on 10.9.77), written to me in his beautiful, and flowing hand. His letters were always filled with news and tidbits that revolved around our family, but I always could detect an undertone of the then political unrest, mixed in with the family news. I was hoping that this bond would grow stronger as the months went by, but his sad, untimely, death prevented this... His brother, and my late uncle, Vaithianathan, who was then living in Malaysia, filled his place, somewhat, in writing to me regularly.

As shown throughout his life, my father's values, and his ideologies that took roots in his teens and early twenties, carried him through his university days and the marriage that followed. He faced many challenges, and struggles but he managed to balance his academic life and his marriage and

fatherhood with his constant noble bearing. Yet, always constant, were his convictions and beliefs, and his desire to improve the life of his fellow man, and his ability to gently make people aware of their rigid and social mores and traditions. Setting out with such goals, he led a simple, but a full life, while maintaining his values. With his natural strength of character, he captivated the hearts of the general public, and gained their respect, love and admiration. In retrospect, I am still enthralled by his modesty, and generous personality, which were contradictory to his intelligence, extraordinary talents, and accomplishments.

My father was the world to his only son, Jegatheesan (Appu). As his life-long companion and beloved wife, my mother, Valambighai, who shared the same by high values in life, contributed, in many ways, towards his achievement of his goals. We miss them dearly. My oldest sister, Rani, in her gem of a story as published here, related many events that underscore the exceptional qualities of our parents. As part of our family, he also loved and respected his parents, Murugapillay and Thangaratnam, and being the eldest, he fondly remembered his sisters Thilagavathy and Ratnavathy, and his brother Vaithianathan. I learnt a lot from my parents' experience and their actions, and from their ups and downs; and I am very thankful for that. I trust our family feels the same way too.

Jothie Karthigesan

* * *

9.9.77.

My dear daughter,

Glad to note that you have begun work on your course for the Ph.D. Hope your supervisor will be successful in getting you a grant. Showed your letter to Mani and Uncle before they left for Malaysia. They left on 7.9.77 for Col. hoping to get an early flight out to Malaysia.

Thamby's wedding went off happily. All of us were present except the unfortunate Kili who could not come on account of the disturbances. She came a week later, quite safe and sound. I was lucky to come through from Col. equally safe and sound as the Mani involved in the attack. Lots and lots of people are in Jaffna wondering how to get back south. Conditions are returning to normal, but the whole climate has become different. Anyway, we are hoping for the best. Thamby has put back to Col. Kili hopes to go on Sunday a Monday.

Appu enjoyed himself at the wedding and the tea-party thereafter. It was unfortunate that many of Thamby's friends from Col, Kegalle and Chavakachcheri could not attend owing to the troubles. Appu, the bride (a student at the Undergrads Dept of Mani) but for her wearing glasses, I

sri lanka
never out of season









Miss J. Karthigesan
Biology Dept.
Nuclear Block,
University of Salford,
SALFORD
U. K.

Second fold here.

M. Karthigesan
Vaddukoddai, SRI LANKA

Sender's name and address.



If anything is enclosed this Aerogramme will be sent by surface route.

First fold here.

Suppose Thamby will send you a snap. She is tall and fair — a good match for her man.

Mani and Thanabal will get back direct to Nigeria from Malaysia. They should be back there by Oct 15. They hope to spend a month in Malaysia and Singapore.

With love from all here. Suren, Sri and Sino are keeping well as are the others.

Yours affly
M. Kat

முருகபிள்ளை கார்த்திகேசன்

தோழர் மு. கார்த்திகேசன் ஒரு நிறுவனம். சோஷலிசத்தின் குறியீடு. அரசியல் தீர்க்கதரிசி. ஒரு புத்திஜீவி. ஆழ்ந்த சிந்தனையாளன். தோழர் கார்த்திகேசன் மார்க்ஸிச-லெனினிஸ- மாஓ சே துங் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் இலங்கை வாழ் அனைத்து மக்களின் விமோசனத்திற்கும், சுபீட்ச வாழ்விற்குமாக திரிபுறக் கற்று, நன்கு ஆராய்ந்து, அதன்படி தனது தோழர்களையும், ஏனையோரையும் வழிநடாத்திச் செயற்பட்டவர். தனது இலட்சியத்திற்கேற்ப வாழ்ந்து காட்டி கம்யூனிஸ சித்தாந்தத்திற்கு வித்திட்டு, தனித்துவமான பாணியில் லாவகமாக, வடபகுதி மக்களுக்கு தெளிவாகப் புரியும்படி அதை இலகுவாகப் புகட்டியவர். 'கம்யூனிஸ்ட் கார்த்திகேசன்' என்பது அவரது இலட்சிய வாழ்வை ஆரம்பத்திலேயே கௌரவித்து தோழர்களும், அனைத்து மக்களும் அளித்த பட்டப்பெயர் என்றே சொல்லலாம்.

இவர் எழுத்தால், பேச்சால் ஆங்கிலமும், செந்தமிழும் பெருமை பெறச் செய்தவர். அவரது மொழியாற்றலையும், சிறந்த இலக்கிய, சமூக அறிவினையும், கணிதப் புலமையையும் பிரயோகித்து தலை சிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும் பிரசித்தி பெற்றவர்.

அவரது எளிமையினாலும், மனித நேயத்தினாலும், மக்களைக் கவரும் நற் பண்பினாலும், தனித்துவமான நகைச்சுவை உணர்வினாலும் அனைவரின் நெஞ்சினிலும் நீங்கா இடம்பெற்றவர். 'காத்தி' என்றும், 'காத்தார்' என்றும் வாஞ்சையுடன் அனைவராலும் அழைக்கப்பட்டவர்.

Murugapillai Karthigesan

Comrade M. Karthigesan was an Institution; Symbol of Socialism. A political prophet. An intellectual and a deep thinker. Comrade Karthigesan mastered in Marxism-Lenninism-Mao Tse Tung Thoughts for the welfare and upliftment of all peoples of Sri Lanka and guided fellow comrades for the cause. Having lived by his principles and philosophy, seeded Communism in the North and fed the same to the people with ease. Communist Karthigesan is considered as an honourary name given in his youth, recognizing his idealism and devotion.

Karthigesan's talents in journalism and oratory famed the languages English and Tamil. He became a well renowned Teacher and Principal with excellent knowledge of Languages, Literature, Social Science and Mathematics.

His simplicity, humanity, suave in manners and extraordinary sense of humour captured a place for him in the hearts of all. He was fondly addressed either Karthi or Karthar by all.

ISBN 955-98020-0-153